May & June 1984

# தமிழரசு

V2;110 N84
N84 5
85348







பெரியார் மாவட்டச் சிறப்பிதழ்

மற்றும்
1994
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008







# தமிழரசு



இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து, 16.4.[illegible] அன்று, தலைமைச் செயலகத்தில் மாண்புமி[illegible] முதல்வர் அவர்கள் அனைத்துக் கட்[illegible] தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.



## பெரியார் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தோற்றம் | — | 17-9-1979 |
| பரப்பளவு | — | 8170 சதுர கிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | — | 2068492 |
| வருவாய்க்கோட்டங்கள் | — | 3 |
| வளர்ச்சிக் கோட்டங்கள் | — | |
| நகராட்சிகள் | — | [illegible] |
| வட்டங்கள் | — | 7 |
| நகரியம் | — | 1 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | — | 20 |
| பேரூராட்சிகள் | — | 60 |
| ஊராட்சிகள் | — | 343 |
| வருவாய்க் கிராமங்கள் | — | 510 |
| குக்கிராமங்கள் | — | 3996 |



# பெரியார் மாவட்டச் சிறப்பிதழ்

### ஈரோடு பத்திரிகைகள்

தந்தை பெரியார் அவர்கள் 1932ல் ரஷ்ய நாட்டுக்குச் சென்று திரும்பியபின், அவருடைய 'குடியரசு' பத்திரிகை கம்யூனிஸ்ட் நெடி மிக்கதாயிற்று. எனவே அப்போதைய அரசால் அது தடை செய்யப்பட்டு, அதன் வெளியீட்டாளராக இருந்த அவரது தமையனார் ஈ.வி. கிருஷ்ணசாமி சிறைபிடிக்கப்பட்டார்.

அதன் பிறகுதான் தந்தை பெரியார் 'புரட்சி' என்றொரு பத்திரிகையைத் துவக்கினார். நாளடைவில் அதுவும் தடைசெய்யப்படவே 'பகுத்தறிவு' பத்திரிகை துவக்கப்பட்டது. சில காலத்தில் அந்த ஏடும் தடை செய்யப்பட்ட பிறகுதான் 'விடுதலை' உதயமாயிற்று.

இப்போது ஈரோட்டிலிருந்து 'தினமலர்', 'குறளியம்' 'கோழி நண்பன்' ஆகிய ஏடுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இன்று, மே நாள்;
தந்தை பெரியார் அவர்கள்
தான், ரஷ்யாவுக்குச் சென்று
வந்ததும், தொழிலாளர்
நலனில் பெரிதும் ஆர்வங்-
கொண்டு முதன் முதலாக
மே நாள் கொண்டாடினார்.
அவர் வழி நடந்த
புரட்சிக் கவிஞர் பாரதிதாச-
னாரின் பிறந்த நாள், 29-4-84
அன்று தமிழகமெங்கும்
கொண்டாடப்பட்டது.
இருவருக்கும் நாம்
அஞ்சலி செலுத்துவோம்.




தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — சித்திரை 19
மலர் : 14 இதழ் : 21
1-5-1984



# கலைத் தொழில் வளர்க! கலைஞர்கள் வளர்க!

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

இந்த விழா ஓராண்டுக்கு முன்னதாக் நடைபெற்றிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெறாது போனதற்குத் தமிழகத்தில் தோன்றிய வறட்சிதான்காரணம். அதன் பின்னர் வெள்ளம் ஏற்பட்டது. சாதாரண மக்கள் தங்களது வாழ்க்கைக்குப் போராடிக் கொண்டிருந்த சமயத்தில் இந்த நிகழ்ச்சியை நடத்துவது பொருந்தாது என்ற எண்ணத்தின் காரணமாக விழா நடைபெறவில்லை. கடந்த ஆண்டுக்குரிய பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சி இந்த ஆண்டு நடைபெறும் வகையில் பணிகளைச் செய்வோம்.

சிறந்த நடிகர், நடிகையரைத் தேர்ந்தெடுப்பத எவ்வளவு சிரமமான காரியம் என்பது, அந்தப் பொறுப்புகளை ஏற்றுள்ள குழுவினருக்குத்தான் தெரியும். ஒவ்வொரு நடிகரும் ஏதாவது ஒரு காட்சியில் பாராட்டத்தக்க அளவில் நடிக்கத்தான் செய்கிறார். அவர்கள் அனைவருக்கும் பரிசு தரவேண்டும் என்று நினைத்தால் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டிய நிலை வந்துவிடும்.

பரிசுக்குத் தேர்ந்தெடுக்கும்போது விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவர்களாகப் பணிஆற்ற வேண்டும். அந்த வகையில் நீதிபதிகள் இங்கே தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

கலை என்பது மற்றவர்களை ஈர்ப்பது மட்டுமல்ல, மற்றவர்கள் மகிழ்ச்சி கொள்ளச் செய்வதும் ஆகும். சாதாரணக் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை மையமாக வைத்து, கதை எழுதி அதனை மக்கள் மன்றத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்வது என்பது எளிதான பணியல்ல. முன்பு நாங்கள் சொல்லிய கருத்துக்களை விடத் தீவிரமான கருத்துக்களைச் சொல்கின்ற இளைஞர்கள் இன்று திரைப்படத்துறையில் தோன்றியிருக்கிறார்கள்.

கலப்புமணம் குறித்து நாம் பேசுகிறோம்; எழுதுகிறோம். அதைப் பற்றி அமரர் அண்ணா, தந்தை பெரியார் பாணியில் சொல்வதென்றால் அது ஒரு வகையில் அமையும். காந்திய வழியில் சொல்வதென்றால் அது வேறொரு வகையில் அமையும். இந்த இரண்டு பாதைகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதில் இயக்குநர்கள் - கதாசிரியர்கள், கலைஞர்கள், தயாரிப்பாளர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும்.

'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் பாரதிராஜா கையாண்ட பாணியைக் கண்டு நான் அதிசயப்படுகிறேன்; திகைப்படைகிறேன்.

கலப்புமணம் செய்து கொள்பவர்கள் தங்களது அடையாளச் சின்னங்களைக் கழற்றி எறிந்துவிட்டு மனிதன் என்ற நிலையில் ஒன்றுபடுகின்றனர். தன் உள்ளத்தில் மனிதன் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எதையும் ஏற்படுத்தாது அந்த உச்ச கட்டக் காட்சியை அமைத்திருக்கிறார்கள். அந்தக் காட்சி அனைத்து மதத்தவர்களும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் உள்ளது. அதனைத் தமிழகமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வகையில் சிறந்த சீர் திருத்தவாதியாக - பழமையை எதிர்க்கும் தைரியசாலியாக, துணிச்சல்மிக்க அரசியல்வாதியாக பாரதிராஜா, விளங்குகிறார். அவரது துணிச்சலை என் நினைவு இருக்கும்வரை நான் பாராட்டிக் கொண்டே இருப்பேன்.

முன்பெல்லாம் புராண நாடகங்கள் நடத்திவந்தார்கள். அதனால் சமூக நாடகங்கள் நடத்தப்படும் போது நவீன நாடகம் என்று சொல்வார்கள். சமூக நாடகம், சீர்திருத்த நாடகம் என்றும் விளம்பரப்படுத்துவார்கள்.

அந்தக் காலத்தில் 1930ல் தேசபக்திமிக்க நாடகங்கள் நடத்தப்பட்டன. 'கதர்பக்தி' என்ற ஒரு நாடகம். அதை அரசு தடை செய்தது. அதில் சிவப்பு விளக்குப் பெண் ஒருத்தி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறாள். கதர்த் துணியை விற்கும் கதாநாயகனின் பிரசங்கம் கேட்டு அவள் திருந்துகிறாள். இனிமேல் தவறு செய்யவே மாட்டேன் என்று சூளுரைத்தபடி, நாட்டுத் தொண்டு செய்ய எண்ணி - கள்ளுக்கடை மறியலில் ஈடுபடுகிறாள்.

கள்ளுக்கடை மறியல் காட்சியில் அவள் நடிக்கும்போது - போலீஸ்காரர்கள் தடியடி செய்வார்கள். அந்தப் பெண்ணை இழுத்துச் செல்வார்கள். அந்தச் சமயத்தில் அவள் வெள்ளை ஏகாதியத்திய அரசைப் பற்றிக் கடுமையாகப் பேசுவாள். அந்நிய ஆட்சியினால் நமது மக்கள் பட்ட தொல்லைகளை - அனுபவித்த கொடுமைகளை அந்த நாடகம் எடுத்துரைத்தது. கள்ளுக்கடை மறியல் காட்சியைப் பார்ப்பதற்காகவே பெரும்பான்மையான மக்கள் அந்த நாடகத்துக்கு வருவார்கள்.

''தடியடிக் காட்சி வேண்டும் என்றா கேட்கிறீர்கள்! இப்பொழுது நீங்களே தடியடியை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்ற முறையில் போலீசார் பொதுமக்கள் மீது தடியடி நடத்தினார்கள்.

அக்காலத்தில் மக்களுக்கு சுதந்திர உணர்ச்சி நிறைய இருந்தது. அதனால் அதற்கு ஏற்றபடி நாடகக் காட்சிகளும் அமைக்கப்பட்டன. மக்களின் உணர்வுகளுக்கு ஏற்றமுறையில் கருத்து நிறைந்த திரைப்படங்கள் எடுக்கப்பட வேண்டும்.

இங்கே திரு. ராமானுஜம் ஒரு கருத்தைச் சொன்னார். இங்கு தயாரிக்கப்படும் படங்களை வட இந்தியாவில் குப்பை என்று தள்ளிவிடுகின்றனர். அதனால் மத்திய அரசுக்குப் படங்களை அனுப்பப்போவதில்லை என்று சொன்னார். இது சரியில்லை. நீங்கள் படத்தை அனுப்பவில்லை என்றால் அவர்களுக்கு என்ன நஷ்டம்? உங்களுக்குத்தான் நஷ்டம். அதனால் உங்களது உரிமைகளைப் பாதுகாக்க நீங்கள் சட்டபூர்வமாகப் போராட வேண்டும். மைய அரசுக்கு அனுப்ப மாட்டோம் என்ற கருத்தை மறு பரிசிலனை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் காம்பவுண்டு வரியை அறிமுகம் செய்தபோது இங்கு பலர் எதிர்த்தார்கள். அது அவர்களுக்கும் லாபத்தைத் தந்தது; எங்களுக்கும் லாபத்தைத் தருகிறது. நான் இந்தத் தொழிலில் இருந்தேன் என்பதற்காக இதைச் செய்யவில்லை - இந்தத் தொழில் வளர வேண்டும் என்பதற்காக இதைச் செய்கிறேன்.

நான் இனிமேல் படங்களில் நடிக்கப் போவதில்லை. அந்த சகாப்தம் முடிந்துவிட்டது. நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன். முன்பு நான் செய்தது தொழில். தற்போது செய்வது தொண்டு. தேவைப் பட்டால் படத்தை இயக்கும் பணியைச் செய்வேன்.



கமலஹாசன் — ஸ்ரீதேவி — கார்த்திக் — ராதா
பாரதிராஜா — மணிவண்ணன் — விசு — இளையராஜா
ஜேசுதாஸ் — எஸ்.ஜானகி — வைரமுத்து — பி.கண்ணன்
கே.ஏ. தங்கவேலு — மனோரமா — ஆர். பாஸ்கரன் — கே. சாரங்கபாணி

இயக்கம் என்பதும் இயக்குநர் என்பதும் மிக மிகப் பொருள் பொதிந்த சொல். இயக்கம் இல்லை என்றால், மனிதன் இல்லை.

பாலுமகேந்திரா அவர்கள் ஒரு பேட்டியில் தெரிவித்த கருத்தை நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

''உங்களுக்கு இதுவரை எந்தப் பரிசும் கிடைக்கவில்லையே'' என்று நிருபர் கேட்கிறார். அதற்கு அவர், ''நான் தமிழகத்துக்குப் பரிசு வாங்கிக் கொடுக்க விரும்புகிறேன்'' என்று கூறியிருக்கிறார். ஒவ்வொரு கலைஞரும் இப்படித்தான் இருக்க வேண்டும்! புகழை நாம் தேடிச் செல்லக் கூடாது. புகழ் நம்மைத் தேடி வரவேண்டும். பரிசை எண்ணிப் படம் எடுக்கக்கூடாது. கடுமையாக உழைத்தால் பரிசும் புகழும் தாமே தேடிவரும்.

அண்ணன் சாரங்கபாணி அவர்கள் நடிப்பில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியவர். அவர் கதாநாயகனாக நடித்த ஒரு படத்தில் கதாநாயகியைத் தொட்டுப் பேசச் சொன்னபோது, தொட மாட்டேன் என்று சொன்னார். அதனால் தயாரிப்பாளர்கள் பெரும்பாடுபட்டார்கள்.

தீவிர காங்கிரஸ்காரரான இவர் எந்தக் குறைக்கும் ஆளாகாதவர். மற்றவர்களுடன் இவர் பழகிய விதம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அவரைத் தேர்ந்தெடுத்து ராஜா சாண்டோ நினைவுப் பரிசை வழங்குவது பொருத்தமான செயல் ஆகும். அவருக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

படத்தயாரிப்பாளர்கள் - கதாசிரியர்கள் - ஆகியோர் ஒருவர்க்கொருவர் மதிப்பளித்து - பொறுப்புகளை ஏற்று ஒற்றுமையுடன் பாடுபட்டால் படம் வெற்றிபெறும். ஆகவே அனைவரும் ஒற்றுமையாக இருந்து பணியாற்ற வேண்டும்.

கலைஞர்கள் உடலைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். உள்ளத்தைத் தெளிவாக வைத்துக் கொள்ளவேண்டும். கலைஞர்கள் வளரவேண்டும். கலைத் தொழில் வளரவேண்டும்!'',

**[13.4.84ல் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கலைஞர்கள்-திரைப்பட விருது வழங்கும் விழாவில் முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து.]**




**குறிப்பு**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டத் தலைமையிடம் | | பஞ்சாயத்து யூனியன் எல்லை | |
| வட்டத் தலைமையிடம் | | அகல இருப்புப்பாதை | |
| பஞ்சாயத்து ஒன்றிப்பு தலைமையிடம் | | தேசிய நெடுஞ்சாலை | |
| பஞ்சாயத்து ஒன்றிப்பு பெயர் | குண்டடம் | மாநில நெடுஞ்சாலை | |
| மாநில எல்லை | | இதர சாலைகள் | |
| மாவட்ட எல்லை | | | |
| வட்ட எல்லை | | நதியும், ஓடையும் | |



# மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்!' என்று மனம் கனிந்து கூறிய வள்ளலார் பிறந்த மண், தமிழகம்.

பசித்தவர்க்கு இரங்குகின்ற அருளுள்ளம் கொண்டவர்கள் தமிழகத்தில் தொன்று தொட்டு வாழ்ந்திருக்கிறார்கள். பாரதப் பெரும்போர் - பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்தது என்றாலும், இருவரின் படைகளுக்கும் உணவளித்தான் சேரமன்னன் உதியன் சேரலாதன். அதன் காரணமாகப் பெருஞ்சோற்று உதியன் என்றும் அவன் வழங்கப் பெற்றான்.

அந்த நாள் மரபு இந்த நவீன காலத்திலும் மாறிடவில்லை என்பதைத் தமிழகம் இன்று மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது. கட்டை வண்டியில் பயணம் சென்ற காலம் மாறி, இன்று ஜெட் விமானப் பயணம் நடைமுறையில் உள்ள காலத்திலும், சில அரும்பண்புகள்-அடிப்படைப் பண்புகள் மாற்றம் பெறாமல் நின்று நிலவி வருகின்றன.

மழலையர்களே நாட்டின் முக்கிய அங்கங்கள் என்பதை நாடு நன்கு உணர்ந்து வந்திருக்கிறது.

புறநானூற்றுக் காலத்தில் பரிசில் நாடிச் சென்ற பெரும் புலவர்கள் தமது வறுமையை எடுத்துச் சொல்லும் காலத்தில் சிறு குழந்தைகள் உணவில்லாமல் வருந்துகின்ற காட்சியைத்தான் வகைபடக் கூறியுள்ளனர்.

குமண வள்ளலைப் பார்த்துத் தனது வறுமை நிலையை எடுத்துச் சொல்ல முனைந்த பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பாடிய செய்யுள் இதோ :

'ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்ப தேம்புபசி உழவா



பாஅல் இன்மையின்தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉம் தன்மகத்து முகம்நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே-நற்போர்க் குமண''....

மழலைக் குழந்தை படும் அவதியின் காரணமாகத் தான் குமண வள்ளலை நாடிச் சென்றார் புலவர் என்பதை இந்தச் செய்யுள் காட்சியாக்கிக் காட்டுகிறது.

இன்று புகைவண்டி நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும் உணவு விடுதிகளின் வாசற்புறத்தும் பிச்சை எடுக்கும் இரவலர் பலர் கைக்குழந்தைகளுடன் வந்து ''பச்சைக் குழந்தையைப் பாருங்க ஐயா! மனம் இரங்கி பிச்சை போடுங்க ஐயா'' என்று கேட்பதை நாம் காண்கிறோம். சிசுக்களைப் பார்த்தாவது மனம் இரங்குவர் மக்கள் என்ற நம்பிக்கைதான் இதற்கு அடிப்படை.

பிஞ்சுக் குழந்தைகளின் வாழ்வில் பெரும் நன்மைகளை உருவாக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவு வழங்கும் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்.

கிராமப்புறங்களில் 2 வயது முதல் 10 வயது வரை உள்ள பிள்ளைகளுக்கு இலவசச் சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982 ஜூலை முதல் நாளன்று துவக்கினார். ஏறக்குறைய 55.96 இலட்சம் குழந்தைகள் அன்றிலிருந்து சத்துணவு உண்

**கே. எம். இராஜு,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்.**



ணும் வாய்ப்புப் பெற்றனர். கிராமப்புறச் சமூக நிலைகளிலும் புதிய மாற்றங்களுக்கு இந்த மாபெரும் திட்டம் வழிவகுத்துள்ளது. 1982 செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் நகர்ப்புறங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டது. அதன் காரணமாக இன்று 67 லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப் பெறுகிறது.

2 வயது முதல் 4 வயது வரை ஒரு பிரிவினர். 5 வயது முதல் 9 வயது வரை ஒரு பிரிவினர் என, இத்திட்டத்தினால் பயனடையும் பிள்ளைகள் இரு பிரிவினராக வகுக்கப்பட்டுள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

இங்கு - கிராமப்புறங்களில் உள்ள, குழந்தைகள் நல மையங்கள் 976 மூலம் 56040 குழந்தைகள் 1982—83-ஆம் ஆண்டிலும் 57840 குழந்தைகள் 1983-84ஆம் ஆண்டிலும் பயன் பெற்றுள்ளனர்.

நகர்ப்புறங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள் 100 மூலமாக 1982-83-ல் 4348 குழந்தைகளும் 1983-84-ல் 5239 குழந்தைகளும் பயனடைந்துள்ளனர். நகராட்சிகளில் இயங்கும் குழந்தைகள் நல மையங்கள் 52ன் மூலமாக 1982-83ல் 3386 குழந்தைகளும் 1983-84ல் 3498 குழந்தைகளும் பயனடைந்திருக்கிறார்கள்.

கல்வித் துறையின் மூலம் பெரியார் மாவட்டத்திலிருக்கும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் 1400-ல் 1982-83-ல் 1,01,296 குழந்தைகளும் 1983—84ல் 1,06,296 குழந்தைகளும் பயனடைந்துள்ளனர். தனியார் பள்ளிகள், நகராட்சிப்பள்ளிகள் ஆதிதிராவிடர் நலத்துறை - பிற்பட்டோர் நலத்துறை ஆகியவற்றின் மூலம் 1982-83-ல் 10,296 குழந்தைகளும் 1983-84-ல் 15,127 குழந்தைகளும் பயனடைந்திருக்கின்றனர். மாவட்டம் முழுதும், குழந்தைகள் நல உதவியாளர் மொத்தம் 2943 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களில் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் 43 பேர் என்பதும், விதவைப் பெண்டிர் 388 பேர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

ஆதரவற்ற முதியோர்களுக்கும் மதிய உணவு அளிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு சிறப்புறச் செயலாற்றி வருகிறது. 15-1-83 முதல் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவி பெறும் நபர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தால் ஊராட்சி ஒன்றியங்களில் 5,554 பேர், நகராட்சிகளில் 696 பேர், நகரியத்தில் 2 பேர் என மொத்தம் 6252 முதியவர்கள் பயன் பெற்று வருகின்றனர். இவர்களில் விதவை உதவித் தொகை பெறுபவர், விவசாய உதவித் தொகை பெறுபவர், ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுபவர் ஆகியோரும் உண்டு.

'வயிற்றுக்குச் சோறிடவேண்டும் - இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்று புதுயுகக் கவிஞன் பாரதி தத்துவ முழக்கம் செய்தான். அதனை நிறைவேற்றும் பெரும் முயற்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஈடுபட்டுள்ளதன் காரணமாகத் தமிழகம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கிறது.

அந்தப் பொலிவு-பெரியார் மாவட்டத்திலும் புது மெருகோடு கொலுவோச்சுகிறது என்றால் அது மிகையாகாது!



## பெரியார் மாவட்டச் சுற்றுலா இடங்கள்

- பவானிசாகர் அணை
- கொடிவேரி அணை
- ஆசனூர் மலை
- தலைமலை
- பர்கூர் மலை



ஈரோடு சிதம்பரனார் பூங்காவில், சிறுவர்களுக்கான உல்லாச இரயில் திட்டம் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.



## பெரியார் மாவட்டத்தில் உள்ள அணைகள்

- பவானி சாகர்
- உப்பாறு
- கொட்டுப் பள்ளம்
- கொடிவேரி
- பவானி கூடுதுறை
- காலிங்கராயன்
- ஜோடர் பாளையம்



## ஆலயப் பெருமை

நாத்திகம் வளர உரமிடப்பட்ட பெரியார் மாவட்ட மண்ணிலே ஆத்திகர் மனங்கவரும் ஆலயங்களும் பல உண்டு. அவை வருமாறு :

அருணகிரியால் பாடப்பட்ட சென்னிமலை முருகன் கோயில்.

மாணிக்கவாசகர் பாடிய கொடுமுடி மகுடேசுவரன் கோயில்.

சத்தியமங்கலம் மலைப் பகுதியில் உள்ள பன்னாரியம்மன் கோயில்.

பாரியூர் அம்மன் கோயில்.

கல்வெட்டுப் பெருமை உடையதாகக் காவிரி நடுவே அமைந்துள்ள நட்டாற்றீசுவரன் கோயில்.

சிவன்மலை சிவன் கோயில் ஆகியவைகளே அவை!



# முதல்வரின் முத்துக்கள்

**நாட்டின் தற்காப்புக்காக உயிரையும் பணயம் வைத்துப் போராடவேண்டியது நம் ஒவ்வொருவரது கடமையுமாகும்!**

**நமக்குள் பல்வேறு பிரச்னைகள் இருக்கலாம்; ஆனால் அந்த நேரத்தில் இந்தியாவைப் பிரிக்க எந்த சக்தி வந்தாலும் அதை எதிர்த்தே ஆகவேண்டும்!**

**அரசியல் கட்சிகளில் சேருபவர்கள் எந்தத் தொழிலும் செய்யக்கூடாது என்பதல்ல; அவர்கள் செய்யும் தொழிலில் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும்!**

**சக்தி குறைந்தவர்களிடம் வீரத்தைக் காட்டுவது சரியல்ல!**

**நாம் வந்த வழியை மறந்துவிட்டோமானால், போகும் வழி நமக்குப் புரியாமல் போய்விடும்!**

வோர்களின் கடன் பெறும் வாய்ப்பைப் பொறுத்தே அமைகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் வரன்முறை ( Sheduled ) வங்கிகள் போன்ற பொதுத்துறை கடன் வழங்கு நிறுவனங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான கடன் தேவையை நிறைவேற்றுகின்றன.

பெரியார் மாவட்டத்தில், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வரன்முறை வங்கிகள் 150 உள்ளடக்கிய ஒரு தொடர் அமைப்பு இயங்கி வருகிறது. இம் மாவட்டத்தில் கனரா வங்கி முதன்மை வங்கியாக இயங்குகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மாவட்ட அளவில் பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயலாக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் பல துறையினரும் ஒத்துழைப்பு நல்கி கண்காணிக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலே மாவட்ட ஊரக வளர்ச்சி முகாம் இயங்குகிறது. திட்டத்தைச் செயற்படுத்த உதவித் திட்ட அலுவலர் (வேளாண்மை), உதவித் திட்ட அலுவலர் (கால்நடை), உதவி திட்ட அலுவலர் (புள்ளியியல்) உதவித்திட்ட அலுவலர் (கூட்டுறவு), மற்றும் உதவித்திட்ட அலுவலர் (தொழில்) போன்ற 5 மாவட்ட அலுவலர்கள் துணை கொண்டு திட்ட அலுவலர் செயல்பட்டு வருகிறார்.

நிர்வாகத் தேவையான குறைந்த அளவிலான பணியாளர்கள் இம்முகாமில் உள்ளனர். வட்டார அளவில் கால்நடை, ஆதிதிராவிடர் நலம் ஆகியவற்றிற்கான விரிவாக்கு அலுவலர்கள், ஊர்நல அலுவலர்கள் போன்றோரின் துணையுடன் வட்டார வளர்ச்சி அலுவலர் செயல்பட்டு வருகிறார்.

தனது வேலை வாய்ப்பைப் பெற்று, தானே தனித்து இயங்குவதற்கு ஏதுவாக தக்க தொழில் நுட்ப அறிவையும், பயிற்சியையும் அளித்து ஊரக இளைஞர்களை ஆளாக்குவதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் தலையாய குறிக்கோள்களில் ஒன்றாகும். இத்திட்டம் 'ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டம்' (டிரைசம்)என வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியுடையோரில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 40 பேருக்கு ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, தாராபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசுத்துறை தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பவானி சாகரிலுள்ள மாநில ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிறுவனம் போன்றவைகளின் மூலம் பல தொழில்களில் பயிற்சி பெற ஏற்பாடு செய்யப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள் ஊரகக் கைவினைஞர்கள்போன்ற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இனங்காணப்பட்ட அனைவரும் இப்பயிற்சி பெறத் தகுதியுடையோராவார்.

வட்டார வளர்ச்சி அலுவலர், முதன்மை வங்கியின் கிளை மேலாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் அலுவலர் ஆகியோரடங்கிய ஒரு குழுவால் வட்டார அளவில் பயிற்சியாளர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

பயிற்சி தொடங்குவதற்குமுன் மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமையின் இசைவு பெறல் வேண்டும். பெற்ற பின் கால தாமதமின்றிப் பயிற்சியைத் தொடங்க வேண்டும். இப்பயிற்சியாளர்கட்குத் தொழில் துணைக் கருவிகள் வழங்கப்படுவதோடு, திங்கள் தோறும் உபகாரச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது.

பயிற்சி முடிந்ததும் தானே தொழில் தொடங்குவதற்குத் தேவையான கடன் வங்கியாலும் அதற்குரிய மானிய உதவி மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமையாலும் கொடுக்கப்படுகிறது.

கடந்த நான்காண்டுக் காலத்தில், பெரியார் மாவட்டத்திலே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சாதனை பின்வருமாறு :

*1981-82-ஆம் ஆண்டு பயன் பெற்றோர் எண்ணிக்கை 12485. வழங்கப்பட்ட மானியத் தொகை ரூபாய் 122.96 இலட்சங்கள்;*

*1982-83-ஆம் ஆண்டு பயன் பெற்றோர் எண்ணிக்கை 14275; வழங்கப்பட்ட மானியத் தொகை ரூபாய் 165.55 இலட்சங்கள்.*

*1983-84-ஆம் ஆண்டு (29-2-84 வரை) பயன் பெற்றோர் எண்ணிக்கை 13460. வழங்கப்பட்ட மானியத் தொகை ரூபாய் 104.83 இலட்சங்கள்.*

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காகச் சிறு, குறு விவசாயிகட்கென ஒரு புதிய தேசிய திட்டத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டமும் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் செயலாக்கப்படுகிறது. சிறுபாசனத் திட்டம், மற்றும் நிலம் சமப்படுத்துதல், நிலவளத்தை மேம்படுத்துதல், சம உயர் வரப்பு போன்ற நிலச் சீர்திருத்தம் செய்வதற்கு, சிறு குறு விவசாயிகட்குக் கடன், மானிய உதவி ஆகியவை இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகிறது.

1983-84ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 3.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்டம் முழுவதற்கும் ரூ. 70 இலட்சம் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் பங்கேற்கும் வங்கிகளும் முகமைகளும் அவைகளுக்கான திட்டக் குறியீடும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் செயல்படுத்தப்படும் மற்றொரு முக்கியமான தேசிய திட்டங்களில் ஒன்று தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமாகும். வேலையின்மையும், போதுமான வேலையின்மையும் ஊரகப்புறங்களில் பெரும் சிக்கலை உண்டாக்கி வருகிறது. இந்நிலை வேளாண்மைப் பணிகள் இல்லாத காலங்களில் மேலும் கொடுமையாகிவிடுகிறது. இதுவே நாட்டின் வறுமை நிலைக்கும், கேடான உணவு நிலைக்கும் காரணமாகிறது.



ஊரகப் பொருளாதாரச் சீர்கேட்டைத் திருத்தி உயர்த்த உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்கிப் போதுமான வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்க ஏதுவாக ஆகும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தத் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம் ஒரு முறையான திட்டமாகத் தற்போது செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பின்வரும் அடிப்படை நோக்கங்களைக் கொண்டுள்ளது :

ஊரகத்திலுள்ள வேலையற்ற போதுமான வேலையற்ற ஆண் பெண் ஆகியோருக்குக் கூடுதலான சம்பாத்தியம் அளிக்கும் வேலை வாய்ப்பை உண்டாக்குவது, ஊரகப் பொருளாதாரத்தை விரைந்து வளர்ச்சியுற வழிவகுக்கும் ஊரக உள்ளமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல், ஊரக மக்கட்குச் சத்துணவுள்ள வாழ்க்கைத்தரத்தை அமைத்தல் ஆகியவைகளே அவை.

இத் திட்டத்தின்கீழ், கூலியின் ஒரு பகுதி ரொக்கமாகவும், ஒரு பகுதி தானியமாகவும் வழங்கப்படுகிறது. நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ஒரு கிலோ தானியம் கூலியின் ஒரு பகுதியாகவும் மீதி ரொக்கமாகவும் கொடுக்கப்படுகிறது.

1982-83-ஆம் ஆண்டுக்கு ரூ. 1.71 இலட்சமும் 1983-84ஆம் ஆண்டுக்கு இதுவரை ரூ. 159 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது.



**விழா**

பெரியார் மாவட்டத்தில் மக்கள் மகிழ்ந்து கொண்டாடும் விழாக்கள் பவானி கூடுதுறை 18ஆம் பெருக்கு, அந்தியூர் குருநாத சுவாமி கோயில் திருவிழா, பாரியூரம்மன் கோயில் திருவிழா, தாராபுரம் வட்டம்-நாட்டராயன் கோயில் திருவிழா, சென்னிமலை தைப்பூசத் தேர்த் திருவிழா, பன்னாரியம்மன் கோயில் தீ மிதித் திருவிழா, ஈரோடு பெரிய மாரியம்மன் கோயில் திருவிழா, பவானி செல்லாண்டியம்மன் கோயில் திருவிழா, கொளா நல்லித் தேர்த் திருவிழா ... வைகளாகும்.

# படமும் செய்தியும்



⇦ சென்னையில் (19.4.'84) நடைபெற்ற நட்சத்திரக் கலை விழாவில், சென்னை மாவட்டத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்., அவர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு க. சுந்தரமூர்த்தி, இ. ஆ. ப., முதலமைச்சர் நிவாரண நிதிக்கென ரூ. 36 இலட்சம் நிதி வழங்கினார். நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அரசு தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம் இ. ஆ. ப., தலைமை தாங்கினார். தமிழ்ப்பட உலகின் முன்னணிக் கலைஞர்களெல்லாம் பங்கேற்ற இவ்விழாவில், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன், நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன், எம். பி., ஆகியோர் உரையாற்றினர். விழா முடிவில் பங்கேற்ற கலைஞர்களுக்கும், நிதி திரட்ட ஒத்துழைத்த அலுவலர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்க மோதிரம் அணிவித்துப் பாராட்டினார்.



சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியிலுள்ள பாரதிதாசன் சாலையில் பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவாகக் கட்டப்பட்ட வட்டார நூலகத்தைச் சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர், செல்வி ஜெயலலிதா 4.4.'84ல் திறந்து வைத்தார். அப்போது அவரிடம் தமிழ்நாட்டிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் சார்பில்- முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட நிதியாகப் பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது. அவ்விழாவில் பங்கேற்ற மாண்புமிகு அமைச்சர்கள் திரு, கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு, செ. அரங்கநாயகம், திரு. ப. குழந்தைவேலு ஆகியோர் உடனிருக்கின்றனர். ⇨



பெரியார் மாவட்டம்:

# நலிவுற்ற மக்களுக்கு நலன் பயக்கும் திட்டம்

நலிவுற்ற மக்களின் சமூக பொருளாதார நிலை மேம்பட ஊரக வளர்ச்சிக்கென நாட்டில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் ஒன்றாகும்.

வறுமைக்கோட்டின் கீழே உள்ள ஊரகக் குடும்பங்களுக்குச் சுயவேலை வாய்ப்பளித்து வருமானம் பெறக் கூடிய தொழில் வாய்ப்புக்களை உண்டு பண்ணத் தனிக் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோள்.

நாட்டின் பொருளாதார நிலை பல்வேறு வகையில் பரந்து வலிவு பெற்றிருப்பினும் தற்போது 50 சதவீதத்திற்கு மேல் கிராமப்புறக் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழேதான் வாழ்கின்றன.

சிறுவிவசாயிகள், குறு விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், வேளாண்மையைச் சாரா தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள் போன்ற வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதி வாய்ந்த குழுவில் அடங்குவர். இத்தகைய குடும்பங்கள் கிராமப்புறத்தில் பாதிக்கு மேல் இருப்பதால், இவர்களில் பலரைப் பொறுக்கியெடுத்து உதவி செய்திட ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களைப் பொறுக்கி அவர்களுக்கு முதலில் உதவ வேண்டியதையே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நாடுகிறது.

வேளாண்மையைச் சார்ந்தும் சாராமலும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,500 அல்லது அதற்கும் கீழே வருமானம் ஈட்டும் ஒரு குடும்பமே வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளதாகக் கருதப்படுகிறது.

ஊரகக் குடும்பங்கள் எல்லாமே பெரும்பாலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உதவி பெறத் தகுதியுடையதாக இருப்பினும், மிகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கே இத்திட்டத்தின்கீழ் உதவியளிக்க முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஊரக ஏழைக் குடும்பங்கள் உற்பத்தித்திறனுள்ள சொத்துக்கள்பெற வாய்ப்பளித்து அவர்கள் வறுமைக்கோட்டைக் கடந்து மேலோங்கிச் செல்ல உதவி புரிவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் பயனடைவோர் தங்களின்வருமானம் படிப்படியாகப் பெருகி வறுமைக் கோட்டிற்கு மேல் தரமான வாழ்க்கை நிலையை எய்த வேண்டுமென்பதே இத்திட்டத்தின் சீரிய குறிக்கோளாகும். வங்கிகள் மூலம் கடனுதவியளித்து அரசு மானியம் அளிக்கவும் இத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்திலே இதுவும் ஒன்று.

ஆண்டொன்றுக்குச் சராசரியாக வட்டாரத்திற்கு 400 குடும்பங்களுக்கு வேளாண்மைத்தொழிலுக்கும் அதைச் சார்ந்த தொழிலுக்கும் மானிய உதவியும், வேளாண்மையைச் சாராத - அதாவது தொழிற்சாலை அமைத்தல், சேவை செய்தல், வாணிபத் தொழில் போன்ற தொழிலில் ஈடுபடும் 200 குடும்பங்களுக்கு மானிய உதவியும் அளிக்கப்படுகிறது.

பயனுறுவோருக்குப் பயன்படும் உள்ளமைப்பு வசதிகளை ஆதாரமாக அமைக்கும் வண்ணம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதிச் செலவினை - முதலீட்டை அதாவது மொத்தத்தில் 10 சதவிகிதத்தை இத்தகைய ஆதார உள்ளமைப்பு ஏற்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

அந்தந்த வட்டாரத்தில் கிடைக்கும் வளங்களையும் வேலை வாய்ப்பையும் பயன்படுத்தி ஊரக ஏழை மக்களின் நலனுக்காக முறையாகவட்டார அளவில் திட்டமிட்டே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுவதற்கான வழிமுறைகளையும், அறிவுரைகளையும் அறிந்து வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வெற்றி பயனுறு

பெரியார் மாவட்டம்:

# சித்திரக் கைத்தறி

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள் அந்தக் காலத்தில்; கூட்டுறவுச் சங்கம் வைத்துத் தொழில் வளர்த்து வருகிறார்கள் இந்தக் காலத்தில்.

பெரியார் மாவட்டத்திலே மட்டும் 183 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் குறிப்பிடத்தக்க பெருமையுடையதாகச் சில இருக்கின்றன; அவற்றில் 'ஜம்பை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம்' அதாவது 'ஜாம்டெக்ஸ்'. 'சென்டெக்ஸ்' எனப்படும் சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சங்கம்', 'ஈரோடெக்ஸ்' எனப்படும் 'ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' ஆகியவை முக்கியமானவை.

## 'ஜாம்டெக்ஸ்'

ஜமுக்காளம், படுக்கை விரிப்பு, தரைவிரிப்பு, துண்டு ஆகியவற்றை அற்புதமாகத் தயாரிக்கும் 'ஜாம்டெக்ஸ்' 8-3-64-ல் பதிவு பெற்றது; 21-1-83ல் சொந்தக் கட்டடத்தில் செயல்படத் தொடங்கியது.

துவக்க காலத்திலிருந்து இதில் உறுப்பினர்களாக இருந்தோர் எண்ணிக்கை 383 என்றாலும், இப்போதிருப்போர் எண்ணிக்கை 175 ஆகும்.

மற்ற வேலைகளைப் போல் அல்ல; ஆண்டு முழுவதுமே இங்கே 175 பேருக்குத் தொடர்ந்தாற்போல எப்போதும் வேலையிருக்கும்.

28''-லிருந்து 60'' வரை அளவிலான அழகு வண்ண ஜமுக்காளம் தயாரிக்கும் இவர்கள் தமக்குத் தேவைப்படும் நூலை 'கோ-ஆப்டெக்ஸ்' மூலமே பெற்றுக்கொள்ளுகிறார்கள். தயாரிப்புகளை அவர்கள் மூலமே விற்பனைக்கும் அனுப்புகிறார்கள். சில நேரங்களில் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் மொத்தமாக விற்பதுண்டு.

20-7-65 முதல், திரு. எஸ். ஆர் பாட்டப்பன் தான் இதன் நிரந்தரத் தலைவராக இருந்து வருகிறார். "இங்கிருந்து ஐந்து கிலோ மீட்டரில் உள்ள பவானிக்குப் போய்த்தான் மருத்துவ சிகிச்சை பெற வேண்டுமென்ற நிலையிருக்கிறது. கூடிய சீக்கிரமே ஜம்பையில் ஒரு மருத்துவமனை கட்ட ஏற்பாடு செய்து வருகிறோம்" என்றார் அவர்.

மாதம் ஒன்றுக்கு, அதிகபட்சம் 80 ஆயிரம் வரை ஜமுக்காளங்கள், படுக்கை விரிப்புபோன்றவைகளைத் தயாரிக்கும் இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தார், தங்கள் உறுப்பினர்களுக்கு, இலாபம் கிடைக்கிறபோது 31 சதவிகிதம் போனஸ் தருகிறார்கள். கர்னாடகம், மகாராட்டிரம், ஆந்திரா போன்ற பிற மாநிலங்கள் வரை இவர்கள் உற்பத்திக்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது.

இப்போதுள்ள சொந்தக் கட்டடம், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 1.80 இலட்சம் மானியமும், ரூ. 1.80 இலட்சம் கடனும் வாங்கிக் கட்டி முடிக்கப்பட்டதாம். தொழிற்கூடம், தொழிலுக்கான கருவிகள் எல்லாமே அந்தத் தொகையிலேதான் வாங்கப்பட்டிருக்கின்றன. இந்த நெசவாளர் சங்க வளர்ச்சிக்கெனத் தொழிலதிபர் பொள்ளாச்சி திரு. என். மகாலிங்கம் இருபத்தையாயிரம் ரூபாயை இதயபூர்வமாக வழங்கியிருக்கிறார்.

இங்கு வரும் நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கும் உட்படுத்தப்படுகின்றனர். மருத்துவ உதவி, விழாக்கால முன் பணமெல்லாம் கூட அவர்களுக்கு உண்டு.

**—இல. இராசேந்திரன்**

திரு. பாட்டப்பன், திரு. நாச்சிமுத்த, திரு. சுத்தானந்தன்



**ஜம்பை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தின் சிறப்பு அம்சம் என்ன தெரியுமா? இங்கே உள்ள**



உறுப்பினர்கள் எல்லாம் முழுக்க முழுக்க ஆதிதிராவிடர்களே!



சத்தியமங்கலம் :

அசோகச் சக்கரவர்த்தியின் பாறைச் சாசனங்களில் குறிக்கப்பட்டுள்ள சத்தியபுத்திரர் ஆட்சிப் பகுதி இது. மைசூர்ப் போர்களில் மையமாக விளங்கிய இங்கொரு கோட்டையும் உண்டு. திப்புசுல்தானால் பாங்குற அமைக்கப்பட்டு பாலமெல்லாம் அமைக்கப்பட்ட சாலையொன்று இங்கே இப்போதும் பழுதற்ற நிலையில் காணப்படுகிறது.

## 'சென்டெக்ஸ்'

கைத்தறித் துறையில் 'சென்டெக்ஸ்' என்ற பெயர் மிகவும் பிரசித்தம். சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கமே அப்படி அழைக்கப்படுகிறது. குன்றுதோறாடும் சென்னிமலைக் குமரனின் அடிவாரத்திலே அமைந்திருக்கும் இச்சங்கத்திற்கான மாபெரும் கட்டடம் அண்மையில்தான் திறந்து வைக்கப்பட்ட தென்றாலும், இந்தச் சங்கம் துவக்கப்பட்டது 7-4-1941-ல்.

துவக்கத்தில் 45 உறுப்பினர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் இப்போதைய எண்ணிக்கை 660 ஆகும்.

படுக்கை விரிப்பு, துண்டு, ஜன்னல் துணி, சோபா உறைத் துணி, பாலியஸ்டர் துணி போன்ற வகையறாக்களை கலை நுணுக்கமும், கை வண்ணமும் மிளிரும் வகையிலே தயாரித்து வருகிறார்கள் இவர்கள். 'கோ-ஆப்டெக்ஸ்' இடமும், மொத்த வியாபாரிகளிடத்திலும் தான் இதன் விற்பனை என்றில்லை; சில்லறை வியாபாரமும் இங்குண்டு.

பம்பாய், மைசூர், ஐதராபாத், லக்னோ, கல்கத்தா, பெங்களூர் போன்ற மற்ற மாநில முக்கிய நகரங்களிலே நடக்கும் கைத்தறிக் கண்காட்சிகளில் இவர்கள் முக்கியப் பங்கு வகித்துள்ளனர்; வகித்து வருகின்றனர். ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு நடத்தும் கைத்தறித் துணிப்போட்டிகளில் பலமுறை ஜூநதச சங்கத்தார் முதல்பரிசு பெற்றதுண்டு. உன்னதமான இவர்களுடைய தயாரிப்புகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, டென்மார்க், சுவீடன், கனடா, பிஜித் தீவு, மேற்கிந்தியத் தீவுகள் என அங்கிங்கென்றாதபடி எங்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

1962-63-ல், தமிழ்நாடு கைத்தறி செவாளர் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழாவின்போது, தமிழகத்திலுள்ள அனைத்து நெசவாளர் சங்கத்திலும் இதுவே தலைசிறந்ததெனக் கூட்டுறவுத் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு வெள்ளிக் கேடயமொன்று வழங்கப்பட்டிருக்கிறது.

1979-ல் இவர்களின் தயாரிப்புகள் இணையற்றவை என்பதற்கான 'ஐ.எஸ்.ஐ.' முத்திரை, இந்தியாவிலேயே முதன் முதலாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்தச் சங்கத்திற்குத்தான் அளித்திடப்பட்டது.

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தார், அரசின் உதவியோடு தமக்கென்றே ஒரு சாயச் சாலையும் நிறுவியிருக்கிறார்கள்.

இந்த நெசவாளர் சங்கம் உருவாகவும், அதன் முன்னேற்றத்திற்காகவும், அரும்பாடு பட்டு வருபவர் இச்சங்கத் தலைவர் திரு எம். பி. நாச்சிமுத்து ஆவார். அந்த நன்றி காரணமாகச் சங்கக் கட்டடத்தின் நுழைவாயிலில் அவருக்குப் பளிங்குக் கல்லாலான சிலையொன்று எழுப்பிப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.

சென்னை, பெங்களூர், மதுரை ஆகிய பெருநகரங்களில் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச் சங்க உறுப்பினர்களுக்கென்றே சென்னிமலையில் 2 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. கூட்டுறவுப்பண்டகசாலை, விருந்தினர் விடுதி, இலவச மருந்தகம், சமுதாய நலமன்றம் எல்லாம் அங்குண்டு.

## 'ஈரோடெக்ஸ்'

பெரியார் மாவட்டத்திலிருக்கின்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றான 'ஈரோடெக்ஸ்' எனப்படும் 'ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்'

## பொன்மொழிகள்

ஒருவன், தான் விரும்பும் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம்!

அறிவு; தன்மான உணர்ச்சி இலை இல்லையேல் பட்டம் பல பெற்றாலும் பல கோடி பணம் சேர்த்தாலும் பலனில்லை!

அறிவை நம்புங்கள்; அப்போதுதான் விஞ்ஞான அற்புதங்களைச் செய்து காட்ட முடியும்!

உலகுக்குப் பயன்படும் பாதி மனித சக்தியை நாம் பெண்ணடிமை மூலம் வீணப்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

—தந்தை பெரியார்

பெரியார் மாவட்டம்:

# வேலை வாய்ப்புகள்

"மற்ற மாவட்டங்களைப் போல அல்ல; பெரியார் மாவட்டத்தில் வேலைவாய்ப்புகள் அதிகம் உருவாகின்றன. ஆனால் அதற்கேற்ற நபர்கள் கிடைப்பது தான் சில நேரங்களில் கஷ்டமாக இருக்கிறது'' என்றார் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. எம். நாகேஸ்வரன்.

குறிப்பாகச் செவிலியர், மருந்துவப் பணிப்பெண்கள், மருத்துவ உதவியாளர், பிரசவம் பார்க்கும் பெண்கள், எக்ஸ்ரே பயிற்சி பெற்றோர், மருந்து கலப்போர் வேலைகளுக்கு நிறைய வாய்ப்பிருந்தும் அந்த வகையில் பயிற்சி பெற்றோர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் போதுமான அளவில் பதிவு செய்து கொள்ளாததை மிகவும் வருத்தத்தோடு குறிப்பிட்டார் அவர்.

*1980-ல் 31,451* பேர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள்; அவர்களில் *5,998* பேர் பெண்கள். அந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் *1942*. அதில் இந்த அலுவலகம் மூலம் நிரப்பப்பட்ட இடங்கள் *1685* ஆகும்.

*1983*ல் மார்ச் மாதம் *25*ஆம் தேதி வரை *48,745* பேர் பெரியார் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பெண்கள் *11,148* பேர். இது வரை இந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் *3084*ல் *2385* இவர்கள் மூலம் நிரப்பப்பட்டுள்ளது.

தாளவாடி, சத்தியமங்கலம் பகுதிகளிலிருந்து, ஈரோடு வேலை வாய்ப்பு அலுவலகம் வரை வந்து செல்வது பலருக்குச் சிரமமாக இருப்பதால் இவர்கள் ஒன்று செய்கிறார்கள். அப் பகுதிக்குச் சென்று செயல்பட 'நடமாடும் வேலை வாய்ப்பு நிலையம்' ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.




"வேறெங்கும் இதுபோல் நீங்கள் பார்த்திருக்க முடியாது'' என்று கூறிய வேலைவாய்ப்பு அலுவலர் திரு எம். நாகேஸ்வரன் அதுபற்றி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''ஒவ்வொரு மாதமும் முதல்வாரம், கடைசி வாரம் திங்கட் கிழமைகளில் தாளவாடிக்கும், அந்த இரண்டு வார செவ்வாய்க் கிழமைகளில் சத்திய மங்கலத்திற்கும் இந்த நடமாடும் வேலைவாய்ப்பு நிலையம் செல்லும். அப்படிச் செல்லு முன்பாக எங்கள் வருகை தண்டோரா போட்டும், அந்தப் பக்கங்களில் உள்ள திரையரங்குகளில் சிலைடு போட்டும் அப்பகுதி மக்களுக்கு முன்கூட்டி அறிவிக்கப்பட்டு விடும்.'

தமிழக அரசின் ஆணைப்படி இம்மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகள் 958 பேர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித்தொகை, 1980 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

முன்னாள் இராணுவத்தினர் 98 பேர்களும், உடல் ஊனமுற்றோர் 458 பேர்களும், மலைவாழ் மக்கள் 79 பேர்களும், இலங்கை அகதிகள் 409 பேர்களும் பர்மா அகதிகள் நால்வரும் பதிவுசெய்து கொண்டுள்ள இந்த அலுவலகத்தில் சித்தவைத்தியத் துறைக்கென இருவரும், ஓமியோபதிக்கெனப் பதின்மூவரும், லேப் டெக்னீஷியன்களாகப் பன்னிருவரும் மட்டுமே பதிவு செய்துள்ளனர்.

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளையாட்டுத் துறை வளர்ச்சியில் பெரிதும் கவனம் கொண்டிருக்கிறார். பெரியார் மாவட்டத்தில் அத்துறைக்கு வேலை நிறைய இருக்கிறது. ஆனால் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர் ஒருவர்கூட இங்கே பதிவு செய்து கொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று'' என்ற வேலைவாய்ப்பு அலுவலர், இசைப்பயிற்சி ஆசிரியர் எவரும் பதிவு செய்து கொள்ளாததையும் நமக்கு வாடிய முகத்தோடு தெரி



# பெருமை மிகு பெரியார் மாவட்டம்



மற்றெல்லா மாவட்டங்களும் ஊர்ப் பெயரால் விளங்க - தன்னிகரற்று விளங்கிய தலைவர் ஒருவர் பெயரால், தமிழ்நாட்டில் உதித்த பெருமையுடையது எங்கள் பெரியார் மாவட்டம்.

காடுகளும், மலைகளும், ஆறுகளுமே ஒரு நாட்டின் இயற்கை அரண்களாகும் என வள்ளுவன் சொன்ன வகையில் உள்ளமாவட்டமாகும் இது. ஆம்; காவிரி ஆறும், நொய்யலாறும், திம்பம் மலைப் பகுதிகளும் பர்கூர் மலைக்காடுகளும் இம்மாவட்டத்தின் இயற்கை அரண்களாகும். விளங்கச்சொல்லுவதென்றால் காடுமலிந்த கர்நாடகம் இந்த மாவட்டத்தின் வட எல்லை; தமிழ் வளர்க்கச் சங்கம் கண்ட மதுரை தென் எல்லை; கனி வளம் மிகுந்த சேலம் மாவட்டமும், பயிர் வளம் மிகுந்த திருச்சி மாவட்டமும் கிழக் கெல்லை; தொழில் வளமுடைய கோவை மாவட்டமும், இயற்கைத் தாய் அரவணைப்பிலுள்ள நீலகிரி மாவட்டமும் மேற்கெல்லை!

8179 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக 17-9-1979-ல் தமிழ்நாட்டில் 16வது மாவட்டமாகத் துளிர்த்த பெரியார் மாவட்ட மக்கள் தொகை 20,68,462 ஆகும்.

நாடு நலம் பெறவும், நாட்டு மக்களுக்கு நன்மை விளைந்திடவும் நாள்தோறும் நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கு, இந்த மாவட்டம் தவமிருந்து பெற்ற செல்லப் பிள்ளை போல! மாவட்டம் பிரிக்கப்பட்ட இந்தக் குறுகிய காலத்திலேயே, மற்ற மாவட்டங்களுக்கு நிகராக எல்லா வகையிலும் உயர்வு பெற்று இனிது விளங்குவது பெரியார் மாவட்டம்.

**ஒரு சோறு பதம்**

விவசாயத் தொழிலும், நெசவுத் தொழிலும் இம்மாவட்டத்திலுள்ள பெரும்பான்மை மக்களின் இருவிழிகள். பழம்பெருமை உடைய ஊர்களை உடையதும், இலக்கணம் படைத்தவரும், இலக்கியம் படித்தவரும், பண்டை நாகரிக எடுத்துக் காட்டுகள் கிட்டக் கூடிய நொய்யல்வெளி நாகரிகச் சான்றுகள் கிட்டியதும் ஆன பல சிறப்புக்களைப்பெற்றுள்ளதும் இன்னும் பல சிறப்புகளைப் பெற்று வருவதுமான பெரியார் மாவட்டத்தின் தலைமையிடமான ஈரோடு வளர்ச்சியைச் சொன்னாலே போதும், மற்ற இடங்களின் வளர்ச்சி தன்னால் விளங்கும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா?

வேறெங்கும் இல்லாதபடி ரூ. 2 கோடி செலவிலே உருவாக்கப்பட்ட மாவட்டஆட்சித்



**திரு. பி.வி. ராஜாராமன், இ.ஆ.ப.,**
**பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர்**

தலைவர் அலுவலகம், ரூ. 88 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம். ரூ. 22 இலட்சம் செலவில் கட்டப்பட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ரூ. 38 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மாவட்டக் கருவூலக் கட்டடம், ரூ. 80 இலட்



## விஜயமங்கலம் :

சமணமதத்தைக காலூன்றச் செய்த 24 தீர்த்தங்கரர்களில் ஒருவரான ஸ்ரீ சந்திர பிரப தீர்த்தங்கரர் ஆலயம் இங்குள்ளது. கொடும்பாளூர் இருக்குவேளிர் கலைநுணுக்க முறையிலே கட்டப்பட்ட மிகப் பழமையான இக்கோயிலில் 10-ஆம் நூற்றாண்டு ஓவியங்களும் உள்ளன எம்மதத்தாரும் சம்மதிக்கும் மிகப் பழைய தமிழிலக்கண நூலான 'நன்னூல்' இயற்றிய பவணந்தி முனிவர் சிலை இங்கிருக்கிறது. அவரை ஆதரித்த தங்கமன்னன் சீயகங்கன் சிலை, பெருங்கதை காப்பியம் பாடிய கொங்கு வேளிர் சிலை ஆகியவைகளும் உள்ளன இங்கே. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை தமிழ்ச்சங்கம் ஒன்றும் இங்கு இருந்ததெனக் கற்றறிவாளர்கள் கூறுகின்றனர்.

*** இராவண காவியம் 'பாடிய புலவர் குழந்தை பிறந்தது பெரியார் மாவட்டத்திலே தான்!**

தின் தலைவரான திரு. ஜே. சுத்தானந்தனின் அறையில் பெரிய அளவில் திரு. எம். பி. நாச்சிமுத்து அவர்களின் படம் வைக்கப்பட்டிருப்பதன் காரணம் பற்றி யார் கேட்டாலும் ''அவர் இல்லாமல் கைத்தறித் தொழில் இல்லை; இத்தொழிலின் தந்தை அவர் (Father of Handlooms)'' என்று மிகப் பெருமையோடு குறிப்பிடுவார்.



1947-ல் 81 உறுப்பினர்களோடு துவக்கப்பட்ட இந்தச் சங்கத்தில் இப்போது 587 பேர் அங்கம் வகிக்கின்றனர். ரூ. 9550 பங்கு மூலதனத்தில் அன்று துவக்கப்பட்ட இச் சங்கத்தின் இன்றைய பங்கு மூலதனம் 6 இலட்சத்து 20 ஆயிரத்து 245 ரூபாயாகும்.

படுக்கை விரிப்பு, தலையணை உறை, பாலிஸ்டர் சூட்டிங்ஸ் போன்றவைகளைச் சிறப்புற உருவாக்கும் இவர்களின் தயாரிப்புகளுக்கு ஆந்திரா. கர்னாடகம் போன்ற வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்பிருக்கிறது.

இக் கூட்டுறவுச் சங்கத்தார் நலன் கருதி 'டிஸ்பென்சரி' ஒன்றும் வைத்திருக்கிறார்கள். மருந்துகளுக்கு, மருத்துவருக்கு என ஆண்டொன்றுக்கு ரூ. 20 ஆயிரம் ஒதுக்கப்படுகிறது.

இவர்கள் அமைத்துள்ள நூலகத்தில் ஏறத்தாழ நான்காயிரம் நூற்கள் வைக்கப்பட்டுள்ளன. காலை, மாலை தினசரிகளும் அங்கே போடப்படுகின்றன. ஓய்வு நேரத்தில் உறுப்பினர்கள் இந்த நூலகத்தினால் நல்லபயன்பெற்று வருகிறார்கள்.

ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தமது உறுப்பினர்களுக்கென முதலில் 50 வீடுகளைக் கொண்ட தனிக் குடியிருப்பொன்றை ஏற்படுத்தியது. பின்னர், உறுப்பினர்கள் எண்ணிக்கை பெருகவே 109 வீடுகளைக் கொண்ட இன்னொரு குடியிருப்பும் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது 110 வீடுகளைக் கொண்ட மற்றொரு குறியிருப்பும் கட்டப்பட்டு வருகிறது.

கூட்டுறவுப் பண்டகசாலையொன்றும் அமைத்து தரமான பொருட்களைத் தம் உறுப்பினர்கள் பெறச் சிறந்ததோர் ஏற்பாடும் செய்திருக்கிறார்கள் இவர்கள்,

ஈரோடு, சென்னை, மதுரை, திருச்சி எனத் தமிழக முக்கிய நகரங்களிலே மட்டுமின்றி வெளி மாநில முக்கிய நகரங்களிலும் இவர்களுடைய விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1981-82-ல் தமிழ் நாட்டிலேயே சிறந்த கூட்டுறவு நெசவாளர் சங்கம் இதுவெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மத்திய அமைப்பொன்று தங்க மெடலே கொடுத்துப் பாராட்டியிருக்கிறது.

மாதம் ஒன்றுக்கு 15 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள தயாரிப்பு இனங்களை உருவாக்கும் இச்சங்கத்தினர் நயம்படத் தயாரிக்கும் துண்டுக்கென விரைவிலேயே 'ஐ.எஸ்.ஐ.' முத்திரை கிடைக்கவிருக்கிறதாம்; சங்கத் தலைவர் திரு ஜே. சுத்தானந்தன் பெருமையோடு இதை நமக்குத் தெரிவித்தார்.

பெரியார் மாவட்டம்:

# வன வளம்



பெரியார் மாவட்டம் ஈரோடு சரகத்தில் 1067.15 சதுர கிலோ மீட்டர் அளவில் வனப்பகுதி விரிந்து கிடக்கிறது.

மேட்டூர் அருகே பாலமலையிலும், பர்கூர், தாமரைக்கரை, வேளாமண்டி, நீலகிரியின் கீழைச் சரிவு ஆகிய இடங்களிலும் பரவியுள்ளன பெருங்காடுகள். சென்னிமலை வாய்ப்பாடி, ஊதியூர், தளவாய் பட்டணம், கருடன் கோட்டை ஆகிய ஊர்களில் சிறு வனங்கள் உள்ளன.

நீலகிரி கீழைச்சரிவு, பர்கூர் வனாந்தரங்களில் யானை, மான், கரடி, முயல் போன்ற வன விலங்குகள் மகிழ்ந்து திரிவதைக் காணலாம். மேட்டூர் அருகே உள்ள தண்டா பகுதியில் அண்மையில் ஒரு யானை கொல்லப்பட்டு தந்தம் களவாடப்பட்டதை வன அலுவலர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். குற்றவாளி தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

134 வன அலுவலர்கள் உள்ள ஈரோடு வனச் சரகத் தலைமை அதிகாரியாக இருப்பவர் திரு. டி. எம். அப்பாவு.

கிரியகண்டி, தண்டாறு, செல்லம்பாளையம், கொளத்தூர் ஆகிய இடங்களில் செக் போஸ்ட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. சந்தன மரங்கள், கடுக்காய், புளி, ஆவாரம், தேக்கு, சீயக்காய், நெல்லி போன்ற பயன் தருமரங்களும் இந்த வனப் பகுதிக் காட்டு மரங்களிடையே கணக்கின்றிக் காணப்படுகின்றன.

பாலமலை வனச் சரகத்தில் இருக்கின்ற குவாரியிலிருந்து கருப்புக்கல் எடுக்கிறார்கள். ஒரு கியூபெக் மீட் அளவு கல் எடுக்கப்பட்டதென்றால், அந்த வனப் பகுதியை விட்டு வெளியே கொணர ரூ. 200 பணம் கட்ட வேண்டும். இந்த வனப்பகுதிக்கு இது ஒரு இதர வருமானமுள்ள பணியாக நடந்து வருகிறது.

பெரியார் மாவட்டத்திலுள்ள மற்றொரு வனசசரகமான சத்தியமங்கலம் வனச்சரகம் எப்படியிருக்கிறது? மாவட்ட வன அலுவலரான திரு அ. கரிகாலனைச் சந்தித்துக் கேட்டோம். அவர் சொன்ன பதில்களின் விவரம் வருமாறு:

பெரிதும் மலைப் பகுதிகள் உடையதான இந்த வனச்சரகம் சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் விரிந்து கிடக்கிறது. தாளவாடி, கடம்பூர், ஆசனூர், தளமலை, மாக்கம் பாளையம், குன்றி போன்ற பகுதிகளில் பரவியுள்ள இந்த வனப்பகுதியில் பெரிதும் மூங்கில்கள், சந்தன மரங்கள் கிடைக்கின்றன. இங்குள்ள மூச்சிக்குழி என்ற பள்ளத்தாக்குப் பகுதி எப்போதும் பசுமையுடையதும் இயற்கைவளம் மிகுந்ததும் ஆகும்.

கடுக்காய், நெல்லி, புளி, சீயக்காய்ப் பட்டை, பூச்சிக் கொட்டை ஆகியவற்றுக்குஇந்த வனப்பகுதியில் எப்போதுமே பஞ்சமிருப்பதில்லை. ஆண்டுக்கு இரண்டு முறை-அதாவது ஜூலை டிசம்பரில் சந்தனக் கட்டைகள் ஏலம் விடப்படுகின்றன. பல்வேறு மாநிலங்களிலிருந்தும் இதற்காக வியாபாரிகள் இங்கு வருகிறார்கள்.

சுஜல்குட்டை, பன்னாரி, திம்பம், தாளவாடி, அருணவாடி, எத்துக்கட்டி, காமநாயக்கன் பாளையம் ஆகிய இடங்களில் தணிக்கைச் சாவடிகள் அமைத்திருக்கிறார்கள்.

தலைமை வன அலுவலர் தவிர, இப்பகுதியைக் காப்பதில் 4 வனச்சரக அலுவலர்கள், 15 வனப் பணியாளர்கள், 30 வனக் காப்பாளர்கள், 30 வனக்காவலர்கள் இச் சரகத்திலே பணியாற்றி வருகின்றனர்.

இந்த வனப்பகுதியிலே கிடைக்கும் பயன்மிகு பொருட்கள், சத்தியமங்கலம் சரகக்கூட்டுறவுச் சங்கத்திற்குக் குத்தகைக்குத் தரப்படுகின்றன.

அண்மையில் - சத்தியமங்கலம் வனச் சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் விற்பனை நிலையமும், சங்கக் கிடங்கு பணிமனை ஆகியவைகளும் மாண்புமிகு செய்தி மற்றும் வனத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தாளவாடி, தாளமலை பகுதிகளிலே செல்லும் நம்மால் யானை, மான், முயல், நரி, காட்டெருமை கரடி போன்ற வனவிலங்குகளைப் பலவாக எளிதில் காண முடிந்தது.

ஆசனூர் மாதிரிப் பட்டுப் பண்ணை எதிரே, அரசினர் உறைவிட நடுநிலைப் பள்ளி அருகே, வனவளம் கண்டுகளிக்க வரும் பயணிகள் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளும்பொருட்டு ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை மூலம் ஓய்வு விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

— 'இந்திரன்'



சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மாவட்ட நீதி மன்றக் கட்டடம், ரூ. 68 இலட்சத்தில் கட்டப்பட்ட நகராட்சி நாள் அங்காடி, ரூ. 27 இலட்சம் செலவிலான வடிகால் திட்டம், ரூ. 14 இலட்சம் செலவில் சூனிமார்க்கெட், கைத்தறித் துணிக்கிடங்கு, ரூ. 8.5 இலட்சம் செலவிலே விரிவாக்கப்பட்ட மாவட்டத் தலைமை மருத்துவமனை, ரூ. 20 இலட்சம் செலவில் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ரூ. 11 இலட்சம் செலவில் சாலைகள் விரிவாக்கம், ரூ. 4 இலட்சம் செலவில் வ.உ.சி பூங்கா எழில் கூட்டல், மற்றும் புதிதாகத் துவக்கப்பட்ட ஜீவா போக்குவரத்துக் கழகம், பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு அச்சகம் என நகர வளர்ச்சித் திட்டங்கள் நாளொருமேனி பொழுதொரு வண்ணம் வளர்ந்து கொண்டே போகின்றன.

இதுவே திட்டங்களின் மொத்தப் பட்டியல் அல்ல!

**வளரும் பட்டியல்**

வீட்டு வசதி - குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம், பசுமைப் புரட்சி, வேளாண்மைக்குப் புத்துயிரூட்டும் பாசனத் திட்டங்கள், தனக்கு நேர் இல்லாத் தன்னிறைவுத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், குழந்தைகளுக்குப் புத்துணர்வு ஊட்டும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், ஆதரவற்ற முதியோர்க்குச் சத்துணவு, வீட்டுமனைப் பட்டா - நிலப்பட்டா வழங்கிடல், சிறு-குறு



சித்தோடு பால்பண்ணை

விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், முதியோர் - விதவைகளுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கல், முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி - இலவச வேட்டி - சேலை வழங்கு திட்டம், மாணவ மாணவியருக்கு உபகாரச் சம்பளம் - தங்கும் விடுதிகள், நலிவடைந்தார்க்கு நல்ல வீத வீட்டு வசதி, ஆதிதிராவிடர் குடியிருப்பு, குடிநீர் வசதி, கிராமக் கைத்தறித்தொழில் ஊக்குவிப்புத் திட்டம், கைத்தறித் தொழில் காக்கும் வளர்ச்சித் திட்டங்கள், பால்வளம் - எருமையின உறைவிந்து நிலையம், மலைவாழ் மக்கள் மருத்துவ வசதி, மின் உற்பத்தி, சிறுசேமிப்பு, வனவளம், பாலம் அமைத்தல்—சாலை அமைத்தல், பாசன வசதி, தோல் பதனிடும் தொழில் வளர்ச்சி, சுற்றுலா மையம் எனப் பெரியார் மாவட்டம் கண்டு வரும் அரிய திட்டங்களின் பட்டியல் பெரியதாகும்.

**இணையிலா மாவட்டம்**

தீரன் சின்னமலை, கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போர் வீரர்கள் பிறந்தது இந்த மாவட்டத்தில்தான்! உலகிலேயே மண்ணால் கட்டப்பட்ட பெருமை உடையதான பவானிசாகர் அணை இங்குதான் அமைந்திருக்கிறது!

நெல், கரும்பு, புகையிலை, மஞ்சள் என இயற்கை வளம் கொஞ்சும் மாவட்டம் இது. எங்கும் காண இயலாது என்ற அளவில் கைத்தறித் துணி வகைகள் இங்கேதான் உருவாகின்றன.

'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே, ஊரெனப் படுவது உறையூர் ஒன்றே' என்ற வகையில் - மாவட்டம் என்றாலே நினைவு வரக் கூடியது பெரியார் மாவட்டமே என்ற அளவில் திகழும் எங்கள் மாவட்டத்திற்கு வாரீர், வரலாற்றுச் சிறப்புகளைப் பாரீர்- என அன்போடழைக்கின்றேன் உங்களை!

மக்கள் குறைகேட்கும் நாளில்...



**ஈரோடே முடிவெடுக்க வேண்டும்!**

கள்ளுக்கடை மறியல் 1921-22-ல் நடந்தபோது, அதில் தன் மனைவியார் நாகம்மையோடும், சகோதரி கண்ணம்மாவோடும் ஈடுபட்டமைக்காகத் தந்தை பெரியாரைக் காந்தியடிகள் பெரிதும் பாராட்டினார். இப்போராட்டம் காரணமாக அவர்கள் மூவரும் பிரிட்டிஷாரால் இரண்டுமுறை கைது செய்யப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டதுண்டு.

அப்போது, காந்தியாரால அகில இந்திய ரீதியில் கள்ளுக்கடை ஒழிப்புக் கமிட்டிஅமைக்கப்பட்டபோது, நாகம்மையாரும், கண்ணம்மாளும் அதில் தமிழகப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டார்கள்.

அந்நாளில்-காந்தியாரிடம் ''கள்ளுக்கடை போராட்டத்திற்கு என்னதான் முடிவு எடுத்திருக்கிறீர்கள்?'' என்று சிலர் கேட்டனர். அதற்கு அவர்— ''அது என் கையில் இல்லை· ஈரோட்டிலுள்ள - நாகம்மையார், கண்ணம்மாள் ஆகிய இரண்டு பெண்மணிகளின் கையில்தான் அது இருக்கிறது'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.



பெரியார் மாவட்டம் :

# மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்

ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னாலே கட்டடக் கலையில் தமிழர்கள் பின் தங்கி விட்டதாகப் பேசப்படுவது முற்றிலும் தவறானது என விளக்குவதாக அமைந்துள்ளது பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஈரோட்டைத் தலைமையாகக் கொண்ட பெரியார் மாவட்டத்தைத் தோற்றுவித்ததோடு-இப்புதிய மாவட்டத்திற்கான அலுவலகங்கள் கட்ட 327 இலட்சம் ரூபாய் அளவிற்கு அனுமதி அளித்தார். இம் மாபெரும் திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தில் ஒரு கட்டடச் சிறப்பு வட்டம் ஏற்படுத்தப் பெரும்பான்மையான வேலைகள் முடிக்கப்பட்டும், பல வேலைகள் பல்வேறு நிலையில் விரைவாக நடைபெற்றும் வருகின்றன. அவ்வகைக் கட்டடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டமும், கருவூலம் முதலிய இதர அலுவலகக் கட்டடங்களும் அடங்கும்.

10-11-81-ல் அடிக்கல் நாட்டப்பட்டு, 12-12-83-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், ஓர் எட்டுமாடிக் கட்டடம் ஆகும்.

**தலைக்கு வேறு, தாடிக்கு வேறா ?**

காங்கிரஸ் கட்சி சார்பில், 1957ல் போட்டியிட்ட திரு பி. சுப்பராயனை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்து வந்தார் தந்தை பெரியார். அதற்காக நடந்த ஒரு கூட்டத்தில் அவரிடம் இப்படியொரு கேள்வி கேட்கப்பட்டது - 'இங்கே காங்கிரசுக்கு ஆதரவாக ஓட்டுக் கேட்கிற நீங்கள், ஈரோடு சென்றால், உங்கள அண்ணன் மகன் சம்பத்துக்கு ஆதரவாக ஓட்டுக் கேட்பீர்களா?'

அதற்கு, தந்தை பெரியார் உடனே இப்படிப் பதில் சொன்னார் - ''தலைக்கு ஒரு சீயக்காய், தாடிக்கு ஒரு சீயக்காயா? எல்லாவற்றிற்கும் ஒரே சீயக்காய் தான்!''

தமிழ்நாட்டிலேயே பெரியார் மாவட்டத்தில் தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய எட்டு மாடிக் கட்டடம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அக்கட்டடத்தோடு முன்புறம் இணைப்பு பிரகாரத்துடன் கூடிய எண்கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ள கூட்ட மன்றக் கட்டடம் மூன்றடுக்குக் கொண்டது. இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் ஈரோடு மாநகரிலேயே மிக உயர்ந்த கட்டடமாக அமைந்துள்ளது. அக்கட்டடம் 215 அடி நீளமும் 105 அடி உயரமும் கொண்டது. கட்டடத்தின் தளப்பரப்பு ஒவ்வொரு தளத்திற்கும் 12900 சதுர அடி. இது தவிர கட்டடத்தின் பின் பக்கத்தில் இணைப்புப் பிரகாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள, ஒவ்வொரு தளத்திற்கும் 365 சதுர அடி பரப்புகொண்ட ஆண் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட தனிக் கழிப்பறைக்கட்டடமும்கூட ஒரு எட்டு மாடிக்கட்டடமாக அமைந்துள்ளது.

இக்கட்டடங்களுக்கு நவீன முறையில் கண்ணாடி தள்ளு கதவுகளுடன் கூடிய அலுமினியம் சன்னல்கள் பொருத்தப்பட்டுள்ளன. கட்டடத்தின் வெவ்வேறு மாடிகளுக்கு விரைவில் சென்றடைய நான்கு லிஃப்ட்கள் அமைக்கப்பட்டுள்ளன. எட்டுமாடிக் கட்டடத்தில் தரை மட்டத்திலான தளத்தில் வரவேற்பு, விசாரணை அறைகளும் மற்றும் இருபுறங்களிலும் பதிவு வைப்பு அறைகளும் அமைந்துள்ளன.

மற்ற ஏழு தளங்களிலும் ஒவ்வொரு தளத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு ஏற்றவாறு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் பார்வையாளருக்கென, கழிப்பிட வசதிகளுடன் கூடிய தனி அறை ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுக் கழிப்பிடம் தவிர ஒவ்வொரு தளத்திலும் உயர்மட்ட அலுவலர்களுக்கு அறையுடன் இணைந்த கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் உணவு அறை தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

எண்கோண வடிவத்தில் உள்ள கூடங்களும் எட்டுப்பக்கக் கூம்புவடிவத்தில் அமைந்த

# அரசுத் தேர்வுத் துறையின் அரிய சாதனைகள்

அரசுத் தேர்வுத்துறை மொத்தத்தில் 41 அரசுத்தேர்வுகளை நடத்தி வருகிறது. இவைகளில், மேல்நிலைத் தேர்வு, இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ் பொதுத் தேர்வு, ஆங்கிலோ இந்தியன் பள்ளியிறுதித் தேர்வு, மெட்ரிகுலேஷன் தேர்வு மற்றும் இடைநிலைப் பள்ளியாசிரியர்களுக்கான டிப்ளோமா தேர்வு ஆகியவை மாநில அளவில் நடத்தப்படும் பெரிய தேர்வுகளாகும்.

மாநிலத்தின் கல்வி வளர்ச்சி காரணமாக, ஆண்டுதோறும்புதிதாகப் பலபள்ளிகள் தொடங்கப்படுகின்றன. இதன் விளைவாக, இத்துறையினால் நடத்தப்படும் தேர்வுகளுக்குக் குறிப்பாக, மேல்நிலைத் தேர்வு மற்றும் இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ் பொதுத்தேர்வு ஆகியவைகளுக்கு வரும் மாணவ மாணவிகளின் மற்றும் தனித் தேர்வர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துச்கொண்டே வருகின்றது. உதாரணமாக, கடந்த மூன்றாண்டுக் காலத்தில் இத்தேர்வுகள் எழுதியவர்களின் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தேவைப்படும் விவரங்கள் அறிய வழிவகை செய்யும் பொருட்டும், வளர்ச்சித் திட்டத்தின் கீழ். இத்துறையின்கீழ் மதுரை, கோவை மற்றும் திருச்சி மாவட்டங்களில் மண்டல அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, சீரான முறையில் இயங்கி வருகின்றன.

இம்மண்டல அலுவலகங்கள் இத்துறையின் பணிகளைச் செம்மையாகச் செய்வதற்கு உதவுவதோடு, ஊரகப் பகுதியில் வாழும் மக்களுக்குப் பெருமளவில் உதவியாக அமைந்துள்ளன.

தவிர, மிகப் பெரிய தேர்வுகளான இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ்ப் பொதுத் தேர்வு, மற்றும் மேல்நிலைத்தேர்வு எழுத வரும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துக் கொண்டு வருவதால், அவர்களுக்குத் தேர்வு எழுத வசதி ஏற்படுத்தும் பொருட்டு, வளர்ச்சித் திட்ட அடிப்படையில், 1983 மார்ச் முதல் ஆண்டுதோறும் கூடுதலான புதிய தேர்வு மையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம் சிறப்பாக ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் பெருமளவில் உதவுவதற்காக வகுக்கப்பட்ட திட்டமாகும்.

இதுதவிர, கடந்த ஆண்டுவரை இடைநிலைக்கல்வி இறுதிச் சான்றிதழ்ப் பொதுத் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வு எழுத வரும் தனித்தேர்வர்களுக்குத் தேர்வு மைய நுழைவுச் சீட்டு, தபால் மூலமாக அனுப்பப்படும் முறை பின்பற்றப்பட்டு வந்தது.

சமீப காலத்தில் இக்குறிப்பிட்ட தேர்வுகள் எழுதவரும், தனித்தேர்வர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே வருவதால், பல ஆயிரக்கணக்கான தனித்தேர்வர்களுக்கு

| காலம் | | இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ் பொதுத் தேர்வு | மேல் நிலைத் தேர்வு |
|---|---|---|---|
| 1981 | மார்ச் / ஏப்ரல் | 3,06,821 | 1,45,974 |
| | செப்டம்பர் / அக்டோபர் | 91,664 | 44,125 |
| 1982 | மார்ச் / ஏப்ரல் | 3,36,891 | 1,57,599 |
| | செப்டம்பர் / அக்டோபர் | 1,06,644 | 48,550 |
| 1983 | மார்ச் / ஏப்ரல் | 3,52,100 | 1,75,092 |
| | செப்டம்பர் / அக்டோபர் | 1,28,000 | 51,500 |

முன்னர், நீண்டகாலமாக, இத்துறை சார்நிலை அலுவலகங்கள் இல்லாத, மாநில அளவிலான ஒரு தலைமைத் துறையாக இயங்கி வந்தது. இந்நிலையில், இத்துறையினால் நடத்தப்படும் அரசுத் தேர்வுகள் சம்பந்தப்பட்ட விவரங்கள் வேண்டல், மற்றும் சந்தேகங்களை நிவர்த்தி செய்தல் போன்ற அனைத்துக் காரியங்களுக்கும், சென்னையிலுள்ள இத்தலைமையலுவலகத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டும் அல்லது நேரில் வரவேண்டும் எனும் நிலை இருந்தது.

ஆனால், சமீப காலத்தில் இந்நிலை மாற்றப்பட்டு, வளர்ந்துகொண்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட காலகட்டத்தில் செய்து முடிக்கப்பட வேண்டிய அவசரத்தன்மை வாய்ந்த தேர்வுப் பணிகளைச் செம்மையாக நடத்த உதவும் பொருட்டும், மாநிலத்தில் கிராம மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் சிரமமின்றி அரசுத் தேர்வுகள் சம்பந்தமாகத்

அவர்களது தேர்வு மைய நுழைவுச் சீட்டுகள் தபால் மூலம் குறுகிய காலத்தில் அனுப்புவதில் சிரமங்கள் ஏற்பட்டன. மற்றபடி, கடைசி நேரத்தில் சிலரிடமிருந்து அவர்களது தேர்வு மைய நுழைவுச் சீட்டுகள், காலத்தில் கிடைக்கப் பெறவில்லையெனப் புகார்கள் கிடைக்கப் பெற்று வந்தன.

பல ஆயிரக்கணக்கான தனித்தேர்வர்களுக்கு நுழைவுச் சீட்டு அனுப்பும் சம்பந்தப்பட்ட பெரும் அளவிலான பணியினைச் சீர் படுத்தும் பொருட்டும், தேர்வு எழுத வருபவர்களுக்கு அவர்களது நுழைவுச் சீட்டுகளைச் சிரமமின்றிக் காலத்தில் பெற வழி செய்யும் பொருட்டும், இவ்வினத்தின் கீழ்த் தேர்வு எழுதவருபவர்களுக்கு, ஆங்காங்கே, தேர்வு மைய நுழைவுச் சீட்டு வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு, அம்மையங்களின் மூலம் நுழைவுச் சீட்டுகள் நேர்முகமாக வழங்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.



# பச்சையப்பர் நினைவு விழா

பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனரின் நினைவு விழா 22.3.84 அன்று பச்சையப்பன் கல்லூரிஅரங்கில் நடைபெற்றது.

பச்சையப்பன் அறக்கட்டளை குழு உறுப்பினர் திரு பி.முருகன் வரவேற்புரை ஆற்றினார்.

பச்சையப்பன் அறக்கட்டளை குழுவின் தலைவர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப., நிர்வாக ஆண்டு அறிக்கையைப் படித்து தொடக்க உரை ஆற்றினார்.

விழாவில் அவர் பேசுகையில், இப்பரந்த ஞாலம் அழிந்து படாது நிலைபெற்றிருக்கக் காரணம், தன்னலம் கருதாத மேன்மக்கள் சிலர் வாழ்வதனால் என்றும், கொள்கைச் சான்றோர்களின் நினைவைப் போற்றுவதிலும் அவர்தம் தொண்டின் சீர்மையை எண்ணி வியப்பதிலும் சமுதாயம் பின்னடைவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் காஞ்சிக்கு அருகிலுள்ள பெரியபாளையம் ஊரில் பிறந்து அயராத உழைப்பால் அரும் பொருள் சேர்த்து இச்சமுதாயம் அறிவு ஒளி பெற்றுயர வழி வகுத்துச் சென்றவர் பச்சையப்பன் என்றும் அவர் நினைவுகூர்ந்தார்.

வள்ளுவர் கண்ட ஈகைப் பண்பும், மகாகவி பாரதியார் வலியுறுத்திய அறச் சிந்தையும், வடலூர் வள்ளலாருக்கு இருந்த அருள் உள்ளமும் கொண்ட **பெருந்தகை வள்ளல் பச்சையப்பன்** அவர்கள்.

பச்சையப்ப வள்ளலின் அறிவாலயத்தில் கல்வி பயின்று நாட்டின் பெருமைமிக்க பதவிகள் பலவற்றில் பணியாற்றிய சிறப்புமிக்கவர்களைப் போன்றே, வெற்றி பெற்ற மாணவமணிகள் பெருகி பச்சையப்பல் புகழைப் பரப்பிட வேண்டும் என்ற தம் அவாவைத் தெரிவித்தார்.

விழாவிற்குத் தலைமைவகித்து பல்வேறு அறநிறுவனங்களின் சார்பில் வழங்கப்பட்ட பதக்கங்களையும், புத்தகங்களையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் மாணவர்களுக்கு வழங்கிப் பேசுகையில், ''ஆண்டுதோறும் இனி பச்சையப்பன் நினைவுவிழா நடைபெறும் என்று நம்புகிறேன். ஓர் ஆண்டுக் காலத்தில் பொறுப்புக் கழகம் தேர்தல் ஏற்படுத்தி பொறுப்புக் கழகத்தின் சார்பில் விழா நடத்த உள்ளோம். அரசே இதை ஏற்று நடத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அடுத்த ஆண்டு இதே நேரத்தில் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மூலம் நடைபெறும் என்று நம்புகிறேன்.



"கடந்த இரண்டு ஆண்டுகளாக கட்டுப்பாட்டுடன் மற்றவர்கள் வியக்கும் வண்ணம் உள்ளது பாராட்டத்தக்கது. என்னுடைய ஆசையெல்லாம் இன்றைக்கு உள்ள பெருமையைவிட மேலும் பெருமையடைய வேண்டும் என்பதுதான். இங்கு உள்ள மாணவர்கள் பட்டப் படிப்புப் படிக்கிறார்கள் என்று இல்லாமல், ஆராய்ச்சிக்குரிய படிப்பையும் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். பச்சையப்பன் அவர்கள் 40 ஆண்டுகள் வாழ்ந்து இருந்தாலும் தொழில் செய்து சம்பாதித்த பணத்தைக் கல்விக்கு செலவிட்டதைப்பாராட்டுகிறேன்.

''இன்று தான் அவர் உயில் எழுதிய நாள். ஆனால் மற்றவர்களோ 90 வயதானாலும் முற்படுவதில்லை. பச்சையப்பன் செய்த சேவையை எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவரது பணி ஏழை, எளிய பிற்பட்ட மக்களுக்குப்பயன்படுகிறது. தொழில்கல்வி முக்கியத்துவம் என்று கருதி அரசு செயல்படுத்தி வருகிறது. 1984ல் தான் அமல்படுத்த முடியும் என்றாலும் அடுத்த கல்வி ஆண்டிலேயே ஒரு சில இடங்களில் ஏற்படுத்த உள்ளோம்.

''படித்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது. கால் பாகம் அரசு மானியம் அளிக்கிறது. அதைக்கூடப் பெற படித்த இளைஞர்கள் முன் வருவதில்லை. எனக்கு வேலை தான் வேண்டும் என்று கூறுகிறார்கள். நம் சமுதாயத்தில் மாணவர்கள் உணர்வோடும், பொறுப்போடும், தியாக மனப்பான்மையோடும் சமுதாய வளர்ச்சி நோக்கத்தோடும் வாழவேண்டும் என்று விரும்புகிறேன்''

பச்சையப்பன் அறக்கட்டளையின் உறுப்பினர் திரு என். அருணாசலம் நன்றி கூறினார்.

**—அ. ம. விநாயகம்**

கூரையுடனும் உருவாக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கூட்டமன்றக் கட்டடத்தின் 5540 சதுர அடி பரப்பளவு கொண்ட கீழ்த்தளம் வங்கியாகச் செயல்பட இருக்கிறது. ஒவ்வொன்றும் 1076 சதுர அடி பரப்பளவில் முறையே 12 உறுப்பினர் மற்றும், 29 உறுப்பினர்கள் கலந்து கொள்ளத்தக்கதாக அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தளத்தில் முக்கியமான பெருங்கூட்ட மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. கூட்ட மன்றத்தின் தளப் பரப்பு 3240 சதுர அடி பரப்புள்ளது. இக்கூட்ட மன்றத்தில் 122 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றத்தில் நவீன முறையில் அமைக்கப்பட்ட இருக்கை மற்றும் மேஜைகள், ஒலி பரப்பு அமைப்பு வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளன. முதல் மற்றும் இரண்டாவது தளங்களில் உள்ள கூட்ட மன்றங்கள், இரண்டாவது தளத்தின் வெளிக்கூடம் முதலியவை நவீன முறையில் சுவர்கள் மற்றும் கூரை அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தின் கீழ் கட்டடத்திற்குப் பின்புறம் கிடைக்கவிருக்கும் நிலத்தில் ஊர்திகள் நிறுத்தும் இடம், சைக்கிள்கள் நிறுத்துமிடம், உணவகம், குழந்தைகள் காப்பகம், கூட்டுறவுப் பண்டகசாலை மற்றும் பால் நிலையம் முதலியன கட்டப்படவிருக்கின்றன.

இக்கட்டடங்கள் மிகக் குறுகிய காலமான ஏறத்தாழ இரண்டாண்டுகாலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடங்களுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 190.92 இலட்சமாகும். இந்த மாபெரும் எட்டு மாடிக் கட்டடம், கூட்ட மன்றம் அதைச் சார்ந்த சாலை அமைப்பு, சுற்றுச் சுவர், சுகாதார மற்றும் தண்ணீர் விநியோக வேலைகள், மின் வேலைகள், முதலிய முடிவு பெற்ற பணிகளோடு இனி கட்டப்படவிருக்கும் மேற் சொன்ன உணவகம் முதலிய கட்டடங்களுக்கான பணிகளுக்கும் சேர்ந்து இந்த மொத்த மதிப்பீட்டுத் தொகைக்குள்ளாகவே முடிக்கப்பட்டு விடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டடத்தின் நேர் எதிரே, ரூ. 80 இலட்சம் மதிப்பீட்டில் நீதி மன்றக் கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது.

—ராஜ

## ஈரோட்டில் இலவசப் பல்பொடி!

ஈரோடு தொழிற்பேட்டையில் பலவகை பெரிய - சிறிய தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன. ஏதேனும் ஒரு தொழிற்சாலை பற்றி நேரில் கண்டெழுதக் கருதிச் சென்ற நமக்கு, வளர்ந்தவைகளை விட வளர்ந்து வருபவைகள் பற்றிக் கவனம் திரும்பியது. எதிரே தெரிந்தது 'இலவசப் பல்பொடி' தயாரிக்கும் ஒரு சிறு தொழிற்சாலை.

'சிட்கோ' உதவியோடு அதை நிறுவியிருக்கும் திரு டி. தரணிபதி பி.ஈ., நிர்வாகத்தின் கீழ் உள்ள அதில், பெண்கள் 12 பேர்களும் இரண்டு ஆடவர்களும் பணியாற்றி வருகிறார்கள். கையில் உறை, தலையில் துணிக் குல்லாய், முகத்தில் சுவாசத் தடுப்பு ஆகியவைகளோடு அவர்கள் பணியாற்றுவதை நாம் பார்க்கிறோம்.

திரு டி. தரணிபதி. ''முதலமைச்சரின் இந்த அரிய திட்டம் ஏழை எளிய மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது'' என்றும் கூறினார்.

அவற்றைப் பக்குவமாகக் கலந்திடப் பயன்படுத்தப்படும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் இயந்திரங்களையும் நம்மோடு வந்து காட்டி, அவைஇயக்கப்படும் விதம் பற்றியும் விவரித்தார் அவர்.

''தொடர்ந்தாற்போல் எங்களுக்கு வேலை தரப்படாததால் மாதத்தில் சில நாட்கள் வேலையற்றிருக்கிற நிலைமையும் ஏற்பட்டு விடும். தொடர்ந்து தரப்பட்டால் இன்னும் அதிகம் எங்களால் பல்பொடி தயாரிக்கமுடியும்; அதனால் இன்னும் பல பேருக்கு வேலை வாய்ப்பளிக்கவும் வாய்ப்பிருக்கும்'' என்றும் அவர் கூறினார்.

ஒரு நாளைக்கு இந்தச் சிறிய தொழிற்சாலையில் தயாராகும் 400கிலோ பல்பொடி, 30 கிராம் தனிப் பாக்கெட்டுகளில் கைபடாமல் அடைக்கப்பட்டு, அவற்றை இருபத்தைந்து இருபத்தைந்தாகத் தனிக் கட்டாக்குகிறார்கள் பிளாஸ்டிக் பேப்பர் உறைகளில்!

பெரியார் மாவட்டத்தில் இவர்கள் தவிர காவேரி கெமிக்கல்ஸ், ஸ்டாண்டர்டு கெமிக்கல்ஸ் என்ற வேறு இரு நிறுவனங்களும் கூட இலவசப் பல்பொடி தயாரிக்கின்றன.

பெரியார் மாவட்டத்திலே மட்டும் ஒவ்வொரு மாதமும், ஏறத்தாழ ஒரு இலட்சத்து 60 ஆயிரம் குழந்தைகளுக்கு இலவசப் பல்பொடிப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன.





## முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவில் பாலம் அமைப்போம்!

## பொதுமக்கள் நலனாக்கும் பெரும் பணிகள் செய்து முடிப்போம்!

மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெருவில் உள்ள பாலம் மிகவும் சிதலமாகியுள்ளதால்-அங்கே புதிய பாலம் ஒன்றை உருவாக்க வேண்டியது மிகமிக அவசியமாகி விட்டது. இதனை உணர்ந்த தமிழக அரசு பாலம் உருவாக்கும் பணியை நிறைவேற்ற முன்வந்திருக்கிறது. புதிய பாலத்துக்குரிய அடிக்கல் நாட்டு விழா 21.3.'84 அன்று மாலை நடைபெற்றது.

விழாவுக்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றுப் பேசிய சென்னை மாநகராட்சிச் சிறப்பு அதிகாரி திரு.கி.சந்திரசூடன் இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''இந்தப் பாலத்தை அமைப்பதற்கு 35 லட்ச ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளது. இதில் பாதித் தொகையை மானியமாகவும் பாதித்தொகையை மாநகராட்சிக்குக் கடனாகவும் வழங்கியுள்ளது அரசு. இந்தப் பாலம் 15 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இந்தப் பகுதி மக்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையும்!''



அடுத்து உரையாற்றிய மயிலைப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு டி.கே.கபாலி தெரிவித்தார்:

''இந்தப் பாலத்தின் அவசியத்தை உணர்ந்து இதனை உருவாக்குவதற்காகத் துரித நடவடிக்கையை எடுத்திருக்கும் அரசுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வருடத்திற்குள் பாலம் கட்டி முடிக்கப்பட்டால், இந்தப் பகுதி மக்கள் பெரிதும் நலம் பெறுவர்''.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப.குழந்தைவேலு அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''சென்னை மாநகராட்சியினர் பல்வேறு பணிகளைச் சீராகவும் விறுப்பாகவும் ஏற்பாடு செய்து வருகின்றனர். இந்தப் பகுதியில் வாழும் மக்களின் நீண்ட நெடிய நாள் கோரிக்கை வெற்றி பெற்றிருக்கிறது என்பதை இந்த விழா எடுத்துச் சொல்கிறது.

''முன்பெல்லாம் எதுவும் குறித்த காலத்தில் நடைபெற்றது கிடையாது. இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு காலவரையிட்டு செய்து, திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

''3 கோடி ரூபாய் செலவில், சென்னையில் பல்வேறு பாலங்களைப் புதுப்பித்தும்- புதிதாக அமைத்தும் வருகிறோம்.

''சென்னை மாநகராட்சி ஏழை மாநகராட்சி. 10 ஆண்டுகளுக்கு முன்பு என்ன வரி இருந்ததோ அதேதான் இன்றும் உள்ளது. வரியை ஏற்ற வேண்டாம் என்று புரட்சித் தலைவர் கட்டளையிட்டார்.

''சென்னை, தமிழகத்தில் மிகப் பெரிய மாவட்டம் ஆகும். கல்கத்தாவில் 1 கோடிப் பேர் வாழ்கின்றனர். பம்பாயில் 80 லட்சம் பேர் வாழ்கின்றனர். சென்னையில் 40 இலட்சம் பேர் வாழ்கின்றனர். உலகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க மாநகராட்சிகள் 52. அவற்றில் சென்னை மாநகராட்சியும் ஒன்று.

''இந்தப் பாலத்தை ஓராண்டுகளுக்குள் கட்டி முடித்துவிட வேண்டும் என்று மாநகராட்சிச் சிறப்பு அதிகாரியையும் பொறியாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன்''

பாலத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''திருமயிலை, சென்னை மாநகரின் முக்கியப் பகுதிகளில் ஒன் முன்பே அறிமுகமான ஊர் மயிலை. இடநெருக்கடியை அதிகமாக்கிக் கொண்ட பகுதியும் இதுதான்.

''வள்ளுவர் தோன்றித் தமிழகத்திற்குச் சிறப்பைத் தேடித் தந்துள்ள பகுதி மயிலைதான். ஏசுநாதரின் 12 சீடர்களில் ஒருவரான செயிண்ட் தாமஸ் என்பவர் கி.பி.52ல் இந்தியாவுக்கு வந்து, அதிலும் தென்பகுதிக்கு வந்து, அதிலும் மயிலைப் பகுதிக்கு வந்து, இங்கேதான் குடியேறினார். அவர் பெயரால் தான் சாந்தோம் என்ற பகுதி வழங்கப்படுகிறது.

''பழம் புகழ் கொண்ட பகுதி, இது. புகழ் பெற்ற வழக்கறிஞர்கள், அதிகாரிகள், நீதிபதிகள் வாழ்ந்த பகுதி இது. ராவ்பகதூர், ராவ் சாகிப் போன்ற பலர் இங்கு வாழ்ந்திருக்கின்றனர்.

''எந்தப் பணியை ஆற்றினாலும் அதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இது போன்ற விழாக்களில் பொது மக்கள் தரவேண்டிய ஒத்துழைப்பைக் குறித்து விளக்கம் தர முயற்சிசெய்கிறோம். அதற்காகத்தான் இதுபோன்ற விழாக்களில் நாங்கள் பங்கு கொள்கிறோம்; நாங்கள் வந்து அடிக்கல் நாட்டினால்தான் அடிக்கல் சரியாக அமையும் என்பதற்காக அல்ல! பழுதுபட்ட பாலத்தைப் புதுப்பித்து, புதுப் பொலிவு பெற்ற பாலமாக - வலிவு பெற்ற பாலமாக விளங்க வேண்டும் என்ற முறையில் திட்டம் தீட்டிச் செயலாற்ற முற்பட்டிருக்கிறோம். இதனைச் செம்மைப் படுத்த வேண்டும் என்று பலர் விடுத்த வேண்டுகோள் - செயல்வடிவம் பெறுகிறது''

சென்னை மாநகராட்சி உதவி ஆணையர் (தெற்கு) திரு எஸ். ரகுபதி நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது.



# பெரியாரும் ஈரோடும்

பெரியார் மாவட்டத்தின் தலைமையிடமான ஈரோட்டுக்குப் பெருமை கிடைத்தது தந்தை பெரியாரால் என்றால் மிகையல்ல. ஈரோடு தொடர்புடைய அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் சில இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

17—9—1879-ல், தந்தை பெரியார் ஈரோட்டில் பிறந்தார். 10 வயதில் பள்ளியை விட்டு நிறுத்தப்பட்டார். 12-வது வயதிலேயே தந்தையாரின் வியாபாரத்தில் பங்கேற்றார். 19-வது வயதில் நாகம்மையாரை மணந்து கொண்டார். 25-வது வயதில் துறவு பூண்டு கல்கத்தா, காசி முதலான இடங்களுக்குச் சென்று வந்தார். ஈரோடு வட்டம் தேவஸ்தான கமிட்டித் தலைவராகப் பல ஆண்டுக் காலம் இருந்தார். 1918ல், ஈரோடு நகரசபைத் தலைவராகப் பொறுப் பேற்றார்.

ஈரோடு நகராட்சி பின்னர், தனது நூற்றாண்டு விழாவை நடத்தியபோது அதன் முதல் நகராட்சித் தந்தை என்பதற்காகத் தந்தை பெரியார் அவர்களுக்குக் கேடயம் அளித்துச் சிறப்பித்தது.



[illegible]—5—1919-ல், ஈரோடு சிதம்பரனார் பூங்காவில், தந்தை பெரியாரால் அமைக்கப்பட்ட மிகப் பெரிய குடிநீர்த் திட்டம் மூதறிஞர் ராஜாஜியால் துவக்கி வைக்கப்பட்டது. சில காலத்தின் பின், நகரசபைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டுப் பெரியார் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். பல்வேறு பொது நிறுவனங்களிலே தாம் வகித்து வந்த 29 பதவிகளையும் ராஜினாமா செய்தார்.

1921—ல் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலைத் தாமே தலைமை தாங்கி நடத்தினார். 1922-ல் தன் மனைவி நாகம்மையாரோடும் சகோதரி கண்ணாம்மாளோடும் காந்தியாரே வியந்து போற்றிடும் அளவுக்குக் கள்ளுக் கடை மறியலை நடத்தினார்.

2—5—1924-ல் குடியரசு பத்திரிகையைத் தொடங்கி, அதன் மூலம் சுயமரியாதைக் கொள்கைகளை வலியுறுத்தி வந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்த ஏட்டில் பொறுப்பேற்றுச் சிறப்புறப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. இராமாயண ஆராய்ச்சி, பெரியபுராண ஆராய்ச்சிகளில் முனைந்து நின்ற தந்தை பெரியார் அவற்றை வெளியிடலானார்.

1930—ல் ஈரோட்டில் சுயமரியாதை மாநாடு, பெண்கள் மாநாடு ஆகியவற்றைக்கூட்டினார். 1933-ல், ஈரோட்டில் தாம் கூட்டிய சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாட்டில் சமதர்மத் திட்டங்களைத் தீட்டினார்.

11—5—1933-ல் தந்தை பெரியாரின் துணைவியார் நாகம்மையார் மறைந்தார். 9—7—49-ல் மணியம்மையாரை மணந்தார்.



1954—ல் ஈரோட்டில் புத்தர் மாநாடுகூட்டிய தந்தை பெரியார், மூதறிஞர் ராஜா[illegible] யின் வர்ணாசிரம குலக்கல்வித் திட்ட ஒழிப்பு மாநாடும் நடத்தினார்.

24—12—73-ல் வேலூரில் உள்ள சி.எம்.சி. மருத்துவ மனையில் உயிர் நீத்தார்.

17—9—1978-ல், அந்தப்பகுத்தறிவுப் பகல[illegible] னுக்கு உரிய மரியாதை செலுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு 'பெரியார் நூற்றாண்டு விழா' வைத் தமிழ்நாடெங் கும் நடத்திடத் தொடங்கிற்று. அவரது நினைவாகப் பல மாவட்டங்களில் பெரியார் நினைவுத் தூண்கள் அரசால் எழுப்பப்பட்டன.



## நூலகப் பணி !

பெரியார் மாவட்ட நூலக ஆணைக் குழுவில் மாவட்ட நூலக அலுவலரும், மாவட்ட மைய நூலகரும் பொறுப்பிலிருந்து திருப்திகரமாகச் செயல்படுகிறார்கள்.

மைய நூலகத்தின் கவனிப்பில் இம் மாவட்டத்திலே 99 கிளை நூலகங்கள் இருக்கின்றன. இயங்கு நூலகம் ஒன்று ஜீவா போக்குவரத்துக் கழகம் அளித்த பேருந்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுதுமுள்ள நூலகங்கள் அனைத்திலுமாக 667662 நூல்கள் உள்ளன.

மாவட்ட மைய நூலகத்திற்கென ரூபாய் 16 இலட்சம் செலவில் தனிக் கட்டடம் அமைக்கும் பணி விரைவில் துவக்கப்படவிருக்கிறது. தாராபுரம் கிளை நூலகத்திற்கு 3.7 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்பட்ட புதுக்கட்டடப் பணி விரைவிலே முடிவுறும் நிலையில் உள்ளது.

நூலக வரியாக இந்த மாவட்டத்தில் சுமார் 6 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு வருகிறது. மகளிர் நூலகத்திற்கான அங்கீகாரம் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

1982-83ஆம் ஆண்டில் 6 கிளை நூலகங்கள் 'அ' தரத்திற்கும், 29 நூலகங்கள் 'ஆ' தரத்திற்கும், 3 கிளை நூலகங்கள் 'இ' தரத்திற்கும் உயர்வடைந்துள்ளன. பெரியார் மாவட்ட நூலகத்தின் மொத்த உறுப்பினர்கள் 60653 ஆவர். ஆண்டொன்றுக்கு நூலகத்திற்கு வருகை தந்திடும் வாசகர்களோ ஏறத்தாழ 15,21,672 பேர்!




உள்நாட்டு மீன் உற்பத்தியில் பெரியார் மாவட்டம் முக்கிய அங்கம் வகிக்கிறது. இம்மாவட்டத்தில் பவானிசாகர் நீர்த்தேக்கம், உப்பாறு நீர்த்தேக்கம், குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கம், வரப்பட்டுப் பள்ளம் நீர்த்தேக்கம் ஆகியவை உள்ளன. இவை தவிர இன்னும் ஏராளமான நீர்ப்பாசன ஏரிகள், பெரிய குளங்கள், சிறிய குளங்கள், குட்டைகளும் உள்ளன.

பவானிசாகர் நீர்த்தேக்கம் தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்திற்கு நீண்டகாலக் குத்தகைக்கு மீன் வளப்பணிகள் செய்வதற்கும், மீன்களைப் பிடித்து விற்பனை செய்வதற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந் நீர்த்தேக்கத்தில் இப்போது ஆண்டொன்றுக்கு 250 டன் எடையுள்ள மீன்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மீன் பிடிப்பதனால் சில சமயம் ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதற்காக ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் கட்லா, ரோகு மிர்கால் இனப் பெருங் கெண்டை மீன்கள் மற்றும் சாதாக் கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகின்றன.

உப்பாறு, வரட்டுப்பள்ளம், குண்டேரி பள்ளம் நீர்த்தேக்கங்கள் ஈரோடு மீன்துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இந் நீர்த் தேக்கங்களிலும் ஒடத்துறை மற்றும் தாலக்குளம் மீன்வளப் பணிகள் அவரால் கவனிக்கப்படுகின்றன. இவைகளில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் தரமான மீன் குஞ்சுகள் இருப்பு வைக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு 100 டன் எடையுள்ள மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இவைகளின் மதிப்பு ரூ. 3 இலட்சம் ஆகும்.

மீன் உற்பத்தி பெருக மீன் குஞ்சுகள் மிக அடிப்படைத் தேவையாகும். தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கு இம்மாவட்டத்தில் பவானிசாகரில் 1957ஆம் ஆண்டில் ஒரு தூண்டுதல் முறை மீன் குஞ்சு இனவிருத்தி நிலையம் அமைக்கப்பட்டது.

ஆண்டொன்றுக்கு இப்போது 200 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் இந் நிலையத்தில் உற்பத்தி ஆகின்றன. இந்நிலையத்தில உற்பததி செய்யப்படும் மீன் குஞ்சுகள் அரசுக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆகியவைகளில் இருப்பு செய்வதோடு மட்டுமின்றி, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆகியவைகளுக்கும் தனியார்களுக்குமே நியாயமான விலைக்கு விற்பனை செய்கிறது.

2.6.1982 முதல் இம்மாவட்டத்தில் ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருகிறது. இம் முகமையானது, இம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளையும் அளவை செய்து மீன் வளர்ப்பிற்கு ஏற்றதைத் தேர்ந்தெடுப்பது; அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலைகளை நீண்டகாலக் குத்தகைக்கு பெறுவது; கிராமப்புறத்தில், படித்து வேலையில்லாதிருக்கும் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள இளைஞர்கள், மீனவர் குலத்தைச் சார்ந்தவர்கள், பரதவர், ஆதி திராவிடர், மலை சாதி வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆகியவர்களை மீன் வளர்ப்போர்களாகத் தேர்ந்தெடுத்து மீன் வளர்ப்பில் தக்க பயிற்சி அளித்துக் குளங்களை ஒதுக்கீடு செய்தல்; மீன்வளர்ப்போர்களுக்கு, அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குளத்தில் நவீன முறையில் மீன் வளர்ப்புச் செய்திடத் தொழில் நுட்ப உதவிகளை இலவசமாகச் செய்வது; குளங்களைச் சீர் செய்வதற்கு, மீன் குஞ்சுகள், உரம், மீன் உணவு ஆகியவைகளை வாங்குவதற்கு வங்கிக்கடன் பெற்றுத்தர உவதவுதல் போன்ற பல நோக்கங்களோடு இயங்கி வருகின்றது.

## முறையான திட்டங்கள்

இம்முகமையின் தலைவராகப் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். முகமையின் திட்டங்களை முறையாகச் செயல்படுத்த ஆலோசனைகள் வழங்க என ஒரு நிர்வாகக்குழு உள்ளது. இதற்கும் மாவட்ட ஆட்சியாளரே தலைவர்.

பொதுவாக ஒரு எக்டேர் பரப்பளவு உள்ள குளத்தில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 250 கிலோ எடையுள்ள மீன்களே உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் முகமையின் ஆலோசனைப்படி ''கலப்பின மீன் வளர்ப்பு'' என்னும் நவீன முறையில் மீன் வளர்ப்புச் செய்தால் ஒரு எக்டேர் பரப்பளவு உள்ள குளத்தில் ஆண்டொன்றுக்கு 1000 முதல் 1500 கிலோ வரையில் மீன் உற்பத்தி செய்ய இயலும். இதனால் மீன் வளர்ப்பவரின் வருமானம் பன்மடங்காகக் கூடும்.

பெரியார் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை இதுவரையில் 101.7 எக்டேர் பரப்பளவு உள்ள 79 குளங்களை இத்திட்டத்தின் கீழ் ஏற்றுள்ளது. 52 மீன் வளர்ப்போர்களுக்குக் குளங்கள்ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளன. 48 மீன் வளர்ப்போர்களுக்குக் குளங்கள் ஒதுக்கீடு செய்யப்படவிருக்கின்றன. 1983-84ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திலிருக்கும் 49 குளங்களில் 2,89,375 மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 17 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவை தங்களின் எல்லையில் அமைந்துள்ள குளங்களில் மீன்பிடிப்பு உரிமையைக் குத்தகைக்குப் பெற்று, உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கிறது.

தமிழக அரசு, மீன்பிடிப்பு உரிமையை மீனவர் கூட்டுறவுச்சங்கங்களுக்குத்தான் கண்டிப்பாகக் குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளது.

மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்கள் வாங்குவதற்கு நீண்டகால, மத்தியகால மற்றும் குறுகிய காலக் கடன்களை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசே கொடுக்கிறது. மீனவர்கள் வெள்ளம் மற்றும் தீ விபத்து போன்றவைகளினால் பாவிக்கப்படும்போது நிவாரண உதவிகளும் செய்யப்படுகின்றன. மீன்பிடிக்கும்போது மீனவர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழும் நிதி உதவி பெற்றுத் தரப்படுகிறது.

பெரியார் மாவட்டத்தின் மீன் துறையும், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையும், தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகமும் மீன் வளத்தை அதிகரிக்க மீன் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்த மீன் உற்பத்தியைப் பெருக்க, மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாள்தோறும் பாடுபடுகின்[றன]



# நடமாடும் கால்நடை மருந்தகம்


டாக்டர்
ஜி. கில்பர்ட் ராஜ்குமார்
உதவி இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
பெரியார் மாவட்டம்.


கால்நடைச் செல்வங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பேணும் சிறந்த விவசாயப் பெருங்குடி மக்களைக் கொண்டது பெரியார் மாவட்டம்.

உழைக்கும் திறன்மிக்க சிறந்த காங்கேயம் இன மாடுகளின் தாய் வீடு பெரியார் மாவட்டம் ஆகும். இந்த அரிய காங்கேய இனம் அழிந்து போகாமல் வம்சா வழியாகத் தொடர்ந்து பேண அதிக கவனம் செலுத்தி வருவது இம் மாவட்டவிவசாயிகளிடம்காணும் சிறப்பு மிக்க-பாராட்டப்படக் கூடிய அம்சமாகும்.

இதுபோன்றே இம் மாவட்டத்தில் பெரிதும் விரும்பிப் பேணப்படுபவை எருமைகள் ஆகும். காங்கேயம் கால்நடைகள் குறைவான பாலினைத் தருகின்றன. உழுவதற்கும் சுமையினை இழுத்துச் செல்வதற்கும், போக்குவரத்திற்கும், அதன் கழிவுகள் உரத்திற்கும் இன்னும் பிற பணிகளுக்கும் விவசாயிகளுக்கு உற்ற துணைவனாக விளங்குகின்றது.

பெரியார் மாவட்டத்தில் அதிகமாகப் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. கறவை எருமைகள், பசுக்களிலிருந்து கிடைக்கும் உபரி பால் சென்னை மற்றும் இதர இடங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

பால் உற்பத்தியினை அதிகப்படுத்துவதற்கும், கறவைப் பசு, எருமைகளின் தரத்தை உயர்த்துவதற்கும், உயர்ரகப் பொலி காளை விந்துகள் கருத்தரிப்புக்குப் பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

முர்ரா உயர்ரகப் பொலி காளைகளின் விந்து எருமைகளுக்கும், ஜெர்சி, ப்ரீசியன் பொலிகாளை விந்துகள் பசுக்களுக்கும், செயற்கைமுறைக் கருவூட்டலுக்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன. தரம் உயர்ந்தப்பட்ட கால்நடைகளின் பராமரிப்பில், அதற்கு அளிக்கப்படும் தீவனம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. அதன் வளர்ச்சி, அதிகப் பால்தரும் திறன், 10 முதல் 18 மாதத்தில் கிடாரிகள் கருத்தரிக்கும் நிலைக்கு வர, நல்லுணவு அவசியமாகின்றது. பராமரிப்புக்கு அடுத்தபடியாக, நல்ல ஆரோக்கியத்துடன் நோய் நொடியின்றிக் கால்நடைகள் இருக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

## மானியமும் கடனும்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கறவை எருமைகள், பசுக்கள், எருதுகள், ஆடுகள், விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் ஆகியோருக்கு மானியத்துடன் கடன் வசதி அளித்து அவைகள் கொடுக்கப்பட்டு, அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேல் கொண்டு வரத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவற்றில் ஒரு நல்ல திட்டம் நடமாடும் கால்நடை மருத்துவமனை ஆகும்.

பெரியார் மாவட்டத்தில், ஈரோடு, கோபிசெட்டி பாளையம் மற்றும் தாராபுரம் ஆகிய 3 இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் செயல்படுகின்றன.

ஈரோடு வட்டத்தில் 5 முதல் 10 கிலோ மீட்டருக்குள் ஒரு கால்நடை மருத்துவமனை அல்லது கிளை நிலையம் உள்ளது. இங்கு செயற்கைக் கருவூட்டல்-சிகிச்சை முதலியன செய்ய எல்லா வசதிகளும் இருப்பினும், கால்நடைபராமரிப்புத் துறையின் நடமாடும் கால்நடை மருத்துவமனைக்கு அதிக ஆர்வமும், உற்சாகமும் பொதுமக்களிடையே நிலவுகின்றது என்பது உண்மை.

ஏன் மக்களிடையே அதிக வரவேற்பு உள்ளது?

ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தில் அதிகம் கால்நடைகள் கொடுக்கப்பட்ட, மருத்துவவசதி பெற முடியாத கிராமங்களுக்கு வாரம் ஒரு முறை குறிப்பிட்ட நேரத்தில் அவை செல்கின்றன. ஒரு நாளில் 5 முதல் 6 கிராமங்கள் வீதம் வாரத்தில் 5 நாட்கள் தனித்தனித்தடங்களில் செயல்படுகின்றது. அது மட்டுமல்ல. திட்டத்தில் அல்லாத கால்நடைகளுக்கும் வேண்டிய மருத்துவ உதவி, கருவூட்டல் செய்யப்படுகின்றன.

## வாரம் ஒரு நாள்

16-8-82 முதல் நடமாடும் கால்நடை மருத்துவமனை செயல்படுகின்றது. கிழமைதோறும் கீழ்க்கண்ட இடங்களுக்கு இது செல்கின்றது:

திங்கட்கிழமை :
ஈரோடு, சின்னியம்பாளையம், பாரபாளையம், செல்வநகர், வடுகப்பட்டி, அஞ்சுராம்பாளையம், 88. வேலம்பாளையம்.



# நீண்ட நாள் கனவு நனவாகிறது

கந்தசாமி நாயுடு கல்லூரியின் புதிய நிரந்தரக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா 23.3.84 அன்று அறிஞர் அண்ணா நகரில் நடைபெற்றது. திரு எஸ். ஆர்.கருப்பண்ணன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றுகையில், ''இவ்வளவு நாளாக கூரைக் கட்டடத்தில் நடத்தப்பட்ட இந்தக் கல்லூரி வகுப்புகள் இனிமேல் நல்ல கட்டடத்தில் நடைபெற உள்ளன. தற்பொழுது உள்ள பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனம் வீட்டு வசதி வாரியத்திடம் பேசி,கல்விப் பணி தடைப்படக்கூடாது என்று கருதி, பணத்தை முழுவதும் தவணை முறையில் செலுத்த உள்ளோம். இது மிகப் பெரிய சாதனையாகும்'' என்றார்.

கணிதப் பேராசிரியர் திரு கே. பாபு, ஆசிரியர் அல்லாத ஊழியர் சங்கத் தலைவர் திரு.சபாநாயகம், கல்லூரி நிர்வாகக் குழுவின் உறுப்பினர் கள் திரு என். அருணாசலம், திரு பி.முருகன், டாக்டர் திரு.திருஞானசம்பந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பச்சையப்பன் அறக்கட்டளையின் தலைவர் திரு எஸ். டி. காசிராஜன், இ. ஆ. ப. அவர்கள் தலைமை வகித்து உரையாற்றுகையில், ''நீண்ட நாட்கள் பாடுபட்டதற்கு இன்று பலன் கிடைத்துள்ளது. திருமூலர் வாக்குப்படி நடந்து வெற்றி பெற்றுள்ளீர்கள். இந்த அரசு கல்விக்காக, வரவு-செலவுத்திட்டத்தில் 25 சதவிகிதம் செலவழிக்கிறது. தமிழகக் கலாச்சாரம் உயர வேண்டுமானால் கல்வி வளர வேண்டும். இந்த அறக்கட்டளைதான் 1-ந் தேதி சம்பளம் வழங்குகிறது பல இடங்களில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, வருமானம் உயர்ந்துள்ளது'' என்றார்.

புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் உரையாற்றுகையில்,

''இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் ஆகும். கல்லூரியின் நிதி நிலைமை சரியில்லாமல் இருந்த காரணத்தால் பல்கலைக் கழகம் மூட இருந்தது. ஆசிரியர்கள், மாணவர்கள் போராடினார்கள். அரசு தலையிட்டு இக்கல்லூரி நிர்வாகம் முழுவதையும் ஏற்றுக் கொண்டது. பலர் பல மாதிரிச் சொல்வார்கள். ஆனால் இன்று கல்லூரிக் கட்டடம் கட்டும் அளவிற்கு ஏற்பட்ட நிலை பாராட்டத்தக்கதாகும். வர வேண்டிய வருமானம் வராததை கண்டுபிடித்து வசூலித்து வருவதைப் பாராட்டுகின்றேன்.

''இங்கு படிக்கும் மாணவர்கள் இலட்சிய உணர்வோடு இருக்க வேண்டும். நம்முடைய மாணவர்கட்குக் கலாச்சார உணர்வை ஊட்ட வேண்டும் என்று ஆசிரியப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

''**எங்கே சட்டம் ஒழுங்கு மீறப்பட்டாலும் பாதிக்கப்படுவது ஏழை. எளிய மக்கள் தான்.** இளைஞர்கள் எதையும் ஏற்றுக்கொண்டு நல்லவர்களாக வளர வேண்டும். தேசபக்தி, நாட்டுப்பற்று இளைஞர்கட்கு ஏற்பட வேண்டும்என்று விரும்புகிறேன்''

விழா இறுதியில் கல்லூரி முதல்வர் திரு எம். குமாரசாமி நன்றி கூறினார்.

**—அ. மருது**

# குடும்ப நலப் பயிற்சி முகாம்

தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனத்தின் சார்பில், குடும்ப நலப் பயிற்சி முகாமின் நிறைவு விழா 30.3.84 அன்று செனாய் நகர் நீச்சல் குளக் குடியிருப்புப் பகுதியில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை திருமதி பத்மினி சிவசுப்பிரமணியன் வரவேற்று உரையாற்றுகையில், ''இந்த நிறுவனத்தின் பயனாக 15 பேர் நுங்கம்பாக்கம் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர்'' என்றார்.

குடும்பநலப் பயிற்சி முகாமினைப் பற்றிய அறிக்கையை திருமதி சுமதி எஸ்.ராவ் படித்தார். டாக்டர் திருமதி ரஷ்யா, டாக்டர் திருமதி ஹேமா பாலச்சந்திரன், திருமதிகே.ஆர்.செல்வமணி ஆகியோர் பயிற்சி முகாமை பற்றி விளக்கிக் கூறினார்கள்.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு மூன்று சக்கர வண்டி, காதுகேட்கும் கருவி, மூக்குக் கண்ணாடி, தையல் இயந்திரம், எவர்சில்வர் பொருள்கள், மாணவர்கட்கு உதவித்தொகைகள் மற்றும் பயிற்சி முகாமில் பணியாற்றிய ஊழியர்கட்குப் பரிசுகளும், பயிற்சி முகாமில் கலந்து கொண்ட தாய்மார்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிறைவு விழாச் சொற்பொழிவு நிகழ்த்திய பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் கபாலி பேசுகையில், ''**திட்ட மதிப்பீட்டில் உள்ள 2,000 முகாம்களில் பத்தில் ஒரு பங்கை இந்தத்** தொண்டு நிறுவனத்தார் செய்துள்ளார்கள்'' என்றார்.

விழா இறுதியில் திருமதி விஜயகுமாரி நன்றி கூறினார்.

**—அ. ம**




# மாவட்டத் தொழில் மையம்

பெரியார் மாவட்டத்தில், 17-9-1979-ல் துவக்கப்பட்ட மாவட்டத் தொழில் மையத்தின் இயக்கம் வியக்கத் தக்கதாக இருக்கிறது.

தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களை இனம் கண்டு—தொழில் ஊக்குவிப்பு முகாம்கள், அச்சுத் தொழில் கருத்தரங்கு, தோல் தொழில் கருத்தரங்கு, தொழில் வளர்ச்சி வாரவிழா, பொருட்காட்சி, ஈரோடு சுழற் கழகம்—தொழில் மையத்தோடு இணைந்து தொழில் கருத்தரங்கு ஆகியவைகளை நடத்திப் பெரிதும் ஊக்குவித்து வருகிறது.

இந்தத் தொழில் மையம் துவக்கப்பட்டபோது பதிவு பெற்று இயங்கி வந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை 650 மட்டுமே. ஆனால் கடந்த பிப்ரவரி மாதம் வரை பதிவு பெற்றுத் தொடங்கப்பட்டுள்ள சிறு தொழில்களோ 1975 ஆகும்!

இப்படி வளரும் தொழில்களின் மூலம் இம்மாவட்டத்திலே இதுவரை 15,362பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இது தவிர உடல் ஊனமுற்றோர் 3750 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள், சாலையோரங்களிலே தாம் கற்றறிந்த தொழிலைக் கடைவிரித்திடும் கைவினை கலைஞர்கள் ஆகியோர் கடன் பெறவும் இம் மையம் பேருதவி புரிந்திருக்கிறது. வங்கிகளின் மூலம் அப்படிப்பட்ட 1875பேர் கடன் பெறப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறார்கள் இவர்கள். இதன் மூலம் மட்டுமே 3752 வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

புதிதாகத் தொடங்கப்பட வேண்டிய கைவினைத் தொழிலின் குறியீடு 1981-82ல் 146 தான். ஆனால் இவர்கள் அடைந்த இலக்கோ 282 ஆகும். 1982-83-ல் 343 குறியீடென்றால் இவர்கள் எட்டிப் பிடித்த இலக்கு 450 என்ற அளவில், மாவட்டத் தொழில் மையப் பணிகள் மகத்தானவைகளாக இருக்கின்றன. இந்த நிதியாண்டுக்கான குறியீடு 450 ஆகும், இதற்குள்ளேயே இவர்கள் 228-க்கு வந்து விட்டிருக்கின்றனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மாவட்டத் தொழில் மையத்தின் அரவணைப்பில், பெரியார் மாவட்டத்தில் - ஆப்பக்கூடலில் உள்ள 'சக்தி சர்க்கரை ஆலை' பவானிசாகரில் உள்ள 'பெரியார் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை' சித்தோட்டில் இருக்கும் 'தமிழ்நாடு பால் வள நிறுவனம்' ஈரோடு 'நடேசர் நூற்பு ஆலை' என்பவற்றைப் போலப் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் 16 உள்ளன. இவைகளின் மூலம் மட்டுமே ஏறத்தாழ 12 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

''இம்மையம் இங்கே உருவாக்கப்பட்ட நேரத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டே இரண்டுதான் இந்த மாவட்டத்தில் இருந்தன. இப்போதோ ஒன்பது இருக்கின்றன'' என்று பெருமிதத்தோடு தெரிவித்தார் பொது மேலாளரான திரு. எம். சக்திவேல்.

சிறு தொழில்களுக்குத் தட்டுப்பாடில்லாமல் மூலப்பொருள் கிடைக்க அப்பொருட்களின் தேவைகளைக் கணக்கிட்டு, ஒதுக்கீட்டு முறையிலே அவை கிடைக்க ஏற்பாடு செய்வது, மட்டுமல்ல; வேறு சில பொருட்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கத் தேவைப்படும் சான்றிதழ்களும் வழங்கி வருகிறார்கள் இவர்கள்.

சுயவேலை வாய்ப்பினை உண்டாக்குவதன் மூலம், வேலையில்லாப் பிரச்னையின் வேரறுக்கப் பல்வேறு தொழில் பயிற்சிக்கும் இந்த மையம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கென அரசு ரூ. 50 ஆயிரம் ஒதுக்கியிருக்கிறது. இந்த ஆண்டோ அத்தொகை 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் சிறப்புப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் இம் மையம் 1982-83ல் பரிந்துரை செய்து வழங்கிய நிதி உதவி மட்டும் ரூ. 56,450 ஆகும். வங்கிகள் மூலம் பெற்றுத்தந்த நிதி உதவியோ ரூ. 1,90,000.

ஈரோட்டிலுள்ள தொழிற் பேட்டையில் 14 தொழிற் கூடங்களும், 8 சின்னஞ்சிறு தொழிற் கூடங்களும் உள்ளன. இது தவிர தாராபுரத்தில் 32 சின்னஞ்சிறு தொழிற் கூடங்களும் கட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் அறிவித்த சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2000 பேருக்கு உதவலாம் என அரசு ஆணை பிறப்பித்ததென்றால், இவர்கள் அதன் மீதுள்ள ஆர்வம் காரணமாக வந்த 2532 பேர்களைத் தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள்!



செவ்வாய்க்கிழமை :
அண்ணுடையாம்பாளையம், வேங்கியம்பாளையம், பெரிய செம்மாண்டாம் பாளையம், கருக்கம்பாளையம், ஒத்தக்கடை, நகப் பாளையம், அனைக்கவுண்டன்புதூர்.

புதன்கிழமை :
கதிரம்பட்டி, வேலம் பாளையம், ஆதியூர், எல்லக் கடை, நடுப்பட்டி கம்பிளியாம்பட்டி.

வியாழக்கிழமை :
அண்ணாநகர், கவுண்டச்சி பாளையம், மேட்டுப் பாளையம், கனகபுரம், மயிலாடி, சென்னியங்கிரி வலசு, பெருந்துறை, ஆர். எஸ். புங்கம்பாடி.

வெள்ளிக்கிழமை :
இந்திரபுரம், விருமாண்டாம்பாளையம், பூலப் பாளையம், எல்லீஸ்பேட்டை, ஆட்டையாம் பாளையம், வில்லரசம்பட்டி.

நமது கால்நடைகள் நோயால் பிடிக்கப்பட்டால் அதே இடத்திற்கு வந்து சிகிச்சை அளிப்பது எவ்வளவு ஏற்றது என்பதை அவர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டுள்ளனர். அதுவும் இலவசம் என்றால் இரட்டிப்பு மகிழ்ச்சி அல்லவா? நமது தேவை பூர்த்தி செய்ய அதிக அக்கறை எடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதிக தூரம் நோயுற்ற கால்நடைகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் அவசியமும் இராது. அங்கும், இங்கும் நடக்கவிடாமல் இருக்கவும் உதவுகிறது. நாட்டுமுறையில் அளிக்கப்படும் முரட்டுச் சிகிச்சை செய்ய அவசியமில்லாமல் ஆகிறது. அதில் பணி புரியும் மருத்துவரும் ஆய்வாளரும் பணியாளர்களும் இன்முகத்துடன் விவசாய மக்களிடம், கலகலப்பாகவும் சரளமாகவும் பழகுவதால் ஒருவருக்கொருவர் அன்பால் பிணைக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கு அது அதிக ஆர்வத்தையும், ஊக்கத்தையும் அளிக்கிறது என்பது தெளிவு.

கால்நடைகள் நல்ல சுகத்துடன் இருந்தாலும், குறிப்பிட்ட நாட்களில் நடமாடும் கால்நடை மருந்தகம், சிறிய அவ்வூருக்குச் செல்வதால் அதிக பணிபுரியும் மருத்துவரைக்கண்டு சிறிது பராமரிப்பு மற்றும் சந்தேகங்களைத் தெளிவாக்க, பேசிவிட்டு வரலாம் என்ற எண்ணம் விவசாய மக்களிடம் நிலவிவிட்டது. மேலும் இதற்காக அவர்கள் தங்கள் வேலை நேரம் வீணாக்காமலும், ஒரு சிறிய இடைப்பட்ட நேரத்தில் சிறந்த ஆலோசனைகளைப் பெற முடிகிறது.

### எளிதில் சிகிச்சை

பொதுமக்கள் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க மருத்துவர் சிரமப்படாமல், மாட்டிடம் உதைபடாமல் சிகிச்சை அளிக்க ஏற்ற கிட்டிகளும் தயார்செய்து கொடுத்துள்ளனர் பல கிராமங்களில். இந்த நடமாடும் கால்நடை மருத்துவமனை ஆண்டிற்கு 3,000 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க 'ஆண்டு நிர்ணயம்' அளிக்கப்பட்டு உள்ளது. அதாவது ஒரு மாதத்திற்கு 250 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும். நமது ஈரோடு வட்டத்தில் மாதத்திற்கு 605 கால்நடைகள் சிகிச்சை பெறுகின்றன. அதேபோல் குடல்புழு நீக்கம் மாதம் 1,000 கால்நடைகளுக்குச் செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1630 கால்நடைகள் மாதந்தோறும் குடல்புழு நீக்கம் செய்யப்படுகின்றன. செயற்கைக் கருவூட்டல் மாதம் 50 கால்நடைகளுக்குச் செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் செய்யப்படுவது மாதம் ஒன்றுக்கு 335. சினை ஆய்வு செய்ய, நிர்ணயிக்கப்பட்டது மாதத்திற்கு 10; செய்யப்படுவது மாதம் 400. மலட்டுத் தன்மை நீக்கம் செய்ய உள்ள நிர்ணயம் மாதத்திற்கு 50; செய்வது 80. காயடிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மாதத்திற்கு 100; செய்யப்படுவது 100-க்கும் மேல். இதுபோலத் தடுப்பூசி இட நிர்ணயிக்கப்பட்டது மாதத்திற்கு 2000 இவை தவிர்த்து தீவனப் பயிர்வகைகள் போன்றவைகளையும் அவர்கள் விநியோகிக்கின்றனர்.

எல்லாப் பணிகளிலும் இப்படி குறியீட்டுக்கு மேல் செயல்படுகிறது. அதாவது மக்கள் இதனை நல்ல முறையில் பயன்படுத்துகிறார்கள். மேலும் ஒரு வாரத்தில் ஈரோடு பெருந்துறை தாலுக்காவிலும் எங்கு தொற்றுநோய்கள் உள்ளன இயற்கைச் சீற்றத்தில் கால்நடைகளுக்கு ஏதாவது அபாயம் நேர்ந்துள்ளதா போன்றவை உடன் தெரியும். எங்கு கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் உள்ளதோ அங்கு நடமாடும் கால்நடை மருந்தகம் செல்வதால் நன்கு பயன் அளிக்கிறது.

### பெண்களின் பங்கு

பெரும்பாலும் பெண்கள்தான் கால்நடைகளைக் கவனிக்கிறார்கள். அவர்கள் இதில் நன்கு கலந்து கொள்கின்றனர். கால்நடைகளைப் பேணும்பெண்கள், நேரடியாகத் தங்களது கால்நடைகளுக்குச் செய்ய வேண்டியதை மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறார்கள். அதேபோல் கருவூட்டல் செய்வதில் காலதாமதம் ஆகாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

இம்மருத்துவமனை நன்கு செயல்பட தேவையான மருந்துகள், விந்து முதலியன போதுமானதாக இருக்கின்றதா என்பது அவ்வப்போது திடீர் ஆய்வு செய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

முக்கியமாகக் கால்நடை வைத்திருக்கும் விவசாயிகள் உயர்ரக விந்தினை வைத்து கருத்தரிப்புக் கேட்பதும், கன்றுகளுக்குப் பூச்சி மருந்து கொடுக்கக் கூறுவதும் 'வெட் ஏ' ஊசிபோடுங்கள் என்று கூறுவதும் அவர்களது ஆழ்ந்த அனுபவத்தையும் முன்னேற்றப் பாதையில் செல்கிறார்கள் என்பதையும் மட்டுமல்ல, கால்நடை பராமரிப்புத் துறையினர் எப்படி ஆர்வமாக ஈடுபடச் செய்துள்ளார்கள் என்பதும் தெரியும்.

நல்ல அனுபவமும், திறமையும் தகுதியுமுடைய கால்நடை உதவி மருத்துவரது பணியும், சுமுகமாகப் பழகும் தன்மையும், பொதுமக்களிடையே உள்ள ஆர்வமும், அவர்கள் இருப்பிடத்திலேயே அளிக்கப்படும் உதவிகளும், அதனால் அவர்கள்பெறும் நன்மைகளும் கணக்கில் அடங்கா.

எனவே பெரியார் மாவட்டத்தில், நடமாடும் கால்நடை மருத்துவமனையால் மக்கள் பெரிதும் கவரப்படுகின்றனர்.

நடமாடும் மருந்தகம் வந்த பின் கால்நடைகளைக் கொண்டு வரும் நிலைமை சில கிராமங்களில் உள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும்படி பணி திட்டமிடப்பட்டுள்ளதால், தங்களது கிராமத்தில் வரும் நேரத்திற்கு 5 முதல் 10 நிமிடம் முன்னதாக கால்நடைகளைக் கொண்டு வர விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும்.





# சங்கரன் கோவில் நகராட்சி தன்னிறைவுத் திட்டம்..

சங்கரன்கோவில் நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி இந்நகரின் மக்கள் தொகை 42,084 ஆகும். இந்நகரின் பரப்பளவு 11ச.கி.மீ.ஆகும். தமிழ்நாடு அரசு 1982-83-ஆம் ஆண்டுத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 25 லட்சம் ரூபாயில் ரூ. 23.35 மான்யமாகவும் ரூ. 1.65 லட்சம் கடனாகவும் வழங்கப்பட்டு தன்னிறைவுத் திட்ட வேலைகள் கீழ்க்கண்டவாறு செய்து முடிக்கப்பட்டன. தன்னிறைவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள் அனைத்தும் 27.12.83 அன்று மாண்புமிகு ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### குடிநீர் வசதி

இந்நகராட்சிப் பகுதியில் கோடை காலத்தில் கோட்டை மலையாற்றிலிருந்து வரும் குடிநீர் அளவு குறைவதால், குடிநீர் விநியோகம் சரியான முறையில் கொடுக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 2,80,000 செலவில், தண்ணீர் தலைமை இடத்தில் 2 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து 10 குதிரை வேகத்தில் மோட்டார் அமைத்துத் தினமும், 16,00,000 லிட்டர் தண்ணீர் இந்நகராட்சிப் பகுதிக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சிப் பகுதிகளில் நான்கு இடங்களில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, அதில் 1 குதிரைவேகமுள்ள மோட்டார் அமைக்கப்பட்டு வெளிச் செலவுக்கான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1. அம்பேத்கார் நகர் தெரு, 2. கழுகுமலை ரோடு 3. சங்கர் நகர் 2ம் தெரு 4. மாதா கோவில் தெரு.

### சாலைகள் அமைத்தல்

இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகள் செப்பனிடப்பட்டும், புதுரோடுகள் அமைக்கப்பட்டும் இத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 10 வேலைகள் செய்யப்பட்டன. அமைக்கப்பட்ட தார்தளத்தின் நீளம் 7.6 கி.மீ. இதற்கான செலவுத் தொகை ரூ. 5,43,966 ஆகும்.

### சிறுபாலங்களும், வடிகால்களும் அமைத்தல் :

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மழைநீர் ஓடை மற்றும் தடுப்புச் சுவர் கட்டும் வேலைகள் 12 செய்யப்பட்டன. இதற்கான மொத்தச் செலவுத் தொகை ரூ. 4,71,654 ஆகும்.

### ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும், இடுகாடுகளுக்கும் பாதை அமைத்தல் :

இத்திட்டத்தின் கீழ் பல ஆண்டுக் காலமாகச் செப்பனிடப்படாத கீழ்க்கண்ட வேலைகள் 58,801 ரூபாய் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பட்டாத்தூர் மயானப்பாதை அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானப் பாதை அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

அருந்ததியார் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

### பள்ளிக்கூடங்கள் கட்டுதல், தாய் சேய் நல விடுதி:

இத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் புதிதாக 3 பள்ளிக் கட்டடங்கள் ரூ. 2,80,925 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணசாமி நகரில் (கக்கன் நகரில்) இரண்டு பள்ளிகள் கட்டுதல். மேலும் தாய் சேய் நல விடுதிகள் ரூ.1,74,480 செலவில் கக்கன் நகரிலும் மாட்டுத் தொழுவிலும் கட்டப்பட்டுள்ளன.

### பொதுச் சுகாதாரம்

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கழிப்பிட வசதிகள் இல்லாத பகுதிக்குத் தண்ணீர் வசதியுடன் கூடிய 8 அறைகள் கொண்ட நவீனக் கழிப்பிடங்கள் 5 இடங்களில் கட்டப்பட்டுள்ளன. பழைய கழிப்பிடங்கள் நவீன கழிப்பிடமாக 2 இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

சாலை மின் விளக்குகள் அமைத்தலுக்குப் பதிலாக, இதர விளம்பரத்திற்கும் சேர்த்து ரூ. 12,623 செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மாட்டுத் தாவணிப் பகுதியில் சுகாதாரப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு செய்வதன் பொருட்டு 10 பிளாக்குகள் (20 வீடுகள்) ரூ. 45,000 செலவில் கட்டப்பட்டுள்ளன.

குடிநீர் வழங்கல், சாலைகள் அமைத்தல், சிறுபாலங்களும் வடிகால்களும் அமைத்தல், ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடு காடுகளுக்கும் பாதை அமைத்தல், பள்ளிக் கூடங்கள் கட்டுதல், பொதுசுகாதார வசதிகள், தாய்சேய் நல விடுதிகள், சாலை மின் விளக்குகள் அமைத்தலுக்குப் பதிலாக இதர விளம்பர அயிட்டங்களுக்கும் பயன்பட்டது, சுகாதார ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்தல் ஆகிய பணிகளுக்கு ரூ. 25,55,963 செலவு செய்யப்பட்டுள்ளது. இவை பொதுமக்களின் அன்றாடப் பயன்பாட்டில் உள்ளன.









**கோ** ஆப்டெக்சின் 30-வது கைத்தறிகண்காட்சியினை மேதகு ஆளுநர் திரு. எஸ். எல்.குரானா அவர்கள் 12.4.84 அன்று சென்னையில் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: கிராமங்களில் வாழும் எண்ணற்ற கைத்தறி நெசவாளர்களின் துன்பத்தைப் போக்க அரசு பாடுபட்டு வருகிறது. நாடு முழுவதும் ஏறத்தாழ 65 இலட்சம் பேர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதில் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் ஏறத்தாழ 6 இலட்சம் பேர்.

விழாவிற்குத் தலைமைவகித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், 'நெசவாளர்களுக்கு மாநில அரசால் வீடுகள் கட்டிக் கொடுக்கப் படுவதுபோல் மைய அரசும் கட்டித் தர வேண்டும்' என்றார்.

கோ ஆப்டெக்சின் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம், எம்.எல்.சி. கோஆப்டெக்சின் தனி அலுவலர் திரு எம். தேவராஜ் ஆகியோர் உரையாற்றினார்கள்.

கைத்தறித் துறை இயக்குநர் திரு வினயஜா இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

**அ. மருது**

# நெசவாளர் பயன்பெற....

**கை**த்தறித் துணிகளின் பெரும் பகுதி விற்பனை, தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய இவ்விரண்டு திருவிழாக் காலங்களில் நடக்கிறது.

பொங்கலுக்கு அடுத்து, 9 அல்லது 10 மாதங்களுக்குப் பிறகுதான் தீபாவளி வருகிறது. இருந்த போதிலும், நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புத் தருவதற்காக பொங்கலுக்கும், தீபாவளிக்கும் இடைப்பட்ட காலத்தில் தயாராகும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு ஒரு கண்காட்சியோ அல்லது ஒரு பொருட்காட்சியோ நடத்தப்பட வேண்டுவது மிக அவசியத்தேவை என்று கைத்தறித் துறை உணர்ந்து, கைத்தறிக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இப்பொழுது சென்னை, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர் கோவில், திண்டுக்கல், விருதுநகர் போன்ற இடங்களில் 12.4.'84 முதல் தொடங்கியுள்ள கண்காட்சிகள் 30 நாட்கள் நடைபெறும்.

கர்நாடகமும் பாண்டிச்சேரியும் இக்கண்காட்சியில் பங்கு கொள்ளும் இதர மாநிலக் கைத்தறி அமைப்புகளாகும். மொத்தம் 254 ஸ்டால்கள் இரக வாரியாக அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சியில் 1980ல் ரூ.125 இலட்சமும் 1981ல் ரூ. 236 இலட்சமும், 1982ல் ரூ. 273 இலட்சமும், 1983ல் ரூ. 283 இலட்சமும் துணிகள் விற்பனையாகியுள்ளன. இவ்வாண்டு ரூ. 300 இலட்சம் விற்பனையாகும்என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மற்றும் மாவட்டத் தலைநகர்களில் அமைக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் ஸ்டால்கள் மற்றும் அனைத்துக் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் நடைபெற்ற விற்பனை விவரம்: 1980ல் ரூ. 376 இலட்சம், 1981ல் ரூ. 827 இலட்சம், 1982ல் ரூ.1,230 இலட்சம் 1983ல் ரூ.1,492இலட்சம். இவ்வாண்டுக்கண்காட்சிக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் விற்பனை ரூ.1,800 இலட்சம்.

கண்காட்சித் திடலில் அமைக்கப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் ஸ்டால்களிலும், மற்றும் அனைத்துக் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் 20 முதல் 40 வரையிலான சிறப்புத் தள்ளுபடி இந்த நாட்களில் வழங்கப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் ரூ.70 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளும் மற்ற பிரதம சங்கங்களிடம் ரூ. 30 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளும் தேங்கி இருக்கின்றன. இவற்றில் 4ல் ஒரு பங்கு துணிகள் வரை இந்தக் கண்காட்சி மூலம் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

..யார் மாவட்டம்:

# சாண எரிவாயுத் திட்டம்... 20 அம்சம்



**சா**ண எரிவாயு, சமையலுக்குப் பேருதவி புரிகிறது என்று கேள்விப் பட்டிருக்கிறோம்; அதைக் கொண்டு மின் விளக்கேற்றலாம், வயல் வெளிகளுக்கு நீர் இறைக்கும் மோட்டார் எஞ்சினையும் இயக்கலாம் என்பது தெரியுமோ?

பெரியார் மாவட்டத்தில் இந்த வகையில் மிக நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் 12 ஆம் அம்சமான இது பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டு சாண எரிவாயுத் திட்டம் பெருமளவில் செயல்படுத்தப்படும் கொடுமுடி, மொடக்குறிச்சி, கோபி ஆகிய கிராமங்களுக்குச் சென்று பார்த்தோம்.

கிராமங்களிலே மட்டுமல்ல; நகர்ப்புறங்களையும் இத்திட்டம் வெகுவாகக் கவர்ந்து வருகிறது.

ஈரோடு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள பெரியசேமூர் என்ற இடத்தில், பழனிச்சாமி கவுண்டர் மகன் சுப்பிரமணியன் என்பவருக்குச் சொந்தமான வயல்வெளியில் இத் திட்டம் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

1982 டிசம்பரில் இருந்து, சாண எரிவாயுத் திட்ட அமைப்பின் உதவியால் 8 எச்.பி. எஞ்சின் ஒன்றை ஓட்டி வயலுக்கெல்லாம் நீர் பாய்ச்சி வருகிறார்கள் இங்கே!

20 சதவீதம் டீசலும் 80 சதவீதம் சாண எரிவாயும் அந்த எஞ்சின் ஓடப் போதுமானதாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள் அவர்கள். நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் ஓடுகிறதாம் அது!

3 மீட்டர் விட்டமும், 15 கியூபெக் மீட்டர் கொள்ளளவும் உள்ளதாக இருக்கிறது அந்த 'டிரம்'. இதை அமைக்க அரசு மூலம் ரூ. 4,420 நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 15 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது.

''செலவு என்னங்க செலவு, அடுப்பெரிக்க மாத்திரமில்லாமெ வெளக்கெரிக்கவும், தண்ணீர் பாய்ச்சவும் இது ரொம்ப ஒதவுதுங்களே; மின்சாரம் இருந்தாலும் இல்லாட்டாலும் நாங்க கவலைப்படவேணாம்பாருங்க?' என்று மகிழ்வோடு கூறினார் அதை வைத்துள்ள திரு. சுப்பிரமணியம்.

இப்போதைக்கு இன்னும் 250 இடங்களிலிருந்து, சாண எரிவாயுத் திட்ட அமைப்பை உருவாக்கித் தருமாறு விண்ணப்பங்கள் வந்துள்ளன இம்மாவட்டத்தில்.

**தில்லை கோவிந்தன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**



பெரியார் மாவட்டத்தில் சாண எரிவாயு திட்டம் 1981-82-ல் தொடங்கப்பட்டு 205 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டு ரூபாய் 2,37,600 மான்யமாக வழங்கப்பட்டது. 1982-83-ல் 654 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டு ரூபாய் 13,44,450 மான்யமாக வழங்கப்பட்டது.

மேலும் 1983-84ல் இத்திட்டத்தில் இம்மாவட்டத்திற்கு அரசு நிர்ணயித்த இலக்கு 800-க்கு மேல் சாதனையாக 1336 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் 159 கலன்களுக்கு மட்டும் ரூபாய் 4,89,450 வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1177 கலன்களுக்கு மான்யம் வழங்கப்பட உள்ளது.

இம்மாவட்டத்தில் சாண எரிவாயுத் திட்டத்தின் மூலம் இது வரை 25 இடங்களில் ஆயில் இன்ஜின்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் விசைப் பம்பு இயக்க 15 சாதனங்களும், அந்தியூர், கோபி, பவானி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்களில் கரும்புச் சாறு பிழியும் இயந்திரம் இயக்க 8 சாதனங்களும், நசியனூர் கிராமத்தில் விசைத்தறி இயக்க ஒரு சாதனமும், காடபாளையம் கிராமத்தில் விசைச் செக்கு இயந்திரம் இயக்க ஒரு சாதனமும் பயன்படுத்தப்பட்டு நன்கு இயங்கி வருகின்றன. இவை மூலம் விவசாயிக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூபாய் 15 முதல் 25 வரை டீசல் செலவு குறைகிறது.

மொடக் குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒலப்பாளையம் கிராமத்தில் உள்ள விவசாயி இல்லத்தில் சாண எரிவாயு சாதனம் அமைக்கப் போதிய இடம் இல்லாத காரணத்தால், வீட்டு முற்றத்தில் தரைக்குக் கீழே சாதனத்தை அமைத்து, மீண்டும் அந்த இடத்தை முன் போல் பயன்படுத்தி வருகிறார்கள்.

மொத்தத்தில், பெரியார் மாவட்ட மக்கள் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான இத்திட்டத்திற்கு மிக நல்ல வரவேற்புத் தருகிறார்கள்.



## எண்ணெய் வளம்

**பெ**ரியார் மாவட்டத்தில் கிராமப்புறப் பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் சுமார் 250 எண்ணெய் பிழியும் ஆலைகள் இயங்கி வருகின்றன.

இந்த ஆலைகளின் மூலம் ஆண்டு ஒன்றிற்குச் சுமார் 75,000 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் இங்கே உபயோகிக்கப்படுகின்றன. இந்த ஆலைகளின் மூலம் சுமார் 7,500 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இம்மாவட்டத்தில் இந்தத் தொழில் வளர்வதற்கு முக்கியமான காரணம் தொழிலாளர்கள் குறைந்த கூலி ஊதியத்தில் கிடைப்பதும், போக்குவரத்து வழி சிறந்த முறையில் அமைந்திருப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாக இத் தொழிலுக்குத் தேவைப்படும் தட்ப வெப்ப நிலை சாதகமாக இருப்பது போன்றவைகளுமே ஆகும்.

இத்தொழிலுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப் பொருட்களான எண்ணெய் வித்துக்கள் நமது மாவட்டத்தில் கிடைத்த போதிலும் வெளி மாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும் எண்ணெய் வித்துக்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்படும் எண்ணெய் பல மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

## பெரியார் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்



### அரச்சலூர் :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சமணர்கள் தங்கி அறம் வளர்த்த அறச்சாலையூரே அரச்சலூர் ஆயிற்று. இவ்வூர் மலையின் வடசரிவில் உள்ள ஆண்டிப்பாறையில் இயற்கையான குகையும், சமணர்களின் கல் படுக்கைகளும், தென் பிராமியில் வடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் உள்ளன. மணிய வண்ணக் கண் தேவன் சாத்தன் காலத்து இசை பற்றிய தொன்மையான கல்வெட்டும் இங்குள்ளது.

### பழமங்கலம் நடுகல் :

பழமங்கலத்தில் நத்தக்காட்டின் அருகே உள்ள இட்டேறியில் உள்ள நடுகல்தான் இதுவரை கிடைத்துள்ள நடுகற்களிலேயே கவிதை வடிவத்தில் செய்து வடிக்கப்பட்டுள்ளது. இதோ அந்தச் செய்தி:—

''வாய்த்தபுகழ் மங்கலத்து
வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்தமகன் வென்ற
சயம்பெருக — சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப்
பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேஉலகில்
தான்''

### ஊராட்சிக்கோட்டை :

பதிற்றுப்பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலருக்கு நாடு கொடுத்த இடம் இது. திருஞான சம்பந்தர் பாடலில் 'நணா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பிற்காலப் பாடல்களில் நண்ணாவூர் என்று கூறப்பட்டுள்ள இடமும், இதுவே.

### தாராபுரம் :

தலைக்காட்டுக் கங்கர்கள் கொங்கு நாட்டைப் பிடித்து ஆண்டபோது 'ஸ்கந்தபுரம்' எனப் பெயரிட்டு ஆண்டது தாராபுரத்திற்கருகிலுள்ள கொங்கூர்தான், சோழர்கள் காலத்தில் 'பராந்தகபுரம்', 'இராசராசபுரம்' என்றும் விஜயநகர காலத்தில் 'ராராபுரம்' என்றும் கூறப்பட்ட இதுதான் நாளடைவில் தாராபுரம் ஆயிற்று. சேரர் இவ்வூருக்குப் பெருவஞ்சி எனப் பெயரிட்டுள்ளனர். 'கொங்கும், குடந்தையும், கோட்டியூரும் பேரும்' எனப் பெரியாழ்வார் பாடலில் வரும் கொங்கு இந்த ஊர்தான். எனவே, இவ்வூர் ஆழ்வாரின் மங்களா சாசனம் பெற்ற ஊராகும். 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்றான இங்குள்ள பெருமாள் ராஜ்ய அபிஷேக விண்ணகரம் பெருமாள் எனப்படுகிறார். இங்கே அரசராக அபிஷேகம் செய்து கொண்டால்தான் இவர் கொங்கு நாட்டு அரசர் ஆகலாம் என்ற நிலை இருந்திருக்கிறது.

### காலிங்கராயன் அணை :

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் வெள்ளோட்டில் பிறந்த வீரபாண்டியனின் அமைச்சனாகவும் தளபதியாகவும், உத்தர மந்திரியாகவும் உயர்ந்த காலிங்கராயனால் கட்டப்பட்ட அணை இது.




காரணமாகவோ விபத்தாலோ இறந்து போனால்-இன்ஸ்யூரன்ஸ் நிறுவனங்கள் கடன் தொகையை ஈடு செய்திட இவ்வங்கி வகை செய்கிறது. அரசு குறிப்பிட்ட பகுதிகளில் பயிர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் செய்யப்பட்டுவிளைச்சல் பாதிக்கப்பட்டால் ஈடு செய்யும் திட்டமும் இருக்கிறது. வைப்புதாரர்களுக்கு விபத்துப்பாதுகாப்புத் திட்டம் ஒன்று இங்கே அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வங்கியின் தலைமையகத்திலும், கிளைகளிலும் மொத்தமுள்ள பணியாளர் எண்ணிக்கை 257 ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 8001 நிதியைப்பெரியார் மாவட்டத்திலேயே முதன் முதலாகத் தந்த பெருமையுடையது இந்த 'பெரியார் மத்திய கூட்

பெரியார் மாவட்டம்:

# உயிருள்ள உலோகச் சிற்பங்கள்



பெரியார் மாவட்டம்-ஈரோட்டில் உள்ள 'பூம்புகார் விற்பனைக் கூடத்திற்குச் சென்றிருந்த நாம். அங்கே வைக்கப்பட்டிருந்த சிறிய - பெரிய உலோகச் சிற்பங்கள் உயிருள்ளவை போலக்காட்சி தருவது கண்டுவியந்துபோனோம்!

'அவை, எங்கிருந்து தருவிக்கப்படுகின்றன?' என்று அதன் நிர்வாகி திரு ஏ.கே. பெருமாவிடம் கேட்ட போது 'இவைகளைச் செய்தவர் இங்கேதான் இருக்கிறார்' என்று கூறி முகவரி தந்தார் அவர். போய்ப்பார்த்தோம், கைவினைக் கலைஞர் திரு எல். இராதாகிருஷ்ணனை.





33 வயதேயுள்ள இளைஞரான அவர், நுணுக்கம் மிகுந்த உலோகச் சிற்பங்களைச் செய்யும் திறமை காரணமாக இரண்டு முறை தமிழ்நாடு அரசின் முதல் பரிசுகளைப் பெற்றிருக்கிறார். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆயக்காரன் புலத்தில் தனது பரம்பரையினர் இந்த வகையில் மேம்பட்டுத் திகழ்ந்ததன் தாக்கமே தன் கைவன்மைக்குக் காரணம் என்ற அவரிடம் ''நீங்கள் இதற்கென முறையாக யாரிடம் பயிற்சி பெற்றீர்கள்?'' என்று கேட்டோம். ''சுவாமி மலையில் உள்ள அரசு உலோகச் சிற்பப் பயிற்சி நிலையத்தில் மூன்றாண்டுக் காலம் படித்தேன். ஆனாலும் அதற்கு முன்னாலும் இது பற்றி ஓரளவுக்குப் பயிற்சி பெற்றிருந்தேன்.'' என்றார். தனது தந்தையார் ஆர். இலக்குமணன் காரைக்காலில் நகைத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈரோட்டிலுள்ள அனைத்திந்தியக் கைவினைக் கலை மையத்தார் இவரை டில்லி, பம்பாய் போன்ற பெரு நகரங்களில் நடந்த சிற்பக் கண்காட்சிகளுக்கெல்லாம் அழைத்துப் போய் சிறப்புச் செய்திருக்கிறார்கள். இவர் செய்த மீனாட்சி கல்யாணம் உலோகச் சிற்பம் மட்டும் ரூ. 22,000க்கு விலை போயிருக்கிறது.

முருகன், பிள்ளையார், சரஸ்வதி, லட்சுமி, அர்த்தநாரீசுவரர் போன்ற விக்கிரகங்கள்இவர் கைத்திறனில் மிக அற்புதமாக உருவாகியுள்ளன.

''கோயில் எதற்காவது நீங்கள் இதுபோல விக்கிரகங்களைச் செய்து தந்ததுண்டா?'' என்றோம்.

''ஏன் இல்லை?'' என்றுகேட்ட திரு எல்.இராதா கிருஷ்ணன்-திருப்பூர் ஈஸ்வரன் கோயில், பவானி வர்ணாபுரம் கோயில், பூந்துறை ஈஸ்வரன் கோயில், அரச்சலூர் கோயில், ஈரோடு பெரிய மாரியம்மன் கோயில், மகிமாலீஸ்வரன் கோயில், ரயில் காலனி ஐயப்பன் கோயில் ஆகியவற்றுக்கும் இன்னும் பல கோயில்களுக்கும் உலோக விக்கிரகங்கள் செய்து கொடுத்திருப்பதைச் சற்றே இறுமாப்புடன் தெரிவித்தார். மலேசியாவில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு கோயிலுக்கும் இவரை அழைத்துப்போய் விக்கிரகம் செய்து வாங்கியிருக்கிறார்கள்.

பூம்புகார் விற்பனை நிலையம் போன்றவற்றுக்காக மூவகை உலோகங்களில் மக்களைக் கவரும் விக்கிரகங்களைச் செய்து வரும் இவர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக உதவி கேட்டிருப்பதாயும், அது கிடைத்த பின் இன்னும் பெரிய அளவிலே தனது தொழிலை விருத்திசெய்யவிருப்பதாகவும் கூறினார்.

—பி. எல். ஆர்.




காவிரி யாறது கரைக்குள் அடங்கிக்
கவின்மிகு அலைகள் பாடிவரும்
பூவிரி சோலைகள் பூத்திட எங்கும்
புகழ்மிகு நொய்யல் ஓடிவரும்
நாவிரிக் கும்வர லாறுகள் கொண்டது
நல்அம ராவதி எங்கள்நதி
பாவிரி புலவர்கள் பரவும் பவானி
பாய்வது பெரியார் மாவட்டம்!

கொங்கிரு பத்து நாலெனும் நாட்டில்
கூடிய ஒன்பது நாடுகளே
இங்கொன் றாக இணைந்துமே இனிதே
இலங்கும் பெருமை கொண்டிடுமே
காங்கயம் பூந்துறை வடகரை தென்கரை
காஞ்சிக் கூவல் அரையம்ஒடு
வங்கம் குறுப்புடன் மணநா டதுவும்
.வாழ்வது பெரியார் மாவட்டம்!

சீர்மிகு சங்க வேளிர்கள் மன்னர்கள்
சிறப்பாய் ஆண்டு முடிந்தவுடன்
பார்மிகு ரட்டர் கங்கர் சோழர்கள்
பாண்டியர் சேரர் ஒய்சளரும்
ஏர்மிகு விசய நகர்மா மதுரை
ஏறிய நாய்க்கர் மைசூரார்
போர்மிகு கம்பெனி ஆட்சி வரைபலர்
புகுந்தது பெரியார் மாவட்டம்!

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
முன்தந்த கொடையின் மூத்தகொடை
இல்லாள் தாலியை இரவலர்க் களித்த
எம்சர்க் கரைமன் றாடியாரும்
பல்லவ ராயர் உலகில்மன் றாடி
பார்புகழ் வேணா வுடையாரும்
நல்லவர் காங்கய மன்றாடி விளங்குவர்
நலமிகு பெரியார் மாவட்டம்!

அன்னியர் ஆதிக் கம்தனை எதிர்த்தே
ஆர்ப்பரித் தெழுந்தனர் பலரிங்கே
முன்னவன் தீரன் சின்ன மலையவன்
முனைப்புடன் தோன்றும்ஓ டாநிலையும்
தன்னுயிர் நீக்கினும் தாங்கிய கொடியைத்
தரமாட் டேன்என்ற வீரமகன்
சென்னி மலைதனில் திருப்பூர்க் குமரன்
தோன்றிய பெரியார் மாவட்டம்!

கைத்தறித் துணியும் கவின்மிகு தோல்வளம்
கடலை எண்ணெய்யும் ஈரோட்டில்
ஊத்துக் குழிதனில் பால்வளப் பொருளுடன்
உயர்மா துளம்பழம் விளைந்திடுமாம்
பூத்திடும் புதுமைகொள் படுக்கை விரிப்புகள்
புகழும் பவானி சென்னிமலை
காத்திடும் கால்நடை காங்கயம் அளிக்கும்
கவின்மிகு பெரியார் மாவட்டம்!

அறச்ச லூரிலே இசைத்தமிழ் எழுத்துடன்
அமைந்துள்ள சமணர் குகையுண்டு
திறமுடன் விசய மங்கலம் சமணர்
திகழ்ந்திடு தமிழ்ச்சங் கமுமுண்டு
சிறப்புள பூந்துறை திங்க ளூரினில்
சீனா புரம்வெள் ளோடுதனில்
உறவுகள் சொல்லும் சமணர் கோயில்கள்
உள்ளது பெரியார் மாவட்டம்!

பெருங்கதைக் காப்பியம் தோன்றிய தும்தமிழ்
பேணும் சிலப்பதி காரத்தின்
அரும்உரை செய்அடி யார்க்குநல் லாரின்
அணிசெய் ஊராம் நிரம்பைநகர்
இருந்தமி ழுக்கே இலக்கண நன்னூல்
எழுதிய பவணந்தி மாமுனியும்
பெரும்புல வர்பலர் இலக்கியம் செய்ததும்
புகழ்மிகு பெரியார் மாவட்டம்!

—புலவர் செ. இராசு



கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, பெரியார் மாவட்டம் துவங்கிய பின்னர், கோயம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து பிரிந்து செயல்பட்டு வருவது ‘பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடட்’.

திரு ஆர். ரங்கசாமி, எம்.எல்.ஏ. தலைவராக உள்ள இந்த வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 4 கோடி ரூபாய் ஆகும்.

''3.2.82ல் 15 கோடி ரூபாயோடு துவக்கப்பட்ட எங்கள் வங்கி இப்போது 22 கோடி ரூபாய் உள்ள அளவுக்கு வளர்ந்திருக்கிறது'' என்று பெருமையோடு குறிப்பிட்டார் வங்கிச் செயலாளர் திரு கே. கே. பழனிச்சாமி.

நிரந்தர டிபாசிட்டுகள், பொற்குவியல் டிபாசிட்டுகள், சிறப்பு ரெக்கரிங் டிபாசிட்டுகள், மினி டிபாசிட்டுகள், நடப்புக்கணக்குகள் எனப் பல்வேறு டிபாசிட் திட்டங்கள் இந்த வங்கி மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

23 கிளைகளோடு செயல்படுகின்ற இவ்வங்கியில் மற்ற வங்கிகளைக் காட்டிலும் அரை சதவிகிதக் கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது. டிபாசிட் இன்ஸ்யூரன்ஸ் திட்டத்தின் மூலம் ரூ. 30 ஆயிரம் வரையில் வைப்புதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள் இவர்கள்.

905 கூட்டுறவுச் சங்கங்கள் இந்த வங்கியில் அங்கம் வகிக்கின்றன.

விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க் கடன்களும் அவர்கள் வருமானத்தை உயர்த்த கறவை மாடு வாங்கவும், கோழி வளர்க்கவும், ஆடு வளர்க்கவும் மட்டுமல்ல; வேளாண்மைத் தொழிலுக்குத். தேவையான மருந்து தெளிப்பான், கட்டை வண்டிகள், டயர் வண்டி வாங்க, சாண எரிவாயு அடுப்பு அமைக்க எனப் பல வகைகளிலே பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி கடன் வழங்கி வருகிறது.

நெசவாளர் சங்கங்கள், பணியாளர் சங்கங்கள், பண்டகசாலைகள், விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலை ஆகியவைகளோடு நலிவடைந்த பிரிவினருக்கும் கடன் கொடுக்கிறார்கள் இங்கே. தனியார் நகைக்கடன் பெறும் வசதியும் உண்டு.

விவசாயிகள் கடன் பெற்று வாங்கிய ஆடோ, மாடோ, நோய்

**வங்கியின் தலைவர் சத்துணவு நிதி வழங்கல்.**

## பாடல் பெற்ற திருத்தலங்கள்

**பெரியார் மாவட்டத்திலுள்ள கனகமலை, கொடுமுடி, பவானி சென்னிமலை, எட்டிமலை, கதித்த மலை, வட்ட மலை, காங்கேயம், ஊதியூர் ஆகியவை அருணகிரி நாதரால் பாடப் பெற்றுள்ளன.**

**பவானி திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றுள்ளது.**

**கொடுமுடி, தேவாரம் பாடிய மூவராலும், மாணிக்கவாசகராலும் பாடப்பட்டுள்ளது. சிறந்த சைவத் தலமெனக் கூறப்படும் இந்த ஊர், இசைக்குயில் கே. பி. சுந்தராம்பாள் பிறந்த ஊரும் ஆகும்.**

பெரியார் மாவட்டம் :





# மாமனிதர் மோகன் மல்ஜி சோர்டியா

சென்னை ஸ்ரீ எஸ். எஸ். ஜெயின் சங்கத்தின் தலைவராகவும், சென்னை ஜெயின் கல்லூரி நிர்வாகக் குழுவின் ஆயுள் தலைவராகவும் விளங்கிய திரு மோகன் மல்ஜி சோர்டியா 5-2-1984 அன்று மறைந்தார்.

பல அறப்பணிகளையும் மருத்துவ உதவிகளையும் கல்விப் பணிகளையும் பொது மக்களுக்கு வழங்கிய அன்னாரின் மறைவுக்கு, சென்னை மாநகர மக்களின் சார்பில் மாநகர ஷெரிப் திருமதி சரோஜினி வரதப்பன் 21-3-84-ல் சென்னை இராஜாஜி மண்டபத்தில் இரங்கல் கூட்டத்தை நடத்தினார்.

திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் உரையாற்றுகையில், ''ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்னர் மோகன்மல்ஜி சோர்டியா குடும்பம் தமிழகம் வந்து தமிழக மக்களுக்காக நல்ல பொதுப் பணிகளையாற்றி வருகிறது'' என்றார்.

முன்னாள் தமிழக முதல்வர் பெரியவர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் உரையாற்றுகையில், ''சென்னையைச் சொந்த ஊராகக் கருதிச் செயல்பட்டு வந்தார் சோர்டியா. அவர்களுடன் சுதந்திரப் போராட்டத்தின்போது எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. தேசபக்தி உள்ளவர் திரு சோர்டியா'' என்றார்.

திருமதி ருக்மணி அருண்டேல் பேசுகையில், ''அகிம்சைக்காகப் பாடுபட்டவர்; காந்திஜி வழியில் பணியாற்றியவர்; யார் எங்கு கஷ்டப்பட்டாலும் எவர் என்று பாராமல் உதவக் கூடியவர்'' என்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு எம். சாந்தப்பா அவர்கள் உரையாற்றுகையில், ''தன்னுடைய இறுதிக் காலம் வரை மக்களுக்காகப் பாடுபட்டவர். இவருடையபணி தமிழகத்தில் மட்டுமல்லாது வங்காளம், டெல்லி, ராஜஸ்தான் மாநிலங்களிலும்பரவி இருந்தது'' என்றார்.

டி. வி. எஸ். குரூப் நிறுவனத்தைச் சார்ந்த திரு டி.எஸ். சந்தானம் அவர்கள் பேசுகையில் ''சாதாரண குடும்பத்தில் பிறந்த சோர்டியா அவர்கள் கல்வி, மருத்துவம் போன்ற பொதுப் பணிகளில் ஈடுபட்டார்'' என்றார்.

ஜெயின் கல்விக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. எஸ். மோகன் சந்த் தாதா பேசுகையில் ''சோர்டியா பெயரில் பொறிஇயல் நிறுவனம் நிறுவப்படும்'' என்றார்.

தினமணி துணை ஆசிரியர் திரு. கருப்பையா அவர்கள் பேசுகையில், ''கோடிக்கணக்காகச் சம்பாதித்ததைக் கோடிக் கணக்கில் அள்ளிக் கொடுத்தார். ஆனால் கொடுத்ததை விளம்பரம் செய்யாமல் கொடுத்தார் என்பதைப் பாராட்ட வேண்டும்'' என்றார்.

சென்னை தலைமை நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமை உரையாற்றுகையில், ''உண்மையில் சைனராகத் திகழ்ந்தார்; வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அடித்தள மக்களுக்கு உதவி புரிந்தார்'' என்றார்.

சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு க. இராசாராம் அவர்கள் உரையாற்றுகையில், ''1000 பிறைகண்டு, சிறந்த தொண்டு செய்து, சமுதாயம் எண்ணிடும் வகையில் வாழ்ந்தார். தமிழகத்தைத் தாய் நாடாகக் கொண்டு வாழ்ந்தார். சென்னையில் 22 இடங்களில் சிறு மருத்துவமனைகளைத் திறந்து வைத்துள்ளார். இந்தக் காரியத்திற்காகத் தந்தை பெரியார் அவர்களும் பாராட்டியுள்ளார்.

''சோர்டியா படித்தவர் அல்ல; தான் பெற்ற இன்பத்தை மற்றவர்கள் பெற வேண்டும் என்று கருதிச் செயல்பட்டார். கொடுப்பது மட்டும் மகிழ்ச்சி அல்ல. அதைப் பெறுபவன் மகிழ்ச்சியடைவதே சிறப்பு என்று கருதி செயல் பட்டார்'' என்று குறிப்பிட்டார்.

மைய அரசின் பாசனத்துறை அமைச்சர் திரு. ராம்நிவாஸ் மிர்தா அவர்கள் பேசுகையில், ''நான் பிறந்த பகுதியில் சோர்டியா அவர்களும் பிறந்தார். இங்கு வாழ்ந்த சோர்டியா குடும்பம் இங்கு உள்ள மக்களுடன் கலந்து நல்லமுறையில் வாழ்கின்றது. இங்குள்ள மொழியையும் பேசுகிறது; உதவி ஸ்தாபனங்கள் மூலம் மக்களுக்கு உதவி புரிந்து வருவதும் பாராட்டத்தக்கது.'' என்றார்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இரங்கல் உரையாற்றுகையில், ''சோர்டியாவுக்கு இரங்கல் தெரிவிக்கிறோம் என்றால் அவரது பாதையைப் புரிந்து கொண்டு நடக்க முற்படுகிறோம் என்றுதான் அர்த்தம். யாரையும் வேற்று மதத்தினராக நான் கருதுவதில்லை. எல்லோரும் எனக்கு ஒரே மதத்தினராகத் தான் படுகிறார்கள். எனவே தான் நான் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையைக் கொண்டு இருக்கிறேன்.

''சைன தத்துவத்தின் வழி நின்று தொண்டாற்றிய மோகன் மல்ஜி சோர்டியாவின் மறைவுக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

**அ. மருதவிநாயகம்**



பெரியார் மாவட்டக்:

# காவல் துறை

வீட்டு நலம் காப்பதைவிட நாட்டுநலம் காப்பதே மேலானது என்று கருதி, இரவு பகல் பாராமல், 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்று பாடுபடுவோர் காவல் துறையினர் ஆவர்.

பெரியார் மாவட்டக் காவல் துறையினர் இவ்வகையில் பெருமைக்குரிய பணியாற்றிவருகிறார்களென்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

திரு என். அப்பாதுரை, ஐ.பி.எஸ்., மாவட்டக் கண்காணிப்பாளராக உள்ள இம் மாவட்டத்தில் 1141 காவலர்கள் பணி புரிந்து வருகின்றனர். துணைக் கண்காணிப்பாளர்களாக அறுவரும், ஆய்வாளர்களாக 32 பேர்களும், உதவி ஆய்வாளர்களாக 81 பேர்களும் உள்ளனர்.

மாவட்டம் முழுமைக்குமாக 35 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அத்தனையும் தனித் தொலைபேசி வசதி உடையவை.

''பெண் காவலர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?'' என்று நாம் கேட்க, சற்று விரிவாகவே பதிலைச் சொன்னார் திரு. என். அப்பாதுரை, ஐ.பி.எஸ்.

''ஈரோடு காவல் நிலையத்திலே பத்துப் பேரும், கோபி காவல் நிலையத்தில் பத்துப் பேரும் இருக்கிறார்கள். அங்கே ஒரு உதவி ஆய்வாளர் இங்கே ஒரு உதவி ஆய்வாளர் உண்டு. போக்குவரத்தை ஒழுங்கு செய்வது; பொதுக் கூட்டம் போன்றவைகளில் பெண்கள் பகுதியில் அமைதி நிலைநாட்டுவது; பெண் கைதிகளைக் காவல் நிலையத்திற்கோ, வழக்கு மன்றத்திற்கோ கொண்டு வருவது, காவல் நிலையத்தில் அவர்களைப் பரிசோதிப்பது, கண்காணிப்பது போன்றவைகளில் பெண் காவலர்களின் பணி சிறப்பாகவே தேவைப்படுவதாக இருக்கிறது!''

ஈரோட்டில், காவல்துறை சிறப்புப் பிரிவு, கண்ட்ரோல் ரூம், வயர்லஸ், கைரேகை ஆய்வுப் பிரிவு, புகைப்படப் பிரிவு எல்லாவற்றிலுமே மிகவும் திறமையாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் எல்லா வசதியோடும் ரூ. 14 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

போக்குவரத்தைச் செம்மைப்படுத்துவதற்கெனத் தனியே இரு உயர் அதிகாரிகள், 2 தலைமைக் காவலர்களோடு 16 காவலர்கள் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர்.

ஈரோட்டிலுள்ள காவலர் குடியிருப்பில் 36 வீடுகள் இருக்கின்றன. இதன் கட்டுமானச் செலவு ரூ. 2[illegible] லெட்சம் ஆகும்.

இம் மாவட்டத்திற்கெனப் புதிதாக வழங்கப்பட்டுள்ள படைப் பிரிவில் 60 பேர் - ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றனர்.

''அண்ணா விருது பெற்றவர்கள் யாரேனும் உண்டா?'' என்ற நம் கேள்விக்கும் சிரித்தவாறே ''இருபது பேர் இருக்கிறார்கள் சார்'' என்றார் காவல்துறை கண்காணிப்பாளர்.

''தங்கள்காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வழக்கு நிகழ்ச்சிகள் ஏதாவது சொல்லுங்களேன்?'' என்றோம்.

1981ல் கோவை, ஈரோடு, சேலம் பகுதிகளில் வீடு புகுந்து திருடுவதே தொழிலாகக் கொண்டிருந்த தாதா சங்கர் என்பவனைக் கைது செய்து, அவனிடமிருந்து மூன்றரை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள்-பணம் ஆகியவற்றைக் கைப்பற்றியது; 1982-83ல் ஊதியூர், நம்பியூர், காவல் சரகங்களைச் சேர்ந்த கோயில்களில் நடந்த சிலைத் திருட்டுகளைக் கண்டு பிடித்தது; மக்கள் கவனத்தைத் திசைதிருப்பி கைப்பொருளையே கவரும் திருச்சி ராம்ஜி நகர் தொம்ப நாயக்கன்கள், திருவெறும்பூர் கேப்மாறிகள் பலபேரை மடக்கிப் பிடித்தது; கைரேகைத் தடயத்தைக் கொண்டே பிரபல திருடன் கண்ணனைப் பிடித்தது; வெள்ளித் திருப்பூர் காவல் நிலையச் சரகத்தைச்சேர்ந்த நாச்சிமுத்துக் கவுண்டர் என்பார் மருத்துவமனையில் 'அட்மிஷனி'ல் இருந்து கொண்டே வெளியே போய்த் தந்திரமாக ஒருவரைச் சுட்டுக் கொலை செய்ததைக் கைரேகைத் தடயத்தால் கண்டு பிடித்ததோடு அதற்கு முன் அவர் செய்திருந்த கொலைகளையும் ஆதாரத்தோடு நிரூபித்தது போன்ற சில நிகழ்ச்சிகளைப் பெருமிதத்தோடு அடுக்கிக் கொண்டே போனார் திரு. என். அப்பாத்துரை, ஐ.பி.எஸ்.



பெற்ற பரிசுகள்


தமிழரசு தமிழரசு தமிழரசு

## ''தமிழரசு''
## சந்தா விவரம்

தமிழ் இதழ்—

ஓர் ஆண்டிற்கு ரூ. 18/-

அரையாண்டிற்கு ரூ. 9/-

ஆங்கில இதழ்—

ஆண்டுச் சந்தா ரூ. 9/-

(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு:

சர்குலேஷன் மானேஜர்,
''தமிழரசு''
சென்னை - 600 002.

தமிழரசு தமிழரசு தமிழரசு

# திரைப்படங்கள் கலைஞர்கள் விருது பெற்ற விழா

சித்திரைத் திங்கள் முதல் நாள். சென்னை வள்ளுவர் கோட்டம்புதுப்பொலிவுபெற்றுத் திகழ்ந்தது. சிறந்த திரைப்படங்கள்-கலைஞர்கள் ஆகியோருக்கு விருது வழங்கும் விழாவின் காரணமாகத் தான் அந்தப் புதுப் பொலிவு உருவாகியிருந்தது.

விழாவுக்கு மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவ் வுரையில் அவர் தெரிவித்தார்:

''ஆண்டுக்கு ஒருமுறை கலைஞர்களைப் பாராட்டுவதற்கு இந்த விழா நடைபெறுகிறது. பேரறிஞர் அண்ணாவின் காலத்தில் தொடங்கப்பட்ட இவ்விழா இடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது நிறுத்தப்படக் கூடாது, தொடரப்படவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

''கலை உலகில் பாடுபடும் கலைஞர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றிக் கவலைப்படாமல் கலை உலகில் வாழ்பவர்கள்-கலைக்குத்தொண்டாற்றுபவர்கள் என்ற முறையிலே - தமிழக அரசு அவர்களை மதிக்கிறது''.

சிறந்த படங்களைத் தேர்ந்தெடுத்த தேர்வுக் குழுவின் தலைவரான மாண்புமிகு நீதிபதி திரு பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் அவர்கள்-படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குரிய காரணங்களை எடுத்துரைத்தார்.

தமிழக அரசின் ஒரு லட்ச ரூபாய் உதவித் தொகையைப் பெறுவதற்குரிய படங்களைத் ''

தேர்ந்தெடுத்த குழுவின் தலைவரான மாண்புமிகு நீதிபதி திரு ஆர்.செங்கோட்டுவேலன் அவர்கள், படங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்ற விதத்தை எடுத்துரைத்தார்.

பாராட்டுரை வழங்கிய தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் திரு எஸ்.எஸ்.இராசேந்திரன் குறிப்பிட்டார்:

''மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் முழுக்க முழுக்க அரசியலில் இறங்கிவிட்டாலும் கூட, கலை உலகத்தினரின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வருகிறார். கலை உலகினர் எந்த அளவுக்குப் பாராட்டப்படவேண்டும், உற்சாகப்படுத்தப்படவேண்டும் என்பதில் அவருக்கு அக்கறை உண்டு.

அடுத்து பாராட்டுரை வழங்கிய இந்திய திரைப்பட சம்மேளனத்தின் தலைவர் திரு. டி. இராமானுஜம் தெரிவித்தார்.

''புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தான் திரையுலகம் மிகவும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. முன்பு 1500 திரையரங்குகள் இருந்தன. இப்போது 2500 திரையரங்குகள் உள்ளன. முன்பு ஆண்டுக்கு 50 படங்கள் தான் உருவாகின. தற்போது 150 படங்கள் உருவாகி வருகின்றன. முதல்வர் அவர்கள் அளித்துள்ள சலுகைகளினால் தான் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.''

தென்னிந்திய திரைப்படவர்த்தக சங்கத்தின் தலைவர் திரு ஏ.ஆர். ராஜு தமது பாராட்டுரையில் கூறினார்.

''தமிழகத்தைப்போலவே ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களும் விருது வழங்கிக் கலைஞர்களைச் சிறப்பித்து வருகின்றன. கர்நாடக மாநிலத்தில் கன்னட மொழியில் தயாரிக்கப்படும் 'படங்களுக்கு 50 சதவிகிதம் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. அதுபோல் தமிழகத்திலும் தமிழ்மொழிப் படங்களுக்கு 50 சதவிகிதம் வரிவிலக்கு அளித்தால் நல்லது''

தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு ஜி.அனுமந்தராவ் தமது உரையில் தெரிவித்தார்:

''திரைப்படத் தொழிலுக்குத் தமிழ்நாடு அரசு மிகுந்த ஆதரவு-ஊக்கம் தருவதை நான் பாராட்டுகிறேன்.''

தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு. வலம்புரி சோமநாதன் தமது உரையில் குறிப்பிட்டார்.

''இங்கு பாராட்டப் பெறும் கலைஞர்கள் சாதாரணக் கலைஞர்கள் இல்லை. இவர்கள் தினமும் மக்களால் நினைக்கப்படுகிற கலைஞர்கள்''

அடுத்து, மேதகு ஆளுநர்தமது உரையை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர் கலையின் பெருமையையும், அது சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டிய அவசியத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

''கலைத்துறை பொழுதுபோக்கு அம்சத்தை மட்டும் கொண்டதல்ல, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரையும் ஈர்க்கக்கூடிய சிறந்த துறை அது. தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் அம்சங்கள் அடங்கிய திரைப்படங்களைத் தயாரிப்பாளர்கள் உருவாக்க முன்வரவேண்டும்''.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்புரை ஆற்றினார். (உரை பிறிதோர் இடத்தில்)



உரையாற்றிவிட்டுச் சிறந்த திரைப்படங்கள், சிறந்த கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகளையும் உதவித் தொகை பெறுதற்குரிய திரைப்படங்களுக்கு இலட்ச ரூபாய் உதவித்தொகையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்தார். ராஜா சாண்டோ நினைவுப் பரிசை நகைச்சுவை நடிகர் திரு கே. சாரங்கபாணிக்கு அளித்தார்.

திரு கே.சாரங்கபாணி தமது நன்றியுரையில் தெரிவித்ததாவது:

''ராஜா சாண்டோ சிறந்த நடிகர், இயக்குநர் ஆவார். பல்லாண்டுகளுக்கு முன்பே திரை உலகில் பணியாற்றிச் சிறப்படைந்தவர் அவர். கலைஞர்களுக்குப் பெருமை தேடித்தந்த கலைஞர் அவர். அவர் பெயரில் கலைஞர்களுக்கு இந்த விருது வழங்கும் தமிழக அரசுக்கு நன்றி.

அடுத்து, திரைப்படஇயக்குநர் முக்தா திரு.சீனிவாசன் குறிப்பிட்டதாவது:

''விருது வழங்கி, பணமும் கொடுத்தும் பாராட்டும் வழங்குகிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். தனிநபர் ஒழுக்கம் வளர்ந்தால்தான், சமுதாய ஒழுக்கம் வளரமுடியும். அந்த வகையில் இது ஒழுக்க விரிவுரை விழாவாகத் திகழ்கிறது.''

அடுத்து திரைப்பட கதாசிரியர்-இயக்குநர் திருஏ.எஸ்.பிரகாசம், தமது உரையில் தெரிவித்ததாவது:

''எனது 'எச்சில் இரவு' படம் ரஷ்யாவில் நடைபெற்ற திரைப்பட விழாவில்பங்கு பெற்றபோது அங்கு பலரும் பார்த்துப் பாராட்டினர். இன்று என்னுடைய தாயகத்திலே பெறுகின்ற பாராட்டைக் கண்ட பின்னர் தான் என் இலட்சியம் நிறைவேறியுள்ளது என்பதை உணருகிறேன்''

அடுத்து, திரைப்பட இயக்குநர்-கதாசிரியர் திரு. பாரதிராஜா உரையாற்றும்போது கூறினார்:

''எனக்கு அச்சத்தை ஏற்படுத்திவிட்டது இந்த விழா. இந்த ஆண்டு எனக்குப் பரிசு கிடைத்துள்ளது. இனி அடுத்த ஆண்டும் இதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலை இப்போதே ஏற்பட்டுவிட்டது''

அடுத்து, திரைப்பட நடிகர் கார்த்திக், ''சிறப்புப் பரிசு அளித்த தமிழக அரசுக்கும் முதல்வருக்கும் நன்றி'' என்றார்.

அடுத்து உரையாற்றிய திருமதி மனோரமா தெரிவித்தார்:

''அரசு அளித்த இந்தப் பரிசை நாங்கள் மனமுவந்து ஏற்றுக் கொள்கிறோம். இதுபோன்ற பரிசு பெறுவதற்கு எல்லாக்கலைஞர்களும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.''

அடுத்து, திரைப்பட நடிகை செல்வி.ராதா,' ''ஒவ்வொரு ஆண்டும் கலைஞர்களுக்கு விருது வழங்கி உற்சாகப்படுத்தும் தமிழக அரசுக்கு நன்றி'' என்றார்.

அடுத்துப் பேசவந்த செல்வி ஸ்ரீதேவி, ''என் வாழ்நாளில் மறக்க முடியாதபடி அமைந்து விட்டது இந்த விழா'' என்று கூறினார்.

அடுத்து, நகைச்சுவை நடிகர் திரு கே.ஏ. தங்கவேலு நகைச்சுவை ததும்பும் வகையிலும் தத்துவ முழக்கம் மின்னும் வகையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தமக்கும் 1935ஆம் ஆண்டிலிருந்தே இருந்துவந்துள்ள நட்புக்குறித்துச் சான்றுகளுடன் எடுத்துரைத்தார். அவர் மேலும் தெரித்தார்:

''இந்த அரசு எங்களுக்கு இந்த விருதை வழங்கியிருந்தாலும் இதனை வழங்கிய பெருமை




காவல் துறையினருக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கிடும் அரசுத் திட்டத்தால் இம் மாவட்டத்தில் 1223 பேர் பயன் பெற்று வருகின்றனர்.

''எத்தனை வழக்குகள் பதிவாயின, கண்டு பிடிக்கப்பட்டன என்று ஓராண்டுக் கணக்குத் தர முடியுமா'' என்றோம்!

''தாராளமாக'' என்றவாறு விவரம் தெரிவித்தார் தலைமைக் கண்காணிப்பாளர்.

**திரு என். அப்பாதுரை, ஐ.பி.எஸ்.,**



“1983ல் 1,189 குற்றங்கள் பதிவாகியுள்ளன. அதில் 469 குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளனர். 372 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு நீதி மன்றத்திலே வழக்கு நடந்து வருகிறது. மேலும் 20.3.84 வரை இந்த மாவட்டத்தில் 201 குற்றங்கள் பதிவானதில், 15ல் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளனர். 78 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, குற்றவாளிகளை நீதி மன்றத்தில் நிறுத்தியிருக்கிறோம்''.

இம்மாவட்டக் காவல்துறையினர் 'சடுகுடு' விளையாட்டில் நிகரற்றவர்களாக விளங்குகிறார்கள். அப்போட்டியில் அவர்கள் பரிசாகப் பெற்ற கேடயங்கள், வெள்ளிக் கோப்பைகள் ஏராளமாக இருக்கின்றன.

திருமணமாகாத இளம் காவலர்களுக்கென 18 இலட்சம் ரூபாய் மத்திய நிதி உதவியில், தனிக் குடியிருப்பு ஒன்று ஈரோட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**- ராஜீவ்**

## முதல் - கடைசி அட்டைப் பட விளக்கம்

ஈரோட்டில் உள்ள பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், ரூ. 22 இலட்சம் செலவில் சுற்றுலாத் துறையால் சுற்றுப்புறம் விரிவாக்கப்பட்டு வரும் பவானி கூடுதுறை சங்கமேசுவரர் ஆலயம் மற்றும் பெரியார் மாவட்டக் காட்சிகள்.




*** பெரியார் மாவட்டத்தில், கடந்த ஆண்டில் மட்டும் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.**

*** பெரியார் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டிலே மட்டும் 18 ஆயிரம் குடும்பத்தார் பயன்பெற்றுள்ளனர்; அவர்களில் 6 ஆயிரம் பேர் ஆதிதிராவிடர்கள், இரண்டாயிரம் பேர் பெண்கள்!**

''இப்போது ஈரோடு தென்னாட்டு வார்தா எனக் கருதப்படுகிறது. இன்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி வார்தாவில் கூடியிருக்கிறது. வார்தாவில் நம்நாட்டுத் தலைவர் காந்தியார் வாழ்கிறார். இந்நகரிலே தமிழர் தலைவர் பெரியார் வாழ்கிறார்.

*—10.8 1939-ல் பெரியாருக்குப் பொன் முடிப்பு அளிக்கப்பட்ட விழாவில் என். ஆர். சாமியப்ப முதலியார் பேசியது*



## எம் கடன் பணி செய்து கிடப்பதே!

சமுதாயச் சீர்திருத்தம் காண அரும்பாடுபட்டவர் தந்தை பெரியார்; அவர் பெயரில் அமைந்திருக்கும் பெரியார் மாவட்டத்தில் சமூக நலத்துறை பணிகளும் சரியானபடியே நடந்து வருகின்றன.

அரும்புச் சிறுவர் சிறுமியர்களுக்கான குழந்தைகள் காப்பகங்கள், மாண்புமிகு முதல்வர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம் ஆகியவை பாங்குறச் செயல்படுகின்றன. இங்கே. தையல் எந்திரங்கள் 16 பேருக்கு வழங்கப்பட்டு, 'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண்' எனத் தொழில் கற்று வருகிறார்கள் அவர்கள்; 40 இளம் பெண்கள், உதவித் தொகையோடு இலவசத் தட்டச்சுப் பயிற்சியும் பெற்றுவருகிறார்கள்.

கணவனை இழந்த 40 விதவைத் தாய்மார்களுக்குப் பிறந்த பெண்கள் மணவிழா காண, தலா ஆயிரம் ரூபாய் வீதம் இதுவரை 40 ஆயிரம் ரூபாய் வழங்கப் பட்டிருக்கிறது. மறுவாழ்வு பெற்ற விதவை மகளிர் நால்வருக்கு இரண்டாயிரம் ரூபாய் தரப்பட்டிருக்கின்றது. தேசியச் சேமிப்புப் பத்திரங்களாக.

உடல் ஊனமுற்றோர் பள்ளியிலே பயிலும் 380 மாணவ மாணவிகளுக்குத் தலா ரூ. 25 வீதம் இதுவரை ரூ. 8,500 செலவிடப்பட்டு அவர்கள் சிந்தை குளிர்ந்திருக்கிறார்கள்.

விதவைப் பெண்கள் பெற்றெடுத்த குழந்தைகள் படிக்கப் புத்தகங்கள் பெற இதுவரை மாவட்டச் சமூக நலத்துறை செலவிட்ட தொகை ரூ. 9,400.

பெரியார் மாவட்டம் முழுதுமுள்ள 800 மகளிர் மன்றங்கள் மணம் பெறவும் மலர்ச்சி பெறவும் என ரூ. 80 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

செவி கேளாதோர் பள்ளியிலே படிக்கும் 40 பேர் உணவு பெறவும் உறைவிடம் பெறவும் கற்றுயரவும் ரூ. 2 இலட்சத்து 28 ஆயிரம் வரை அளித்திருக்கிறார்கள். தையல் தொழில் மற்றும் எழுது பொருட்கள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் இரண்டு நடைபெற்று வருகின்றன. அதன் வளர்ச்சிக்கென ரூபாய் 79 ஆயிரம் செலவிடப் பட்டுள்ளது.

சமூக நலத்துறை அரசின் ஓர் அங்கமே எனினும், தனியார் நடத்தும் தொண்டு புரியும் அமைப்புகளைத் துச்சமாகக் கருதுவதில்லை. 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வகையில் இந்த மாவட்டத்திலே, அவ்வாறான சேவை இல்லங்கள் பலவற்றுக்குமாக ரூ. 1,04,335 ஆண்டு முழுமைக்குமாகச் செலவிட்டு வருகிறது.

## உள்ளம் சிலிர்க்கும் உண்மை!

பல ஆண்டுகளுக்கு முன் ஈரோடு நகரை 'பிளேக்' நோய் தாக்கியது. அதன் கடுமை கண்டு அஞ்சிய மக்கள்-குறிப்பாகச் செல்வந்தர்கள், வசதி பெற்ற நடுத்தர வர்க்கத்தினர் ஊரைக் காலி செய்து வெளியிடங்களுக்குச் சென்று விட்டனர்.

எங்கும் போக வாய்ப்பும் வசதியும் அற்ற எளிய மக்கள் மட்டுமே ஊரில் இருந்து வந்தனர். அவர்கள் அந்த நோயால் பாதிக்கப்பட்ட போது பெரியார் அவர்கள்-பெரும் குடும்பத்தில் பிறந்து-செல்வமும் செல்வாக்கோடும் இருந்த அந்த நாளிலும் தன் தோழர்கள் சிலபேருடன் ஏழை எளியமக்கள் வாழும் பகுதிகளுக்குத் துணிவோடு சென்று அவர்களுக்குத் தேவையான பல உதவிகளைச் செய்தார். நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியும் கிடைக்கச் செய்தார்.

அதுமட்டுமல்ல; நோயால் இறந்து போன ஏழைய எளிய மக்களது சடலங்களைச் சுடுகாடு வரை தானே சுமந்து கொண்டு போய் உதவி செய்திருக்கிறார். கேட்கவே உள்ளம் சிலிர்க்கிறதல்லவா?

—சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழ்த் தலைவர்' என்ற நூலிலிருந்து.

பொதுமக்களுக்கு உண்டு; ஏனென்றால் அவர்கள்தான் பல முறை படங்களைப் பார்த்து ரசித்து எங்களுக்குப் புகழைத் தேடித் தருகிறார்கள். அவர்களால்தான் எங்கள் புகழ் ஓங்குகிறது; எங்களுக்குப் பரிசுகளும் வந்தடைகின்றன''.

**உதவித்தொகை பெற்ற திரைப்படங்கள்**

சுமை
ஒரு வாரிசு உருவாகிறது
அவள் ஒரு காவியம்
எச்சில் இரவுகள்
ராஜபார்வை

அடுத்து, கமலஹாசன் தமது உரையில், ''முதல்வர் அவர்கள் எங்கள் தயாரிப்பான ராஜ பார்வை படத்திற்கு அளித்த உதவித்தொகையான ஒருலட்ச ரூபாயில், நான் 35 ஆயிரத்தை முதல்வர் அவர்களிடம் திருப்பி அளிக்கிறேன். அவரது அரிய திட்டங்களில் ஏதாவது ஒன்றிற்கு அந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

உடனடியாக 35 ஆயிரம் ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார் கமலஹாசன்.

அந்தக் காசோலையைப் பெற்றுக்கொண்டமாண்புமிகுமுதல்வர் ''இந்தத் தொகை, நலிந்த கலைஞர்கள் நல்வாழ்வு நிதியில் சேர்த்துக் கொள்ளப்படும். ஏற்கனவே ஏவி.எம்.சரவணன் அவர்களும், பாரதிராஜா அவர்களும் 'இந்தத் திட்டத்திற்குப் பண உதவி செய்யமுன்வந்துள்ளனர். ஆகவே இந்த 35 ஆயிரம் ரூபாயை பாரதிராஜா அவர்களிடமே கொடுக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

இறுதியில், செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு :
—தமிழ்ப்பித்தன்



# வீட்டு வசதி



தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஒவ்வொரு சாதாரணக் குடிமகனுக்கும், அவரவர் பொருளாதார வசதிக்கேற்ப குறைந்த தவணை முறையில் வீடுகளைக் கட்டித் தந்து வருகிறது.

இந்த வகையில் 1977ஆம் ஆண்டு மே மாதம் பெரியார் மாவட்டத் தலைமையிடமான ஈரோட்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ஈரோடு வீட்டு வசதிப் பிரிவு துவக்கப்பட்டது. ஈரோடு நகரின் வீட்டு வசதிப் பிரச்னைகளைப் போக்குவதில் இங்கே இந்தப் பிரிவினரின் பணிகள் சிறப்பாகத் திகழ்கின்றன.

55½ ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரியார் நகரில் தவணை முறைத் திட்டத்தில் குறைந்த வருவாயினருக்கென 518 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இதில் தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கென 168 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வருவாய் ஆய்வாளருக்கென 16 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கடைநிலை ஊழியர்களுக்கென 96 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கென 64 தனி வீடுகளும், 136 ஈரடுக்கு வீடுகளும், உயர் வருவாயினருக்கென 50 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. 88 மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இங்குள்ள மகாகவி பாரதி சமூகக்கூடம் ரூ. 9 இலட்சம் செலவில் அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பள்ளம் ஓடைக்கு வடபுறமும், மேட்டூர் சாலைக்கு இருபுறமும் காந்திரோடு வரை அமைந்துள்ளதுதான் பெரியார் நகர். ஆறடுக்குக் கட்டடங்கள் அணிசெய்திடும் இப்பகுதிக்கு மேட்டூர் சாலையிலும் காந்தி ரோட்டிலும் ரூ. 1.71 இலட்சம் செலவில் நுழைவாயில்கள் சிறப்புற அமைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு வீட்டுவசதிப் பிரிவினரால், காவல் துறையினருக்காக 36 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. அவற்றின் கீழே 24 கடைகள் இருக்கின்றன.

45½ ஏக்கர் பரப்பளவுள்ள சம்பத் நகரில் 672 உயர் வருவாய் வீடுகள் தவணை முறை திட்டத்திலே கட்டிமுடித்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கென 192 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் 108 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் தலைநகரான சென்னையிலே மட்டுமன்றி மற்ற மாவட்டங்களுக்கும் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் விரிவு படுத்தப்படலாம் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை,முதன் முதலாகச் செயல்படுத்தப்பட்ட மாவட்டம் பெரியார் மாவட்டம்தான்.

அந்த வகையில், குடிசைப்பகுதி மாற்று வாரியத்திட்டத்தின் கீழ், பெரும் பள்ளம் ஓடைக்கரையில் 400 வீடுகள் அடுக்கு மாடிக்கட்டடமாக அழகோடு உருவாக்கப்பட்டுள்ளது. பெரும்பள்ளம் ஓடைக்கரையிலே ரூ. 160 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 624 வீடுகளும், கருங்கல் பாளையத்திலே ரூ. 32 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 288 வீடுகளும் இத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

2 அங்காடிக் கட்டடங்களையும் கட்டித் தந்துள்ள வீட்டு வசதி வாரியத்தார், கோபிசெட்டி பாளையத்தில் 210 மனைகளையும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தியுள்ளனர் [illegible]

# சேலத்தில் ஒரு சூளுரை



'திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்' என்ற கோட்பாட்டின்படி நாட்டில் உள்ள குடும்பங்கள் எல்லாம் வாழ்வுற வேண்டும் என்ற நோக்கில் குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'அனைத்து அரசு ஊழியர்களும் திட்டமிட்டுக் குடும்பம் அமைத்து வாழ்வதன் மூலம் ஒளிமயமான வாழ்வு பெறலாம். அதற்காக 1985ஆம் ஆண்டைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாகக் கடைப்பிடித்து, அந்த ஆண்டில் குழந்தைகளை பெற்றுக் கொள்வதில்லை என உறுதிமொழி ஏற்றுச் செயல்படுவது' என்று, கடந்த 24.2.'84ஆம் நாள் சென்னை தலைமைச் செயலகத்தில் கூடிய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அடங்கிய இருபத்தேழு சங்கங்களின் தலைவர்களும், பிரதிநிதிகளும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர்.

அதைத் தொடர்ந்து சேலத்தில் அடுத்த 14.4.'84ஆம் நாள் 1985 திட்டமிட்ட குடும்ப ஆண்டு உறுதிமொழி ஏற்பு விழா, சீரும் சிறப்புமாக நடந்தேறியது. பின்னர் அரசு கடைநிலை ஊழியர்களின் ஊர்வலம்,

* 1985ஆம் ஆண்டில் குழந்தை பெற்றுக்கொள்ள மாட்டோம்!
* 33 வயதுக்குப் பிறகு குழந்தை பெற்றுக்கொள்ள மாட்டோம்!
* அதிகம் பெறாதே! அவதிப்படாதே!

என்பன போன்ற பல்வேறு குடும்பநல மொழிகளை முழங்கிக் கொண்டு வந்தது.

ஊர்வலம் நேரு கலையரங்கத்தை அடைந்ததும், கடைநிலை ஊழியர்கள் மாநிலச் சங்கத் தலைவர் திரு. [illegible]கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கடைநிலை ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வரதராஜுலு, அரசு 2ஆம் செயலாளர் திரு டி.வி.அந்தோணி ஆகியோர் உரையாற்றிய பின்னர் அரசு கடைநிலை ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இறுதியாக மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன் அவர்கள் குடும்பநலத் திட்டத்தின் அவசியம் குறித்து உரையாற்றினார்.

மாலையில் அரசு இரண்டாம் செயலாளர் திரு டி.வி.அந்தோணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வரவேற்புரையாற்றினார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர்.வரதராஜுலு அவர்கள்.

அரசு இரண்டாம் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி அவர்கள் தலைமை உரை ஆற்றினார்.

அடுத்து அரசு ஊழியர்கள் சங்கங்கள் பலவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் உரையாற்றி, 1985ஆம் ஆண்டைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாக நிறைவேற்ற எல்லா வகையாக ஒத்துழைப்பும் நல்குவதாக உறுதி கூறினர்.

சமூகநல வாரிய உறுப்பினர் திருமதி நாமகிரி தாமோதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பால்வளத் தலைவருமான திரு. கண்ணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. கிருஷ்ணராஜ், சட்டமன்ற உறுப்பினர் திரு மு. ஆறுமுகம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி.பழனியப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வரதராஜுலு அவர்கள் படிக்க அரசு ஊழியர்கள் உறுதிமொழி ஏற்ற நிகழ்ச்சி அடுத்து நிறைவேறியது.

பின், 1983-84ஆம் ஆண்டில் சேலம் மாவட்டக் குடும்பநலத் திட்ட வெற்றிக்கு மிகச் சிறந்த முறையில் பணியாற்றியவர்களுக்கு மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன் அவர்கள் பரிசு வழங்கிப் பேருரையாற்றினார்.

தொகுப்பு: லெ. முத்துராமலிங்கம்



பதிவு எண். M. 8676



ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழரசு

16-5-1984 75காசு.
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — வைகாசி 3






தமிழக அரசில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு ஊழியர்களின் இரண்டாவது மாநில மாநாடு சென்னை பொது மருத்துவ மனைத் திடலில் 25.3.84 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை திரு வே. திருமலை வரவேற்றார். திரு எம்.வி. இலட்சுமி நரசிம்மன் தலைமை வகித்தார். பல்வேறு ஊழியர்களின் அமைப்பைச் சார்ந்த தலைவர்கள் மாண்புமிகு முதல்வருக்கு மாலை அணிவித்து சத்துணவுத் திட்டத்திற்கு நிதி வழங்கினார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. அண்டே அவர்கள் மாநாட்டினை திறந்து வைத்துப் பேசுகையில், ''உங்களது குறைகளைப் படிப்படியாக நிறைவேற்றி வருகின்றோம். ஒரே ஒரு கோரிக்கையை உங்கள் மத்தியில் வைக்கிறேன். **உங்களது தேவைகளைப் போராடிப் பெறக்கூடாது, வாதாடிப் பெற வேண்டும்** என்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்திற்கு நல்ல பெயர் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறவர்களை இந்த அரசு கைவிடாது. நல்ல முடிவினை அரசு உங்களுக்கு விரைவில் அறிவிக்கும்'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில், ''பெண்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்று கூறுகின்றோமே அதை இங்கு காண முடிகிறது. எந்தக்கட்சியைச்சேர்ந்தவர்களானாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும், எல்லோரையும் நான் சமமாக நடத்துகிறவன். சத்துணவு சாப்பிடுவது யார் பெற்ற பிள்ளை என்று பாராமல் நன்கொடை அளித்துள்ளீர்கள்; அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

''மக்களின் வரிப் பணத்தை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும். மக்களோடு இணைந்துவாழ், மக்களிடம்போ என்று அண்ணா சொன்னார்கள். அண்ணாவின் கூற்றுப்படி நடந்து வருகிறோம்.

''சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு, தற்காலிக இளநிலைப் பணியாளர்களை நிரந்தரமாக்குவது போன்ற கோரிக்கைகளை அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்'' என்றார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**தொகுப்பு :**

**அ. மருதவிநாயகம்**

## தங்கவேல், வெள்ளி வாள், கேடயம்.



சென்னையில் 25-3-84 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசு அலுவலர் (C&D பிரிவு) கழக மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் கோவை மாவட்டக் கிளையினர் தங்கவேல் ஒன்றும், மதுரை மாவட்டக் கிளையினர் வெள்ளி வாளும், வெள்ளிக் கேடயமும் வழங்கினார்கள். இந்தத் தங்கவேலும், வெள்ளி வாளும், கேடயமும் தமிழக ஆலயங்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது அறிவித்தார்கள்.

அதன்படி 29-3-84 அன்று அந்த தங்கவேலும், வெள்ளிவாளும். வெள்ளிக் கேடயமும், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டன. அமைச்சர் அவர்கள் அவற்றை இந்து சமய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள். தங்கவேல், திருச்செந்தூர் ஆலயத்திலும், வெள்ளி வாள், வெள்ளிக் கேடயம் ஆகியவை திருவேற்காடு ஆலயத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட தங்க வேல் 6 பவுனில் தங்க முலாம் பூசியது; மதிப்பு ரூபாய் 10,500; வெள்ளி வாளும் கேடயமும் 2½ கிலோ, மதிப்பு ரூ 9,000.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



# சிறப்புக்குரிய தமிழகக் காவல் துறை

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.**



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர் 5.5.'84ல் குடியரசுத் தலை திரு ஜெயில்சிங் அவர்களை டெல்லியில் சந்தித்து, பிறந்தநாள் வாழ்த்துக் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்திந்திய தெலுங்கு மாநாட்டில் (6.5.'84) மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.





மதுரை வண்டியூரில் சினிமா தியேட்ட விபத்தில் காயமுற்று மதுரை அரசு மரு துவமனையில் சிகிச்சை பெற்றுவருப களை மாண்புமிகு முதல்வர் அவர் 30.4.'84ல். பார்

பல காரணங்களால் பல பிரிவுகளுக்குத் திங்களைச் சொந்தக்காரர்கள் ஆக்கிக்கொண்டு பணியாற்றி வருகிறார்கள், காவல்துறையினர். அவர்கள் அத்தனை பேருக்கும் நான் அறிவுரை கூறுவதைவிட, சில யோசனைகளை அவர்கள் முன் வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நல்லவன் என்று பேர் எடுப்பது மிகவும் சிரமமான காரியம். இவரைவிட அவர் நல்லவர் என்று பேர் பெற்று விட்டால் மட்டும் போதாது. இவர்தான் நல்லவர் என்று சொல்லத்தக்க விதம் வேண்டும். அதுபோல் இவர்கள்தான் நல்லவர்கள் என்ற முறையில் தமிழகக் காவல்துறையினர் மென்மேலும் நாம் பெருமைப்படத்தக்க வகையில் பேர் எடுக்க வேண்டும் என்பதுதான் எனது பேராசை.

தமிழகக் காவல்துறை அனைத்திந்தியாவிற்கும் பெருமை சேர்ப்பது மட்டுமல்ல-உலகத்தில் உள்ள நாடுகளின் காவல் துறையினரும் மக்களும் தங்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால், அதைத் தீர்ப்பதற்கு தமிழ்நாட்டுக் காவல் துறையினரின் நடவடிக்கைகளைப் பார்த்து அறிந்து கொள்ளமுடியும் என்ற நிலை வரவேண்டும் - இதுதான் எனது பேராசை. இது பேராசை என்றாலும் இது நடக்கும் என்று நம்புகிறேன்.

'முகமூடித் திருடர்களை விரைவில் பிடித்து விடுவோம். அந்தச் சாதனைக்குரிய விருதை அடுத்த ஆண்டு இதே திடலில் நிச்சயமாகப் பெறுவோம்' என்று டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுதே இதற்காகக் காவல் துறையினருக்கு விருது கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

முகமூடித் திருடர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்று தெரியவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்துதான் வருகிறார்கள். பொது மக்களை நான் வேண்டிக் கொள்கிறேன்-சந்தேகத்துக்குரியவர்களைப் பார்த்தால் தயவுசெய்து காவல்துறையினருக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சமூகவிரோதிகள் பெருகமாட்டார்கள்.

குற்றம் செய்பவர்கள் தப்பித்துச் செல்ல முடியாதபடி - கயவர்கள் தப்பித்துச் செல்ல முடியாதபடி-அவர்களை விமானத்தில்சென்று தாக்கிப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அதற்குரிய விமானங்களை வாங்க வேண்டும் என்பதற்குரிய அனுமதியை உள்துறை அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம்.

அட்டை சொல்லும் செய்தி.

காவல்துறையினரும் மனிதர்கள்தான். நாட்டுமக்களின் நல்வாழ்வுதான் முக்கியம் என்று கருதி அவர்கள் செயல்பட்டு வருவது நமது உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காவல்துறையினர் எப்போதும் துப்பாக்கியுடன் செல்ல வேண்டும். எங்கிருந்தாலும் தொடர்பு கொண்டு பேசும் வகையில் வயர்லஸ் அவர்களிடம் இருக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

இவற்றின் மூலம் நல்ல பயிற்சி பெற்று, உடல் நலத்தைப் பேணிக் காவலர்கள் தயாராக இருப்பார்களானால், தீயவர்கள் தப்பித்துச்



செல்ல முடியாது. காவலர்களுக்கும் ஆபத்து வராது.

தூற்றுபவர்கள் தூற்றட்டும் என்ற முறையில், பாராட்டுகளையும், இகழ்ச்சிகளையும் புகழ்ச்சிகளையும் எதிர்பார்க்காமல் காவல் துறையினர் பணியாற்றுகிறார்கள். தன்னலம் கருதாது சேவை செய்ய வேண்டும். அமைதிக்குப் பயன்படும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதும் காவலரின் பொறுப்புகள் ஆகும் என்பதை அழுத்தமாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1977ல் நான் பதவி ஏற்றபோது எத்தனை போராட்டங்கள் எத்தனைமுறை நடத்


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — வைகாசி 3
மலர் : 14 இதழ் : 22
16-5-1984

தப்பட்டன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இனிமேல் அப்படியெல்லாம் செய்தால் காவலர்கள் தடுத்து நிறுத்துவர் என்பது மட்டுமல்ல, பொது மக்களும் கூர்ந்து கவனிக்கிறார்கள். போராட்டங்களை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள்.

மற்றப்பணியாளர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவது போல, காவல்துறையினருக்கும் வீட்டுவசதி செய்து தர வேண்டும். அவர்கள் ஓய்வு பெறும்போது சொந்தமாக ஒரு வீடு கட்டி வைத்துக் கொள்ளவேண்டும்.

காவலர்களும் குடும்பத்திலிருந்துதான் வருகிறார்கள். ஆகவே காவல்துறையினர் மட்டும் விதிவிலக்கல்ல. காவல்துறையினர் நம் பிக்கையோடு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசின் ஆசை. காவல் துறையினரின் நாணயம், நேர்மை, தியாகம், ஆகியவற்றில்தான் தம்ழக மக்களின் எதிர் காலம் உன்னதமாக இருக்கும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஏதாவது ஒரு நிகழ்ச்சி ஏற்படுமானால் தமிழகக் காவல் துறைப்படையை அனுப்பு என்றால், அப்படி அனுப்புகிற அளவுக்குப் பெருமையானவர்கள் நம்மிடம் இருக்கிறார்கள்.

சென்னை காவல்துறையினர் பல்வேறு விழாக்காலங்களிலும் மிகுந்த பொறுப்புடன் நிர்வாகம் செய்தனர். சிறு அசம்பாவிதம் கூட நேராமல் பார்த்துக்கொண்டனர். மாவட்டங்களிலும் காவல்துறையினர் பொறுப்புடன் கடமையாற்றி வருகிறார்கள். அதன் காரணமாக அமைதி நிலவுகிறது.

காவலர்களே! நீங்கள் வாழுங்கள்! நாட்டை வாழ வையுங்கள்!

*(1.5.'84ல் நடைபெற்ற முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா -சேமப்படைக் காவலர் குடியிருப்பு திறப்பு விழா ஆகியவற்றில் ஆற்றிய உரையிலிருந்து.)*

## காவல் துறையினர் அளித்த நிதி

ராஜரத்தினம் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற காவலர்க்கு முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா — சேமப்படைக் காவலர் குடியிருப்பு திறப்பு விழா ஆகியவற்றில், 5 இலட்சத்து 45 ஆயிரத்து 454 ரூபாய்க்குரிய காசோலையை காவல் துறையின் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு ராதாகிருஷ்ணன் அளித்து, "முதல்வர் அவர்கள் இந்தத் தொகையை எந்தத் திட்டத்திற்கு வேண்டுமென்றாலும் பயன் படுத்திக் கொள்ளலாம்'' என்று குறிப்பிட்டார்.

அதனைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், ''நீங்கள் இலட்சக் கணக்கில் பணம் அளித்ததற்கு நன்றி. இந்தத் தொகை இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்கு அடிப் படைக் கருவூலமாக அமைகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்'' எனக் குறிப்பிட்டார்.

## ஆயிரம் விளக்கில் ஆயிரம் வீடுகள்

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட ஆயிரம் வீடுகளை-அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருக்கும் கங்கைக் கரைபுரம், வன்னியபுரம், புஷ்ப வனம் பகுதி-3, ஜோகித் தோட்டம், டாக்டர் தாமஸ் சாலை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள இந்த வீடுகளின் திட்ட மதிப்பீடு ரூ.140.38 இலட்சமாகும்.

ஒவ்வோர் வீடும் 223 சதுர அடி பரப்பளவுள்ளதாகக் கட்டப் பட்டுள்ள இந்தக் குடியிருப்புகளின் திறப்புவிழா டாக்டர் தாமஸ் சாலையில் (6.5.84) சிறப்புற நடைபெற்றது.

குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திருமதி ஈ.வே.கி. சுலோசனா சமபத் வரவேற்புரையாற்றி, வாரியப் பணிகளை விளக்கினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.க.இராசாராம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பங்கேற்ற மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள், எந்தெந்த வீடு யார் யாருக்கு என்பதற்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைந்த ஆயிரம் குடியிருப்புகளைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

இதற்குச் சற்று முன்பாக, அங்கே அமைக்கப்பட்டிருந்த இரட்டை இலைச் சின்னத்தை அகற்றச் சொன்ன அவர், தமது உரையில் ''இது அரசு விழாவாகும்; இங்கே அரசியல் சின்னங்களை அமைப்பது முறையல்ல; ஆகவே இங்கே வைக்கப்பட்டிருந்த கட்சிச் சின்னத்தை எடுக்கச் சொல்லிவிட்டேன். ஆர்வத்தின் காரணமாக இதைச் செய்திருக்கிறார்கள். அரசு விழாக்களில் கட்சி விளம்பரங்கள் கூடாது'' என்று குறிப்பிட்டார்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் ''1978ல் ஏற்பட்ட மழை வெள்ளத்தில், பாதிக்கப்பட்ட இந்தப் பகுதியைப் பார்க்க வந்தேன். அப்போது இங்கிருந்த துர்நாற்றம், நோய்கள் பற்றுவதற்கான வசதி எல்லாம் வெள்ளம் வடிந்த பிறகும் குடிசைகளிலே படிந்துபோய் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்களே என்று வருந்தினேன்; அதன் விளைவே இந்த வீடுகள்'' என்று குறிப்பிட்டார்.

விழா முடிவில், குடிசைப் பகுதி மாற்று வாரிய உறுப்பினர் திரு. சைதை என். கண்ணன் நன்றி கூறினார்.





## தமிழவேள் தமிழவேல்

தமிழவேள் உமாமகேசுவரப் பெருந்தகையார், நாவலர் ந.மு. வேங்கடசாமிப் பெருந்தகையார் இருவரின் நூற்றாண்டு விழா ஏப்ரல் திங்கள் 21,22 ஆகிய தேதிகளில் தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருமன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் வளர்ச்சித் துறையும், கரந்தைத் தமிழ்ச் சங்கமும் இணைந்து இந்த விழாவைக் கொண்டாடின.

21-ந் தேதி மாலை திருவையாறு அரசு இசைக் கல்லூரி மாணவர்களின் நாயன இசையுடன் விழா துவக்கம் ஆகியது. முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு ச.இராமநாதன் அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''தமிழ்த் தொண்டு செய்பவர் எவராக இருந்தாலும் அவரைக் கடவுள் என வழிபடுவது எங்கள் தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள் ஆகும்.''

தமிழவேள் நூற்றாண்டு நினைவுக் கட்டடத்தை முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் திறந்து வைத்தார்

சட்ட மேலவைத் துணைத் தலைவர் திரு ஜி. சுவாமிநாதன் விழாவைத்தொடக்கி வைத்தார்.

அவர் தெரிவித்தார்:

''தமிழை வளர்ப்பதற்காகச் சங்கத்தை ஏற்படுத்தினார் தமிழவேள் உமாமகேசுவரனார். பின்னர் தமிழ்க் கல்லூரி தொடங்கினார். அக் கல்லூரி தமிழ்ப் பல்கலைக் கழகமாக ஆக வேண்டும் என முதன் முதலில் சொல்லிய பெருந்தகை தமிழவேள் அவர்கள் தான். அவரது ஆசை, மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சி செய்யும் இந்தக் காலத்தில்தான் நிறைவேறியுள்ளது.

''நாட்டார் வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சி இல்லை, சொந்த வீடு கூட அவருக்குக் கிடையாது. ஆனால் இன்று தமிழ் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியராகலாம் எனச் சட்டம் போடப்பட்டுள்ளது. நலிவுற்ற தமிழாசிரியர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''சான்றோர்கள் பாராட்டப் படுகின்றனர். அதற்குக் காரணம் என்ன? பி.ஏ., எம்.ஏ., பட்டமா? தமிழ்த் தொண்டா? பதவியில் இருப்பதனாலா? பொதுமக்களுக்குப் பணி செய்வதாலா? ஒரு மனிதன் படிப்பாலோ பட்டத்தாலோ, பதவியாலோ, எழுத்தாற்றலாலோ பேச்சாற்றலாலோ, செல்வத்தாலோ, தொண்டினாலோ மேன்மையடைந்துவிட முடியாது. மேன்மையை அடைய ஒரே ஒரு வழி, ஒழுக்கமாக வாழ்வதுதான்! ஒப்பற்ற ஒழுக்கத்தைக் கடைப் பிடித்து மேன்மையடைந்தனர் தமிழவேள் அவர்களும், நாட்டார் அவர்களும்.''

தமிழவேள் அவர்களின் சிறப்பு மலர் ஒன்றினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண் இயக்குநர் திருடி.கே. சீனிவாசன் அவர்கள் வெளியிட, முதற்படியைப் பேராசிரியர் திரு க. வெள்ளைவாரணனார் பெற்றுக் கொண்டார்.

திரு டி.கே.சீனிவாசன் தமது உரையில் குறிப்பிட்டார்.

''புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்து பின்னர்தான் நாட்டுத் தலைவர்களின் பிறந்தநாளை அரசு கொண்டாடும் வழக்கம் உருவாகியிருக்கிறது.

''கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒரு தடாகம். அதனை நிறுவியவர் உமாமகேசுவரனார். அந்தத் தடாகத்தில் மலர்ந்த தாமரை வேங்கடசாமி நாட்டார். உமா மகேசுவரனார் ஒரு வீணையைச் செய்தார். அதனை மீட்டும் விரல் எது என ஆராய்ந்து பார்த்தார். அது வேங்கடசாமி நாட்டாரின் விரல் என்பதைக் கண்டார்.

''நாட்டார் அவர்களிடம் பாரதியார் சிலப்பதிகாரம் குறித்துத் தமது சந்தேகத்தைக் கேட்டுத் தீர்த்துக் கொண்டார் என அறிகிறோம். பாரதி 'கல்விசிறந்த தமிழ்நாடு உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று சொன்னான். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்



நாடு' என்று பாடினான். இந்த இரண்டு இலக்கிய வாணர்களின் பெயர்களைக் குறிப்பிட்ட அவன் அடுத்து, 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' என்று சொன்னான். நாட்டார் விளக்கம் கேட்டு, சிலப்பதிகாரத்தின் சிறப்பை பாரதி நன்கு அறிந்துகொண்டான். அதன் தாக்கமே அந்நூலுக்கு அவன் கூறிய புகழ்மாலை''.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான கட்டுரைப் பூங்கா, என்னும் மலர் ஒன்றைத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் சிலம்பொலி சு.செல்லப்பன் வெளியிட்டு உரையாற்றினார். அவர் தமது உரையில் தெரிவித்தார்.

''நூலை வாங்குவது மட்டும் போதாது. அவசியம் படிக்கவேண்டும். எதைப் படிக்க வேண்டும், எப்படிப் படிக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்க, பாவேந்தர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். நூலைப் படி எனத் தொடங்கும் அந்தக் கவிதையில் படி என்னும் சொல் 32 இடங்களில் வருகிறது.''

முதற் படியைப் பெற்றுக் கொண்ட பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் திரு மு. சு. கோவிந்தசாமி தமது உரையில் குறிப்பிட்டார்:

''தமிழ்த்தொண்டு செய்தோன் சாவதில்லை என்று பாவேந்தர் கூறியதற்கிணங்க, நாட்டுக்காக வாழ்ந்த நமது தமிழவேள் அவர்கள் சாகவில்லை; தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் கொலுவிருக்கின்றார்''.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் பல வகையிலும் தொடர்பு கொண்ட ஏழு பெருமக்கள் பாராட்டப் பெற்றனர். தலைவர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினார்.

திரு அ.கு.வேலன் சங்கப் புரவலர் என்னும் பட்டமும், திரு வெள்ளைவாரணனார் 'செந்தமிழ்ச் சான்றோர்' என்னும் பட்டமும், பாவலரேறு ச. பாலசுந்தரம், 'தொல்காப்பியப் பேரறிஞர்' என்னும் பட்டமும், திரு. இரா.கோவிந்தராசர், உமாமகேசுவரனாரின் திருமகனார் உ. சிங்காரவேலு ஆகியோர் 'செந்தமிழ்த் தொண்டர்' என்னும் பட்டமும், உமாமகேசுவரனார் வரலாற்றை எழுதிய டாக்டர் சாம்பசிவம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்னும் நூலை எழுதிய பேராசிரியர் சின்னத்தம்பி ஆகியோர் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டமும் பெற்றனர்.

சங்கக் கணக்கர் திரு ஆறுமுகம் பிள்ளை, உடற்பயிற்சி ஆசிரியர் திரு செல்வராஜ் ஆகியோருக்கு ஒரு சவரன் எடையுள்ள கணையாழிகள் வழங்கப்பட்டன. மற்றும் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த தொடக்கப்பள்ளி - மேநிலைப் பள்ளி - தமிழ்க் கல்லூரி ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்-ஆசிரியரல்லாத பணியினர் அனைவருக்கும் பைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பாராட்டுப் பெற்றோர் சார்பில் அ.கு. வேலன், வெள்ளைவாரணனார் நன்றி கூறினர்.

வழக்குரைஞர் திரு சி. சந்திரமோகன் நன்றி நவின்றார். அதன் பின்னர், கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் நடத்திய 'தமிழவேள் - ந.மு.வே' வரலாறு என்னும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

2 ஆம் நாள் நிகழ்ச்சி காலை 10.30 மணி அளவில் தொடங்கியது. தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு பன்னீர் செல்வம் வரவேற்க, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் கருத்தரங்கிற்குத் தலைமையேற்றார்.

தலைவர் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழவேள் நீதிக்கட்சி உறுப்பினர்; வழக்குரைஞர். அதுமட்டுமல்ல, அவர் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்து இறுதி வரை உழைத்து வாழ்க்கையை அதற்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர். திராவிட வங்கி என்ற ஓர் அமைப்பையும் அவர் தோற்றுவித்திருக்கிறார்''.

தமிழவேள் அவர்களின் பொதுப்பணி குறித்துப் பேசிய டாக்டர் அ.ம.பரிமணம் குறிப்பிட்டார்:

''தொண்டு செய்து தொண்டு செய்து உயர்ந்து, பின், வானத்து நிலவாகத் திகழ்ந்தார் தமிழவேள். அவரை நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நிலாவாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

''அவரது தொண்டு எல்லாமே பொதுத் தொண்டுதான். அது தனி ஒருவருக்காக எழுந்தது அல்ல. கல்விக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்தார். கூட்டுறவுப் பதிப்பகம் ஒன்றினையும் அவர் தொடங்கினார்.''

அடுத்து, 'நாவலர் ந.மு.வே. அவர்களின் தமிழ்ப்பணி' குறித்து உரையாற்றிய டாக்டர் சு. சிவகாமி சுந்தரி தெரிவித்தார்:

''ந.மு.வே. அவர்கள் நூலாசிரியர், கட்டுரை ஆசிரியர், பதிப்பாசிரியர், பெரிய பேச்சாளர் என்பதைவிட, இன்று நமக்கு என்ன வேண்டும் என்பதை அன்றே தொட்டுக் காட்டிச் சென்றிருக்கிறார். படிப்பு முக்கியம் என்பதை அவர் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். எப்படிக் கற்க வேண்டும் என்பதில் அவர் மாறுபடுகிறார். ஆழமாக-அகலமாகக் கற்கவேண்டும் என்றெல்லாம் சொல்லாமல், தாய்மொழி மூலமாகப் படிக்க வேண்டும் என்கிறார்.''

'தமிழவேள் அவர்களின் தமிழ்த்தொண்டு' என்ற தலைப்பில் உரையாற்றிய தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் அவ்வை து. நடராசன் தெரிவித்தார்:

''ஐங்குறுநாறு மருதப்பகுதிக்கு உரை எழுதப்பட்ட காலத்தில் உரை எழுதக்கூடாது என்று ஒருவர் வழக்குத் தொடுத்தார். இதை அறிந்த தமிழவேள் அவர்கள், வழக்கு மன்றத்திற்கு ஒரு விடை எழுதி அனுப்பினார். அதனை வழக்கு மன்றம் ஏற்றுக் கொண்டது. அதன்பிறகு பலர் பழைய இலக்கியங்களுக்கு உரை எழுத முடிந்தது. தமிழவேள் இயக்கமாகத் திகழ்ந்தார். ந.மு.வே. இலக்கியமாக விளங்கினார். பல்லாவற்றாலும் தமிழை வளர்ப்பதையும் காப்பதையும் பெரும் பணிகளாகக் கொண்டு வாழ்ந்தவர் தமிழவேள்''

அடுத்து, 'தமிழவேள் அவர்களின் பெருவாழ்வு' என்னும் தலைப்பில் உரையாற்றிய டாக்டர் மெ. சுந்தரம் குறிப்பிட்டார்:

''1938 ஆம் ஆண்டு தமிழ் இலக்கிய உலகில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டு ஆகும். அந்த ஆண்டில்தான் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவானது. உமாமகேசுவரனாருக்குத் தமிழவேள் பட்டம் வழங்கப் பெற்றது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா கொண்டாடப் பெற்றது. உமாமகேசுவரனார் ஸ்ரீ என்பதை நீக்கி 'திரு' என்று குறிப்பிட்டார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் திருவாளர் சங்கம் என்று சிலர் கேலி பேசியதும் உண்டு. தமிழவேள் ஊட்டிய தமிழ் உணர்வு ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி வளர்க''

அடுத்து 'நாவலர் ந.மு.வே. அவர்களின் பெருவாழ்வு' என்னும் பொருளில் உரையாற்றிய பேராசிரியர் கோதண்டபாணி தெரிவித்ததாவது:

''ஒரு பல்கலைக் கழகம் ஆற்ற வேண்டிய பணியினைத் தாம் ஒருவராகவே நடத்தி வந்திருக்கிறார். நல்ல பண்புகள் கொண்டு விளங்கினார். 1933— ஆம் ஆண்டே சென்னைப் பல்கலைக் கழகத்தின் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றியிருக்கிறார். நக்கீரர், கபிலர் ஆகியோரின் வரலாற்றை நூலாக எழுதியுள்ளார். சைவமும் தமிழும் வாழத் தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டார்.''

அடுத்து 'நாவலர் ந.மு.வே. அவர்களின் உரைத்திறன்' என்ற பொருளில் உரையாற்றிய பேராசிரியர் அ. வெள்ளைவாரணனார் தெரிவித்தார்:

நீதி நூல்களுக்கும் திருவிளையாடற்புராணத்துக்கும், சிலப்பதிகாரத்துக்கும் அகநானூற்றுக்கும் மணிமேகலைக்கும் அவர் உரை எழுதியிருக்கிறார். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் கலைகளைக் கற்கவேண்டும் என்று அவர் நினைத்ததன் பயன்தான் இன்று நாம் அனுபவிக்கும் உயர்வு.

தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு த.பெரியாண்டவன் நன்றி நவில - கருத்தரங்க நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் 5 மணி அளவில் பாவலரேறு ச.பாலசுந்தரம் வரவேற்புக் கவிதை வாசிக்க, உவமைக் கவிஞர் சுரதா தலைமை ஏற்க, கவிஅரங்க நிகழ்ச்சி தொடங்கியது: புலவர் தொல்காப்பியன், புலவர் அரங்க அறமன்னர், புலவர் கங்கை மணிமாறன் ஆகியோர் தமிழவேளின் பெருமை குறித்தும் புலவர் புலமை வேங்கடாசலம், புலவர் வை.கண்ணபுரக் கண்ணன், புலவர் தே.சந்திரன் ஆகியோர் நாவலர் ந.மு.வே. அவர்களின் புகழ்ச்சரிதம் குறித்தும் தத்தம் கவிதைகளை அரங்கேற்றினர்.



கருத்தரங்கத் தலைவர்

பின்னர், உவமைக் கவிஞர் சுரதா - தமிழவேள் குறித்துச் சொற்பொழிவாற்றினார். அப்போது அவர் பல அரிய தகவல்களைத் தெரிவித்தார். அவை வருமாறு:

''1917 ஆம் ஆண்டிலேயே தன் வரலாறு எழுதினார் தமிழவேள் உமாமகேசுவரனார். 'நீராரும் கடலுடுத்த' என்னும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை அக்காலத்திலேயே சிறுநூலாக வெளியிட்டிருக்கிறார். தமிழவேள் -நாட்டார் இருவரின் புகைப்படங்களையும், இந்தக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியில் பயின்றவர்கள் தம்மிடம் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.''



கவிஅரங்கத் தலைவர்

பின்னர் பேசிய, டாக்டர் வே. காத்தையன் குறிப்பிட்டதாவது: ''நாட்டார், உழைப்பால் உயர்ந்தவர். அவரது நல்ல தொண்டு நாட்டுக்குப் பயன்பட வழிவகுத்துக் கொடுத்தவர் தமிழவேள். இருவரும் முறையே கபிலரும் பாரியும் போல விளங்கினர். ஔவையாரையும் அஞ்சியையும் போல வாழ்ந்தனர்''.

மாலை 6 மணி அளவில் நிறைவு விழா தொடங்கியது. தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு சு. செல்லப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இந்தத் தஞ்சையின் பெருமைக்குக் காரணம், வானம் பொய்ப்பினும் தான் பொய்யாக் கடற்பரப்பன்ன காவிரி மட்டுமன்று, தமிழவேள் உமாமகேசுவரனார்— நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய பெரும் சான்றோர்கள் தோன்றியதுதான்''

அடுத்துப் பேசிய கரந்தைத் தமிழ்க் கல்லூரி முதல்வர் பி. விருத்தாசலம் குறிப்பிட்டார்:

''இரு பெரும் புலவர்களுக்கு விழா எடுப்பதன் மூலம் தமிழர் நன்றி மறவாதவர்கள் என்பது விளங்குகிறது. உலகம் வாழத் தன்னை அழித்துக் கொண்ட சான்றோர்கள் அவர்கள். அதனால் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் நிறைந்திருக்கின்றனர். பதவியைப் பெரிதாகக் கருதவில்லை தமிழவேள். அதேபோல் ந.மு.வேங்கடசாமி அவர்கள் 4 ஆண்டுகள் ஊதியம் பெறாமல் தமிழ்க் கல்லூரியில் ஆசிரியர்




# கான்ரான்ஸ்மித் சாலையில்...

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் கோபாலபுரம், கான்ரான்ஸ்மித் சாலையில் புதிதாக நிறுவியுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவு தானியங்கி பால் வழங்கு நிலையத் திறப்பு விழாவும், தமிழ்நாடு அரசின் சார்பில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியினால் கடன் உதவிவழங்கு விழாவும் சென்னை கோபாலபுரம் மாநகராட்சி பள்ளி விளையாட்டு மைதானத்தில் 22.4.'84 அன்று நடைபெற்றன.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

காவல்துறை இயக்குநர் திரு க.இராதாகிருஷ்ணன் இ.கா.ப. அவர்கள் கொச்சின் இல்லம் பால் வழங்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி உரையாற்றினார்.

இரண்டாம் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி இ.ஆ.ப., ஆணையர் மற்றும் செயலாளர் (நிதி நிறுவனங்கள் துறை) திரு வி.சுந்தரம் இ.ஆ.ப., இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உதவிப் பொது மேலாளர் திரு கே. எம். நாராயணன், செங்கற்பட்டு மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே.பாலாஜி, பெரியார் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு கே. ஏ. செங்கோட்டையன் எம்.எல்.ஏ., திரு.பா. சுங்கமுத்து எம்.எல்.சி, திரு ஜேப்பியார் எம்.எல்.சி., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப., அவர்கள் தலைமை உரையாற்றுகையில், "இந்த விழாவில் இருபெரும் காரியங்கள் நடைபெற்றுள்ளன. குஜராத்தில் பால் உற்பத்திபற்றி அறிந்துவந்தார்கள். அதன் அடிப்படையில் புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் பால் உற்பத்தி சிறந்து விளங்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவன இலாகா மூலம் உங்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருகிறது. **கடந்த ஆறு மாதங்களில் ஏறத்தாழ 3.5 இலட்சம் பேர் பயன் பெற்றனர்** பயன்பெற்றவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் இட்லிக்கடை, கட்

பீஸ் கடை, மீன்வியாபாரம், பூ வியாபாரம் செய்வோர். மேலும் 5 லட்சம் பேருக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

விழாவினைத் தொடங்கி வைத்து, நலிந்தோருக்கு உதவிகள் வழங்கி மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உரையாற்றுகையில்,

"இன்று தொடங்கப்படும் தானியங்கி26வது நிலையமாகும். இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மேலும் 14 தானியங்கி நிலையங்கள் தொடங்கப்படும். அதன் பின்னர் மாதம் 10 விதம் 100 தானியங்கி நிலையங்கள் மூலமாக 20,000 லிட்டர் பால் பெறமுடியும். இதனால் ரூ. 3 கோடி செலவாகிறது. சென்னை நகர நடுத்தர மக்கள் பலன் பெறுவார்கள்.

"சமுதாயத்தில் நலிந்தோருக்குக் கடன் உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இன்னும் 56 மாத காலத்தில் 5,000 பேருக்குக்கடன் உதவி வழங்கப்படும்" என்றார்.

கோபாலபுரம் தானியங்கி பால் வழங்கு நிலையத்தைத் திறந்து வைத்தும், அண்ணா பவள விழா நினைவினையொட்டியும், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்; "இந்த விழாவில் கலந்து கொள்வது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். ஏழை எளிய மக்களுக்கு இந்த நிறுவனம் இது போன்ற பணிகளை ஆற்றிவருவது பாராட்டத்தக்கது. சென்னைக்குத் தேவையான பால் 7.5 இலட்சம் லிட்டர். பால் நிறுவனம் சப்ளை செய்வது 4 இலட்சம் லிட்டர். சென்னை நகரத்திற்கு மட்டும் ரூ. 1 கோடி கொடுத்து கிராமங்களிலிருந்து பால் வாங்கப்படுகின்றது.

**"பால்வளத்தை வெண்மைப் புரட்சியாக மாற்றியுள்ளது இந்தத் துறை. இந்த ஆண்டில்தான் இந்த நிறுவனம் லாபம் பெற்றுள்ளது. மக்கள் தெரிந்து கொள்ளத்தான் இதுபோன்ற விழாக்கள் நடத்தப் படுகின்றன.**

"வங்கிகளின் அறைகளுக்குள் இருந்த அலுவலர்கள் இன்று அம்பலத்திற்கு வந்து மக்களுக்குக் கடன் உதவி செய்கின்றனர்.

புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தமிழகம் தான் வேலையற்றோருக்கு உதவி செய்வதில் முதன்மை வகித்துள்ளது."

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பொது மேலாளர் திரு ஆர். கோபாலன் இ.ஆ.ப., நன்றி கூறினார்.

திரு ஜி.கே.எஸ்.எம்.எல்.ஏ. அவர்களின் 'ஆவின்கதை' இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. வெண்மைப்புரட்சியை விளக்கிக் காட்டிடும் 'மந்தன்' திரைப்படக் காட்சியும் காட்டப்பட்டது.

**அ. மருது**

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள ஜவகர் சிறுவர் இல்லத்தின் சார்பில், குழந்தைகள் தின விழா 31.3.84 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடந்தது.

செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு. ஏ.பி. முத்துசாமி, இ. ஆ. ப., விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், "இந்த இல்லம் சிறந்த கலை நிறுவனமாக விளங்கிட வேண்டும் என்ற என் ஆசையைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இ.என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் கடந்த ஆண்டு நடந்த கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"பல்வேறு மாநிலங்களிலும் இந்த ஜவகர் சிறுவர் இல்லம் இயங்கி வருகின்றது. டில்லி,பெங்களூர், ஐதராபாத் ஆகிய இடங்களில் இந்த இல்லம் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. ஓவியம், கைவேலைப்பாடு முதலானவை குழந்தைகளின் அறிவை, ஆற்றலை வெளிப்படுத்த உதவுகின்றன; இந்த இல்லம் அதற்கு உதவியாக இருக்கின்றது".

விழாத் தொடக்கத்தில், ஜவகர் சிறுவர் இல்ல இயக்குநர் திரு தா.ராசம்மாள் அனைவரையும் வரவேற்றார். திரு. தி. ஒ. ரங்கநாதன் ஆண்டறிக்கை வாசித்தார். திரு. பா. விஜயகுமார் நன்றி நவின்றார்.

—பி.வி.ஜி.




ஜவகர் சிறுவர் இல்லத்தில் குழந்தைகள் தின விழா

மூன்றாவது பால்பண்ணை சென்னையின் தெற்குப் பகுதியில் அமையும்.

சென்ற ஆண்டு பால் பொருட்கள் விற்பனை ரூ. 50 கோடியாகும்.

சென்னையில் ஒருநாள் பால் விற்பனை மூலம் ரூ. 10 இலட்சம், கிராம மக்களுக்குக் கிடைக்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் பத்தாவது இடத்தில் இருந்த தமிழ்நாட்டுப் பால் உற்பத்தி இன்று நான்காவது இடத்திற்கு வந்துள்ளது.



# அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் இறால் வளர்ப்பு

மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர்

## திரு.க.கலைமணி

வளரும் தமிழகம்

நிலத்துக்கு நெல்லும் கரும்பும் அணிகலன் ஆவதைப் போல, கடலுக்கு அணிகலன் எதுவென்றால், இறால் மீன் என்று கூறலாம்.

—பொறையில்லாத அறிவும்
—கல்வி நலமில்லாப்புலமையும்
—தவழ்ந்து ஆடுகின்ற மழலைச் சேயில்லாத செல்வமும்

எவ்வாறு, இருந்தும் இல்லாதது போன்றதோ, அதே போலத்தான்,

"இறால் மீனில்லாத கடலும்"-என்று **கூறத்தக்க அளவுக்கு இறால் மீன் இன்றைய உலகில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.**

எலும்பு ஏதுமில்லாமல், மெல்லிய ஓட்டை தன் உடல் மீது போர்த்திக் கொண்டிருக்கும் இந்த இறால் மீன்களை, எந்த நாடு என்ற வேறுபாடு இன்றி, மீன் உணவு உண்போர் அனைவருமே மிகமிக விரும்பி, சுவைத்து உண்கின்றனர்.

நம் நாட்டில் கிடைக்கக் கூடிய இறால் மீன்களின் சுவைத்தன்மை, மற்றும் பெரிய அளவு காரணமாய், ஜப்பான், அமெரிக்கா முதலான வெளிநாட்டினர் மிக்க நாட்டங் கொண்டு, நல்ல விலை தருவதால், இங்கே பிடிக்கப்படும் இறால் மீன்களில் பெரும்பான்மையான அளவு, வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் அன்னியச் செலாவணியை நாம் அள்ளிக் கொண்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

அதுவும், தமிழகத்து இறால் மீன்கள் தரத்தாலும், சுவையாலும் வெளிநாட்டவரை வெகுவாகக்கவர்ந்திருக்கின்றன. அதனால்தான் இறால் மீன்பிடிப்பில் தமிழகம் நான்காவது இடத்தில் இருந்தாலும், அவற்றை ஏற்றுமதி செய்வதில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

1982-83ஆம் ஆண்டில் மட்டும் தமிழ்நாடு 2 ஆயிரத்து 827 டன் இறால் மீன்களை ஏற்றுமதி செய்து 22 கோடியே 29 இலட்ச ரூபாய்களை அன்னியச் செலாவணியாகப் பெற்றிருக்கிறது.

இறால் மீன் உற்பத்தி நாட்டின் பொருளாதார உயர்வுக்கு எப்படி உதவி செய்யும், அதைப் பெற நாம் இன்னும் இறால் மீன் உற்பத்தியை எப்படியெல்லாம் மேம்படுத்த வேண்டும் என்பதன் அவசியத்தை நமக்கு தெள்ளத்தெளிவாக இப்புள்ளிவிவரம் விளக்குகிறது.

தமிழகத்தின் கடற்கரை சுமார் ஓர் ஆயிரம் கிலோ மீட்டர் நீண்டு கிடக்கிறது. அதிலே 8 கடலோர மாவட்டங்கள் உள்ளடங்கி, அவற்றின் ஊடே ஓடுகின்ற பல ஆறுகள் கடலில் சங்கமம் ஆகின்றன.

இதனால் பற்பல முகத்துவாரங்களும், உப்புநீர் ஏரிகளும், உப்பங்கழி நீர்வழிகளும், உப்புநீர்ப்பரப்புகளுமாகக் கடலோரம் விரிந்து



பணி ஆற்றினார். தமிழவேள் அவர்கள் மனிதாபிமான உணர்ச்சிக்கு முதன்மை கொடுத்து, சட்டத்தை மீறிச் சில நற் செயல்கள் செய்திருக்கிறார்.''

மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மு. சோனைமுத்துக்கோன் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழவேள்-தமிழ் ஆட்சி மொழியாகவேண்டும் என்று விரும்பினார். அது நிறைவேறியிருக்கிறது. தமிழில் கோப்புகள் வருகின்றன; சுற்றறிக்கைகள் வருகின்றன. இவை எல்லாம் தமிழவேள் கண்ட கனவின் அடிப்படையாகும்''.

அடுத்து, டாக்டர் வ.சுப. மாணிக்கம் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''அகநானூறு, சிலப்பதிகாரம் போன்ற பெரிய நூல்களுக்கு உரை எழுதிய அவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற சிறுவர்க்குரிய நீதி நூல்களுக்கும் உரை எழுதினார். 'தையல் சொல் கேளேல்' என்னும் ஔவையின் வாக்குக்கு உரை எழுதியபோது 'பெண்களின் சொல்லைக் கேட்கவேண்டாம்' என்று எழுதாமல், 'கல்வியறிவு அற்ற பெண்களின் பேச்சைக் கேட்க வேண்டாம்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, விழாவுக்குத்தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி.சோமசுந்தரம் உரையாற்றினார். அவர் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழுடன் வடமொழியையும் கலந்து மணிப்பிரவாள நடையில் பேசுவதுதான் மதிப்பு என நினைக்கப்பட்ட காலத்தில் தனித் தமிழில் பேசிய உமாமகேசுவரனாரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

''தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் படித்தோர் என எவரையும் சொல்ல முடியாது. கடலில் குளித்தேன் என்று ஒருவர் சொன்னால், ஏதோ ஒரு பகுதியில் குளித்திருப்பார் என்றுதான் பொருள். அதனால் கடல் முழுதும் அவருக்குத் தெரியும் என்று பொருளல்ல. அதைப்போலத் தான் இலக்கியமும்.

''இதே நேரத்தில் ஆங்கிலம் ஏன் வளர்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தமிழில் பத்தாண்டுகளுக்கு முன்பு எத்தனை சொற்கள் இருந்தன? பத்தாண்டுகளுக்குப் பின்னர் எத்தனை சொற்கள் இருக்கின்றன? சொற்கள் ஏன் வழக்கொழிந்து போகின்றன? உலக வழக்குச் சொற்கள் என்னென்ன? புதிய சொற்கள் என்னென்ன? இவற்றையெல்லாம் விஞ்ஞான ஆய்வு கொண்டு பார்க்க வேண்டும். பெரும் புலவர்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும், அரசு இதற்குத் துணைபுரிய வேண்டும்.

அடுத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது உரையில் தெரிவித்தார்:

''சேரநாட்டுக் கவிஞன் காவிரியைப் போற்றினான். அந்தக் காவிரி நதிப் பகுதியில் தோன்றிய ந.மு.வே. நாட்டாரும் தமிழவேளும் காலத்தின் வரலாறாக மாறிவிட்டார்கள்.

''நமக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தமிழ் உணர்வு என்று வரும்போது அனைவரும் ஒன்று பட வேண்டும்.

''நாட்டார் அவர்கள் அகநானூறு என்னும் நூலுக்கு எழுதிய உரையில் நாட்டாரின் பண்பு நன்கு தெரிகிறது. சங்க காலத் தலைமகன் - பிறர்க்குப் பொருள் வழங்குவதற்காகத் தான் பொருளீட்டச் செல்கிறான் என்று நாட்டார் குறிப்பிடும் பாங்கு நயமானதாக உள்ளது.

''தொய்வு விழுந்த தமிழுணர்வை மீண்டும் பெறுவோமாக! வீட்டிலும் வீதியிலும் தமிழ் வளரவேண்டும்.''

விழா நிறைவுரையை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றினார். அவர் தெரிவித்தார்:

''தமிழால் வளர்ந்த நாட்டாரும் தமிழவேளும் தமிழுக்கு ஊக்கம் தந்தார்கள். ஒரே மெழுகு வர்த்தி ஆயிரம் மெழுகுவர்த்தியை எரிய வைத்து, தானும் மறைகிறது. அதுபோல ஆயிரம் பேருக்கு அறிவை ஏற்படுத்தி விட்டு அவர்கள் மறைந்தார்கள்.



''மகாத்மா என்றால் காந்தி. பெரியார் என்றால் ஈ.வே.ரா, அறிஞர் என்றால் அண்ணா. அது போல் தண்டமிழ் தவழும் பதி என்றால் அது கரந்தை; தமிழவேள் என்றால் அது உமாமகேசுவரனார்.

தமிழவேளுக்கும் நாட்டாருக்கும் இயல்பாகவே பல பொருத்தங்கள் அமைந்திருக்கின்றன.

உமாமகேசுவரனார் தமிழவேள் என்றால் நாட்டார் அவர்கள் தமிழவேல்.

உமாமகேசுவரனார் தமிழ்க் காவலர் - நாட்டார் தமிழ் நாவலர்.

உமாமகேசுவரனார் புரவலர்; நாட்டார் புலவர் பெருமான். புலவர் பலருக்கு உறுதுணையாக விளங்கியவர் தமிழவேள்; புலவர் பலரை உருவாக்கியவர் நாட்டார்.

தமிழ்ச்சுவையை நாட்டுக்கு ஊட்டியவர் தமிழவேள். தமிழுக்கே சுவையை ஊட்டியவர் நாவலர்.

நல்ல தமிழ் வளர ஊக்கம் தந்தவர் தமிழவேள்; அதற்கு ஆக்கம் தந்தவர் நாவலர்.

தூய-நல்ல தமிழை தமிழ் நாட்டினர் பயன்படுத்த வேண்டும் என்பதில் இருவரும் முனைப்பாக இருந்தனர். தமிழைச் சிதைக்காமல் பேசிவந்தனர். இருவரும் நாணயமானவர்கள் -தன்னலம் கருதாதவர்கள் - பிறர் நலம் பேணியவர்கள். தூயவாழ்க்கைக்கு இலக்கணமாக விளங்கியவர்கள்.''

தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு ஆ.மணி நன்றி நவில, இரண்டுநாள் நடைபெற்ற இரட்டையர்விழா இனிது நிறைவேறியதுடன், தமிழ் இதயங்களை எல்லாம் மகிழ்ச்சி மழையில் நனைத்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**—தமிழ்ப்பித்தன்**





# காரிருளைப் போக்கும் கறுப்புத் தங்கம்



முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், முந்திரிக் காடாக இருந்த இடம் இன்று மின் உற்பத்திக் கேந்திரமாக விளங்குகிறது. இதற்குக் காரணம், நெய்வேலியில் பூமிக்கு அடியில் புதைந்து கிடக்கும் பழுப்பு நிலக்கரியாகும்.

காரிருளைப் போக்கும் கறுப்புத் தங்கம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வந்த வயிர மணிக் குன்று என்று எப்படி வருணித்தாலும் தகும்

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் திட்டமாகும். இதுவரை ஏற்பட்டுள்ள மூலதனச் செலவு ரூ. 360.21 கோடி. இப்பொழுது உருவாக்கப்பட்டுவரும் திட்டங்களின் மதிப்பீடு 754.21 கோடி. இரண்டாவது சுரங்கம், இரண்டாவது அனல் மின் நிலையம் ஆகியவற்றுக்காகும் செலவு மதிப்பீடு ரூ. 973.72 கோடி.




குடும்ப வாழ்க்கைக்கு சம்சாரம் எப்படியோ, அப்படி நாட்டின் அனைத்து வளர்ச்சிக்கும் அடிப்படையாக மின்சாரம் விளங்குகிறது. விலை மதிப்பற்ற செல்வம் அது. நெய்வேலி, மின் உற்பத்தியில் மகத்தான தொண்டாற்றுகிறது. 1979-80-இல் தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கொடுத்த மின்சக்தி 177 கோடி யூனிட். இது 1982-83-ல் 307 கோடி யூனிட்.

மின் விற்பனை வருமானம் 1979-80-ல் ரூ. 72 கோடி. 1982-83-இல் ரூ. 143 கோடி.

பழுப்பு நிலக்கரி உற்பத்தி மிக உச்ச அளவு 65 இலட்சம் டன்தான் செய்ய முடியும். இதில் 1981-82-ல் 64.01 இலட்சம் டன் உற்பத்தி செய்து சாதனை நிகழ்த்தியுள்ளது இந்த நிறுவனம்.

லீக்கோ கரிக்கட்டி, 1982-83-ல் சுமார் 2 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உருக்காலைகளில் பயன்படுத்தப்படும் வெளிநாட்டு எண்ணெய்க்குப் பதிலாகப் பல தொழிற்சாலைகளில் லீக்கோ வெற்றிகரமாக உபயோகிக்கப்படுவதால் அந்நியச் செலாவணி மிச்சமாகிறது.

நிலக்கரிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, எரி எண்ணெய்ச் செலவைக் குறைக்க, சிமிட்டி தொழிற்சாலைகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 1981 முதல் கச்சா பழுப்பு நிலக்கரியை இந்த நிறுவனம் விற்பனை செய்யத் தொடங்கியது. 1981-82-ல் 48,700 டன்னும், 1982-83-ல், 48,000 டன்னும், 1983-84-ல் இதுவரை 62,769 டன்னும் விற்பனையாகியுள்ளது.

பிரம்மாண்டமான பள்ளங்களில் மனிதர்கள் வேலை செய்வதை மேலே இருந்து பார்க்கும்பொழுது அவர்கள் எறும்புகளைப்போல் தோன்றுகிறார்கள். ஆண்டுக்கு 35 லட்சம் டன் வெட்டியெடுக்கத் திட்டமிட்டு, படிப்படியே வளர்ச்சிக்கு வித்திட்டு, இன்று ஆண்டுக்கு 65 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுக்கிறார்கள்.

முற்றிலும் இயந்திரமயமான திறந்த வெளிச் சுரங்கம். பக்கட் வீல் எக்ஸ்கவேட்டர் தொடர்ந்து இயங்கி, நவீன - வேகமான பெல்ட் கன்வேயர்கள் மூலம் பழுப்பு நிலக்கரி வெளிக்கொணரப்படுகிறது.

பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் 11 முதல் 25 மீட்டர் கனத்துக்கு இருக்கின்றன. இவற்றை 50 முதல் 95 மீட்டர் கனத்துக்கு மண் படிவங்கள் மூடியிருக்கின்றன. மண்ணையும் அதைத் தோண்டும்பொழுது கூடவரும் தண்ணீரையும் முற்றிலும் அகற்றிய பின்னரே, பழுப்பு நிலக்கரிப் படிவங்களை எட்டி, பகுதி பகுதியாக, படிப்படியாக வெட்டியெடுக்கிறார்கள்.



நெய்வேலியில் 400 சதுர மீட்டர் பரப்பில் 33,000 லட்சம் டன் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இருக்கின்றன. இதில் 15 சதுர கிலோ மீட்டர் பரப்பில், 2,300 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுக்க முதலாவது சுரங்கம் தோண்டப்பட்டது.

இதுவரை 7,000 லட்சம் டன் மண் தோண்டி அகற்றப்பட்டு, 700 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. இப்படி நிலக்கரி வெட்டியெடுப்பதை அபாயமில்லாமல் செய்ய, நிலத்தடி நீர் 12,000 லட்சம் டன் வெளியேற்றப்பட்டிருக்கிறது.

இப்பொழுது வேலை நடந்து வரும் இரண்டாவது சுரங்கம் 26 சதுர கிலோ மீட்டர் பரப்பில் உள்ள 3,810 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பதை நோக்கமாகக் கொண்டது. இந்தச் சுரங்கப் பகுதியில் 8-20 மீட்டர் கனத்துக்கு, 50-102 மீட்டர் ஆழத்தில் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இருக்கின்றன.

இரண்டாவது சுரங்கத்தின் முதல் கட்டத்தில் ஆண்டுக்கு 47 லட்சம் டன்னும், இரண்டாவது கட்டத்தில் 105 லட்சம் டன்னும் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும்.

மூன்றாவது சுரங்கம் தோண்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன் பேணுவதில் ஒரு தொழிலதிபர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு நெய்வேலி நிறுவனம் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. ஒரு தொழிலாளிக்கு, நகரியத்தின் பராமரிப்புக்கு ரூ. 1986, மருத்துவ மனைக்கு ரூ. 628, கல்விக்கு ரூ. 195, போக்குவரத்துக்கு ரூ. 186, கேன்டீனுக்கு ரூ. 237, நூலகத்துக்கு ரூ. 11, கலாசார நடவடிக்கைகளுக்கு ரூ. 10 ஆக மொத்தம் 3,253 ரூபாயை இந்நிறுவனம் 1982-83-ல் செலவிட்டிருக்கிறது.

நெய்வேலி நகரியத்தில் மொத்தம் 32,000 மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்காக 30 பள்ளிகள் உள்ளன. இவற்றில் 17 நெய்வேலி நிறுவனத்தால் நடத்தப்படுகின்றன.

ஏழை மாணவர்களுக்கு இரண்டு செட் உடைகளை இலவசமாகவும், ஓரளவு வசதியானவர்களுக்குப் பாதி விலையிலும் நிறுவனம் வழங்குகிறது. ஏராளமான உபகாரச் சம்பள வசதிகளும் உள்ளன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன நகரியம் 34 சதுரகிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் 13,400-க்கும் அதிகமான வீடுகள்; 292 கி.மீ. ரோடுகள்; 60 சதவீதம் பேர் வீட்டு வசதி பெற்றுள்ளனர். மேலும் அதிக மானவர்களுக்கு வீடு கட்டித்தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**—முத்துக்காளத்தி**






# முதுமலையில் இளைஞர்விடுதி

மூன்று மாநிலங்கள் முத்தமிடும் பகுதியில் அமைந்துள்ள முதுமலை வன விலங்கு சரணாலயம் தமிழகத்திற்குச் சிறப்பான பெருமை சேர்க்கின்றது.

மலைகளின் ராணி எனப் புகழ் பெற்று விளங்கும் உதகமண்டலத்திலிருந்து முதுமலை 65 கி.மீ. தொலைவில் உள்ளது. மலைச் சரிவுப்பாதை வழியான கல்லட்டி வழியாகச் சென்றால் முதுமலைக்கு 36 கி. மீ. கடந்து சென்று அடையலாம்.

முதுமலை வனவிலங்கு சரணாலயத்தின் மையப்பகுதியான ''தெப்பக்காடு'' என்ற இடத்தில்தான் வனத்துறையினரின் யானைகள் முகாம் உள்ளது. இங்கு வளர்க்கப்படும் யானைகள் மூலம் உல்லாசப் பயணிகள் சவாரி செய்து, சுதந்திரமாகச் சுற்றித்திரியும் வனவிலங்குகளைக் கண்டு களிக்கும் வாய்ப்பு உள்ளது.

முதுமலையைக் காணவரும் உல்லாசப் பயணிகள் தங்கி மகிழ வனத்துறை சார்பில் தங்கும் விடுதிகள் கார்குடி, தெப்பக்காடு அபயாரண்யம், மசினகுடி ஆகிய இடங்களில் உள்ளன.

இவ்வளவு இடங்கள் இருந்தும் உல்லாசப்பயணிகளுக்குப் போதுமான தங்குமிட வசதி, பற்றாக்குறையாக இருந்தது. இந்தக் குறையைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், நடுத்தர மக்களும் மலிவு வாடகையில் தங்கி மகிழ, ரூபாய் 15 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் இளைஞர் விடுதி தெப்பக்காடு இயற்கையெழில் சூழ்ந்த காட்டுப்பகுதியினுள் கட்டப்பட்டுள்ளது.

இந்த இளைஞர் விடுதியில் 32 படுக்கை வசதிகள் கொண்ட மூன்று கட்டடங்கள் உள்ளன. இங்கு தங்கும் உல்லாசப் பயணிகளுக்காக நவீன உணவு விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இளைஞர் விடுதியில் படுக்கை ஒன்றுக்கு ஒரு நாள் கட்டணம் ரூ. 7.50 மட்டுமே.

இந்த இளைஞர் விடுதியின் திறப்பு விழா தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தலைவர் திரு கே. பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

மாண்புமிகு செய்தி-சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார். மக்கள் பிரதிநிதிகள், மாவட்டஆட்சி தலைவர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஏராளமாகக் கலந்து கொண்டனர்

கடந்த ஆண்டு முதுமலையை 32 ஆயிரம் உல்லாசப் பயணிகள் கண்டு களித்தார்கள் இதில் ஆயிரத்து 496 உல்லாசப் பயணிகள் வெளி நாட்டவர்கள்

**— கிருபால்தாஸ் ஜான்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**நீலகிரி மாவட்டம்.**



# சிந்தை கவரும் கைத்தறிச் சந்தை!

பார்புகழும் ஈரோட்டில் பார்க்கலாம் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் கைத்தறித்துணிச் சந்தையை. இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அதிசயச் சந்தை கைத்தறித் துணிச்சந்தை. ஆம்; சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிக்குச் சிறப்பூட்டும் சந்தை இது.

ஈரோடு நகரத்தில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை இரவு 2 மணியிலிருந்து புதன் கிழமை மாலை வரை சில பகுதிகளில் மக்கள் எறும்பு போல் சுறுசுறுப்பாக இயக்குகிறார்களென்றால் அதற்குக் காரணம் இந்தக் கைத்தறிச் சந்தைதான்.

நகரின் மையப் பகுதியான பிரப் ரோடு, ஈஸ்வரன்கோயில் வீதி, திருவேங்கடம் தெரு, சொக்கநாதன் வீதி, ஆர். கே. வி. ரோடு ஆகிய பகுதிகளில் சாலையின் இருபுறமும் பல தரப்பட்ட கைத்தறி வேட்டி, சேலை, கைலிகள், துண்டு, போர்வை, ஜமுக்காளம் போன்ற துணிகளுடன் கூடிய சுமார் 2,000 கடைகள் சந்தையில் போடப்படுகின்றன. இச் சந்தைக்குத் தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களிலிருந்தும் துணிகள் வருகின்றன. குறிப்பாக சேலம், அம்மாபேட்டை, காஞ்சிபுரம், அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர், ராஜபாளையம், பரமக்குடி, குறிஞ்சிப்பாடி, கூனூர், பல்லடம் பகுதிகளிலிருந்து வியாபாரிகள் ஆங்காங்கே தயாரிக்கப்படுகின்ற பலரகக் கைத்தறித் துணிகளைச் சந்தைக்குக் கொண்டு வருகின்றனர்.

இச்சந்தைக்கு வெளிமாநிலங்களிலிருந்து வரும் வியாபாரிகள் எண்ணிக்கை மட்டும் ஒவ்வொரு வாரத்திற்கும் சுமார் 2,500 இருக்கலாம். பம்பாய், கல்கத்தா, அசாம், ஒரிசா, ராஜஸ்தான், கர்நாடகம், கேரளம், ஆந்திரா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்தும் அவர்கள் வாரந்தோறும் இங்கு வருகின்றனர். இது தவிர தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதியிலிருந்தும் வருவோர் சுமார் 500 பேர்.

சுமார் 2 கோடி ரூபாய்வரை வாரந்தோறும் வியாபாரம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில், குறிப்பாக, மாதத்தின் இரண்டாம் பகுதியில் கூடும் சந்தையில் தான் அதிக வியாபாரம் ஆகிறது என அனைத்துக் கடைக்காரர்களும் கூறுகின்றனர்.

அச்சந்தையில் விற்கப்படும் துணிகளை 'பண்டல்' போடும் தொழில் செய்வதற்கு மட்டும் இங்கே சுமார் 40 கடைகள் உள்ளன. ஒவ்வொரு கடையிலும் வியாபாரிகள் வரிசையில் நின்று தான் பண்டல் போட ஆர்டர் கொடுக்கின்றனர். பண்டல் போடும் தொழிலில் மட்டும் சுமார் 500 நபர், வருமானம் பெறுகின்றனர். ஒருவர் ஒரு நாளைக்குக் குறைந்தது ரூ. 50 வரை வருமானம் பெறுகின்றனர். கட்டை வண்டி இழுக்கும் தொழிலாளிகள் நிறைந்தது ஈரோடு நகர். அவர்களே இதனால் சராசரி ரூ. 25 வருமானம் பெறுகின்றனர் ஒரு நாளைக்கு.

இதைப் போல், சந்தையிலே துணிக்கடை வைத்திருப்பவர்கள் ஒரு கடைக்குக் குறைந்தது 4 நபர்கள் வீதம் உள்ளனர். காவலர் துணிகள் கூட்டத்தில் தொலைந்து போகாமல் இருப்பதற்கும், மாறாமல் இருப்பதற்கும் என்று கூறப்படுகிறது.

இந்த ஈரோடு கைத்தறிச் சந்தை அதிவேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இதற்கு முன்பு சுமார் 100 அல்லது 200 கடைகள் மட்டும் கொண்டிருந்த இந்தச் சந்தை இன்று 2000 கடைகளுடன் சிறக்கின்றது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இக்கடைகளில் வியாபாரிகள் சில வியாபார யுக்திகளைக் கையாளுகின்றனர். சில மாட்டுச் சந்தைகளிலே மாட்டின் விலையை நேரிடையாகக் கூற மாட்டார்கள்; கைமேல் துண்டைப் போட்டு விரல்களினால் வெளியே தெரியாமல் விலையை நிர்ணயிப்பர்; அதுபோல இல்லாமல் 'சாமி, சாமி, சரிசாமி, ஆமாம் சாமி' என்று ஓர் நூதன யுக்தியைக் கையாளுகிறார்கள் இவர்கள். இது ஓர் புதுமை!

ஈரோட்டுக் கைலிகள் புகழ் பெற்றவை. இங்குதான் பூப் போட்ட கைலிகள் பாத்திக் பிரிண்டிங்கில் செய்யப்படுகின்றன. அதாவது 'பார்த்திக்' என்பது இந்தோனேசியன் சொல். 'பாத்திக்' என்பதற்குப் பொருள் சில துளிகள் (some drops) என்று பொருளாம். வெளி மாநிலத்தில் இதற்கு அதிக மார்க்கெட் உள்ளது. இதே போல் ஸ்கிரீன் பிரிண்டிங் பல வண்ணப் பூக்களால் அச்சிடப்பட்ட சேலைகள், கைலிகள் தயாரிக்கப்பட்டு இந்தச் சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன.

**-நா. தில்லைகோவிந்தன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்.**
**பெரியார் மாவட்டம்.**

கிடக்கிறது. இவையன்றி கடற்கரையை ஒட்டிய தாழ்வான நீர்ப்பரப்புகளும் உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 56 ஆயிரம் எக்டேர் கழிமுகப் பகுதியும் 15 ஆயிரம் எக்டேர் கடற்கரையை ஒட்டிய தாழ்வான பகுதியும் இருக்கின்றன. ஆனால் இறால் மீன் வளர்ப்புக்கு உகந்ததாய் இருக்கும் நீர்ப்பரப்பு 16 ஆயிரம் எக்டேர்தான்.

இயற்கையான உற்பத்தியிலிருந்து இறால் மீன் பிடிக்கப்பட்டால், ஆண்டுக்கு ஒரு எக்டேருக்கு 40 கிலோ முதல் 50 கிலோ வரை தேறுகிறது. ஆனால் புதிய முறையில், பண்ணைகளில் உரிய வழிவகைகளைக் கையாண்டு இறால் வளர்த்தால் ஒரு எக்டேருக்கு 600 முதல் 1,500 கிலோ வரை உற்பத்தி செய்யலாம் என நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதை நன்கறிந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள், தமிழகத்திலுள்ள இறால் மீன் உற்பத்தி ஆய்வுப் பண்ணைகளுக்கு நல்ல ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்றார்.

ஏழை எளிய மீனவர்களும் வர்த்தக ரீதியில் இறால் மீன் வளர்த்துப் பயன் பெற வேண்டும்; அதற்கு இந்த ஆய்வுப்பண்ணைகளில் நடக்கும் புதிய புதிய ஆராய்ச்சியும் அதன் பலன்களும் உதவிட வேண்டும் என்பதில் தமிழக அரசு பேரார்வம் காட்டிச்செயலாற்றி வருகிறது.

கடற்கரை ஓரங்களில் பண்ணைகள் அமைத்து, மீன் வளர்ப்பதில் இந்தியாவுக்கே தமிழகம்தான் முன்னோடியாய் இருந்திருக்கிறது என்று கூடக் கூறலாம். இப்படி மீன் வளர்க்கும் முறை தமிழகத்தில் 1940ஆம் ஆண்டு முதலே செயல்படத் தொடங்கி விட்டது.

தற்போது, சென்னை-சாந்தோம்

குமரி மாவட்டம்-மணக்குடி

தென்ஆர்க்காடு மாவட்டம்-மரக்காணம், பரங்கிப்பேட்டை

சென்னை அருகே-கோவளம், பழவேற்காடு,

ஆகிய உவர்நீர்ப்பகுதிகளில் இறால் மீன் உற்பத்தி ஆராய்ச்சிப் பண்ணைகள் இயங்கி வருகின்றன.

சென்னை சாந்தோமில் அமைந்துள்ள இறால் மீன் உற்பத்தி மாதிரி விளக்கப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, ஒரு எக்டேருக்கு 1,500 கிலோ வரை இறால் மற்றும் பால்கெண்டை உற்பத்தி செய்யலாம் என நிரூபித்து, இறால் மீன் வளர்ப்பை முறையோடு செய்தால், வர்த்தக ரீதியில் பெரும் இலாபம் ஈட்டலாம் என, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியது.

இதனைத்தொடர்ந்து, தென் ஆர்க்காடு மாவட்டம் சிதம்பரம் அருகே, பிச்சாவரம் கழிமுகப்பகுதியான கிள்ளையில், தமிழக அரசு, முன்னோடித் திட்டமாக 16 லட்ச ரூபாய் செலவில் இறால் வளர்ப்புப் பண்ணையை ஆரம்பித்துள்ளது.



இத்திட்டத்தை விரிவாக்கவும், மீன், இறால் வளர்ப்பில் நாட்டமுள்ளோர் பயன் பெறவும், தமிழ்நாட்டில் கடலோரப்பகுதிகளில் 10 இடங்களில் செயல்முறை விளக்க இறால் வளர்ப்புப் பண்ணைகளைத் தமிழக அரசு அமைத்திருக்கிறது.

—தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பரங்கிப்பேட்டை,

—செங்கை மாவட்டத்தில் பழவேற்காடு, வாணியஞ்சாவடி,

—தஞ்சை மாவட்டத்தில் தொண்டிக்காடு, ஏரிப்புறக்கரை,

—இராமநாதபுரம் மாவட்டம் காரங்காடு, கன்னாமுனை,

—திருநெல்வேலி மாவட்டம் கீழவைப்பார், புன்னக்காயல்,

—மற்றும் புதுக்கோட்டை ஆகிய 10 இடங்களில் ரூபாய் 7 லட்சத்து 50 ஆயிரம் செலவில் செயல்முறை விளக்க இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்துச்செயற்படுத்தப் படுகின்றன.

இதனால் அந்தந்த மாவட்டங்களின் சூழ்நிலைக்கு ஏற்ப உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இறால் மீன் வளர்ப்பின் முறையான தொழில் நுட்பத்தை, மீனவ மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்: அவர்கள் தாமாகவே முன்வந்து, இறால் மீன் பண்ணைகள் அமைத்து, முன்னேற வேண்டும். இதன் மூலம் அன்னியச்செலாவணி கிடைப்பதோடு, வேலை வாய்ப்பும் உருவாக்கப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படைதான், இந்த முன்னோடித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இறால் மீன் வளர்ப்பது என்பது, மற்ற மீன் வளர்ப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். ஏனெனில், இறால் மீன் வளர்ப்பு பண்ணையை அமைக்கும்போது, அறிவியலின் அடிப்படையில் செயல்பட வேண்டியதாக இருக்கிறது.

இப்பண்ணையைப் பராமரிக்கும் அலுவலர்கள், பண்ணை அமையும் இடம், அமைக்கும் முறை, பேணும் முறை, தேர்ந்த கருப்பு மற்றும் வெள்ளை இறால் நுண்குஞ்சுகளைச் சேகரம் செய்யும் முறை, வளர்க்கும் முறை, முதலான உரிய ஆலோசனைகளை வேண்டியவர்க்கு வழங்குவார்கள்.

நன்கு பராமரித்த குளங்களில், சாதாரணமாய் ஒரு எக்டேரில் ஒரு அறுவடையில் 300லிருந்து 500 கிலோ வரை அறுவடை செய்யலாம். இவ்வாறு ஒரு குளத்தில் ஆண்டுக்கு இரண்டு அறுவடை மேற்கொள்ளலாம். இந்த இரண்டு அறுவடைகளையும் சேர்த்து, முதலீடு மற்றும் நடைமுறைச் செலவுகளைக் கணக்கிடுகையில் ஆண்டுக்கு ஒரு எக்டேரில் நிகர லாபம் காண முடியும்.

கடல் இறால்களை மட்டுமின்றி, நன்னீர் இறால்களை எல்லாக் கண்மாய்களிலும், குளங்களிலும் வளர்த்து உற்பத்தியைப்பெருக்கவும் தமிழக அரசு தீவிரத் திட்டம் தயாரித்து செயல்படுத்தி வருகிறது.

இறால் மீன்கள் மிகுந்த இலாபத்தை ஈட்டித் தருவதை எண்ணி, நாட்டுப் படகுகளும், விசைப்படகுகளும் இறால் மீன்களைப் பிடிப்பதிலேயே மிக முனைப்பாகத் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் கடலில் இறால் வளம் குறையும் அபாயம் கூடவே வருகின்றது.

எனவே, மீன் வேட்டையாடும் நிலையிலிருந்து மீனவர்களை மாற்றி, இறால் மீன் வளர்ப்பை ஒரு தொழிலாக மேற்கொள்ளும் வகையில் அவர்களை உருவாக்க வேண்டும் என்று, டாக்டர் புரட்சித் தலைவரின் சீரிய தலைமையில் செயல்படும் இந்த அரசு ஆர்வம் காட்டி வருகின்றது. ஆய்வுப் பணிகளைத் தீவிரப் படுத்துகின்றது.

இறால் மீன் வளர்ப்புக்கு ஏற்ற வகையிலுள்ள 16 ஆயிரம் எக்டேர் நீர்ப்பரப்பையும் முழுமையாகப் பயன்படுத்தி, பண்ணைகள் உருவாக்குவோமேயானால் 16 ஆயிரம் டன் இறால் மீன் உற்பத்தி செய்யும் உன்னத நிலையை உருவாக்கலாம். நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அன்னியச் செலாவணியை அள்ளிக் கொள்ளலாம்.

இதற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் தீட்டும் தமிழக அரசுக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவருக்கு, மீனவப் பெருமக்கள் உறுதுணையாக இருப்போம்.

இறால் வளர்ப்போம் ! இந்நாட்டின் வளங்குவிப்போம்!

(1.4.84 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை)



# பெரியார் மாவட்டத்தில் மின்சாரம்

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், மின் துறையின் முக்கியக் கேந்திரமாக விளங்குவது பெரியார் மாவட்டம்.

1980க்குப் பிறகு இன்று வரை மட்டும் இங்கே துணை மின் நிலையங்கள் 7 நிறுவப்பட்டுள்ளன. கடந்த நான்காண்டுகளில் கூடுதல் மின்சக்தி இணைப்புகள் 76.222 கிலோ மீட்டருக்குப் போடப்பட்டுள்ளன. உயர் மின் அழுத்த மின்சக்தி 523.302 கிலோ மீட்டருக்குப் போடப்பட்டிருக்கின்றன.

பெரியார் மாவட்டத்தில், குடிநீர் வசதிக்காக மட்டுமே 241 ஸ்பேஸ்களுக்கு மின் சக்தி தரப்பட்டுள்ளது.

1979ல் பெரியார் மாவட்டம் தனியே பிரிக்கப்பட்டது முதல் இன்றுவரை 11,303 குடிசைகளுக்கு 40 இலட்சம் ரூபாய் செலவில் மின்னொளி வழங்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருமக்களின் நலன் கருதி 4509 பம்புகளுக்கு மின் இணைப்புத் தந்திருக்கிறார்கள் இங்கே!

தமிழ்நாட்டின் மின்சார விநியோகத்தை மாநிலம் முழுமைக்கும் அளிக்கும் தலைமை மின் கட்டுப்பாட்டு நிலையம் ஈரோட்டிலே தான் அமைந்திருக்கிறது. மின் கிடங்கில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் மின்சாரமே பெரியார் மாவட்டம் முழுமைக்கும் பரவலாக்கப்படுகிறது.

இங்கே செயல்படும் மின் கட்டுப்பாட்டு நிலையம்-கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பிறமாநில மின் விநியோக நிலையங்களுடன் இணைந்து செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.







# நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை!

எஸ். பாலகிருஷ்ணன்
**உதவி இயக்குநர்,**
**கைத்தறி மற்றும் துணி நூல் துறை**
**பெரியார் மாவட்டம்.**

**கை**த்தறித் தொழில் கிராமப் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியப் பங்கு வகிக்கின்றது.

தமிழகத்தில் சுமார் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கி 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் அவர்களைச் சார்ந்துள்ள 30 இலட்சம் நபர்களுக்கு வாழ்வையும் அளிக்கிறது. தந்தை பெரியாரின் பெயரைக் கொண்ட இம் மாவட்டத்தில் உள்ள கைத் தறிகள் எண்ணிக்கை மட்டும் சுமார் 60,000 ஆகும். இதில் 184 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 42,000 தறிகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

இத்தறிகளை இயக்குவதற்குத் தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மாதந்தோறும் 1,500 நூல் பேல்களை விநியோகம் செய்து வருகின்றது. இந்த 184 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ. 840 இலட்சம் அளவிற்கு மூலதனக் கடனை வழங்கியுள்ளது. இச் சங்கங்கள் மாதம் ரூ 180 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து வருகின்றன.

பெரியார் மாவட்டத்திலுள்ள இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நேர்த்தியான பெட்ஷீட்டுகள், வண்ணத் துண்டு ரகங்கள், தலையணை உறைகள், அலங்கார விரிப்பு ரகங்கள், சேலை ரகங்கள், ஜமுக்காளங்கள், லுங்கிகள், பாலியஸ்டர் சர்டிங் மற்றும் சூட்டிங் ரகங்கள் போன்றவை சிறப்புறத் தயாரிக்கப்படுகின்றன.

நெசவாளர்களுக்கு நியாயமான ஊதியமும் தொடர்ச்சியான வேலைவாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும் என்ற முக்கிய நோக்குடன் அதிகப்படியான நெசவாளர்களைத் தமிழகஅரசு கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வந்து, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

செயல்படாமல் இருக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் செயல்படச் செய்து, வேலை செய்யாத தறிகளை இயங்க வைப்பது; தமிழகத்தில் நெசவாளர் நிறைந்த பகுதிகளில் புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துதல்; புதிதாகத் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவைகளில் தறி இல்லாத நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பளித்தல்; நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்தல் போன்றவை அத்திட்டங்களில் குறிப்பிடத்தக்கவைகளாகும். மற்றும் பல திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

பங்குத் தொகைக் கடன் திட்டத்தின்கீழ் நெசவாளர் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர அதிகபட்சம் ரூ. 180 கடனாக வழங்கி, 4 சம தவணைகளில் வசூல் செய்யப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இம் மாவட்டத்தில் ரூ. 20,25,000 அரசு கடனுதவியாக வழங்கியுள்ளது.

அரசு பங்கு மூலதனத் திட்டத்தின்படி தமிழக அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு மூலதனம் செய்து அதன் மூலம் சங்கத்தின் நிதிவளத்தை அதிகரிக்கச் செய்கின்றது. தமிழ்நாடு அரசு பெரியார் மாவட்டத்திலுள்ள சுமார் 145 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 33,02,000 முதலீடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்படி குழித்தறிகளைச் சட்டத் தறிகளாக மாற்றவும் ஏற்கெனவே உள்ள சட்டத் தறிகளில் நவீன யுக்திகளை ஏற்படுத்தவும் கடன் மற்றும் மான்யம் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் ரூ. 10,39 000 கடன் மற்றும் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.





நெசவாளர் பயிற்சித் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் திறமைமிக்க தொழில்நுட்ப உதவியாளர்கள் மூலம் புதிய வடிவமைப்புகளில் நெய்வதற்கு உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இம் மாவட்டத்தில் ரூ.1,49,000 மான்யமாக அரசு வழங்கியுள்ளது.

நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்படி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குச் சேமிப்பு வசதியுடன் கூடிய பாதுகாப்புத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. இதன்படி சங்க உறுப்பினர் இத்திட்டத்தில் சேர்ந்து, [illegible] 6 காசு வீதமும் தமிழக அரசு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதமும் அதற்குரிய வட்டியும் [illegible]கின்றது. சங்க உறுப்பினர் திட்ட விதிகளின்படி மரணமடைய நேரிட்டால் ரூ. 3,000 ஈட்டுறுதித் தொகையாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இம்மாவட்டத்திற்கு இதுநாள் வரை தமிழக அரசு சந்தா மற்றும் வட்டித் தொகையாக ரூபாய் 26,56,000 வழங்கியுள்ளது. மேலும் 107 இறந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 1,96,650 ஈட்டுறுதித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், 1962-ம் ஆண்டிலிருந்து கைவிடப்பட்ட நெசவாளர் வீட்டுவசதித் திட்டம் 1979-ஆம் ஆண்டு முதல் புதுப்பிக்கப்பட்டு, நெசவாளர்-உறுப்பினர்கள் வீடுகள் கட்ட ரூ. 12,000 வரை கடன் மற்றும் மான்யமாக அனுமதிக்கப்படுகின்றது. இத்திட்டம் மீண்டும் அமல்படுத்தப்பட்ட பின்பு இம் மாவட்டத்தில் 399 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கைகள் உள்ளன.



தள்ளுபடி மான்ய திட்டத்தின்படி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு, அரசு தள்ளுபடிச் சலுகைகளை வழங்கி கைத்தறித் துணிகள் தேக்கம் இல்லாமல் விற்பனையாவதற்கு உதவி செய்கிறது. இத்திட்டத்தின்படி இம்மாவட்டத்திற்கு இதுவரை ரூ. 220.30 இலட்சம் மான்யமாக அரசு அனுமதித்து வழங்கியுள்ளது.

கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் தனியார் துறையில் இயங்கி வரும் கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வருவதற்கும், கைத்தறித் துணிகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. அதன்படி ஈரோட்டில் ஒரு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அது சுமார் 3,500க்கு மேம்பட்ட நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றது.

பெரியார் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை தமிழ்நாட்டுக் கூட்டுறவுத் துறையில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளையும், விசைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகளையும் சலவை மற்றும் சாயமிடுதல், மெருகேற்றுதல், அச்சிடுதல் போன்றவை செய்து அவைகளுக்கு விரைவான சந்தை ஏற்படுத்தி வருகின்றது. மேலும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு [illegible]

[illegible] சேலம், [illegible], திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றும் சுமார் ரூ. 15,00,000 முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

## மானாவாரி நிலக்கடலைக்கு உரமிடுவது லாபகரமானது

# விஜய்
# 17-17-17



மானாவாரி நிலக்கடலைக்கு சிபாரிசுப்படி உரமிட்டால்,
ஏக்கருக்கு 10 முதல் 12 மூட்டை கூடுதலாக விளைச்சல் கிடைக்கும்.
இது, பல விவசாயிகள் அனுபவத்தில் கண்ட உண்மை. விவசாய
ஆராய்ச்சிகளும்கூட இதை நிரூபிக்கின்றன.

மேலும் வறட்சியான காலத்திலும்கூட உரமிட்ட பயிர்கள்தான் அதிக மகசூல் கொடுக்கும். ஏனெனில் உரமிட்ட பயிர்களின் வேர்கள் ஆழமாகவும் பரவலாகவும் வளர்ந்து அடித்தளத்தில் உள்ள நீரை நன்ருக உறிஞ்சி எடுத்துக்கொள்ளும்.

மானாவாரி நிலக்கடலைக்குத் தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களையும் விவசாய இலாகா சிபாரிசுப்படி அடியுரமாக இட, (ஒரு ஏக்கருக்கு) விஜய் 17-17-17 உரம் 25 கிலோவும், பொட்டாஷ் 25 கிலோவும் விதைக்கும்போது இடவும். உரத்தை விதைக்குக் கீழும் பக்கத்திலும் இட்டால் உரத்தின் முழுப் பலனையும் பெறலாம்.

நிலக்கடலை சாகுபடி பற்றிய புத்தகத்தைப் பெற எங்களுக்கு எழுதுங்கள்:

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

## சமச்சீர் உரமிட
# விஜய்



MFL-1411


# புத்தாண்டில் சில புதிய வேளாண்மைத் திட்டங்கள்


**அ. வேங்கடராமன், இ.ஆ.ப.,**
**வேளாண்மைத்துறைச் செயலர்.**


தொடர்ந்து வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த தமிழகம் எதிர்பாராத விதத்தில் கடந்த டிசம்பர், பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நல்ல மழையைப் பெற்றது.

காலந்தவறிப் பெய்த மழை பயிர்களுக்குச் சேதத்தை உண்டாக்கினாலும், குளங்களை, நீர் நிலைகளை, நிலத்தடி நீரைப் பெருக்கி விட்டுச் சென்றுள்ளது. இழந்ததைப் பற்றி வருந்தி வாளா இருந்திடாமல் இருப்பதைப் பேணிக் காத்து செயலாற்றி மீண்டும் வேளாண்மையில் வளர்ச்சியைக் கண்டிட துடித்து நிற்கிறது, இன்று தமிழகம். இந்நிலையை உணர்ந்து 1984-85ம் ஆண்டுக்கு, முன்பு எப்பொழுதும் கண்டிராத வளர்ச்சிக் குறியீட்டை வகுத்துள்ளது தமிழக அரசு. நெல் வேளாண்மையில் 65 இலட்சம் டன், சிறு தானியங்களில் 30 இலட்சம் டன், பயறு வகைகளில் 5 இலட்சம் டன், பருத்தியில் 5 இலட்சம் பேல், எண்ணெய் வித்துக்களில் 14.60 இலட்சம் டன் இவை இந்த ஆண்டின் வேளாண்மை உற்பத்திக் குறியீடுகள்.





மாநில அளவில் குறியீடுகள் அமைத்துவிடலாம். அவற்றைச் செயலாக்க வேண்டிய பணி காடு கழனிகளில் நடைபெற்றிடல் வேண்டும். அதை ஊக்குவிக்கும் பொறுப்பு அரசைச் சார்ந்தது. அதற்காகக் குறியீட்டை நடைமுறையில் கொண்டு வந்திட நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற உள்ளோம். அவற்றில் தலையாயது **''எக்டேருக்கு 5 டன் மகசூல்''** என்ற திட்டம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் நெல் விளைச்சலில் எக்டேருக்குச் சுமார் 3 டன் விளைவித்து இரண்டாவது இடத்தில் நிற்கிறது தமிழகம். இங்குள்ள நீரும், நிலமும் நெல் வேளாண்மையில் அதிக மகசூல் பெற்றிட உகந்தது. ஆய்வு நிலையங்களிலும், முற்போக்கு விவசாயிகளின் நிலங்களிலும் எக்டேருக்கு 5 டன்னுக்கு அதிகமாக மகசூல் எடுக்கிறோம். ஒரு சிலரால் இத்தகைய மகசூல் பெற முடிந்தால் எல்லோராலும் எல்லா



பட்டங்களிலும் ஏன் அதிக மகசூல் எடுத்திட முடியாது? இக்கேள்விக்கு விடை அளிப்பது எக்டேருக்கு 5 டன் மகசூல் திட்டம். தெரிந்தெடுத்த இரகம், வீரிய பொறுக்கு விதை, சரியான பட்டம், வீரிய இன நாற்றுக்கள் ஆழ உழவு, சமச் சீரான அடி உரம், சரியான நடவு, சீரான தண்ணீர், நோய் நொடிகள் இவற்றிலிருந்து பாதுகாப்பு இவை நல்ல மகசூலுக்கு அடித்தளம். இம்முறைகளை மக்கள் மந்தியில் செயல் விளக்கங்கள் மூலமாகப் பரப்ப வேண்டிய நடவடிக்கைகளை இத்திட்டத்தின் வாயிலாக எடுத்து வருகின்றோம். இன்று ஆரம்பிக்கும் இத்திட்டத்தின் மூலமாக இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் எக்டேருக்கு 5 டன் நெல் விளைவிக்காத விவசாயியே இல்லை என்ற நிலையை நிச்சயமாக உருவாக்கிடவேண்டும்.

பொருளாதார மேம்பாட்டுக்கு ஆதாரம் அதிக வருவாய். அதிக வருவாய் பெற்றிட, சமுதாயம் வேளாண்மையால் நன்மை பெற்றிட, செய்தொழிலிலிருந்து அதிக மகசூல் எடுத்திடல் வேண்டும். இந்த அடிப்படைக் கொள்கையை மனத்தில் கொண்டு 'அதிக மகசூல், அதிக வருவாய், மேம்பட்ட வாழ்க்கை' என்ற ஒரு புதிய செயல் விளக்கத் திட்டத்தையும் இந்த ஆண்டு பரந்த அளவில் செயலாக்க உள்ளோம்.

500 ஏக்கர் முதல் 1,000 ஏக்கர் வரை தொடர்ந்து அமைந்துள்ள நஞ்சையிலும், புஞ்சையிலும் செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்க உள்ளோம். இவ்வாறு தெரிந்தெடுத்தப் பகுதியில் இப்பொழுது வேளாண் மக்கள் என்னென்ன பயிர்கள் பயிர் செய்கின்றார்கள்? அதற்காகும் செலவு என்ன? வரவு எவ்வளவு? எவ்வாறு பயிர்த்திட்டத்தை மாற்றி அமைந்து வரவை அதிகரித்து நல்வாழ்வு வாழ்ந்திடலாம் என்று பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு இத்திட்டத்தைச் செயலாக்க உள்ளோம். இதன்வாயிலாக புதிய முறைகளை மக்களுக்கு அறிமுகப் படுத்துவதுடன் வேளாண்மையை ஒரு தொழிலாக எவ்வாறு கணக்கிட்டு செய்திட வேண்டும், என்று எடுத்துக் காட்டுவதும் எங்கள் குறிக்கோள்.

தமிழக வேளாண்மை வளர்ந்திட வேண்டுமானால் நீர் நிர்வாகத்தில் தனிக் கவனம் தேவை. ஒரு வயலிலிருந்து மற்ற வயலுக்கு தண்ணீர், வடிகால் வசதியில்லை என்னும் நிலைமைகளைப் போக்கிடவேண்டும். பல இடங்களில் நல்ல வடிகால் வசதியில்லாததால், சரியான நீர் பராமரிப்பு இல்லாததால் நாம் எடுத்துக் கொண்ட முயற்சிக்குத் தகுந்த பலன் பெற முடியாத நிலை உள்ளது. இதைப் போக்கிட வாய்க்கால் வடிசால் வசதிகளைச் சீரமைக்கும் பணிகளைக் காவேரி, வைகை, கீழ் பவானி, சாத்தனூர் திட்டப் பகுதிகளில் இப்பொழுது செயலாற்றிக் கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு இத்திட்டங்களை விரிவாக்க உள்ளோம். இதற்காகக் காவேரியிலும், சாத்தனூர் திட்டப் பகுதிகளிலும் **புதிதாக நான்கு பொறியாளர் குழுக்களை அமைக்க உள்ளோம்.**

புஞ்சையில் கிடைக்கும் நீரை சீராகப் பயன்படுத்தி நீருக்கும்




நிலத்திற்கும் ஏற்ற பயிர்களைச் சாகுபடி செய்வதற்காகப் பல செயல் விளக்கங்களைச் செய்து காட்டுவதுடன் விதைகளையும், உரத்தையும் வரிசையில் சீராக விதைக்கும் கருவியைப் பரந்த முறையில் அறிமுகப்படுத்த உள்ளோம். வரிசையில் விதைத்து அதற்கு வேண்டிய செயற்கை உரத்தை அளிப்பதால் நல்ல மகசூல் பெற்றிட வழி வகுக்கலாம். இச்செயல் விளக்கங்களை கரிசல் நிலத்திலும் செவ்வல் பூமியிலும் செய்து காட்ட உள்ளோம்.

சொட்டு நீர்ப்பாசனம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நீர் நிர்வாக முறை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சில விவசாயப் பெருமக்கள் இம்முறையைத் தற்பொழுது கடைப்பிடித்து வருகின்றார்கள். இதை மக்கள் மத்தியில் பரப்பி, கிணற்று நீரைச் சிக்கனப்படுத்தி, அதிக மகசூல் பெற்றிட சொட்டு நீர் நிர்வாக முறையை எல்லா மாவட்டங்களிலும் செயல் விளக்கமுறை மூலமாகப் பரப்ப உள்ளோம்.

அதிக மகசூலுக்கு அடித்தளம் நல்ல விதை. தற்பொழுது 47 அரசு விதைப்பண்ணைகளில் தரமான விதைகளைத் தயாரித்து பின்பு முற்போக்கு விவசாயிகள் நிலத்தில் அவற்றை அதிகரித்து எல்லோருக்கும் கிடைக்கச்செய்து வருகிறோம். இத்திட்டத்தின் பயனை விரிவுபடுத்த விதைப் பண்ணைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்து அவற்றின் செயலாற்றும் திறமையை அதிகரிக்க உள்ளோம். இதன் பயனாக நெல் விதைகளை 10%க்குப் பதில் 15%ம், கடலையில் 4%க்குப் பதிலாக 5%ம், பயறு வகைகளில் 1281 டன்னுக்குப் பதிலாக 2,600 டன்னும் இந்த ஆண்டு வேளாண்மைத் துறையின் மூலமாக எங்களால் வேளாண் மக்களுக்குத் தர இயலும்.




பருத்திவேளாண்மை பல்வேறு காரணங்களால் தமிழகத்தில் குறைந்து வருகின்றது. இதற்கான காரணங்களை ஆய்ந்து குறை களைவதற்காக ஒரு நிபுணர் குழுவை அரசு அமைத்துள்ளது. இந்த ஆண்டு பருத்தி வேளாண்மையை ஊக்குவிக்க பல புதிய வழிமுறைகளைப் பின்பற்ற உள்ளோம். இதற்காக பருத்திக்கு வேண்டிய நல்ல இரக விதைகளைத் தந்திட **மதுரை மாவட்டத்தில் வைகை அணைக்கரையில் ஒரு பருத்தி விதை அதிகரிப்பு நிலையம் அமைக்க இருக்கிறோம்.**




தரமான காய்கறி விதைகள் உற்பத்தி செய்து வேளாண் மக்களுக்குக் காலத்தே வழங்கிட தற்போது பல **அரசுப் பண்ணைகள்.** அமைத்துள்ளோம். 1984-85-ல் நெல்லை மாவட்டத்தில் உள்ள கிள்ளிகுளம் கிராமத்தில் ஒரு காய்கறி விதை உற்பத்தி நிலையம் புதிதாக அமைக்க உள்ளோம். **இந்த ஆண்டு 30 டன் காய்கறி விதைகளும் 19 இலட்சம் பழ மரக்கன்றுகளும் மக்களுக்கு வழங்கிடத் திட்டமிட்டுள்ளோம்.**

தென்னை வளர்ச்சியில் இப்பொழுது ஈடுபாடு அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு 30.25 இலட்சம் நெட்டை ரக தென்னங்கன்றுகளும் 5.95 இலட்சம் வீரிய ஒட்டு இரகக் கன்றுகளும் வழங்க உள்ளோம். தென்னை அபிவிருத்திக்காக நெய்வேலியில் ஒரு பெரிய பண்ணை அமைக்க உள்ளோம். அதேபோல நெல்லை மாவட்டத்திலும் மானூரை




அடுத்து ஒரு பெரிய தென்னைப் பண்ணை அமைத்திடுவோம்.

விதைகளின் வீரியத்தைக் கண்டுபிடித்து நல்லதரமான விதைகளை வழங்கிட தற்பொழுது இரண்டு விதை ஆய்வகங்கள் உள்ளன. இந்த ஆண்டு குடுமியான்மலைப் பண்ணையில் இன்னொரு விதை ஆய்வு நிலையம் அமைக்க உள்ளோம்.

நல்ல இரகங்களின் முழுத்திறனையும் பெற்றிட சீராக உரமிடவேண்டும். தமிழகத்திலும் இதுவரை ஆண்டொன்றுக்குச் சுமார் 5 இலட்சம் டன் இரசாயன உரங்கள் தான் உபயோகித்துள்ளோம். இந்த ஆண்டு இதை ஆறு இலட்சம் டன்னாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்குத் தேவையான உரங்களைப் பெற்றுத் தந்திட வேண்டிய நடவடிக்கைகளைத் தொடங்கி விட்டோம்.

பயிர்ப் பாதுகாப்பிலும் தொடர்ந்து தனிக் கவனம் செலுத்தப்படும். மருந்துகள் அடித்துக் காப்பதுடன் ஒருங்கிணைந்து பூச்சித் தடுப்பு முறைகளை மக்கள் மத்தியில் பரப்பிட பரந்த அளவில் செயல் விளக்கங்கள் நடைபெறும். இது தவிர ஒட்டுண்ணிகள் மூலமாகப் பூச்சி








களைத் தடுக்கும் புதிய வழிமுறைகளை அதிகப் பரப்பளவில் செயலாக்க உள்ளோம்.

சோயா மொச்சை குறுகிய காலப் பயிர். எல்லாப் பட்டங்களிலும் பயிர் செய்திடலாம். இறவையிலும், மானாவரியிலும் வரவல்லது. எண்ணெய்யும், புரதமும் நிறைந்த பயிர். இதைத் தமிழகத்தில் தீவிரமாக இந்த ஆண்டு அறிமுகப்படுத்த உள்ளோம். ஏற்கெனவே கோவை மாவட்ட வேளாண் மக்கள் இந்தப் பயிரை ஓரளவுக்குப் பயிர் செய்து வருகிறார்கள். ஏனைய மாவட்டங்களுக்கும் இப்பயிரை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தி சோயா மொச்சையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை வளர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

புதிய வேளாண் கருவிகளைத் தயார் செய்து மலிவான விலையில் கிடைக்கச் செய்யும் பொறுப்பை (Tai) நிறுவனமும், (Encofed) நிறுவனமும் ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே புதிய கருவிகளை மக்கள் இனி எளிதாகப் பெற்றிட முடியும்.

தரிசாகக் கிடக்கும் இடங்களிலும், வரப்பு ஓரங்களிலும், வீட்டைச் சுற்றியும் மரங்கள் வளர்த்து நல்ல பலன் பெற்றிடலாம். பழம் தரும் மரங்கள், சாமான்கள் செய்யும் மரங்கள், தொழிலுக்குப் பயன்படும் மரங்கள், மாட்டுத் தீவனத்திற்கான மரங்கள், பசுந்தழைதரும் மரங்கள் இப்படி எத்தனை எத்தனையோ மரங்கள் உள்ளன. மரங்களை வளர்ப்பதில் இப்பொழுது ஈடுபாடு வளர்ந்து வருகின்றது. இது நல்ல ஆதாயமான தொழில். இதை ஊக்கு




விக்க பல இலட்சக்கணக்கான மரக் கன்றுகளை வளர்த்து மக்களுக்கு வழங்கும் திட்டமும் இந்த ஆண்டு சிறந்த முறையில் செயலாக்க உள்ளோம்.






ஆய்வு நிலையங்களிலிருந்து புதிய வேளாண் தொழில் நுணுக்கங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இவற்றை மக்கள் மத்தியில் பயிற்சி வழித் தொடர்பு மூலமாகவும், வேளாண்மை பயிற்சி நிலையங்கள் மூலமாகவும் வானொலி, செய்தித்தாள் மூலமாகவும் பரப்பி வருகின்றோம். வருகின்ற ஆண்டு முகவை மாவட்டத்தில் பரமக்குடியில் ஒரு வேளாண்மைப் பயிற்சி நிலையம் அமைக்க உள்ளோம். ஆறு பயிற்சி நிலையங்களில் **பெண்களுக்கென்றே தனியாகச் சிறந்த பயிற்சி அமைக்கும் ஒரு சிறப்புத் திட்டத்தையும் ஆரம்பிக்க உள்ளோம்.**

திட்டங்கள் பல தீட்டிடலாம். அவற்றைச் செயலாக்கிட வேண்டுமானால் வேளாண் மக்களும், அரசுப் பணியாளர்களும், வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்களும், அமைப்புகளும் ஒருங்கிணைந்து பணி புரிந்திடல் வேண்டும். இந்த ஆண்டு நமக்குக் கிடைத்துள்ள நீர் வசதியை நன்கு பயன்படுத்தி நமது எண்ணங்களைச் செயலாக்கிடுவோம். வளம் கண்டிடுவோம்.

**சென்னை முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெருப் பாலம் – சில விவரங்கள்:**

- மதிப்பீட்டுச் செலவு ரூ. 35 இலட்சம்
- ஒரே சமயத்தில் இருவழித் தடங்களில் எதிர் எதிராகச் செல்லலாம்.
- 28 மீட்டர் நீளம் 12 மீட்டர் அகலம் உள்ளது.
- பாலத்தின் கீழ் நீர்வழி 15 மீட்டர் அகலம் உடையது.
- பாலத்தின் அடியில் படகுகள் செல்வதற்கு வசதியுள்ளது.
- பாலத்தின் உயரம், நீர்வழித் தடத்தின் மட்டத்திலிருந்து 3 மீட்டர் ஆகும்.
- பதினைந்து திங்களில் பணி முடிக்கப் பெற்றுப் பொது மக்கள் உபயோகத்திற்கு உதவும்.





# மைலேடீஸ் தோட்டத்தில்

தாவர இனங்களை நேசித்து அவற்றினைச் சேதாரமின்றி அன்புடன் பாதுகாக்கும் உணர்வையும் மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியையும் உண்டாக்குவதே மலர்க்காட்சியினை நடத்துவதன் நோக்கமாகும்.

சென்னை மாநகராட்சி 59ஆம் ஆண்டு மலர்க்காட்சியின் துவக்க விழா மக்கள் பூங்காவிலுள்ள ''**மைலேடிஸ் தோட்டத்தில்**'' 17.4.84 அன்று நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதிசாந்தா சீலாநாயர், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''இந்த மலர்க்கண்காட்சியில் அரசமரம், ஆலமரம் போன்ற பெரிய மரங்களின் அமைப்பு அப்படியே சிறியதாக தொட்டிகளில் 'பான்சாய்' முறையில் வைக்கப்பட்டுள்ளது இந்த ஆண்டின் சிறப்பு அம்சம்' என்றார்.

சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு கி.சந்திரசூடன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

''சென்னையில் உள்ள அறுபது எழுபது வயது முதியவர்களும், குழந்தைகளும் இந்தப் பூங்காவினைப் பெரிதும் விரும்பி வருகின்றார்கள். அரசாங்கம் மட்டுமின்றி பொதுமக்களும் ஆதரவு கொடுத்தால்தான் பூங்காக்களை நல்ல முறையில் நிர்வகிக்க முடியும்'' என்றார்.

மலர்க் கண்காட்சியினைத் துவக்கி வைத்து மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் சிறப்புரையாற்றுகையில்:

''இப்படிப்பட்ட மலர்க்கண்காட்சிகள் மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளச் செய்வது பாராட்டத்தக்கது.

''வெளிநாட்டினர் இப்படிப்பட்ட கண்காட்சிகளைப் பாராட்டுகின்றனர். பொது நிறுவனங்களும், சமூக சேவை நிறுவனங்களும் பூங்காக்களைப் பராமரிக்க அதிக அளவில் முன்வரவேண்டும்.''

விழா இறுதியில், பூங்காக்களை நல்லமுறையில்பராமரித்த பொது நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள், மாநகராட்சி ஊழியர்களுக்கு கேடயங்களையும், கோப்பைகளையும் மேதகு ஆளுநர் வழங்கினார்.

இந்த வருட மலர்க்கண்காட்சியில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் **காய்கறிகளினால் மலர்கள் செய்து வைக்கப்பட்டது**. 'பான்சாய்' முறையில் வைக்கப்பட்ட மரங்கள் பற்றியது.

**—அ. மருது.**



## அழகிய பூங்காக்கள்

சென்னை மாநகராட்சி, சிறிதும் பெரிதுமாக 88 பூங்காக்களை சுமார் 330 ஏக்கர் பரப்பளவில் சென்னை மாநகரத்தின் பல்வேறு பாகங்களிலும் அமைத்துள்ளது.

மேலும் நகரத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளிலும் புதிய பூங்காக்களை நிர்மாணிக்க இந்நடப்பு ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

காலனிகள் ஏற்படும்போதெல்லாம் சென்னை மாநகராட்சி அக்காலனிகளில் பத்து சதவீதம் திறந்தவெளிகள் இருக்க வேண்டுமென வலியுறுத்தி, பூங்காக்கள், விளையாட்டு மைதானம் போன்றவற்றை அமைக்க வழிகோலியுள்ளது.

புத்தம் புதிய முயற்சியாக கே. ஜே. மருத்துவமனையின் ஆதரவில், பெட்ரோல் விற்பனை நிலையங்களில் சிறந்த முறையில் பசுமை நிறத்துடன் அழகு மிளிரும் வகையில் வைத்திருக்கும் பெட்ரோல் விற்பனை நிலையங்களுக்கு பரிசுகள் மலர்க்காட்சியின் போது வழங்கப்படும்.

சாலைகளை விரிவுபடுத்துவதில் சென்னையிலுள்ள சாலை ஓர மரங்கள்மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பாதிப்பினை நிவர்த்திக்க 15,000 மரக்கன்றுகள் நகரின் பல்வேறு சாலைகளில் நடப்பட்டுள்ளன.

மக்கள் பூங்கா 4 ஏக்கர் பரப்பளவு கொண்டு நகரத்தின் மையத்தில் அமைந்து ஆண்டுதோறும் மலர்க்காட்சி நடைபெறும் பூங்காவாக உள்ளது.



# வேலை வாய்ப்புக்கு ரூ 163 கோடி

வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் கடந்த 8 மாதத்தில் மட்டும் 163 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

படித்து வேலையில்லாத பட்டதாரிகளுக்குத் தொழில் தொடங்க 25 ஆயிரம் ரூபாய் வரை, கடன்வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. இதற்காக மத்திய அரசு நிர்ணயித்த குறியீடு 17 ஆயிரத்து 500 பேருக்கு, 30 கோடி ரூபாய் கடனுதவி அளிப்பது. ஆனால் தமிழ்நாட்டில் கொடுத்து இருப்பதோ, 20 ஆயிரத்து 189 பேருக்கு மொத்தம் 31 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஆகும்.

இதில் கால்பங்குப் பணம் அதாவது 8 கோடி ரூபாய் உதவித் தொகையாகும். மீதி வங்கிக் கடன். இந்தப் பணத்தை முதல் $1\frac{1}{2}$ ஆண்டுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் 7 ஆண்டுக்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

பிட்டர், டர்னர், தச்சு வேலை, கொல்லுப் பட்டறை வேலை போன்றவற்றில் பயிற்சியும் கொடுத்து, அதே தொழிலைத் தொடங்க வங்கி கடன் கொடுக்கும் திட்டப்(டிரைசெம்) படி இதுவரை 18 ஆயிரத்து 492 பேருக்குத் தொழிற் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

அவர்களில் தொழில் தொடங்க முன் வந்தவர்கள் 10 ஆயிரத்து 339 பேர். அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 6 ஆயிரத்து 983 பேர்.

வங்கிகளிடம் $4\frac{1}{4}$ கோடி ரூபாய் கடன் கொடுக்கச் சொன்னதில் இதுவரை 3 ஆயிரத்து 303 பேருக்கு ஒரு கோடியே 61 இலட்ச ரூபாயை வங்கிகள் கொடுத்து இருக்கின்றன. இதில் $\frac{1}{4}$ பங்கு உதவித் தொகையாகும்.

சமுதாயத்தில் நலிந்தவர்கள், விதவைகள் போன்றவர்களுக்கு இட்லிகடை, காய்கறிக் கடை, கட்பீஸ் கடை போன்றவை நடத்த 2 ஆயிரம் ரூபாய் வரை கடன் கொடுக்கும் திட்டப்படி, 1983ஆம் ஆண்டு அக்டோபரில் இருந்து டிசம்பர் வரை ஒரு லட்சத்து, 70 ஆயிரத்து 564 பேருக்கு, 30 கோடியே 10 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இதில் தாழ்த்தப்பட்ட மலைசாதி மக்கள் 56 ஆயிரத்து, 966 பேர். அவர்களுக்குக் கொடுத்த கடன் 7 கோடியே, 66 இலட்சம் ரூபாய் ஆகும்.

அதன்பின் இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து மார்ச் முடிய மேலும் ஒரு லட்சத்து, 76 ஆயிரம் பேருக்கு 41 கோடி கடனாகக் கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த வகையில் 3 லட்சத்து 56 ஆயிரம் பேர் பலன்அடைந்து இருக்கிறார்கள். ஆக கடந்த 8 மாதத்திற்குள் இந்த மூன்று வஷையிலும் சேர்த்து 103 கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதில் 26 கோடி ரூபாய் உதவித் தொகை ஆகும்.

இந்தத் திட்டம் சிறப்பாக நடந்து வருவதில் மகிழ்ச்சி அடைகிறோம். வங்கிகளுக்கு கடன் பணம் திரும்பி வருவதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. இதில் 5



ஆயிரம் ரூபாய் வரைக்கும் ''சொந்த ஜாமீன்' கேட்பதில்லை.

இது தவிர கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக மொத்தம் 50 கோடி ரூபாய் தமிழக அரசு அனுமதித்துள்ளது. அதில் கிராமப்புற ரோடுகள் போடுவதற்காக 24 கோடி ரூபாய், சிறிய நீர்ப்பாசனக் குட்டைகள், குளங்களை அபிவிருத்தி செய்யப் பொதுப்பணித் துறை மூலம் 16 கோடி ரூபாய், கசிவு நீர்க் குட்டைகளை ஏற்படுத்திப் பக்கத்திலுள்ள கிணறுகளுக்குத் தண்ணீர் மட்டத்தை உயர்த்த 14 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, 1,625 குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஆயிரம் குளங்கள் குளித்தலை, மணப்பாறை, திண்டுக்கல், தாராபுரம் போன்ற வறண்ட பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த வேலைகளுக்கு உள்ளூர் ஆட்களையே அமர்த்திக் கொண்டு தினம் 7 ரூபாய்க்குக் குறையாமல் கூலி கொடுக்கப்படுகிறது. அந்தக் கூலியில் ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் 85 காசு விலையில் கொடுக்கப்படுகிறது.

ஆக வேலை வாய்ப்புக்காக 163 கோடி ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது.

**[ தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் 6-4-i984 அன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தவை.]**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்-மாநில ஆய்வரங்கு, 5.4.'84 அன்று சென்னை இராசாசி மண்டபத்தில் நடந்தது. இந்த ஆய்வரங்கில் தமிழகம் முழுவதிலிருந்தும் 500 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

ஈரோடு, பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. ஆர். அரங்கசாமி, எம்.எல்.ஏ. கூட்டுறவுக் கொடியை ஏற்றி வைத்தார்.

கூட்டுறவுத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு வி.டி. துரைராஜ் தலைமை வகித்துப் பேசினார்.

கூட்டுறவுப் பதிவாளர் திரு. தா.ம. ஆறுமுகம் ஆய்வரங்கை அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு அரசு விவசாய உயர்மட்டக் குழுவின் தலைவர் திரு. முனு ஆதி தொடக்கவுரை ஆற்றினார். அவர் பேசுகையில் "கூட்டுறவுத்துறை மக்களுக்காகப் பல்வேறு நலப் பணிகளை ஆற்றி வருகின்றது. ஆனால் மக்கள் அவற்றையெல்லாம் அறிந்து கொள்ள - புரிந்துகொள்ளத் தக்க விளம்பரங்கள் போதாது. திரைப்படம், வானொலி, பத்திரிகை ஆகியவற்றில் போதிய விளம்பரங்கள் செய்யவேண்டும். இவை தவிர, துண்டு வெளியீடுகளும் வெளியிடப்பட வேண்டும்' என்றார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தக் கருத்தரங்கின் மூலம் உங்களுடைய ஆலோசனைகளை- கருத்துக்களை - தீர்மானங்களை அரசுக்கு அனுப்பி வையுங்கள்.

''தமிழ்நாட்டில், வட்ட அளவில் 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. 1983-84ல் இவற்றின் மூலம் ரூ.108 கோடி அளவுக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கூட்டுறவு மூலம் 1983-84ல் ரூ. 170 கோடி அளவுக்கு நகைக் கடன்கள் வழங்கப் பட்டிருக்கின்றன.

''ஊராட்சி ஒன்றியங்கள் சார்பில் 100 காய்கறி உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கடன்கள் திரும்பி வர வேண்டும்; அப்போதுதான் மேலும் பல பணிகளைத் தொடர்ந்து செய்யமுடியும்.''



தொடக்கத்தில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தனி அலுவலர் திரு.ம.கனகசபாபதி அனைவரையும் வரவேற்றார். புதுக்கோட்டை காடம்பட்டி விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.தி. வெங்கடாசலம் நன்றி நவின்றார்.

—பி. வி. ஜி.

## குடிசைவாசிகளுக்கு மனைப்பட்டா

**சென்னை, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள 'டிரைவர்ஸ் காலனி' குடிசைவாசிகளுக்கு மனைப் பட்டா மற்றும் வீட்டு அபிவிருத்திக் கடன் தொகை வழங்கும்விழா 6.3.'84 அன்று நடைபெற்றது.**

**இவ்விழாவில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், திரு பா. அங்கமுத்து, எம் எல் சி., முன்னிலையில், குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திருமதி ஈ. வெ. கி. சுலோசனா சம்பத் 47 நபர்களுக்கு மனைப் பட்டாவினையும், வீட்டு அபிவிருத்திக் கடன் தொகையாக ரூபாய் 39,550-ம் வழங்கினார்.**



# பெரியார் மாவட்டத் தலைமை மருத்துவமனை

"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''
—என்றார் திருவள்ளுவர்.

அந்த வகையில் செயல்படும் திறமை மிக்க மருத்துவர்களைக் கொண்டு செயல்படுகிறது ஈரோட்டிலுள்ள தந்தை பெரியார் அரசினர் தலைமை மருத்துவ மனை.

45 மருத்துவர்கள் நல்லவிதமாகப் பணிபுரியும் இந்த மருத்துவ மனையில் நாள் ஒன்றுக்கு 3000 பேர் புறநோயாளிகள் வந்து போகின்றனர். உள்நோயாளிகளின் எண்ணிக்கை 710.







86 படுக்கைககள் கொண்ட மருத்துவப் பிரிவு, 211 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைப் பிரிவு, 60 படுக்கைகள் உள்ள சிறுவர்கள் பிரிவு, 33 படுக்கைகள் கொண்ட சிறப்பு மருத்துவப் பிரிவு, 32 படுக்கைகள் கொண்ட ஆஸ்துமா சிகிச்சைப் பிரிவு, 20 படுக்கைகள் கொண்ட தொழுநோய் சிகிச்சைப் பிரிவு, 55 படுக்கைகள் கொண்ட குடும்பநல சிகிச்சைப்பிரிவு, 25 படுக்கைகள் உள்ள சித்த மருத்துவப் பிரிவு, 10 படுக்கைகள் உடைய தொற்றுநோய்மருத்துவ பிரிவு, 10 படுக்கைகள் கொண்ட விபத்துக் கால- மற்றும் அவசர காலச் சிகிச்சைப் பிரிவு எல்லாம் இங்குண்டு.



மாவட்ட மருத்துவ அதிகாரியாக டாக்டர் எம். சீனிவாசன் செயல்படும் இந்த மருத்துவ மனையில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு அமைத்திடவும், அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

4 சடலங்களை வைத்துப் பாதுகாக்கத் தக்க பிணவறை ஒன்றும் இரண்டு அறுவைச் சிகிச்சை நிலையங்களும் இங்குள்ளன. இந்த இரு அறுவைக் கூடங்களும் விரைவிலேயே குளிர்சாதன வசதியுடையதாக்கப்படவிருக்கின்றன.

கண்சிகிச்சை, முடநீக்கியல், தோல் மற்றும் பால்இன நோய், மார்புச் சிகிச்சை, பல் வைத்தியம், குழந்தைகள் வைத்தியம் என்பன போல, 21 வகைச் சிகிச்சைப் பிரிவுகள் உள்ள இந்தத் தலைமை மருத்துவ மனையின் மொத்தப் பரப்பளவு 7 ஏக்கர் ஆகும்.

1982-ல் 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட குடும்ப நல அறுவைச் சிகிச்சைப் பிரிவின் மூலம் மட்டும் பெரியார் மாவட்டத்தில் இதுவரை 5000 பேருக்கு மேல் லெப்ராஸ்கோப்பி சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஈரோடு, கோபி, கொடுமுடி, தாராபுரம், காங்கேயம், சத்தியமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகள் 'தந்தை பெரியார் அரசு தலைமை மருத்துவ மனை' நிர்வாகத்தின் கீழ் இயங்குபவைகளாகும்.

3 ஆம்புலன்ஸ் வண்டிகள் கொண்ட இம் மருத்துவமனைக்கு நடமாடும் மருத்துவ ஊர்தி இல்லாத குறை ஒன்றிருக்கிறது.

நெசவுத் தொழிலில் ஈடுபடுவோர் அதிகமுள்ள மாவட்டம் அல்லவா? அவர்களுக்கெனவும், பீடி சுற்றும் தொழிலில் ஈடுபடுவோர்க்கெனவும் அவ்வப் பகுதிகளுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சை அளிக்கச் சிறிய அளவிலான ஒரு மருத்துவ யூனிட் செயல்படுவதை நமக்குத் தெரிவித்தார் மாவட்ட உதவி மருத்துவரான டாக்டர் டி.ஜி. இராமமூர்த்தி.

இதயத் தொடர்பான அறுவைச் சிகிச்சை, மூளை தொடர்பான அறுவைச் சிகிச்சை, இரண்டும் இங்கே செய்ய வசதியில்லை. மற்றெல்லாவித அறுவைச் சிகிச்சைகளும் இங்கே திறம்படச்செய்யப்படுகின்றன.

# பேசும் பொற்சித்திரங்கள் பெற்ற பரிசுகள்



இந்தியக் குழந்தைகள் நலக் கழகத்தின் தமிழ்நாட்டுக் கிளை, இந்த நாட்டுக் குழந்தைகளின் நல்வாழ்விலும், வளர்ச்சியிலும் அக்கறைகொண்டு, 'பால்வாடி' களை நடத்தியும், ஆண்டு தோறும் 50 பாலசேவிகாக் களுக்கு உதவித்தொகை வழங்கிப் பயிற்சிகொடுத்தும் வருகிறது.

இந்தக் குழு அவர்களுக்கு வேலைவாய்ப்பு மட்டுமல்லாமல் பணிப்பாதுகாப்பும் அளித்து வருகிறது. இந்தக் கழகத்தின் இயக்கத்திற்குத் தேவையான நிதியில் பெருமளவு மத்தியக் குழுவினரிடமிருந்து பெறப்படுகிறது.





இதுதவிர, ஆண்டுதோறும் பண்டிதநேருவின் பிறந்தநாளான குழந்தைகள் தினத்தில், இதற்கெனப் பிரத்தியேகமாக வெளியிடப்படும் 10 காசு விலையுள்ள அஞ்சல் தலைகளை விற்பனை செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்தக் குழந்தைகள் நலக் கழகமும், சென்னை மாநகராட்சியும் ஒருங்கிணைந்து, ஆண்டு தோறும் 'குழந்தைகள் காட்சிப்' போட்டியைச் சிறப்பாக நடத்தி அதில் ஓராண்டுக்குட்பட்ட குழந்தைகளைப் பங்கு கொள்ளச்செய்கின்றன. இதில், சென்னை மாநகராட்சியின் குழந்தைகள் நல விடுதிகளில் பிறந்த குழந்தைகளுக்கு முதலிடம் தரப்படுகிறது.

வருவாய் குறைந்த குடும்பங்களில், குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பதற்கு, அக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், அவர்களின் குழந்தைகளும் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

குழந்தைகளின் முதல் தேர்வு மாநகராட்சி குழந்தைகள் நல விடுதிகளின் உதவியோடு நடத்தப்படுகிறது. குழந்தைகள் வயதுக்கேற்ப 4 மாதம் வரையுள்ள குழந்தைகள், 5 முதல் 8 மாதம் வரையுள்ள குழந்தைகள், 9 மாதம் முதல் ஒருவயது வரையுள்ள குழந்தைகள் என மூன்று பிரிவுகளாகப்பிரிக்கப்படுகின்றன.

இடைத் தேர்வையும், இறுதித் தேர்வையும் இந்தியக் குழந்தை நலக் கழகத்தால் நியமிக்கப்படும் நீதிபதிகள் நடத்துகின்றனர்.

இவ்வாண்டு நடைபெற்ற குழந்தைகள் காட்சிப் போட்டியில், மூன்று பிரிவுகளிலும் முறையே 197, 244, 166 (மொத்தம் 607) குழந்தைகள் பங்கு கொண்டனர். இவர்களில் வட சென்னையில் முப்பிரிவுகளிலுமாக 9 குழந்தைகளும், தென் சென்னையில் முப்பிரிவுகளிலுமாக 9 குழந்தைகளுமாக 19 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்குப் பரிசு வழங்கும் விழா, சென்னை மாநகராட்சியின் உள்விளையாட்டரங்கில், 28.3.84ல் மாநகராட்சியின் தனி அலுவலர் திரு.கே.சந்திரசூடன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களின் துணைவியார் திருமதி இந்திரா குரானா, பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

குழந்தைகள் நலக் கழகத் தமிழ்நாட்டுக்கிளையின் இணைச் செயலாளர் திருமதி பிரமீளா கணபதி அனைவரையும் வரவேற்றார். மாநகராட்சியின் கூடுதல் மருத்துவ அலுவலர் திருமதி மாத்யூ நன்றி கூறினார். தொடர்ந்து குழந்தைக் காட்சிப் போட்டி இடைத் தேர்தலில் கலந்து கொண்ட 96 குழந்தைகளின் தாய்மார்களுக்கும் ஊக்க மூட்டும் வகையில் மாநகராட்சி ஆறுதல் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தது.

இத்தகைய விழாக்கள், தாய்மார்களுக்கு நல்ல ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி, அவர்களைக் குழந்தை வளர்ப்பில் நல்ல அக்கறை கொள்ளும்படிச் செய்ய உதவுகின்றன என்பதில் ஐயமில்லை.

நிகழ்ச்சித் தொகுப்பு :
**சாமிபழனியப்பன்**

## தொழுநோய் நிறுவனங்களுக்கு அரசு உதவிகள்

தொழுநோயினைத் தடுப்பதிலும், குணப்படுத்துவதிலும், ஆக்கப் பூர்வமான சேவைகள் செய்வதில், அதுவும் குறிப்பாகச் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதில் அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தனியார் சேவை நிறுவனங்கள் ஈடுபடுவதை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்த நூற்றாண்டு முடிவதற்குள், தொழுநோயினை ஒழிப்பதற்குரிய நடைமுறையை வகுப்பதற்கு, இந்திய அரசு தொழுநோய் ஒழிப்பதற்கான கணக்கெடுத்தல், அது சம்பந்தப்பட்ட கல்வியினைப் போதித்தல், மருத்துவம் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கான உதவி முறைகளின் விதிகளைத் தளர்த்தியுள்ளது. இதன்படி இப்பணியில் பணிபுரிவோருக்கான ஊதிய உயர்வு அளித்தல், மருந்துகளின் விலை, தொழுநோய் சம்பந்தமான பணிகளுக்கான மற்றச் செலவுகள் ஆகியவைகளுக்காக அளிக்கப்படும உதவித் தொகை அதிகரிக்கப்படும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் கணக்கெடுத்தல், நோய் தொடர்பான கல்வி போதித்தல், மருத்துவ சேவை செய்தல் ஆகிய பணியினை ஏற்று நடத்தவும், தளர்த்தப்பட்ட விதிகளின்படி உதவி பெறவும் விரும்பும் சேவை நிறுவனங்கள் இது குறித்த முழு விவரங்களைப் பெற, சென்னை-600 006ல் உள்ள மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநருக்கு எழுதலாம்.

## சென்னை மாநகராட்சிப் பணிகள்– சில செய்திகள்

- இதுவரை மாநகராட்சிப் பகுதியில் 3500 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப் பெற்றுள்ளன.
- தினமும் 45 ஆயிரம் தெரு விளக்குகள் ஒளி தருகின்றன.
- 1200 கிலோ மீட்டர் சாலை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ளது.
- ஒரு நாளைக்கு 2000 டன் குப்பை, கூளம் சேர்கிறது.
- மாநகராட்சியின் வருமானம் ரூ. 28 கோடி. இதில் 19 கோடி ரூபாய் ஊழியர்களின் சம்பளத்திற்குப் போய்விடுகிறது.
- துப்புரவுப் பணியாளர் 5600 பேர் உள்ளனர்.

[முண்டகக்கண்ணிஅம்மன் கோவில் தெரு பாலம் அடிக்கல் நாட்டு விழா உரைகளிலிருந்து திரட்டியவை.]

# ஒரு சமதர்மவாதி நினைக்கப்படுகிறார்

திரைப்படத் துறையில் பல புதிய உத்திகளைப் புகுத்திய டைரக்டர் அமரர் கே.சுப்ரமணியம் அவர்களின் 80வது பிறந்த நாள் விழா 13.4.84 அன்று காலை சென்னை கெயிட்டி திரை அரங்கில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வருகைபுரிந்தோரை மாஸ் மீடியா பவுண்டேஷன் ஆப் இந்தியா நிறுவனத்தின் தலைவரும் கே.சுப்பிரமணியம் அவர்களின் மகனுமாகிய திரு எஸ்.கிருஷ்ணசாமி வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''கலை உலகில் மிக்க சிறப்போடும் பெருமையோடும் வாழ்ந்தவர் டைரக்டர் கே. சுப்ரமணியம். கலைஞர்கள் நல்லமுறையில் உழைப்பதற்கு வழிகாட்டிய மாமனிதர் அவர். பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே கலந்து கொள்கிறார்கள். அனைத்துக் கட்சியினரிடத்திலும் அவர் எத்தகைய அன்பு கொண்டிருந்தார் என்பதற்கு இதுவே சான்று''



விழாவைத் தொடங்கி வைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கலைஞர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்றதன் மூலம் ரஷ்ய நாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் நல்லுறவை உருவாக்கியவர் டைரக்டர் அமரர் கே.சுப்ரமணியம் அவர்கள்.

''கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தலைமறைவாக இருந்த காலத்தில் அவர்களுக்குத் தங்குவதற்கு தமது வீட்டில் இடம் அளித்தவர் கே. சுப்ரமணியம். பழுத்த காங்கிரஸ் காரரான அவர், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு உதவி செய்திருக்கிறார். தீவிர சுயமரியாதைக்காரரான கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்றார். எல்லோருடைய உறவும் தமக்கு வேண்டும் என்பதுதான் அவரது இலட்சியமாக இருந்தது.

''படத்தயாரிப்பாளர் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டதை அறிந்த அவர், உடனே சில நடிகர்களை அழைத்து நடிகர் சங்கம் ஒன்றினைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ததுடன் - ஆரம்பச் செலவுக்குப் பணமும் கொடுத்தார்.

''உடல்நலிவுற்றநேரத்தில்கூட அவர் பெருந்தொண்டு செய்து வந்தார். திறமை படைத்த வக்கீல் அவர். அந்தத் தொழிலை விட்டுவிட்டு, திரையுலகுக்கு வந்து மாபெரும் சாதனைகளைச் செய்தார்.''

பின்னர், திரைப்பட ஆராய்ச்சியாளர் திரு தியோடர் பாஸ்கரன் உரையாற்றுகையில், ''மௌனப் படக் காலத்திலிருந்தே திரை உலகில் பணியாற்றி வந்த கே. சுப்ரமணியம் அவர்கள், சிறந்த தேசியவாதி. 1930ஆம் ஆண்டிலேயே சாதி ஒழிப்பின் அவசியம் குறித்துத் திரைப்படத்தின் மூலமாக வலியுறுத்தினார்'' என்றார்.

திரைப்பட இயக்குநர் திரு. பி. புல்லையா பேசுகையில், ''தமிழ்த் திரை உலகுக்கு அவர் மாபெரும் சாதனைகளையும் பல அரும்பெரும் கடமைகளையும் ஆற்றியிருக்கிறார். அவர் நாட்டுப் பற்று மிக்கவர்'' என்று தெரிவித்தார்.

இந்தியத் தொழிற் சங்க மையத்தின் தலைவர் திரு.வி.பி. சிந்தன், உரையாற்றுகையில், ''நானும் நண்பர் ராமமூர்த்தியும் தலைமறைவாக இருந்த காலத்தில் எங்களுக்குப் புகலிடம் தந்து தமது இல்லத்தில் தங்க வைத்துக் கொண்டவர் திரு கே. சுப்ரமணியம். 'தேச சேவை செய்ய வாரீர்' என அனைவரையும் தியாக பூமி படத்தின் மூலம் அழைத்த தேசியவாதி அவர்'' என்றார்.

அடுத்து, இந்திய திரைப்பட சம்மேளனத்தின் தலைவர் திரு. டி.இராமானுஜம் பேசுகையில்,

''இந்திய சரித்திரத்தில் -விடுதலைப் போராட்ட வரலாற்றில் யார் யார் கலந்து கொண்டு கஷ்டப்பட்டனர் என்பதை எல்லாம் நன்கு அறிந்து வைத்துக்கொண்டு அவர்களுக்கு மரியாதை காண்பித்தவர் கே. சுப்ரமணியம்'' எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு எம்.பழனியாண்டி பேசுகையில், ''நல்ல கருத்துக்களைத் திரையில் சொல்லும் திறமையாளர் கே. சுப்ரமணியம். தன் குடும்பத்தினர் மட்டுமல்ல, எல்லாக் குடும்பத்தினரும் நன்கு வாழ வேண்டும் என்று கருதியபெருந்தகை அவர்'' என்றார்.

மாஸ் மீடியா பவுண்டேசன் ஆப் இந்தியா நிறுவனத்தின் பொது இயக்குநர் திரு ஏ. ஆர். பாஜி நன்றியுரை கூறினார்.

அதன் பின்னர் கே. சுப்ரமணியம் அவர்கள் 1938ஆம் ஆண்டில் தயாரித்து வெளியிட்ட 'தியாக பூமி' என்னும் திரைப்படம் காண்பிக்கப்பெற்றது.

நாட்டு விடுதலை உணர்வு, கதர்ப்பற்று, சாதி ஒழிப்பு, பெண் கொடுமை தீர்க்கப்பட வேண்டிய அவசியம் ஆகிய குறிக்கோள்கள் இந்தப் படத்தில் தக்க விதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்தப் படத்திற்கு ஒரு தனி வரலாறு இருக்கிறது.

பேராசிரியர் கல்கி எழுதிய கதையைத் தழுவித் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் அந்நாளில் கெயிட்டி திரையரங்கில்தான் திரையிடப்பட்டது. இதில் தேசப் பற்று மிக்க காட்சிகள் வருவதால் அன்றைய அந்நிய வெள்ளை ஏகாதிபத்திய அரசு பொது மக்கள் முன் இப்படம் காண்பிக்கப்படக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்தது. அந்தத் தகவல் சுப்ரமணியம் அவர்களுக்கு எட்டியது. அதனால் உத்தரவு கைக்குக் கிடைப்பதற்குள் அந்தப் படத்தைப் பொது மக்களுக்கு இலவசமாகக் காண்பிக்க முன்வந்தார். தொடர்ந்து பலமணி நேரம் கெயிட்டி அரங்கில் 'தியாக பூமி'யின் இலவசக்காட்சி நடைபெற்றது. 24 மணி நேரம் இந்தப் படம் தொடர்ந்து ஓடியது. அரங்கம் நிரம்பி வழிந்தது. பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் வந்து பார்த்துச் சென்றனர்.

வரலாற்றுப் புகழ்மிக்க அந்த நிகழ்ச்சி நடைபெற்று 45 ஆண்டுகள் ஆகின்றன. அதை நினைவு கூரும் வகையிலும் சுப்பிரமணியம் அவர்களின் நினைவாகவும் இந்தப் படம் 13.4.84ல் திரையிடப்பட்டது. இந்தப் படத்தின் பிரதியை புனாவில் உள்ள தேசிய திரைப்பட ஆவணக் காப்பகம் கொடுத்துதவியது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவை ஒட்டி பிலிம் நியூஸ் ஆனந்தன் அமைத்த திரைப்பட இயக்குநர் கே.சுப்ரமணியம் அவர்கள் தயாரித்த பல திரைப்படங்களின் புகைப்படங்கள், பாட்டுப் புத்தகங்கள் ஆகியவை கொண்ட கண்காட்சி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

**நிகழ்ச்சித் தொகுப்பு : சுந்தர்**

# கூட்டுறவு வங்கிகள் ஒரு வரப்பிரசாதம்




சென்னையை ஒட்டி வளரும் வேளச்சேரியில் ஒரே ஒரு வங்கி தான் உள்ளது. பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தனது 25வது கிளையை 12-3-84 அன்று இங்கே தொடங்கியது.

விழாவிற்கு கூடுதல் பதிவாளர் திரு பி. சுந்தரம், தலைமை தாங்கினார். வங்கியின் தனி அலுவலர் திரு பெ. கன்னியப்பன், வந்திருந்தோரை வரவேற்று உரையாற்றுகையில், 'மற்ற வங்கிகளைக் காட்டிலும் வட்டி அதிகம் தருகிறோம். குறைந்த வட்டி வசூலிக்கிறோம். இந்த வங்கியில் 400 பேர் கணக்கு ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த மத்திய வங்கிகள் மூலம் 10 இலட்சம் பேர் பயனடைகிறார்கள்'' என்றார்.

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு செங்கோட்டுவேலன் அவர்கள் உரையாற்றுகையில், ''கூட்டுறவுத் துறையில் கடன் வசதி செய்வது வெற்றி பெறுகிறது. கூட்டுறவு வங்கிகளுக்கு மக்களிடம் பழக நல்ல வாய்ப்பு உள்ளது. இந்த மத்திய வங்கி இலாப நோக்கத்தோடு பணியாற்றவில்லை'' என்றார்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 25-வது கிளையினைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''ஏழை எளிய - நடுத்தர மக்கள் இந்த வங்கி மூலம் பயன் பெற விரும்புகிறேன். 1930இல் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஆல்போல் வளர்ந்து உள்ளது. ரூ. 500 கோடி மூலதனம் பெற்றுள்ளது. 1977இல் டெபாசிட் ரூ. 154 கோடி. ஆனால் இன்று 487 கோடியாக அது உயர்ந்துள்ளது.

''கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பொதுமக்களின் வளர்ச்சியாகும் குஜராத் மாநிலத்திற்கு அடுத்து கூட்டுறவு வங்கி வளர்ச்சி தமிழகத்தில் சிறந்து விளங்குகிறது.''

விழா முடிவில் வங்கியின் செயலாளர் திரு பெ. தங்கராசு நன்றி கூறினார்.

**—அ. மருது**

## 26 வது கிளை

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் 26வது கிளையின் திறப்பு விழா சூளைமேட்டில் 20.3.'84 அன்று சிறப்பாக நடந்தது.

வங்கியின் தனி அலுவலர் திரு. பெ.கன்னியப்பன், அனைவரையும் வரவேற்று, வங்கி ஆற்றி வரும் பணிகளை எடுத்துக் கூறினார்.

கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு ஆர். சந்தானம், இ.ஆ.ப., பேசுகையில், ''இந்த வங்கி நலிந்த பிரிவினர்களுக்குக் கடனுதவி வழங்கி அவர்கள் வாழ்வில் முன்னேற வழிகோலி வருகிறது. மீனவர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும், காய்கறி விற்போருக்கும் இந்த வங்கி பல வகைகளில் கடனுதவி வழங்கி வருகிறது'' என்றார்.

சென்னை மண்டல இணைப் பதிவாளர் திரு எஸ்.டி. வைத்திலிங்கம் பேசுகையில், ''வைர விழா நோக்கி வங்கி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது'' என்றார்.

இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் திரு கு. ஆளுடையபிள்ளை இ.ஆ.ப. பேசுகையில், ''ஏழை எளிய மக்களுக்கு வங்கி வசதி கிடைக்க வேண்டும் என்ற கருத்தில், இந்தப் பகுதியில் இந்த வங்கியின் கிளை ஆரம்பிக்கப்படுகிறது'' என்றார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''இந்த வங்கி மிக வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. அதற்கு அடையாளம்தான், இந்தக் கிளைத் திறப்பு விழா.

''குஜராத், மகாராஷ்டிரம் முதலான மாநிலங்களோடு போட்டி போடும் அளவுக்குக் கூட்டுறவுத் துறை வளர்ச்சி பெற்று வருகிறது. கூட்டுறவு வங்கிகள், நடுத்தர ஏழை எளிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கி வருகின்றன. நலிந்தவர்களுக்குக் கடனுதவி மற்றும் நகைக்கடன், நுகர்வோர் கடன்கள் தந்து அவர்கள் வாழ்வில் முன்னேற வழி செய்து வருகின்றன. கடன்கள் பெறுவதுபோல, கடன் பெற்றவர்கள் அதை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தவும் முன்வர வேண்டும்''.

விழாவில் ஏழை எளியவர்களுக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டன. பலர் புதிதாகக் கணக்குகளை ஆரம்பித்தனர். கிளை மேலாளர் திரு டி.எஸ். சிவகுமார் நன்றி கூறினார்.

**—பி. வி. ஜி.**



# சட்டமன்றத்தில் திரட்டியவை



கொல்லிமலையில் 20 கே. வி. மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிவிட்ட செய்யார் வட்டத்தின் துரித வளர்ச்சிக்கு உதவுவதற்காக மாநில அரசு இப்பகுதியைப் பின்தங்கிய பகுதியாக 1979 டிசம்பரில் அறிவித்தது. இதனால் இங்கு தொடங்கப்படும் சிறுதொழில்களுக்கு மாநில அரசே தன் நிதியிலிருந்து மானியம் வழங்குகிறது.

தமிழ்நாடு மருத்துவத்துறையில் (மருத்துவ மனை மற்றும் மருத்துவக் கல்லூரிகள்) சிவில் சர்ஜன் தகுதியில் பணிபுரிபவர்கள் மொத்தம் 567 பேர்கள்.

சொந்த வீடு இல்லாத சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு முன்னுரிமை அளித்து மனைப்பட்டா வழங்குவதற்கு உரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மொழிப் போராட்ட வீரர்களுக்கும் முன்னுரிமை அளிப்பது பற்றிய செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உள்ளாட்சிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசிடம் ரூ. 11.20 கோடிகள் நிதி உதவிகோரப்பட்டு மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.




வெள்ளம், வறட்சி, புயல் போன்ற இயற்கையின் இடர்களால் பயிர் பாதிக்கப்பட்டு, வருவாய்த்துறையால் விளைச்சலின் அளவு 50 சதவீதத்திற்கும் குறைவென மதிப்பீடு செய்யப்பட்டும், நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டால், விவசாய சேவைக் கூட்டுறவுச்சங்கங்களில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குறுகிய கால கூட்டுறவுக் கடன்கள் 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் நடுத்தர காலக் கடன்களாக மாற்றப்படுகின்றன. அப்படிப்பட்ட கடன்தாரர்களுக்கு புதிய கடன்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.



சேலம் மாவட்டத்தில் மொத்த நெசவாளர்கள் 3.89 இலட்சம் பேர். இவர்களில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக 1,53,540 பேர் உள்ளனர்.

திருச்சி சட்டக் கல்லூரியில் தமிழ் வழிப் பிரிவு வகுப்பு தொடங்கப் பெற வேண்டும் என கோரிக்கைமனு மாணவர்களிடம் இருந்து வந்துள்ளதை அரசு பரிசீலித்து வருகிறது.

வெளி மாநிலங்களில் தொழில் கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்குத் தகுதியின் பேரில் கல்வி உதவிகள் அளிக்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு கொல்லுப் பட்டறைகள் 152 ஒன்றியங்களில் இயங்குகின்றன.




பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் 1983-84ஆம் ஆண்டில் இதுவரை 60 புதிய பேருந்துகளைப் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக வழித்தடங்களில் விட்டுள்ளது. மேலும் 1984-85-ல் 100 புதிய பேருந்துகளை விட உள்ளது.



பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் 'தாட்கோ' மூலம் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்படி ஒரு வீட்டுக்காகும் மொத்தச் செலவு ரூ. 4,300-ல் அரசு பங்கு ரூ. 3,225 ஆகும். பயன் பெறுபவர்களின் பங்கு ரூ. 1,075 ஆகும். இந்தப் பங்குத் தொகையை அவர்கள் பணமாக, உழைப்பு அல்லது தளவாடங்கள் மூலம் செலுத்த வேண்டும்.

சத்தியமங்கலம் தொகுதியில் ஆய்வில் ஆறு பாசனத் திட்டங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் கயிறு தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காக, ஒரு மண்டலக் கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தினை நிறுவிட கயிறு வாரியம் முன்வந்துள்ளது. இந்நிலையத்தினை நிறுவுவதற்காக 1982-83-ஆம் நிதி ஆண்டில் ரூ. 50.90 இலட்சம், கயிறு வாரியம் ஒதுக்கி உள்ளது. இந்நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்ப் பட்டி இராமத்தில் விரைவில் அமையும். தமிழ்நாட்டில் நீலகிரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் தவிர, ஏனைய 14 மாவட்டங்களில் 57 கயிறு மற்றும் கயிறு பொருட்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச்சங்கங்களிடமிருந்து அரசின் தேவைகளுக்கு பொருட்களை வாங்குவதற்கு நான்காவது முன்னுரிமை இடம் அளிக்கப்பட்டுள்ளது. இம்முன்னுரிமை 31-3-87 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்தில் சாலையோர விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பரிசீலனையில் உள்ளது. திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 12.50 இலட்சம். அதேபோல சாலையோர விடுதிகள் காரைக்குடி, மேல்மருவத்தூர் ஆகிய இடங்களிலும் கட்டப்படவுள்ளது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்திற்கு விடுத்துள்ள சிறுமுகையில், உள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பவானி ஆற்றில் நீரைக் கெடுத்துவிடுவதால், கால்நடைகள் சாவதும், விவசாயம் பாதிப்பதும் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சேலம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலம் 614 ஏக்கர். மேற்படி உபரி நிலத்தில் ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் 16 ஏக்கர்.

1982-83ஆம் ஆண்டில் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழத்தின் அளவு சுமார் 6.28 இலட்சம் டன்கள் ஆகும்.

சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட மழை புயலினால் நிகழ்ந்த சேதங்களைப் பார்வையிட மாநில அரசின் வேளாண்மை உயர் மட்டக்குழு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. குழு அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது.




சிவகாசி நகர் மற்றும் திருத்தங்கல் பேரூராட்சிகளுக்கானகுடிநீர்த் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் உதவி பெற அரசு இடைக்கால அனுமதி அளித்துள்ளது.

நிலவள வங்கிகள் நிலமற்ற விவசாயிகள் தாங்கள் பயிர் செய்யும் நிலத்தையோ, அல்லது புதிதாக நிலங்கள் வாங்கிப் பயிர் செய்ய விரும்பும் நிலத்தையோ விலைக்கு வாங்க உயர்ந்தபட்சக் கடனாக ரூ. 7,500-ம் அந்நில வளர்ச்சிக்காக தேவையானால் மேற்கொண்டு கடனும் அளிக்கின்றன. அரசு உத்திரவாதத்தின் பேரில் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற இதர பல்வேறு காரியங்களுக்கு திட்ட அடிப்படையில் அரசின் உத்தரவாதத்தின் பேரில் மத்திய காலக்கடனும் வழங்குகின்றன.




சேலம் மாவட்டத்தில் 1,616 கிராமங்கள் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, 1,616 மையங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர சேலம் மாவட்டத்தில் நகர்ப்புறங்களில் 247 சத்துணவு மையங்களும் இயங்கி வருகின்றன. இதற்கென ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,12,36,827 ஆகும்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்கு தோராயமாக ஒரு நாளக்கு 607 டன் அரிசியும், 8½ டன் பருப்பும் செலவாகிறது.




பெருந்துறையில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அவ்விடத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைத்தொடங்க ஒரு கருத்துரு அரசிடம் உள்ளது.

1981ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, நம் மாநிலத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை, அவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் விவரம் பின்வருமாறு:

| | மொத்த மக்கட் தொகை | எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். |
|---|---|---|
| **ஆதிதிராவிடர்** | | |
| ஆண் | 4,485,332 | 1,823,222 |
| பெண் | 4,395,963 | 811,927 |
| **பழங்குடியினர்** | | |
| ஆண் | 264,288 | 70,592 |
| பெண் | 255,938 | 35,829 |




வட ஆர்க்காடு மாவட்டத்தில் 2,462 துளைக் கிணறுகள் குடிநீர் வடிகால் வாரியப் பொறுப்பில் உள்ளன. 2,210 ஆழ்துளைக் கிணறுகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அற நிலையங்களில் தணிக்கைப் பிரிவினரால் தணிக்கை மேற்கொள்ளாத நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 2,191 ஆகும். பரம்பரை அறங்காவலர்கள் நிர்வாகத்தில் உள்ளவை 928. நிர்வாக அறங்காவலர் நிர்வாகத்தின் கீழ் உள்ளவை 1,187. நிர்வாக அதிகாரிகளின்கீழ் உள்ளவை 76.

தஞ்சை மாவட்டத்தில் வெட்டாறு ஆற்றின் குறுக்கே பணவெளி கிராமம் அருகே ரூ. 11.50 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் வனத்துறையில் தனியார் ஆக்கிரமித்துள்ள வனத்துறைப் பகுதியின் பரப்பளவு சுமார் 20,900 எக்டேர்கள் ஆகும்.




தமிழகத்தில் தொழுநோயின் இருப்பு 1977 ஆம் ஆண்டு 1,000 மக்கட்தொகைக்கு 20.4-இல் இருந்து 1981ஆம் ஆண்டு 1,000 மக்கட் தொகைக்கு 14.3 ஆகக் குறைந்துள்ளது. தற்சமயம் 'டாப்சோன்' என்ற மருந்து தொழுநோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் கவனக் குறைவாலும், தொடர் சிகிச்சை எடுக்காததாலும் விட்டு விட்டு இந்த மருந்தினைத் தொழுநோயாளிகள் சாப்பிடுவதால் தொழுநோய்க் கிருமிகள் சாவதற்குப் பதிலாக, இம்மருந்தினை எதிர்க்கும் சக்தியினைப் பெறுகின்றன. எனவே, பல மருந்துக் கலவையின் மூலம் தொழுநோயினை குணப்படுத்த வட ஆர்க்காடு மாவட்டத்தில் புதிய மருந்து அளிக்கும் மாதிரித்திட்டம் ஒன்று தொடங்கப்பட உள்ளது.

**தொகுப்பு : அ. மருதவிநாயகம்**



# புலி வருகிறது!

**1984**, ஏப்ரல் மாதத்தில் 16 முதல் 23 ஆம் தேதி முடிய நாடு முழுவதும் வாழ்கின்ற புலிகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் புலிகளின் எண்ணிக்கை கணக்கெடுப்பு 1979இல் நடைபெற்றது. இந்தக் கணக்கெடுப்பின்படி நாட்டில் 3015 புலிகள் உள்ளன. முதற் கணக்கெடுப்பு 1972இல் நடைபெற்றபோது, இவற்றின் எண்ணிக்கை 1827 ஆக இருந்தது. ஏழாண்டுகளில் இவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அழியும் விலங்கினங்களைக் காக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இவை பாதுகாக்கப்பட்டுள்ளன.

புலிகளின் எண்ணிக்கை எப்படிக் கணக்கெடுக்கப்படுகிறது?

விலங்கின் காலடிச் சுவடு பதிந்துள்ள இடங்களைக் கொண்டு புலிகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கமுடியும். ஒரு புலியின் காலடிச் சுவடு மற்றொன்றிலிருந்து மாறுபட்டிருக்கும். இது மனித விரலின் சுவடு மற்றவர்களிடமிருந்து மாறுபட்டுள்ளது போன்றதே யாகும்.

காலடிச் சுவடுகளை அதற்கென அமைந்துள்ள கண்ணாடித் தகடுகளில் பதிந்தெடுத்துக் கொள்வர். இது பின்னர் வெள்ளைத் தாளுக்கு மாற்றப்படும். பிற மதிப்பீடுகளை ஒப்பிட்டு ஒவ்வொரு புலியினையும் பிரித்து மொத்தமான எண்ணிக்கையைக் கணக்கெடுப்பர். புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

# பள்ளிக்கூடத் திரைப்பட அரங்குகள்

**ஆ**யிரம் பள்ளிக்கூடங்களில் திரைப்பட அரங்குகள் கட்ட, இதற்கென அண்மையில் அமைக்கப்பட்ட நிறுவனம் தீர்மானித்துள்ளது. எங்கு? மாஸ்கோவில்!

இப்பொழுது மாஸ்கோவில் 1000-க்கு அதிகமான செகண்டரி கல்விப் பள்ளிகளில் திரைப் படங்கள் திரையிடுவதற்கான வசதிகள் உள்ளன; இவற்றில் 100 பள்ளிகளில் திரைப்பட அரங்குகள் உள்ளன. சோவியத் பள்ளிச் சிறுவர்களுக்குத் திரைப் படங்கள் காட்டுவது பொழுது போக்குக்காக மட்டுமல்ல-கல்வி அறிவை வளர்ப்பதற்கும்-கலைச் சுவை உணர்வை வளர்ப்பதற்கும் திரைப்படங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

குழந்தைகளுக்கான திரைப் படங்கள் தயாரிப்பதில் சோவியத் யூனியன் தனிக் கவனம் செலுத்துகிறது. இங்கு ஆண்டு தோறும் குழந்தைகளுக்கான 30-க்கும் அதிகமான முழு நீளக் கதைப் படங்களும், மற்றும் பல கார்ட்டூன் படங்களும், கல்விப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன.

நாட்டில் உள்ள 39 திரைப் பட ஸ்டுடியோக்களிலும் குழந்தைகளுக்கான படங்கள் தயாரிக்கப்படுகின்றன. மாஸ்கோவில் குழந்தைகளுக்கான படங்கள் தயாரிக்கும் கோர்க்கி மத்திய திரைப்பட ஸ்டுடியோ இவற்றில் முதலிடம் வகிக்கிறது. உலகத்திலேயே இத்தகைய ஸ்டுடியோ இது ஒன்றுதான் உள்ளது.

குழந்தைகளுக்கான திரைப்பட அரங்குகளும், சோவியத் யூனியனில் ஏராளமாக உள்ளன. மாஸ்கோவில் உள்ள மத்திய குழந்தைகள் திரைப்பட அரங்கு அவற்றில் முக்கியமானது. இவை தவிர முதியோருக்கான திரைப்பட அரங்குகளிலும், குழந்தைகளுக்கான படங்கள் திரையிடப்படுகின்றன.



குழந்தைகளுக்கான திரைப் பட டிக்கெட்டின் விலை 10 கோபெக் (காசுகள்) தான். ஆண்டு தோறும் இங்கு தேசிய குழந்தைகள் திரைப்பட வாரம் கொண்டாடப்படுகிறது.

## எலுமிச்சை அளவுள்ள தேங்காய்

எலுமிச்சம் பழ அளவுள்ள தேங்காயைப் பார்த்திருக்கிறீர்களா? லட்சத்தீவுகளிலுள்ள அதிசயமான தேங்காய்கள், ஒரு கொத்தில் 200 வரை எலுமிச்சையைவிட சற்றே பெரிதாகக் காணப்படுகின்றன.

# கொறிப்பு

—ஒரு குறிப்பு

வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் துறையிலும் தலை சிறந்து விளங்கிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் பெயரால் அமைந்துள்ள இலக்கிய மன்றத்தின் வெளியீடாகக் கரந்தைப் புலவர் கல்லூரியின் சார்பில், "கொறிப்பு" எனும் திங்கள் கையேடு ஒன்று புதிதாக வெளிவந்துள்ளது.

இந்த ஏட்டில் எழில்மிகு கட்டுரைகள், கவிதைகள், எண்ணங்கள் எல்லாம் மலர்ந்திருக்கின்றன. கல்லூரி மாணவர்களின் கை வண்ணம் காட்டும் கண்ணாடி.

பேராசிரியர் மா. ரா. அரசு நெறியாளராகவும், மாணவர்கள் ஆ. இளங்கோவன், மோ. தமிழ் மாறன், த. திலிப்குமார், இரா. குணசேகரன், சு. பாஸ்கரன், ந. பழனி ஆகியோர் ஆசிரியர் குழுவிலும் இடம் பெற்றுள்ளார்கள். இளைஞர்கள் முயற்சி வெல்க!

# அவனிடம் அதிக அன்பு ஏன்?



**ஒ**ரு பண்ணையாரிடத்தில் செங்கோடன், அம்மாசி என்ற இரண்டு பேர் வேலை பார்த்து வந்தார்கள்.

பண்ணையாருக்கு செங்கோடன் இடத்தில் பற்றும் பாசமும் அதிகமாக இருந்தன. அம்மாசிக்கு இது வெறுப்பைத் தந்தது. வேதனையாகவும் இருந்தது.

அம்மாசி ஒரு நாள் பண்ணையாரிடத்தில் வந்து, "எங்களுக்குள் நீங்கள் வேற்றுமை காட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. செங்கோடனிடம் அதிக அன்பாக இருக்கிறீர்கள். அது ஏன் என்று விளங்கவில்லை" என்றான்.

அதைக் கேட்டுப் பண்ணையார் சிரித்தார். அம்மாசியிடம் திரும்பி, "ஏதோ சப்தம் கேட்கிறதே? அது என்னவென்று பார்த்து வா" என்று சொன்னார்.

அம்மாசி வெளியே ஓடினான். சற்று நேரத்தில் திரும்பி வந்தான். "வண்டி போகும் சப்தம்" என்றான்.

"என்ன வண்டி?" என்று கேட்டார் பண்ணையார்.

அம்மாசி மீண்டும் வெளியே ஓடிப்போய்விட்டு வந்து சொன்னான்; "நெல்லு வண்டி..."

"எங்கே போகிறது?"

மறுபடியும் அம்மாசி வெளியே ஓடினான். விசாரித்து வந்து, "முல்லையூருக்குப் போகிறது" என்றான்.

"சந்தோஷம். எந்த ஊரிலிருந்து போகிறது?" என்று கேட்டார் பண்ணையார். அம்மாசி அலுத்துக்கொண்டே வெளியே ஓடிப்போய் வந்தான். "கிளியூரிலிருந்து போகிறது....!" என்றான்.

"எத்தனை வண்டி போகிறது?" என்று கேட்டார் பண்ணையார். அதற்கு மேல் அம்மாசியால் தாள முடியவில்லை.

"ஐயா தாங்கள் கேட்கவேண்டிய எல்லாக் கேள்விகளையும் ஒரே சமயம் கேட்டுவிடுங்கள்.

நினைத்து நினைத்துக் கேட்கிறீர்கள். ஓடிப்போய் விசாரித்து வருவது எனக்குச் சங்கடமாக இருக்கிறது" என்று முணுமுணுத்தபடி வெளியே சென்றான் அம்மாசி. திரும்பி வந்து, "நாற்பது வண்டி போகிறது" என்றான்.

— மு. முத்துக்காளத்தி

பண்ணையார் புன்னகைத்தார். செங்கோடன் அப்பொழுது உள்ளே வந்தான். அவனைப் பார்த்து, "ஏதோ சப்தம் கேட்கிறதே, அது என்னவென்று பார்த்து வா" என்று சொன்னார்.

செங்கோடன் வெளியே ஓடினான். சற்று நேரத்தில் திரும்பி வந்தான். பண்ணையாரைப் பணிந்து விட்டுச் சொன்னான்.

"ஐயா, அது வண்டி போகும் சப்தம். கிளியூரிலிருந்து முல்லையூருக்கு நாற்பது நெல்லு வண்டி போகிறது. நம்முடைய வீட்டைத் தாண்டி ஏற்கெனவே பத்து வண்டி போய்விட்டது. இன்னும் முப்பது வண்டி போகவேண்டும்"

பண்ணையார் அம்மாசியை அருகழைத்து, "அம்மாசி இப்பொழுது தெரிந்து கொண்டாயா, உன்னைவிட செங்கோடனிடம் நான் அதிக அன்பு காட்டும் காரணத்தை.

"உன்னிடம் கேட்ட அதே கேள்வியைத்தான் நான் செங்கோடனிடமும் கேட்டேன். நீ ஒவ்வொரு தடவையும் வெளியே போய் விசாரித்துவிட்டு வந்தாய்.

"செங்கோடனோ ஒரே சமயத்தில் எல்லா விவரமும் சேகரித்து வந்தான். ஒருவரிடம் நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ அப்படித்தான் இருக்கும், அவர் நம்மீது கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும், அவர் காட்டுகின்ற அன்பும்!" என்று இதமாக எடுத்துச் சொன்னார்.

அன்று முதல் அம்மாசி, செங்கோடனிடம் வெறுப்புக் காட்டுவதை விட்டுவிட்டு, தானும் அவனைப் போலவே கெட்டிக் காரனாக வேலை செய்ய முற்பட்டான்.

# பொறுமை

கடலினும் பெரியது பொறுமை—அதைக்
காத்திடல் மக்களின் கடமை!
திடமுடன் இருப்பது அருமை—அது
தினசரி கொடுப்பது பெருமை!

பணிவுடன் அன்பினைச் சேர்க்கும்—துன்பப்
படுத்திடும் நிலையினைத் தீர்க்கும்!
குணமெனும் குன்றினில் நிறுத்தும்—ஒளி
கொடுத்திடும் தீபத்தைப் பொருத்தும்!

மனமென்னும் குரங்கினை அடக்கும்—என்றும்
மாண்புறு வாழ்வினைக் கொடுக்கும்!
சினமென்னும் பேயினைத் தடுக்கும்—எழும்
சீற்றத்தில் பகையினை ஒடுக்கும்!

அமைதியை உள்ளத்தில் ஊட்டும்—என்றும்
அன்பில்லா நெஞ்சினைப் பூட்டும்!
நமக்குமே நல்வழி காட்டும்—பிற
நாட்டிலும் நற்புகழ் நாட்டும்!

—தஞ்சை மணவழகன்



# ஆதிதிராவிடர் நலன்

பெரியார் மாவட்டத்திலிருக்கின்ற மொத்த மக்கட் தொகையில், ஆதிதிராவிடர் எண்ணிக்கை மட்டும் 3,49,498. மலைவாழ் மக்கள் எண்ணிக்கையோ 15,492.

இவ்வகை மாணவர்களுக்கென 11 விடுதிகளும், மாணவியர்க்கென 7 விடுதிகளும், மலைவாழ் மக்களுக்கான உறைவிடப் பள்ளிகள் 6ம், அரசு நலப்பள்ளிகள் 4ம், சமுதாயக் கூடம் ஒன்றும் இங்குள்ளன. இவற்றால் மொத்தம் 1704 மாணவ மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 171 பள்ளிகள் கல்வி உதவித்தொகை பெற்று வருகின்றன.

பெரியார் மாவட்டம்வாழ் ஆதிதிராவிடப் பெருமக்களின் குழந்தைகளும், மலைவாழ் மக்களின் குழந்தைகளும் கல்வி வளம் பெற்றிடவும்-பலவகைத்தொழில் பயிற்சி பெற்றிடவும் என மத்திய அரசும், மாநில அரசும் பெருந் தொகை செலவிட்டு வருகின்றன.

பள்ளி மற்றும் விடுதி மாணவ மாணவியர் 1905 பேர்களுக்கு சீருடை வழங்க மட்டுமே 1983-84ல் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் வாழ் பகுதிக்கெனக் குடிநீர்க் கிணறு, விடுதிப் பராமரிப்பு போன்ற 113 பணிகளுக்கென சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 56 பேர்களுக்கு இந்த ஆண்டில் சிறு தொழிற் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. சிறுதொழிற்கடன் 28 பேர்களுக்கு ரூ. 23,500 வழங்கப்பட்டுள்ளது. உழவு மாடுகளுக்கென நான்கு பேர்களுக்கு மானியமாக ரூ. 2,400 வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், இம்மாவட்டத்தில் கலப்பு மணம் செய்து கொண்ட 7 தம்பதியருக்கு அஞ்சலகச் சேமிப்புப் பத்திரங்கள் மூலமும், ரொக்கமாகவும் ரூ. 30,100 அளித்திருக்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்பிற்கெனச் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெப்பலை கிராமம் முதல் பரிசாக ஆயிரம் ரூபாயும், துக்கநாயக்கன் பாளைய ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏரங்காட்டூர் கிராமம் இரண்டாவது பரிசாக ஐந்நூறு ரூபாயும் பெற்றுள்ளன.

தூய்மையாகப் பாதுகாக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளாக 7 தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

'அரிசனங்கள்' என்றாலே கடவுளின் குழந்தைகள் எனப் பொருள் என்றார் காந்தியடிகள்; அவர் சொல்லுக்கு மதிப்பளித்திடும் வகையில் பெரியார் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் பணிகள் மேலோங்கி நிற்கின்றன.

## காய்கறிச் சங்கம்

பெரியார் மாவட்டத்தில், மற்றபல தொழில்களுக்கு உள்ளதுபோலக் காய்கறி உற்பத்தி மற்றும் விற்பனைக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன.

இதோ உதாரணத்திற்கு ஒன்று—

தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தில் காய்கறி மற்றும் பழ உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நடவடிக்கைகள் சிறப்பாக அமைந்துள்ளன; இதன் துணைத் தலைவர் திரு டி.ஏ. வீரராகவன், "சங்கம் 2.12.83 ல் வியாபாரத்தைத் தொடங்கியது" என்று ஆரம்பித்து இக் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் பற்றி நமக்கு விளக்கினார்.

'செல்வி ஆர். சசிகலா என்ற எழுத்தரும், ஜெயத் நாரு, பரமண்ணா என்ற இரு சிப்பந்திகளும் பணியாற்றும் இந்த விற்பனை நிலையத்தில் இருந்து ஈரோடு சிந்தாமணிக்கே கூட காய்கறி அனுப்பப்படுகிறது.

தங்களுக்காகவே காய்கறி உற்பத்தி செய்து வந்த இந்தப் பகுதி மக்கள் இப்போது கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் விற்றுப் பணம் பண்ணுவதற்காக என்று அதிக அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

190 பேர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தச் சங்கத்தில் எப்போதும் தாய்மார்கள், கையில் பையோடு காய்கறி வாங்க மொய்க்கிறார்கள்







# தோட்டக் கலை

பெரியார் மாவட்டத்தில், தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் ஏற்றமுற்றிருக்கிறது. இதற்கென, இந்த மாவட்டத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது அரசால்.

தாளவாடி, கூடலூர், பர்கூர் போன்ற பகுதிகளில் தோட்டக் கலையின் வளத்தைக் காண முடிகிறது. எலுமிச்சை, பலா மரம், கோவா, காபிச் செடிகள் போன்றவைகளை இட்டரை, பெஜலட்டி, மாவநட்டம், செத்தேசால் போன்ற பகுதிகளில் உள்ள மலைவாசிகள் வாங்கி மிகுந்த ஆர்வத்தோடு பயிரிட்டிருக்கிறார்கள்; பயன்பெற்று வருகிறார்கள்.

ஈரோட்டிலுள்ள வ.உ.சிதம்பரனார் பூங்கா, இந்தத் திட்டத்தின் கீழ்தான் பத்தாயிரம் ரூபாய் செலவில், கடந்த ஆண்டில் வளப்படுத்தப்பட்டது. அதே பணிக்கென இந்த ஆண்டும் பத்தாயிரம் ரூபாயில் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்திவருகிறார்கள். பெங்களூரிலுள்ள லால்பாக்கிலிருந்து அதற்கான அழகுத் தாவரங்கள் வரவழைக்கப்படுகின்றன.

கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகக் கண்டுபிடிப்பான 'கோ-1' மஞ்சள், தோட்டக் கலைத் திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பயிரிடப்பட்டு வருகிறது. சில இடங்களில் 'கோ-1' பிச்சிப் பூ பயிரிடப்பட்டுள்ளது.

மொடக்குறிச்சியில் இத் திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்டுள்ள அணுசரணை ஆராய்ச்சித் திடல் விவசாயப் பெருடக்களுக்குப் பெரிதும் உதவிகரமாக உள்ளது.

தோட்டக்கலை அலுவலர் திரு.அப்பாசாமி, உதவி இயக்குநர் திரு வி.கே.ராஜகோபால் இருவராலும் பெரியார் மாவட்டத் தோட்டக்கலைப் பிரிவு சாதனை பல புரிந்துவருகிறது.

# பெரியார் மாவட்டப் பெரியோர்!



பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில், வீராவேசத்தோடு— வெள்ளையர் மட்டுமல்ல, மைசூர்க்காரர்களும் அந்நியரே என்று போர்க் குரலெழுப்பி மீசை முறுக்கி, கி.பி. 1805ல் தூக்கிலிடப்பட்ட பழைய பட்டக்காரர் தீரன் சின்னமலை பிறந்த ஓடாநிலை என்ற ஊர் பெரியார் மாவட்டத்தில்தான் உள்ளது.

கொடிகாத்த குமரன் என்கிறோமே; அவன் பிறந்தது இம்மாவட்டத்தில் உள்ள சென்னிமலையிலேதான்.

தந்தை பெரியாரும் அவர் துணைவியார் நாகம்மையாரும், சகோதரி கண்ணம்மாளும் மட்டுமேயல்ல; எம்.ஏ., ஈசுவரன், டாக்டர் எல். கே. முத்துசுவாமி, கே. சுப்பண்ணக் கவுண்டர் போன்ற பல விடுதலைப் போராட்ட வீரர்களும் வாழ்ந்தது ஈரோட்டிலேதான்.

# சர்க்கரைச் சந்தை



சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற மற்ற மாவட்டங்களில் இருந்து மட்டுமேயல்லாமல் ஆந்திரம், கேரளம், மேற்கு வங்கம், மகாராட்டிரம் போன்ற பிற மாநிலங்களிலிருந்தும் இங்கே வியாபாரிகள் வந்து போகிறார்கள்.

சர்க்கரையில் ஈ மொய்க்கும்; நமக்குத் தெரியும்; ஆனால் இங்கோ ஏற்றவும், இறக்கவும் வரும் நூற்றுக்கணக்கான லாரிகள் மொய்க்கின்றன. மட்டச் சர்க்கரை, சுண்ணாம்புச் சர்க்கரை, பௌடர் சர்க்கரை என மூன்றாகத் தரம் பிரித்து ஏலம் விடப்படும் சர்க்கரை அந்த லாரிகள் மூலமும், ரயில்கள் மூலமும் வெளியிடங்களுக்குப் பயணம் போகின்றது.



கறிகாய் மார்க்கெட் பார்த்திருக்கலாம். மீன் மார்க்கெட் பார்த்திருக்கலாம். நாட்டுச் சர்க்கரை மார்க்கெட் பார்த்ததுண்டோ? பார்க்காதவர்கள்



பெரியார் மாவட்டம் சித்தோடு சென்றால் பார்க்கலாம்.

நெல்லை ஒருபோகம்தான் பயிர் செய்யலாம்; கரும்புக்கு இரண்டுபோகம். ஆகவே, இந்தப் பகுதியிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் கரும்பையே விரும்பிப் பயிரிடுகிறார்கள். அவர்களே சாறெடுத்துக் காய்ச்சி சர்க்கரையும் தயாரிக்கிறார்கள். கரும்பைச் சர்க்கரை ஆலைகளுக்கு விநியோகிக்கலாம் என்றாலும், அதை விடத் தாமே காய்ச்சி விற்பதில் தான் லாபமிருக்கிறது என்கிறார்கள் அவர்கள்.

அப்படி அவர்கள் தயாரிக்கும் நாட்டுச் சர்க்கரைதான் ஞாயிறு தோறும் கூடும் சித்தோடு நாட்டுச் சர்க்கரைச் சந்தைக்குக் கொண்டு வரப்படுகிறது. அப்படி கொண்டுவரும் சர்க்கரையைக் கமிஷன் வியாபாரிகள் வாங்கி ஏலம் விடுவார்கள். வாங்கி வெளியில் விற்போர் ஏலமெடுப்பார்கள்.

தை, மாசி, பங்குனி, சித்திரை வைகாசியில் தான் சர்க்கரைத் தயாரிப்பு அதிகமிருக்குமாம்.

''கரும்பைச் சீனியாக்குவதில் லாபமா? சர்க்கரையாக்குவதில் லாபமா?'' என்ற நம் கேள்விக்குப் பதிலளித்த அந்தச் சந்தைத் தலைவர் திரு என்.சி.ரங்கசாமி ''ஒரு டன் கரும்பில் ஒரு மூட்டை சீனி தயாரிக்கலாம்; ஆனால் நாட்டுச் சர்க்கரையோ இரண்டு மூட்டை தயாரிக்கமுடியும்'' என்றார்.

திருகே. சரவணாபெரியசாமி செயலாளராகவும், திருகே. கிருஷ்ணன் உதவிச் செயலாளராகவும் இருந்து நிர்வகிக்கும் இந்த நாட்டுச் சர்க்கரை மார்க்கெட் சுமார் 6 ஏக்கர் பரப்பளவில்அமைந்திருக்கிறது. இதற்கு அருகிலேயே இன்னொரு சிறு சர்க்கரைச் சந்தையும் இருக்கிறது.

கமிஷன் வியாபாரிகளுக்கு, வாங்குவோருக்கு, விற்போருக்கு, ஏற்றுமதி செய்வோருக்கென இங்கே தனித்தனிச் சங்கங்கள் இருக்கின்றன.

—பி. எல். ஆர்.



கீழ்பவானி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழக அரசால் இந்திய அரசின் உதவியுடன் செயல்படும் மூன்று பாசன திட்டங்களில் ஒன்றாகும். பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகளின் மூலம் அளவான நீரை உபயோகித்து முழுப்பரப்புக்கும் பாசனமளித்து அதிக உற்பத்தி காணுதல் இத்திட்டத்தின் நோக்கம்.

பெரியார் மாவட்டத்தில் சிறப்புறச் செயல்பட்டு வரும் இந்தப் பாசன மேம்பாட்டுப் பணிகள் தனிப்பட்ட பணிகளான நிலம் சமன் செய்தல், நிலம் சீர்படுத்து

# பவானி பாசனப் பகுதி மேம்பாடு

தல், களர் மற்றும் உவர்ப்பு நிலங்களைச் சீர்திருத்துதல், சமுதாய வேலைகளான பாசன வாய்க்கால் மற்றும் வடிகால்கள் அமைத்தல் என இரு வகையினதாகும்.

அதிகமாகக் கசியும் பாசன நீரைத் தடுப்பது; நிலத்திலிருந்து நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சும் பழமையான முறைகளைத் தவிர்ப்பது; வாராபந்தி முறையைப் பயன்படுத்தி, போதிய அளவு பாசன நீரை, உரிய நேரத்தில் தவறாது விவசாயிகளுக்குக் கொடுப்பது ஆகியவைகளே கீழ் பவானி பாசன மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

நிலத்திலிருந்து நிலத்திற்குத் தண்ணீர் தேக்கிப் பாய்ச்ச அதிகமான நீர் செலவாகிறது. மேலும் கசிவினாலும் நீர் சேதமாகிறது. பாசன முறையில் கட்டுப்பாடு இல்லை. இதனால் மிகக் குறைவான பாசனத் திறமை ஏற்பட்டு அதன் விளைவாகப் பயன் குறைகிறது.

இந்தக் குறைபாடுகளைப் போக்க பாசன மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியே பாசன வாய்க்கால் அமைக்கப் படுகிறது. பாசன நீரைத்திறமை

யாகப் பயன்படுத்த நிலம் சமன் செய்வது அவசியம்தேவைப்படுவ தால், அது இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. பாசன நீரைத் திறமையாகச் செயல்படுத்த ஆங்காங்கே கட்டு மானத் தொட்டிகள் கட்டப்படு கின்றன.

விவசாயிகளுக்கு இதற்கென நீர் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. பாசன நீரை முறையாகப் பயன்படுத் தும் வாராபந்தி முறை செயல் பட இப்போது ஒரு உட்கோட் டம் துவங்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் 1982-ஆம் ஆண் டின் பிற்பகுதியிலிருந்து செயல் படத் துவங்கியது. இத் திட்டத்



தைச் செயல்படுத்த ஒரு மேற்பார்வைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) மற்றும் ஒரு செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தலைமையிலும் ஐந்து உதவி செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்கள்) மற்றும் அதற்குண்டான பணியாளர்களுக்கும் அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மொத்த பாசனப் பரப்பு 2,07,000 ஏக்கர்களாகும்.

1983-84-ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு 12,500 ஏக்கர் பரப்பில் ரூபாய் 62 இலட்சம் செலவில் பாசன மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செய்யப்பட்டன. இப்பரப்பளவு 52 கிராமங்களிலுள்ள 264 மதகுகளின்கீழ் பாசனம் பெறுவதாகும். இத் திட்டத்தில் மொத்தமாகச் சுமார் 120 கிலோ மீட்டர் நீளமுள்ள காரைவாய்க்கால் (Lined Channel) அமைக்கப்பட்டுள்ளது. சீராக நீர் பங்கீடு செய்ய ஒழுங்குமுறை கட்டுமானத் தொட்டிகள் ஆயிரக்கணக்கில் கட்டப்பட்டுள்ளன. விரைவில் இங்கே வாராபந்தி முறை புகுத்தப்படவுள்ளது.

1983-84ஆம் ஆண்டில் சுமார் 400 மதகுகளின் கீழ் வரும் 19,000 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் ஒரு கோடிக்கும் மேலான செலவில் திட்டம் தொடர முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இத்திட்டச் செலவுக்கு மத்திய அரசு-பணிக் குழுவிற்குண்டான செலவின மான்யம் 50 சதவிகிதமும் நில அளவுகள் மற்றும் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு 50 சதவிகித மான்யமும், வாராபந்தி முறையை அமல்படுத்த 50 சதவிகித மான்யமும் பாசன காரைவாய்க்கால்கள் அமைக்கச் செலவினமாக மான்யம் 25 சதவிகிதமும், 25 சதவிகிதக் கடனும் உதவியுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விவசாயிகளிடமிருந்து கடன் தொகை ஐந்தாண்டுகளில் சம தவணையாக வசூலிக்கப்படும். அளவான நீர் உபயோகித்து முழுப் பரப்பும் பாய்ச்சுதல்; பாசன நீர்ச் சேதத்தைத் தடுத்தல்; விவசாயிகளுக்கு உயர்ந்த வருமானம்; உற்பத்தியை அதிகப்படுத்துதல் போன்ற நன்மைகள் பெரியார் மாவட்ட மக்களுக்கு இந்தக் கீழ்பவானி பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டத்தால் கிட்டவிருக்கிறது.



# தேரழுந்தூரில் தமிழ்த் திருவிழா

சான்றோர் இதயம் களிக்கக் கம்பராமாயணத்தை வழங்கிய கவிநாயகர்-கவிமாமன்னர் கம்பர் பிறந்த தேரழுந்தூர்த் திருநிலத்தில், தமிழக அரசு சார்பில் அறநிலையத்துறை அமைக்கும்கம்பர் கோட்டத் கால்கோள் விழா 1984 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17,18 ஆகிய நாட்களில் சிறப்பாக நடந்தது.

முதல் நாள் நிகழ்ச்சி(17.3.84) சனி காலை 8 மணியளவில் கோகிலகான இசைச் செல்வர்கள் திரு எஸ்.ஆர். ஜி.எஸ். வசந்தகுமார் மோகன்தாஸ் சகோதரர்கள் குழுவினரின் நாயன இசையுடன் விழா ஆரம்பமாயிற்று. அறநிலையத்துறை ஆணையர் திரு கு.ஆளுடைய பிள்ளை, இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார்.

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு மு.மு. இஸ்மாயில் தலைமை வகித்தார்.

''கம்பர் கோட்டத்துக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னால் அப்போதைய ஆளுநர் ஸ்ரீபிரகாசா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, நின்றுவிட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தூண்டுகோலாக இருக்கும் அமைச்சர் வீரப்பன் அவர்கள் இந்தக் கம்பர் கோட்டத்தைத் தொடங்கி முடிக்க முனைந்துள்ளார். ஆண்டுதோறும் இந்த விழா நடக்கும் என்றும் கூறியுள்ளார். இது தமிழர்கள் மறக்க முடியாத விழா'' என்று கூறினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.சத்பதி, இ.ஆ.ப. வாழ்த்துரை வழங்கினார்.

திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் திரு சுந்தரமூர்த்திதம்பிரான் ஆசியுரை வழங்கிப் பேசினார்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளுக்கும், பெருமைமிகு எம்பார் விஜயராகவாச்சாரியருக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்த மாண்புமிகுசெய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்,

'கமபன பிறந்த நாட்டிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தமிழைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற பெரியோர்களை இலக்கியச் சான்றோர்களைத் தினமும் நினைவூட்டிக் கொண்டிருக்கிறவர்களை, தமிழகத்தின் தளநாயகர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சார்பில் பாராட்டுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

ஏற்புரை சொன்னார் எம்பார்,

திருமுருக கிருபானந்தவாரியார் பேசுகையில், ''தமிழுக்குக் கதி இருவர் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். கம்பரும் திருவள்ளுவரும்! வள்ளுவருக்குக் கோட்டம் அமைந்துவிட்டது. கம்பருக்குச் செய்யவில்லை. யாரப்பா செய்வார்? வீரப்பன் செய்வார். ஆர். எம் வீரப்பன்! உள்ளத்தால் உயர்ந்தவர்'' என்றார்.

கம்பர் காட்சி-உரையரங்கம் பேராசிரியர் திரு அ.ச. ஞானசம்பந்தன் தலைமையில் ஆரம்பமாயிற்று. ''தமிழ்ச் சாதியில் புரையோடியிருக்கிற குறையை எடுத்துக் காட்டினார் வள்ளுவர். புலனடக்கம் இல்லாததனால் களப்பிரருக்கு அடிமைப்பட்டது தமிழ் இனம். புலனடக்கத்துக்கு அழுத்தந்தர நினைத்தவன் கம்பன் என்றார்.

திரு சிதம்பரம் சுவாமிநாதன், அழியா அழகனையும், திரு சுகிசிவன் அருங்குணச் சீதையையும்,

திரு அ.வெ. இராசகோபாலன் இளைய நம்பியையும், பேராசிரியர் சொ.சத்தியசீலன் இலங்கை வேந்தனையும் படம் பிடித்துக் காட்டினர்.

பிற்பகல் பேராளர் பேரவையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தலைவர் திரு.க.பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ,

தேரழுந்தூர்ப் புலவர் திரு. ஆ.இராமபத்திரன்,

திரு குத்தாலம் இரெ. இராசமாணிக்கம், எம்.எல்.ஏ,

தருமை ஆதீனம் திருக்கயிலாயப் பரம்பரை திருப்பெருந் திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், புலவர் கீரன் ஆகியோர் பேசினர்.

''இலங்கைத தம்பியருள் ஏற்றமுடையவன் வீடணன்'' என்ற பொருள்பற்றி வழக்காடுமன்றம் நடந்தது. பேராசிரியர் திரு பா. நமச்சிவாயம் நடுவர். பேராசிரியர் திரு இரா. செல்வ கணபதி வழக்காடினார். புலவர் திரு கோ. சாரங்கபாணி எதிர்வழக்காடினார். 'வீடணன் ஏற்றமுடையவன்' என்று நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

இரவு, திரு நரசிம்மாச்சாரியார் திருமதி வசந்தலட்சுமி குழுவினரின் கம்பராமாயண நாட்டிய நாடகமும், கலைமாமணி முத்துக் கூத்தன் குழுவினரின் பொம்மலாட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றன.

இனிமைத் தமிழுக்கு எழில் சேர்க்கின்ற வகையில் இரண்டாம் நாள் நிகழ்ச்சி (18.3.1984) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில், தமிழக அரசவை இளங்கலைஞர்கள், திருப்பாம்புரம் திரு.டி.கே.எஸ்.சாமிநாதன் திரு.டி.கே.எஸ். மீனாட்சி சுந்தரம் சகோதரர்கள் குழுவினர் நாயன இசையுடன் ஆரம்பமாயிற்று.

''இவர்கள் பேசினால்'' கவியரங்கத்தை, திருமதி சௌந்தரா கைலாசம் தொடங்கி வைத்தார்.

கவிமாமணி திரு நா.சீ. வரதராசன், முன்னிலை வகித்த தார்.

தலைமை தாங்கிய கலைமாமணி திரு புத்தனேரி ரா.சுப்பிரமணியம், ''புரட்சித்தலைவர் அவர்கள் முன்னிற்கும் இக்காலம் முத்தமிழின் பொற்காலம். அன்று தசரத ராமச்சந்திரன், இன்று சத்துணவு ராமச்சந்திரன்'' என்றார்.

கவிஞர் மரியதாஸ் கும்பகர்ணனாகப் பாடினார்.

கவிஞர் புதுவயல் செல்லப்பன் அனுமனாக வந்தார்.

கவிஞர் பழநி - இளங்கம்பன் இலக்குவனாக அரங்கேறினார்.

கவிஞர் திருமதி அரசு-மணிமேகலை இராமராகப் பாடினார்.

கவிஞர் இ.முத்துராமலிங்கம் சீதையைப் பாடினார்.

கவிஞர் தமிழவேள் தசரதனாகவும், கவிஞர் சொ.சொ.மீ சுந்தரம் இராவணனாகவும், கவிஞர் ம. வே. பசுபதி பரதனாகவும் அரங்கேறி அருங்கவிதைகள் தந்தனர்.

மாலையில் பேராளர் பேரவையில் திரு இரா. கிருபாகரன், இ.ஆ.ப. பங்குபெற்றார்.

திரு ஏ.எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. பேசுகையில், கம்பர் கவிநயத்தைக் கேட்பவர்கள் முன்கொண்டுவந்து நிறுத்தினார்.

திரு எஸ். டி. காசிராஜன் இ.ஆ.ப.பேசுகையில், ''கவிச்சக்கரவர்த்தி கம்பனை, இன்னொரு கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் அன்றைக்கே புகழ்ந்து பாராட்டிவிட்டார்'' என்றார்.

அடுத்து, கலை தெரி மன்றம். கம்பர் பெரும் புகழுக்குக் காரணம் கற்பனை வளமா? கதையின் நலமா? என்பது பொருள்.



திருக்கோயில் ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள் தொடங்கி வைத்தார். டாக்டர் ஔவை நடராசன் நடுவராக இருந்தார்.

'கற்பனை வளமே' என்ற அணியில் டாக்டர் சரசுவதி ராமநாதன், திரு த. இராமலிங்கம், டாக்டர் சு. பாலச்சந்திரன் ஆகியோரும்,

'கதையின் நலமே' என்றஅணியில் திருமதி இளம்பிறை மணிமாறன், புலவர் அறிவொளி, செல்வி சுதா சேஷய்யன் ஆகியோரும் வாதிட்டனர். 'கற்பனை வளமே' என்று தீர்ப்புச் சொன்னார் நடுவர்.

இரண்டுநாள் விழாவின் இறுதிக் கட்டமாகக் கம்பர் கோட்டக் கால்கோள் விழா நிகழ்ச்சி இடம் பெற்றது. வணிகவரி-அறநிலையத்துறைச் செயலர் திரு ஆர்.சண்முக சிகாமணி, இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவைத்தொடங்கி வைத்து சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு மு.மு. இஸ்மாயில் அவர்கள் பேசினார்.

தஞ்சைக் கலைக்கூடம் வெளியிட்ட ''தெய்வத் திருமேனிகள்'' என்ற நூலை, தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப.அவர்கள் வெளியிட்டார்.

''எனக்கு, இந்த விழாவில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி. இது உதட்டிலிருந்து வருவதல்ல, உள்ளத்திலிருந்து வருவது. நான் இந்த வட்டாரத்தைச் சேர்ந்தவன். தேரழுந்தூரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவன்'' என்றார்.

திரு குத்தாலம் இரா. இராசமாணிக்கம், எம்.எல்.ஏ. திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''உலகம் புகழும் இலக்கியத்தை வழங்கி, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் தலை நிமிர்ந்து நிற்கிற இனம் தமிழினம். அதனால்தான் இன்று இந்த விழா எடுக்கிறோம்.

''கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு பூபாகத்தில் வாழும் தமிழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கம்பர் காப்பியத்தின் நாயகன் அன்றைக்கு அயோத்திராமன். இன்றைக்குக் கம்பர் கோட்ட நாயகன் -எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன்!

''புலவர் வரிசையிலே மூத்த புலவனாக விளங்கும் கம்பனுக்கு போட்ட அடிக்கல் அடிக்கல்லாகவே நிற்கிறது. யார் யார் காலத்தில் எது எது நடக்க வேண்டுமோ அதுஅது நடக்கிறது.

''கம்பரை மறந்துவிட்டுத் தமிழைக் காப்பாற்ற முடியாது. தாய்-தந்தையரை வணங்காமல் ஊரைக் காப்பாற்ற முடியாது.

''கம்பனைப் பாராட்ட அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறோம். இது பேரறிஞர் அண்ணா கற்றுத் தந்த வழி. அண்ணாவின் அறவழி சான்றோர்களைப் போற்றுவதாகும்.

''கம்பருக்குச் சென்னையில் கோட்டம் எழுப்பப்படும் என்று 1978 நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டார்கள் என்றார்கள். முதலில், பிறந்த மண்ணில்; பிறகு சென்னையில்!



கம்பன் கோட்டம் - மாதிரி வடிவம்

''ஆலயங்களிலிருந்து இந்தக் கம்பர் கோட்டத்துக்கு 12 இலட்சம் ரூபாய் செலவிட இருக்கிறோம். தமிழ் இல்லாமல் ஆன்மீகம் இல்லை. ஆன்மீகம் இல்லாமல் தமிழ் இல்லை ''என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சுற்றுலாத் துறை சார்பில் தேரழுந்தூர் மக்களுக்கு நூலகத்துக்கான மேசை, நாற்காலி, நூல்கள் ஆகியவற்றை வழங்கியும், கல்வெட்டைத் திறந்து வைத்தும் பேருரையாற்றினார்.

''திடீர் மழைக்குப் பிறகு கவி மழை, தமிழ்மழை பெய்திருக்கிறது. இங்குள்ள மரம் மட்டைகளும்கூடக் கவிபாடும். கவின் கம்பர் கோட்டம் எனும் போதினிலே இன்பத் தேன் வந்துபாயுது காதினிலே. விழவு மலிமூதூர், கலைமலி மூதூர் என்று தமிழ் இலக்கியத்தில் சொல்வார்கள்.

''வாழ்க்கை, நெறிகாட்ட வந்த புலவர் வள்ளுவர். காப்பியத் தலைவர்களுக்கெல்லாம் வழிகாட்டிய பெருமை கம்பருக்கு உண்டு.

''வெள்ளத்தின் பெருக்கைப் போல் கவிப்பெருக்கும் கலைப் பெருக்கும்மேவுமாயின் வாழ்க்கை பெரும்பயன் பெற்றுத் திகழும். கம்பர் பெயரையும் புகழையும் அவர் ஏற்றம் பெற்ற வரலாற்றையும் ஆன்றோரும் சான்றோரும் அழகுபட எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.'' என்றார்.

அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடைய பிள்ளை, இ.ஆ.ப. நன்றி நவின்றார். குடந்தைச் சோழன் போக்குவரத்துக் குழுவினரின் மெல்லிசையுடன் விழா இனிது முடிந்தது.

—முத்துக்காளத்தி



## இப்படி ஒரு கோயில்

பெரியார் மாவட்டம் தாளவாடியிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் மல்லிகார்ஜுனப்பா கோயிலுக்குப் பெரும்பாலும் கர்னாடக வாசிகளே சாமி கும்பிட வருகிறார்கள். ஆனால் இங்கே பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை; கோயிலுக்கு ஒரு பர்லாங்கிற்கு முன்பாகவே அவர்கள் நிறுத்தப்பட்டுவிடுகிறார்கள்!



# ‘1985-ல் இளம்பிள்ளை வாதமில்லாத சென்னை’

“அனைவரும் ஒன்றுபட்டால் முடியாதது எதுவுமில்லை. ‘1985ல் இளம்பிள்ளை வாதமில்லாதசென்னை’யை உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இதை ஒரு புனிதமான அறப்போராக, நோயை எதிர்க்கும் பெரிய இயக்கமாக உருவாக்க நாம் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

30.4.84 அன்று சென்னை கே.கே.நகரில் உள்ள அரசினர் மறுவாழ்வுக்கான மருத்துவ நிலையத்தில் இம்பாக்ட் இந்தியா அமைப்பின் சார்பில் நடந்த ‘1985ல் இளம்பிள்ளைவாதமில்லாதசென்னை’தொடக்கவிழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

‘இம்பாக்ட் இந்தியா’ அமைப்பின் இயக்குநர் டாக்டர் ஐ.எஸ். சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''ஐ.நா.வளர்ச்சித் திட்டம் உலகச் சுகாதார நிறுவனம், மத்திய சுகாதாரம்மற்றும் நல்வாழ்வுத்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்பால் இந்த அமைப்பு செயல்பட்டுவருகிறது. இந்தியாவில் ஒரு கோடியே 50 இலட்சம் குழந்தைகள், குணப்படுத்தக்கூடிய இளம்பிள்ளைவாத நோயினால் அவதிப்பட்டு வருகின்றனர்.

''சென்னையில் எம்.ஜி.ஆர். நகரில் 3 ஆயிரத்து 868 குடும்பங்கள் இருக்கின்றன. இங்குள்ள 1,499 குழந்தைகளுக்குப்போலியோ தடுப்பு மருந்து அளிக்கப்படவில்லை. 59 குழந்தைகள் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளை நோயிலிருந்து பாதுகாக்க இந்த அமைப்பு, மே மாதம் முதல் ஒவ்வொரு பகுதியாக நேரில் சென்று போலியோ மருந்துகளை அளிக்கும்''.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இது ஒரு நல்ல திட்டம். இதனை விரிவுபடுத்தி தமிழ்நாடு முழுக்க அறிமுகப்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் இந்தத் தொடக்க விழா நடைபெறுகின்றது.

''இளம்பிள்ளைவாதத் தடுப்பு போல, கண் பார்வை இழந்தவர்களுக்கும் நாம் உடனடியாகத் திட்டம் தீட்ட வேண்டும். ஆண்டுதோறும் ஒரு இலட்சம் பேர் கண்புரை நோயினாலும், சத்துக்குறைவினாலும் கண்பார்வை இழக்கிறார்கள். அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

''விபத்துக்கான அவசரக் கால உதவியும், காவல்துறைஒத்துழைப்புடன்செயல்படுகிறது. ஸ்கூட்டர் விபத்துக்களையும் நாம் தவிர்க்கவேண்டும். ஸ்கூட்டர் ஓட்டிகள் கண்டிப்பாகத் தலைக்கவசம் அணிவதை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு தீவிரமாக யோசித்து வருகிறது.''

விழாவில், மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு ஆர்.சண்முகம் இ.ஆ.ப., மருத்துவக்கல்வித்துறை இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன், வோல்டாஸ் நிறுவன இயக்குநர் திரு ஏ.எச். டுபாகோவாலா ஆகியோர் பேசினர். இம்பாக்ட் இந்தியாவின் மண்டல ஆலோசகர் திருமதி ஜெல்மா லாசரஸ், போலியோ தடுப்பு மருந்தை அன்பளிப்பாக வழங்கினார்.

விழாத் தொடக்கத்தில், ஊனமுற்ற குழந்தைகள் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடி அமைச்சருக்கும் மற்றவர்களுக்கும் மாலைகள் அணிவித்தனர். இறுதியில் திரு டி. ஏ. கந்தசாமிப்பிள்ளை நன்றி நவின்றார்.

—பி. வி. கிரி.







# நலிந்தோர்க்கு உதவி

சமுதாயத்தில் நலிந்தோர்கள் சிறு தொழில்கள் துவக்குவதற்கு சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா கடன் உதவி வழங்கும் விழா 2-4-84 அன்று பீட்டர்ஸ் சாலையில் உள்ள ஆதர்ஷ் வித்யாலயா மேனிலைப்பள்ளிக்கலையரங்கில் நடைபெற்றது.

நிதிநிறுவனங்கள் துறைச் செயலர் திரு வெ. சுந்தரம் இ.ஆ.ப. வரவேற்புரையாற்றுகையில், ''வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கட்குத் தக்க நேரத்தில் உதவி செய்து வருகிறோம்'' என்றார்.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை உரையாற்றுகையில், ''கடந்த ஆறு மாதகாலமாக நடவடிக்கை எடுத்து இன்று முதல் கட்டமாக, 1,061 பேருக்கு உதவித்தொகை கடனாக வழங்கப்படுகின்றது. மற்ற வங்கிகளும்கடன் உதவிகள் வழங்க உள்ளன. ஏழைகளின் முகத்தில் சிரிப்பு வரவேண்டும் என்பதே எங்களது இலட்சியமாகும்'' என்றார்.

அரசு மேலவைக் கொறடா திரு ஜேப்பியார், எம்.எல்.சி., திரு ப. அங்கமுத்து எம். எல். சி. திரு என். வெங்கடேசுவரன் (தலைமை மேலாளர் சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா வட்டார அலுவலகம், சென்னை) திரு மல்லையா (தலைமை மேலாளர் சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா பிராந்திய அலுவலகம் சென்னை) ஆகியோர் உரையாற்றினர்.



ஏழை, எளிய மக்களுக்குக் கடன் உதவித் தொகைகளை வழங்கி, தொடக்கவுரையாற்றிய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''வாங்கிய கடன்களை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும், வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன். 48 வங்கிகள் மூலம் தமிழக மக்களுக்குக் கடன் உதவி செய்யப்படுகின்றது. 234 தொகுதிகளிலும் இதுபோன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

''இட்லிக்கடை, பூ வியாபாரம், காய்கறிக்கடை, மீன் விற்பனை, தையற்கடைமுதலியதொழில்கள் செய்வதற்கு ரூ. 200 முதல் 1,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

''ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை வசதி உள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்று கருதி, அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்து செயலாற்றி வருகின்றது.

''மக்களை வாழ வைக்க அரசும் வங்கிகளும் உதவிபுரிவது பாராட்டத்தக்க செயல் ஆகும்''

அ. ம. விநாயகம்



# வசதிக் குறைவிலும் வளமான கல்வி

**ப**ச்சையப்பன் அறநிலையத்தைச் சேர்ந்த செல்லம்மாள் மகளிர் கல்லூரியின் பேரவைகளின் நிறைவு விழா, விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா மற்றும் மரம்நடு விழா 1984 மார்ச் 30ஆம் நாளன்று சென்னை கிண்டியில் சிறப்பாக நடைபெற்றன.

கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி இந்திரா சோமசுந்தரம் அனைவரையும் அழகு தமிழில் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கு, அவர் வாசித்தளித்த வரவேற்புக் கவிதை, இலக்கிய நயம் மிக்கதாகத் திகழ்ந்தது.

போக்குவரத்து ஆணையரும், பச்சையப்பன் அறங்காவலர் குழுத் தலைவருமான திரு எஸ்.டி.காசிராசன், இ.ஆ.ப. தலைமை வகித்தார். அப்பொழுது அவர் பேசுகையில், ''1979க்குப் பிறகு இந்தக் கல்லூரியில் வேகமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அப்பொழுது கேட்டால் கூட சலுகைகள் கிடைக்கவில்லை. இப்பொழுது கேட்பதற்கு முன்னாலேயே அரசு வசதிகள் செய்து கொடுக்கிறது'' என்று கூறினார்.

கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டும், விளையாட்டுப் போட்டிகள், பாடங்கள் ஆகியவற்றில் முதன்மையாக வந்தவர்களுக்கும், மாறுவேடப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசளித்து மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றினார்.

''இந்தக் கல்லூரி மாணவிகள் வேலை நிறுத்தம் செய்த காட்சி நினைவில் இருக்கிறது.

''79க்கு முன் 79க்குப் பின் என்று வரலாற்றைப் பிரித்துக் காட்டினார் திரு காசிராஜன். பெண்கள் கல்லூரியில் வேலை நிறுத்தம் நடைபெறுகிறதே, ஆண்களை விடக் கடினமான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

''நெருக்கடி ஏற்படும்பொழுது பூனை கூட புலியாக மாறும். இங்கே வந்து பார்த்த பிறகு உங்கள் குறைகளை நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது. கட்டடம் வெடித்துக் கொண்டிருக்கிறது. மாணாக்கியர் படிக்கிற கல்லூரியாகத் தெரிவில்லை. இங்கே தியாக உணர்வோடு வேள்வி நடத்திக் கொண்டிருக்கிற ஆசிரியைகளையும் மாணாக்கியர்களையும் கண்ணிலே எடுத்து ஒற்றிக் கொள்ள வேண்டும்.

"இந்தக்கல்லூரி முதல்தரமான வசதிகளுடன் கூடிய கல்லூரியாக மாறியாக வேண்டும். இந்தக் கல்லூரிக்காக உழைத்துச் சம்பாதித்த பணத்தைக் கொடுத்துள்ள செல்லம்மாளை நீங்கள் தினமும் வணங்க வேண்டும். சட்ட விதிகள் ஏற்படுத்தி, ஆலயங்கள் சார்பில் சென்னையில் இந்தக் கல்லூரியைத் தத்து எடுத்துக் கொள்ளத் தந்தால் ஏற்றுக் கொள்வோம்.

''தமிழ்நாட்டுக் கல்வித்துறையில் தமிழ்ச் சகோதரிகள் சிறப்பிடம் பெற்றிருக்கிறார்கள். இதனை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களே பல தடவை குறிப்பிட்டு ஆண்களை எச்சரித்திருக்கிறார்கள். இந்தக் கல்லூரி மாணவிகள் இங்குள்ள சிரமங்களைத் தாங்கிக் கொண்டு படிப்பில் சிறந்து விளங்குவதைப் பாராட்டுகிறேன்''.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பேச்சு மாணவிகள் - ஆசிரியைகள் இடையே மகத்தான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

—முத்துமீனா








# அண்ணல் அம்பேத்கார்

**த**மிழ்நாடு அரசின் சார்பில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 94வது பிறந்தநாள் விழா 22.4.84 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு, தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணபாரதி, இ. ஆ. ப. வரவேற்புரையாற்றிப் பேசுகையில்,

''நம்மிடையே ஏற்றத்தாழ்வுகள் இன்னும் இருக்கின்றன. ஏற்றத்தாழ்வுகள் நீங்கினால்தான் முன்னேற முடியும். இருபது அம்சத்திட்டத்தின் ஆதிதிராவிடர் நலம் பற்றிய திட்டத்தில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது'' என்றார்.

திருமதி நிர்மலா சுரேஷ் பேசுகையில், ''அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கை உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் இருக்கிற சாதிவேறுபாடுகள் எந்த நியாயத்திற்கும் உட்படாமல் இருக்கிறது'' என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் உரையாற்றுகையில், ''பேரறிஞர் அண்ணா அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களை பிராமணர்கள் பாராட்ட வேண்டும். பிராமணர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பாராட்ட வேண்டும் என்றார். அதேபோல இந்த விழா அமைந்துள்ளது.

டாக்டர் அம்பேத்கார் பிறந்த காலத்தில் சாதிக் கொடுமைகள் அதிகமாக இருந்து பள்ளிகளில் குழந்தைகள் சேரமுடியாமல் இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அம்பேத்கார் அவர்கள் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றார். அம்பேத்கார் அவர்கள் படித்துப் பட்டம் பெற்றதும் இல்லாமல் தான் படித்த கல்வியைத் தன்னுடைய சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பயன்படுத்தினார்'' என்று கூறினார்.

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதாவது:

''டாக்டர் அம்பேத்கார் இந்தியாவில் மட்டுமல்லாது, அகில உலகச் சரித்திர நாயகனாகத் திகழ்ந்தார். அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைப் பிரிவை உருவாக்கியவர் அவர். அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது அவரைப் பற்றி யாரும் குறை சொல்லவில்லை. அந்த அளவு அவருடைய கருத்துக்கள் இருந்தன. ஆதிதிராவிடர்களுக்குச் சலுகைகள் தேவை இல்லை. உரிமைகள் வேண்டும் .

''அகில உலக முதலாவது வட்ட மேசை மாநாட்டில் அம்பேத்கார்தான் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் துணிவுடன் பேசினார்.

''பிறப்பினால் ஒருவனை எடை போடமுடியாது. அகில உலகம் போற்றும் வகையில், பல் வே[...]ிகள், உணர்வுகள் இருக[...]ிய நாட்டில் அரசியல் சட்ட[...] இயற்றியது பாராட்டத்த[...]து. ஆனால் இன்று இரண்டு பக்க அளவில் மசோதா கொண்டுவருவது கஷ்டமாக உள்ளது.

''உலகில் எந்தப் பகுதியாக இருந்தாலும், கஷ்டப்படும் பகுதி மக்களின் பிரதிநிதியாகக் கருதக் கூடியவராக அம்பேத்கார் திகழ்ந்தார்.''

திரு ஜி.மூர்த்தி எம்.எல்.ஏ., பேசுகையில், 'மற்ற தலைவர்கள் - சமூகத்தினர் இன்று அம்பேத்கார் அவர்களைப் பாராட்டிப் பேசுவதுதான் சிறந்த செயல் ஆகும்' என்றார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு க.பாலசுப்பிரமணியன் எம்.எல்.ஏ., பேசுகையில், ''இந்தியாவின் 4-வது மகான் அம்பேத்கார். அம்பேத்காரின் துணிவு, வீரம், கருத்துக்களை மக்கள் பின்பற்ற வேண்டும்'' என்றார்.

தொலைக்காட்சி இயக்குநர் திரு ஆர்.எஸ். சவுடேகர் பேசுகையில்,'' அம்பேத்கார் அவர்களின் தந்தை இராணுவத்தில் பணியாற்றியவர். பேராசிரியராக அம்பேத்கார் கல்லூரியில் பணியாற்றியவர். மராட்டிய அரசு வெளியிட்டுள்ள வெளியீடுகளைப் போன்று தமிழக அரசும் அம்பேத்கார் பற்றித் தமிழில் வெளியீடுகள் வெளியிட வேண்டும். அரசு விடுமுறையும் விடவேண்டும்'' என்றார்.

முன்னாள் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து சிறப்புரை ஆற்றுகையில், ''மனிதாபிமானத்தோடு வாழ்ந்தவர் அம்பேத்கார். அவர் பெயரில் புத்தகங்கள் அதிக அளவில் வெளிவர வேண்டும். அம்பேத்கார் பிறப்பால் இந்து, ஆனால் சாகும்போது இந்து அல்ல என்று கூறினார். அம்பேத்கார் ஓர் சீர்திருத்தவாதி. சமுதாயப் பிரச்சினைகளை அறிந்து அதைப் போக்க செயல்பட்டார்" என்றார்.

விழா இறுதியில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் நன்றி கூறினார்.

**அ. மருது**



# கோவையில் பாவேந்தர் விழா

இதுவரை சென்னையிலே கொண்டாடப்பட்டு வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பிறந்தநாள் விழா, இந்த ஆண்டு முதன் முதலாகக் கோயம்புத்தூரிலுள்ள மாநகராட்சிக் கலையரங்கில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

29.4.84 அன்று காலை 9 மணியளவில், பழனி இசைக் கல்லூரி மாணவர்களின் நாயன இசை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது. மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் இவ்விழாவில் பார்வையாளர்களாக வருகை தந்திருந்தார்கள்.

செய்தி - மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையோடு துவக்கப்பட்ட பாவேந்தரின் 94வது பிறந்த நாள் விழாவிற்குத் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் தலைமை தாங்கினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோருக்குத் தகும் மதிப்பளிக்கும் நாடு இது. அந்த வகையிலேயே பாவேந்தர் பாரதிதாசனாரின் பிறந்த நாள் விழா தமிழக அரசால் இன்று கொண்டாடப்படுகிறது.

''நாட்டு உணர்வுக்கு முதன் முதல் பாரதி பாடினான்; மொழி உணர்வுக்குப் பாடினார் பாரதிதாசன். அவருக்கிருந்த அந்தப் பற்று, தாய் மீதிருந்த பாசம் போன்றிருந்தது. ஆடவர் மகளிரிடையே மலர்வதுதான் காதல் என்போம் நாம். அவரோ, தமிழ் நாட்டவர்க்கெல்லாம் தமிழ் மொழி மீதுதான் காதல் என்றார். பெண்ணடிமை தீருமட்டும் இங்கே மண்ணடிமை தீருவது முயற்கொம்பே என்றவர் அவர். தமிழுணர்வும் தன்மான உணர்வும் இருந்ததாலேயே சமுதாயப் பிரச்னைகள் பற்றி யாருக்கும் அஞ்சாமல் அவர் பாடினார்.

## அமைச்சர் உரை

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது:

''மற்றவர்கள் தமிழ் எழுத்துக்களை எழுதினார்களென்றால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் தமிழைப் பற்றியே எழுதினார்; தமிழர்களைப் பற்றியே எழுதினார்.

''அமெரிக்க நாட்டிலே ஒரு பாரதிதாசன் இருந்தான், அவன் பெயர் வால்ட்விட்மன்'' என்று கூறி அவரைப் பெருமைப்படுத்தினார் பேரறிஞர் அண்ணா. பாரதியாரின் தாக்கம் - வேகம் எல்லாம் பாவேந்தரின் பாடல்களிலே அப்படியே இருப்பதை நாம் காணலாம். பாரதி, காலம் தந்த கவிஞர் என்றால், பாரதிதாசன் காலத்தை வென்ற கவிஞன்.

''தமிழினம் மேம்படவில்லையே என்ற ஏக்கத்தின் வெளிப்பாடே பாரதிதாசன் கவிதைகள். தமிழின் வளர்ச்சிக்காகவாழ்வதானால் இந்தியா வாழட்டும்; தமிழின் தளர்ச்சிக்காக வாழ்வதானால் அது வீழட்டும்' என்று பாடிய துணிவு அவருடைய தனிச் சொத்து.

## கருத்தரங்கம்

'பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில்...' எனுந்தலைப்பில் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில்-முதலாவதாக 'காப்பிய அமைதி' என்ற தலைப்பின் கீழ் பேசிய திரு இல.செ.கந்தசாமி- ''சாதி ஒழித்தல் ஒன்று; தமிழ் வளர்த்தல் மற்றொன்று என்பதே பாரதிதாசனாரின் ஒப்பற்ற கொள்கைகள். இப்படிப்பட்ட விழாக்களெல்லாம் அப்படிப்பட்ட எழுச்சியை உண்டாக்குவதாக அமைய வேண்டும்'' என்றார்.

'மகளிர் முன்னேற்றம்' என்ற தலைப்பில் உரையாற்றிய திருமதி உமையாள் முத்து, ''கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் என்று கூறி பெண்கல்வியை வலியுறுத்தி, கைம்பெண்களும் வாழ்வு பெறக் குரல்கொடுத்து, குழந்தை மணக்கொடுமை கண்டு குமுறி, கண்ணகி பற்றியும் மணிமேகலைபற்றியும் தனிக் காப்பியம் பாடி, பெண்கள் முன்னேறப் பாடுபட்டவர்-பாட்டெழுதிக் குவித்தவர் பாரதிதாசனார்'' என்றார்.



'தமிழுணர்வு' எனும் பொருளில் பேசுகையில், பேராசிரியர் சோ.சத்தியசீலன் குறிப்பிட்டதாவது; ''இந்த நாட்டில் எல்லோருக்கும் தமிழ், ஒரு மொழி; பாவேந்தருக்குத் தமிழ் என்பது உணர்வு; மொழி என்பது உயிர், அவர் பிறந்த பின்னாலேதான் இந்த நாட்டில் தமிழுணர்வு பிறந்தது என்பதைப் புரட்சிக் கவிஞரின் பிறந்தநாள் செய்தியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

டாக்டர் சிவகாமிசுந்தரி 'தன்மானஉணர்வு' என்பதையொட்டி உரை நிகழ்த்துகையில் ''பாரதிதாசனாரின் எழுத்துக்களில் தன்மான உணர்வு பெரிதும் காணப்படத் தந்தை பெரியாரே முழுமுதற் காரணம்'' என்றார். ''தமிழையே தன்மானத் தமிழ் எனக் குறிப்பிடுமளவுக்கு அவருடைய எழுத்து, அவருடைய பேச்சு, கவிதை எல்லாமே தன்மானத்தை அடிப்படையாகக் கொண்டே பிறந்தன'' என்றும் அவர் கூறினார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சிலம்பொலி திரு சு. செல்லப்பன் 'உலகக் கண்ணோட்டம்' என்ற பொருளில் பேசிய பேச்சு விவரம் வருமாறு:

''நான் என்ன சொல்லுகிறேன் என்று பாருங்கள்; நான் என்ன செய்கிறேன் என்பதைப் பார்க்காதீர்கள், என்றவர் புரட்சிக் கவிஞர். 'கடினமான பாட்டுக்குக் கனகசுப்புரத்தினம்' என்றிருந்த அவர் பாட்டில், பிற்காலத்திலே பாரதியாரோடு சேர்ந்த பிறகே புதுநடை - எளியநடை உண்டாயிற்று. தொடக்கத்திலே தேசீய இயக்கத்தில் பற்றுக் கொண்டிருந்த அவர், ராட்டைப் பாட்டு, வயலூர் சுப்பிரமணியக் கடவுள் மேல் பக்திப் பாடல்களெல்லாம் பாடியவர்தான். பிறகு தான் ''மடையர்களும் பாடிடுவார் கடவுட்பாடல்'' என்று பாடும் அளவுக்கு மாறினார். தமிழ் என் உயிர் என்று சொன்ன முதற் கவிஞன் பாரதிதாசன் தான். தமிழையே பாடிக் கொண்டிருந்த அவன் உலகப் பற்றோடு இருந்திருக்க முடியுமா என்பார்கள்; தன் குழந்தை மீது பற்று வைக்காத எவனும் உலகக் குழந்தைகள் மீது பற்று வைக்க முடியாது. அவரெழுதிய ஆத்திசூடியில் 'அனைவரும் உறவினர்' என்றெழுதி, அதற்கு 'உலகமக்கள் அனைவரும் நமக்குஉறவினர்கள்' என்று பொருளும் எழுதியிருக்கும் அவர், 'உலகம் பொது', 'வையம் வாழ வாழ்' என்றெல்லாம் உலக நோக்கோடுதான் அதில் எழுதியிருக்கிறார்.

## மாலை நிகழ்ச்சிகள்

புலவர் சுந்தரராசனார், புலவர் சையத்தாசுதீன் ஆகியவர்கள் கள் பாவேந்தரின் பாடல்களை இசையோடு, பாட, மாலை நிகழ்ச்சி தொடங்கியது.

செய்தி - மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு வி .டி. வீரப்பன் வரவேற்புரையாற்றினார்.

பின்னர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் - கவிஞர்கள் திரு.முத்துராமலிங்கம் (எதிர்பாராத முத்தம்), திருமதி குருவம்மாள் (இருண்ட வீடு), திரு.சிதம்பரநாதன் (குடும்ப விளக்கு),. திரு.சக்திக் கனல் (தமிழியக்கம்), திருமதி நிர்மலா சுரேஷ் (இசையமுது), திருமதி அன்புவல்லி (பாண்டியன் பரிசு), திரு.சிற்பி பாலசுப்பிரமணியம் (அழகின் சிரிப்பு) ஆகியோர் பங்கேற்றனர்.

மாவட்ட செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் திருபொன் சுப்பையன் நன்றியுரையாற்றினார்.

# கோவை பொருட்காட்சி நிறைவு விழா



கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைத் திடலில் அமைந்திருந்த அரசுப் பொருட்காட்சி நிறைவு விழாவும், பாரதிதாசனாரின் பிறந்தநாள் விழாவும் (29.4.84) சிறப்புற நடைபெற்றன.

மாலை 5 மணியளவில், பொருட்காட்சித் திடலில் அமைந்திருந்த அறிஞர் அண்ணா கலையரங்கில் - அரசவைக்கலைஞர் டாக்டர் சீர்காழி கோவிந்தராசன், டாக்டர் எஸ்.ஜி.சிவசிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சி விழாத் தொடக்கமாக அமைந்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ந.ஆதிமூலம் இ.ஆ.ப., 52 நாட்கள் நடைபெற்ற இந்தப் பொருட்காட்சியின் நிறைவு விழாவில் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவுக்கு, மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் திறந்துவைத்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், சிறந்த கவிஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவியரசு நா. காமராசனுக்கு 4 பவுனில் உருவாக்கப்பட்ட பாரதிதாசன் விருதுப்பதக்கமும், பத்தா




யிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கிச் சிறப்பித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே.வி.கந்தசாமி, கோவைத் தம்பி, உவமைக் கவிஞர் சுரதா ஆகியோர் உரையாற்றினர்.

கவியரசு நா.காமராசன் பேசுகையில், ''நான் பெற்ற விருதுக்கு என் திறமை மட்டுமே காரணமல்ல, நான் எங்கிருந்தபோதும் என்மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் காட்டி வந்த அன்பும் ஆதரவுமே காரணம்'' என்று பெருமையோடு குறிப்பிட்டார்.

**கல்வியமைச்சர்**

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு.அரங்கநாயகம் அவர்கள் பேசியதாவது.;

''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திராவிட இயக்கத்தின் ஆணிவேராக இருந்தவர். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் - தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவைப் போற்றுவது போலவே பாவேந்தர் பாரதிதாசனாரையும் போற்றுவார்கள். சமுதாய முன்னேற்றத்திற்கெனப் பாடிய அவரது பாடல்கள், தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களிலெல்லாம் இசை நிகழ்ச்சிகளாக நடத்தப்பட வேண்டும். அரசு அதற்கு என்றைக்கும் நல்லாதரவு தரும்.''

**செய்தித்துறை அமைச்சர்**

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தின் தளநாயகராம் புரட்சித்தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ் வளர்ச்சிக்கென எடுத்துவரும் முயற்சிகளைத் தமிழகம் அறியும். தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்குகிற நம் முதல்வரின் தன்மைக்கு, கோவையில் அரசு சார்பில் ஒரு நாள் விழாவாகக் காலை முதல் நடத்தப்படும் இந்தப் பாவேந்தரின் பிறந்த நாள் விழா ஒரு உதாரணம்.

''எங்களுக்கு முன்னாலே ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள், நாங்கள்தான் தமிழைக் காக்க வந்தோம்' என்று சொல்லிக் கொண்டார்களே தவிர, அப்படி நடந்து கொண்டார்களில்லை. மனோன்மணீயம்சுந்தரம்பிள்ளை எழுதிய 'நீராரும் கடலுடுத்த' என்ற பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாக்கி யிருக்கிறார்கள். மகிழ்ச்சிதான். ஆனால் அந்தப் பாட்டைச் சிதைத்து, கருத்தே மாறும்படி ''ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்...'' என்ற அடியையே நீக்கியிருக்கிறார்களே; செய்யலாமா? நியாயந்தானா?

''தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை எனத் தமிழின் வளர்ச்சிக்குத் தனியொரு துறையே அமைத்திருப்பது இந்த அரசு.

''இது பொருட்காட்சி நிறைவு விழாவும் ஆகும்; ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல டிக்கட் எடுத்துக்கொண்டு பொருட்காட்சி காண வந்தவர்களால் அரசுக்கு வருமானம்; கடைசி நாளான இன்றைய வசூல் மட்டுமே 20 ஆயிரம் ரூபாயைத் தாண்டியிருக்கிறது. இங்கே பாவேந்தரின் பிறந்த நாள் விழாவும் நடத்தப்படுகிறது. இந்தப் பொருட்காட்சி மூலம் ஏறத்தாழ ஏழே முக்கால் இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாய் வரை நிகர வருவாய் -இலாபம் வந்திருக்கிறது.

**நிதியமைச்சர்**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

''ஆட்சிப் பொறுப்பிலிருப்போர் கலையுள்ளம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னான் பேரறிஞன் பிளாட்டோ. அந்த வகையிலே திகழ்பவர்தான் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர்.

''நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் முன்னாலே காந்திக்கும் நேருவுக்கும் மட்டுமே அரசின் சார்பில் விழா எடுக்கப்பட்டது. பிறகுதான் பாவேந்தர் பாரதிதாசன் போன்ற அறிஞர் பெருமக்களுக்கு எல்லாம் நாங்கள் விழா எடுத்து வருகிறோம். விரைவில் ராஜ ராஜ சோழனின் ஆயிரமாவது முடிசூட்டு நாள் விழாவும் அரசு சார்பிலே நடத்தப்படவிருக்கிறது.

''எட்டு வயதிலே கவிதை எழுதிப் புகழ்பெற்றான் பாரதி; பிரஞ்சு நாட்டுக் கவிஞன் விக்டர் ஹ்யூகோ பதினைந்து வயதிலே கவிதை எழுதிப் பாராட்டப்பட்டான்; எமிலிஜோலா பதினைந்து வயதிலேயே எழுத்தால் பெருமை பெற்றான்; பேகன் பதினாறு வயதிலும், இர்வின் 20 வயதிலும், மாஜினி இருபத்திரண்டு வயதிலும் இணையற்ற எழுத்தாற்றல் மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். பாரதிதாசனோ தமது பத்தாவது வயதிலேயே பாரதியின் முன்னால் கவிபாடிக்காட்டிப் புகழும் பாராட்டும் பெற்றவர். விசையொடிந்த தேகத்தில் வேகம் தோன்றப் பாடிய புரட்சிக் கவிஞருக்கு விழா எடுப்பதில் 'தமிழக அரசு பெருமை கொள்ளுகிறது.''

**அரங்கங்களுக்குப் பரிசு**

பொருட்காட்சியில் பங்கேற்ற அரங்குகளுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். அதன் விவரங்கள் வருமாறு:

அரசுத்துறை அரங்குகளில், ஊரக வளர்ச்சித்துறை, சிறுசேமிப்புத் துறை, இந்துசமய அறநிலையத்துறை ஆகியவற்றுக்கு முதல் பரிசு. இரண்டாம் பரிசு பெற்றது மருத்துவக் கல்வித் துறை அரங்கு. அரசு சார்புத் துறை அரங்குகளில் முதல் பரிசை சேரன் போக்குவரத்துக் கழகம், கோவை மாநகராட்சி இரண்டும் பெற்றன; குடிநீர் வடிகால் வாரியம் இரண்டாம் பரிசு பெற்றது.

மத்திய அரசுத் துறைகளின் அரங்குகளில் தென்னிந்திய ரயில்வேயுக்கு முதல் பரிசு; கைவினைப் பொருட்கள் அரங்குக்கு இரண்டாம் பரிசு. கார்போமா குழு அரங்குக்கு மூன்றாம் பரிசு. தனியார் அரங்குகளில் ராயல் ஏஜன்சீஸ், சந்திரிகா அரங்கு இரண்டும் முதல் பரிசைப் பெற்றன.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**—இல. இராசேந்திரன்**





# நலிந்த மக்கள் நலம் பெற..

சமுதாயத்தில் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டுக்காக, பஞ்சாப் நேசனல் வங்கி 23.4.84 அன்று சென்னை தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் கடன் வழங்கும் விழாவை நடத்தியது.

விழாவிற்கு வந்திருந்தோரை மண்டலமேலாளர் திரு ஆர்.கே. குப்தா வரவேற்று உரையாற்றுகையில், 'கடன் பெறுகிறவர்கள் வாங்கிய கடனை முறையாகத் திருப்பிச் செலுத்தினால், இந்த வங்கி மேலும் கடன் உதவி செய்யும்' என்றார்.

நலிவுற்றவர்கட்குக் கடன் உதவித் தொகைகளை வழங்கி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதாவது;

''இன்று 1,000 பேருக்கு மேல் பல்வேறு உதவிகள் இந்த வங்கி மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கொடுத்த முதலீட்டை நல்லமுறையில் செலவு செய்து பயன் பெற வேண்டுகிறேன். தேசிய மயமாக்கப்பட்டபின் வங்கியின் நோக்கம் இன்று நிறைவேற்றப்படுகின்றது.

'எல்லா வங்கிகளும் 30·/.லிருந்து 40·/.கடன் உதவி நலிவுற்ற மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாங்கிய கடனை வங்கிகளுக்குத் திருப்பிக் கொடுத்தால்தான் வங்கி நிர்வாகிகளுக்கு உற்சாகம் ஏற்படும்.

'' இங்கு கடன் உதவி நலிவுற்ற மக்களுக்கு முன்வந்து கொடுத்த பஞ்சாப் நேசனல் வங்கிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தலைவர் திருமதி ஈ. வெ. கி. சுலோசனா சம்பத் அவர்கள் தலைமை உரையாற்றுகையில்,

''நலிந்த மக்களை வளம்படுத்தப் பாடுபட்டார் பெரியார். நல்லபல ஆற்றலால் மக்களை மேம்படுத்தப் பாடுபட்டார் அண்ணா. முதல்வர் அவர்கள் மற்றவர்கள் சமமாக வாழவேண்டுமென்று கருதி இதுபோன்ற பணிகளைச் செய்து ஊக்கம் அளித்து வருகிறார். ரூ.6.5 இலட்சம் செலவில் கடன் உதவி வழங்கப்படுகிறது.

''இந்தத் திட்டத்தின் கீழ் நலிவுற்ற மக்கள் முன்னேற்றம் பெற ஒரு சிறந்த வாய்ப்பாகும். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நல்ல முறையில் வாழ்க்கையில் முன்னேற்றமடைய உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்''.

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய். எஸ். எம்.யூசுப் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், ''நலிந்த மக்களுக்கு உதவிசெய்ய வந்த பஞ்சாப் நேசனல் வங்கியின் பணியைப் பாராட்டுகிறேன். அக்காலத்தில் அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கியில் கடன் உதவிகள் மிகப்பெரிய பணக்காரர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. அதனால் பணக்காரர்கள் பெரிய பெரிய செல்வந்தர்களாக வளர்ந்தார்கள். ஆனால் இப்பொழுது இத்திட்டத்தின்கீழ் பழங்குடியினர், ஆதிதிராவிடர், பெண்கள் பயன்பெறுகின்றனர்'' என்றார்.

விழா இறுதியில் வங்கி வட்டார மேலாளர் திரு கே.எஸ். சேகர் நன்றி கூறினார்.

**—அ. ம. விநாயகம்**

---

இந்த வங்கி....

பஞ்சாப் நேஷனல் வங்கி சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே 1895ல் இந்திய மக்களுக்காக இந்தியர்களாலேயே இந்தியர்களின் மூலதனத்துடன் லாகூரைத் தலைநகராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட முதல் இந்திய வங்கி என்ற தனிச்சிறப்புடையது. மாபெரும் தேசியப் போராட்ட வீரர்களும், தேசப் பற்றுமிக்க தலைவர்களுமான பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய், சர்தார் தயாள் சிங், மஜீதியா, லாலா ஹரிகிருஷ்ணன் லால், மகாத்மா ஹன்ஸ்ராஜ், புருஷோத்தம் தாஸ் தாண்டன் போன்ற பெரியர்களின் பெரு முயற்சியால் இது உருவானது.

சுயவேலை வாய்ப்புக்காகப் பலவகைத் திட்டங்களின் மூலம் இவ்வங்கி சமூகத்தில் நலிவுற்ற 13,240 பேருக்கு (மார்ச் 1984 கணக்குப்படி) உதவிசெய்துள்ளது.

---





''நாகர்கோவில் இடலாக்குடியில் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரின் நினைவு மண்டபம் கட்டும் இடத்தைப் பார்வையிட்டும், சமாதியில் மலர்மாலை வைத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மரியாதை செலுத்திலார்கள்.

விழாவில் அமரர் ஜீவா குடும்பத்திநைரும், செய்குத்தம்பிப் பாவலர் குடும்பத்தினரும் சிலைகளைச் செய்த சிற்பிகளும் சிறப்பிக்கப்பட்டனர்.

தொல்காப்பியம்தான். தொல்காப்பியம் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

''செய்குத் தம்பிப் பாவலரைப் பற்றி என் மனத்தில் பதிய வைத்தவர் கலைவாணர்தான். கலைவாணர் தமிழுக்குத் தொண்டு புரிந்தார். எல்லோருக்கும் உரிய நேரத்தில் மரியாதை கொடுத்தார்.

''நினைவு ஆற்றல் மிகுந்தவர் செய்குத் தம்பிப் பாவலர். எனவேதான் அவர் சதாவதானியாகத் திகழ முடிந்தது. செய்குத் தம்பிப் பாவலரைப் பற்றி இக்கால இளைஞர்கட்குத் தெரியாது. அவர் செய்த சாதனைகளையெல்லாம் மக்களுக்குத் தெரிவிக்க அரசு விரும்புகிறது. இங்கு கட்டப்படும் மண்டபத்தில் பாவலரின் நூல்கள் தயாரிக்கப்பட்டு, நூலகம் போன்று அமைக்கப்படும்.

''1934ல் கலைவாணர் என். எஸ்.கிருஷ்ணன்தான் எனக்கு ஜீவாவை அறிமுகப்படுத்தினார். ஜீவாவை முதன் முதலில் பார்த்த போது குஸ்தி வீரனைப்போன்று காணப்பட்டார். அப்போது அவருக்கு வயது 21. காங்கிரஸ் காரனாக நான் இருந்தேன். நான் முதன் முதலில் கேட்ட அரசியல் கூட்டம், பெரம்பூரில் நடந்த 'ஜீவா' பொதுக்கூட்டம் தான்.

''தமிழுக்காகச் சேவை செய்த தமிழ் அறிஞர்களை இந்த அரசு மறக்காது. வெளிநாட்டினரும் தமிழுக்குத் தொண்டு செய்தால் அவர்களையும் இந்த அரசு மதிக்கும்''

விழா இறுதியில் பொதுப் பணித்துறைச் செயற் பொறியாளர் திரு எம்.ஞானராஜ் நன்றி கூறினார்.

அ. மருது



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.




தமிழரசு


தமிழரசு



# தமிழறிஞர்களை தமிழக அரசு மறக்காது!

தமிழ்நாட்டுக்குத் தொண்டு செய்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு அதங்கோட்டாசான் சிலை திறப்பு விழா, அமரர் ஜீவா சிலை திறப்பு விழா, சதாவதானி, செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மண்டபம் அடிக்கல் நாட்டு விழா 29.4.84 அன்று நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கில் சிறப்புடன் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ண பாரதி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''இந்தியாவின் தென்கோடியில் உள்ள பகுதி; பல அறிஞர்களை உருவாக்கிய மாவட்டம் இது. அவர்கட்குச் சிறப்புச் செய்யும் வகையில் இந்த விழா கொண்டாடப் படுகிறது'' என்றார்.



விழாவிற்குத் தலைமை வகித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எல்.கே. திரிபாதி, இ ஆ ப. அவர்கள் உரையாற்றுகையில், 'தமிழறிஞர்களை இந்த அரசு மிகவும் பெருமைப்படுத்திப் பாராட்டுகிறது' என்றார்.

திரு.என்.டென்னிஸ், எம்.பி. பேசுகையில், 'இன்று வரலாற்றின் மிக முக்கிய நாள். தமிழ் மொழிக்கும், தேசத்திற்கும் இவர்களது தொண்டு பாராட்டத் தக்கது' என்றார்.

தமிழ்நாடு சட்டமன்ற ஜனதா கட்சித் தலைவர் திரு பி. முகமது இஸ்மாயில், எம்.எல்.ஏ. பேசுகையில், ''பல உண்மைகளை இது போன்ற விழாக்களின் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்துவது பற்றி மகிழ்ச்சி. உலகத் தமிழ் நிறுவனம், மறைந்த தமிழ் அறிஞர்கள் பற்றி ஆராய்ந்து வருவது பாராட்டத் தக்க செயலாகும்'' என்றார்.

சட்டமன்றஅகில இந்திய பார்வர்டு பிளாக்தலைவர், திரு எஸ். ஆண்டித்தேவர் எம். எல். ஏ. பேசுகையில், ''வருங்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்வதற்கு இதுபோன்ற விழாக்கள் நடத்தப்படுகின்றன. எந்த அரசியல் கட்சித் தலைவர் என்று கருதாமல் யார் என்று பாராமல் பாராட்டுகின்றது இந்த அரசு'' என்றார்.

திராவிடக் கழகத் தலைவர் திருவாரூர் கே. தங்கராசு பேசுகையில, ''இந்தியாவின் ஸ்டாலின் ஜீவா என்று குறிப்பிட்டால் தவறு இல்லை. செய்குத் தம்பிப் பாவலர் இளம் வயதில் நன்னூலை மனப்பாடமாகப் பயின்ற இலக்கணப் பண்டிதர், அகத்தியம் பற்றி உலகத் தமிழ் நிறுவனம் ஆராய வேண்டும்'' என்றார்.

கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் திரு சு.முத்துக்கிருஷ்ணன் பேசுகையில்,

'குமரி மாவட்டத்தில் தமிழ்ப் புலவர்கள் தோன்றித் தமிழை வளர்த்தது பெருமைக்குரியது' என்றார்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு குமரி அனந்தன் எம்.எல்.ஏ., பேசுகையில், 'உலகத்தின் தொட்டில் ஏதென்ஸ் என்றால், தமிழின் தொட்டில் குமரியாகும். அருந்தமிழில் பழம்பெரும் சொற்கள் குமரி மாவட்டத்தில் நிறைய உள்ளன. இந்தச் சொற்கள் அழிந்து விடக் கூடாது. அவற்றைச் சேகரித்துக் காக்கும் பணியில் அரசு ஈடுபட வேண்டும் என்று விரும்புகின்றேன். சிலேடைப் பேச்சில், எழுத்தில் திறன் படைத்தவர் பாவலர். ஆதிதிராவிட மக்களை சுசீந்திரம் கோவிலுக்கு அழைத்துச் சென்றவர் ஜீவா'' என்றார்.





தமிழ்நாடு முஸ்லிம் லீக் செயலாளரும் செய்குத்தம்பிப் பாவலரின் பேரனுமான திரு செய்குத்தம்பி அவர்கள் பேசுகையில், 'இங்கு தமிழுக்கு, தமிழ் அன்னைக்கு விழா நடத்தப்படுகிறது. யார் வல்லவர்களாக இருந்தாலும் அவர்களது நினைவாகச் சின்னங்கள் ஏற்படுத்துவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்' என்றார்.

நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு எம். நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் பேசுகையில், ''குமரி மாவட்டத்தில் இன்று எழுச்சி மிக்க நாளாகும்'' என்றார்.

சட்டமன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைவர் திரு என்.சங்கரய்யா எம். எல்.ஏ. அவர்கள் பேசுகையில், 'தமிழுக்கு சீரிய வகையில் தொண்டு செய்த குமரி அறிஞர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் வாழ்ந்த காலத்தை எண்ணி மக்கள் செயல்பட வேண்டும்' என்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் (இ) தலைவர் திரு எம்.பழனியாண்டி அவர்கள் பேசுகையில், 'சட்டமன்றத்தில் பணியாற்றியபோது எனக்கும் ஜீவாவுக்கும் தொடர்பு உண்டு. இது போன்ற தமிழ் அறிஞர்கட்கு இவ்வளவு நாள் சிறப்புச் செய்யாதது வருந்தத் தக்கது' என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு எம்.கல்யாண சுந்தரம், எம்.பி. அவர்கள் பேசுகையில், ''நானும் ஜீவாவும் 45 ஆண்டுகள் தொடர்பு உள்ளவர்கள், தமிழ் அறிஞர்கட்கு விழா எடுப்பது பாராட்டுக்குரியது'' என்றார்.

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ஓய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் உரையாற்றுகையில், 'பலருக்கு அதங்கோட்டாசான் பற்றித் தெரியாது. பொதுவுடைமையைச் சார்ந்த ஜீவா அவர்கள் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். பாவலர் செய்குத் தம்பி போன்றவர்கட்கு விழா நடத்தி மறுமலர்ச்சி ஏற்படுத்தித் தந்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கட்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்றார்.

மாண்புமிகு சுற்றுப்புறச் சூழ்நிலை அமைச்சர் திரு எஸ்.என். ராசேந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில், ''சாதிமத பேதத்திற்கு அப்பாற்பட்ட வகையில் முதல்வர் அவர்கள் இந்த விழாவை ஏற்படுத்தி உள்ளார்கள். தமிழ் அறிஞர்கட்கு இந்த அரசுதான் சிறப்புச் செய்து வருகின்றது' என்றார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது;

''மலையாள நாட்டில் இருந்த தமிழ்ப்பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் ஆர்வம் காட்டியவர் ஜீவா. அவர் தலைமறைவாக 'இருந்த காலத்தில் நள்ளிரவில் சாயபு வேடத்தில் என்னைச் சந்தித்தார்.

''திரு.வி.க., கதிர்வேலுப் பிள்ளை ஆகியோருடன் சேர்ந்து ஒரே மேடையில் பேசினார் பாவலர். எல்லைப் போராட்ட வீரர்களுக்கும், இன்னும் பல அறிஞர்கட்கும் இதுபோன்ற விழாக்களை நடத்த வேண்டும்.

சிலைகளைத் திறந்து வைத்தும், நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியும், நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்கூறும் நல்லுலகத்துக்குப் பெருமை சேர்க்கும் முப்பெரும் விழா இது. இந்த முப்பெரும் விழாவில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கிறது. சிலை வைப்பது, மண்டபம் ஏற்படுத்துவது அரசின் கொள்கையானாலும், அதை யார் விமர்சனம் செய்தாலும் தமிழ் அறிஞர்கட்கு இதுபோன்ற விழாக்களைச் செய்ய வேண்டிய கடமையாக அதைக் கருதுகின்றேன். எனக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஒரே ஒரு கடவுள்தான். அந்தக் கடவுள்தான் என் தாய். என்னை மனிதனாக வளர்த்தது அண்ணா என்ற கடவுள்.

''தமிழைப் பற்றிச் சந்தேகம் வந்தால், அதற்குத் தெளிவான பதில் தேட தொல்காப்பியத்தைப் பார்க்கிறோம். தமிழுக்கு அடிப்படை ஆதாரங்கள் தந்தது





[illegible] சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்ப்பதற்குரிய வசதிமிக்க பேருந்தினை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் (2-5-'84ல்) துவக்கி வைத்தார்.



தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் (5-5-'84ல்) திறந்து வைத்தார்.

## 'பொதுமக்களின் நெஞ்சங்களில் நிறைந்த பெருந்தகை ராஜா சர்



தமிழக அரசியலிலும், தமிழ் இசை வளர்ச்சியிலும், தொழில் துறையிலும், கல்வித் துறையிலும் பெரும் பங்கு கொண்டு பணியாற்றிய ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் 12—5—'84ல் மறைந்தார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. க. ராசாராம், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன், தமிழக அரசு தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம் இ. ஆ. ப. மற்றும் பல பெருமக்கள் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர்.

13—5—'84 அன்று ராஜா சர் உடல் எரியூட்டப் பெற்றது.

## ராஜாசர் மறைவுக்கு மேதகு ஆளுநர் விடுத்த இரங்கல்



தமிழ்நாடு புகழ்பெற்ற ஒரு தலைவரை இழந்து விட்டது. இது பெரிய இழப்பாகும்.

பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக அவர் பல தொண்டுகளைச் செய்திருக்கிறார். பொது வாழ்க்கையில் அவர் ஓர் அமைச்சராகவும், சட்ட மன்ற உறுப்பினராகவும், சிறந்த கல்வியாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

தமிழ் இசையின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணிகள் பொதுமக்களின் மனத்தில் என்றும் நிலைத்து நிற்கும்.

அவருடைய பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர்
திரு எஸ். எல். குரானா

## மாண்புமிகு முதல்வர் விடுத்த இரங்கற் செய்தி



தமிழுக்காக, தமிழ் இனத்துக்காக, கல்விக்காக பாடுபட்ட மகத்தான சேவை செய்த, ஒரு நல்லவரை, பெரியவரை, பெரிய மனது படைத்தவரை இழந்திருக்கிறோம்.

இதை ஈடு செய்யும் வகையில் இன்னொருவர் இருக்கிறாரா என்று எந்த வகையில் பார்த்தாலும், அவர் இருந்த இடம் பூர்த்தி செய்ய முடியாத சூனியம் நிறைந்ததாகத் தெரிகிறது.

அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம். ஜி. ஆர்.

# செந்தமிழ் வளர்த்த செட்டிநாட்டரசர்

"பெருமைக்குரிய செயல் என்றால் உயிரையும் கொடுத்து, பழி வரும் செயல் என்றால் இவ்வுலக முழுவதுமே பெறுவதாக இருப்பினும் ஒதுக்கி வாழும் பண்பாளர்களால்தான் இவ்வுலகு நிலை பெற்றிருக்கிறது'' என்ற கருத்தைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று தெளிவாக்குகிறது. தன்னலமே கருதாது பிறருக்கென வாழும் பெற்றி பெற்ற பெருந்தகையாளர்கள் உலகில் உள்ளமையால்தான், மண்ணுலகு சிறந்தோங்குகிறது. அறச்சிந்தையும் அருளாண்மையும் விருந்தோம்பும் இயல்பும் விடாமுயற்சியும் மன்பதைக் கண் மனித இனம் ஏற்றம்காண வேண்டுமென்னும் அவாவும் பெருகிட வாழ்ந்த ஒப்பற்ற மனிதர், உயர் பண்பாளர் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள்

மறைந்த முத்தையா செட்டியார் அவர்கள் அண்ணாமலை எனும் ஆழ்கடலில் தோன்றிய ஒளியுமிழ் முத்து; செட்டிநாடெனும் மலையிடைப் பிறந்த தென்றல்; தமிழ் எனும் இனிமை சேர் யாழில் வெளிப்பட்ட இசை. கல்வியெனும் நந்தாவிளக்கில் ஏற்றிய தீபம்.

## அட்டைப்படக் கட்டுரை



ஆ. முத்துசாமி
வெளியீட்டு அலுவலர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை,

'கானாடு காத்தான் போனால் வறுமை தொலையும்' என்ற பழமொழி உள்ளது. அறமும் பொருளும் நிறைந்த இந்நகரம் நகரத்தார் வாழும் ஊர்களுக்குத் தலைநகர் எனப் போற்றப்படுகிறது. தமிழக வள்ளல் பெருந்தகை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும் ராணி சிதை ஆச்சிக்கும் 5-8-1905ஆம் நாள், பாட்டி வீடான பள்ளத்தூரில் முத்தையா பிறந்தார்.

இவருக்குச் செட்டிநாட்டு மரபுப்படி அவரது பாட்டனாரான திரு. முத்தையா செட்டியாரின் பெயரிடப்பட்டது. இளமையில் தொடக்கக் கல்வியை வீட்டிலேயே ஆசிரியர்கள் மூலம் கற்றவர், 1916ல் ஒன்பதாவது வயதில் சென்னை வேப்பேரியிலுள்ள பிரசன்டேசன் கான்வெண்ட்டில் சேர்க்கப்பட்டார். பின்னர் 1919-இல் சுவார்ட் பள்ளியிலும், திருச்சியிலுள்ள செயின்ட் ஜோஸப் கல்லூரியிலும் படித்து எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றார். புகழ் பெற்ற சென்னை மாநிலக் கல்லூரியில் அரசியலையும் வரலாற்றையும் விருப்பப் பாடமாக எடுத்து பி.ஏ. பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றார்.

அன்றைய வழக்கப்படி முத்தையா, தனது 12 வது வயதில் பள்ளத்தூரைச் சேர்ந்த இராமசாமி செட்டியாரின் செல்வி மெய்யம்மை ஆச்சியை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். இவர்களுக்கு அன்பும் பண்பும் மண்டிய மக்கள் இருவர் பிறந்தனர். மூத்தவர் குமாரராஜா முத்தையா என்பவரும், இளையவர் திரு.இராமசாமி என்பவரும் ஆவர்.

மாநிலக் கல்லூரியில் திரு. முத்தையா பயிலும்போது இந்தியாவில் பெரும்புகழ் படைத்த அறிஞர்களைப் பேராசிரியர்களாகக் கொண்டார். 1925ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம் பெற்றார். இவர், எத்துறையில் ஈடுபட்டாலும் அத்துறைக்கு எழிலும் பயனும் தந்தார். திருக்குறள், தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களில் மிகுந்த ஆர்வம் கொண்டு படித்து இன்புற்றார்.

ஐராவதி ஆற்றின் கரையில் அமைந்த இரங்கூனிலிருந்து சீனாவின் எல்லையிலுள்ள பாமோ வரை நாற்பது கிளைகளைக் கொண்ட வாணிபம் இவரது குடும்பத்தினருக்குப் பர்மாவில் இருந்தது. அங்கு ஓராண்டு தங்கியிருந்து வாணிப நுட்பங்களையெல்லாம் அறிந்தார்.





இந்தியாவின் அழகுமிக்க நகரங்களுள் ஒன்றான சென்னை, 1933க்கு முன்னர் நகரசபையாகத்தான் இருந்தது. 1929ல் தனது 24 வது வயதில் சென்னை நகரசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1931ல் சென்னை நகரசபையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகரின் முதல் மேயர் பதவியைத் தனது 27வது வயதில் ஏற்றவர் திரு முத்தையா அவர்கள்தான். 1934–35ல் மீண்டும் இரண்டாவது முறையாக மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேயர் பதவி தனி ஒருவருக்குச் சொந்தமாக இல்லாமல் ஓராண்டிற்கு ஒரு முறை மாறி மாறிச் செல்லும் நிலையை உருவாக்கியவர் இவரே!

1932ஆம் ஆண்டில் மேயராக இருந்த போது, அனைத்திந்திய வானொலியின் சென்னைக் கிளை உருவாவதற்கு முன்பு-ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள், சத்திய மூர்த்தி, டி. எஸ். கிருஷ்ணசாமி ஆகியோரின் உதவியுடன் மாநகராட்சியில் இந்தியாவிலேயே முதன் முதலாக வானொலி நிலையத்தை அமைத்தார். 200 மைல் தொலைவு வரை இந்த ஒலிபரப்பை மக்கள் கேட்க முடிந்தது.

ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த போது செயல்பட்ட நீதிக்கட்சி இவரைத் தலைசிறந்த ஓர் அரசியல்வாதியாக அறிமுகப்படுத்தியது. திரு. பனகல் அரசர், தியாகராசசெட்டியார், பன்னீர் செல்வம், பி.டி ராஜன் முதலிய தமிழகத்துப் பெருமக்கள் பங்குபெற்றநீதிக் கட்சியில் பொறுப்புமிக்க பல பதவிகளை ஏற்றுத் திறம்படச் செய்து முடித்தார். 1931ல் சட்டசபையில் நீதிக்கட்சியின் கொறடாவாகத் திகழ்ந்து தலைவராகவும் செயல்பட்டார். 1936ல் நீதிக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியபோது அதில் அமைச்சர் பதவியை ஏற்றார். 1936-37ல் பொப்பிலி அரசரின் அமைச்சில் கல்வி, சுகாதாரம், உள்ளாட்சி நிர்வாகம் ஆகிய துறைகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றார்.

1937ல் காங்கிரஸ் தேர்தலில் வெற்றி பெற்றாலும் சில காரணங்களால் அமைச்சர் அவையை அமைக்கவில்லை. இடைக்கால அமைச்சரவை எனப்பட்ட திரு கே.வி.ரெட்டியின் அமைச்சரவையில் மீண்டும் அமைச்சராக இடம் பெற்றார்.

1937-39ல் காங்கிரஸ் ஆளுங் கட்சியாகவும் மூதறிஞர் இராஜாஜி முதலமைச்சராகவும் இருந்தபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் திரு. முத்தையா செட்டியார்.

1937ல் இந்திமொழித் திணிப்பையெதிர்த்துப் போராடியவர் இவர். சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் முதலிய தமிழ் புலவர்களுடன்முத்தையாசெட்டியார் அஞ்சாதுகட்டாய இந்தியை எதிர்த்து முழக்கமிட்டார். சென்னை தங்கசாலையிலிருந்து தீவுத்திடல் வரையில் தமிழ்க் கொடியைத் தோளில் சுமந்து கொண்டு நடந்த பெருமைக்குரியவர் இவர்.

1929ஆம் ஆண்டிலேயே இவர், வங்கி விசாரணைக்குழுவில் உறுப்பினராக இருந்தார்; இம்பீரியல் வங்கியின் இயக்குநராக இருந்தார். 1940ல் தென்னிந்திய வணிகச்சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென்னாட்டில் பெரிய வங்கியாக இன்று திகழும் இந்தியன் வங்கிக்கு 1962இல் ஏற்பட்ட நெருக்கடியைப் போக்கி, அதனை ஆல்போல் தழைக்கச் செய்த சிறப்பினுக்குரியவர் முத்தையா செட்டியார்.

நெடிய உயரமும் அகன்ற மார்பும் எடுப்பான நெற்றியும் சிரித்த முகமும் கொண்ட முத்தையா செட்டியாருக்கு 1941ல் ஜார்ஜ் மன்னர் 'சர்' என்ற பட்டத்தை அளித்தார்.

1948, ஜூன், 15ஆம் நாள் மறைவெய்திய இவரது தந்தையாருக்குப் பின்னர், பல்கலைக் கழகச் சட்டத்தின்படி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தரானார். அயராது, கண்துஞ்சாது பல்கலைக் கழக வளர்ச்சியில் தாய்போல் ஆர்வம் காட்டிச் செயல்பட்டு வந்தார்.

இவர் ஏற்படுத்திய அறக் கொடையால் அண்ணாமலைநகர்,

## நல்லவை செய்த நாயகர்

ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளுக்கு அவர் பொது மக்களை நினைக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

ஆனால் ராஜா சர் அடிக்கடி நினைத்து நல்லவைகளையே செய்வதைப் பார்க்கும் போது அவரை மகாராஜா என்றே அழைக்கத் தோன்றுகிறது.

**தந்தை பெரியார்.**

## மனித இனத்தின் ஊதியம்
### பேரறிஞர் அண்ணா

ஈதல், இசைபட வாழ்தல் (புகழுடன் வாழ்தல்) ஆகியவைதான் மனித உயிருக்கு ஊதியம் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப் பெருந்தகை கட்டளையிட்டிருக்கிறார்.

அத்தகைய புகழ்வாழ்வை மேற்கொண்டவர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள். நான் அவருடன் பல துறைகளில் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன், வணிகத்துறை ஒன்றைத் தவிர! ஒரே அரசியல் கட்சியில் (ஜஸ்டிஸ் கட்சியில்) நாங்கள் அங்கம் வகித்திருக்கிறோம். என்னை அந்தக் கட்சியின் சார்பில் சென்னை கார்ப்பரேஷனுக்கு நிறுத்திவைக்கக் கட்சியின் மேலிடத்தலைவர்கள் கூடிப் பேசினர்.

அப்போது சிலர், ''அண்ணாதுரை தேர்தலில் ஈடுபடும் அளவுக்கு வசதியான குடும்பத்தில் பிறக்கவில்லை'' என்று ஆட்சேபம் தெரிவித்தார்கள். ஆனால் முத்தையா செட்டியார் அவர்கள்தான் ''இது போன்ற கண்ணோட்டம் இனிக் கூடாது. வாலிப வயதில் பொதுத் தொண்டில் ஆர்வம் இருப்பவர்கள்தான் இனித் தேர்தலில் நிற்க வேண்டும். ஆகவே அண்ணாதுரையை நிறுத்தலாம்'' என்று வாதாடினார். எதிர்கால அரசியல் எப்படி உருவெடுக்கும் என்பதை அப்போதே அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அது மட்டுமல்ல; இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும், சென்னையிலுள்ள தங்கச்சாலையிலிருந்து ஐலண்டு மைதானம் வரை தமிழ்க் கொடியைத் தோளில் சுமந்து கொண்டு நடந்தார்.

(அண்ணாவின் சிந்தனைச் செல்வம் என்னும் நூலிலிருந்து 1969)

*சிதம்பரம், சென்னை, செட்டிநாடு ஆகிய இடங்களில் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், தொழில்நுட்பப் பள்ளிகள் பல புரக்கப்பட்டு வருகின்றன.*

*1952 பொதுத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார்.*

*1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காரைக்குடி தொகுதியில் போட்டியிட்டு வென்றார். இத்தேர்தலுக்குப் பின்னர், 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், அரசியலில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்தார். இருப்பினும் 1964ஆம் ஆண்டில் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.*

*''தமிழ் அறிஞர்களைப் பாராட்டுவதும் தமிழுக்குத் தொண்டு செய்வதும் என் வாழ்வின் குறிக்கோளாகும்'' என்று கூறினார். ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள்.*

*தமிழ்மொழி வளர்ச்சிக்கு வாரிக் கொடுத்த வள்ளலாகத் திகழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களைத் தமிழ்ப் பேராசிரியராக நியமித்த பெருமைக்குரியவர். சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளையை இப்பல்கலைக் கழகத்தில் பணிபுரிய அழைத்தார். நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு டாக்டர் பட்டம் வழங்கக் காரணமாயிருந்தார்.*

*அண்ணாமலைச் செட்டியாரின் பெருமுயற்சியால் புத்துணர்வு பெற்ற தமிழிசைப் பயிரைச் செழிப்புற வளர்த்த திறன்மிக்க தமிழன்பர் இவர்.*

*செல்வத்துப் பயன் ஈதல் என்ற பண்பை நாளும் கடைப்பிடித்து, எப்போதும் எண்ணற்ற உதவிகள் புரிந்த கொடையாளர் இவர்.*

*'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நாவுக்கரசரின் மொழிக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர்.*

*'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்ற பொருளுக்கு ஏறபக் குடும்பத் தலைவரான இவர், பல்வேறுபட்ட துறைகளில் தொடர்பு கொண்டு வாழ்ந்தார். தலைசிறந்த அறிஞராகவும், ஒப்புயர்வற்ற கல்வியாளராகவும், தண்டமிழ்க் காவலராகவும், நாவன்மைபெற்ற பேச்சாளராகவும், நாட்டை வளப்படுத்தும் தொழிலதிபராகவும், இனிமை இயல்புகள் செறிந்த பண்பாளராகவும் தொண்டுகள் செய்து மகிழும் தொண்டராகவும் திகழ்ந்த பீடுகொள் வரலாற்றைப் படைத்தவர். அண்மையில் (12-5-84) மறைந்த ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள். அவர் ஒரு தனிமனிதரல்லர்; நிறுவனம். பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் புகழ்ந்துரைத்த சிறப்பினுக்குரிய பெருவாழ்வு வாழ்ந்த தமிழ்ச் சான்றோரின் பண்பு நலன்களும் செயற்கரிய செயல்களும் தமிழகத்தின் வரலாற்றில் நிலைத்திடும் தன்மையனவாகும்.*



**த**மிழ்நாடு அரசு நிதியிலிருந்து, காவல் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ரூ. 269.30 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை புதுப் பேட்டையில் ராஜரத்தினம் விளையாட்டரங்கத்திற்குப் பின்பக்கத்திலுள்ள 5.35 ஏக்கர் நிலப் பரப்பில் 604 குடியிருப்புகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ளது.

12 வீடுகள் சேமப்படை போலீஸ் ஆய்வாளருக்கும் 48 வீடுகள் இளநிலை போலீஸ் ஆய்வாளர்களுக்கும் 544 வீடுகள் தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கும் கட்டப்பட்டுள்ளன.

1982-ஆம் ஆண்டு செப்டம்பரில் தொடங்கப்பட்ட இத்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குடியிருப்புகளுக்குச் சாலை வசதி-தெரு விளக்குகள் - குடிநீர் வசதி மற்றும் வடிகால் வசதிகள் போன்ற இன்றியமையாத தேவைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகள் மே 1-ஆம் நாளன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் திறந்து வைக்கப் பெற்றன.

### சென்னையில் வேறு பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ள காவலர் வீட்டு வசதித் திட்டங்கள்

இராசா அண்ணாமலைபுரத்தில் ரூ. 92 51 இலட்சம் மதிப்பீட்டில் 288 குடியிருப்புகளும், அண்ணா நகரில் ரூ.44.23 இலட்சம் மதிப்பீட்டில் 111 குடியிருப்புகளும், மயிலாப்பூரில் ரூ. 7.33 இலட்சம் மதிப்பீட்டில் 24 குடியிருப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

### மாவட்டங்களில் காவலர் வீட்டு வசதித் திட்டங்கள்

பாளையங்கோட்டையில் ரூ. 29.55இலட்சம் மதிப்பீட்டில் 104 குடியிருப்புகளும், கோயம்புத்தூரில் ரூ. 138.84 இலட்சம் மதிப்பீட்டில் 668 குடியிருப்புகளும்-தஞ்சாவூரில் ரூ. 37 இலட்சம் மதிப்பீட்டில் 132 குடியிருப்புகளும், திருச்சி சிந்தாமணியில் ரூ. 37.29 இலட்சம் மதிப்பீட்டில் 1C4 குடியிருப்புகளும், சேலத்தில் ரூ. 76.69 இலட்சம் மதிப்பீட்டில் 256 குடியிருப்புகளும், நாகப்பட்டினத்தில் ரூ. 111 இலட்சம் மதிப்பீட்டில் 377 குடியிருப்புகளும், தர்மபுரியில் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் 132 குடியிருப்புகளும், ஈரோட்டில் ரூ. 13.08 இலட்சம் மதிப்பீட்டில் 36 குடியிருப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் வாயிலாக பாளையங்கோட்டையில் 16 அங்காடிகளும், ஈரோட்டில் 24 அங்காடிகளும் கட்டி முடிகக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சியில் 255 குடியிருப்புகள், ரூ. 149.32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

# காவலர் குடியிருப்புத் திட்டம்



# தமிழரசு

16-6-1984 இதழ்



தமிழ்நாடு அரசின் நான்காண்டுப் பணிகள் தொகுப்பு மலராக வெளிவருகிறது

அரசு ஆற்றியுள்ள அரும்பணிகள் குறித்து

மாண்புமிகு முதல்வர், அமைச்சர் பெருமக்கள் எழுதுகின்ற சுவையான கட்டுரைகள் மற்றும் செய்தித் திரட்டுகள் தகவல் தொகுப்புகள்

96 பக்கங்கள் விலை 75 காசு


பாஞ்சாலங்குறிச்சியில்

# வீரபாண்டிய கட்டபொம்மன் விழா

இந்தியச் சுதந்திரப் போரை முதன் முதலில் தொடங்கி வைத்தவன்!

முதன் முதலில் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் தொடங்கியவன்!

அவன்தான் திருநெல்வேலிச் சீமை தந்த பாஞ்சாலஞ்குறிச்சியை ஆண்ட வீரபாண்டிய கட்டபொம்மன்!

அந்த விடுதலை வீரனை நினைவுகூரும் வகையில், வீரபாண்டிய கட்டபொம்மன்விழா 1984 மே திங்கள் 11, 12 ஆகிய இருநாட்கள் பாஞ்சாலங்குறிச்சியில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. செய்தி-மக்கள் தொடர்புத்துறை இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

விழாவினையொட்டி, பாஞ்சாலங்குறிச்சி வண்ண மின் விளக்குளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் போகும் வளைவுகளும், நினைவுக் கோட்டையும், மதிற் சுவர்களும் மின்விளக்குகளால் ஜெகஜ்ஜோதியாய்க் காட்சியளித்தன. விழாவைக்காண ஆயிரக்கணக்கான மக்கள்ஆடவர் பெண்டிர், குழந்தைகள் என மாட்டுவண்டிகளிலும், லாரிகளிலும், பேருந்துகளிலும் வந்த வண்ணமிருந்தனர். அவர்கள் குழுக்குழுவாக ஆங்காங்கே கூடி ஆடல், பாடல், தெருக்கூத்துகள் நடத்தி மக்களை மகிழ்வித்தனர்.

11.5.'84 அன்று அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்டமான பந்தலில் விழா தொடங்கியது.

சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.கே. பெருமாள் அனைவரையும் வரவேற்றார்.



இரவில் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கட்டபொம்மன் நினைவுக் கோட்டையின் ஒரு தோற்றம்.



மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள் பேசுகிறார்.



மாட்டு வண்டிப் போட்டி.

# ஆதி திராவிடர் பழங்குடி மக்களுக்கு

# வீட்டு வசதிப்பணிகள்

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் கொள்கையாகும்.

இதன் அடிப்படையில் நாட்டில் இதர மக்களோடு ஒப்பிடும் போது முன்னேற்றம் இல்லாது இருந்து வந்த ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடிமக்கள் முன்னேற்றம் அடைவதற்குப் புரட்சித் தலைவர் அரசு செயல்படுத்துகின்ற பல முனைத் திட்டங்களில் வீட்டு வசதி செய்துகொடுப்பதும் ஒன்றாகும்.

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 89 லட்சம் பேர்களும், 5 லட்சம் பேர்கள் பழங்குடியினர்களும் ஆவார்கள்.

இது மொத்த மக்கள் தொகையில், முறையே, 18 சதவீதமும், ஒரு சதவீதமும் ஆகும். ஆதிதிராவிடர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்த புதிதாகக் கொண்டு வரப்பட்ட இரண்டு முக்கியக் குறிக்கோள்களுடன் கூடிய சிறப்பு - உள்ளடக்கத் திட்டம் 1980-81-ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

அவைகளில் ஒன்று - ஆதிதிராவிடர்களில் பாதிப்பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். ஐந்தாண்டுக் காலத்தில் இவர்கள் வறுமையைப் போக்குதல்.

**மற்றொன்று - ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான - குடிநீர் வசதி, மின்வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி முதலியவற்றைச் செய்து கொடுத்தல்.**

இவ்விரண்டு நோக்கங்களையும் அடைய, அனைத்துத் துறைகளின் முயற்சிகளையும், அவைகளின் நிதி வசதிகளையும் பயன்படுத்தும்படி தமிழக அரசுஆணையிட்டுள்ளது.

எங்கெல்லாம் புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அந்த நிலங்களை மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு 3 செண்டுகள் வீதம் வீட்டு மனைகள் கொடுக்கப்படுகின்றன. முக்கியமாகத் தேவைப்பட்டால் தனியார் நிலங்களேகூட கையகப்



**ஏ. செல்லையாத் தேவர்**
**தலைவர்,**
**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.**

படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 4,23,282 மனைகள் கொடுப்பதற்காக, 26,494 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 3,78,619 வீட்டு மனைகள் தரப்பட்டன. மீதமுள்ள வீட்டு மனைகள் விரைவில் கொடுக்கப்படவிருக்கின்றன.

மேற்படி நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக 1983 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 1,175 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. 1984-85ஆம் ஆண்டிற்கு நிலம் கையகப்படுத்துவதற்காக 125 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனிமைப் படுத்தப்பட்டுள்ளோம் என்னும் உணர்வைப் போக்கவும் - எல்லா வகுப்பு மக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும் ஒதுக்கீடு செய்யப்படும் வீடுகளில் அல்லது வீட்டு மனைகளில் ஆதிதிராவிடர்களுக்காக 80 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட பிரிவில் உள்ள ஏழைகளுக்கு 10 விழுக்காடும், உயர் வகுப்புப் பிரிவில் உள்ள ஏழைகளுக்கு 10 விழுக்காடும் இலவசமாகக் கொடுக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைப்பித்துள்ளார்.

தேசிய கிராமியப் பகுதி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் கொடுப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட மனைகளைச் சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், மீனவர்கள் மற்றும் துப்புரவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் பொறுப்பையும் மாணவர், இல்லங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றைக் கட்டும் பணியையும் தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வளர்ச்சிக் கழகத்திடம் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. இதைத்தவிர, ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கு இந்த நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. இதற்கான முதலீட்டுப் பணம் தமிழக அரசால் அளிக்கப்படுகிறது.

1979-ஆம் ஆண்டு முடிய இந்தக் கழகம் ஆதிதிராவிடர்களுக்கு 41,675 வீடுகளைக் கட்டி இலவசமாக வழங்கி உள்ளது.



**சிறந்த முறையில் பணியாற்றும்**
**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**

**இந்தியாவிலேயே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் குறித்த காலத்திற்குள்ளாகவே வீடுகளைக் கட்டி முடிப்பதிலும் நாட்டின் முதன்மையான இடத்தை தமிழக வீட்டு வசதி வாரியம் பெற்றிருக்கிறது.**

**திரு. முல்க் ராஜ்**

**(வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக்கழகத்தின் தலைமை நிதித்துறை அலுவலர் 22.5.84ல் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்)**

1979-80, 1980-81 ஆண்டுகளில் 10,000 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. 1982-83 முதல் ஆதிதிராவிடர் மேம்பாட்டுச் சிறப்புத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுக் கிராமங்களில் 1591 வீடுகள் கட்டி இலவசமாகத் தரப்பட்டன.

வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட 4,000 ரூபாய், 6,000 ரூபாயாக இப்போது உயர்த்தப்பட்டுள்ளது. இந்த 6,000ரூபாய் இலவசமாக அரசு மூலம் ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுகிறது.

**இதைத்தவிர ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக ஆதிதிராவிட வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதி உதவி புரியும் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தத் தேவையான பங்கு முதலீட்டில் 49 சதவீதம் மத்திய அரசும் 51 சதவீதம் மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகையிலிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர்களுக்குத் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள இலாபகரமான தொழில்களைத் தொடங்குவதற்கான மொத்தச் செலவில் கால் பங்குத் தொகையை குறைந்த வட்டியில் கடனாக வழங்குகிறது.**

**1983 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 75,395 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு 459 இலட்சம் ரூபாய் தொழில் தொடங்க வழங்கி உள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்கு இதற்காக 200லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மேலும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டுவதற்கு 6,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதில் 1,000 ரூபாய் மான்யமாகத் தரப்படுகிறது.

இதில் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், ஆதிதிராவிடர் பெரும் அளவில் உள்ள இடங்களில் வீடு கட்ட முன்வரும் இதர வகுப்பினர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை 21,734 வீடுகள் கட்டப்பட்டன. இதில் 18,003 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

**1984-85 ஆம் ஆண்டிற்கு 600 லட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**மேலும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.** சமவெளியில் விடுகட்ட 6,000 ரூபாயும், மலைப் பகுதியில் வீடுகட்ட 9,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1983-84 ல் கட்டப்பட்ட 19,000 வீடுகளில், 10,000 வீடுகள் ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தில் 174 எக்டேர் நிலப்பரப்பில் 12,549 மனைகள் உருவாக்கப்பட்டு, 1980 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதே திட்டத்தின் இரண்டாம் பகுதியாக 180 எக்டேர் நிலப் பரப்பில் 15,036 உருவாக்கப்பட்ட வீட்டுமனைகளிலும் ஆதிதிராவிட பழங்குடி மக்கள் இந்த ஆண்டும் பயன் அடைய இருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர் - பழங்குடி மக்களுக்காகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் 17,000 ரூபாய் வீதத்தில் செலவு செய்து 182 குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

1983-84ல் 41 லட்சம் ரூபாய் செலவு செய்து, தமிழக அரசு, 137 தனிநபர் குடியிருப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் 705 அரசு இல்லங்கள் தமிழக அரசின் கட்டடங்களில் அமைந்துள்ளன. ஆதிதிராவிட பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்காக 241 இல்லங்கள் கட்டுவதற்குத் தமிழக அரசால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 127 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

114 இல்லங்கள் கட்டுமானப் பணியில் இருக்கின்றன.

1984-85 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக ரூ.240 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டி ஒதுக்கப்படும், மொத்த வீடுகளில் 10 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்காக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

இதனால், இரண்டு விதத்தில் புரட்சித்தலைவர் அவர்கள் ஆதிதிராவிட பழங்குடிம் பெருமக்களுக்கு உதவி இருக்கிறார்.

ஒன்று - ஒரே குடியிருப்பில் ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் இதரமக்களுடன் ஒன்றாகக்கலந்து வாழும் வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்.

இரண்டாவதாக, வீட்டு வசதி வாரியத்தின் மொத்த முதலீட்டு மூலதனத்தில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20 கோடி ரூபாய் ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்காக வீடுகட்டும் நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்.

இதோடு மட்டும் அல்லாமல் ஆதிதிராவிடர் பழங்குடியினரின் சமூக - பொருளாதார மேம்பாட்டுக்காகப் புரட்சித் தலைவரின் தமிழக அரசு மொத்தம் ரூ.54.29 கோடி செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது.





**மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ.சிவஞானம் அவர்கள், கட்டபொம்மன் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கிறார்.**

முன்னிலை வகித்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு க. சுப்பு பேசுகையில், ''கட்டபொம்மனுக்கு மட்டுமல்லாமல், விடுதலை இயக்கத்துக்காகப் பாடுபட்ட வீரர்களை நினைந்து போற்றவும் அரசு ஏற்பாடுகள் செய்து வருகின்றது'' என்றார்.

மாண்புமிகு சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு எஸ்.என்.இராசேந்திரன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''1857ல் தான் சுதந்திரம் வேண்டும் என்று உரிமைக்குரல் எழுப்பியதாகச் சொல்வார்கள். ஆனால், அதற்கு முன்பே 200, 300 ஆண்டுகளுக்கு முன்பே முதன் முதலில் வெள்ளையனை எதிர்த்துக் குரல் கொடுத்தவன் .நமது மாவட்டத்தைச் சேர்ந்த வீரபாண்டியகட்டபொம்மன். முதன் முதலில் விடுதலை உணர்வை ஏற்படுத்தியது தமிழ்நாடுதான்-நெல்லை மாவட்டம்தான் - பாஞ்சாலங்குறிச்சிதான். அன்றைக்கே கட்டபொம்மன் மக்களிடையே சுதந்திர உணர்வை ஏற்படுத்தி, சொன்னது போல் செயலாலும் செய்து காட்டினான்'' என்றார்.

தூத்துக்குடி திரு இரா. கிருஷ்ணன் விழாவில் கலந்துகொண்டு பேசினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். விழாவில், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினரின் 'இளையவள் திருமணம்' என்ற நகைச்சுவை நாடகம் நடந்தது. அதன் பிறகு 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்ற நாடகமும் நடந்தது.

இரண்டாம் நாள் 12.5.84 அன்று காலை,விழாவையொட்டி மாட்டுவண்டிப் போட்டிகள் நடந்தன.

அன்று பிற்பகல் 3 மணிக்கு நடந்த சிவகாசி ஈஸ்வரி, ராணி, காந்திமதி குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

பிறகு,கருத்தரங்கு,மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜி.ஆர்.எட்மண்ட் அவர்கள் தலைமையில் நடந்தது. அப்போது அவர் பேசுகையில், ''சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளை, சகோதரர்களை மறக்கவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்த விழா நடக்கிறது. பாரதியார், வ.உ. சிதம்பரனார் சுதந்திரத்துக்காகத் தங்களை ஈடுபடுத்திக்கொண்டவர்கள். இவ்வாறு விடுதலையில் ஈடுபட்ட சரித்திரம் படைத்த சரித்திர நாயகர்களை மறவாமல் அரசு, அவர்களுக்கெல்லாம் விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது'' என்றார்.

கருத்தரங்கில் பங்குகொண்டு டாக்டர் சு.பாலச்சந்திரன் (கட்டபொம்மன்-விடுதலை வீரன்), திரு வளன்அரசு (கட்டபொம்மன் மாவீரன்),திரு பொ.மா. ராஜாமணி(கட்டபொம்மன் – மக்கள் தொண்டன்).திரு தி.சு.ஆறுமுகம் (கட்டபொம்மன் - மன்னன்) ஆகியோர் மிகச்சிறப்பாக உரை நிகழ்த்தி, மக்களை வெகுவாகக் கவர்ந்தார்கள்.

தொடக்கத்தில்,செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. பா.ஜெயப்பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார்.

தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில், 'கிராமிய நூற்புநிலையம்' ஒன்றை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார். ரூ 3½ இலட்சம் செலவில்தற்போது 30 பேருக்குவேலை வாய்ப்பளிக்கும் இத்திட்டம், படிப்படியாக 200 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.



**நாடகத்தில் ஒரு காட்சி.**



பிறகு மாலையில் நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு க.சுப்பு அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றிய வரலாறு, தெருக்கூத்து, பாடல்கள் எல்லாம் எழுச்சி மிக்கவையாகும். பாஞ்சாலங்குறிச்சியை இந்தியாவின் 'ஜிப்ரால்டர்' என்று வெள்ளையர் குறிப்பிட்டார்கள். உள்ளத்திலே கட்டப்பட்ட உருக்குக் கோட்டையாக இந்தப் பாஞ்சாலம் விளங்குகிறது'' என்று குறிப்பிட்டார்.



**மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேருரையாற்றுகிறார்.**

விடுதலை வீரர்கள் சார்பில் வரவேற்புரை நிகழ்த்திய, சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கத் தலைவர் திரு எஸ்.என். சோமயாஜுலு அவர்கள், ''தமிழர் சரித்திரத்திலே ஒரு வீர பரம்பரையை உண்டாக்கினான் கட்டபொம்மன். தன்னந்தனியனாக நின்று வெள்ளையரை விரட்டியடித்து தூக்கிலேற்றப்பட்டான். இந்த விழாவை நடத்துகிறவர்களுக்குப் பாராட்டுச் செலுத்த வேண்டும்'' என்றார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் திருஉருவப்படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''சுதந்திரக்கொடி பிடித்த முதல் வீரன்—ஆங்கிலேயனின் பீரங்கியை முதலில் சந்தித்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன். கட்டபொம்மனிடம் அமைச்சராக இருந்த தானாபதி பிள்ளையின் நினைவாக ஒரு ஸ்தூபியை நிர்மாணிக்க வேண்டும். தானாபதிப் பிள்ளையின் தலையை பிரிட்டிஷார் துண்டித்து எடுத்து ஓட்டப்பிடாரத்தில் ஒரு பொது இடத்தில் தொங்கவிட்டனர். அங்குதான் அவருக்கு நினைவுத்தூண் நிர்மாணிக்கப்படவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

**'கட்டபொம்மனும் உண்மை நிகழ்ச்சிகளும்' என்னும் நூலை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொள்கிறார், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் உடன் உள்ளார்.**



சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாதுரை பேசுகையில், ''வரலாற்றுப் பெருமைகளை—உண்மைகளைப் பெற்ற மண் இது'' என்றார்.

திரு கூத்தக்குடி சண்முகம் அவர்கள் பேசுகையில், ''திராவிட மக்கள் எல்லாரும் ஒன்று என்று இந்த விழாவில் சபதமேற்க வேண்டும்'' என்றார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.கே.பெருமாள் பேசுகையில், ''இந்தப் பகுதியை முன்னேற்ற வேண்டும் - மேம்படுத்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி -அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்,மாட்டுவண்டி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கியும், 'கட்டபொம்மனும் உண்மை நிகழ்ச்சிகளும்' என்ற நூலை வெளியிட்டும் பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இந்தியாவினுடைய விடுதலை வரலாற்றில் வெள்ளைக்காரனை எதிர்த்துப் போர் முழக்கம் செய்து, ஒரு விடுதலை வீரர்களுக்கு முன்னோடியாக நின்ற வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த இந்த மண்ணில், அவர் ஆட்சி செலுத்திய இந்த மண்

# எல்லோரும் விரும்பும் எகானமி மாடலுக்கு நிகராக இப்பொழுது ஒரு

## புதிய சாலிடெர் TS33E!

சாலிடெர் TS 32E, எல்லோரும் விரும்பி வாங்கும் ஜனதா மாடலாக திகழ்ந்தது. இதற்கு நிகராக இப்பொழுது தனிச் சிறப்பு வாய்ந்து, உங்கள் ரசனைக் கேற்ப எழிலான அமைப்பு கொண்ட சாலிடெர் TS 33E ஒரு அற்புத படைப்பு.

எளிதாக நகரக்கூடிய இரண்டு ஷட்டர்கள், பகட்டான பாலிஸ்டைரின் முகப்பு, நேர்த்தியான கன்ட்ரோல்கள் போன்ற சிறப்பான அம்சங்கள் அடங்கியது சாலிடெர் TS 33E.

அதுமட்டுமின்றி விஷன் இன்டர்மீடியட் ஃபிரிகுவன்ஸியில் (VIF) கண்டுள்ள முன்னேற்றத் தினால் செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட துல்லியமாக தெரியும் படத்தோற்றம். படம் மேலும் கீழுமாக ஓடாமலிருக்க பிரத்யேக ஆட்டோமாடிக் 'ஒலி தடுப்பு' அமைப்பு.

மேலும் இதிலுள்ள 4 வாட் ஆம்ப்ளிஃபையர் வெகு சீரான ஒலியை அளிக்கிறது. தொலைதூர இடங்களுக்கென இதில் கூடுதலாக ஒரு ஹை-கெய்ன் ஆன்டெனு அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. விசிஆர், டேப்ரெக்கார்டர் போன்றவற்றுக்கு பிரத்யேக அமைப்பு உள்ளது.

இத்தகைய முற்போக்கான அம்சங்களை மிக சிக்கனமாக உங்களுக்கு அளிக்கிறது TS 33E. எப்பொழுதாவது சர்வீஸ் வசதி தேவைப்பட்டால் உடனடியான பராமரிப்பு உண்டு.

ரூ. 325 மிச்சம்
உள்ளடங்கிய
வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்



# சாலிடெர்
-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

DIPR/21L/94/61 ASP


காரணம் கேட்ட பொழுது, ''என் தந்தைக்கு 20 ஏக்கர் நிலம் உள்ளது. எங்கள் தந்தைக்கு நாங்கள் இருபிள்ளைகள். பிற்காலத்தில் பாகப் பிரிவினையில் 10 ஏக்கர் நிலம் மட்டுமேதான் கிடைக்கும். அந்தப் பத்து ஏக்கரும் சிதறுண்டு போகாமல் இருக்க ஒரே குழந்தையுடன் நிறுத்திக் கொண்டேன்; இதில் என்மனைவி கண்ணகிக்கும் பூரண சம்மதம் தான்'' என்றார் அவர்.

அய்யம்புதூர் கிராமத்தில் பெரும்பாலோருக்கு அடிப்படைக் கல்வி இருக்கின்றது. ஒருவர் எம்.இ. படித்துவிட்டு, அமெரிக்காவில் பொறியாளராகப் பணியாற்றுகின்றார். மற்றும் ஒருவர் எம்.எஸ்சியும், ஒருவர் எம்.இயும் சென்னையில் படித்து வருகின்றனர்.

அடுத்து, வயலில் வேலைசெய்து கொண்டிருந்த கருப்பண்ணன் என்ற 43 வயதுடைய ஐந்து ஏக்கர் சொந்த நிலமுள்ள நடுத்தர விவசாயியினைச் சந்தித்தபோது அவர் இப்படிச் சொன்னார்;

''எனக்குத் திருமணம் ஆகி 13 வருஷமாவுது. என் மனைவி பெயர் சஸ்வரி. நான் முழுமையான விவசாயிங்க. எனக்கு கோவிந்தராஜ் என்ற 10 வயசுல ஒரு பையன் இருக்கான். ரெண்டாவது குழந்தை வேண்டாம்னு நானும் என் மனைவியும் மனமொத்து கருத்தடை செய்து கொண்டோம்''

21 வயது நிரம்பிய சலவைத் தொழிலாளி செல்வனைப் பார்த்தபோது கிடைத்த செய்தி இது; செல்வனுக்குத் திருமணமாகி இரண்டு வருடங்கள் ஆகிறது. இரண்டு வருடத்தில் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தவுடன், ஊரில் உள்ள மற்றவர்களைப்போல் தாமும் அளவான குடும்பத்துடன் வாழவேண்டும் என்று எண்ணி அய்யம்புதூருக்கு ஐந்தாவது கிலோமீட்டரில் உள்ள சிறுவலூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அணுகி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். கிடைக்கும் வருமானத்தில் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்த இரண்டே போதும்'' என்றார் செல்வனும் அவன் மனைவி சிந்தாமணியும்.

56 வயது நிரம்பிய, 10 ஏக்கர் நிலமுடைய திரு நஞ்சப்பக் கவுண்டரும் ''எனக்கு ஒரேமகன்



நடராஜன்கிற அவனுக்கு வயது 25 "என்று கூறினார்.

''ஏன் அடுத்த குழந்தை பெற்றுக் கொள்ளவில்லையா?'' என்று அவரது மனைவி கருப்பாயம்மாளைக் கேட்டோம்; ''ஒரு பிள்ளையே போதுங்க, இருக்கும் சொத்தை வைத்துக் கொண்டு அவன் மகிழ்ச்சியாக இருந்தாலே அதுவே எங்களுக்கு நிம்மதிங்க. எனவே, சுய கட்டுப்பாட்டுடன் நிறுத்திக் கொண்டோம்'' என்றார்.

50 வயதுள்ள விவசாயக் கூலித் தொழிலாளி தி.மாரிமுத்துவும் ''எனக்கு ஒரே ஒரு மகன் உள்ளான். அதற்குமேல் நாங்கள் பிள்ளை பெற்றுக் கொள்ளவில்லை என்றார். ''என்ன காரணம்'' என்று கேட்டபொழுது- ''எங்கள் ஊரில் சொந்த நிலம் உள்ளவர்களே ஒரு குழந்தைக்கு மேல் பெறுவதில்லை; நாங்களோ கூலிவேலைசெய்பவர்கள். எனவே இருக்கிற ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்த்தாலே போதும்னு குழந்தை பெறுவதை நிறுத்திக் கொண்டோம்'' என்றார்கள் அவரும் அவரது மனைவியும்.

130 வீடுகளைக் கொண்டுள்ள சிறிய கிராமமாக இருந்தாலும், 171 உறுப்பினர்களடங்கிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் இக்கிராமத்தில் செயல்பட்டு வருகின்றது. அனைவரும், கறவை மாடுகள் வைத்துப் பால் கறப்பதன் மூலம் நாள் ஒன்றிற்கு 600 லிட்டர் பால் இச் சங்கத்தால் சேகரிக்கப் பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப் படுவதால் நல்ல வருமானத்தைப் பெறுகின்றனர் என்று சங்கச் செயலாளர் திரு ஏ.சி.நஞ்சப்பன் தெரிவித்தார்.

மேலும், இக்கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளும் மின்னொளி பெற்றுள்ளன. கிராமத்தில் கட்டப்பட்டுள்ள பொது குடிநீர்த் தொட்டி மூலம் பொது குடிநீர்க் குழாய்கள் 30 வீடுகளுக்கு இணைப்புத் தரப்பட்டுள்ளது. இங்குள்ள பத்து வீடுகளில் அரசின் மானியம் மற்றும் கடன் பெற்று, சாண எரிவாயு அடுப்புகள் அமைத்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வூரில் நெல் அரவை மில் ஒன்றும், ஒரு சிறிய மளிகைக் கடையும் உள்ளன. இங்குள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 80,000 செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டித் தரப்பட்டுள்ளது.

இப்படிப் பல்வேறு வசதிகளையும் பெற்று, குடும்ப நலத் திட்டத்தை, இயற்கையான முறையிலும், செயற்கையான முறையிலும் கையாள்வதன் மூலம், இக்கிராம மக்கள் அனைவரும் மகிழ்வுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். எடுத்துக் காட்டாக, ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் ஒன்று அல்லது இரண்டு சைக்கிள்கள் வைத்துள்ளனர். மேலும் இக்கிராமத்தில் 15 மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. ஆனாலும் இவ்வூருக்கு கோபியிலிருந்து 10ஏ, 10பி என்ற இரண்டு நகரப்பேருந்துகள் வந்து செல்கின்றன. இவ்வூரில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால் தங்களுக்குள்ளாகவே பேசித் தீர்த்துக்கொள்கின்றனர். வழக்கு மன்றம் வரை போவதுமில்லை, வெளியூரார் தலையிடுவதுமில்லை.

இவ்வூரில் நடைமுறையில் உள்ள குடும்பக்கட்டுப்பாடுத்திட்டத்தை உணர்ந்த, அருகிலுள்ள வேப்பம்பாளையம், முள்ளங்கரை, காவேரிப்பாளையம், சின்னக்கொரவம்பாளையம், குள்ளம்பாளையம் போன்ற கிராம மக்களும் தற்பொழுது தங்களிடையே குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கத்தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அண்மையில் அய்யம்புதூருக்கு வருகைதந்த அரசு இரண்டாவது செயலாளர் திருடி.வி. அந்தோணி அவர்கள், இங்குள்ள மக்களின் கட்டுப்பாடான குடும்ப நிலைகண்டு வியந்து பாராட்டினார்.

அய்யம்புதூர்-வீணாகக் குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டு எதிர்காலத்தில் அவதிப்படும் அய்யம் இல்லாத ஊராகத் திகழ்வது விந்தையிலும் விந்தையே!

—தில்லை

ணில், இன்றைக்குச் சுமார் 185 ஆண்டுகளுக்குப் பிறகும் அவனை நினைவுகூரவும் அவனுக்கு வணக்கம் செலுத்தவும், அவனோடு தோளோடு தோள் நின்று தன்னுடைய உயிரைத் திரணமாக மதித்து இந்த நாட்டினுடைய விடுதலைக்காக தன்மானத்துக்காக-வீரமிக்க வாழ்வுக்காக-உயிரைத் துறந்த அந்த வீரர்களையெல்லாம் வணங்கவும், இந்தச் சமுதாயம் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிற வகையில் கடந்த 2 நாட்களாக நாம் இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**''விடுதலை மாவீரன் - முதல் முழக்கமிட்ட மாவீரன் இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களிலேயும் சிலை எழுப்பப்படவேண்டுமானால், நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு டெல்லியிலேயும் சிலை எழுப்ப வேண்டும். மாநிலங்களுடைய தலைநகரத்திலேயும் சிலை எழுப்ப வேண்டும். இந்தியாவில் முதல் விடுதலை முழக்கத்தை எழுப்பியவன் யார்? அதை இந்திய மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். டெல்லி நகரத்திலே இருக்கிறவர்கள்-தலைநகரத்திலே வாழ்கிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே இருக்கிற மாநிலங்களின் தலைநகரங்களிலே வாழ்கிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.**

''இன்றைக்குப் புரட்சித்தலைவர் அவர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனை நினைவுகூருகிறார்கள். அதோடு நிறுத்திவிடவில்லை. இந்தப் பகுதியிலே இருக்கின்ற நம்முடைய கப்பலோட்டிய தமிழனுக்கு உறுதுணையாக இருந்த நம்முடைய வீரன் வாஞ்சி, அவனுக்கும் செங்கோட்டையிலே சிலை எழுப்ப இருக்கிறார்கள். சிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, இந்தத் தென்பாண்டி மண்டலத்தில் வெள்ளைக்காரனை எதிர்ப்பதற்குக் கட்டபொம்மனோடு மறைந்து விடவில்லை. அதற்குப் பிறகும் தமிழன் எழுந்து நிற்கிறான் என்று வீரப்போர் புரிந்து மாண்டார்களே மருது சகோதரர்கள் அவர்களுக்கும் இன்றைக்கு நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட இருக்கின்றன. அதுமாத்திரமல்ல, இந்தப் பகுதியிலேயே இருந்து பிறந்து வளர்ந்து நம்முடைய தர்மபுரி மாவட்டம் என்று அழைக்கப்படுகிற பகுதியில், தன்னுடைய வாழ்க்கையை முடித்துக் கொண்டானே, அந்த வீரன் சிவா அவனுக்கும் இந்த ஆண்டு நூற்றாண்டு விழா வருகிறது. அந்த நூற்றாண்டையும் அரசு கொண்டாட வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.



**கட்டபொம்மன் நினைவுக் கோட்டையினுள், சிலை அருகில் மாண்புமிகு நாடாளுமன்றத்துணைத் தலைவர் திரு ஜி. லட்சுமணன் அவர்கள்.**

''ஒரு செய்தியை புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் செய்தி —

"1957ஆம் ஆண்டிலே தமிழக அரசு செய்யத் தவறிய அந்தப் பணியை - நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மன் இங்கே வாளோடு நிற்கிறானே அப்படி நின்றால் மாத்திரம் போதாது, அவன் வீரனாகக் காட்சியளிக்க வேண்டும். கையிலே வாள் வைத்திருக்கிறவன் எல்லாம் வீரன் அல்ல. வாளைப் பறிகொடுத்த வீரர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் குதிரையிலே அமர்ந்திருக்கிற தோற்றத்தோடு மிகச் சிறந்த வீர உருவத்தோடு, ஒரு அற்புதமான சிலையை இன்றைக்கு வீரன் சிவாஜி என்றால், நம்முடைய கண் முன்னாலே தோற்றமளிக்கிறதே குதிரைமீதமர்ந்த அந்தத் திருஉருவம், வீரத்திருவுருவம் அது மராட்டியத்திற்கு மாத்திரம் சொந்தமல்ல, எங்களுடைய தமிழ் மண்ணிற்கும் சொந்தம் தான் என்று எடுத்துக்காட்டுகிற வகையில் **நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மனுடைய திருவுருவச் சிலையை, அவர் அற்புதமான வீரமிக்க குதிரை மீது அமர்ந்திருக்கிற அந்தத் தோற்றத்தோடு, தலைநகரத்திலே-தமிழ்நாட்டினுடைய தலைநகரத்திலே - சென்னை நகரத்திலே அரசின் சார்பிலே அந்த அற்புதமான வீரத் திருவுருவச் சிலை வைக்கப்பட இருக்கிறது என்கிற செய்தியை இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மண்ணிற்கு, இந்த மண்ணின் சொந்தக்காரர்களுக்கு-தமிழகத்திற்கு-தமிழகத்தின் மூலம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு செய்தியைத் தெரிவியுங்கள் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்."**

விழா முடிவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். ஹீரா இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

பிறகு, சேரன் போக்குவரத்துக் கழகத்தினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

மெல்லிசை நடந்து கொண்டிருந்தபோது, மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர் திரு ஜி.லட்சுமணன் அவர்கள் வந்து கலந்து கொண்டார். அப்போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு க. சுப்பு பேசுகையில், 'வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவ அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

''அடுத்த ஆண்டு வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக அஞ்சல்தலை வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்படும்'' என்று உறுதி கூறினார் மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர்.

விடுதலை வீரர்களைப் பெற்றெடுத்த அந்த வீரமண்ணில்-பரங்கியரை வெருண்டோடச் செய்த பாஞ்சாலங்குறிச்சியில் இரண்டு நாட்களும் நடந்த இனிய விழா நம் இதயம் எல்லாம் கவர்ந்தது என்றால் அது மிகையல்ல!

**நிகழ்ச்சித் தொகுப்பு :**

**பி. வி. கிரி**



பெரியார் மாவட்டத்தில், சிறு குடும்பங்களின் முக்கியத்துவத்தைக் கிராமப் புறங்களில் உள்ள குடும்பத்தார் குறிப்பாகச் சிறிய மத்திய தர விவசாயக் குடும்பத்தார் நன்கு உணர்ந்துள்ளனர். இதற்குச்சிறந்தஉதாரணம்கோபி செட்டிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அய்யம்புதூர் என்னும் கிராமம்.

இப்பகுதி மக்கள் தங்களுடைய நிலங்கள் மற்றும் இதர சொத்துக்கள் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டால், தங்கள் வாரிசுகளுக்கும், நாட்டிற்கும் நல்லது அல்ல என்பதை உணர்ந்து, தாங்களாகவே குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்தி வருவதன் மூலம் தங்களுடைய பொருளாதார நிலையைத் தக்க வைத்துக் கொண்டு நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்குத் தாங்களே வழி வகுத்துக் கொண்டுள்ளனர்.

**இந்தக் கிராமத்தின் மக்கள் தொகை 670 பேர்கள் மட்டுமே, சுமார் 130 குடும்பங்களாகவுள்ள இக்கிராம மக்கள் பல்வேறு வழிகளிலும் தன்னிறைவு பெற்று, நிம்மதியான வாழ்க்கை வாழ்கின்றனர். அதற்கு முழு முதற் காரணம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்தான்.** இந்தக் கிராமத்தில் உள்ள அனைவருமே ஒரு குழந்தை, மேலே போனால் இரண்டு குழந்தைகள் உடையவராகத்தான் இருக்கின்றார்கள். இரண்டு குழந்தைகளுக்கு மேல், மூன்று குழந்தைகள் உள்ள குடும்பங்கள் ஐந்தே ஐந்துதான் உள்ளன. அவர்களும் அருகிலுள்ள ஊர்களிலிருந்து வந்து இங்கே குடியேறியவர்கள்.

இந்தக் கிராமத்தில் பெரும்பாலும் விவசாயக் குடும்பங்களே அதிகம். ஒவ்வொரு குடும்பத்திலும் மகளின் திருமணத்திற்காக அதிகச்செலவு செய்ய வேண்டியுள்ளதாலும், சீர்வரிசைகள் அதிகமாகக் கொடுக்க வேண்டியுள்ளதாலும், அத்திருமணத்திற்குச் சொத்து முழுவதையும் விற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. முதல் குழந்தை ஆணாகப் பிறந்தால் ஒன்றே போதும் என்று நிறுத்திக் கொள்கின்றனர். பெண் குழந்தை பிறந்தாலோ, அடுத்த குழந்தையாவது ஆணாகப் பிறக்க ஆவலோடு காத்திருக்கின்றனர், நினைத்தது போல் ஆணாகப் பிறந்தால், மகிழ்ச்சியடைந்து அத்துடன் குழந்தை பெறுவதை நிறுத்திக் கொள்கின்றனர். ஒரு வேளை இரண்டாவது குழந்தையும் பெண்ணாகப் பிறந்துவிட்டால், போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்தெனக் கருத்தடை செய்து கொள்கின்றனர்.

''எப்படிப் பார்த்தாலும் அதிகபட்சம் இரண்டிற்குப் பிறகு வேண்டாம் என்ற கருத்து எங்கள் கிராம மக்களிடையே ஒருமித்த கருத்தாக நிலவி வருகின்றது'' என்றார் அய்யம்புதூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.ஏ.எம். கருப்பண்ண கவுண்டர்.

குழந்தைகள் ஆண்டவனின் வரப்பிரசாதம் என்று நினைக்கும் சாதாரண கிராம மக்களின் மனம் மாறிய காரணத்தையும், வழக்கமாகக் குடும்பக்கட்டுப்பாடு பற்றி அலட்சியமாக இருக்கும் கிராம மக்களிடையே இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்ட காரணத்தையும் ஆராய நேரடியாக அய்யம்புதூர் கிராமத்திற்குச் சென்ற பொழுது முதலில் சந்தித்த நபரான, பத்து ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யும், வசதிகளுடன் மாடி வீட்டில் வாழும் திரு துரைராஜ், "ஏழு ஆண்டுகளுக்கு முன் எனது திருமணம் நடந்தது. ஒரே ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்ததோடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டேன்'' என்றார்.

# அய்யம்புதூர் வழி காட்டுகிறது!



அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில்
இரட்டிப்பாக்குங்கள்
தேசீய சேமிப்புப் பத்திரம்
6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்



ஒவ்வொரு ரூ.100-ம் ரூ.201-50 ஆக பெருகிறது

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது. இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!



தொடர்பு கொள்க :
இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.

DIPR-609/83-EP





# சித்தோடு பால் பண்ணை

நாள் ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் லிட்டருக்குமேல் பால் சேகரித்து விநியோகிக்கப்படும் இந்த பால் பண்ணை 65 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இங்கே 300 பேர் வேலை பார்த்து வருகின்றனர். வெண்ணெய், நெய், ஆகியவற்றுடன் பால் பவுடரும் இங்கு தயாரிக்கப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் 434 பால் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவைகளில் 2 ஆயிரம் லிட்டர்களே அங்கம் வகிப்பவைகளாகும். இதில் 500 லிட்டருக்கு மேல் பால் தரும் சங்கங்களும் உண்டு.



தமிழ்நாட்டிலேயே அதிகப் பால் வழங்கும் மாவட்டமாக விளங்குகிறது பெரியார் மாவட்டம். மாண்புமிகு முதல்வர் அவர்களால், பெரியார் மாவட்டம், சித்தோட்டில் 1981ல் திறக்கப்பட்ட இந்தப் பால்பண்ணைக்குச் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் தலைவராக இருக்கிறார். திரு. இரா. விஜயகுமார் இ.ஆ.ப., பொது மேலாளர்.





கழிவுநீரைப் பயன்படுத்துதல்



சத்தியமங்கலத்தில் ஒன்றும், சங்கராந்தம்பாளையத்தில்ஒன்று மாகப் பால் குளிரூட்டும் மையங்கள் 2 இம் மாவட்டத்தில் இருக்கின்றன.

இங்கு சேகரிக்கப்படுகிற பால், 28 லாரிகளின் மூலமும் அன்றாடம் ரயில்வாகன் மூலமும் ஊட்டி, கோவை, சேலம், திருச்சி, சென்னை வரை பயணம்போகின்றது.

அண்மையில் ரூ.40 லட்சம் திட்ட மதிப்பீட்டில் இங்கு ஒரு உறை விந்து சேகரிப்பு நிலையம் துவக்கப்பட்டுள்ளது. ஜெர்ஸி, முர்ரா இன விந்துகள் இங்கே பாதுகாக்கப்படுகின்றன.





சித்தோடு பால் பண்ணையில், கால்நடைகளைக் கவனிக்கத் தனி மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாரம் ஒருநாள் ஒவ்வொரு பால் கூட்டுறவுச் சங்கத்திற்கும் சென்று அங்குள்ள கால்நடைகளைப் பரிசோதிப்பார்கள். அவசரமாகக் கால்நடைகளுக்கு ஏதேனும் விபத்தோ, நோயோ என்றால் தொலைபேசியில் தொடர்புகொண்டாலேபோதும்; அடுத்த இரண்டு மணி நேரத்தில் அங்கே மருத்துவர் போய் நிற்பார். அப்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மருத்துவம் இலவசம்.

இங்குள்ள செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையத்தின் மூலம் ஜெர்ஸி, முர்ரா இன விந்துகள் தரப்படுகின்றன.

மாடுகளுக்கு வலிலூட்டுகிற பால்வளம் பெருகச் செய்கிற கொழுக்கட்டைப்புல், பால்பண்ணைக்குச் சொந்தமான நிலத்திலேயே விளைவிக்கப்படுகிறது. கூட்டுறவுச்சங்கங்களுக்கு'கோ.1' என்ற இந்தப் புல்லும், விதை நாற்றும் தந்து வருகிறார்கள்.

26 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பங்கு முதலீட்டுடன் 1976ஜூலைத்திங்களில் தொடங்கப்பட்ட இந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் பெரியார் மாவட்டத்தில் சிறந்த முறையில்பணி ஆற்றிவருகிறது.

பல்வேறு தொழில் மையங்களில், இயந்திரங்களை இயக்கப் பயன்படும் நீர், கெட்டுக் கழிவு நீரானதும் அதை எங்காவது அருகில் உள்ள ஆற்றில் வாய்க்கால் மூலம் கொண்டுபோய்க் கலக்கவிடுவதுண்டு. ஆனால் இங்கோ, அந்தக் கழிவுநீரை மறுபடியும் சுத்திகரிப்புச் செய்து, மீண்டும் இயந்திரப் பணிகளுக்காகப் பயன்படச் செய்கிற அதிசயத்தையும் நிகழ்த்துகிறார்கள்!



பொது மேலாளர்







# பட்டுத் தொழில்



பெரியார் மாவட்டத்தில் பட்டுத் தொழில் பெரிதும் வளர்ச்சியுற்றிருக்கிறது. குறிப்பாகச் சத்தியமங்கலம் வட்டத்திலுள்ள தாளவாடி பகுதியில் இத்தொழிலில் பெரும்பான்மை மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஈரோடு சரகத்திலும் பட்டுத் தொழில் பாங்குற்றிருக்கிறது; என்றாலும், கடல் மட்டத்திலிருந்து 2600 அடிக்குமேல் உள்ள தாளவாடியே மேம்பட்டுத் திகழ்கிறது. 600 மில்லி மீட்டரிலிருந்து 800 மில்லி மீட்டர் வரை மழை அளவுள்ள இங்கத்திய தட்பவெப்பநிலை பட்டுப் புழு வளர்க்கவும் முசுக்கொட்டைச் செடி பயிரிடவும் மிகவும் ஏற்றதாக உள்ளது.

ஆசனூரிலும் கேர்மாளத்திலும் மாதிரிப் பட்டுப் பண்ணைகள் 2 இருக்கின்றன. தொட்டபுரம், ராமாபுரம் ஆகிய இடங்களில் புழு வளர்ப்பு மனை இல்லாதவர்கள் தங்கள் புழுக்களை வளர்க்க சமுதாயப் புழுவளர்ப்பு இல்லங்கள் 2ம் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

1968-69ல், இங்கு நிறுவப்பட்ட ஒரு விதை உற்பத்தி வித்தகத்தின் மூலம் கடந்த ஆண்டுகளில் 5 இலட்சத்திற்குமேல் முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டு இப்பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. புதிய வகை முசுக்கொட்டைச்செடி நாற்றங்கால், பட்டுக்கூடு அங்காடி, நூற்பு நிலையம் எல்லாம் இங்கிருக்கிறது.

நாற்றங்கால் பண்ணை, முட்டை உற்பத்தி வித்தகம், பட்டுக்கூடு அங்காடி, பட்டுநூற்பு நிலையம், மாதிரிப் பட்டுப் பண்ணைகள் 2, இளம்புழு வளர்ப்பு நிலையம், சமுதாயப் புழு வளர்ப்பு மனைகள் 2 ஆகியவைகளும் இங்குண்டு.

''தாளவாடி பகுதியிலே மட்டும் 5,500 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டை செடி பயிரிடப்பட்டு வருகிறது! தாளவாடி, அரளவாடி, சரளவாடி, சிம்டஹள்ளி, தொட்டபுரம், கேர்மாளம், ஆசனூர், குத்தியாலத்தூர் ஆகிய பகுதிகளிலே மட்டும் 1675 பேர் மல்பரி பயிரிட்டிருக்கிறார்கள்'' என்றார் பட்டு வளர்ப்புத்துறை உதவி இயக்குநரான திரு ஒய். எம். சுப்பிரமணியம்.

பட்டுத் தொழிலில் ஈடுபடுவோர்க்கு முசுக்கட்டைச்செடி பயிரிடத் தகுந்த பயிற்சியும் அளித்து வருகிறார்கள் இங்கே. இத் தொழிலில் ஈடுபடுவோர்க்குக் கடன் வசதியும் உண்டு.

தனிக் கட்டடத்தில், தாளவாடியில் பட்டு நூற்பு நிலையம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு, அங்குள்ள 6 புதுவகைத் தறிகளிலே 50 பேர்களுக்கு மேல் பணியாற்றி வருகிறார்கள்

-ராஜு






# சென்னையில் குடியரசுத் தலைவர் பிறந்த நாள் விழா

**மே**தகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்களின் 69வது பிறந்த நாள் விழாவை, சென்னை இராயப்பேட்டையிலுள்ள பஞ்சாப் சங்கம் 5.5.'84 அன்று சிறப்பாகக் கொண்டாடியது.

சென்னை ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்து, குடியரசுத் தலைவரின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்திய முதல் குடிமகன் கியானி ஜெயில்சிங் அவர்களின் பிறந்த நாள் விழாவில், தமிழக அரசின் சார்பிலும், மக்களின் சார்பிலும் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய நாட்டின் மிகச்சிறந்த பதவி வகித்து வரும் பெருமகன், பஞ்சாப் மாநிலத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, அந்த மாநிலத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று, அந்த மாநில வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர்.

''அன்னாரின் பிறந்த நாளை பஞ்சாப் சங்கம் கொண்டாடினாலும், தமிழக மக்கள் சார்பில் கொண்டாடப் படுவதாகவே கருதுகிறேன். ஏனெனில், இந்த விழாவில் பங்கு கொள்ள வந்துள்ள பெரியவர்கள் பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களாக, பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே இந்த விழாவை ஒரு மாநில மக்கள் கொண்டாடுவதாக நான் எண்ணுகிறேன். 68 வயது முடிந்து 69வது வயதில் அடி எடுத்து வைக்கும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இந்தப் பிறந்த நாளில், இந்தியாவின் 60 கோடி மக்களின் வாழ்த்துக்களையும் அவர் பெறுகிறார். தமிழக மக்களின் நல்வாழ்த்துக்களையும் பெறுகிறார்.

''ஏழை எளிய மக்களுக்கு அவருடைய பணி என்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்று அவரை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

''பஞ்சாப் சங்கம் என்றாலே, எப்படி ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் சங்கம் என்று கூறலாம். இது, எந்தச் சமயம் என்று பாராமல் தமிழக மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது. இந்தச் சங்கம் 62 அமைப்புகளை உருவாக்கி, குறிப்பாகப் பெண்கள் முன்னேற்றத்துக்கு, ஆதரவற்ற, சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகின்ற பாங்கினைப் பார்க்கின்றபோது, பல அமைப்புகளும் இதேபோலச் செயல்பட்டால், இந்தியாவை உலுக்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலைகள் பஞ்சாப், அசாம் போன்ற மாநிலங்களில் நடக்கின்ற அசம்பாவிதங்கள் உருவாமல் இருக்குமே என்று குறிப்பிட விரும்புகிறேன்.

''இந்தியக் குடியரசுத் தலைவரின் பிறந்த நாளை இந்தியா முழுக்கக்கொண்டாட வேண்டும். அதற்குத் தமிழகம் முன்னுதாரணமாகத் திகழ்கிறது. பஞ்சாப் சங்கம் அதற்கு வழிகாட்டியிருக்கிறது''.

விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவரின் குணநலன்களை, நற்பணிகளை விளக்கிப் பல அமைப்புகளைச் சேர்ந்த பெரியவர்கள் பேசினார்கள்.

சென்னை அருள்தந்தை ரெவரெண்ட் டாக்டர் ஆர்.அருளப்பா, டாக்டர் ராம்சிங், திரு கேசவதாஸ், ஜெ.ஜெஷானி, திருமதி நூர்ஜகான் காதிர், திரு ஷோபா காந்த் தாஸ், திரு காந்திலால் சங்க்வி, திரு சுதிர் கந்தோத்ரா, திரு சி.ஐ.பெருமாள், திரு சர்தார் குல்வந்த்சிங் விர்தி ஆகியோர் பேசினர்.

விழாத் தொடக்கத்தில், பஞ்சாப் சங்கத் தலைவர் திரு பல்தேவ்ஜி, பொதுச் செயலாளர் பத்மஸ்ரீ திரு பி.என்.தாவன் ஆகியோர் பேசினர். விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக, சைதாப்பேட்டையிலுள்ள வெங்கட்டாபுரம் ஆதிதிராவிடக் காலனியைச் சேர்ந்த ஆடவர், பெண்டிர், குழந்தைகள் கலந்து கொண்டார்கள். மேடையில் மேதகு குடியரசுத் தலைவரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் இனிப்புகளும் வழங்கப்பட்டன. விழா முடிவில் திருமதி வி.ராதாராவ் நன்றி நவின்றார்.

—பி. வி. கிரி





# கல்வி களரியில...





**பெ**ரியார் மாவட்டத்தில்-மற்றெல்லா வளங்களும் போலவே கல்வி வளமும் நல்லபடி அமைந்திருக்கிறது.

சிக்கய்யநாய்க்கர் கல்லூரி, வாசவி கல்லூரி, வேளாண் மகளிர் கல்லூரி, ஈரோடு கலைக் கல்லூரி, கோபி கலைக் கல்லூரி, சக்தி தொழில் நுட்பக் கல்லூரி, ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி, கொங்கு தொழில் நுட்பக் கல்லூரி, அரசு-ஈரோடு தொழில் பயிற்சி மையம், அரசு-தாளபுரம் தொழிற் பயிற்சிப் பள்ளி எனப் பல கல்லூரிகள் இருக்கின்றன இந்த மாவட்டத்தில். அரசு உயர் நிலைப்பள்ளிகள் ஐந்தும், திண்டலில் மெட்ரிகுலேஷன் ஆங்கில வழிக் கல்விமுறைப் பள்ளி ஒன்றும் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கின்றன,

1983-84ல், துவக்கப்பள்ளிகள் 7 திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலே மட்டும் 36 ஆசிரியர்கள், அதாவது 16 தமிழாசிரியர்கள் உட்பட நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள மேல்நிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், உயர் துவக்கப்பள்ளிகள், துவக்கப்பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை மட்டும் மொத்தம் 1664 ஆகும். இதில் அரசுப் பள்ளிகள், அரிசனநலப் பள்ளி, நகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எல்லாம் அடங்கும்.



இந்த வட்டத்திலிருக்கும் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகள், துவக்கப்பள்ளி ஆகியவற்றிலே கல்வி பயிலும் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கை 320603. அவர்களுக்குக் கசடறக் கற்பிக்கின்ற ஆசிரிய-ஆசிரியைகளோ 8,788 பேர்களாவர்.

—பி. எல். ஆர்.



தந்தை பெரியார், நகர மன்றத் தலைவராக இருந்தபோது கட்டப்பட்டு, ஈரோட்டில் (26.5.1919) மூதறிஞர் ராஜாஜியால் திறந்து வைக்கப்பட்ட தண்ணீர்த் தொட்டி.

# குடிநீர்த் திட்டங்கள்

பெரியார் மாவட்டத்தின் தலைமையிடமான ஈரோடு ஒருங்கிணைந்த குடிநீர் வளர்ச்சித் திட்டத்திற்கெனத் தமிழ்நாடு அரசு ரூ. 272 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியது. இத்திட்டம் 2,80,000 மக்கட் தொகையின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்திடும் வகையிலே இம்மாவட்டத்தில் அமைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான பணிகள் கடந்த மூன்றாண்டுகளில் 75 சதவீதம் வரை முடிக்கப்பட்டிருக்கிறது.

மழைநாளில், ஈரோட்டிலுள்ள முக்கியச் சாலைகளில் தண்ணீர் தேங்காதிருக்க, மழைநீர் வடிகால் திட்டமொன்று தீட்டப்பட்டது. இதற்கென 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டது. இத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இது தவிர, பெரியார்மாவட்டத்தைச் சேர்ந்த 10 பேரூராட்சிகளில் ரூ. 83.17 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக முடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் 84 ஆயிரம் பேர் பயனடைவர்.

இன்னும் 7 குடிநீர்த்திட்டப் பணிகள் விரைவில் முடிவடைய இருக்கின்றன; 15 திட்டப்பணிகள் ஆய்விலிருக்கின்றன.

பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமும், ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும், வறட்சி நிவாரணம் மற்றும் பாதகமான பருவநிலைத்திட்டங்களின் கீழும், நகர்ப் பஞ்சாயத்துக் குடிநீர்த் திட்டம் மூலமும், நகராட்சிக் குடிநீர்த் திட்டம் மூலமும் நிறைவேற்றப்பட்டு - பெரியார் மாவட்ட மக்கள் பெரும்பயன் பெற்று வருகின்றனர்.

—இந்திரன்

## பெரியார் பேசுகிறார்

- அறிவை நம்புங்கள்; அப்போதுதான் விஞ்ஞான அற்புதங்களையெல்லாம் நம்மால் செய்ய முடியும்.
- எப்படிப்பட்ட கலையானாலும் சரி, அது ஒழுக்கக் குறைவுக்கும், மூட நம்பிக்கைக்கும் சிறிதும் உதவுவதாய் இருக்கக் கூடாது.
- மனிதன் எந்த அளவுக்குப் பகுத்தறிவால் தெளிவு பெறுகிறானோ, அந்த அளவுக்குப் பக்குவமாகி விட்டான் என்று பொருள்.



# விளை பொருள்

பெரியார் மாவட்டத்தில் உள்ள மாநில விளைபொருள் விற்பனை வாரிய அமைப்புகள் மட்டும் இன்னமும் கோவை மாவட்டத்தோடு தொடர்புள்ளவைகளாகவே இருக்கின்றன. இதுபற்றி அந்த வாரியத்தின் தலைவர் திரு. கவிஞர் முத்துராமலிங்கத்திடம் கேட்டபோது —

''விரைவிலேயே எங்கள் வாரிய அமைப்புகள் பெரியார் மாவட்டத்திற்கெனத் தனித்துச் செயல்படச் செய்வதற்கான ஆக்கப் பணிகள் நடந்து வருகின்றன''

''சில மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், தமது விளைபொருட்களை எங்கள் வாரியச் சந்தைக்குக் கொண்டு வந்து விற்பதை வேறு சிலர் தடுப்பதாகவும் எங்களுக்குத் தகவல் வருகிறது. ஆனால், பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு அந்தச் சங்கடமில்லை; அங்குதான் எங்கள் சந்தைக்கு நிறைய விளைபொருட்கள் விற்பனைக்கு வருகின்றன.'' என்றார்.





# புதுக்கோட்டையில் சுய வேலை வாய்ப்பு

படித்து வேலை கிடைக்காத இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், பயனடைவோர் ஒவ்வொருவரும் 18 வயதிலிருந்து 35 வயதிற்குட்பட்டும் உயர்நிலைப் பள்ளிப்படிப்புத் தேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதி உடையவர்களும் இத் திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். தொழில் கல்வி கற்றவர்களும், பெண்களும் முன்னுரிமை பெறுவார்கள்.

ஒவ்வொருவருக்கும் ரூ. 25,000க்கு மேற்படாமல் தொழில் திட்டத்திற்கேற்ப வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதற்கு வட்டி விகிதம் புதுக்கோட்டை போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் 10 சதவிகிதமாகும்.

தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு நிதி உதவியில் 75 சதவிகிதம் தொகையை முறையாகச் செலுத்தி பின் 25 சதவிகிதம் அரசு மானியமாக வழங்கப்படும். இத் திட்டத்தைச் செயல்படுத்த மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் தலைமையில் ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டு, தொழில் செய்ய நிதி உதவி பெறத் தகுதி வாய்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து, வங்கி மூலம் கடனுதவி பெறப் பரிந்துரை செய்யும்.

இந்தச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் 67 லட்சம் ரூபாய் நிதி உதவி, 2.4.'84 அன்று புதுக்கோட்டை நகர் மன்றக் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

விழாவிற்கு, மாண்புமிகு ஊரகத்தொழில்துறைஅமைச்சர்திரு. இராம. அருணாசலம் அவர்கள் தலைமையேற்றார். நிதி உதவிக்கான காசோலைகளை, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆர். கோவேந்தன் அவர்கள் வழங்கினார்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 842 நபர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களில் 573 நபர்களுக்கு ரூ. 66,98,000 கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டவர்கள்44, பெண்கள் 92, உடல் ஊனமுற்றோர் 2 நபர்கள் ஆவர்.

## சட்டமன்றச் செய்திகள்

வேடசந்தூர் வட்டத்தில் 51 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், 4 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய உதவியுடன் பால் குவளைகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் சங்கங்களுக்கு வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கறவை மாட்டுக் கடன் பெறவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

மதுராந்தகம் தொகுதியில் 75 கைப்பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 66 கைப்பம்புகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.



# கோபால சமுத்திரத்தில்...

ஒரு நாட்டின் முன்னேற்றம், அதனிடையே அமைந்துள்ள சாலை இணைப்புகளையே சார்ந்துள்ளது. நாட்டில் இன்று மேற்கொள்ளப்படும் தொழில் மற்றும் சமூக வளர்ச்சித் திட்டங்களின் முழு வெற்றிக்கு ,சிறப்புற அமைந்த சாலையமைப்பு இன்றியமையாதது. இதுவே கிராமப்புற வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் வழிகோலுவதோடன்றி, பெருமளவிற்கு வேலைவாய்ப்பிற்கும் அடிப்படையாக அமைகிறது.

இநத அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம் கோபால சமுத்திரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூ.65 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பாலத்திற்கு அடிக்கல் நாட்டு விழா 28.4.'84 அன்று நடைபெற்றது.

தலைமைப் பொறியாளர் திரு டி.மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.ப.குழந்தைவேலு அவர்கள் தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :



**''இப்பகுதியில் நீண்ட காலமாகப் பாலம் கட்டப்படாமல் இருந்தது. அதை இந்த அரசு கவனித்து, பாலத்திற்கு இன்று அடிக்கல் நாட்டுவிழா நடத்துகிறது. இதனால் இந்தப் பகுதி ஏழை எளிய மக்கள் பயன் பெறுவார்கள். இரண்டு ஆண்டுக் காலத்தில் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்''**

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ்.ஹீரா இ.ஆ.ப., திரு வீ.கருப்பசாமி பாண்டியன் எம். எல். ஏ., மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள், போக்குவரத்துத்துறைச் செயலர் திரு பி. சி. சிரியாக் இ.ஆ.ப., ஆகியோர் உரையாற்றினார்கள்.



மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய்.எஸ். எம்.யூசுப் அவர்கள் பேசுகையில் ''நான் இந்த மாவட்டத்தைச் சார்ந்தவன். இந்தப்பாலம் கட்டுவதன் மூலம் நகரப் பகுதிகளுடன் இப்பகுதி கிராமங்கள் இணைக்கப்படுகின்றன.'' என்றார்.

மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல துறை அமைச்சர் திருஎஸ்.என்இராசேந்திரன் அவர்கள் பேசுகையில ''குப்தர், அசோகர் காலங்களில் சாலைகள், சாலை ஓரங்களில் மரங்கள், பாலங்கள் கட்டியிருந்தனர். அதே போல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்று தமிழகத்தில் அமைத்து வருகிறார்கள்'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு பி.எச்.பாண்டியன் அவர்கள் உரையாற்றுகையில், ''கோபால சமுத்திரம் பகுதிக்கு மட்டும் ரூ. 1 கோடி செலவில் பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளன.

தன்னிறைவுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ 18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. **இந்தியாவில் இந்தச் சட்டமன்றத் தொகுதிதான் அதிக நிதி உதவியைப் பெற்றுள்ளது''**



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாலத்திற்கு அடிக்கல் நாட்டியும், கட்டடங்களைத் திறந்து வைத்தும், சமூகநல உதவிகளை வழங்கியும் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

''இந்தத் தொகுதியில் ரூ.10 கோடிக்கு மேல் அரசு மூலம் செலவு செய்யப் பட்ட தாகதொகுதி உறுப்பினர் குறிப்பிட்டார். தமிழகத்தில் பின்தங்கிய, ஓரளவு முன்னேறிய மாவட்டங்களில் எல்லாம் மக்களின் தேவையை உணர்ந்து எப்படி எப்படித் திட்டம் தீட்டிச் செயல்பட வேண்டும் என்று நினைத்தேனோ அப்படியெல்லாம் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

''இந்தப் பாலத் திட்டத்தினை இரண்டு ஆண்டுகளில் முடித்துத் தருவதாக அதிகாரி கூறினார். இரண்டு ஆண்டுகளில் இந்தப் பாலம் ஊர் மக்களுக்குப் பயன்படும் என்று கூறிக் கொள்கின்றேன்.

''அண்ணாவின் கொள்கையை நிறைவேற்றவில்லை என்று சொல்பவர்கட்குச் சொல்லுகிறேன். திட்டங்கள் கிராமத்திலிருந்து நகரங்களுக்குச் செல்ல வேண்டும். நகரத்திலிருந்து கிராமங்களுக்குத் திட்டங்கள் போகக் கூடாது என்று அண்ணா சொன்னார். முன்பிருந்தவர்கள் நகரங்களுக்கு அதிக அளவில் செலவு செய்தார்கள்.

''முந்தைய அரசு நகரங்களுக்கு ஏறத்தாழ ரூ.34 கோடியும் கிராமங்களுக்கு ரூ.13 கோடியும் செலவிட்டது. ஆனால் இந்த அரசு, நகரங்களுக்கு ஏறத்தாழ ரூ.16 கோடியும் கிராம மக்களுக்கு ரூ.60 கோடியும் செலவிட்டது. இந்த அரசுதான் கிராம மக்களுக்கு அதிக அளவில் உதவி செய்கின்றது. நாங்கள் செய்கிற திட்டங்களில் தவறு இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். திட்டங்கள் செய்வதே இல்லையென்று மட்டும்சொல்லாதீர்கள்.

''பச்சையாறுத் திட்டப்பகுதியில் ஆழப்படுத்தும் பணி முதலில் நடைபெற்ற பிறகு அணை கட்டப்படும். அணை கட்டும் பணி இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்ந்துச் செயல்படுத்தப்படும்.

விழா இறுதியில் கண்காணிப்புப் பொறியாளர் திரு.அழ. ரெங்கநாதன் நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**—அ. ம. விநாயகம்**

## நீண்ட நாள் கனவு நனவாகிறது!

சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதி, கோபாலசமுத்திரத்தில் புதிதாகக் கட்டப்படவுள்ள பாலமானது, அரசு இதர மாவட்டச் சாலையான கோபாலசமுத்திரச் சாலையையும், நரசிங்க நல்லூர் ஊராட்சிச் சாலையையும் இணைக்கும்.

இப்பாலம் கட்டப்படுவதால் கோபாலசமுத்திரம், பிரான்சேரி நரசிங்கநல்லூர், சுத்தமல்லி, அத்திமேடு, கருங்காடு ஆகிய கிராமங்கள் பேட்டை திருநெல்வேலி டவுன் முதலிய நகரங்களுடன் இணைக்கப்படுகின்றன.

மேற்கூறிய கிராம மக்கள், குறிப்பாக விவசாயிகள் திருநெல்வேலி டவுன் சந்தையை அடைவதற்கு-இப்பாலம் கட்டுவதால் சுமார் 6 கி.மீ. தூரம் குறைவாகிறது.

கட்டப்படவிருக்கும் உயர் மட்டப் பாலத்திற்கு அரசு அனுமதித்துள்ள தொகை ரூ.65 இலட்சம்,

இப்பாலமானது 1.5 மீட்டர் கொண்ட இரு வழிப்பாதை உள்ளதாகவும் இருமருங்கிலும் 1.50 மீட்டர் அகலமுள்ள நடைபாதைகளுடனும் அமையப் பெறும்.

இப்பாலம் 10 மீட்டர் அகலமுள்ள 22 கண்கள் கொண்டதாக அமையும். இப்பால வேலைக்கு 1,500 டன் சிமெண்டும், 135 டன் இரும்புக் கம்பிகளும் தேவைப்படும். இப்பாலத்தின் மொத்த நீளம் 220 மீட்டராகும்.

இப்பாலத்தைக் கட்டுவதற்கு கோபாலசமுத்திரம் பக்கமாகச் சுமார் 410 மீட்டர் நீளத்தில் அணுகுசாலையும், நரசிங்கநல்லூர் பக்கமாக 600 மீட்டர் நீளத்தின் அணுகு சாலையும் அமைக்கப்படும்.

இப்பாலம் கட்டப்படுவதால் கோபாலசமுத்திரம் மற்றும் இவ்வட்டாரத்திலுள்ள கிராம விவசாய மக்களின் 30 ஆண்டுக்காலத் தேவை நிறைவேற்றப்படுகிறது.









ரூ. 4,89,295 ஆகும். பாரியூரிலிருக்கிற அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயிலுக்கு ரூ. 2,00,169. சிவன்மலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சாமி திருக்கோயிலுக்கு ரூ. 2,43,603. சென்னிமலை சுப்பிரமணியசாமி திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.2,65,612. ஈரோட்டில் உள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன்-சின்னமாரியம்மன் திருக்கோயில்களின் வருமானம் ரூ. 3,99,731 .வெங்கம்பரில் இருக்கும் அருள்மிகு வரதராசப் பெருமாள் திருக்கோயிலுக்கு ரூ. 3,14,963.

காங்கயம் வட்டத்திலும், தாராபுரம் வட்டத்திலும், பவானி வட்டத்திலும், கோபி வட்டத்திலும் உள்ள பல்வேறு கோயில்களின் திருப்பணிகள் இந்துசமய அறநிலையத்துறையால் மிகச்சிறப்பாக நடந்து முடித்திருக்கின்றன; சில இடங்களில் மிகத் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

1983ஆம் ஆண்டிலே மட்டும் பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற ஐந்து திருக்கோயில்களில் கும்பாபிசேகம் நடந்து முடிந்திருக்கிறது.

கொடுமுடியிலிருக்கின்ற அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலிலும், சென்னிமலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலிலும் அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பண்ணாரியில் இருக்கும் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் 50 குழந்தைகள் தங்கும் வசதியோடு அமைக்கப்பட்ட அன்பு இல்லம் ஒன்றை அண்மையில்தான் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார்.

வெங்கம்பரில் உள்ள அருள்மிகு வரதராசப் பெருமாள் திருக்கோயில் நிதியில் திருமண மண்டபம் ஒன்று எழிலுறக் கட்டியிருக்கிறார்கள்.

சென்ற மாதம் வரையிலே - அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், ஈரோடு அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயில், சென்னிமலை அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில் மற்றும் சில திருக்கோயில்கள் ஆகியவற்றிலே 250க்கும் மேலான ஏழை ஆதிதிராவிட மக்களுக்குத் திருமணம் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிட்டுக் கூறத்தக்க பெருமை உடையதாகும்.

கொங்குத் திருநாட்டின் ஒரு பகுதியான இந்தப் பெரியார் மாவட்டத்தில்,குறிஞ்சித் தெய்வமான முருகப் பெருமானுக்கு நிறைய கோயில்கள் இருக்கின்றன. பெரிதும் முருகன் கோயில்கள் குன்றுகளின் மேலேயே காணப்படுவதன் காரணமாக, எல்லா மலைகளையும் ஒருதொகுதியாக வைத்து அவற்றைக் குன்றுதோறாடல் எனக் குறிப்பிடுவார்கள்.

முருகனின் ஆறுபடை வீடுகளான தொகைத் தலங்களில் சென்னிமலையும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், குன்றுதோறாடல் தலங்களில் கொங்குநாட்டு 24 பகுதிகளின் தலையாய பூந்துறை நாட்டிலிருக்கின்ற சென்னிமலையே முதன்மையானதெனக் கருதப்படுவது.

சென்னிமலை என்ற இந்த ஊரை உருவாக்கியதும், மலைமேல் உள்ள முருகனைச் சென்று தரிசிக்கத் தக்க பாதை அமைத்ததும் விஜயாலய சோழனே என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

இப்படிப் பழம்பெருமை மிக்க கோயில்கள் பல உண்டு பெரியார் மாவட்டத்தில்!

— இராசேந்திரன்



# உழவே தலை!

பெரியார் மாவட்டத்தில் - நெல் மட்டுமே அல்ல; மஞ்சள், கரும்பு, சோளம், புகையிலை, பருத்தி, கேழ்வரகு, நிலக்கடலை எள், ஆமணக்கு, சூரியகாந்தி, தென்னை, மரவள்ளி, காய்கறி வகைகள், பூ வகைகள், பழ வகைகள்,குதிரை மசால்,பயறு வகைப் பயிர்கள் போன்ற எல்லாமே நல்ல விதமாகப் பயிராகின்றன. மாவட்ட மண்வாகு மட்டுமே அல்ல; தட்ப வெப்ப நிலையும் எல்லாவற்றுக்கும் தக்கதாக உள்ளது.

எனவே வேளாண்மைத் தொழில், பெரியார் மாவட்டத்தின் பெரும் பான்மை மக்கள் ஈடுபடும் தொழிலாக இருக்கின்றது.

இங்கு-காலிங்கராயன் அணைக்கட்டு மூலம் பயன்பெறும் இரண்டாயிரம் ஏக்கர் நிலமும் முப்போகம் விளைவதாகும். கீழ் பவானி,கொடிவேரி அணைகளின் மூலமும், அரங்கன்கோட்டை - தடப்பள்ளி வாய்க்கால் மூலமும் ஒருலட்சம் ஏக்கருக்கு மேலான நஞ்சை நிலம் பயனடைகிறது.

பழைய அமராவதிப் பாசனம் மூலம் தாராபுரம் வட்டம் செழிப்படைந்து வருகிறதென்றால், புதிய அமராவதிப்பாசனத் திட்டத்தின் மூலம் பத்தாயிரம் ஏக்கர் நிலம் பயனடைகிறது.

பெரியார் மாவட்டத்திலிருக்கும் உப்பாறு நீர்த்தேக்கம் மூலம் ஏழாயிரம் ஏக்கர் நிலமும், பரம்



# முப்பெரும் அறிஞர்களின் வரலாறு



அதங்கோட்டாசான்

குமார் இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன் அதங்கோட்டாசான் அதங்கோட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. பாண்டியன் அவையில் தொல்காப்பிய அரங்கேற்றத்திற்கு தலைமை வகித்த ஆசான் சிறந்த வில்லிசை எழுதும் கவிஞராகவும், உடற்கூறு தத்துவ சாஸ்திரங்களின் முன்னோடியாகவும், ஜோதிட கலையில் ஞானம் கொண்டவராகவும், தமிழ் மொழிபால் சிறந்த பற்றும் ஆர்வமும், தெளிந்த அறிவும் கொண்ட தமிழ்ப்பெரும் அறிஞராகத் திகழ்ந்தார். ஆசான் தலைமையில் தமிழ் முதல் சங்கம் குரிய முக்கில் நடந்ததாகக் கருதப்படுகிறது. இவரின் தனிப் பெருமையை நாட்டிற்கும், இளம் தலைமுறையினருக்கும் உணர வைக்கும் வகையில் தமிழக அரசு ஆசான் வாழ்ந்ததாகக் கருதப்படும் அதங்கோட்டில் சிலை நிறுவத் தீர்மானித்து, 29—4—1984 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் திறக்கப் பட்டது



அமரர் ஜீவா
1906 - 1963

அமரர் ஜீவா நாஞ்சில் நாட்டின் பூதப்பாண்டியில் பிறந்தவர். ஆற்றல்மிகு மாணவராகத் திகழ்ந்த அமரர் சிறந்த காந்தியவாதி, வைக்கம் சத்தியாக்கிரகம், சுசீந்திரம் தீண்டாமை இயக்கம், சுயமரியாதை இயக்கம் போன்றவைகளில் தனிப் பங்கேற்றவர். பகத்சிங்கின் தோழர். சென்னை மாநகரின் தொழிற் சங்கத் தலைவராக இருந்தார். தேசீய விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டதின் காரணமாக, கைதாகி, பம்பாய் மத்திய சிறையில் 1942 வரை அடைபட்டிருந்தார். 1954ம் ஆண்டு தமிழக விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு குமரி மாவட்டத்தைத் தமிழகத்தோடு இணைக்க, தீவிர தொண்டாற்றினார் அமரர் ஜீவா அவர்கள். இவர் ஒரு பெரும் இலக்கியவாதியாகவும், பத்திரிகை யாளராகவும் விளங்கினார்.

ஜீவா அவர்களின் இலக்கியச் சேவையினையும், நாட்டுப் பற்றினையும் சிறப்பிக்கும் வகையில், தமிழக அரசின் சார்பில் அமரர் ஜீவா அவர்களின் உருவச்சிலை அமைக்கப்பட்டு 29-4-'84 அன்று தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் திறக்கப் பட்டது

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டாறு இடலாக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தேர்ந்த ஞானம் பெற்றவர். 1907 மார்ச்சு 10-ம் தேதி சென்னையில் தமிழ் அறிஞர்கள் முன்னிலையில் சதாவதான நிகழ்ச்சிகள் செய்து பாராட்டுப்பெற்றார். சிறந்த தமிழறிஞராகிய பாவலர், நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, திருமதீனத்தந்தாதி, கோட்டாற்றுக் கலம்பகம், கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கல்வத்து நாயகம், இன்னிசைப் பாமாலை, நீதி வெண்பா, ஷம்சுத்தாசீன் கோவை போன்ற கவிதை நூல்களையும், தேவலோக பழிக்குற்ற வழக்கு, வேதாந்த விவகார பழிக்குற்ற வழக்கு, போன்ற வசன நடைக்காவியங்களையும் எழுதியுள்ளார். பாவலர் சீரிய தமிழறிஞர் மட்டுமின்றி நாட்டின் விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தார். அயல் நாட்டுத் துணிகள் புறக்கணிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற இயக்கங்களில் தீவிரப்பங்கேற்றார். பாவலரது தமிழ்த் தொண்டினையும், நாட்டுப் பற்றினையும் சிறப்பிக்கும் வகையில் அவர் வாழ்ந்த இடமான கோட்டாறில் ரூ. 4.10 லட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைக்க, தமிழக அரசு முடிவு செய்து 29—4—1984 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பெற்றது.



சதாவதானி
செய்குத் தம்பிப் பாவலர்
1874 - 1950



# ஆலயந் தொழுவதே...



கொங்குவள நாட்டின் ஒரு பகுதியான பெரியார் மாவட்டத்திலிருக்கின்ற ஆலயங்கள் பெரும்பாலும் பழம் பெருமை மிக்கவைகளாகத் திகழ்கின்றன.

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், அருள்மிகு பாரியூர் கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், அருள்மிகு பச்சைமலை சுப்பிரமணியசாமி திருக்கோயில், அருள்மிகு பவளமலை முத்துக்குமாரசாமி திருக்கோயில், அருள்மிகு சிவன்மலை சுப்பிரமணியசாமி திருக்கோயில், அருள்மிகு சென்னிமலை சுப்பிரமணியசாமி திருக்கோயில், அருள்மிகு பவானி சங்கமேஸ்வரர் ஆலயம், அருள்மிகு கொடுமுடி மகுடேஸ்வரர் திருக்கோயில் எனப் பெரியார் மாவட்டத்திலிருக்கின்ற திருக்கோயில்களின் பட்டியல் இன்னும் வளர்ந்து கொண்டே போவதாகும்.

தன்மானக் கொள்கைகளுக்கு-நாத்திகக் கருத்துகளுக்கு வித்தூன்றிய தந்தை பெரியார் அவர்கள் பிறந்த மாவட்டமான இங்கே மட்டும் 1712 திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் தமிழ்நாடு அரசின் இந்துசமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழே உள்ளன.

ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் வரக்கூடிய கோயில்களே இங்கு ஏழு இருக்கின்றன! அவைகளின் விவரங்கள் வருமாறு:

கடந்த ஆண்டு வருமானம் மட்டுமே - கொடுமுடியிலிருக்கிற அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலுக்கு மட்டும்





பண்ணாரியம்மன் கோயில் அன்பு இல்லம் திறப்பு விழா



பிக்குளம்-ஆளியாறு மேட்டூர் மேற்குக் கரை வாய்க்கால்கள் மூலம் 72 ஆயிரம் ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. குண்டேரிப் பள்ளம், வறட்டுப்பள்ளம் மூலம் ஏழாயிரம் ஏக்கர் நிலம் பயனடைகிறது. வட்ட மலைக் கரை ஓடைப் பாசனத்தால் மூவாயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது.

பெரியார் மாவட்டத்தில் பயிர்ச் செலவுக்கு உதவிடும் பெரிய குளங்கள் 42 இருக்கின்றன. 75 ஆயிரம் கிணறுகளும் இந்த வகையில் உதவுகின்றன.

தமிழகத்திலேயே நெல், கரும்பு, மஞ்சள் விளைச்சலில் பெரியார் மாவட்டம் குறிப்பிடத்தக்க மாவட்டமாகத் திகழ்கிறது. கல்கத்தா, மகாராட்டிரம், வங்காளம் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்கிற அளவில் இங்கே மஞ்சள் விளைச்சல் அதிக அளவில் இருக்கிறது.

ரொபஸ்ட்டா, பூவன், நேந்திரன் போன்ற வாழை ரகங்களும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப் படுகின்றன.





1982 ஜூலை முதல், பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் இம் மாவட்டத்திலே செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தாராபுரத்தில் உள்ள உழவர் பயிற்சி நிலையத்திலிருந்து, 'உழவர் முரசு' என்றொரு பத்திரிகை வெளியிடுகிறார்கள். உழவர் பெருமக்களுக்கு உதவிகரமாக இருக்கும் பல ஆலோசனைகள் இந்த ஏட்டின் மூலம் வெளியிடப் படுகின்றன.

தமிழக அரசால், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த பவானி வட்டத்திலிருக்கும் குப்பநாய்க்கன் பாளையத்தில் விதைச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. 23.9.'78ல், 2 விதைச் சேமிப்புக் கிடங்குகளுடனும், சுத்திகரிப்பு ஆலையுடனும் காயவைத்தல் போன்ற பணிகளுக்கான கள வசதியோடும் ரூ. 5,73,573 செலவில் ஆரம்பிக்கப்பட்டது இது.

''இந்த விதைச் சுத்திகரிப்பு நிலையம் ஓராண்டுக்கு ஆயிரம் டன் விதைகளைச் சுத்தம் செய்யும் திறன்படைத்தது'' என்றார் பெரியார் மாவட்ட இணை வேளாண்மை இயக்குநர் திரு. சி. மணிமந்திரி.



விதைச் சுத்திகரிப்புக்கெனப் பல லட்சம் ரூபாய்கள் பெறுமானமுள்ள 9 வகை இயந்திரங்கள் இங்கே பொருத்தப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையத்தில், அமிலத்தின் உதவியால் பருத்திக்கொட்டைகளின் மேலே உள்ள பஞ்சை நீக்கி, விதைக்கென வேளாண்மைக் கிடங்குகள் மூலம் தருகிறார்கள். பஞ்சு நீக்குவதால் பருத்தி விதையைப் பலவகைப் பூச்சித் தாக்குதல்களிலிருந்து காக்க முடிவதோடு விதையின் அளவும் குறையும்; விதைப்பதும் எளிதாகும்.

விதைகளைப் பாதுகாக்க இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ. 1,35,000 திட்டத்தில் ஒரு கிடங்கும் கட்டப்பட்டு வருகிறது.

இதனருகே, 86.86 ஏக்கர் பரப்பளவில் அரசு விதைப் பண்ணையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்ணை மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்து, பெரியார் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கிறார்கள்.

இந்தப் பண்ணைக்கு ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேட்டூர் மேற்குக் கரை கால்வாய் மூலமும் அதிகத் தேவைக்குக்காவிரியாற்று மூலமும் நீர்ப்பாசனம் பெறப் பட்டு வருகிறது. இதற்காகவே காவிரியாற்றில் 30 மற்றும் 50 குதிரைத் திறன்கொண்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பண்ணையில் இரட்டை வரிசை நடவு என்று ஒரு புதிய முறையைப் பரீட்சார்த்தமாகக் கையாளுகிறார்கள். புதுப்புது முறைகளில், பூச்சித் தொல்லைகளிலிருந்து பயிர்களைக் காக்கிறார்கள்.

பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் இங்கே மரநாற்றுகளையும் உருவாக்கி வருகிறார்கள். இவை வளர்ந்தபின் கால்நடைத் தீவனமாகவும், உரமாகவும், விறகாகவும் பயன்படும். இந்த நாற்றுக்கள் பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு 50 சதவிகித மான்ய விலையிலே அளிக்கப்படுகின்றன.

-பி. எல். ராஜேந்திரன்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 10வது பட்டமளிப்பு விழா (5.5.84) சிறப்புற நடைபெற்றது. சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவிற்கு வருகை தந்தோரை, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வி.ராஜகோபாலன் வரவேற்றார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் பங்கேற்று 596 பேர்களுக்குப் பட்டங்களை வழங்கினார். இந்திய வேளாண்மை ஆய்வுக்குழு பொது இயக்குநர் டாக்டர் ஓ.பி. கௌதம் இதில் பங்கேற்றார்.



பெரியார் மாவட்டத்தில் 28.11.'82ல் துவக்கிவைக்கப்பட்டதுதான் ஜீவா போக்கு வரத்துக் கழகம்.

''மறைந்த தலைவர்களின் பெயர்களை அரசு நிறுவனங்களுக்கு வைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. அந்த வகையில் மறைந்த தமிழ் அன்பர், பொது உடைமைத் தத்துவத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர், எதையும் தாங்கும் இதயம் கொண்டிருந்தவர், மறைந்தவர், எனது நண்பர் ஜீவா பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்க முடிவுசெய்தோம்'' என்ற விளக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆரம்பித்து வைத்ததுதான் இந்தப் போக்குவரத்துக் கழகம்.

1.4.'83 முதல், சேரன்போக்குவரத்துக் கழகத்திலிருந்து இது தனித்து இயங்கத் தொடங்கியபோது, 123 சுற்றுலாப் பேருந்துகள் உட்பட 330 பேருந்துகள் இதிலிருந்தன; ஈரோடு, கோபி, சத்தியமங்கலம், காங்கேயம், தாராபுரம், பழனி, கரூர், கோவை, பவானி, திருப்பூர் ஆகிய 10 கிளைகள் இருந்தன.

கோவை, திருச்சி, மதுரை, ஊட்டி, பாலக்காடு, தஞ்சாவூர் ஆகிய நகரங்களுக்கும் இப்போது புதிய வழித்தடங்களில் 14 பேருந்துகள் விட்டிருக்கிறார்கள். இதனால் ஏறத்தாழ இரண்டு லட்சம்பேர் பயனடைகின்றனர்.

வண்டிகளின் பாகங்கள் புதுப்பித்தல், டயர் புதுப்பித்தல், பாடி கட்டுதல் போன்றவற்றுக்கான தனித் தொழிற்சாலையும் ஜீவா போக்குவரத்துக் கழகத்திற்கு உண்டு.

சாதாரணப் பேருந்துகள் 'மினி' பேருந்துகள், நான்கு வழிப்பேருந்துகள், 56 அடி நீள மிக நீண்ட பேருந்துகள் என 'ஜீவா'வின் பல தரப்பட்ட பேருந்துகளிலே நாள்தோறும் இரண்டரை இலட்சம் பேர்களுக்கு மேல் பயணம் செய்கின்றனர்.

பெரியார் மாவட்டத்தில் 'குளுகுளு' வசதிப் பேருந்தும் ஓடுகிறது.

நாள் ஒன்றுக்குப் பத்தாயிரம் இலோமீட்டர் தூரத்திற்கு ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சென்றுவருகின்றன.

இந்த ஆண்டில், 'புதிதாக 30 பேருந்துகள் விடத் திட்டமிட்டதில் 10 பேருந்துகள்



# ஜீவா போக்குவரத்துக் கழகம்

**தில்லை கோவிந்தன்**
**மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)**
**பெரியார் மாவட்டம்**



முடிவடைந்து ஓடிக்கொண்டிருக்கின்றன. கோயம்புத்தூருக்கும் சேலத்திற்கும் ஈரோடு வழியே புதிதாகஒரு 'குளுகுளு' பேருந்து விடவும் முடிவுசெய்திருக்கிறார்கள் இவர்கள்.

அதிக தூரம் செல்லும் வண்டிகளிலே பயணம் செய்வோர், அலுப்பையும், களைப்பையும் அறியாதிருக்கும் பொருட்டு, 90 பேருந்துகளில் 'டேப்ரிக்கார்டர்' பொருத்தப்பட்டு இசையோடு போக்குவரத்து நடந்துவருகிறது.

'ஜீவா'வுக்காகக் காத்து நிற்கிறவர்கள், வெயில்,மழைக்கு அஞ்சக்கூடாது என்ற கருத்தில், பெரியார் மாவட்டம் முழுமையிலும் 10 நிழற்குடைகளை இவர்களே அமைத்திருக்கிறார்கள். இன்னும் 40 அமைக்கத் திட்டம் வைத்திருக்கிறார்கள்.

''மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆலோசனையின் பேரில், சாலை விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு 4 இடத்தில் நாங்களே சிக்னல் விளக்குகளை அமைத்திருக்கிறோம்; விரைவில், மேலும் இரண்டு இடத்தில் அமைக்கவிருக்கிறோம்'' என்றார் ஜீவா போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு.நா.இராமகிருஷ்ணன்.



நிர்வாக இயக்குநருடன் சந்திப்பு

'ஜீவா' தவிர-வேறு நான்கு போக்குவரத்துக் கழகப் பேருந்து வண்டிகளும் பெரியார் மாவட்டத்தில் ஓடுவதால் 'சிக்னல் விளக்கு' அமைக்க அவர்களும் உதவியுள்ளனர்.

ஓட்டுநர் பயிற்சிக்கு மட்டுமல்ல; எரிபொருள் சிக்கனத்திற்கும் தனிவகுப்பு நடத்துகிறார்கள் ஜீவா போக்குவரத்துக் கழகத்தில். இதனால் விபத்துக்கள் குறைவு. எங்காவது விபத்துக்கள் தொடர்ச்சியாக நடக்கும் பட்சத்தில் அதற்கெனத் தனி ஆய்வு நடத்தி, அந்த இடத்தில் எச்சரிக்கைப் பலகை வைக்கப்படுகிறது. அப்படி இந்த மாவட்டத்திலே ஆறு இடங்களில் எச்சரிக்கைப் பலகை வைத்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் ஜீவா போக்குவரத்துக் கழகத்தில் 2,344 பேர் பணிபுரிகின்றனர்.

ஒவ்வொரு கிளையிலும் ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலை, அங்கே மிக மிகக் குறைந்த விலையில் சிற்றுண்டி, சாப்பாடு தருவது மட்டுமல்ல; சம்பளநாளன்று மிகவும் குறைந்த விலையில் இனிப்புப் பொட்டலங்களும் வழங்குகிறார்கள் இங்கே.

ஜீவா போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் பிள்ளைகள் படிக்க நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. தொழில் நுணுக்கப் பட்டம் பெற அவர்களுக்கு இலவசப் படிப்புதவி செய்வது மட்டுமல்ல; பட்டம் பெறுவோருக்கு இவர்களே வேலையும் தருகிறார்கள். பள்ளி சென்று திரும்ப இவர்களுக்கெல்லாம் அடையாள அட்டைகள் தரப்படுகின்றன. இலவச மருத்துவ உதவி, ஆண்டொன்றுக்கு 2750 கிலோ மீட்டர் வரை தொழிலாளர்கள் குடும்பத்தோடு சுற்றுப் பயணம் சென்றுவர இலவச உதவி, எரிபொருள் சேமிப்பு ஊக்கத்தொகை, தொழிலாளர் கல்வி நலத்திட்டம், மனமகிழ் மன்றம், நூலக வசதி, தொழிலாளர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் எல்லாம் இங்குண்டு.

விரைவில், பெரியார் மாவட்டத்தில், போக்குவரத்துக் கழகங்களின் நிதி ஆதாரத்தில் தொழில் நுணுக்கக் கல்லூரி ஒன்று அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுப் போட்டிகளிலும், கிராமியக் கலையான புலியாட்டத்திலும் ஜீவா போக்குவரத்துக் கழகத்தார் சிறந்து விளங்குகின்றனர்.





# கதர் கிராமத் தொழில்

பெரியார் மாவட்டத்தில், கதர் கிராமத் தொழில் வாரியம் பாங்குறப்பணியாற்றி வருகிறது.

'கிராமங்களின் வளர்ச்சியே நகரங்களின் எழுச்சி' என்று காந்தியடிகள் கூறியதற்கிணங்க சிறப்போடு செயலாற்றி வரும் இந்த வாரியத்தின் கீழ் - பெரிய அக்ரகாரம், மரவபாளையம் இரண்டு இடங்களிலும் தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தச்சுத்தொழில் செய்திடுவோருக்கு ஈரோடு, பவா'னி, கோபி ஆகிய இடங்களில் உள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன.

கொளத்துப் பாளையத்தில் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கமும், ஓலகடத்திலும், திங்களூரிலும் மண்பாண்டத் தொழிலாளர் பாண்ட உற்பத்திக் கூட்டுறவுச் சங்கமும், தூக்கநாய்க்கன் பாளையத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இயங்கிவருகின்றன.

இவற்றின் மூலம் ஏறத்தாழ 700 பேர் பயன் பெற்று வருகின்றனர்.



காங்கேயம், மொடக்குறிச்சி, வெள்ள கோயில் ஆகிய ஊர்களில் சோப்பு உற்பத்திக்கும் -ஈரோட்டில் காலணி உற்பத்திக்கும் எனத் தனித்தனி அலகுகள் இருக்கின்றன. கெங்கம்பாளையத்தில் மாதிரி தோல் பதனிடும் நிலையமும்-குரோம் தோல் பதனிடும் நிலையமும், செண்பகம்புதூரில் கைமுறைக் காகித அலகும் உள்ளன. கதர் கிராமத்தொழில்வாரியக் கவனிப்பில் உள்ள இவற்றின் மூலம் மட்டுமே 110 பேர் பயன் பெற்று வருகிறார்கள்.

1982-83ல், பெரியார் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களின் மூலம் ரூ.24.03 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்களின் உற்பத்தியும், ரூ. 77.19 இலட்சத்திற்கான விற்பனையும் ஆகியுள்ளது.

நடப்பாண்டில், கடந்த பிப்ரவரி முடிய ரூ. 75.91 இலட்சம் உற்பத்தியும், ரூ. 87.30இலட்சம் விற்பனையும் நடைபெற்றுள்ளது.

17.9.79ல், பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட அன்றே உருவாக்கப்பட்ட கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம், தொழில் தொடங்கத் தனிநபர்களுக்கு நிதியுதவியும் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு மூலமும் பெற்றுத் தரப்படுகிறது. இவ்வாறான கடன், இந்த மாவட்டத்தில் விசைச் செக்கு மூலம் எண்ணெய் தயாரிப்பது, மண்பாண்டத் தொழில், சோப்புத் தொழில், தேனீ வளர்ப்பு, அப்பளம் தயாரித்தல், பொரி மற்றும் அவல்தயாரித்தல், தச்சு, கொல்லு, காலணி உருவாக்கல், தோல் பதனிடல், சுண்ணாம்பு தயாரித்தல் போன்ற தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் ஆதிதிராவிடர்கள் 406 பேர்களும், மலைவாழ் மக்கள் 35 பேர்களும், மற்றவர்கள் 1373 பேர்களும் பயனடைந்திருக்கிறார்கள்.





# கலைமகள் கல்வி நிலையம்





பெரியார் மாவட்டத் தலைமையிடமான ஈரோட்டில், திரு. எஸ். மீனாட்சிசுந்தரனாரால் துவக்கப்பட்டுள்ள கலைமகள் கல்வி நிலையம் 35 ஆண்டுக்காலப் பழமையுடையது. இங்கே பயிலும் மாணவிகள் ஆண்டுதோறும் நல்ல விழுக்காட்டில் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுகிறார்கள்.

1978ல், கலைமகள் கல்விக் கூடத்தில் துவக்கப்பட்ட தொல்பொருள் கலைக்கூடத்தில் முதுமக்கள் தாழி, பண்டைக்கால ஆயுதங்கள், பழமைச் சிறப்பு வாய்ந்த ஓலைச்சுவடிகள், நடுகற்கள், மூவேந்தர் கால நாணயங்கள், அணிமணிகளெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அகழ்ந்தெடுத்த பழஞ் சிற்பங்களும் இங்குண்டு.



கலைமகள் கல்வி நிலையம் சார்பில் இலங்கைத் தமிழர் நிதிக்கென ரூ. 10 ஆயிரம் அளிக்கப்படுகிறது.

செல்வி எம். முத்தையா தாளாளராக இருக்கும் இந்தக் கல்வி நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையில் அருங்காட்சியக ஆய்வு மையத்தைத் தொடங்கிவைத்திருக்கிறார்.

## ஏலகிரியின் ஏற்றம்

அலாவுதீனின் அற்புத விளக்கைப் படித்திருக்கிறோம். வட ஆர்க்காடு மாவட்டம், ஏலகிரியில் அமைந்துள்ள மலைவாழ் மக்களுக்கான கூட்டுறவுச் சங்கம் இப்பொழுது நம் கண்ணெதிரில் இந்த அற்புத விளக்கின் சாதனையைச் சாதித்துள்ளது.

இந்தக் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களின் ஆண்டு வருமானம் ரூ 150ல் இருந்து ரூ 200 வரை இருந்தது. சங்கம் செயல்பட ஆரம்பித்தபின்- இப்பொழுது தனி நபர் வருமானம் ஆண்டுக்கு ரூ 1500 என்ற அளவில் உயர்ந்துள்ளது!





கிராமங்களின் வளர்ச்சி கருதி மாண்புமிகு முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் பெரியார் மாவட்டத்தில் பெருமைப்படக் கூடியவைகளாக இருக்கின்றன.

இணைப்புச் சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள் உருவாக்கல், பள்ளிக்கட்டடங்கள் கட்டல், ஆதிதிராவிடர் இடுகாட்டுக்குப் பாதை அமைத்தல், சிறுபாசனக் குட்டைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள், கிராமிய மருந்தகங்கள் கட்டுதல், ஊராட்சி ஒன்றியச்சாலைகள் பழுது பார்த்தல், பொதுக் கழிப்பிடம் - சாக்கடைகள் அமைப்பது போன்ற தன்னிறைவுத் திட்டத்தின் கீழான பணிகள் மட்டும் முதல் கட்டத்தில் 240 முடிக்கப்பட்டிருக்கின்றன. பெரியார் மாவட்டத்தில், இரண்டாம் கட்டத்தில் முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 1358 என உயர்ந்திருக்கிறது. மூன்றாம் கட்டத்தில் 1211 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவைகளுக்காக ரூ.835 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இவை தவிர, பெரியார் மாவட்டத் தன்னிறைவுத் திட்டத்தின் கூடுதல் பணியாக 213 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்படுத்திவரும் 264 பணிகளுக்கென இதுவரை ரூ.28,43,031 செலவாகியுள்ளது.

சத்தியமங்கலம் நகராட்சியில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 48 பணிகளும், பவானி நகராட்சியில் 31 பணிகளும், பவானி சாகர் நகரியத்தில் 58 பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன; சில முடிவுற இருக்கின்றன.

இவை தவிர, பெரியார் மாவட்டத்தில் 1982-83ல் 106 பொதுக் கழிப்பிடங்கள் ரூ.15.105 இலட்சத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 1983-84ல் 245 பொதுக் கழிப்பிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு விரைவாக வேலை நடந்துவருகிறது.

# தன்னிறைவுத் திட்டம்








பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் இருக்கும் கூட்டுறவு நூற்பாலையில் தயாராகும் நூலுக்கு மாதம் ஒன்றுக்கு 1,285 பேல் பஞ்சு தேவைப்படுகிறது!

58.2 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்த ஆலையில் பர்மா, இலங்கை அகதிகள் 218 பேர் பணியாற்றுகிறார்கள், மொத்தத்தில் இங்கே 906 பேர் வேலை செய்கின்றனர்.

19.10.63ல் இந் நூற்பாலை துவக்கப்பட்டபோது இதன் பங்கு மூலதனம் ரூ. 21.27 இலட்சமாக இருந்தது. இப்போதோ அது ரூ. 87.97 இலட்சமாகப் பெருகியிருக்கிறது.

அரசின் பங்கு மூலதனம் ரூ. 71.65 இலட்சமாகும்.

தாராபுரம் நூற்பாலைக்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் இங்கு கிடைப்பது போக மற்றையவை மகாராட்டிரத்திலிருந்தும், பம்பாயிலிருந்தும், அரியானாவிலிருந்தும், குஜராத்திலிருந்தும் பெறப்படுகின்றன.

இந்த ஆலையின் மாதாந்திர விற்பனை சுமார் 46 இலட்சம் ரூபாய்!

இதில் பணியாற்றிடும் ஊழியர்களுக்கென 17 குடியிருப்புகள் ஒரு மருத்துவமனையெல்லாம் கட்டித் தந்திருக்கிறார்கள். இங்குள்ளவர்களின் குழந்தைகள் படிக்கச் செல்லுவதென்றால் 8 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியுள்ளது. எனவே, அந்த இளஞ்சிறார்கள் பள்ளி செல்லவும் வீடுதிரும்பவும் ஆலை நிர்வாகமே ஒரு மாட்டு வண்டி ஏற்பாடு செய்து தந்திருக்கிறது.



ஆலையில் பணிபுரிவோருக் இலவசமாகத்தேனீர் மட்டுமல அவர்களுடைய வீட்டு உபயோக திற்கு இலவசமாகப் பனைவெ லமும் தரப்படுகிறது.

இந்தக் கூட்டுறவு நூற்பால யில் 25 ஆயிரத்து 20 தறிக இருக்கின்றன. பவர் லூம்களுக் ஏற்றபடி இவர்களே தகுந்த பீ களும் தயாரித்துத் தருகிறார்கள்

கடந்த ஆண்டிலே மட்டு ரூ. 9.55 இலட்சம் இலாபம் ச டியுள்ள தாராபுரம் கூட்டுற நூற்பாலைக்குப் பெரியா மாவட்ட ஆட்சித் தலைவரா திரு பி.வி.ராஜாராமன் இ.ஆ.ப தலைவர்; நிர்வாக மேலாளர் தி கோவிந்தன்.

# ஆசியாவிலேயே மிகப்பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலை

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் துரிதமாகச் செல்ல உதவும் சாதனங்களில் ரயிலும் ஒன்று என்பதை நாமறிவோம்.

அறிவியல் வளர வளர போக்குவரவுச் சாதனங்களும் பெருமளவில் வளர்ந்து கொண்டு வருகின்றன. மின்னல் வேகத்தில் பறந்து செல்லக்கூடிய அதிநவீன விமானங்களும், ஆழ்கடலில் ஆயிரக்கணக்கான பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய கப்பல்களும் மற்றும் பேருந்து போன்ற பிறவகைச் சாதனங்களும் இன்று பல்கிப் பெருகி இருக்கின்றன.

நெடுந்தொலைவில் உள்ள ஊர்களுக்கு, கொஞ்சங்கூட அலுப்புத் தட்டாத வகையில், விரைந்து செல்லக்கூடிய, ஏழை எளியவர்கள் மற்றும் நடுத்தர மக்கள் பயணம் செய்யக்கூடிய போக்குவரவுச் சாதனங்களில் ரயில் முக்கியத்துவம் பெறுகிறது எனலாம்.

பயணிகளுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய சாமான்களையும் தபால்களையும் கொண்டு செல்ல ரயில்கள் பெரிதும் உதவுகின்றன.

வேகத்தை அதிகரிக்கும் வகையில் மிக்க விவேகத்துடன் தயாரிக்கப்படும் வண்ண வடிவமைப்புகளுடன் கூடிய ரயில் பெட்டிகள்தான் எத்தனை! எத்தனை!

தமிழ்நாட்டில், தயாரிக்கப்படுகின்ற இந்த இரயில் இணைப்புப் பெட்டிகள், இந்தியாவின் பல மாநிலங்களிலும் ஓடுகின்றன. ஏன், உலக நாடுகள் பலவற்றுக்கும் இங்குத் தயாராகின்ற இணைப்புப் பெட்டிகள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அந்த அளவுக்குப் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கிறது, ஐ.சி.எஃப். எனப்படும் பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory).

29 ஆண்டுகளுக்கு முன்னால், 1955-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளன்று சென்னை பெரம்பூரில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் முதல் மூன்றாவது வகுப்புப்பெட்டி தயாராகி வெளிவந்தது. இதற்கான கூண்டுப் பொருள்களை ஸ்விட்ஸர்லாந்து, ஸ்விஸ்கார் மற்றும் எலிவேட்டர் கூட்டு நிறுவனம் வழங்கியது. உற்பத்தியை, அப்பொழுது பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தொடங்கி வைத்தார். ஐ.சி.எஃப் என்று அழைக்கப்படும் இந்தத் தொழிற்சாலை 29 ஆண்டுகளுக்குள் 'சர்வதேசப் புகழ்' பெற்று விளங்குகிறது. இன்று ஆசியாவிலேயே மிகப் பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலையாக விளங்குகிறது.

உற்பத்தியின் முதல் ஆண்டில்12 ரயில் பெட்டிகளே உற்பத்தி செய்யப்பட்டன. அதன் பிறகு 350 ரயில் பெட்டிகள் என எண்ணிக்கை உயர்ந்தது. 1962ல் முழு அளவில் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தது. ஆண்டுக்கு 720 ரயில் பெட்டிகள் உற்பத்தியாகின்றன.

1984 ஏப்ரல் இறுதிவரை 14,982 ரயில் பெட்டிகள் வெளிவந்துள்ளன. இவற்றின் மதிப்பு ரூ.630 கோடியாகும். இந்தத் தொகைக்குச் சமமான அந்நியச் செலாவணி மிச்சமாகியுள்ளது. நாட்டிற்குத் தேவையான அதாவது தன்னிறைவு பெறும் வகையில் உற்பத்தியை இத்தொழிற்சாலை எட்டியுள்ளது. ஏற்றுமதி மூலம் ரூ.25 கோடிக்கும் மேல் ஈட்டப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை சர்வதேசப் புகழ் வாய்ந்ததாக ஆசியாவில் முன்னணியில் இருந்து வருகிறது. தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் இந்தத் தொழிற்சாலை, மற்ற நாட்டினரும் திருப்தி கொள்ளும் வகையில் அரிய பணி புரிந்து வருகிறது.






குளிர்பதனம் செய்யப்பட்ட இரண்டு அடுக்கு இணைப்புப் பெட்டியின் உட்புறத் தோற்றம்.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இரு பெரும் பகுதிகளாக இயங்கி வருகிறது. ஒன்று, கூண்டுப் பகுதி (Shell), மற்றொன்று,பெட்டிகளின் உட்புறம் உருவாகும் பகுதி (Furnishing).

ரயில் பெட்டிகள் தயாரிப்புக்கு முக்கியமான மூலப் பொருள் எஃகினாலான தகடுகள். கூண்டுப் பகுதியில் ரயில் பெட்டிக்கான வெளிப்புற அமைப்பு தயாரிக்கப்படுகிறது. அதாவது இங்கே கூடு மட்டுமே தயாராகிறது. இங்கே நாம் பார்க்கும் எஃகுத் தகடுகள் முடிவில் ரயில் பெட்டியாக உருமாறி இருப்பதைக் கண்டு வியக்கிறோம்.

கூண்டுப் பகுதியில் 'போகி' எனப்படும் ரயில் பெட்டியின் அடிப்பாகம்,பக்கச்சுவர்கள்,மேற்பகுதி எல்லாம் உருவாக்கப்படுகின்றன. பிறகு இவை Furnishing பிரிவுக்குக்கொண்டு செல்லப்படுகின்றன. இங்குதான் இந்தக்கூடு முழு வடிவம் பெறுகின்றது. ரயில் பெட்டியில் ஜன்னல்கள், இருக்கைகள், தரை, மின் விளக்குகள், மின் விசிறிகள் முதலானவை அமைக்கப்படுகின்றன. இந்தப் பிரிவில்தான் ரயில் பெட்டிகள் ரம்மியமாகக் காட்சியளிக்கும் வகையில் வண்ணந் தீட்டப்பட்டு, நாம் பயணம் செய்யத் தயார் நிலையில்வெளிவருகின்றன.

இணைப்பு நுட்பமும், கனக் குறைவானதும், எல்லாம் எஃகினாலானதும், காய்ச்சிப் பிணைக்கப்பட்டதுமானவடிவமைப்புடன் இந்த ரயில் பெட்டிகள் விளங்குகின்றன. பாதுகாப்பு, விரைவு, வசதி ஆகிய மூன்று தேவைகளுக்கும் ஏற்ப இந்தப் பெட்டிகள் கட்டப்படுகின்றன. விபத்துக்களின்போது பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. நல்ல பயணத்திற்கும், குறைந்த பராமரிப்புச் செலவிற்கும் ஏற்றவாறு இவை உள்ளன.

ஐ.சி.எஃப். கட்டும் ரயில் பெட்டிகள் அகலப் பாதையில் (பிராட் கேஜ்) மணிக்கு 140 கி.மீ. வேகத்தையும், மீட்டர்கேஜ் பாதையில் 100 கி.மீ. வேகத்தையும் தாங்கக்கூடியவை. குறிப்பிட்டதற்கும் அதிகமான வேகத்தில் செலுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவை.

ஐ.சி.எஃப்பில் சுமார் 15,000 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்கள் எல்லோருடைய கைவண்ணத்தால் இணைப்புப் பெட்டிகள் உருவாகின்றன.

இணைப்புப் பெட்டிகள் பல்வேறு வடிவமைப்புகளுடன், வசதிகளுடன், வண்ணங்களுடன் தயாரிக்கப்படுகின்றன. அதே சமயத்தில் தரம் மிக முக்கியமாகக் கவனிக்கப்படுகிறது. அதனால்தான் உலக நாடுகள் பலதங்களுக்குத் தேவையான இணைப்புப் பெட்டிகளுக்கு மனமுவந்து 'ஆர்டர்' தருகின்றன.

தாய்லாந்து, பர்மா, தைவான், ஜாம்பியா, பிலிப்பைன்ஸ், தான்சானியா, உகாண்டா, வியட்நாம், நைஜீரியா, மொசாம்பிக், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குப் 'போகிகளும், இணைப்புப் பெட்டிகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1982-83ல் 750 இணைப்புப் பெட்டிகள் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் இலக்கையும் விஞ்சி 775 இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம், திறமையான நிர்வாகமும், கடின உழைப்புமே ஆகும். இப்பொழுது முடிந்த 1983-84ஆம் ஆண்டில், எப்பொழுதும் இல்லாத மிகப் பெரிய எண்ணிக்கையான 817 பலரகப் பெட்டிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இது மிக அதிக உற்பத்தித் திறனான 750 பெட்டிகளைவிட 67 பெட்டிகள் அதிகமாகும் அடுத்த ஆண்டு இந்த இலக்கு 825 ஆக இருக்கும்.

இலக்குகள் 850-1000 வரை போய்க் கொண்டே இருக்கும். இதனால் உற்பத்தி பெருகுகிறது. அதன் மூலம் வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. அதே சமயத்தில் இது சம்பந்தமான துணைத் தொழில்கள் பெருகவும் உதவுகிறது. இங்குத் தயாராகும் இணைப்புப் பெட்டிகள் இந்திய இரயில்வேக்கள் முழுவதற்கும் அனுப்பப்படுகின்றன.

கல்கத்தாவில் விரைவுப் போக்குவரவுக்காகப் பாதாள இருப்புப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. மொத்தமாக முதல்

தாய்லாந்துக்கு ஏற்றுமதியாகும் 'போகி'





வண்டலூர் உயிரியல் பூங்காவின் இயக்குநரான திரு. எஸ். சுப்பராயலுவிடம் இப்போது இப் பூங்காவிலுள்ள உயிரினங்கள் பற்றிய விவரம் கேட்டோம். அதற்கு அவர் இப்படிப் பதிலளித்தார்:

''25 வகைப் பாலூட்டிகள் 170 இங்கிருக்கின்றன; 55 வகையான பறவையினங்கள் 170 உள்ளன. ஊர்வன 15 இருக்கின்றன. மைசூர் உயிரியல் பூங்காவிலிருந்து காண்பதற்கு அரிதான மணிப்பூர்மான்களும் வராகமான்களும் வாங்கியிருக்கின்றோம். குஜராத்திலிருந்து சிங்கமும், ஒரிசாவிலிருந்து சிறுத்தை-புலி- முதலைகள் போன்றவைகளும் இங்கு வர இருக்கின்றன. அஸ்ஸாமிலிருந்து காண்டா மிருகம் வாங்கவும் ஒரு யோசனை இருக்கிறது. இந்த உயிரியல் பூங்காவுக்குக் கவர்ச்சிகரமான நுழைவு வாயில் அமைக்கவும், மலைச்சரிவில் செயற்கை நீர்வீழ்ச்சி உருவாக்கவும் திட்டமிருக்கிறது.

''80 ஆயிரத்திற்கு மேலான மரங்களுக்கான கன்றுகள் இந்தப் பூங்காவில் பரவலாக நடப்பட்டிருக்கின்றன. மரங்கள் நிறைந்த பெரிய திட்டு ஒன்றில் ஏழு யானைகள் விடப்பட்டுள்ளன. அந்தத் திட்டைச் சுற்றி வெட்டப்பட்டுள்ள பெரிய அகழி தண்ணீருக்காகக் காத்திருக்கிறது.

''நிலத்தடி நீர் இப்போது நாளொன்றுக்கு ஒரு இலட்சம் காலன்தான் கிடைக்கிறது. ஆனால் 3 இலட்சம் காலனுக்கு மேல் இங்கே தண்ணீருக்கான தேவையிருக்கிறது; பாலாற்றிலிருந்து இங்கே தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த ஆண்டுக்குள் அந்தத் திட்டம் நிறைவேறிவிடும். பிறகு ஒரு குறையுமில்லை என்றார் உயிரியல் பூங்கா இயக்குநர்.

சிங்கவால் குரங்குகள், நீர் யானைகள், மணிலா வாத்து போன்ற சிலவகை நூதனப் பறவையினங்கள், முதலைகள், காட்டெருமை போன்றவை உள்ள இடங்களைச் சுற்றி அவைகள் வெளியேற முடியாத வகையில்- அல்லது நீந்தி மகிழும் விதத்தில் நிறையத் தண்ணீர் விடப்பட்டுள்ளது.

பக்கத்தில் இருக்கிற 700 அடி உயர மலையிலிருந்து மேனோ ரயில் மூலம் (இருப்புக் கயிற்று வழியே அந்தரத்தில் வருவது) இந்தப் பூங்காவைக் கண்டுகளிக்கச் செய்வதற்கான ஏற்பாடொன்றும் ஒற்றைத் தண்டவாள ரயில் ஏற்பாடும் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார் துணைஇயக்குநர் திரு நீலகண்டன்.

இப்பூங்காவில்-கிளிஇனத்தைச் சேர்ந்த காக்கட்டு என்றொரு பறவை இருக்கிறது; வெள்ளை வெளேரென்று மிகப் பெரியஅளவிலுள்ள இந்த ஆண் பறவைக்குப் பெண் துணையும், இங்குள்ள தேவி என்கிற ஆப்பிரிக்கப் பெண் சிங்கத்திற்கு ஆண் துணையும்,

தென் கிழக்காசியாவிலேயே இப்படி வேறெங்கும் இல்லை என்ற அளவில் பெரியதாக அமைந்துள்ள கூண்டிலிருக்கும் தனித்துக் கிடைத்த ஐரோப்பிய பெண் கழுகுக்கு ஆண் துணையும் விரைவில் வெளிமாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட இருக்கின்றனவாம். சில உயிரினங்கள் மற்ற மாநிலங்களிலிருந்து பரிவர்த்தனை முறையிலும் வாங்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே, ஆப்பிரிக்கச் சிங்கம் வண்டலூர் உயிரியல் பூங்கா தவிர வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள விலங்கினங்களையும் பறவையினங்களையும் பாம்பினங்களையும் பரிசோதித்துச் சிகிச்சை அளிப்பதற்கெனத் தனியொரு மருத்துவ மனை மூன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயிரியல் பூங்காவினுள்ளே அரசால் கட்டப்பட்டு வருகிறது.

மிகப் பெரிய அளவிலே உருவாக்கப்பட்டு வரும் வண்டலூர் உயிரியல் பூங்காவினைக் கண்டானந்திக்க வருவோர் தங்கிக் களைப்பாற ஆங்காங்கே பத்து ஓய்விடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நகருக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்தாலுங்கூட பேருந்துகள் மூலமும், மின்சார ரயில் மூலமும் மாணவச் செல்வங்கள் உட்பட ஆயிரக் கணக்கான மக்கள் இந்த உயிரியல் பூங்காவுக்கு தினமும் வந்து போகிறார்கள்.

உயிரினங்களைக் கண்டு மகிழவும், அவற்றின் வாழ்க்கை முறைகளை அறிந்துணரவுமே அமைக்கப்பட்டுவரும் இந்த உயிரியல் பூங்காவுக்கு நுழைவுக் கட்டணம் ஏதும் இல்லை.

— இல. இராசேந்திரன்



# மாமல்லபுரம் வரலாறு படைக்கிறது!

மாமல்லபுரத்தில், தமிழகத்தின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை விளக்கும் விதத்தில் சிறந்த வெளி அரும்பொருட் காட்சியகம் ஒன்று நிறுவுவதற்கான ஆக்கப்பணி இரவுபகலாக நடைபெற்று வருகிறது.

கடற்கரைக் கோயிலுக்கு இடப்புறமுள்ள 25 ஏக்கர் நிலத்தில் அமையவிருக்கும் இந்தக் காட்சியகத்தில் தமிழ்நாட்டின் மூவாயிரம் ஆண்டுக்கால வரலாறு சிற்பங்களாகவும் சித்திரங்களாகவும் நிறுவப்படும்.

இதற்கான நுழைவுவாயில் 35 அடி அகலமும், 25 அடி உயரமும் கொண்டதாக மிக நுணுக்கமாக உருவாகும்.

நிலந்தரு திருவிற்பாண்டியன் சமநீதி கண்ட சோழன் போன்ற மாமன்னர்களின் திருவுருவச் சிலைகள் அமைகிறதென்றால் அவற்றின் கீழே அவர்களைப் பற்றிய வரலாற்றுக் கல்வெட்டும் இடம்பெறும்.

இந்தக் காட்சியகம் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்கத் தமிழறிஞர் ஐவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காட்சியகத்திற்கான சிற்பங்கள் மாமல்லபுரத்திலுள்ள அரசு சிற்பக்கலைக் கல்லூரி முதல்வரான திரு வி. கணபதி ஸ்தபதி மேற்பார்வையில் சுமார் 150 பேர்களால் திறம்படச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் திறந்த வெளிக் காட்சியகம் அமைய 20ல் இருந்து 35 இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் சுற்றுலாத் துறைத் துணை இயக்குநர் திரு. சீனிவாசன்.

# வேடந்தாங்கல்

அக்டோபர் முதல் மார்ச்சு திங்கள் வரையிலேதான் வேடன்தாங்கலுக்கு விதவிதமான பறவைகள் வரும் என்பதில்லை; இப்போதும் அங்கே பல்லாயிரக் கணக்கான பறவைகள் காணப்படுகின்றன காகம் தவிர!

தமிழ் நாட்டில் வேட்டங்குடி கோடியக்கரையெல்லாம் கூட பறவைகள் சரணாலயமே என்றாலும், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகத்தின் அருகே இருக்கும் வேடன் தங்கலே இந்த வகையில் முதலிடம் பெறுவதாகும்.

73 ஏக்கர் பரப்பளவில் பரவிக் கிடக்கும் ஏரியில் பரவலாகக் காணப்படும் கருவேலமரம், கடம்பமரம் மூங்கில்புதர்கள் ஆகியவற்றில் இலைகளைவிட அதிகமாக விதவிதமான ‘பறவைகளே தென்படுகின்றன. தமிழ்நாடு அரசு வனத்துறைப்பராமரிப்பிலிருக்கும் வேடன் தங்கல் ஏரியில் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளும் புதிதாக நடப்பட்டிருக்கின்றன. பறவைகள் முட்டையிடத்தக்க இடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சைபீரியா, கனடா போன்ற இடங்களிலிருந்து அயல்நாட்டுப் பறவைகளெல்லாம் ஆசையோடு வரக்கூடிய இங்கே அவைகளைக் காணச் சுற்றுலாப் பயணிகளும் பல்லாயிரக் கணக்கில் நாள் தோறும் வருகை தருகிறார்கள்.

''ஏறத்தாழ முந்நூறாண்டுக் காலமாகப் பறவைகளின் சரணாலயமாக இருக்கிறது வேடன் தங்கல்'' என்ற தேசியப்பூங்கா கண்காணிப்பாளர் திரு. முகமது இக்பால் பாஷா ‘இதை மேம்படுத்துவதற்கான பணிகள் பலவற்றை அரசு மேற்கொண்டுள்ள'தாகக் கூறியதோடு, ''பறவைகளின் கழிவு கலந்த இந்த ஏரிநீர் இயற்கை உரம்போலப் பயிர்களுக்குப் பயன்படுவதால், இந்தப் பகுதி மக்கள் பறவைகளை வேட்டையாடுவதில்லை; தீபாவளிக்கு வெடிகள் கொளுத்திக் கூட அவைகளுக்குத் துன்பம் தருவதில்லை'' என்றும் நமக்குத் தெரிவித்தார்.



கட்டத்தில் 144 பெட்டிகள் செய்யப்பட இருக்கின்றன. 8 மாதிரிப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. டம்டம் ரயில் நிலயத்திற்கும், பெல்காச்சியா ரயில் நிலையத்திற்குமிடையே சோதனை ஓட்டத்தில் இவை ஏற்றதாக அமைந்தன. இதுவரை 20 பெட்டிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பெட்டியும் 19.5 மீட்டர் நீளம், 2.75 மீட்டர் அகலமுள்ளவை. 300 பயணிகளுக்கு இருக்கை வசதிகளுண்டு. மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் சென்றாலும் அதன் பளுவைத் தாங்கக் கூடியவை. தாமாக மூடித் திறக்கும் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. கதவுகள் மூடப்பட்ட பின்னர்தான், ரயில் வண்டி புறப்படும்! மனிதர்கள் தவறினாலும் பாதுகாக்கக்கூடிய தானியங்கி தடுத்து நிறுத்தும் சாதனம், (Automatic Brakes) இவ்வண்டியில் உள்ளது.

இணைப்புப் பெட்டிகளில் வகை வகையானவை தயாரிக்கப்படுகின்றன. 2 அடுக்கு 3 அடுக்குகள் தூங்கும் வசதியுள்ள இணைப்புப் பெட்டிகள் மற்றும் உணவருந்துவதற்கான வசதி, குளிர்சாதன வசதி, பெண்களுக்கெனப் பிரத்தியேகப் பெட்டிகள் இப்படிப் பல வசதிகளுடன்-வடிவமைப்புகளுடன் இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. முதலில் ஒரே வகை என்று ஆரம்பித்து இன்று 100 ரகங்களில் இணைப்புப் பெட்டிகள் என்று அதன் உற்பத்தி வளர்ந்திருக்கின்றது.

இந்தியாவில் மூன்று இடங்களில் இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. அவை பெங்களூர், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் உள்ளன. சென்னையிலுள்ள இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைதான் ஆசியாவிலேயே மிகப் பெரியது. உலகத்தில் இவ்வளவு ரகங்கள் செய்யக்கூடிய இணைப்புப் பெட்டித் தொழிறசாலையும் இது ஒன்றே!

நெடுந்தொலைவு, அதே சமயத்தில் விரைந்து செல்லும் இணைப்புப் பெட்டிகளில் நல்ல இருக்கைகளுடன் 3 மின் விசிறிகள், தண்ணீர்த் தொட்டி போன்ற வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை திரைச்சீலைகளுடன் கூலிங்கிளாஸ் பொருத்தப்பட்டு ஒரு அழகிய வீட்டு அறை போலவே காட்சியளிக்கும். விரைவு வண்டிகள் வகை: திப்பு, தமிழ்நாடு எக்ஸ்பிரஸ், கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ், நவஜீவன் எக்ஸ்பிரஸ் போன்றவை குறிப்பிடலாம். அதிவேகமாக ஓடக்கூடிய ரயில், ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ஆகும். மணிக்கு 120 கி.மீ. வேகம் செல்லக்கூடிய போகிகள், இணைப்புப் பெட்டிகள் தயாரிக்கும் திட்டமும் உள்ளது.

ஐ.சி.எஃப்பில் தயாராகும் இணைப்புப் பெட்டிகள் மற்றும் போகிகள் மொத்த உற்பத்தியில் 10 சதவிகிதம்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 90 சதவிகிதம் நமக்கு உபயோகமாகிறது.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இருக்கும் பகுதியில், எல்லா வசதிகளும் உள்ளன. இதில் பணிபுரிபவர்களுக்கான குடியிருப்புகள், குடிதண்ணீர் வசதி, பள்ளிக் கூடங்கள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், நீச்சல்குளம், கலையரங்குகள் கூட்டுறவுப் பண்டகச் சாலைகள், மருத்துவமனைகள் ஆகியவை உள்ளன.

இங்குப் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுகிற வகையில் பல பரிசுகளும் தரப்படுகின்றன.

ஒவ்வோராண்டும் நடைபெறுகின்ற ரயில்வே வாரத்தின் போது, சிறந்த முறையில் பணிபுரிந்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் அவர்கள் குழந்தைகளுக்கும் பரிசுகள் தரப்படுகின்றன. இவையன்றி, தொழிலாளர்கள் விளையாட்டு, நாடகம் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கெல்லாம் மரியாதையும், ஊக்கமும் தருகின்ற வகையில் இந்த ரயில்வே வாரம் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் ரயில்வே தொடங்கி 131 ஆண்டுகளாகின்றன. ரயில்வே நூற்றாண்டு விழா முதல், ரயில்வே வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு (1984) கொண்டாடப்படுவது 29-வது ரயில்வே வாரமாகும்.

இந்த ஆண்டு ரயில்வே வாரத்தின் போது ஐ. சி. எஃப். தொழிற்சாலை ஊழியர்களுக்குப் பிரத்தியோகமான ஒரு மருத்துவமனையை பேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் திறந்துவைத்துள்ளார்.

தொழிற்சாலையைச் சுத்தமாக வைத்திருத்தல், விபத்துக்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ளல் போன்றவற்றுக்கும் ரொக்கப் பரிசு மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. புதிதாகக் கண்டுபிடித்தல் அல்லது பயனுள்ள யோசனைகளுக்கும் கூடப் பரிசுகள் உண்டு. இதே போலத் தாங்கள் வசிக்கும் குடியிருப்புகளைச் சுத்தமாக வைத்துக் கொள்பவர்களுக்கும், நல்ல காய்கறித் தோட்டம் போடுபவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத் தொழிற்சாலையில் ஓர் ஊழியர் இறந்துவிட்டால் ஆளுக்கு ஒரு ரூபாயாக இறந்த ஊழியர் குடும்பத்துக்குச் சுமார் 16,000 ரூபாய் தருவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

தரம் - கடின உழைப்பு - நல்ல வடிவமைப்பு ஆகியவற்றின் மூலம் உலக அரங்கிலே புகழ்க் கொடி ஏற்றி வருகிறது, மூன்றெழுத்துப் பெருமையுள்ள பெரம்பூர் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை!

—பி. வி. கிரி



கல்கத்தாவில் விரைவுப் போக்குவரவுக்கான பாதாள இருப்புப் பாதையில் செல்லும் ரயில்.







# நெசவாளர் நலம் காப்போம்!



சென்னையில் நடைபெற்ற 30 வது கண்காட்சியின் நிறைவு விழா, சென்னையில் (10.5.'84) நடைபெற்றது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு. வினய்ஜா இ.ஆ.ப., தொழில் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு.செல்வராஜ், இ.ஆ.ப., கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுத் தலைவர் அனகாபுத்தூர் திரு சி.



இராமலிங்கம் எம்.எல்.சி., கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் திரு.மா.தேவராஜ், கோ-ஆப்டெக்ஸ் பொது மேலாளர் திரு.வி.சீத்தாராமன் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்க்கும், விற்பனையாளர்க்கும் பரிசுகள் வழங்கப்பட்ட இவ்விழாவில்- கைத்தறிக் கண்காட்சி பற்றியும், கைத்தறிபற்றியும் அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின் வருமாறு;

கடந்த ஆண்டில் 82 கோடி ரூபாய்க்குக் கைத்தறித் துணிகள் விற்பனையாகியுள்ளன; இந்த ஆண்டு அந்தத் தொகை ரூ. 105கோடியாக உயரலாம்.

வரும் ஆண்டு 'கோ-ஆப்டெக்சி'ன் பொன்விழா ஆண்டு.

கைத்தறிக் கண்காட்சி, சென்னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் கடந்த முப்பதாண்டுக்காலமாக நடைபெற்று வருகிறது.

தொழில் துறையின் கீழ் சுமார் 15 துறைகள் உள்ளன; அவற்றில் கைத்தறித் துறை சிறந்து விளங்குகின்றது.

தமிழ்நாடு முழுமையிலுமாக ஏறத்தாழ 30 இலட்சம் குடும்பங்கள் கைத்தறித் தொழிலை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றன; அயல் நாட்டுத் துணிகளின் மேல் உள்ள ஆசையை விடுத்து அனைவரும் கைத்தறித்துணிகளை வாங்கி அந்தக் குடும்பங்களை வாழவைக்க வேண்டும்.

மத்திய அரசு எடுத்துக்கொள்ளும் 'சிக் மில்ஸ்' மூலம் உற்பத்தியாகும் துணி ரகங்கள் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் கைத்தறித் துணிகளின் விற்பனை பாதிக்கப்படுகிறது. இதனால் கைத்தறிக்கென்றே சில குறிப்பிட்ட ரகங்கள் ஒதுக்கித் தருமாறும், நெசவுத் தொழிலைப் பொறுத்தமட்டில் ஒரு சீரான கொள்கையைக் கடைப்பிடிக்குமாறும் கேட்டு இந்தியப் பிரதமரிடம் மனுக் கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில், சென்ற ஆண்டு நடந்த கைத்தறிக் கண்காட்சியில் ரூ. 193 இலட்சம். அளவுக்கு இருந்த துணிகளின் விற்பனை, இந்த ஆண்டு 2 கோடியே 85 இலட்சம் ரூபாயளவுக்கு உயர்ந்திருக்கிறது.





# 1983-84ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் அரசு ஆற்றியுள்ள அரும்பணிகள்

**மாண்புமிகு தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டம்**

செங்கல்பட்டு மாவட்டத்தில் 5,013 குழந்தைகள் சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில், வயது 2 முதல் 4 வரை, 5 முதல் 9 வரை மேலும் 10முதல்14வரையுள்ள5,39,522 குழந்தைகள் உணவருந்திப் பயனடைகிறார்கள்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 190 சத்துணவு மையக் கட்டடங்கள் கட்ட ஆரம்பித்து, 94 கட்டடங்கள் முடிவுற்றுள்ளன.

செங்கை மாவட்டத்தில் 9,200 ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. 1.5.84 முதல், மேலும் 4,170 முதியோர்கள் பயனடைகின்றனர்.

**இலவச வேட்டி, சேலைகள் வழங்கல்:**

ரூபாய் 1 கோடியே 7 லட்சத்து 19 ஆயிரத்து453 செலவு செய்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 2,59,813 வேட்டிகளும், 3,13,941 சேலைகளும் வழங்கப்பட்டன.

**மாவட்டத் தொழில் மையம்:**

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 3,668 பேர்களுக்குக் கடன் உதவி அளிக்கப் பரிந்துரை செய்யப்பட்டு, இவற்றில் வங்கிகள் மூலம் 2,365 நபர்களுக்கு ரூ.382.08 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆதி திராவிடர்கள் 442 பேர்கள். உதவி பெற்ற தொகை ரூ.68.45 லட்சம்.

**குடும்ப நலத்திட்டம்:**

இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இலக்கு 35,000. இதுவரை 35,735 அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. இலக்கைவிட 735 அறுவைச் சிகிச்சைகள் அதிகம் செய்யப்பட்டுள்ளது.

**கண் சிகிச்சை முகாம் திட்டம்:**

1983-84ல் இலக்கு 3,700 கண்புரை அறுவைச் சிகிச்சைகளாகும். கண்புரை அறுவைச் சிகிச்சைகள் 2922 இதுவரை செய்யப்பட்டுள்ளன.

**சிறு சேமிப்பு:**

சிறு சேமிப்பு இலக்கு ரூ.400 லட்சம். ஆனால் சாதனை ரூ.525 லட்சம். இலக்கைவிட ரூ.125 லட்சம் அதிக வசூல் செய்யப்பட்டுள்ளது.

**கிராமப் பொதுக் கழிப்பிடங்கள்:**

1982-83 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 489 பொதுக் கழிப்பிடங்கள் ரூ.69 லட்சத்து 68 ஆயிரத்து 350 செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1983-84ஆம் ஆண்டிற்கு 1113 கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.1 கோடியே 59 லட்சத்து 8 ஆயிரத்து 300, ஒதுக்கப்பட்டு இதுவரையில் ரூ.18 லட்சத்து 15 ஆயிரம் செலவிடப்பட்டு,வேலை நடைபெறுகிறது. 222 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் உழவு மாடுகள், மாட்டு வண்டிகள், டயர் வண்டிகள் வழங்குவதற்கு மானியம் ரூ.31.27 லட்சம் வழங்கப்பட்டது. இதனால் 3632 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 1552 பேர் ஆதிதிராவிடர்கள்.95 பேர் பெண்கள் அடங்குவர்.

கறவை மாடுகள், ஆடுகள், வாத்துகள், பன்றி, கோழி வளர்த்தல் முதலியவற்றுக்காக மானியம்ரூ.119.38 லட்சம் வழங்கப்பட்டது. இதனால் 11,967 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் எண்ணிக்கை 4,791. பெண்களின் எண்ணிக்கை 1,902.

சிறு பாசனம், பட்டு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, சுய வேலை வாய்ப்புப் பயிற்சி, தொழில்கள் திட்டம் முதலியவற்றிற்காக மானியம் ரூ.82.13 லட்சம் வழங்கப்பட்டது. இதனால் 9,329 பேர் பயனடைந்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் எண்ணிக்கை 4,271; பெண்களின் எண்ணிக்கை 3,154.

**தேசிய வேலை வாய்ப்புத் திட்டம்:**

தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின்



கீழ் இம்மாவட்டத்தில் ரூ.169.75 லட்சம் செலவு செய்யப்பட்டது. 1,648 டன் அரிசி வழங்கப்பட்டது. 16.48 லட்சம் மனித வேலை நாட்கள் பயன்படுத்தப்பட்டன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட வேலைகள் செய்யப்பட்டன:

சமூகக் காடுகள் வளர்த்தலின்கீழ் 232 வேலைகள் முடிவுற்றுள்ளன. 24.56 லட்சம் செடிகள் நடப்பட்டுள்ளன. கிராமக் குளங்கள் 23ம், சிறு பாசன வேலைகள் 115ம், 230 குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டுதல், 1091 கிராமச் சாலைகள் அமைத்தல், 111 பள்ளிக் கட்டடங்களுக்குரிய வேலைகள் நடைபெற்று அதில் 68 கட்டடங்கள் முடிவுற்றுள்ளன. சமுதாயக் கட்டடங்கள் 180 வேலைகள் நடைபெற்று, 157 கட்டடங்கள் முடிவுற்றுள்ளன. ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டடமாக வீடு கட்டுதலின்கீழ் 568 வேலைகள் எடுக்கப்பட்டு 86 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள நிலச்சீர்திருத்தம் செய்தலில் 3 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**பட்டா வழங்குதல்:**

நலிந்த பிரிவினருக்குப் பட்டா வழங்குதலின் கீழ் இம்மாவட்டத்தில் பிற்பட்டோர் நலத்துறைமூலமாக 145 முடிதிருத்துவோருக்கு ரூ.92ஆயிரம்செலவில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இலவசமாக வீட்டு மனை வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக 208 நபர்களுக்கு ரூ.10.95 லட்ச மதிப்புள்ள நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன.

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 3,533 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இதில் தாழ்த்தப்பட்டோருக்கு 2,266 பட்டாக்களும், மலைச்சாதியினருக்கு 25 பட்டாக்களும், மற்றவர்களுக்கு 1,242 பட்டாக்களும் வழங்கப்பட்டன. விவசாய நிலப்பட்டாக்கள் 364 நபர்களுக்கு வழங்கப்பட்டன. இதில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 154. மற்ற இனத்தைச் சார்ந்தவர் எண்ணிக்கை 210.

**ஆதிதிராவிடர் நலத்துறை:**

ஒரு ஏக்கருக்குக் குறையாமல் நன்செய் அல்லது புன்செய் நிலம் பாசன வசதியின்றி விவசாயம்செய்யமுடியாமல்வைத்திருக்கும்ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கிணறு மற்றும் பம்பு செட்டு அமைப்பதற்காக நில வள வங்கி மற்றும் தேசிய வங்கிகள் மூலமாகப் பெறப்படும் கடன் தொகையில் 1/3 பங்கு அல்லது அதிக பட்சத் தொகையாக ரூ.5.000 மானியத் தொகையாக மேற்படி கடன்தாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி நடப்பு நிதியாண்டிற்கு ரூ. 36,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில். ஆதிதிராவிடர் நலம் பள்ளியிலும், விடுதியிலும் படிக்கும் 11,960 மாணவர்களுக்கும், 18,824 மாணவிகளுக்கும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இலமாகச் சீருடைகள் வழங்கப்பட்டன.

கலப்புத் திருமணத் தம்பதிகள் 12 இணைகளுக்கு ரூ.48,000 அரசுச் சலுகையாக வழங்கப்பட்டுள்ளது.

45 நபர்களுக்குச் சலவைக் கருவிகளும், 12 நபர்களுக்கு முடிதிருத்தும் கருவிகளும் 4 நபர்களுக்குத் தச்சுக் கருவிகளும், 7 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும் 1 நபருக்குக் கல்லுடைக்கும் கருவியும் இலவசமாக வழங்கப்பட்டன.

**பிற்பட்டோர் நலத்துறை:**

திருத்தணி கல்லூரி மாணவர்களுக்கு ரூ.8,10,000 மதிப்பீட்டில் புதிய விடுதிக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

112 நபர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக ரூ.50,290 செலவில் 5.43 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் 50 மாணவியருக்குப் புதிய கல்லூரி மாணவியர் விடுதியும், எல்.எண்டத்தூரில் 50 மாணவர்களுக்கான பள்ளி மாணவர் விடுதியும் துவக்கப்பட்டுள்ளன. ரூ.91,800 மதிப்புள்ள 270சலவையாளர்கருவிகளும்.ரூ.16,450 மதிப்புள்ள 165 முடி திருத்துவோர் கருவிகளும், ரூ.7,500 மதிப்புள்ள 50 போயர் கருவிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

சலவையாளர்கள் வசதிக்காகப் பொன்னேரியில் ரூ.60 ஆயிரம் மதிப்பீட்டில் ''டோபிகானா'' கட்டப்பட்டு வருகிறது.

கல்லூரி மாணவர்கள் 3797 பேருக்கும், பள்ளி மாணவர்கள் 4626 பேருக்கும் உதவித்தொகையாக ரூ.7 லட்சத்து 53 ஆயிரத்து 40 வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு செட் சீருடைகள் ரூ.65,800 செலவில் மாணவ, மாணவியருக்கு இலவசமாக வழங்கப்பட்டன்.

ரூ.8,07,300 செலவில் பள்ளி மாணவ, மாணவியர் 995 பேருக்கும் கல்லூரி மாணவ மாணவியர் 250 பேருக்கும் அரசு விடுதிகள் 27ன் மூலம் இலவசமாக உணவு வழங்கப்பட்டது.

ரூ.31,000 செலவில் தனியார் விடுதி மாணவர்கள் 110 பேருக்கு இலவச உணவு அளிக்க மானியம் வழங்கப்பட்டது.

**தொகுப்பு:**

**ஆர். சடகோபன்**
**உதவி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**செங்கற்பட்டு மாவட்டம்.**





# அண்ணா பவள விழா நினைவு நடுநிலைப் பள்ளி

**செ**ன்னை மாநகராட்சியின் வருவாய் 29 கோடி ரூபாய். இதில் 10 கோடி ரூபாய்க்கு மேல் கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி நடுத்தரப்பள்ளி - உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி என ஏறக்குறைய 400 பள்ளிகளை நடத்தி வருகிறது. 1984-85ஆம் ஆண்டில் புதிய பள்ளிகள் உருவாக்கப்படுவதற்காக ரூ.43இலட்சத்தை மாநகராட்சி ஒதுக்கியுள்ளது.

படிப்பு மட்டுமன்றி விளையாட்டுப் போன்றவற்றிலும் மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். சாரணர் இயக்கத்தில் சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் பங்கு பெற்று வருவதுடன், மாநில அளவிலும் இந்திய அளவிலும் பல பரிசுகள் பெற்று வருகின்றனர். குறிப்பாக சைதாப்பேட்டையில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி) மாணவர்கள் கடந்த 4 ஆண்டுகளாக சாரணர் இயக்கப் பணிக்காக விருது பெற்று வருகின்றனர்.

தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோடு - திருவள்ளுவர் சாலை இரண்டும் சந்திக்கும் இடத்தில் 1919-ல் உருவாக்கப்பட்ட துவக்கப் பள்ளி, 1956ல் நடுநிலைப் பள்ளியாகியது. நாளடைவில் பள்ளிக் கட்டடம் பழுதாகி, பாழடைந்த மண்டபம் ஆகிவிட்டது. தற்போது - பேரறிஞர் அண்ணா அவர்களின் பவள விழா நினைவாக - பாழடைந்த கட்டடம் $4\frac{1}{2}$லட்ச ரூபாய் செலவில் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 333 மாணவர்கள் இங்கு பயில்கிறார்கள். 12 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்தப் புதிய பள்ளியின் மூலம் தேனாம்பேட்டைப் பகுதி மக்களின் நீண்ட நாள் தேவை நிறைவேற்றப்படுகிறது. எதிர்காலத்திற்கும் நல்ல பலன் விளைய இருக்கிறது.

இந்தப் பள்ளியின் திறப்புவிழாவிற்குத் (5-5-'84) தலைமை ஏற்ற மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், ''நலிந்த மக்கள்-பின் தங்கிய மக்கள் வாழும் பகுதி தேனாம்பேட்டை - ஆழ்வார்ப்பேட்டை ஆகிய பகுதிகளாகும். இங்கு தனியார் பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. அது திடீர் என்று மூடப்படப் போவதாக அறிவிப்பு வந்துள்ளது. அங்கு பயிலும் மாணவர்களின் எதிர்கால வாழ்வு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த மாணவர்களுக்கு இந்தப் பள்ளியில் அனுமதி வழங்கப்படும். இதன் மூலம் பெற்றோர்களின் கவலை மறையும்'' என்று குறிப்பிட்டார்.

பள்ளிக் கட்டடத்தைத்திறந்து வைத்த மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன், அவர்கள் ''பேரறிஞர் அண்ணா அவர்களின் பவளவிழா நினைவாக உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடம் கண்ணாடி மாளிகை போல் காட்சி தருகிறது. இந்தப் பகுதி மக்களின் குழந்தைகள் கல்வி பெற இந்த நடுநிலைப் பள்ளி உதவும்'' என்று குறிப்பிட்டார்.

தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி கோவிலைச் சேர்ந்த அங்காடிக் கட்டடத்திற்கு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல்நாட்டியபோது ''ஐந்தாண்டுகளுக்கு முன்பே, இந்தக் கட்டடம் $5\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் 5மாடி கொண்ட வியாபார வளாகமாக உருவாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டது. தற்போது ரூ $1\frac{1}{2}$ லட்சம் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தேனாம்பேட்டை சென்னையின் இதயம் போன்ற இடம். இதைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். ஆகவே, இந்த அங்காடிக் கட்டடத்தை மேல் தளமுள்ள கட்டடமாக அமைக்க வேண்டும்'' என்று தெரிவித்து, ''சென்னையிலும் பல மாவட்டங்களிலும் எத்தனையோ திருமண மண்டபங்களுக்கு, முந்திய அரசு, அடிக்கல் நாட்டிவிட்டுப் பணியை முடிக்காமல் விட்டிருக்கிறது. ஏறக்குறைய 50க்கும் மேற்பட்ட திருமண மண்டபங்கள் முடிவடையாத நிலையில் உள்ளன. புரட்சித் தலைவர் அவர்கள், அவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக முடித்து வருகிறார்'' என்றும் தெரிவித்தார்.

**தொகுப்பு: —த. பீ.**

M. 8676 Licence No. TN/MS(C)






தமிழ்நாடு அரசின்
நான்காண்டுப்
பணிகள்
தொகுப்பு மலர்

# தமிழரசு

16-6-1984 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆனி 3

# இந்திய வீரர்களின் உலகச் சாதனை!



**1984**-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7-ஆம் நாள்!

இந்திய இராணுவ வீரர்கள் சரித்திரம் படைக்கத் தொடங்கிய நாள்!

ஆம். காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிக்கு 5000 கிலோ மீட்டர் தூரத்தை கிளைடர் விமானம் மூலம் பயணம் மேற்கொண்டது. ஒரு இந்திய இராணுவ வீரர்கள் குழு, கேப்டன் எச். ஜே. சிங் தலைமையில், ஐந்து இராணுவ வீரர்கள் இப்பயணத்தில் கலந்து கொண்டனர்.

இந்தத் தீரமிக்க பயணத்தில் எவ்வித இடையூறுமில்லாமல் வெற்றி வாகை சூடிய கேப்டன் சிங், கன்னியாகுமரிக் கடற்கரையில் மே திங்கள் 18-ஆம் நாள் இறங்கினார்.

முன்னும் பின்னும் இரட்டைக் கழுகு போன்ற அமைப்புடையது இந்தக் கிளைடர் விமானம். இது அமெரிக்காவில் தயாரிக்கப் பட்டது. இதன் எடை 94. 4 கி. கி. ஆகும். இதன் இறக்கை 10.5 மீட்டர். இதில் மோட்டார் சைக்கிள் என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது, இதன் விலை ரூ. 55,000.

கேப்டன் சிங் கன்னியாகுமரிக் கடற் கரைப் பகுதியில் இறங்கியதும், தென் மண்டல இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் திரு எச். சி. சச்தேவ், பிரிகேடியர் திரு எல். கே. பாட்ரா, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல். கே. திரிபாதி இ.ஆ.ப. மற்றும் பொதுமக்கள் மிக்க உற்சாகத் துடன் வரவேற்றனர்.

கேப்டன் சிங்கின் இந்த மாபெரும் சாதனையை, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள், மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள், இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் திரு ஏ. எஸ். வைத்தியா ஆகியோர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

உலகிலேயே ஒரு க்ளைடரின் உதவியோடு இவ்வளவு நீண்ட தூரம், இதற்கு முன் வேறு எவரும் பயணம் செய்தது இல்லை.

## அக்டோபர் மாதம் நகரசபைத் தேர்தல்

"சென்னை, மதுரை, கோவை மாநகராட்சி களுக்கும், 91 நகரசபைகளுக்கும், 1984-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடை பெறும். இந்தத் தேர்தலையொட்டி மாநகராட்சி, நகராட்சி வாக்காளர்களுக்குப் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

"ஏறத்தாழ 60 இலட்சம் அடையாள அட்டைகள் தயாரிக்கப்படும். அந்த அட்டையில், வாக்காளரின் புகைப்படம், அவரைப் பற்றிய விவரங்கள், வாக்காளர் பட்டியலிலுள்ள எண், அந்த நபரின் கையெழுத்து ஆகியவை இடம் பெற்றிருக்கும்" என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலை
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்
அழகோவிய சேலைகள்...





மக்கள் கொடுக்கும் வரிப் பணம் மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன் படவேண்டும். மக்களுடன் கூடியிரு; மக்களுடன் பழகு; அவர்களுடன் வாழு; அவர்களுக்காகத் திட்டம் தீட்டிச் செயல்படு. மக்களிடம் நீ போ – செய் என்றெல்லாம் அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் நான் செய்கிறேன்; இந்த அரசு செய்கிறது.

அப்படி பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை எந்த வகையில் நிறைவேற்ற வேண்டுமோ அந்த வகையில் நிறைவேற்றி வருகிறோம்; வரிப்பணம் எவ்வளவு கிடைக்கிறதோ, அதை மக்களுக்கே செலவு செய்வதுதான் எங்கள் பணி!

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.




# தமிழக அரசின் நான்காண்டுப் பணிகள் தொகுப்பு மலர்



எங்களால் ஏழைகள் ஏற்றம் பெற்றிருக்கின்றனர் - எளியவர்கள் முகத்தில் மலர்ச்சி நிழல் படர்ந்திருக்கின்றது. அன்றாடங் காய்ச்சிகளும் - அயராது பாடுபடுபவர்களும் நல்வாழ்வு பெறுவோம் என்று நம்பியிருக்கின்றனர்.

இந்த அரசு வெறும் அதிகார அரசல்ல! ஆணவ அரசல்ல! உழவர்கள் அரசு! உழைத்துப் பிழைக்கும் உழைப்பாளர் கூட்டங்களின் அரசு! மக்கள் அரசு! இந்த அரசுக்கு மக்கள் ஒத்துழைப்பு தேவை.

-பேரறிஞர் அண்ணா

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆனி 3
மலர் : 14 இதழ் : 24
16-6-1984



# இடையறாது தொடர்ந்திடும் இலட்சியப் பயணம்

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

தமிழ்நாட்டு வரலாற்றில் ஏழுஆண்டுகள் என்பது மிகவும் குறுகியதொரு காலகட்டமே என்றாலும், 1977 முதல் 1984 வரையிலான இந்த ஏழு ஆண்டுகளைப் பின்னோக்கிப் பார்க்கிறபோது நமது முன்னேற்றப் பயணம் [illegible]தொரு சாதனையாக அமைந்துள்ளதைக் [illegible]கிறேன். வெற்றிப் பெருமிதம் உள்ளத்தில் எழுகிறது! தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மந்தம் ஏற்பட்டு விட்டதாக அண்மைக் கால ஆண்டுகளில் சொல்லப்பட்டு வருகிறது. ஆதாரமற்ற இந்தக் குற்றச் சாட்டுக்கு 1977 முதல் 1984 வரையுள்ள நமது சாதனைகளின் புள்ளி விவர ஆதாரங் களையே விளக்கமாகத் தந்து விடையிறுக்க முடியும்.



இந்திய நாட்டின் மொத்தத் தொழில் வளர்ச்சி 1979-ல் 1.2 % இருந்தபோது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 5.2 சதவிகிதமாக இருந்தது. அகில இந்திய தொழில் வளர்ச்சி 1982-ல் 4.2 சதவிகிதமாக இருந்த போது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 12.1 சதவிகிதமாக இருந்தது. தமிழ்நாட்டில் 1977 முதல் 1983 வரை ரூ. 850 கோடி முதலீட்டில் 449 பெரிய, நடுத்தரத் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன; அதனால் வேலை வாய்ப்புக்களும் பெருகின. தொழில் வளர்ச்சிக்காக 1976-77ல் பயன்படுத்தப்பட்ட மின் சக்தி அளவு 30.51 மில்லியன் யூனிட் என்ற நிலை மாறி 1981-ல் 40.99 மில்லியன் யூனிட்டாக உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுதொழில்களின் வளர்ச்சியும் அவ்வாறே சிறந்தோங்கியுள்ளது. 1978 மார்ச் வரை 18,789 சிறுதொழில்களே பதிவுச் சான்றுகள் பெற்றிருந்தன. 1983 டிசம்பரில் அவை 48,667 ஆகப் பெருகின, பின்தங்கிய பகுதிகளில் சிறு தொழில்களை வளர்க்கக் கூட்டுறவுத் துறை முழுமூச்சுடன் செயற்பட்டு வெற்றி கண்டுள்ளது. 1978-ல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 297 ஆக இருந்தது. அது 1983 இறுதியில் 913 ஆக வளர்ந்தது.

சிறுதொழில்களையும், குடிசைத்தொழில் களையும் வளர்த்து, அவைகளால் உற்பத்தியாகும் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்புக் களையும் பெருக்கி உதவவேண்டும் என்பதே அரசின் கொள்கையும், திட்டமுமாகும். இத்தகைய தொழில் வளர்ச்சிக்கு டிட்கோ, சிப்காட், டி. ஐ. ஐ. சி. போன்ற தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் பெரிதும் உதவுகின்றன. இத்தொழில் வளர்ச்சி நிறுவனங்கள், எல்லா வகையான தொழில்களுக்கும் அரசு அளித்துள்ள பல்வேறு உதவிகளையும். பாதுகாப்பையும் வழங்கி வருகின்றன.

பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து நிதிக் கடன் பெற்றுப் பயன்பெறுவதில் தமிழ் நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் மத்திய அரசின் குறிப்பிடத்தக்க தொழில் திட்டம் எதுவும் தமிழகத்தில் உருவாக்கப்படவில்லை என்றாலும், தமிழ்நாட்டில் தொழில் துறை முதலீடு உயர்ந்தே இருந்துள்ளது. இந்தியாவின் மொத்த சிமெண்ட் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 20 சதவிகிதமாகும்; நூல் உற்பத்தியில் 25 சதவிகிதமும் மோட்டார் வாகனங்களுக்குரிய பாகங்களின் உற்பத்தியில் 25சதவிகிதமும் தமிழகத்திற்குரியன. தொழிலில் பின்தங்கியுள்ள நிலையை நீக்கவும்வேலை





யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், அனைத்துப் பகுதிகளிலும் வேலை வாய்ப்புப் பெருகிடவும் சிறு தொழில் வளர்ச்சியில் அரசு பெரிதும் அக்கறை காட்டிவருகிறது.

கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு, தமிழகத்திலேயே மிகப் பெரிய காகித ஆலை ஒன்றை ரூ. 200 கோடி செலவில், திருச்சி மாவட்டத்திலுள்ள புகளூரில் உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

கூட்டுத் துறையும், கூட்டுறவுத் துறையும், தனியார் துறையும் நடத்தி வரும் பல்வேறு சர்க்கரை ஆலைகள் நம் மாநிலத்தில் உள்ளன. மேலும் மூன்று ஆலைகள்தொடங்க மத்திய அரசு அனுமதி தந்துள்ளது. கூட்டுறவுத் துறை இந்த ஆண்டு ஒரு புதிய சர்க்கரை ஆலையை நிறுவும்.

**மின்சக்தி :**

தமிழகத்தில் 1977-78-ல் 2424 மெகாவாட் மின்சக்தி தான் உற்பத்தி செய்யப்பட்டது. 1983-84ல் அது 3344 மெகாவாட் ஆகப் பெருகியுள்ளது. அதாவது கடந்த ஆறு ஆண்டுகளில் 920 மெகாவாட் மின்சக்தி அதிகரித்துள்ளது.

இந்த விவரங்கள் எல்லாம் கடந்த ஏழாண்டுகளில் தமிழ்நாடு பெற்றுள்ள அபார முன்னேற்றத்தைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுவனவாகும். இதற்கும் மேல் நாம் ஏன் வளர்ச்சியடைந்திருக்கக் கூடாது என்று கேட்டால் அதற்குக் காரணம் நாம் முயற்சி எடுக்கவில்லை என்பதல்ல; நாட்டின் கூட்டாட்சி அமைப்பில் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள உரிமையின் வரம்பே காரணமாகும். பெருந்தொழில்கள் எல்லாம் மத்திய அரசின் அனுமதியையும், நிதியையுமே சார்ந்துள்ளன.

தொழில் வளர்ச்சியைப் பற்றிப்பேசும் போது, தமிழ்நாட்டின் பொருளாதாரம் விவசாயத்தையேஅடிப்படையாகக்கொண்டது என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, இந்த விவசாய அடித்தளத்தை வலுப்படுத்த நம் அரசு அனைத்தையும் செய்து வருகிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்கிறோமோ, அவ்வாறே விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் அனைத்தையும் செய்து வருகிறோம். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்ற ஊதியம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே குறைந்தபட்சக் கூலி நிர்ணய சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விவசாய விளைபொருளுக்கு ஆதரவு விலை தருகிறோம். குறைந்த விலையில் உரம் கிடைக்கச் செய்கிறோம். வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட சிறிய விவசாயிகளுக்கு உதவுவதற்காக அவர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய 210 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்திருக்கிறோம். வறுமையில் வாடும் வயது முதிர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவிட முதியோர் உதவித் திட்டத்தில் அவர்களையும் சேர்த்துள்ளோம். இவையெல்லாம் சிறிய விவசாயிகளையும், ஏழை விவசாயத் தொழிலாளர்களையும் காக்கவேண்டும் என்ற உணர்வோடு செய்யப்படுபவை. மேலும் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிவகை காண்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்றும் செயற்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் மாபெரும் மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள மகத்தானதொரு திட்டமான தன்னிறைவுத் திட்டத்தை நம் அரசு செயற்படுத்தி வருவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வாழும்



மக்களுக்கெல்லாம் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளான இணைப்புச் சாலைகள், பேருந்துப் போக்குவரத்து, பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், சுகாதார வசதிகள், மின்வசதி ஆகிய அனைத்தையும் அளித்துள்ளோம். ஒவ்வொரு கிராமமும் இந்த அடிப்படை வசதிகளைப் பெற்றாக வேண்டும் என்பதே நமது குறிக்கோளாகும். வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட இத்திட்டத்தை கிராமப் புறங்களிலிருந்து நகரியங்களுக்கும், நகரங்களுக்கும்கூட விரிவுபடுத்தியுள்ளோம். கிராமப்புற மின்வளர்ச்சித் திட்டத்தின்படி தெரு விளக்குகளுக்கு மட்டுமல்ல, குடிசைகளுக்கும்கூட மின்வசதி அளித்துள்ளோம். இதனால் இதுவரை, கிராமங்களில் 5.62 இலட்சம் குடிசைகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது.



கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு மொத்த இந்தியாவிலும் பெருமிதப்படத் தக்க இடத்தைப் பெற்று விளங்குகிறது. வரவுசெலவுத் திட்டத்தில் கல்விக்கு மிக அதிகத் தொகையினை தொடர்ந்து வழங்கி வருவதுடன் ஆண்டுதோறும் அத்தொகையைக் கூடுதலாக்கியும் வருகிறோம். இந்த நிதிஆண்டில் கல்விக்கு ரூ. 400 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. +2 கல்வி முறையை உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கொண்டு வந்ததால் கிராமப்புறங்களிலும் மேல்நிலைக் கல்வி பரவவும், கிராமங்களும் உயர்கல்வியை எளிதில் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளியிலிருந்து வெளியேறியவுடன் எந்த மாணவனும் எளிதில் வேலை தேடிக்கொண்டு சமுதாயத்தில் தக்கதோர் நிலையினைப் பெற உதவவுதற்கேற்ற வகையில் தொடக்க நிலையிலிருந்தே தொழிற்கல்வி கற்பிக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.

நம் அரசு ஆற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கது ஐந்து பெரும் பல்கலைக் கழகங்களை—அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் ஆகியவற்றை நல்லோர் புகழ் நிலைக்கவும் நல்ல தமிழ் தழைக்கவும் உருவாக்கியதாகும்.

நல்லிளம் குழந்தைகளே நாட்டின் செல்வங்கள்! குழந்தைகள் நலம் பெற்று வளரவும் குணம் பெற்று சிறக்கவும் அவர்களுக்கு சுத்தமான சுற்றுப்புறமும், ஊட்டச்சத்தும் மருத்துவ வசதியும், கல்வியும் தேவை, தமிழ்நாட்டில் 75 இலட்சம் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் 85 சதவிகிதத்தினர் கிராமங்களில் வாழும் ஏழைக் குழந்தைகளாவர். அவர்களுக்குள்ளும் 63 இலட்சம் பேர் வறுமைக் கோட்டுக்கும் கீழே வாடிக் கொண்டிருக்

**கருத்தடை, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் நல்ல பலன்களைக் கொடுத்துள்ளன.**

**கருத்தடையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் உள்ளது. அடுத்த படியாக கேரளா, பாண்டிச்சேரி மாநிலங்கள், உள்ளன.**

**குடும்பக் கட்டுப்பாட்டில் தமிழகம் முன்னணியில் இருப்பதைப் பாராட்டுகிறேன்.**

**மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

**திரு சங்கரானந்த்** (27.5.84)







கிறார்கள். சக்தியும், உடல் நலமும் பெற்று வாழ உதவ வேண்டியது அரசின் முதன்மையான கடமை என்று அரசியல் சட்டமே வலியுறுத்துகிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், இந்தியாவிலேயே புதுமையான, புரட்சிகரமான 'முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டத்தை' 2 முதல் 14 வயதுள்ள ஏழைக் குழந்தைகளுக்காக தமிழ்நாடு அரசு செயற்படுத்தி வருகிறது.

நாள்தோறும், கிராமங்களிலும், நகரங்களிலும் 2 முதல் 14 வயது வரையிலான 65 இலட்சம் குழந்தைகள் சத்துணவு உண்கிறார்கள். இந்த சத்துணவுத் திட்டத்தில் உதவித் தொகை பெறும் முதியோரும் முன்னாள் இராணுவ வீரர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இம்முதியோர் தொகை 1,99,639 ஆகும். அவர்களில் ஆதரவற்ற பெண்களும், விதவைகளும் அடங்குவர். இச்சத்துணவுத் திட்டம் வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கியுள்ளது என்பது முக்கியமான அம்சமாகும். இதனால் பெண்களும், ஆதிதிராவிடர்களும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

சத்துணவுத் திட்டத்தால் பள்ளியில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை கூடியுள்ளது என்பது மட்டுமல்ல, இடையிலேயே படிப்பை நிறுத்திக் கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நலப் பாதுகாப்புச் சங்க (UNICEF) உதவியுடன் நடத்திய ஆய்வு, இத்திட்டத்தால் குழந்தைகளின் நலமும் வளமும் சிறந்துள்ளது என்பதுடன் குழந்தைகளின் நோய்களும் குறைந்துள்ளன என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. சத்துணவின்மை; சுத்தமின்மை, ஏழ்மை, எழுத்தறிவின்மை ஆகிய பல்வேறு இழிநிலைகளையும் இல்லாதொழிக்க எழுந்ததோர் புரட்சிமிகு திட்டந்தான் இச் சத்துணவுத் திட்டமாகும்.

சென்னைக்கு கிருஷ்ணா நீர் கொண்டு வருவது என்ற கனவு 102 ஆண்டுகளுக்கு முன்பே கருத்தில் உதித்தது. அந்த நீண்ட காலக் கனவு ஆந்திர முதல்வர் என். டி. இராமாராவ் அவர்களின் கூட்டுறவோடு

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு ஒருமுறை கடும் வறட்சியும் 2 முறை வெள்ளப் பாதிப்பும் ஏற்பட்டது. இந்த நிலையிலும் இந்த ஆண்டு தமிழகத்தில் 65 லட்சம் டன் உணவு தானியங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

1981-82ல் 58 லட்சம் டன் தானிய உற்பத்தி செய்து தமிழகத்தில் சாதனை படைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சாதனையை விஞ்சும் வகையில் இந்த ஆண்டு அதிக உணவு உற்பத்தி செய்யக் காரணமான தமிழக அரசு பாராட்டுக்குரியது.

மாண்புமிகு மத்திய வேளாண்மைத்துறை
அமைச்சர்
திரு ராவ்பீரேந்திர சிங்.



## புதியதோர் உலகம் செய்வோம்!

* தமிழகத்தில் வாழும் அனைத்து மொழி மாணவர்களும் தத்தம் தாய்மொழியில் கல்வி பயில 6 மொழிகளில் பாடநூல்கள்
* கல்லூரி மாணவர்கள் தாய்மொழியில் கல்வி பயிலத் தமிழில் ஏறத்தாழ ஆயிரம் பாட நூல்கள் / பார்வை நூல்கள்
* மாணவர்களுக்குத் தத்தம் பள்ளி வாயிலாகச் சலுகை விலையில் தரமான குறிப்பேடுகள் – பயிற்சி ஏடுகள்
* தமிழ் மண்ணில் ஓர் அறிவியல் புரட்சிக்கு வித்திடும் இலட்சியத்தை ஏற்று இயங்குகிறோம்.

**தமிழ்நாட்டுப்**
**பாடநூல் நிறுவனம்**
**சென்னை-600 006.**

டி. கே. சீனிவாசன்,
மேலாண்மை இயக்குநர்.



# நலிந்தோர்க்கு உதவும் நிதி நிறுவனத் துறை

**மாண்புமிகு நிதி அமைச்சர்**
**டாக்டர் நாவலர்**
**இரா. நெடுஞ்செழியன்**

தேசிய மாதிரி ஆய்வு மதிப்பீட்டின்படி, நமது மாநிலத்தில் தேசிய மக்கள் தொகை சராசரி 48.13 சதவீதம் என்றிருக்க, 57.2 சதவீதம் மக்கள் தொகையினர் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளனர்.

அனைத்திந்திய அடிப்படையில் உள்ள இந்தக் கணக்கைக் கருத்தில் கொண்டு பார்த்தால், நமது நாட்டில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளோரைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டில் இவர்களின் எண்ணிக்கை இரண்டாவது நிலையில் உள்ளது. அதாவது, நமது மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் 237.06 இலட்சம் பேர் வாழ்கின்றனர்.

நமது ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக அமைப்பு ரீதியில், ஒருங்கிணைந்த வகையில் நிறுவன நிதியைத் திரட்டும் அவசரப் பணியைக் கவனிக்கும் பொருட்டும், சமுதாயத்தில் மேற்கூறிய நலிந்த பிரிவினரின் வாழ்வுத் தரத்தை உயர்த்த வங்கிக் கடனுதவிக்கு வழி வகை செய்வதற்கும் மாநில அளவில் ஒரு அமைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அரசு தலைமைச் செயலகத்தில் 'நிதி நிறுவனங்கள் துறை' என்னும் புதிய துறையை 14-7-1983 முதல் ஏற்படுத்தியது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியின் கீழ் புதிய துறை அமைக்கப்பட்டவுடன், அது தன் பணியை ஆர்வத்துடன் தொடங்கியது. 1983-ஆம் ஆண்டு செப்டம்பர்—அக்டோபர் திங்களில் வங்கிகளின் மூலம், மாநிலம் முழுவதும் 1,70,564 பேருக்குக் கடன்கள் வழங்குவதற்காக முனைப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியது. அவர்களில் 56,966 பேர் ஆதிதிராவிடர் - பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்கள். திட்டமிட்ட முறையில் இவர்களை சமூக - பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையச் செய்வது இந்த அரசின் உறுதியான குறிக்கோள்களில் ஒன்றாகும்.

இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் இவ்வினத்தின் முன்னேற்றத்திற்குத் தனி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. முனைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 37.76 கோடி வழங்கப்பட்டது. இதில் ரூபாய் 30.10 கோடி வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றதாகும். எஞ்சிய தொகை, தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின் கீழ் அரசு உதவித் தொகையாக வழங்கியதாகும்.

1984 மார்ச்சு-ஏப்ரல் மாதங்களில், தமிழ்நாட்டில் நலிந்த பிரிவினர் 1,76,000 நபர்களுக்கு வங்கிகள் மூலம் சுமார் ரூபாய் 41 கோடி அளவிற்குக்கடன் உதவி அளிக்கப்பட்டு அவர்கள் சுயமாகத் தொழில்களைத் துவங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

# இதைவிடச் சிறந்த கடிகாரம் இந்தியாவில் உண்டோ?

## எல்காட் அளிக்கும் புதிய மாடல் LTW 11/12.

**இதுபோன்ற செயல்திறன் மிக்க குவார்ட்ஸ் கடிகாரங்களை இந்த விலையில் வாங்க முடியாது.**



| நாள், மணி, நிமிடம், தேதி. | நாள், மணி, நிமிடம், வினாடி | முழு காலண்டர் | ஸ்டாப் வாட்ச் | அலாரம் & ஸ்நூஸ் |
|---|---|---|---|---|

- எல்காட்டின் புதிய மாடல், அலாரம், ஸ்டாப் வாட்ச், எல்லா ஆண்டுகளுக்கான காலண்டர்... போன்ற 12 செயல்திறன்கள் கொண்டது. மற்ற குவார்ட்ஸ் அனலாக் கடிகாரங்களிலோ 5 செயல்திறன்களுக்கு மேல் கிடையாது.
- நேரம் காட்டுவதில் 20% அதிக நுட்பம் ஒரு மாதத்திற்கு வேறுபாடு 12 வினாடிகள்தான்!
- வினாடிக்கு 32,768 முறை துடிக்கும் குவார்ட்ஸ் கிறிஸ்டல். இது இதர இயந்திர கடிகாரங்களால் எட்டிப் பிடிக்க முடியாத எண்ணிக்கை
- நவீன டிசைன். கீறல் விழாத கண்ணாடி முகப்பு. அதிர்ச்சியைத் தாங்க வல்லது. தண்ணீர் உள்ளே போகாது.
- நெடுநாள் உழைக்கும் பாட்டரி.
- எல்காட் திறனும் உலகப் புகழ் பெற்ற இட்டாச்சி (HITACHI) தொழில் நுணுக்கமும் இணைந்து உருவானது.
- ஒரு வருட உத்திரவாதம்.
- **இத்தனைக்கும் விலை ரூ. 447/- மட்டுமே (உள்ளூர் வரிகள் தனி)**
- இது போன்ற சிறந்த குவார்ட்ஸ் கடிகாரத்தை இந்த விலையில் எங்கும் வாங்க முடியாது.

**எல்காட்**
**குவார்ட்ஸ் டிஜிட்டல்**

**தமிழ்நாடு**
**மின் அணு நிறுவனம்**
735, அண்ணா சாலை,
சென்னை 600 002

**எல்லா வகையிலும் சிறந்த எல்காட் இருக்க, ஏதோ ஒரு கடிகாரம் எதற்கு?**


னவாகியிருக்கிறது; நடைமுறைக்கு வந்துள்ளது. குடிதண்ணீர் இல்லாமல் குமுறிக் கிடந்த சென்னையின் தேவையை முழுமையாக நிறைவு செய்ய இத்திட்டம் உதவும். கடந்த 1983 ஆம் ஆண்டு மே திங்களில் பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்தத் திட்டம் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளும் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது.

நகரங்களிலும் பேரூர்ப் பகுதிகளிலும் கூட குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசு அதிக அக்கறை காட்டி வருகிறது. பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையிலும், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள குடிநீர்த் தேவைகளை நிறைவேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒல்லும் வகையில் எல்லாம் முயற்சிகளை மேற்கொண்டு செயற்பட்டு வருகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர் பொருளாதார அடிப்படையில் வலிமை பெற்று முன்னேறுவதற்குக் கடன் வழங்கி உதவிடப் பல்வேறு துறைகளின் செயல்முறைகளையும் ஒருமுகப்படுத்தி விரைவுபடுத்துவதற்காக நிதி நிறுவனத்துறை ஒன்றை அண்மையில் அரசு உருவாக்கியுள்ளது. பின்தங்கிய பிரிவினருக்கு உதவிடத் தேவைப்படும் கடன் தொகைகளை நிதிநிறுவனங்களிடமிருந்து அரசுத்துறைகள் பெறுவதற்கு இந்த நிதி நிறுவனத்துறை உதவுகிறது. இதன் பணிகளால் ஆதிதிராவிடர்கள், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர், தொழிற்கலைஞர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள் ஆகியோர் பயனடைந்துள்ளனர்.

வேலைகிடைக்காத படித்த ஏழை இளைஞர்களின் இன்னல்களை நீக்கவும் அவர்களில் குறிப்பிட்ட வேலைக்குத் தகுதி உள்ளவர்களைக் கண்டுபிடித்துத் தேவைப்படும் உதவிகளை அளிக்கவும் வேலைவாய்ப்புச் சேவைப் பிரிவு அமைக்கப்பட்டது. இதனால் 1980 முதல் 1983 வரை ஏறத்தாழ இருபதாயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு வேலைகளில் அமர்த்தப்பட்டனர்.

ஆதிதிராவிடர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் நலனுக்கு முதலிடம் தந்து அவர்களை முன்னேற்ற, அரசு முயன்று வருகிறது. கடந்த 1980 முதல் 1984 வரையுள்ள நான்காண்டுகளில் 7.20 இலட்சம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களில் பெரும்பாலோருக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி ஆகிய அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு தனது அறிக்கையை விரைவில் அளிக்கும். பின்தங்கியோர் பொருளாதார வளர்ச்சிக் கழகம் பின்தங்கியோரின் பொருளாதார மேம்பாட்டுக்குப் பல்வேறு துறைகளில் பெரிதும் துணைபுரிந்து வருகிறது.





பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்குப் புதிய வாயில்களைத் திறந்துள்ளது. இப்புதிய இருபது அம்சத் திட்டத்தில் பல்வேறு அம்சங்களைச் செயற்படுத்துவதில் இந்தியாவில் உள்ள மாநிலங்கள் பலவற்றில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1982-83ல் சாதனை அடிப்படையில் தமிழ்நாடே முதலிடம் பெற்று, பாராட்டப்பட்டுள்ளது. அந்தச் சாதனை வேகம் மேலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும். சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சிகள் அமைய வேண்டும். அமைதியான சூழ்நிலையில் — சட்டம் ஒழுங்குக்கு எவ்வித பாதகமும் நேராத வகையில் மக்களின் நல்வாழ்வையே இலக்காகக் கொண்டு நிர்வாக யந்திரம் இயங்க வேண்டும் இதுவே எங்களுடைய அரசியல் சமுதாய தத்துவமாகும். நாங்கள் இதுவரை சாதித்த சாதனைகளைக் காட்டி மெத்தனமாக இருந்துவிடப் போவதில்லை. புதியதோர் சமுதாய அமைப்பு எனும் இலட்சியபுரியை நோக்கி நாங்கள் தொடர்ந்து முன்னேறி வருவோம். மக்களுக்கு மகத்தான முறையில் தொண்டாற்ற வேண்டுவதற்காக ஈடு இணையற்ற விசுவாசத்துடன், கடமைப் பற்றுடன், தமிழக மாந்தரின் மாபெரும் ஆதரவுடன் எங்களது இலட்சியப் பயணம் இடையறாது தொடர்ந்து தொய்வின்றி நடந்து கொண்டே இருக்கும்.

*அண்ணா நாமம் வாழ்க!*

வங்கிகளிடமிருந்து கடன் பெற்று ஆதாயமுள்ள புதிய தொழில்களைத் தொடங்க உதவும் நிறுவன நிதி வளர் சிரமைப்பின் பயன் பற்றி நலிவடைந்த பிரிவினர் நன்கு தெரிந்து கொள்ளும் பொருட்டும் சென்னை மாநகரில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்குக் கடன்கள் வழங்கவும், 26-10-83ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார். இவ்விழாவில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த 15,000 பேருக்குக் கடன் வழங்கப்பட்டது. கடன் வழங்கும் திட்டத்தில் 48 வங்கிகள் பங்கு பெற்றன.

**நிறுவன நிதிவளச் சீர்மைப் பிரிவுப் பணிகள்**

கடன் தொகை, மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படும்போது நலிந்தபிரிவினரின்பொருளாதார நிலைஉயரும். இவ்வழியில், நலிந்த பிரிவினரிடையே ஒரு சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்கள் துறை நலிந்த பிரிவினர் கடன் தொகையைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து நீக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. மூன்று இணை இயக்குநர்களைக் கொண்ட நிறுவன நிதிவளச் சிரமைப் பிரிவு. ( Institutional Finance Special cell ) என்றழைக்கப்படும் பிரிவு ஒன்று 1983 அக்டோபர் திங்களில் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு இணை இயக்குநருக்கும் அவரது செயல் வரம்புப் பகுதியாக 5 அல்லது 6 மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கள அளவில் குறைபாடுகள் ஏதேனும் எடுத்துக் கூறப்பட்டிருப்பின், அவற்றை நீக்குவதன் மூலம் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதை உறுதிப்படுத்துவதில் மேற்சொன்ன இணை இயக்குநர்கள் மாவட்ட ஆட்சியருக்கும் முதன்மை வங்கிஅமைப்பாளர்களுக்கும் ( Lead Bank convenors ) உதவி புரிகின்றனர். மேலும் அவர்கள் மாவட்ட ஆலோசனைக் குழுக்களின் பணிகளிலும் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டங்களிலும் பங்கு கொண்டு, குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான உதவியை நல்குகின்றனர். அவர்கள் குறித்த காலத்திற்கொருமுறை பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆண்டு செயல் திட்டங்களில் எய்திய சாதனைகள் குறித்து ஆய்வு செய்து, சாதனைகள் குறைந்துள்ள பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கு முதன்மை வங்கிகளையும் ( Lead Banks ) மாவட்ட ஆட்சியரையும் கலந்தாலோசித்து அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இணை இயக்குநர்களிடம் ஒப்படைத்துள்ள மற்றுமொரு முக்கியமான பணி, நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களை அவர்கள் பயன்படுத்துவது குறித்து மதிப்பீடு செய்வதாகும். இதற்காக வினாப் படிவம் ஒன்று வரையறுக்கப்பட்டுள்ளது. இத்துடன் கடன் பெறுவோர் வசிக்கின்ற இடங்கள் அல்லது அவர்கள் வணிகம் நடத்தும் இடங்களை இணை இயக்குநர்கள் சென்று பார்வையிட்டு, நிறுவன நிதியுதவி மூலம் ஏற்படுத்திய சொத்து இருப்புகளைச் சரிபார்த்து, அவர்களுடைய பொருளாதார நிலை எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மதிப்பிடுகின்றனர்.

இந்த நிதியுதவி மூலம் பயனடைவோரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒவ்வொரு வினாப் படிவத்திலும் ஒட்டப்படுகிறது. இவ்வாறு செய்வதனால், (1) கடன் உரிய நபருக்குத்தான் வழங்கப்பட்டுள்ளதா என்றும், (2) கடன் எக்காரியத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளதோ அக்காரியத்திற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளதா என்றும் சரிபார்க்கத் துறைக்கு ஏதுவாகிறது.

நிறுவன நிதிவளச் சீர்மைப் பிரிவு, வங்கி வசதிகள் இல்லாத பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்துவதையும் கவனித்துக் கொள்கிறது. இணை இயக்குநர்கள் மாவட்டங்களைப் பார்வையிடச் செல்லும்போது முதன்மை வங்கி அமைப்பாளர்களையும் மாவட்ட ஆட்சியரையும் கலந்தாலோசித்து பின்தங்கிய பகுதிகளில் புதிய கிளைகளை அமைப்பதன் அவசியத்தைக் கண்டறிந்து பொருத்தமான தொடர் நடவடிக்கையை எடுக்கின்றனர்.

**இப் புதிய துறையானது, ஏனைய வளர்ச்சித் துறைகளுடன் நெருங்கி ஒத்துழைத்துச் செயல்பட்டு வருகிறது. படித்து, வேலை வாய்ப்**



**குமரி மாவட்டம் காரவிளை, நீண்டகரை ஏ. கிராமத்தைச் சார்ந்த திருமதி ராஜாம்பாள் (விதவை) வங்கிக் கடன் பெற்று கோரைப் பாய் செய்கிறார்.**





**நலிந்தோருக்குக் கடன் உதவி வழங்கும் விழாவில் (26.10.83) மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு பிரணாப் முகர்ஜி உடல் ஊனமுற்ற ஒருவர்க்குக் காசோலை வழங்குகிறார்.**

**பற்ற இளைஞர்களுக்கான தலைமை அமைச்சரின் சுய வேலை வாய்ப்புத் தனித் திட்டத்தின்கீழ் (Prime Minister's Special Employment Programme for the Educated Unemployed) 1983-84ல் 24,000 பேர் பயனடைவதற்கான திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது.**

**இத்திட்டத்தின்கீழ் பயனடைவோர் ஒருவருக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாய் வரையில் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. 31-3-1984 தேதி வரை இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 33.15 கோடி ரூபாய் வரையில் வங்கிகள் கடன் கொடுத்துள்ளன. இதில் 21,247 பேர்கள் பயன் அடைந்துள்ளனர். இதேபோல், தமிழ்நாடு கிராமப்புற இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (Trysem) பயிற்சி பெற்றோருக்குத் திட்டம் ஒன்றை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31-3-1984 வரை வங்கிகள் சுமார் 161.49 இலட்ச ரூபாய்கள் 3,303 பேர்களுக்குக் கடனாக அளித்துள்ளது.**

**வேளாண்-கிராம வளர்ச்சி தேசிய வங்கியின் பங்கு**

நமது மாநிலத்திலுள்ள வேளாண் - கிராம வளர்ச்சி தேசிய வங்கி (நேபார்ட்), வேளாண் வளர்ச்சிக்கும் கிராம வளர்ச்சிக்கும் மறு நிதியுதவி அளிப்பதில் சிறந்த முன்னேற்றத்தை எய்தியுள்ளது.

வேளாண் - கிராம வளர்ச்சி தேசிய வங்கி தற்போது காப்பி, தேயிலை, கோக்கோ, இலவங்கம், தென்னை முதலியவற்றின் வளர்ச்சி தொடர்பான சிறுபாசனமில்லாத திட்டங்களுக்கும், பால் பண்ணை வளர்ச்சி, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் முதலிய பலதிறப்பட்ட நோக்கங்களுக்கும் நிதியுதவி அளிக்கிறது. இவ்வங்கி அளிக்கும் நிதி உதவி உழவர்கள் வேளாண்மை செய்யாத காலங்களிலும்கூட பயனுள்ள வேலை வாய்ப்பினைப் பெற உதவுகின்றது.

இந்த நிதியுதவி மாநில நில வள வங்கி மூலமாகவே அளிக்கப்படுகிறது. இதுபோன்ற கடன்களுக்கு அடைமானப் பிணையம் கேட்காமல் அரசு உத்தரவாத அடிப்படையில் கடன் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

1983-84ஆம் ஆண்டில் சிறுபாசனமல்லாத திட்டங்களின் கீழ், ரூ. 750 இலட்சம் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டது. இதில், 1983 டிசம்பர் திங்கள் இறுதி வரை ரூ. 627.74 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. இதில், ஒருங்கிணைந்த கிராமப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களும் அடங்கும்.

சிறுபாசனமல்லாத புதிய திட்டங்களை வகுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ரூபாய் 1,061.94 இலட்சம் மொத்த நிதி ஒதுக்கீடு தேவைப்படும் சிறுபாசனமல்லாத 44 புதிய திட்டங்கள் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்டு தற்பொழுது, திட்டம் வகுத்தல், இறுதி செய்தல் ஆகிய நிலைகளில் உள்ளன. வேளாண் - கிராம வளர்ச்சி தேசிய வங்கியின் இசைவு பெற்ற பின்னர் இத்திட்டங்கள் 1984-85ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

உரியவர்க்குக் கடன் வழங்குவதோடன்றி, கடன் தொகையைத் தக்க வகையில்பயன்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளும் ஆங்காங்கே அமைத்தால்தான் நிதி நிறுவனங்கள் துறை சீர்படச் செயலாற்ற முடியும். இந்தத் தொடர்புகள் இல்லாமல் நிதி நிறுவனங்கள் துறை தனியாக இயங்க முடியாது. நிலையாகவும் விரைவாகவும் உருவாக்கவிருக்கின்ற சமூகப் பொருளாதார வளர்ச்சியைச் சார்ந்தே இத்துறையின் முனைப்பும், பரப்பும் அமைய முடியும்.

நமது அனைத்துத் திட்டங்களும் இந்த உன்னத இலட்சியத்தை நோக்கிப் பீடு நடையிட்டு வருகின்றன. 'மக்களிடத்திலே சென்று, அவர்களோடு உடனுறைந்து, அவர்களின் நிலைமைகளை அவர்கள் வாயிலாகவே கற்றறிந்து அவர்கள் நிலைக்கேற்பத் திட்டமிட்டு, அவர்களின் இருப்புக்கும் பொறுப்புக்கும் ஏற்ற வகையிலேயே திட்டங்களை மக்கள் மயமாக நிறைவேற்றுவதோடு, நமது செயற்பாட்டின் மூலம் தெளிவு பெற்று இந்த முயற்சியில் ஒரு முன்மாதிரியாக நாம் முன்னேற வேண்டும்' என்பதுதான் நமது அரசின் குறிக்கோளாக அமைந்துள்ளது.



# உணவுத் துறையில் முன்னேற்றம்

கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் 1977 முதல் நடத்தப்பட்டு வருகின்றன.

நுகர்வோர்களுக்கு எல்லாப் பொருட்களும் சீரிய முறையில் கிடைக்க ஆவன செய்யும் பொருட்டு 1977ல் 8566 ஆக இருந்த கடைகளின் எண்ணிக்கை தற்போது 18,009 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், கூட்டுறவுகளாலும் நடத்தப்படுகின்றன. சில கடைகள் தொழிலாளர்கள் நலனுக்காக வேண்டி, அவர்களின் உபயோகத்திற்கு மாத்திரமே நடத்தப்பட்டு வருகின்றன. மொத்த நுகர்வோர் அட்டையின் அடிப்படையில் மாணவர் விடுதிகளுக்குத் தேவையான பொருட்கள் நியாய விலையில் வழங்கப்படுகின்றன.

அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் தவிர புளி, மிளகு, தேயிலை, உப்பு போன்ற பொருட்களையும் நியாய விலைக்கடைகள் மூலம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதுவரை இல்லாதபடி இந்நியாய விலைக்கடைகளில் தவறுகள் நிகழா வண்ணம் கண்காணிக்க விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கடந்த சில ஆண்டுகளாகவே வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையைச் சமாளித்து எல்லோருக்கும் தேவையான அரிசி போன்ற இன்றியமையாப் பொருட்களை வழங்குவதற்கு இவ்வரசு அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஏறத்தாழ 4 கோடி ரூபாய் வரை மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் கடந்த பிப்ரவரி/மார்ச் '84ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன.

மைய அரசு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யும் அரிசி போதுமானதாயில்லை. எனவே தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் விவசாயிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்கு மேல் குவிண்டாலுக்கு 22. 1. '83 முதல் 7. 9. '83 வரை ரூ. 15/-ம் 8. 9. '83 முதல் 30. 9. '83 வரை ரூ. 45/-ம் 1. 10. '83 முதல் 31. 3. '84 வரை ரூ. 35/-ம் அதிகம் கொடுத்துக் கொள்முதல் செய்ததால் விவசாயிகளுக்கும் தக்க விலை கொடுக்கப்பட்டதோடு அரசும் நெல் மூடையிருப்பை தேவையான அளவு வைத்திருக்க இச்செய்கை உதவியது. இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய் ஆகும். கடந்த 1983-ஆம் ஆண்டு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கு 1,91,005 டன் அரிசி விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. **பஞ்சாபைத் தவிர மற்று முள்ள எல்லா மாநிலங்களையும் விட தமிழ்நாட்டில்தான் நியாய விலைக்கடைகள் மூலம் விற்பனை செய்யும் அரிசியின் விலை குறைவு.** இன்றும் சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1-75 என்று விற்பது ஒரு சாதனையென்றே சொல்லலாம்.

கோதுமை உபயோகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்ய அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இருப்பைப் பொறுத்து எல்லோருக்கும் மாதத்திற்கு 20 கிலோ சோதுமையும், மலைப் பிரதேசங்களில் 30 கிலோ கோதுமையும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

மைய அரசு ஒதுக்கீடு செய்யும் எல்லாக் கார்டுதாரர்களுக்கும் நபர் ஒருவருக்கு 450 கிராம் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர விழாக்காலங்களில் அதிக அளவு லெவி சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது.

மாதம் தோறும் 7,000 டன் வரை இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின், சோயாபீன் எண்ணெய் ஆகியவற்றை விநியோகம் செய்ததால் பொதுமக்களுக்கு நியாய விலையில் ஓரளவாவது சமையல் எண்ணெய் கிடைத்தது.

கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறத்திலுள்ள மக்கள் வரை எல்லோருக்கும் மண்ணெண்ணெய்யும் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள் போன்ற ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தனியே கட்டுப்பாடு ஆணைகள் இருந்து வந்தன. அரசு அதை மாற்றி அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள் போன்ற ஒன்பது வகைப் பொருட்களுக்கு ஒரே கட்டுப்பாடு ஆணை அமல்படுத்தியுள்ளது. இது வியாபாரிகளுக்கு ஒரு நன்மையாகும்.

குறிப்பிட்ட விலைகளைவிட அதிக விலைகளுக்குப் பொருட்களை விற்காமல் இருக்கவும் அதிக அளவு லாபத்தைக் கள்ள வழியில் சம்பாதிக்காமல் இருக்கவும், நுகர்வோர்களுக்குத் தக்க முறையில் நல்ல தரமான பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகுக்கவும் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தினைத் தீவிரப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

---

ஒரு மாநிலத்தின் பொருளாதாரம் அங்கு கிடைக்கக்கூடிய மின்சக்தியோடு பிணைந்துள்ளது. மின்துறை முன்னேற்றத்திற்குத் தேவைப்படுபவை அதிக அளவு முதலீடும் நீண்ட காலப் பொறுமையுமாகும். எனவே, இதற்குச் சிறந்த எதிர்காலக் கண்ணோட்டமும், நீண்ட காலத்திற்கெனத் திட்டமிடும் திறமையும் தேவைப்படுகின்றன. எழுபதாம் ஆண்டுகளில், மின்துறை, முன்னேற்றத்திற்கான கொள்கைகளை வகுக்கும் விவாதங்களிலேயே கணிசமான காலம் கழிந்தது. எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்திலேயே மின்சாரத்தை, செலவு அதிகமின்றி உற்பத்தி செய்யக்கூடிய பெரும்பாலான நீர்விசை மூலங்கள் பயன்படுத்தப்பட்டு விட்டன. எனவே பருவ காலங்களில் மட்டுமே பயனளிக்கக் கூடிய, லாபம் ஈட்ட முடியாத, மீதமுள்ள சிறிய நீர் விசை மூலங்களைப் பயன்படுத்தலாமா அல்லது கேரளத்தோடும், கர்நாடகத்தோடும் இணைந்து மின் திட்டங்களை நிறைவேற்றி அங்குக் கிடைக்கக் கூடிய உபரி மின்சாரத்தைப் பயன்படுத்தலாமா, அல்லது நெடுந்தொலைவில் உள்ள மாநிலங்களிலிருந்து நிலக்கரியைப் பெற்று அனல் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கலாமா அல்லது பழுப்பு நிலக்கரியைக் கொண்டு நெய்வேலியில் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கலாமா என்று விவாதிக்கப்பட்டது.



# மெச்சத் தகுந்த மின் துறைப் பணிகள்

**மாண்புமிகு மின்துறை அமைச்சர்**
**திரு எஸ். இராமச்சந்திரன்**

மின் உற்பத்தியில் இந்த மாநிலம் தன்னிறைவை அடைய வேண்டும் என்பது எழுபதாம் ஆண்டுகளின் இறுதியிலேயே உணரப்பட்டது. அதிக அளவு பெரிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டுவதன் வாயிலாகவே இத்தகைய தன்னிறைவைப் பெற முடியும் என்பதும் உணரப்பட்டது. இதைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கீழ்க் குறிப்பிட்டுள்ள மின்உற்பத்தித்திட்டங்களுக்கு அனுமதி பெறப்பட்டது. இவற்றின் மொத்த உற்பத்தித் திறன் 1028 மெகாவாட் ஆகும்.

அதில் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி 2-வது கட்டத்திட்டம் 1977 செப்டம்பரிலும், 20 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட குந்தா 5-வது மின் நிலையத்தின் கூடுதல் பிரிவுத் திட்டம் 1980 மே மாதத்திலும், 120 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் மற்றும் 420 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மேட்டூர் அனல்மின் திட்டம் 1980 செப்டம்பரிலும் இயங்க அனுமதி அளிக்கப்பட்டது. இது தவிர சின்னஞ்சிறு மூன்று புனல் மின் திட்டங்கள் (பைகாரா, கீழ் பவானி, வைகை அணைகளில்) 16 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டு இயங்க 1981 ஆகஸ்ட் மாதத்திலும், பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின்திட்டம் 30 மெகா

வாட் உற்பத்தித் திறன் கொண்டதாய் இயங்க 1982 ஜூன் மாதத்திலும் அனுமதி அளிக்கப் பட்டது. 1983 மே மாதம் முதல் மேட்டூர் அனல் மின் திட்டம் விரிவாக்கம் 420 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்டதாய் செயல் பட அனுமதி அளிக்கப்பட்டது. பூனாச்சி, விளாம்பட்டி, மரவகண்டி ஆகிய சின்னஞ்சிறிய 3 புனல் மின் திட்டங்கள் 2.25 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டதாய்ச் செயல்பட முறையே 1982 ஆகஸ்ட், 1983 ஜூன், 1984 ஜனவரி மாதங்களில் அனுமதி வழங்கப் பட்டது.

மேலும் 1050 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டு இயங்க வடசென்னை அனல் மின்திட்டம், 710 மெகாவாட் திறனுடன் இயங்க தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம், 300 மெகாவாட் திறனுடன் இயங்க காஸ் சுழலி திட்டம், 100 மெகாவாட் திறனுடன் இயங்க பைகாரா இறுதி நிலைத்திட்டம், 3 மெகாவாட் திறனுடன் இயங்க சிறுவாணி சின்னஞ்சிறிய புனல் மின் திட்டம் ஆகிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கான கருத்துரு முறையே 1981 டிசம்பர், 1982 ஆகஸ்ட், அக்டோபர் மாதங்களிலும் மத்திய அரசினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றின் மொத்தத் திறன் 2161 மெகாவாட் ஆகும்.

இவற்றுள், மூன்று அணி—210 மெ.வா. திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம், இரு அணி—210 மெ.வா. திறன் கொண்ட தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம் ஆகிய இரண்டையும் மத்திய மின்சார அதிகார மன்றம் திருத்தி, அதற்கேற்ப அனுமதி வழங்கியுள்ளது. இந்திய அரசு ''காஸ்'' சுழலி திட்டத்திற்கு இணங்கவில்லையெனினும் மாநில அரசு இதற்கு அனுமதி அளிக்க வற்புறுத்தி வருகிறது. மாநில அரசின் மேற்கூறிய திட்டங்களைத் தவிர, மாநில அரசு எடுத்த முயற்சிகளின் பயனாக இரண்டாவது சுரங்கத்தை வெட்டவும், இரண்டாவது அனல் மின் நிலையத்தை நெய்வேலியில் ரூ. 358 கோடி செலவில் நிறுவவும் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மின்துறை முன்னேற்றத்தில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க மற்றொன்று புதிய திட்டங்களுக்குத் தேவைப்படும் போதிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளதாகும். 4-ஆவது, 5-ஆவது (1974-79) ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒதுக்கப்பட்ட முதலீட்டுச் செலவு முறையே ரூ. 213.88, ரூ. 375.13 கோடிகளேயாகும். 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1022.80 கோடியாகும். ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்துறை வளர்ச்சிக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை இது குறிக்கிறது.

1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இயக்கி வைக்கப்பட்ட 35 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட சுருளியாறு புனல் மின் திட்டம், அதே ஆண்டு அக்டோபரில் 50 மெகாவாட் நிறுவு திறன் கொண்டு இயக்கி வைக்கப்பட்ட குந்தா நான்காம் நிலை விரிவாக்கத் திட்டம், 1979 ஜூலையில் 210 மெகாவாட் நிறுவு திறனுடன் இயக்கி வைக்கப்பட்ட தூத்துக்குடி அனல் மின்நிலைய முதல் பிரிவுத்திட்டம், 210 மெகாவாட் நிறுவு திறனுடன் 1980 டிசம்பரில் இயக்கி வைக்கப்பட்ட தூத்துக்குடி அனல் மின்நிலைய இரண்டாவது பிரிவுத் திட்டம், 1982 ஏப்ரல் மாதத்தில் 210 மெகாவாட் நிறுவு திறனுடன் இயக்கி வைக்கப்பட்ட தூத்துக்குடி அனல் மின் நிலைய மூன்றாவது பிரிவுத் திட்டம் ஆகிய திட்டங்கள் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மின்சார உற்பத்தித் திறனை அதிகரித்த சாதனைக்கு விளக்கமாகும். இதே வகையில், மத்திய அரசுத் துறையுடன் தொடர்புடைய கல்பாக்கம் மின்திட்டத்தை 1983 ஜூலையில் 235 மெகாவாட் நிறுவு திறனுடன் இயக்கி வைத்தது, இவ்வரசு மின் உற்பத்தித் திறனில் எடுத்துக் கொண்ட முயற்சியினையும், சாதனையையும் தெளிவுறச் செய்கிறது.

1978-ஆம் ஆண்டு மார்ச்சில் 2424 மெ. வா. ஆக இருந்த மொத்த நிறுவனத் திறன் தற்போது 3344 மெ. வா. ஆக உயர்ந்துள்ளது.

பார்சன்ஸ் பள்ளத் தாக்கு புனல் மின் திட்டம் (நீலகிரி)





கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம்

இருப்பினும், நாட்டு மக்களின் நலன் கருதியும், மின்சாரத்தின் பயன் உணர்ந்தும் இவ்வரசு மின் திறனை அதிகரிக்க வேண்டி பல திட்டங்களை உருவாக்கி வருகின்றது. அவைகளாவன: திருநெல்வேலி மாவட்டத்தில் சேர்வலாறுபுனல் மின்திட்டம் ரூ. 34.67 கோடி செலவில் 20 மெகாவாட் திறனுள்ளதாகவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 145.86 கோடி செலவில் 400, மெகாவாட் திறன் கொண்ட காடம்பாறை நீர் ஏற்றும் மின் திட்டமும், சேலம், பெரியார் மாவட்டங்களுக்கு இணைந்து 129.61 கோடி செலவில் 120 மெகாவாட் திறன் கொண்ட கீழ் மேட்டூர் புனல் மின் திட்டமும், நீலகிரி மாவட்டத்தில் 20 மெகாவாட் திறனுள்ளதாக ரூ. 6.34 கோடி செலவில் குந்தா 5-வது மின் நிலைய கூடுதல் பிரிவுத் திட்டமும், அரசு பரிசீலித்து, பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளனைத்தும், 1985-ஆம் ஆண்டிலிருந்து 1987-ஆம் ஆண்டு இறுதிக்குள் இயக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவை தவிர, சின்னஞ்சிறிய புனல் மின் திட்டங்களையும் அரசு பரிசீலித்து, பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் நீலகிரி மாவட்டத்தில் 1.49 கோடி ரூபாய் செலவில் 2 மெகாவாட் (1X2) திறன் உள்ள பைகாரா புனல்மின் திட்டம், ரூ. 6.26 கோடி செலவில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 8 (4X2) மெகாவாட் திறனுள்ள கீழ்பவானித் திட்டம், 3.97 கோடி செலவில் மதுரைமாவட்டத்தில் 6 மெகாவாட் (2X3) திறனுள்ள வைகை அணைத் திட்டம், 0.85 கோடி செலவில் கோவை மாவட்டத்தில் 1 மெகாவாட் (1X1 திறனுள்ள பூனாச்சி திட்டம் மற்றும் 0.48 கோடி செலவில் மதுரை மாவட்டத்தில் 0.5 மெகாவாட் திறனுள்ள விளாம்பட்டி புனல் மின்திட்டம் என்பவையாகும். இத்திட்டங்களும் செவ்வனே நிறைவேற்றப்பட்டு, 1986ஆம் ஆண்டிலிருந்து 1987-ஆம் ஆண்டு இறுதிக்குள் இயக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட சின்னஞ்சிறிய புனல் மின் திட்டங்களுள் பின்வரும் மூன்று மின் திட்டங்களும் சேர்க்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அவைகளாவன: 13.73 கோடி ரூபாய் செலவில் 30 மெகாவாட் திறன் கொண்ட பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் நிலையம், (நீலகிரி), 316.85கோடி செலவில் 420 மெகாவாட் (2X210) திறன் கொண்ட மேட்டூர் அனல் மின்திட்டம்- முதற் கட்டம் (சேலம்) மற்றும் 238.28 கோடி செலவில் 420 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் - இரண்டாவது கட்டம் (சேலம்). இத்திட்டங்களும் செவ்வனே நிறைவேற்றப்பட்டு 1986-ஆம் ஆண்டிலிருந்து 1988-ஆம் ஆண்டு இறுதிக்குள் இயக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள மின் பற்றாக்குறை நிலையில், இங்குள்ள அனல் மின் நிலையங்கள் நம்பிக்கை அளிக்கக்கூடிய திறனளவுக்கு இயங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே. இந்தச் சந்தர்ப்பத்தில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் இயங்கு திறன் குறிப்பிடப்பட வேண்டியதாகும். தொடக்க நிலையில் இந்த நிலையம் சந்தித்த கோளாறுகள் எல்லாம் சரி செய்யப்பட்ட பிறகு, இது மிகவும் நன்கு இயங்குகிறது. 640 மெ. வா. மின் உற்பத்தியை இது தொட்டு விட்டது. 1983 டிசம்பர் முதல், இதன் மின் சுமை காரணி (Plant Load Factor) யின் மாத சராசரி நிலை 70% ஆகஉள்ளது

மேலே குறிப்பிட்டவை தவிர 1980-84ஆம் ஆண்டுகளில் சுமார் 10,600 கி.மீ. தொலைவுள்ள மிகை உயர் அழுத்த/உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களும், சுமார் 23170 கி.மீ. தொலைவுள்ள (1983 வரை மட்டும்) குறைவழுத்தக்கம்பித் தொடர்களும் நிறுவபபட்டன. 74 துணை மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்பட்டன.

சென்னை நகரின் மின் வழங்கு நிலையை மேம்படுத்த, முதல் முறையாக வடக்கே

வியாசர்பாடியிலிருந்து தெற்கே வேளச்சேரி வரை 110 கே. வி. புதை வடங்கள் போடப் படுகின்றன. இவற்றுடன்கூட பல்வேறு மின் உற்பத்தி நிலையங்களிலிருந்தும் மின் சாரத்தைக் கொண்டு செல்ல எண்ணற்ற மின் செலுத்துகை - மின் பகிர்வுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஊரக மின்மயமாக்கத்தில் இந்த மாநிலம் ஒரு முன்னோடியாகும். இதில் இது இன்று அடைந்துள்ள நிலை, 1980ஆம் ஆண்டு இருந்த நிலையோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஊரக மின்மயமாக்குப் பணியில் அடைந்துள்ள முன்னேற்றம்:

| | 31-3-80 | 31-3-84 |
|---|---|---|
| நகரங்கள் ... | 439 | 439 |
| கிராமங்கள் | 15,550 | 15,673 |
| சிற்றூர்கள் | 47,439 | 47,502 |
| மொத்தம் | 63,428 | 63,614 |
| ஆதி திராவிடர் குடியிருப்புகள் | 25653 | 26,112 |
| இணைப்பு வழங்கப்பட்ட மின் விசையேற்றங்கள் | 8,87,227 | 9,82,806 |
| குடிசைகள் | 1.67 கோடி | 5.62 கோடி |

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கூடவே சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கும் மாதம் ஒன்றுக்கு ஒட்டு மொத்தக்கட்டணமாக ரூ. 2.50 வீதத்தில் குடிசைகளுக்கும் மின்சாரம் வழங்கும் திட்டம் ஒன்று 1979-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 5.62இலட்சம் குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கப் பட்டுள்ளது.

கிராம மின்மயமாக்கப் பணியில் தமிழ் நாடு 99.8% அளவுக்கு மேல் முடித்துள்ளது. மீதமுள்ள கிராமங்கள் மலைப்பகுதிகளில் உள்ளதால் மின் கம்பித் தொடர்களை அமைப்பது கடினமாக உள்ளது. எனவே டீசல் பொறியின் உதவி கொண்டு இத்தகைய சில கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் இதுவரை 20 கிராமங்கள் மின் வசதி பெற்றுள்ளன. இவற்றுடன்கூட தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 3 கிராமங்களிலும், சேலம் மாவட்டத்தில் 3 கிராமங்களிலும் போட்டோ வோல்டிக் மின்கல முறையில் (Photo Voltic cells) தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

1980-81ஆம் ஆண்டில் அரசினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டத்தில் மின் வாரியத்தின் பங்கு தரையடி நீர்த்தேக்கங்களுக்கும் (G.L.R.) மேல்நிலைத் தொட்டிகளுக்கும் (O.H.T.) மின் இணைப்பு வழங்குவதாகும். முதல் கட்டப்பணியில் அடைந்த முன்னேற்றத்தின் உற்சாகம் காரணமாக, இத்திட்டம் இரண்டாவது கட்டத்தில் 150 வட்டாரங்களுக்கு (Blocks) விரிவாக்கப் பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் குடிநீருக்கான 2955 தரையடி நீர்த் தேக்கங்கள்/மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தெருவிளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வாரியம் தானே இப்பொழுது ஏற்றுள்ளதால் பராமரிப்பு முறை பரவலாக முன்னேறியுள்ளது. இது தவிர, வெண் சுடர் விளக்குகளையும், இரண்டு அடி இரட்டைக் குழல் விளக்குகளையும் 1 × 40 வாட் குழல் விளக்குகளாக மாற்றி அமைத்து வருகிறது.

மின்சாரத்தைப் பகிர்ந்து அளிப்பதில் மின் அமைப்புகளின் மேற்பார்வைப் பொறியாளர்களது பொறுப்பு அச்சாணி போன்றதாகும். இந்த மின் அமைப்புகளை, செயல் திறன்மிக்கதாக பெரிய மின் அமைப்புகள் பிரிக்கப்பட்டு புதிதாக ஏழு மின் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மின் அமைப்புகளைத் திறமையோடு மேற்பார்வையிட மாநிலம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு மண்டலத் தலைமைப் பொறியாளரது பொறுப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

> [illegible] திட்டங்களை [illegible]
> [illegible]
> தில்லை; அனைவரையும் [illegible]
> நாகவே கருதிச் [illegible]
> கிறோம்.
> **மாண்புமிகு முதல்வர்**
> **டாக்டர் எம்.ஜி.ஆர்.**

மின் திருட்டை ஒழிக்க, மின் திருட்டு குறித்து அல்லது மற்ற முறைகேடுகள் குறித்து வாரியத்திற்குத் தகவல் தரும் பொதுமக்களுக்கு ரூ. 10,000 வரை ரொக்கப் பரிசு வழங்கும் திட்டமொன்றை 1983-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வாரியம் தொடங்கியுள்ளது. இது தவிர மின் திருட்டு ஒழிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்திச் செயலாக்கும் பொறுப்பு இரு மேற்பார்வைப் பொறியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தைச் சேமிப்பதன் முக்கியத்துவம் குறித்து நுகர்வோரை விழிப்படையச் செய்ய வாரியம் தீவிரமாக உள்ளது. வேளாண்மை விசையேற்றங்களிலும், தொழில் துறைகளிலும் மின்சாரத்தைச் சேமிப்பதைக் குறித்து விரிவான கூர்ந்தாய்வு செய்து பரிந்துரைக்க இரு தனிக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. தொழிலகங்களின் நலனைக் கருதி மொத்தம் 500 கே. வி. ஏ. திறனும், அதற்கு மேற்பட்ட திறனும் கொண்ட சொந்த மின்னாக்கிப் பொறியை வைத்துள்ள உயர் அழுத்தத் தொழிலகங்கள், மின்சாரத்தை வாரியத்திடம் விட்டு சேர்த்து வைத்துக் கொள்ள வகை செய்யும் திட்டம் ஒன்றை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது.



# பெருகிவரும் பால் பண்ணைத் தொழில்

**மாண்புமிகு**

**பால்வளத்துறை அமைச்சர்**

**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**



"நல்ல பால் கிடைக்கவில்லையே!" என்ற ஏக்கம் நகர்ப்புறத்திலும், "பாலுக்கு நல்ல விலை கிடைக்கவில்லையே!" என்ற எரிச்சல் நாட்டுப் புறத்திலும் ஒரு சமயம் இருந்ததுண்டு.

கலப்படக்காரர்கள், கள்ள விலைக்காரர்கள் மத்தியில் நுகர்வோரும், இடைத்தரகர்கள், இந்தப் பாலுக்கே சம்பந்தமில்லாதவர்கள் மத்தியில் பால் உற்பத்தியாளர்களும் சிக்கிய காலமும் இருந்ததுண்டு.

இன்று நிலை என்ன? தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பணிகளை 1.2.'81 முதல் மேற்கொண்டு செயல்படுகின்ற தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், தமிழ்நாட்டில் பால்பண்ணைத் தொழிலில் புரட்சிகரமான மாற்றத்தை உண்டாக்கி விட்டது.

ஆண்டு முழுவதும் நல்ல தரமான பால் நியாயமான விலையில் நகரில் வாழும் நுகர்வோருக்கும், என்றைக்கும் கட்டுப்படியாகக்கூடிய விலை பால் உற்பத்தியாளர்களுக்கும் கிடைக்கச் செய்துவிட்டது.

பால் கொள்முதல் விலையை 1983ஆம் ஆண்டு எருமைப் பால் ஒருகிலோ கொழுப்புச் சத்திற்கு ரூ. 35இல் இருந்து ரூ. 38 ஆக உயர்த்தினோம். இதற்கு ஒத்தாற்போல பசுவின் பால் விலையையும் உயர்த்தினோம். நாடு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது விவசாயிகள் நலன் கருதி, பாலின் விலை ஒரு கிலோ கொழுப்புச் சத்திற்கு ரூ. 40-ஆகக் கொடுத்தோம். வறட்சி நிவாரணப் பணியாகச் சிறப்புக் கால்நடைத் தீவனம் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ தந்தோம். எனினும், பால் விற்பனை விலையை உயர்த்தவில்லை.

குறிப்பாக, கடந்த நான்காண்டுகளில் (1980-1983) எய்திய சாதனைகளைக் கோடிட்டுக் காட்டுகின்றேன், விளக்கமாகச் சொன்னால் இடம் இராது என்பதால்!

**மெத்த வளரும் பால் கூட்டுறவுச் சங்கங்கள்:**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1980ல் 2079லிருந்து 1981-ல் 2499ஆக உயர்ந்து, 1982ல் 2689 ஆகி, 83ஆம் ஆண்டில் 311 ஆகியது.

**மென்மேலும் உறுப்பினர்கள்:**

வெறும் சங்கங்கள் தோன்றினால் மட்டும் போதுமா? ஆள்பலம் தானே யானை பலம்! கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கையும் மென்மேலும் பெருகியது.

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1980 | 2.77 இலட்சம் |
| 1981 | 3.12 ,, |

| | |
|---|---|
| 1982 | 3.65இலட்சம் |
| 1983 | 4.69 ›› |

## கொள்முதல் கூடிவிட்டது

கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றி வெறும் கூட்டம் சேர்த்தால் மட்டும் போதுமா? குடம் குடமாய் பால் சேகரிப்பு நடந்தால் தானே பால்வளம் பெருகும்-வெண்மைப் புரட்சி வெளியில் தெரியும்? இந்த நான்கு ஆண்டு களில் பால் கொள்முதல் பளிச்சென்று உயர்ந்தது.

பால் கொள்முதல் உயர்ந்த பட்டியலைப் பாருங்கள்:

| ஆண்டு | (இலட்சம் லிட்டர்) |
|---|---|
| 1980 | 1093.51 |
| 1981 | 1077.18 |
| 1982 | 1358.11 |
| 1983 | 1703.00 |

## விற்பனையளவும் விரிவாகின்றது

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மூலம் விற்பனையாகும் பாலுக்கு நகர்ப்புற மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு. எனவே தான் பாலின் விற்பனை நாளுக்கு நாள் விரிந்து கொண்டே போகிறது. கீழ்க்கண்ட விவரங்கள் இந்த உண்மையைப் புரிந்துகொள்ள உதவும்.

| ஆண்டு | விற்பனையின் அளவு (இலட்சம் லிட்டர்களில்) |
|---|---|
| 1980 | 1232.57 |
| 1981 | 1462.71 |
| 1982 | 1709.96 |
| 1983 | 1900.47 |

## நுகர்வோர் நலம் நோக்கி....

நுகர்வோரின் முழு ஈடுபாட்டினையும் ஒத்துழைப்பையும் பெற்றிட, முதற்கட்டமாக சென்னை நகரில் பால் விற்பனையை நுகர்வோரே ஏற்று நடத்திடும் வகையில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இன்றைய தேதியில் 31 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 124 பால் விற்பனை நிலையங்கள் இவற்றின்கீழ் உள்ளன. நாளொன்றுக்குச் சுமார் 88 ஆயிரம் லிட்டர் பாலை இச்சங்கங்கள் விநியோகம் செய்கின்றன. வரும் ஆண்டில் 19 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் செயல்படத் துவங்கும்.

## இன்றுபோல் என்றும் இருந்திட...

தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் தமிழகத்தில் வெண்மைப் புரட்சி வெகுவேகமாக நடந்து வருகின்றது. பால் வளம் மன நிறைவு அளிப்பதாக இருக்கின்றது. இந்தச் செழிப்பும், சீரான வளர்ச்சியும் என்றும் நின்று நிலைத்திட, கைவசமுள்ள திட்டங்களையும், கருத்திலுள்ள ஏற்பாடுகளையும் சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன்.





## சாதனைகளின் சில விவரங்கள்:

இரண்டு புதிய குளிரூட்டும் நிலையங்கள்திறக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை, சேத்தியாத் தோப்பு)

நான்கு புதிய குளிரூட்டும் நிலையங்களுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன (திருவள்ளூர், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, அனக்காவூர்)

இரண்டு புதிய பால் பண்ணைகள் செயல்படத் தொடங்கியுள்ளன. (சேலம், கிருட்டிணகிரி)

மூன்று புதிய பால் பண்ணைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன (உதகமண்டலம், திருநெல்வேலி, காரைக்குடி)

ஒரு உறைவிந்து நிலையம் திறக்கப் பட்டுள்ளது (ஈரோடு)

## பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள்:

(அ) பால் கொள்முதல்விலை ஏறக்குறைய ஒரு லிட்டருக்கு 35 காசு வீதம்




1983, மே மாதம் முதல் உயர்த்தப் பட்டது.

வறட்சி நிவாரணமாக இணையம் 500 டன் கால்நடைத் தீவனத்தை கிலோ ஒரு ரூபாய்க்கு, பால் உற்பத்தியாளர் களுக்கு வழங்கியது.

தஞ்சையில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட கால்நடைகளுக்கு 330 டன் தீவனம் சலுகை விலையில் வழங்கப் பட்டது.

ஏறக்குறைய 2 இலட்சம் செயற்கை முறை கருத்தரிப்புகள் செய்யப்பட்டன.

## பால் நுகர்வோருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்:

பால் உற்பத்திக்கான மொத்த செலவுகள் பெருமளவில் அதிகரித்த போதிலும் விற்பனை விலை ஏற்றப்படவில்லை.

அதிகக் கொழுப்புடன் உள்ள (6%) தரமான பாலும் விநியோகிக்கப்படுகிறது.

பால் பிளாஸ்டிக் பைகள் பல மாவட்டங்களில் மேலும் அதிகமான இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

அதிகமான இடங்களில், முக்கியமாக சென்னை சுற்றுப்புறங்களில் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

நுகர்வோர் சங்கங்கள் மேலும் நிறுவப்பட்டுள்ளன (மொத்தம் 31)

## ஊழியர்களுக்கான சலுகைகள்:

சைக்கிள் வாங்குவதற்காக முன் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஈட்டிய விடுப்பிற்கு, விடுப்பில் செல்லாமல், அதற்கான ஊதியம் (சரண்டர்) அளிக்கப்படுகிறது.

டெரிகாட்டன் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துப் பிரிவில் பணி புரிபவர்களுக்கு மழைக் கோட்டு வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் தங்கும் அறை ரேடியோ வசதியுடன் ஏற்படுத்தப் பட்டுள்ளது. சோப்பு, எண்ணெய் மற்றும் ஷிப்டில் வேலை செய்யும் போது பால், ரொட்டி வழங்கப்படுகின்றன.

ஊழியர்களின் சிறுவர்சிறுமியர்க்கு படிப்பு உதவித் தொகை அளிப்பதற்காக ஒரு டிரஸ்ட் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலிருந்து இத்தொகை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

எப்போதும் போல 8.33% க்குப் பதிலாக போனஸ் 10% வீதம் வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நிர்வாக உறவு சுமுகமாக இருந்து தங்கு தடையில்லாமல் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தரமான பொருள் ! மலிவான விலை !!

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், கடலூர்.

பொதுமக்களுக்கோர் நற்செய்தி

அனைத்து வாணிபக்கழக அங்காடிகளிலும் அத்தியாவசியப் பொருட்களுடன் புரதச்சத்து நிறைந்ததும், துவரம் பருப்பிற்கு நிகரானதும், கிலோ ரூ. 5.50 விலையுள்ளதுமான அமுதம் மசூர் பருப்பு ½ கிலோ, 1 கிலோ பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

நெய்வேலி, சிதம்பரம் I மற்றும் விழுப்புரம் II சில்லரை அங்காடிகளில் மளிகை, வனஸ்பதி, சோப்பு மற்றும் அனைத்து ஷாப் சாமான்களும் மலிவான விலையில் கிடைக்கும்.

பொதுமக்கள் அவற்றை வாங்கிப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

''மக்கள் சேவையே வாணிபக் கழகத்தின் குறிக்கோள்''



# வளர்ச்சிக்கு உதவும் வணிக வரித் துறை

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

**திரு. எஸ். டி. சோமசுந்தரம்**

தமிழ்நாட்டின் வரிவருவாயில் வணிக வரியின் பங்கு 65 விழுக்காட்டிற்கு மேலாகும். இத்துறையில் செயலாட்சியின்கீழ் அடங்கும் பெரும்பான்மையான சட்டங்களாவன:

தமிழ்நாடு பொதுவிற்பனை வரி

மத்திய விற்பனை வரி

கேளிக்கை வரி

பந்தய வரி

தமிழகத்தில் வருவாய் விளைவிக்கும் மூலாதாரங்களில் விற்பனை வரி ஒன்றுதான் பெருமளவில் வருவாயை ஈட்டித்தரும் தனி ஆதாரமாக விளங்கி முக்கிய அங்கம் வகிக்கிறது..

| | | |
|---|---|---|
| 1979—80 | 353 | கோடி ரூபாய்கள் |
| 1980—81 | 490 | ,, |
| 1981—82 | 581 | ,, |
| 1982—83 | 696 | ,, |
| 1983—84 | 751 | ,, |

வணிகவரியாகக் கிடைத்துள்ளது.

வணிகவரி வருமானத்தில் இத்துறையின் நிர்வாகச் செலவு 1.4% தான்.

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைக் கேற்ப வருமானம் அதிகமாக வரக்கூடிய வழி முறைகளை நன்கு ஆராய்ந்து, ஏழை எளியோரைத் தவிர்த்து செல்வந்தர்களிடம் வரி பெறும் வகையில், வரிவிதிக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. சில ஆண்டுகளாக வணிக வரி வருவாயைப் பெருக்க பலவித திட்டங்கள் தீட்டப்பட்டு, அவ்வருவாயை ஏழை எளியோர்களின் மேம்பாட்டிற்கு உதவ அரசு பெரும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

அத்தியாவசியப் பொருட்களான நெல், அரிசி மற்றும் தானிய வகைகளுக்கு வரிவிதிக்காத மாநிலம் தமிழகம் ஒன்றுதான். வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியே தீரவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

ஏழைகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு, உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப்பொருள்கள், மூக்குக்கண்ணாடி, மண்ணெண்ணெய் விளக்கு, அப்பளம், சேமியா, மண்ணெண்ணெய் அடுப்பு ஆகிய பொருட்களுக்கு வரிவிலக்குஅளிக்கப்படுகிறது. மேலும் கணக்குப் புத்தகங்கள், மாணவர்களின் நோட்டுப் புத்தகம், பென்சில் ஆகியவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்படுகின்றன.

தமிழக அரசுமண்ணெண்ணெய்க்கு விதித்திருந்த வரிவிகிதத்தை 8சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்ததுடன், அதற்கு விற்பனை மேல்வரியையும் நீக்கியுள்ளது. துவிச்சக்கரவண்டி, ரிக்ஷா மற்றும் மூன்று சக்கர வண்டிகளுக்கும் அவைகளுக்கான டயர் டியூபுக்கான வரியையும் 6 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகக் குறைத்தது. சிறுகலைவுத் தொழிலாளிகளின் மூலப்பொருட்களான பாலித்தின் பைகள், இருக்கைக்கான பிரம்புகள், பாலித்தின் படிகங்கள் போன்றவைகளின்வரி 8சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. நாட்டுச் செக்கில் பிழிவதற்கு வாங்கும் நிலக்கடலைக்கு வரிவிலக்கு அளித்ததுபோல, அதில் பிழியப்படும் இதர எண்ணெய் வித்துக்களுக்கும் விலக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 2 லட்சத்திற்குக் குறைவாக விற்றுமுதலுள்ள ரொட்டி, பன், கைவினை சோப்பு மற்றும் டிடர்ஜென்ட் சோப் ஆகிய பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சிறிய சாகுபடியாளர்கட்கு உதவ கோவை, கூனூர் ஆகிய இடங்களில் ஏலத்தில் விற்கப்படும் தேயிலைக்கான வரி 6 சதவிகிதத்திலிருந்து $2\frac{1}{2}$ சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதுபோல பஸ், டிரக் ஆகியவைகளுக்கான அமைப்புச் சட்டத்தின் ( chassis ) வரிவிகிதத்தை 15லிருந்து 9 ஆகவும் பிறகு 6-ஆகவும் டயர் டியூப்க்கான வரியை 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகவும் அரசு குறைத்தது.

கடந்த 10 ஆண்டுக்காலமாக அமலில் இருந்துவந்த பலமுனை விற்பனை வரிக்குட்பட்ட பொருள்களுக்கு வரிவிலக்களிக்க நிர்ணயிக்கப்பட்ட உச்ச விற்பனைத் தொகை வரம்பானது 50,000 ரூபாயிலிருந்து 1,00,000 ரூபாயாக இவ்வாண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மொத்தத்தில் 20,000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் அதாவது தமிழ்நாட்டில் உள்ள வரிவிதிப்பிற்குட்பட்ட மொத்த வியாபாரிகளில் ஐந்தில் ஒரு பங்கினர் பலனடைவார்கள். இதுபோலவே பலமுனை வரிவிதிப்பிற்குட்பட்ட பொருள்களுக்குப் பதிவு செய்வதற்குரிய விற்றுமுதல் வரம்பும் 30,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சலுகை சுமார் 7000க்கும் மேற்பட்ட வியாபாரிகளுக்கு பயனளிக்கும் வகையில் உள்ளது. மேலும் பிரிவு-7-ன் கீழ் வியாபாரிகளுக்குக் கிடைக்கும் சகாய விற்பனை வரி அல்லது இணக்க வரி செலுத்தும் சலுகை பெற விற்பனைத் தொகை வரம்பு 60,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை என கடந்த 10 ஆண்டுக்காலமாக இருந்து வந்துள்ளது. இந்த வரம்பை ஒரு லட்சத்திலிருந்து, ரூபாய் இரண்டு லட்சமாக மாற்றி இந்த எல்லைகளுக்குள் வரும் வெவ்வேறு நிலைகளுக்கேற்ப வரித்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறைப்படி வியாபாரிகள் வழக்கமாகக்கட்ட வேண்டிய வரித்தொகையில் சுமார் பாதியளவு தான் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு வரிச்சலுகை பெற விற்பனைத் தொகை வரம்பு ஒருலட்சத்திலிருந்து இரண்டு லட்சமாக உயர்த்தப்பட்டதால் 13000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பலனடைவார்கள்.

'வர்த்தக நல உரிமை ஆலோசனைக் குழு' எனப்புதியதொரு குழு ஒன்றும் 1980-ஆம் ஆண்டு தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது. இக்குழு அமைக்கப்பட்டதால் அரசுக்கும், வணிகர்களுக்குமிடையே இருதரப்பினரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து செயல்படும் சுமுகமான உறவு மலர சாத்தியமாயிற்று.

பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரி நிலைக்கு மாற்றப் பெற்ற சீப்பு, எழுதுபொருட்கள், பிளாஸ்டிக், மெழுகுவர்த்தி போன்ற பொருட்களுக்கு துறை சட்டதிட்டங்களுக்கேற்ப கணக்குகளைப் பேணுவதில் உள்ள சிரமங்களைச் சம்பந்தப்பட்ட வணிகர்கள் எடுத்துரைத்ததன் பேரில் இந்தப் பொருட்கள் திரும்பவும் பலமுனை வரி விதிப்பிற்கே கொண்டுவரப்பட்டன. இதனால் இவ்வாண்டில் ஒரு இலட்சம் ரூபாய் வரை விற்று முதல் உள்ள வணிகர்களுக்கு வரிவிதிப்பிலிருந்து முழுமையான விலக்கும், 2 லட்சம் ரூபாய் வரை விற்றுமுதல் உள்ளவர்கள் செலுத்தும் வரி வீதத்தில் சலுகையும் அளிக்கப்பட்டுள்ளன. இதுபோன்றே ஒருமுனை வரியின் கீழ் இருந்த ஆயத்த ஆடைவரியை 3 சதவிகிதமாகக் குறைத்து பலமுனை வரியின் கீழ்கொண்டு வரப்பட்டது.

எடையிடும் இயந்திரங்கள், பரிசுச்சீட்டு, மாட்டுத்தீவனம் மற்றும் கோழித் தீவனம் ஆகியவை அண்மையில் ஒரு முனை வரியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

1984 ஜனவரி மாதத்தில் தமிழக அரசு, பரிசுச் சீட்டுகளுக்கு அளிக்கப்பட்டு வந்த வரிவிலக்கை அகற்றி 20% ஒருமுனை விற்பனை வரிவிதிக்கத்தீர்மானித்தது. இது தமிழக அரசின் வருவாயைக் கூடுதலாக்கும் என்பது மட்டுமின்றி, வர்த்தகர்களின் பொதுவான கருத்தின்படி தமிழக மக்கள் ஏனைய மாநிலங்களின் பரிசுச் சீட்டுககளை வாங்குவதற்குச் செலவாகும் பெருந்தொகையின் ஒரு பகுதியைப் பெற்று, அத்தொகை தமிழக அரசின் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

## கேளிக்கை வரி

திரைப்படங்கள் பெரும்பான்மையினரால் விரும்பப்படுவதுடன், குறைந்த செலவில் அனுபவிக்கும் பொழுதுபோக்காகும். திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு ஒரு தனிப்பெரும் இடத்தை வகிக்கிறது. இம்மாநிலத்தில் மொத்தம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட திரையரங்கங்கள் உள்ளன. இவற்றில் 985 நிலையானவை; 151 பகுதி நிலையானவை; 867 இடம் பெயர்பவை; 8 திறந்த வெளித் திரையரங்கங்களாகும். அனைத்து 'இடம் பெயரும் திரையரங்கங்களும் பெரும்பாலான 'நிலையான திரையரங்கங்களும் கிராமப் புறங்களில் உள்ளன.

85348

வணிகவரித் துறையின் புதிய அலுவலகக் கட்டடம்



கிராமப்புறங்களில் உள்ள திரையரங்கங்களில் பெருமளவில் வரி ஏய்ப்பு செய்யும் நிலை இருந்தது. திரையிடுபவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் செம்மையான அணுகுமுறை கொண்ட ஒரு திட்டத்தை அரசுடிசம்பர்1977ல் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இத் திட்டத்தின்படி, ஆரம்பத்தில் கிராமம், பேரூராட்சி, மூன்றாம் நிலை மற்றும்இரண்டாம் நிலை நகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள திரையரங்கங்களின் மொத்த இருக்கைகளுக்கான வசூல் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அரசுக்குச் செலுத்தினால் போதுமானது. அரசிற்கு வருவாய் அதிகரித்ததுடனல்லாமல், வரி ஏய்ப்பு செய்யும் திரையரங்கங்களில் அடிக்கடி ஆய்வு செய்யும் முறை தவிர்க்கப்பட்டு, வரி ஏய்ப்பைக் குறைக்க வழிகோலியதால் இத்திட்டத்தின் விளைவுகள் ஊக்கமளிப்பதாய் அமைந்தன.

**வீடியோ மூலம் திரையிடப்படும் படங்களுக்கு வரி விதிப்பு**

'வீடியோ' மூலம் படங்கள் திரையிடப்படும் கூடங்கள் அண்மைக்காலத்தில் காளான்களைப்போல் பல இடங்களில் சட்டெனத் தோன்றியதால், முறையான திரையரங்கங்களிலிருந்து பெறப்படும் வருவாய் குறையுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியதுடன், பொதுவாகத் திரைப்படத்தொழிலையும் குறிப்பாகப் படம் திரையிடுபவர்களின் நலனையும் பாதித்தது.மக்களின் நன்னெறிக்குக் குந்தகம் விளைவிக்கும் நிலையைத் தோற்றுவித்தது.

இவற்றை நீக்க அரசு உடனடி நடவடிக்கை எடுத்து, இவ்வாறு வீடியோ மூலம் படங்கள் திரையிடுவதைக் கட்டுப்படுத்தி ஒரு அவசரச் சட்டத்தை வெளியிட்டது. 14.1.84 அன்று வெளியிடப்பட்ட இந்த அவசரச்சட்டம் அண்மையில் மாற்றப்பட்டு, ''வீடியோ மூலம் திரையிடப்படும் படங்கள் சட்டம், 1984'' நிறைவேற்றப்பட்டது.



இன்னலும், இடையூறும்
இருக்கத்தான் செய்யும்;
ஆனால், நமது உழைப்பு
ஒரு நாளும் வீணாகாது!

**செயலாக்கப் பிரிவு**

பெரிய அளவில் வரி ஏய்ப்பு நடைபெறுவதைப் புலனாய்வு, திடீர்சோதனை மற்றும் ஆய்வுகள் வாயிலாகக் கண்டறிந்து சீர்படுத்துவதே செயலாக்கப் பிரிவின் முக்கியப் பணியாகும்.

மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், புதுக்கோட்டை, மதுரை தவிர ஏனைய எல்லா வணிகவரி மாவட்டங்களிலும் அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. மதுரையில் அலுவலகக் கட்டடப் பணி முடியும் தறுவாயிலுள்ளது.

**சென்னை கிரீம்ஸ் சாலையில் கட்டப்பட்ட வணிகவரித்துறையின் புதிய கட்டட வளாகம்**

சென்னை நகரிலுள்ள அனைத்து வணிக வரி சரக அலுவலகங்களும் ஒரு பொதுவான அலுவலக வளாகத்தில் அமையவேண்டும் என்ற எண்ணத்துடன் அரசு சுமார் 1 கோடி ரூபாய் செலவில் 38 கிரவுண்டு பரப்பளவில் நான்கு அடுக்குக் கட்டடம் கட்டி 7-6-1984ல் திறக்கப்பட்டது. சென்னை வடக்கு மற்றும் தெற்குக் கோட்டத் துணை ஆணையர்களின் அலுவலகங்கள், துணை ஆணையரின்(செயலாக்கம் )அலுவலகம் மற்றும் வணிகவரித் துறைப் பயிற்சி நிலையம் ஆகியவை இப்புதிய கட்டடத்தில் இயங்கும்.

# நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

நமது தாய்த்திருநாடு ஒரு விவசாய நாடு. தமிழகத்தின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உள்ளது. நமது மக்களில் பெரும் பகுதியினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே நிலம் வைத்திருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களது நிலத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலும், அதன் பேரில் உள்ள நன்மைகளை முறைப்படி பெறுவதிலும் பலவித இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். இத்தகைய இன்னல்களை நீக்கி விவசாயிகள் நன்மை பெற வேண்டும் என்ற நோக்குடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் புதியதொரு திட்டம் கொண்டு வரப்பட்டது. அத்திட்டத்தின் பெயர்: நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்.

**திட்டப்பணி செயல்படும் பகுதிகள் :**

தமிழகத்தின் மொத்தப் பரப்பளவு 1,30,069 சதுர கிலோ மீட்டராகும். இவற்றில், ஒதுக்கப்பட்ட காடுகளும் அண்மையில் மறு நில அளவை செய்த கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களும், தீவிர உட்பிரிவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட வட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லை. இந்தப் பகுதியில் முதல் கட்டமாக எடுத்துக் கொண்ட பகுதிகளில் இத்திட்டப்பணி முடிந்த பிறகு இத்திட்டம் அமல் செய்யப்படும். ஆக, எஞ்சியுள்ள 80,000 ச.கி.மீ. கொண்டுள்ள பரப்பு 13 மாவட்டங்களில் உள்ள 98 வட்டங்களில் உள்ளன. அப்பகுதிகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை அரசு கடும் விரைவுத் திட்டமென அறிவித்து இப்பணியின் முன்னேற்றத்தை அவ்வப்பொழுது கூர்ந்து ஆய்வு செய்து வருகிறது. இன்று வரை 5 வட்டங்களில் இப்பணி முழுமையாக முடிவு பெற்றுள்ளது.

**இத்திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள் :**

1. புதுப்பட்டா ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பட்டாவுடனும் அப்பட்டாவில் கண்டுள்ள நிலங்களின் புலப்படங்கள் நான்கு பக்க அளவுகளுடன் கொடுக்கப்படுகிறது. விவசாயிகள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒவ்வொரு புலன்களுக்கும் வடக்குப் பக்கமுள்ள பட்டாதாரரின் பெயரும் எழுதிக் காண்பிக்கப்படுகிறது.

2. கூட்டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இதற்கெனப் பிரத்தியேகமாக நில உரிமையாளரிடமிருந்து விண்ணப்பம் இல்லாமல் செய்து தரப்படுகிறது.

3. கிராமங்களிலும் வட்ட அலுவலகங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் மூல ஆவணங்களான செட்டில்மென்ட் பதிவேடு; நிலச்சுவடி (Field Measurement Book) சிட்டா, கிராமப்படம் புதியதாகத் தயாரிக்கப்பட்டு, எதிர் வரும் 30 ஆண்டுகளுக்குப் பயன்படும்அளவிற்குச் செய்து கொடுக்கப்படுகிறது.

4. இத்திட்டம் அண்மையில் தமிழக அரசால் கொண்டு வந்துள்ள நில உரிமைப் பதிவேடு சட்டத்தினை( Patta Pass Book Act. செயல்படுத்தப் பெரிதும் உதவுகிறது.



5. நிலங்களிலுள்ள காணாமற்போன சர்வே கற்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

6. அரசுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு வட்டாட்சியர்களுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

7. கிராமங்களில் நஞ்சையாகப் பதிந்துள்ள நிலங்கள் தற்போது புஞ்சையாகவும், புஞ்சையாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் நஞ்சையாகவும் இருக்குமானால் அத்தகைய மாற்றங்களும் அதுபோல் பூமியில் தற்பொழுது உபயோகத்தில் உள்ள நடைபாதை, வண்டிப்பாதை போன்ற பொதுமக்கள் உபயோகித்து வரும் இடங்களைப் புறம்போக்காக மாற்ற ஏதுவாக அத்தகைய புலங்களும் கணக்கெடுக்கப்பட்டு, வருவாய்த்துறைக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

8. இத்திட்டம் கிராம மற்றும் நகரங்களில் படித்து வேலை இல்லாமல் இருக்கும் சுமார் 12,000 இளைஞர்களுக்கு மாதச் சம்பளத்திலும், சுமார் 20,000 தொழிலாளர்களுக்குத் தினப்படி வேலையும் கிடைக்க வழி செய்கிறது.

9. இத்திட்டம் அமலாக்கப்பட்டதன் காரணமாக தமிழக நில அளவைத்துறையில் சுமார் 1725 நபர்களுக்கு உயர் பதவிகள் கிடைத்திருக்கின்றன.

10. இத்திட்டம் இந்தியப் பிரதமர் அவர்களின் புதிய 20 அம்சத் திட்டத்தின் 4-வது அம்சமான நிலங்களின்பதிவுகளையும் அரசு ஆவணங்களில் உள்ள நிலையினையும் இன்றைய தேதி வரை முறைப்படுத்தி,சரி செய்து வைப்பதை நிறைவு செய்கிறது.

இத்திட்டத்தினால் இதுவரை பயனடைந்த விவசாயப் பெருங்குடி மக்களின் எண்ணிக்கை 31,85,532 ஆகும். இதுகாறும் 21,18,600 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தனிப் பட்டாக்கள் 15,71,732 ஆகும். கூட்டுப் பட்டாக்கள் 5,46,868 ஆகும்.

**பட்டா பாஸ் புத்தகம் :**

பட்டா பாஸ் புத்தகம் நில உடைமைதாரருக்குப் பெரிய வரப் பிரசாதம் ஆகும். இப்புத்தகத்தில் அவரது நிலம் சம்பந்தமான எல்லா விவரங்களும் குறிக்கப்படுகிறது.

நிலத்தின் அடிப்படையில் பெறும் கடன் விவரங்களும் குறிக்கப்படுகின்றன அந்த நிலத்தின் மீதுள்ள வில்லங்கங்களும் குறிக்கப்படுகின்றன.

தமிழக விவசாயப் புள்ளி விவரக் கணக்குகள்படி, இங்குள்ள கைப்பற்று நிலங்கள் 71,50,890 என கணக்கிடப்பட்டுள்ளது. தற்பொழுது ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு பட்டா வீதம் கொடுக்கப்பட வேண்டுமெனவும், அப்பட்டாவில் அவர் அனுபவித்து வரும் தனிப்பட்டாவோ அல்லது கூட்டுப் பட்டாவோ அல்லது நிலங்களை அப்புத்தகத்தில் காண்பிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஒரு நபருக்குத் தனியாகப்பட்டாவழங்கக் கூடிய நிலையில் நிலம் இல்லாது கூட்டுப்பட்டாக்களாக இருந்தாலும் அவருக்கு ஒரு பட்டா வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ்விதம் வழங்குவதற்கென நாம் தயாரிக்க வேண்டிய பட்டாக்கள் ஒரு கோடி வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்பொழுது 93 வட்டங்களில் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணி நடந்து வருகிறது. மேம்பாட்டுத திட்டக் காலத்தை மேலும் ஆறு மாதத்திற்கு நீடிப்பதெனவும் பரிசீலனையில் உள்ளது. இவ்விதம் செய்யப்படுமேயானால், மேற்படி 93 வட்டங்களில் இப்பணி 31-3-86-ல் முடிவடைய வழியுள்ளது.

தற்பொழுது வருவாய் பின் தொடர் பணி திருவண்ணாமலை, தாராபுரம், குன்னூர் மற்றும் காங்கேயம் வட்டங்களில் நடந்து வருகிறது. இப்பணி செய்யும்பொழுதே பட்டா பாஸ் புத்தகத்தையும் வழங்குவதெனத் தீர்மானித்துள்ளோம்.

இதுகாறும் விவசாய நிலங்களுக்குமட்டும் நாம் பட்டா கொடுத்து வந்துள்ளோம். தற்போது நத்தத்தில் உள்ள வீட்டு மனைகளுக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென முடிவு




உள்ளங்கவரும் டிசைன்களில் பெட்சீட்டுகள், டவல்கள், தலையணை உறைகள், இல்லங்களை அழகுபடுத்தும் அலங்காரத் துணிகள், உடுக்கத் தூண்டும் லுங்கிகள், நேப்கின்கள் மற்றும் பாலிஸ்டர் ரகங்கள்.

Erotex
FABRICS

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

"ஜெகநாத நிலையம்" 218, நேதாஜி ரோடு, ஈரோடு-638 001 போன் : 74170 & 75568 தந்தி: "ஈரோடெக்ஸ்"

ஷோரூம்கள் :

- 23, வடக்குமாட வீதி, மைலாப்பூர், சென்னை-600 004
- 10, பி. வி. கே. ஐயங்கார் ரோடு, பெங்களூர்-560 053
- 7-3-130, மெயின் ரோடு, ஹிந்துப்பூர் (ஆந்திரம்)
- 231, நாய்க்கர் புது வீதி, மதுரை-1,

ஜெ. சுத்தானந்தன்
தலைவர்

வ. வே. சு. அய்யர் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களை அரசு விழாக்களாக இந்தத் துறை நடத்தியது. தியாகி சுப்பிரமணிய சிவாவின் நூற்றாண்டு விழாவை அக்டோபர் திங்களில் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், காயிதேமில்லத், முத்துராமலிங்கத்தேவர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், அம்பேத்கார் போன்ற பெருந்தலைவர்களின் பிறந்த நாள் விழாவை அரசு ஆண்டுதோறும் கொண்டாடிவருகிறது.

சென்னையில் உள்ள சாமராஜர் நினைவு இல்லம், ராஜாஜி நினைவாலயம், காந்தி இல்லம், வள்ளுவர் கோட்டம், எட்டையபுரத்தில் உள்ள பாரதி நினைவில்லம், பாரதி மண்டபம், ஈரோட்டில் உள்ள பெரியார்— அண்ணா நினைவகம் - காஞ்சியில் உள்ள அண்ணா நினைவு இல்லம், தொரப்பள்ளியிலுள்ள ராஜாஜியின் இல்லம், தில்லையாடி வள்ளியம்மை நினைவில்லம், கன்னியாகுமரி காந்தி நினைவாலயம், ஒட்டப்பிடாரம் வ. உ. சி. நினைவில்லம் ஆகியவை இந்தத் துறையின் பொறுப்பில் உள்ளன. இவற்றைப் பாதுகாக்கும் பெரும்பணி இத்துறைக்கு வாய்த்துள்ளது.

கிண்டி அருகே சிறப்பான அளவில் நேரு சிலை ஒன்றை நிறுவவும், கன்னியாகுமரியில் மிக உயரமான அளவில் வள்ளுவர் சிலை ஒன்றை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

தந்தை பெரியார் அவர்களின் நினைவாக - மாவட்டத் தலைநகரங்களில் நினைவுத் தூண்களை அரசு எழுப்பியுள்ளது. இந்தத் தூண்களில் அவரது பொன்மொழிகளைப் பொறித்துள்ளது.

## ஓர் அறிவிப்பு

**மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் பொறுப்பில் பல துறைகள் இருக்கின்றன. அனைத்துத் துறைகளின் ஆக்கப் பணிகளையும் இந்த இதழ் ஒன்றிலேயே அடக்கிவிடுதல் எளிதல்ல. எனவே சில துறைப் பணிகளின் வளர்ச்சி குறித்த கட்டுரைகள் அடுத்து வரும் இதழ்களிலும் தொடரும்.**

**ஆசிரியர்**

சென்னை நகரில் சுற்றுலாத் துறையின் மூலம் பொருட்காட்சிகள் நடைபெறுகின்றன. மாவட்டத் தலைநகரங்களிலும் மக்களுக்கு அரிய செய்திகள் — தகவல்கள் ஆகியவற்றைத் தரும் வகையில் செய்தித்துறை, பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் மதுரை, சேலம், கோவை, திருச்சி, நெல்லை, வேலூர் ஆகிய ஊர்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழக அரசின் பல்துறை அரங்குகளும், மைய அரசின் அரங்குகளும் இப்பொருட்காட்சியில் இடம் பெறுகின்றன. இவற்றின் வாயிலாக - பல்வேறு செய்திகள் - பாடங்களைப்போல் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப் படுகின்றன. பற்பல ஏடுகளைப் படித்து அறிந்து கொள்ளும் செய்திகளைப் பொருட்காட்சியின்மூலம் மக்கள்பெறுகிறார்கள். மக்களுக்குச் செய்தி அளிப்பதுடன் அரசுக்கு வருவாய் தேடித் தரும் சாதனமாகவும் இது திகழ்கிறது. இந்தியாவிலேயே இது ஓர் முன்னோடித் திட்டமாக நடைபெற்று வருகிறது.



அரசு ஆற்றிவரும் அரும் பணிகள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏனைய அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் உரைகள், கட்டுரைகள் ஆகியவற்றையும் அரசின் சாதனைச் சரிதங்கள் குறித்தும் 'தமிழரசு' இதழ் பொதுமக்களுக்குத் தெரிவித்து வருகிறது. தமிழில் மாதமிருமுறை ஏடாகவும், ஆங்கிலத்தில் மாத ஏடாகவும் விளங்கி வரும் இந்த இதழின் பணிகள் சிறப்புற நடைபெறுவதற்காகத் 'தமிழரசு' அச்சகம் ஒன்று இயங்கி வருகிறது.

மத்திய அரசின் 'திட்டம்', மாநில அரசின் 'உழைப்பவர் உலகம்', 'திருக்கோயில்' போன்ற இதழ்களும் இங்கு அச்சாகின்றன. ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் இந்த அச்சகத்திற்கு ரூ. 6.5 இலட்ச ரூபாய் செலவில், அண்மையில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு, அரசு வழங்கும் சலுகைகள் போன்ற முக்கியமான செய்திகள் அவ்வப்போது சிறுசிறு கையேடுகளாக வெளியிடப் பெறுகின்றன.

இவ்வாண்டு முடிவிற்குள் கொடைக்கானல், ஏர்க்காடு, வேலூர், கோவை, திருச்சி, கும்பகோணம், நெய்வேலி ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் முழு ஒத்துழைப்புடன் தொலைக்காட்சி நிலையங்கள் உருவாகவுள்ளன.

நாகர்கோவில், மதுரை ஆகிய ஊர்களில் வானொலி நிலையங்களும் உருவாகி வருகின்றன.

இவ்வாறு, பொதுமக்களுக்கும் அரசுக்கும் பாலமாகத் திகழ்ந்து வரும் செய்தித்துறை, தனது பணிகளை - பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

தந்தி: "சென்டெக்ஸ்" போன்: 32

ஒவ்வொருவரும் தேர்ந்தெடுப்பது
ஒவ்வொருவரும் உபயோகிப்பது

சென்டெக்ஸ்

- படுக்கை விரிப்புகள்
- தலையணை உறைகள்
- மேஜை விரிப்புகள்
- அலங்காரத் திரைத் துணிகள்
- துண்டுகள்
- டர்க்கித் துண்டுகள்
- சீர் சக்கர் ரகங்கள்

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள் :

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்.,
கே. 885.

தபால் பெட்டி எண். 32 சென்னிமலை - 638 051.
தமிழ்நாடு.

ஷோரூம்கள்: 1) சென்டெக்ஸ் ஷோரூம்,
811, அண்ணாசாலை, சென்னை-2

2) சென்டெக்ஸ் ஷோரூம்,
11, பிரிகேடு ரோடு,
பெங்களூர்-1.

M. P. நாச்சிமுத்து B.A.,B.L.
தலைவர்.



# அறநிலையத் துறையின் அரும் பெரும் பணிகள்

தமிழ்நாடு அரசின்கீழ் இயங்கி வரும் பல்வேறு துறைகளில் இந்து சமய அறநிலையத்துறையும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

தொன்று தொட்டே தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையில் அறநிலையங்களாகிய திருக் கோயில்கள், மற்றும் அவற்றோடு தொடர்புடைய பல வகைச் சமய நிறுவனங்கள், பெரிதும் தொடர்புடையனவாக விளங்கி வருகின்றன.

கோயில்களை உண்மையிலேயே சிறந்த சமுதாய நல நற்பணிக் கூடங்கள் என்றே கூறலாம். ஆதலின் தமிழ்நாடு அரசின் பல்வேறு பிற துறைகளைப் போல அறநிலையத்துறையும் மிக்க முதன்மையும், சிறப்பும் வாய்ந்து முன்மாதிரியாகத் திகழ்கிறது.

**திருக்கோயில்கள்:**

இந்துசமய அறநிலையத் துறையானது கடந்த நான்கு ஆண்டுகளில் பலவகைகளில் வளர்ந்து முன்னேற்றம் பெற்றுள்ளது. அறநிலையத்துறையின் பொறுப்பில் 34,230 சமய நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோயில்கள் 32,193: திருமடங்கள் 55: திருமடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கோயில்கள் 55: குறிப்பிட்ட கட்டளைகள் 1,721: அறக்கட்டளைகள் 189: சமணக் கோயில்கள் 17. இந்நிறுவனங்களில் 25,930 நிறுவனங்கள் உதவித்தொகை விதிக்கத்தக்க வருமானம் உடையனவாகும். இவற்றின் ஆண்டு வருமானம் சுமார் ரூ. 18.57 கோடி என மதிப்பிடப்படுகிறது. இத்தொகை, சென்ற ஆண்டு ரூபாய் 17.72 கோடியாக இருந்தது. இவ்வாண்டில் ரூ. 0.85 கோடி உயர்ந்துள்ளது.

**திருக்கோயில் பணியாளர்களுக்குச் சலுகைகள்:**

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 15-7-82-ஆம் நாள் முதல், தொகுதி காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ரூபாய் 100-க்கு மேற்பட்டுச் சம்பளம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் இத்திட்டத்திற்காகப் பெயரளவிலான குறைந்த அளவுத் தொகை ரூ. 25 பிரிமியத் தொகையாகச் செலுத்த வேண்டும். ரூ. 100க்குக் குறைவாகச் சம்பளம் பெறும் பணியாளர்கள் பிரிமியம் ஏதும் செலுத்த வேண்டியது இல்லை, இத்திட்டம் செயலுக்கு வந்த பின்னர், மரணமடைந்த ஆலயப் பணியாளர்கள் குடும்பத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து காப்பீட்டுத் தொகையைப் பெற்று வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி இதுவரை 40 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 5,000 வீதம் இதுவரை ரூ. 2 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் பத்தாயிரம் அல்லது அதற்கு மேல் ஆண்டு வருவாய் பெறும் திருக்கோயில்களில் பத்து ஆண்டுகள் பணியாற்றிய அலுவலகப் பணியாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் அவர் பணியாற்றிய ஒவ்வொரு முழு ஆண்டிற்கும், அரை மாதத்திற்குரிய சம்பளம் வீதம் பணிக்கொடை வழங்கப்படுகிறது. திருக்கோயில் பணியாளர்களுக்கு அவ்வப்போது பஞ்சப்படி அனுமதிக்கப்பட்டு வருகின்றது. நானூறு திருக்கோயில்களில் வருங்கால வைப்பு நிதித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 1-4-81 முதல், பணியாளர்களின் சம்பளம், பஞ்சப்படி முதலிய செலவுகள், ஆண்டு உதவித் தொகை நிர்ணய வருமானத்தில் 30 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும் என்ற வரம்பு 40 சதவீதமாக இருக்க வேண்டும் என்று உயர்த்தப்பட்டுள்ளது.

**திருப்பணி வேலைகள்:**

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத்துறை பலவகைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது. 292 திருக் கோயில்களில் குடமுழுக்குகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. ரூபாய் 12.97 கோடி அளவிற்குத் திருப்பணி நிர்வாக அனுமதி வழங்கப் பெற்றுள்ளது. 1357 திருப்பணி வேலைக்கான மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 114 திருக்கோயில்களுக்கு அரசு மானியம் ரூ. 69 இலட்சம்



எடுத்துள்ளோம். இத்திட்டத்தை அமல் செய்ய ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கிராம நத்தங்களை விரிவான முறையில் நில அளவை செய்ய வேண்டியுள்ளது. இப்பணி 1-5-84 முதல் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத்திட்டம் முழுமையாக முடிந்த 3 வட்டங்களில் எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் செய்யப்படுமேயானால், கிராம நத்தத்திற்குப் பட்டா வழங்கும் பணியையும் புதிய நிலங்களுக்குப் பட்டா வழங்கும் பணியையும் இரண்டு ஆண்டுக் காலவரையறைக்குள் செய்து முடித்து விடலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**திட்டத்தின் பணி முன்னேற்றம் :**

இத்திட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த பரப்பு ஏறக்குறைய 80,000 ச.கி.மீ. ஆகும். அவற்றில் சென்ற மார்ச்சு 84 முடிய 32,022 ச.கி.மீ. கொண்டுள்ள பரப்பளவில் அளவுப்பணி முடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 3581 கிராமங்களில் புதிய பட்டாக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 3101 கிராமங்களுக்குப் புதியதாக அளிக்கப்பட்ட ஆவணங்கள் வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் மாநிலம் தழுவிய மட்டில் ஆய்வும் கருத்தரங்கும் நடத்தி பொதுவாக அப்பகுதிச் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தையும் நிலக்கிழார்கள், பொதுமக்கள் அவர்களது கருத்தையும் விவசாயப் பெருங்குடி மக்களின் கருத்தையும் கேட்டு அவர்களது விருப்பத்திற்கேற்ப எங்கெங்கு மாறுதல்கள் செய்ய முடியுமோ அத்தகைய மாறுதல்களை உடனுக்குடன்செய்து மக்களுக்கு நன்மை செய்வதே இவ்வரசின் நாட்டமாக இருந்து வருகிறது.

இத்திட்டப்பணிக்கென கிராமங்களுக்கு வரும் இத்துறை ஊழியர்களுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் அனுபவித்து வரும் நிலங்களின் அத்துக்களையும், அவர்கள் கைவசம் உள்ள ஆவணங்களையும் காட்டி அவர்களது புலப்பணியைச் செம்மையாகவும் சீராகவும், நன்மையாகவும், உடனடியாகவும் செய்து முடிக்க ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



**ஒருவர் எந்த அளவுக்கு உயர் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டுமோ, அந்த உயர்ந்த கல்வியைக் கற்றுக் கொள்ளும்போதே அவர்கள் உழைக்கும் கல்வியையும் கற்றுக் கொள்ள வேண்டும். தொழிற் கல்வி கற்றுக் கொள்ள வேண்டும்.**


# தோவாளை ஊராட்சி ஒன்றியம் பூதப்பாண்டி

**கன்னியாகுமரி மாவட்டம்**

**தச்சுக்கூடம்** **இறச்சகுளம்**

அன்புடையீர்,

உறுதிக்கும் தரத்திற்கும் உத்தரவாதமானதும் நவ நாகரீக தோற்றமளிப்பதுமான எல்லாவித மரச்சாமான்களும் விலை உயர்ந்த தேக்கு, ஈட்டி, வேங்கை மற்றுள்ள இரகங்களில் சன்மைக்கா பொருத்தியும், குறைந்த விலையில் குறித்த நாளில் செய்து தரப்படும் ஒரே நிறுவனம் ''தச்சு தொழிற்கூடம் இறச்சகுளம்''; வீடுகளுக்கும், பள்ளிகளுக்கும், அலுவலகங்களுக்கும் தேவையான மேஜை, நாற்காலிகள், கட்டில், சோபா செட், அலமேரா மற்றும் கதவு, நிலை, ஜன்னல் முதலியவைகளும் பல வருட அனுபவமுள்ள கைத்தொழில் வினைஞர்களைக் கொண்டு உறுதியான தரமான நேர்த்தியானதுமான குறித்த காலத்தில் வழங்கி வருகிறோம். இங்கு வாங்கும் பொருட்களுக்கு கொட்டேசன் தேவையில்லை.

## சேவையே எமது குறிக்கோள்!

**தங்கள் ஆதரவை என்றும் நாடும்**

**தி. விவேகானந்தம்,**
**ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்,**
**தோவாளை.**

**வே. வெங்கடகிரி, பி.எஸ்ஸி.,**
**கோட்ட வளர்ச்சி அலுவலர்,**
**தனி அலுவலர்,**
**நாகர்கோவில்.**




# சிறப்புக்குரிய செய்தித் துறை

**மாண்புமிகு செய்தி-**
**அறநிலையத்துறை அமைச்சர்**
## திரு. இராம. வீரப்பன்

மக்களுக்கு அரசின் பணிகளை எடுத்துரைக்கும் பணியினைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது செய்திமக்கள் தொடர்புத்துறை. அரசின் திட்டங்களும், பல்வேறு செயற்பாடுகளும் மக்களைச் சரிவரச் சென்றடைவதால்தான் அவை முழுவெற்றியடைகின்றன. மக்களும் அவைகளின் பலன்களைச் சரிவரப் பெற்று, சமுதாயத்தை உயர்த்த முடியும்.

கோடிக்கணக்காகவுள்ளமக்கள் சமுதாயத்தைச் சென்றடைய செய்தித்தாள்கள், திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள திரைப்படப் பிரிவு மாதமிருமுறை செய்தி மலர்களைத் தொகுத்து எல்லாத் திரைப்பட அரங்குகள் மூலமாக வெளியிட்டு வருகிறது. பல்வேறு துறைகளின் சாதனைகளை எடுத்து விளக்குவதாகவும், வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளின் தொகுப்புகளாகவும் இவை திகழ்கின்றன. இவற்றுடன் வளர்ச்சிப் பணிகள் பற்றிய தனி விளக்கப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன. திரையரங்குகள் எட்டாத குக்கிராமங்களுக்குச் சிறு (16 மி.மீ.) திரைப்படக் கருவிகள் மூலமாக இவை காட்டப்படுகின்றன. மாதமொன்றுக்கு இக்கருவிகள் மூலம் 1200 காட்சிகளுக்குக் குறையாமல் படக்காட்சிகள் நடத்தப்பட்டு, பல்லாயிரக்கணக்கானோர் அரசின் சாதனைகளை அறிந்து கொள்ளுகின்றனர்.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியின் மூலம், நடிப்புக் கலை, இயக்குதல், ஒளிப்பதிவு, படத்தொகுப்பு போன்ற கலைத் தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன. இந்த நிறுவனத்தில் பயின்ற பலர், திரைப்படஉலகில் புகழ் மிக்கவர்களாக ஒளிவீசித் திகழ்கிறார்கள். வெளிமாநிலத்து மாணவர்களும் இங்குப் பயில்கிறார்கள். முன்பு 40 பேர் படித்தனர். மாண்புமிகுபுரட்சித் தலைவர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றுக் கொண்டபின், தற்போது 166 மாணவர்கள் பயிற்சி பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள நூலகம் திரைப்படக் கலை மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றது. இத்தகையதொரு நிறுவனத்தை இந்தியாவின் மாநில அரசுகளில் நமது மாநிலந்தான் சிறப்பாக நடத்தி வருகிறது.

அண்மையில் புதிய வண்ணப் படக் கூடம், ஆவணக் காப்பகம் ஒலிச்சாதன அமைப்பு, மாணவர் விடுதி ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

அரசு ஸ்டுடியோவில் மாணவர்கள் படப்பிடிப்புப் பயிற்சி பெற்று வருகிறார்கள். தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் இந்தப் படப்பிடிப்பு அரங்கம் வாடகைக்கு விடப்படுகிறது. மற்ற அரங்குகளைவிட வாடகை குறைவு என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

'கட்சி, மதம், சாதி வித்தியாசமின்றி பெருந்தகைகளின் பிறந்த நாட்கள் கொண்டாடப் பெற வேண்டும்' என்று தமிழகத்தின் தளநாயகர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க, தமிழ்ச் சான்றோர் - நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட வீரர்கள் - அறிஞர்கள் ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களைச் சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் செய்தித் துறை கொண்டாடி வருகிறது.

பாரதியார் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுதும் கொண்டாடியது. தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, தமிழ்த்தென்றல் திரு. வி. க.

With

the best

compliments

from :

**Chandrika Products**

(Manufacturers of Chandrika Ayurvedic Toilet Soap)

Head Office :
**COIMBATORE**

Branch .
**MADRAS**

# வாழ்வளிக்கும் கல்வி



**மாண்புமிகு கல்வி அமைச்சர்**
**திரு. செ. அரங்கநாயகம்**

தேசிய அளவில், சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாட்டுக்கு, கல்வி ஒரு சக்தி வாய்ந்த கருவியாக விளங்குகிறது. எனவே கல்வி வளர்ச்சிக்காக எல்லா நிலைகளிலும் முனைப்புடன் செயலாற்றி வருகிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு.

1984-85-ல் தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் கல்வி மானியத்தின் . கீழ் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 402 கோடியாகும். இது அரசின் மொத்தச் செலவான ரூ. 1946 கோடியில் 21 சதவிகிதம்ஆகும்.1980-81ல் கல்வி மானியத்தின் கீழ் செலவிட்ட தொகை ரூ. 224 கோடி மட்டுமேயாகும். இது இவ்வாண்டுரூபாய் 402 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தொடக்கக் கல்வி :**

14 வயது முடிய அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்க வேண்டும் என்பது அரசியல் சட்டத்தின் கோட்பாடாகும். அதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 6-11 வயதுத் தொகுதியில் 95 சதவிகிதத்தினரையும் 11-14 வயதுத் தொகுதியில் 50 சதவிகிதத்தினரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்பது அனைத்து இந்தியாவிற்கும் மைய அரசு திட்டக்குழு விதித்துள்ள இலக்காகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில்தற்பொழுதே (1983-84) 6-11 வயதுத்தொகுதியினரில் 97.96 சதவிகிதத்தினரும் 11-14 வயதுத் தொகுதியினரில் 69.40 சதவிகிதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (1980-81-ல் பள்ளிகளில் படித்தோர் 6 - 11 வயதுத் தொகுதியில் 94.67 சதவிகிதத்தினரும்,11-14 வயதுத் தொகுதியில் 59.68 சதவிகிதத்தினரும் மட்டுமே ஆவர்). 1983-84-ல் மட்டும் 3.82 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். பெரும் எண்ணிக்கையில் மாணவ மாணவியர் கடந்த இரண்டு ஆண்டுகளில் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளதற்கு 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டமே' காரணமாகும்.

**தொடக்கப் பள்ளிகளில் சத்துணவுத் திட்டம்**

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 9 முடியவுள்ள வயதுத் தொகுதி மாணவ,மாணவியருள் (பெரும்பாலும் 1-5 வகுப்புகளில்' பயில்வோர்)ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்' கீழ் 1982 ஜூலை – செப்டம்பர் முதல் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நாள்தோறும் 34,000-க்கு மேற்பட்ட பள்ளிகளில் மொத்தம் 44 இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் (நாள் தோறும் குழந்தைக்கு 45 காசு செலவில்) சத்துணவு பெற்று வருவது வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாகும். இத்திட்டம் 15-9-'84 முதல் 10-15



அளிக்கப் பெற்றுள்ளது. பிற்பட்டோர் நல வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும், ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள 35 திருக்கோயில்கள் அறநிலையத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ. 7 இலட்சத்து 78 ஆயிரம் அரசு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1097 திருப்பணி வேலைகள் ரூ. 3.14கோடி செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 39 திருக்கோயில்களின் திருப்பணி வேலைகள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. பக்தர்களுக்கும், பயணிகளுக்கும் உரிய வசதிகள் செய்தளிக்கும் முறையில் 58 ஓய்வு விடுதிகளும், 231 குடில்களும் 936 அறைகளும், 103 திருமண மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன.

**அரசு மானியங்கள்:**

1983-84 ஆம் ஆண்டில் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், திருவுருவச் சிலைகள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும் அரசு ரூ. 23 இலட்சம் அனுமதித்துள்ளது. இவ்வாண்டில் மட்டும் 108 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் சிறப்பாக நடத்தப்பெற்றன.

**தங்கரதம்:**

பழனி, திருத்தணி, திருச்செந்தூர், சுவாமிமலை, சமயபுரம், மதுரை, இரத்தினகிரி, திருவேற்காடு, வடபழனி ஆகிய ஒன்பது பெரிய திருக்கோயில்களில் தங்கரதம் செய்யப்பட்டுள்ளன. சென்னை கந்தகோட்டம் திருக்கோயிலில் தங்கரதம் அண்மையில் செய்து வெள்ளோட்டம் நடைபெற்றது.

**இலவசத் திருமணங்கள்:**

இந்து ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை இந்துக்கள் ஆகியோரின் திருமணம் ஒவ்வொன்றிற்கும், அரசின் கொள்கைக்கு இணங்க நிதிவசதி படைத்த கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750 முதல் ரூ. 1,000 வரை செலவிடப்படுகிறது. 15-8-81-லிருந்து இதுவரை ரூ. 7.86 இலட்சம் செலவில் 944 திருமணங்கள் சமயபுரம், திருத்தணி, திருவேற்காடு, திருவாரூர், இரத்தினகிரி, சோளிங்கபுரம், கரூர், பண்ணாரி மற்றும் பல இடங்களில் நடத்தப்பட்டன.

**குறைந்தபட்ச ஊதியம் பெறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு நிதியுதவித் திட்டம்:**

## கவிச்சக்கரவர்த்தி கம்பர்



தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணி புரியும் திருக்கோயில் ஊழியர்கள் பலர் மாதத்திற்குக் குறைந்த பட்சம் ரூபாய் 50 கூட ஊதியம் பெற வகையின்றி அல்லல்படுவது அரசின் கவனத்திற்கு வந்தது, இவ்விதப் பணியாளர்களுக்கு நிதி உதவி செய்ய தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களின் உபரிநிதி மூலதனத்தில் இருந்து ரூ. 1 கோடி ஒதுக்கி, அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தைக்கொண்டு மாதத்திற்கு ரூ. 50-ம், அதற்கும் குறைவாகவும் ஊதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் கடன் முதலான நிதியுதவி வழங்கும் திட்டம் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**நிதி வசதி இன்மையால், ஒருகால பூசை கூட நடைபெறாமல் உள்ள திருக்கோயில்களுக்கு நிதி உதவித் திட்டம்:**

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி, இயற்கையின் சீற்றம் ஆகிய பல்வேறு காரணங்களால் பல திருக்கோயில்கள் வருமான இழப்புக்கு உள்ளாகி, ஒரு கால வழிபாட்டுக்கும் கூட வசதியற்ற நிலையில் உள்ளன. இத்தகைய திருக்கோயில்கள் குறிப்பாக தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் ஆங்காங்கே காணப்படுவது அவ்வப்போது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, இந்நிலையை மாற்றி இத்தகைய திருக்கோயில்களில் குறைந்த பட்ச அளவிலாவது இறைவழிபாடு தொடர்ந்து நடைபெற வகை செய்ய வேண்டிய அவசியத்தைக் கருதி இதற்காக நிதி வசதி படைத்த ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடிக்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தவும், இதனை அதிக வட்டிவிகிதம் கிடைக்கத் தக்க வகையில் முதலீடு செய்தும் அவ்விதம் செய்யப்படும் முதலீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் ஆண்டு வருமானம் சுமார் ரூபாய் அறுபது இலட்சத்தினை வழிபாட்டிற்குச் சிரமமான ஆலயங்களில் ஒருகால பூசை நடைபெறச் செய்ய நிதி உதவி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

**கூட்டு வழிபாடு:**

ஆதி திராவிடர்களுக்கும், ஏனைய இந்து சமய மக்களுக்கும் இடையில் பேதங்களை ஒழித்து ஒற்றுமையை வளர்க்கும் நோக்கத்துடன் தமிழகம் முழுவதிலும் ஐயாயிரத்திற்கும் அதிகமான கோயில்களில் சிறப்புக் கூட்டு வழிபாடும், பொது விருந்தும் நடத்துவதற்கான திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகின்றது. 15-8-81 மற்றும் 15-8-82 அன்று திருவேற்காடு மற்றும் மாங்காட்டில் இச்சிறப்பு மிக்க நிகழ்ச்சியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்துசமய நிறுவனங்களில் சாதி, இன உட்பிரிவு அல்லாது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தற்குரிய வழிவகைகள் ஆராயப் பெற்று அதற்கென அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று அவற்றைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பெற்று வருகின்றன.

**தேரழுந்தூரில் கம்பர் கோட்டம்**

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூரில் நினைவாலயம் அமைக்க 29 ஆண்டுகளுக்குமுன் முன்னாள் ஆளுநர் திரு ஸ்ரீபிரகாசா 10-10-54ல் அடிக்கல் நாட்டி, அதே நிலையில் எந்தவித முன்னேற்றமும் இல்லாது நின்றுவிட்ட திட்டத்தைப் புதுப்பித்து, கம்பர் நினைவைப் போற்றும் வகையில் கோட்டம் அமைக்க அரசு முடிவு செய்தது; முன்னாள் ஆளுநர் அடிக்கல் நாட்டிய அதே இடத்தில் அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோவிலுக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலத்தில் ரூ. 20 இலட்சம் செலவில் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமாக இந்தப் பணியை முடிக்கக் கருதி 18-3-84 அன்று பணி துவங்கப்பட்டது.






**கா**டு நாட்டில் பொருளாதாரத்திலும், மக்களின் நல்வாழ்விலும் மிக முக்கிய மானதொரு பங்கினை வகித்து வருகிறது; ஆகவே அதனைப் பேணிப்பாதுகாத்தல் அவசியம்; அப்பொழுது தான் மனித சமுதாயத்திற்குத் தேவையான மரம், விறகு, பசுந்தழை, உரம், எண்ணெய் பொருட்கள், காகிதம், ரயான், தோல் பதனிடும் மூலப் பொருட்கள் கிடைக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கி வரும் தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில், செய்துள்ள சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் பலப்பல.

**1979-80ஆம் ஆண்டு முதல் 1983-84 வரையிலான காலத்தில், வனத்துறையின் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான, அரசால் செலவிடப்பட்ட தொகை சுமார் 100 கோடி ரூபாய்களாகும். ஆண்டுதோறும் இத் துறையில் திட்டப் பணிகளுக்கான செலவுத் தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டு, மேலும் மேலும், மேம்பாட்டுப் பணிகளை அதிகமாகச் செய்து கொண்டு வருகிறது. மேற்படி இந்தாண்டுக் காலத்தில் அரசிற்கு வரப்பெற்ற வருவாய் சுமார் ரூ. 72 கோடி ஆகும்.**

1976-77ஆம் ஆண்டில் தமிழக வனத்துறையின் கீழிருந்த வனப் பரப்பளவு 20,844 கி.மீட்டராகும். 1984ஆம் ஆண்டில், அதன் பரப்பளவு 22,040 கி. மீட்டராக உயர்ந்துள்ளதைக் காண்கையில், கடந்த எட்டு ஆண்டுகளில், வனத்துறையில் ஏற்பட்டுள்ள சீரமைப்புப் பணியினால் சுமார் 1600 கி.மீ. வனப் பரப்பளவு உயர்ந்துள்ளது. மேலும் கடந்த சில ஆண்டுகளாக தமிழக அரசு எடுத்துள்ள முடிவுகளின் காரணமாக, வனத்துறை நிலங்கள் மற்றைய பணிகளுக்கு அல்லது மற்றைய துறைகளுக்கு மாற்றுவது அல்லது இயற்கைக் காடுகளை அழித்து, புது வனத் தோட்டங்கள் அமைப்பது ஆகியவை அறவே நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், அதே சமயத்தில் அரசு தரிசு நிலங்கள், புகை வண்டி செல்லும் சாலைகள், சாலையோரங்கள் ஆகிய இடங்களில் மரங்களை நட்டு வளர்க்கும் பணி மும்முரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வன வளப் பாதுகாப்பிற்காக 1882 தமிழ்நாடு வனச்சட்டம், 1949 தமிழ்நாடு தனியார்காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1955 தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் இவைகளின் அடிப்படையில் இயற்றப்பட்டுள்ள விதிகள் ஆகியவைகளில் அரசு செய்துள்ள சில பல மாறுதல்கள் வருமாறு:

சில மர வகைகள் ''ஷெட்யூல் இனத்தில்'' சேர்த்தல், ஷெட்யூல் இன மரவகை வனக் குற்றங்களில், தண்டனை கடுமையாக ஆக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறைப் படுத்துதலும் மற்றும் அபராதத் தொகையும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு காடுகளை ஆக்கிரமிப்பு செய்துள்ளோரை வெளியேற்றுதல்; மாவட்டக் குழுக்களை அமைத்து, தனியார் காடுகள் மற்றும் மலைப் பகுதிகளில் மரம் வெட்டும் கோரிக்கை மனுக்களைப் பரிசீலித்தல்; தனியார் மற்றும் மலைப்பகுதிக் காடுகளில் மரங்களை வெட்டி, புதிய மரங்களை நட்டு வளர்ப்பதற்கான வைப்புத் தொகையினை அதிகப்படுத்துதல்; தனியார் மற்றும் மலைப் பகுதிக் காடுகளில் மரங்களைத்திருட்டுத்தனமாக வெட்டுவோர்க்குக் கடுமையான தண்டனை அளித்தல்; மரங்கள் முதிர்ச்சியடைந்தவை என்பதைக் கோடிட்டுக் காட்டுதல்; தனியார் காடுகள் மற்றும் மலைப்பகுதிக் காடுகளில் மரம் வெட்டுதலைச் செயல்திட்டம் மூலம் செயல் படுத்துதல்"

சட்டம் மற்றும் விதிகளைத் திருத்தினால் போதுமா? போதாது. அவைகளைச் செவ்வனே செயல்படுத்துவதற்கேற்ப 12 வனப்பாதுகாப்புப் படைகள் பல முக்கிமான இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்தில் பல இடங்களில், 83 வன சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டு, அவற்றின் மூலமாக வனக்குற்றங்கள் நிகழாவண்ணம் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

வனக்குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தீவிரமும், அதே சமயத்தில் பணியாளர்களுக்குப் பாதுகாப்புத் தேவையினைக் கருத்தில் கொண்டு நவீன வசதிகள் குறிப்பாக துப்பாக்கி, தொலைபேசி, வாகன வசதி வழங்கப்பட்டுள்ளன.



பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமையால், காட்டுப் பகுதிகளில் வனக் குற்றங்கள் நிகழ்வது தடுக்கப்பட்டு வருகின்றன.

வனத்துறை மேற்கொண்டுள்ள சில நிர்வாக மேம்பாட்டுப் பணிகள் வருமாறு;

அரசு ரப்பர் தோட்டத்திலை (Government Rubber Plantation) கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு வட்டம் என இரு வட்டங்களாகப் பிரித்தல், கோட்ட அதிகாரிகளின் பணிகளை வட்டார அதிகாரிகள் செவ்வையாகக் கண்காணித்திட, வேலூர், திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமை இடங்களாகக் கொண்டு புதிய வட்டங்கள் ஏற்படுத்துதல், கோயம்புத்தூர் மாவட்டம் கோவை மற்றும் பெரியார் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக கோயம்புத்தூர் வடக்கு, மத்திய கோட்டங்கள், கோயம்புத்தூர், சத்திய மங்கலம், ஈரோடு, என மூன்று கோட்டங்களாகப் புதியதாகச் சீரமைத்தல்; மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கப்பகுதிகளில் தர்மபுரியைத் தலைமை இடமாகக் கொண்டு மேலும் ஒரு மண்வளப் பாதுகாப்புக் கோட்டம் அனுமதித்தல்; தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்ற மரங்களின் விலையில் 5 சதவீதம் என்ற அளவில் நிர்வாகச் செலவுகள் வசூலித்தல்; சேலத்தில் ரூ. 9.82 லட்சம் செலவில் பாதுகாப்பான சந்தன மரக்கிடங்கு கட்ட அனுமதித்தல்; திருப்பத்தூருக்கு அருகே சந்தனத்தைலத் தொழிற்சாலை ஒன்று அமைத்தல்.

புதிய இரண்டு வனக் கோட்டங்களை ஏற்படுத்தி, தென் ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களில் முக்கியமலைப் பகுதியாவ கல்ராயன் மலையை மேம்படுத்துவதற்கான திட்டம் தீட்டப் பட்டுள்ளது.

விலை மதிப்புள்ள மரவகைகளைக் (சந்தன மரம் முதலியன) கடத்துபவர்கள் சென்னையிலிருந்து செயல்பட்டாலும்கூட, சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் அவர்களைக் கண்காணிப்பதற்கு வனத்துறை எவ்வித விசேட அமைப்பினையும் பெறவில்லை. இக்குறையினைப் போக்கிட வனப்பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

## வனச் செல்வம் பெருகும் வழி

**1980**ல் மத்திய வனவாரியம் தன்னுடைய பரிந்துரையில், வனம் சம்பந்தப்பட்ட பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் முறையை, ஐந்து வருடங்களில் படிப்படியாகக் குறைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

பல மாநிலங்கள் ஒப்பந்தக்காரர்கள் முறையை அடியோடு ஒழித்துவிட்டன. சில மாநிலங்கள் ஓரளவுதான் ஒப்பந்தக்காரர்கள் முறையை நீக்கியுள்ளன.

இதுபற்றித் தலைமை வனப்பாதுகாவலரும், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகமும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

''தமிழ்நாட்டு வனவேலைகளை பொறுத்த ... படியாக எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கொள்கைப்படி சிறு காடுபடு பொருட்கள் சேமிக்கும் வேலை, லாம்ப்ஸ் (LAMPS) மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தமிழ்நாடு வன விதித் தொகுப்புப் பிரிவு 130ஏ-யின்படி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் விறகு கூப்புகளும் முடிந்தவரை கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளன. ஒதுக்குக் காட்டில் விறகு கூப்புகளை வெட்டுவது நிறுத்தப்பட்டாலும் சில விறகு கூப்புகளை வெட்ட, துறையே நடவடிக்கை எடுத்துள்ளது. 1981ஆம் ஆண்டிலிருந்து மூங்கில் கூப்புகளை பொது ஏலம் விடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த மூங்கில் கூப்புகள் துறை மூலம் அல்லது அம் மூங்கில்கள் தேவைப்படும் காகிதத் தொழிற்சாலைகள் மூலம் தேவைக்காக வெட்டி எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

''துறை மூலம் வனவேலைகளைச் செய்வது, ஊக்கம் தருவதாக உள்ளது. துறைக்கு இதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும். மேலும் விறகு கூப்புகள் வெட்டுவது வன இயல்படி நடந்து வருகிறது. ஒப்பந்தக்காரர்கள் மூலம் விறகு கூப்புகளை வெட்ட அனுமதித்தால், அவர்கள் ஒப்பந்தத்தை மீறி விறகு கூப்புகளுக்கு வெளியே உள்ள மரங்களையும் வெட்டுவார்கள்.'

''துறை மூலம் வெட்டுவதால் மேற்படி கள்ள வெட்டுக்களும், ஒப்பந்த மீறல்களும் தடுக்கப்படுகின்றன. மேலும் துறை மூலம் மூங்கில் கூப்புகள் வெட்டப்படுவதால், ஒப்பந்தக்காரர்கள் மூலம் அதிக மூங்கில்கள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஒப்பந்தக்காரர்களை நீக்குவதன் மூலம் வனச் செல்வங்கள் அழிவது குறைக்கப்படுகிறது.''

வயது வரையுள்ள மாணவர்களுக்கும் விரிவாக்கப்படும்.

**தொடக்கக் கல்வி வளர்ச்சிக்கான பிற நடவடிக்கைகள் :**

தொடக்கப் பள்ளிகளில் 1-3 வகுப்புகளில் பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ. ஒரு கோடி செலவில் இலவசமாய்ப் பாட நூல்கள் வழங்கப்படுகின்றன.

1-3 வகுப்புகளில் யாரும் தோல்வியுறச் செய்யப்படுவதில்லை, இச்சீர்திருத்தம் 1977-78 முதல் அமலாக்கப்பட்டது. தொடக்கப் பள்ளியில் சேரும் (6-11 வயது) மாணவ மாணவியர் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்று விடும் நிலைமை அண்மை ஆண்டுகளில் சீர்பட்டு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறு நின்று விடுவோர் தொகை1977-78-ல் 40 சதவிகிதம் ஆக இருந்தது.

1982-83-ல் அது 29 சதவிகிதமாகக் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பள்ளி செல்லும் மனப்பான்மையைப் பிஞ்சுப் பருவத்திலேயே புகட்டுவதற்காக தமிழகத்தில் கிராமப்புறங்களிலுள்ள 4343 குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி (இளஞ்சிறார் பள்ளி) வகுப்பு தொடங்க அரசு அண்மையில் ஏற்பளித்துள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் பெரும்பாலானவை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அவற்றில் பணி செய்யும் சுமார் 95,000 ஆசிரியர்களும் யாதொரு இடர்ப்பாடும் இன்றி கல்விப் பணியில் ஆர்வத்தோடு பணி செய்ய வழிவகுத்து அவர்கள் அனைவரும் 1-6-81 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் 5154-க்கு, கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூ. 33 கோடி செலவில் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**உயர்நிலைப் பள்ளிக் கல்வி வசதி**

1977-78 முதல் இதுவரை மொத்தம் 525 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. உயர்நிலைப்பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைத்தல், இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட உந்து வண்டிகள் தருதல், கட்டடங்கள் ஆகிய வகைகளில் அரசு, ஆண்டுதோறும் நிதிநிலை இடந்தரும் அளவுக்குச் செலவிட்டு வருகிறது.



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981-82 முதல் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 6-10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் 1 மணி நேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 37,000 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இந்தச் சிறப்புப் பயிற்சித் திட்டம் 1982-83 முதல் 300 மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இது இவ்வரசு செயல்படுத்தியுள்ள முற்றிலும் புதிய சிறப்புத் திட்டமாகும்.

பள்ளி மாணவர்களுக்கு மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்கள் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மூலம் தயாரித்து வழங்கப்படுகின்றன. பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் மாணவர்கள் எளிதில் பெறும் வகையில் பள்ளிதோறும் கூட்டுறவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. **எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பாடம் பாடமாக எழுதித் தேர்ச்சி பெறும் கம்பார்ட்மெண்டல் முறையை இவ்வரசு 1978 முதல் அமலாக்கி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது. 1978-79 முதல் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அமலாக்கப்பட்டுள்ளது.**

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி :**

1978-79-ல் புதிதாகத் தொடங்கிய "+2, அதாவது மேல்நிலைப் பள்ளிக் கல்வியை பள்ளிகளிலேயே படித்தல் வேண்டும் என்ற இவ்வரசின் சீரிய முடிவினால் எஸ். எஸ். எல்.சிக்கு மேலான உயர்கல்வி பயிலும் வசதி தற்போது ஆயிரக்கணக்கான கிராமப்புற மையங்களிலும் கிட்டியுள்ளது. முன்னர் புகுமுக வகுப்பு பயிலும் வசதி சுமார் 188 மையங்களில்தான் இருந்தது. இப்பொழுதோ, மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் 1400க்கு மேற்பட்ட பள்ளிகளில் உள்ளன. இவற்றில் சுமார் 1000 மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடங்கள் கற்றுத்தரப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளிகளில் 1983-84ல் பயின்று வந்த 3.02 இலட்சம் மாணவர்களில் 57,000 பேர் தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர் (இந்தியாவனைத்திலும் மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற்கல்வி பயின்று வந்தவர்கள் எண்ணிக்கை 1982-83ல் 85,000 மட்டுமேயாகும்) **அனைத்து மாநிலங்களிலும் மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட வகுப்புகளின் எண்ணிக்கையிலும் தரத்திலும் தமிழ்நாடு முன்னோடியாக இருக்கிறது.** மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்களைப் பயின்று வெளி வரும் 1300 மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடக் கட்டடங்கள் கட்ட ரூ. 12 கோடி அளவிலும், ஆய்வுக்கூடத் தளவாடங்கள் வாங்க ரூ. 6 கோடி அளவிலும் ஆன பெருந்தொகைகளை இவ்வரசு செலவிட்டு அறிவியல் கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் பணி செய்யும் 'உட்படுத்தப்பட்ட' ஆசிரியர்கள் சுமார் 4,000 பேரும் பயன் அடையும் விதத்தில் 10 மாதச் சான்றிதழ்ப் பயிற்சி ஒன்றை நடத்தி அவர்கள் முழுத்தகுதி பெற்ற மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர்களையொப்பப் பணி நலன்களை அடையச் செய்யும் திட்டம் 1983-84 முதல் செயல்படுகிறது.

மனநிறைவு கொண்ட ஆசிரியர் சமுதாயத்தின் முழு ஒத்துழைப்புடன் தான் கல்வி சிறப்பாக அமைய முடியும் என்பதை அறிந்து ஆசிரியர்களுக்கு இவ்வரசு அண்மை ஆண்டுகளில் வழங்கியுள்ள முதன்மை வாய்ந்த நன்மைகளில் சில.

ஆண்டுக்கு 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு.

20 ஆண்டுப் பணிக்குச்சிறப்பு நிலை.

இளநிலை ஆசிரியர்கள் அனைவரும் படிப்படியாக இடைநிலை ஆசிரியர்களாக உயர்வு பெற வசதி.

ஆசிரியர்கள் குறைகளை உடனடியாகத்தீர்க்க, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் குழுக்கள்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு.

தனியார் பள்ளி ஆசிரியர்களும், பிற பணியாளர்களும் பணியிலிருக்கும் பொழுதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்தால் அவர்கள் மகன்/மகள்/மனைவி, கணவன் ஆகியோருக்கு கருணை அடிப்படையில், (வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி) தனியார் பள்ளிகளில் நியமனம் செய்து கொள்ளும் சலுகை அண்மையில் தரப்பட்டுள்ளது.

மைனாரிட்டிகள் அல்லாத தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்யும் பொழுது ஆதி-திராவிடர்களுக்கு 18 சதவிகிதம் பிற்பட்டோருக்கு 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்என்று அரசு ஆணையிட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய சலுகைகள் அண்மை ஆண்டுகளில் மிகத் தாராளமாக்கப்பட்டுள்ளன.

1981 மக்கள் தொகைக்கணிப் பின்படி தமிழ்நாட்டின் 4.83 கோடி மக்களில் 2.21 கோடி பேர்களே எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர். எழுத்தறிவு அற்றோர் எண்ணிக்கை 2.62 கோடியாகும். அவர்கள் 54 சதவிகிதம் ஆவர். எழுத்தறிவற்றோருக்கு எழுத்தறிவிக்கும் பணிக்கு கடந்த சில ஆண்டுகளாகத்தான் முதன்மை தரப்பட்டு வருகிறது. 1976-77-ல் முதியோர் கல்விக்கு ரூ. 11 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுதோ ஆண்டுக்கு ரூ. 3 கோடிக்கு மேலே நிதி ஒதுக்கப்படுகிறது. அண்மை



ஆண்டுகளில் 16 இலட்சம் பேருக்கு மேல் முதியோர் கல்வி அளிக்கப்பட்டது. 1983-84ல் செயல்பட்ட முதியோர் கல்வி மையங்கள் எண்ணிக்கை 17,000 ஆகும். பயிலுவோர் 5.50 இலட்சம் பேர். (3.55 இலட்சம், மகளிர் உட்பட).

முறையான பள்ளிகளில் பயில இயலாத மாணவ, மாணவியருக்காக கிராமப்புறங்களில் பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1000-க்கு மேல் நடைபெற்று வருகின்றன. அவற்றில் 6-14வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் ஆண்டுதோறும் 30000-க்குமேலானவர்கள் கல்வி பெற்று வருகின்றனர்.

**வயது வந்தோர் கல்வி மையங்களில் 1982-83-ல் மகளிரைச் சேர்த்ததில் சிறப்பாக சாதனை புரிந்ததற்காக இம்மாநிலத்திற்கு மைய அரசு விருதாகிய ரூ. 25 இலட்சம் கிடைத்துள்ளது.**

**புதிய பல்கலைக் கழகங்கள்:**

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அண்மை ஆண்டுகளில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும். அண்ணா பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகியவை இவ்வரசின் முனைப்பான முயற்சிகளின் பயனாக நிறுவப்பட்டவை ஆகும். பெண்களுக்கு உயர்கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற சீரிய நோக்கத்தில் அண்மையில் கோடைக்கானலில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்று அன்னை தெரஸா அவர்களின் பெயரால் தொடங்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளிலிருந்து 1978-79 முதல் புகுமுக வகுப்பு நீங்கிய பின்னர் கல்லூரிக் கல்வியின் தர உயர்வுக்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்பொழுதுள்ள கலைக் கல்லூரிகள் 187 ஆகும். அவற்றில் 2 இலட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஆண்டுதோறும் புதிய பட்டப் படிப்பு வகுப்புகளும், பட்டமேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டு வருகின்றன. கல்லூரி ஆசிரியர்கள் நலன் கருதிப் பல்கலைக் கழக மானியக் குழுச் சம்பள விகிதங்கள் அமலாக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட தகுதி பெற்ற பயிற்றுநர் மற்றும் விளக்குநர்களுக்கு உதவிப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வும், பத்தாண்டுப் பணி முடித்த உதவிப் பேராசிரியர்களுக்குப்பேராசிரியர்களாகப் பதவி உயர்வும் தரப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் எம். பில் (M. Phil) படிப்புக்காக 626 பேர்களும் பி.எச்டி (Phd.) படிப்புக்காக 35பேரும் அனுப்பப்பட்டனர். தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாகச்சம்பளம், பட்டுவாடா செய்யும் முறை 1.4-80 முதல் செயல்படுகிறது.

**சட்டக்கல்லூரி:**

கோயம்புத்தூரில் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக இவ்வரசு புதிதாகத்தொடங்கிய 2 சட்டக் கல்லூரிகள் உட்பட இப்பொழுது மொத்தம் 4 சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் யோசனைக்கேற்ப இம்மாநிலத்திலுள்ள சட்டக் கல்லூரிகளில் 1983-84 முதல் ஐந்தாண்டு (மேல் நிலைப் பள்ளிப் படிப்பில் தேறிய பின் 5 ஆண்டு) சட்டப் படிப்பு முறை புகுத்தப்பட்டுள்ளது. 1983-84-ல் சட்டக் கல்லூரி ஒவ்வொன்றிலும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களில் சுமார் பாதிப் பேர் இந்த புதிய 5ஆண்டு சட்டப் படிப்பு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**தொழில் நுட்பக்கல்வி:**

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் இடைவிடாத நாட்டம் செலுத்த வேண்டியதை வலயுறுத்துவதற்காக தலைமைச் செயலகக் கல்வித் துறையின் பெயர் 1983 மார்ச் மாதத்தில் 'கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறை' என்று மாற்றியமைக்கப்பட்டது. 'அறிவியல் தொழில்நுட்பவியல் மாநில மன்றம்' ஒன்றை அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

# இருள் நீக்கும் பிள்ளைகள்

**ஒவ்வொரு பள்ளியிலும் நுழையும் பிள்ளைகள் கல்வி கற்று மருத்துவர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் நிர்வாக நிபுணர்களாகவும் மாறி வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும். அந்தப் பிள்ளைகளின் மூலம் தான் நமது நாட்டிலுள்ள இருள் நீக்கப்படும். கஷ்ட நஷ்டங்கள் துடைக்கப்படும்.**



**பேரறிஞர் அண்ணா**

தொழில் நுட்பக் கல்விக்காக அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பரில் அமைக்கப் பட்டது. கடந்த 6 ஆண்டுகளில் பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) 37 புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள தொழில்கல்வி நிலையங்களிலும் தேவைக்கேற்பப் பல்வேறு பட்டயப் படிப்புகளும் பட்டப்படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன.

அரசுக்கு தொடராச்செலவோ, தொடரும் செலவோ எப்பொழுதும் ஏற்படாத வகையில், தனியார் பாலிடெக்னிக்குகளை தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனுமதிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. அந்த தனியார் பாலிடெக்னிக்குகள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்க அத்திட்டம் வழிவகை செய்கிறது. அந்நிபந்தனைகளில் சில முக்கியமான அம்சங்கள் வருமாறு:

போதுமான நிலத்தை தனியார் நிர்வாகம் தர வேண்டும். ரொக்க வைப்புத் தொகையான ரூ. 10 இலட்சம் வைப்புத் தொகை ஏற்படுத்த வேண்டும். மாணவர்களைச் சேர்ப்பது அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டுச் செய்யப்பட வேண்டும். சேரும் மாணவர்களிடம் எத்தகைய கட்டணமும் (Capitation Fee ) வசூலிக்கக் கூடாது. நிபந்தனைகள் மீறப்பட்டால் அந்த பாலிடெக்னிக்குகளை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தெரிவிக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் தனியார் பாலிடெக்னிக்குகளைத் தொடங்க பல நிருவாகங்கள் முன் வந்துள்ளன.

சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் தொழில் நுட்பவியல் மையத்தையும், ரூ. 1.59 கோடி செலவில் 'கோள்கள் இயங்கும் காட்சி' நிலையத்தையும் (பிளானிடேரியம்) அமைக்க அரசு ஏற்பு வழங்கியுள்ளது. திரு சி. கே. பிர்லா வழங்கியுள்ள நிதி உதவியைக் கொண்டு இது அமைக்கப்படும். இந்த பிளானிடேரியத்துக்கு 'பிர்லா பிளானிடேரியம்' என்று பெயரிடப்படும். பிர்லா குடும்பத்தினரில் ஒருவரோ அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவரோ இம்மைய ஆளுநர் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படுவர்.

**விளையாட்டும் இளைஞர் நலனும்**

விளையாட்டு மற்றும் இளைஞர் நலனுக்காக 1979 செப்டம்பரில் புதிதாக ஒரு துறை அமைக்கப்பட்டது. சென்னை, கோயம்புத்தூர், அண்ணாமலை நகர் ஆகிய மூன்று இடங்களில் விளையாட்டுப் பள்ளிகளும், கோயம்புத்தூரில் மாணவியர் விளையாட்டுப் பள்ளி ஒன்றும், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் விளையாட்டு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1983-84-ஆம் ஆண்டில் விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதி வசதிகள் மேல்நிலைப் பள்ளி வகுப்பு நிலைக்கும் விரிவாக்கப்பட்டன. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப்பள்ளி, சென்னை மற்றும் மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் இவ்வசதி அளிக்கப்படும். அண்மையில் விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், பள்ளி கல்லூரிகளில் பயிலாத இளைஞர்கள் ஆகியோர்களுடைய விளையாட்டுத் திறனைப் பேணி வளர்ப்பதற்கு இப்புதிய துறை பல்வேறு முனைப்பான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

விளையாட்டில் ஆர்வம் மிக்க இளஞ்சிறார்களை பாலர் பள்ளி நிலையிலேயே தெரிந்தெடுத்து அவர்களுடைய விளையாட்டுத் திறனைப் பேணி வளர்க்கும் திட்டம் ஒன்றையும் விளையாட்டுத்துறை செயல்படுத்தி வருகிறது.

பள்ளிகளில் சாரண, சாரணியர் இயக்கத்தைத் தமிழக அரசு வெகுவாக ஊக்குவித்து வருகிறது. இந்தியா அனைத்திலும் உள்ள சாரண சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கினர் தமிழகத்தில் உள்ளனர். சாரண சாரணியர் இயக்கத்தில் தலைசிறந்த விருது தமிழக முதல்வருக்கு 1982ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. தேசிய பணித் திட்டம் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் மேல்நிலைப் பள்ளி வகுப்பு நிலையிலும் அமலாக்கப் படுகிறது. 1983-84-ல் மேல் நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்கள் 20,000 பேர் தேசியப் பணித் திட்டத்தில் பங்கு பெற்றனர்.

**தமிழ் வளர்ச்சி**

தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு புதிய திட்டங்களை இவ்வரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. 15-9-'81-ல் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கும் பணி நடந்து வருகிறது. சிறந்த தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கும், சிறந்த பிற மொழி நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கும் ஆன மொழி பெயர்ப்புத் திட்டம்; பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழ் ஆராய்ச்சியையும் ஊக்குவிப்பதற்காக மானியம் தரும் திட்டம், வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரும் திட்டம், ஓலைச் சுவடிகளை சேகரித்துப் பேணிப் பாதுகாத்து அச்சிட்டு வெளியிடும் திட்டம் ஆகியவை செவ்வனே நடைபெற்று வருகின்றன. தமிழ்க் கவிஞர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு அரசு தக்க விருதுகளையும், பாராட்டுக்களையும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. அரசுத் துறைகள் அனைத்தும் தமிழில் திறம்படச் செயல்படச் செய்வதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று 1981-82லிருந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது.

ஆக, பல்வேறு நிலைக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்; கல்வி வசதிகளைப் பரவலாக்குதல்; தொடக்கப் பள்ளி வகுப்புக் குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் சத்துணவு; அனைத்து நிலைகளிலும் கல்வித் தர உயர்வு; ஆசிரியர்கள் பணி நிலை மேம்பாடு; மாணவர்களுக்கான பல சலுகைகள்; விளையாட்டு, இளைஞர் நல வளர்ச்சிக்கான நடவடிக்கைகள்; தமிழ் வளர்ச்சிப் பணிகள் ஆகிய அனைத்து முனைகளிலும் கல்வி வளர்ச்சிக்குத் தமிழக அரசு அண்மை ஆண்டுகளில் ஆற்றியுள்ள பணி மிகச் சிறப்பானதாகும்.



# வேளாண்மையில் வியத்தகு சாதனைகள்

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**

**டாக்டர் கா. காளிமுத்து**



தமிழகத்தில் 1980-81 முதல் செயலாற்றப்பட்டு வரும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு விவசாயப் பணிகளுக்காக வேளாண்மைத் துறைக்கு ரூ. 8,074.14 இலட்சம் ஒதுக்கப் பட்டு, சிறப்பான பல செயல் திட்டங்களில் சாதனைகள் பல புரிந்துள்ளது மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு.

சென்ற மூன்றாண்டுகளில் தமிழகம் கடுமையான வறட்சியாலும், அண்மையில் வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இருந்தும் உழவர் பெருமக்களின் தளராத நம்பிக்கையினாலும், உழைப்பாலும் வேளாண்மைத்துறை நிறைவேற்றிய சீரிய பல உற்பத்தித் திட்டங்களினாலும் உணவு உற்பத்தி தமிழகத்தில் உன்னத நிலையில் உள்ளது.

ஐந்தாம் திட்டகால இறுதியில் அதாவது 1979-80ஆம் ஆண்டில், அரிசி உற்பத்தி, என்றும் இல்லாத அளவு 58 இலட்சம் மெட்ரிக் டன்களை அடைந்து புதிய சாதனையைப் புரிந்துள்ளது. அந்த ஆண்டு சுமார் 50,000 டன் அரிசி முதல் முறையாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது.

1980-81ஆம் ஆண்டில், 66,000 பேல் பருத்தி தமிழகத்திலிருந்து சோவியத் யூனியன், பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1981-82 தவிர அடுத்து வந்த ஆண்டுகள் வறட்சியாலும், வெள்ளத்தாலும் தாக்கப்பட்ட போதிலும், வேளாண்மைத்துறை, உற்பத்தி வீழ்ந்து விடாமல் ஒருநிலைப்படுத்தி, மாநிலத்தின் உணவு நிலையைக் கட்டிக்காக்கும் அளவுக்குச் செயல் பட்டது என்பது பெருமிதத்துக்குரியது.

**விதைகளும், விதை சுத்திகரிப்பும், இடுபொருள் விநியோகமும்**

வேளாண்மை உற்பத்தி உதவியாகத் தரமான விதைகளைப் பெருக்க 46 அரசு விதைப்பண்ணைகள் தற்பொழுது தமிழகத்தில் செயல்படுகின்றன. 13 விதை சுத்திகரிப்பு நிலையங்களும் தமிழகம் முழுவதும் தரமான வித்துக்கு வழிகோலுகின்றன.

அமோக விளைச்சலை அள்ளித் தரும் ரகங்களை அதிக அளவு நிலப்பரப்பில் பயிரிட ஊக்குவிக்க, தரமான வித்துக்களும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் அரசு வேளாண்மைக் கிடங்குகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கும், அரிசன விவசாயிகளுக்கும் விதைகள் மற்றும் பூச்சி மருந்துகள் 25% முதல் 50% வரை மானிய விலையில் கொடுக்கப்பட்டன. கடந்த 1983-84 ஆம் ஆண்டில் மற்ற ஆண்டுகளைவிட இரண்டு மடங்கு நெல் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன.

1983-84ஆம் ஆண்டு முன்பருவம் மற்றும் பின்பருவம் இடுபொருள் இருவார விழாக்கள் மாநிலம் முழுவதும் செயலாற்றப் பட்டு ரூ. 36 இலட்சம் மதிப்புள்ள புதிய உயர் விளைச்சல் தரும் நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகள் உழவர் பெருமக்களுக்கு இலவசமாக




# தொழில் வளத்தால் எழில் வளர்க்கும் தமிழகம்

தொழில் வளர்ச்சியில் ஈடு இணையற்ற முறையில் விளங்கி வருகிறது மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு.

தமிழகத்தைத் தொழில்மயமாக்கு வதற்குப் புரட்சித் தலைவர் பெரும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார். மின்அணுத் தொழிலிலும் தீவிரமான அக்கறை காட்டி வருகிறார். அந்த அக்கறையின் விளைவுதான் தமிழ்நாடு மின் அணு நிறுவனத்தின் தோற்றம்.

தமிழ்நாட்டில் மின்அணுத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் தூண்டுகோலாக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) 1980-81ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

**மின்னணு கடிகாரத் தொழிற்சாலை**

ஜப்பானிலுள்ள ஹிட்டாச்சி நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் மின்னணுக் கைக்கடிகாரங்கள் சென்னையில் தயாரிக்கப் படுகின்றன. எச். எம். டி. நிறுவனம் மற்றும் அரசுக்குச் சொந்தமான மின்னணுக் கைக்கடிகாரங்கள் தயாரிக்க உரிமம் பெற்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் சேர்த்து ஒப்பிடும்பொழுது எல்காட்டின் இந்தச் சாதனை ஒரு முன்னோடியாகும்.

**சர்க்கரைத் தொழில்**

தமிழகத்தில் மொத்தம் 22 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 10 கூட்டுறவுத் துறையையும் 3 பொதுத் துறையையும் சார்ந்தவை. ஒன்று மைய அரசின் நேரடி மேற்பார்வையிலும் எஞ்சிய 8 ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.75 லட்சம் எக்டேர் கரும்புப் பகுதியிலிருந்து 190 இலட்சம் டன் கரும்பு உற்பத்தியாகிறது.

கரும்பு விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கொடுக்கும் வண்ணம் மைய அரசு கரும்புக்கு டன்னுக்கு ரூ. 135 என்று விலை நிர்ணயித்த போதிலும் இவ்வரசு, டன் ஒன்றுக்கு ரூ.160 வீதம் விலை நிர்ணயித்துள்ளது. விவசாயிகளுக்கு அரசு அளித்து வரும் ஊக்கத்தின் காரணமாக 1979-80-ல் 3.67 இலட்சம் டன் அளவில் இருந்த சர்க்கரை உற்பத்தி 1982-83ல் 6.51இலட்சம் டன்னை எட்டியது. சர்க்கரை கட்டுமானத்திலும் உயர்வு காணப் படுகிறது.

## தமிழ்நாடு செய்தித்தாள் காகிதம் தயாரிப்பு நிறுவனம்

சர்க்கரை ஆலைகளில் எரிக்கப்படும் கரும்புச் சக்கையை மூலம் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுதுதாள் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் ஒரு சிறப்பான திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு தமிழக அரசு ''தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை''நிறுவியுள்ளது. திருச்சி மாவட்டத்தில் தொழிலில் பின் தங்கிய பகுதியான கரூர் தாலுக்காவிலுள்ள புகலூர் கிராமத்தில் இந்த ஆலை நிறுவப் பட்டு வருகிறது. இது ரூ. 200 கோடி மூலதனமாகக் கொண்ட பெரிய திட்டமாகும். திட்ட மதிப்பீட்டில் பாதியளவு பணத்தை உலக வங்கி அளிக்கிறது. டி.என்.பி.எல். நிறுவனம் 1979ஆம்ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறுவப்பட்டு, மே மாதத்தில் செயல்படத் துவங்கியது. ஆலை நிறுவும் வேலை 1981 செப்டம்பரில் துவங்கப்பட்டது.

திட்டம் முழுமையாக நிறைவேறும் போது ஆண்டொன்றுக்கு 50,000 டன்கள் செய்தித்

மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர்
**திரு சி. பொன்னையன்**



வழங்கப்பட்டன. புதிய விவசாயக் கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

**வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள்**

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தை மூன்றுமுறை வறட்சியும் ஒரு முறை வெள்ளமும் தாக்கின. இந்த இயற்கைச் சீற்றத்தால், தமிழக விவசாயம் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அரசின் தக்க நிவாரணப்பணிகளால் விளைவு கட்டுக்கடங்கி விளைச்சலில் குறை ஏற்படவில்லை. ஆனால் 1983-84ல் வறட்சியைத் தொடர்ந்து, வெள்ளம் ஏற்பட்டதால் ஓரளவு விளைபொருள் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் இந்த மாறுபாடு ஏற்படாமலிருந்தால் இந்த ஆண்டு மிக நல்ல விளைச்சல் விவசாயிகளுக்கு கிடைத்திருக்கும்.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு அப்பகுதிகளை மேம்பாடு செய்ய ஏற்படுத்தப்பட்ட திட்டம் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம். இதன் செலவை மத்திய, மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

நெல், சிறுதானியங்கள், தென்னை, பருத்தி, எண்ணெய் வித்துக்கள், கரும்பு ஆகியவற்றில் புதிய ரகங்கள் வெளியிடப்பட்டன. உழவர்களின் கஷ்டத்தைப் போக்கிட வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் புதிய பண்ணைக்கருவிகள்மற்றும் பதம் செய்யச் சாதனங்கள் கண்டறியப்பட்டன.

புன்செய்யிலும் 212 ஆயிரம் ஏக்கர் நிருபணங்கள் அமைக்கப்பெற்று, சிறு விவசாயிகள் சாகுபடியில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டது.

1983-84ல் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், ரூ. 74 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், பூச்சி மருந்துகளும், 25% மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ், ரூ. 17 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், பூச்சி மருந்துகளும் மானிய விலையில் வழங்கப்பட்டன.

ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ. 28.50 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், பூச்சி மருந்துகளும் 1983-84ல் மானிய விலையில் வழங்கப்பட்டன.

**வேளாண்மை உற்பத்தி**

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளில் அடுத்தடுத்து இயற்கை இன்னல்களினால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டும தொடர்ந்து உணவுப்பயிர் உற்பத்தித்திறனில் தமிழகம் அகில இந்திய அளவில் தனி இடம் பெற்றுள்ளது.



கரும்பில் பயறு ஊடுபயிர்

| பயிர் | தமிழ் நாடு | அகில இந்தியா |
|---|---|---|
| | (உற்பத்தித்திறன் எக்டேருக்கு கிலோவில்) | |
| அரிசி | 2262 | 2082 |
| சோளம் | 958 | 688 |
| கம்பு | 1112 | 381 |
| ராகி | 1528 | 1047 |
| நிலக்கடலை | 1242 | 797 |
| பயறுவகை | 381 | 385 |

**வேளாண்மைப் பண்ணைக் காடுகள்**

இந்தத் திட்டத்தின்கீழ் சிறு மற்றும் மிகச்சிறுவிவசாயிகளுக்கு 2 கோடி பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

**விவசாய உயர் மட்டக்குழு**

விவசாயிகள் பல்வேறு பிரச்சனைகளை ஆராய்ந்து ஆவன செய்ய அமைச்சர் தகுதியில் உள்ள ஒருவரைத் தலைவராகக் கொண்டு மாவட்டந்தோறும் விவசாயப் பிரதிநிதிகளைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று, 1981ல் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

**பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்**

உலக வங்கி உதவியுடன் ஒரு புதிய விவசாய விரிவாக்கத் திட்டம் தமிழகத்தில் முதற் கட்டமாக 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் செங்கல்பட்டு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய 8 மாவட்டங்களில் செயல்படத் தொடங்கியது. கிராமங்களைப் பகுதிகளாகப் பிரித்து குறிப்பிட்ட பகுதிக்கு ஒரு விரிவாக்கப்பணியாளர் வீதம் காலத்திற்கேற்ற புதிய வேளாண்மைத் தொழில்நுட்பங்களை தொடர்பு மற்றும் சார்பு நிலை விவசாயிகள் தெரிந்து, தங்கள் நிலபுலங்களில் கையாண்டு விளைச்சலைப் பெருக்கிடும் உன்னதத் திட்டம்-பயிற்சி



வழித் தொடர்புத் திட்டம். இத்திட்டம் இப்பொழுது தமிழகம் முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் தீவிரமாகச் செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின் செலவு மதிப்பீடு ரூ. 36.47 கோடி.

**புதிய துறைகள் :**
**எண்ணெய் வித்துத்துறை:**

1980-81ல் இத்துறை அமைக்கப்பட்டது. தென்னை வளர்ச்சிக்கென ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம், தென்னை உற்பத்திப் பெருக்குத் திட்டம், நெட்டை குட்டை தென்னங்கன்று உற்பத்தி மற்றும் விநியோகிக்கும் திட்டம் ஆகிய திட்டங்களால் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டு 41.43 லட்சத்திற்கு மேல் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. அவற்றுள் 35,51,000 நெட்டை தென்னங்கன்றுகளும், 5,92,000 நெட்டை குட்டை தென்னங் கன்றுகளும் ஆகும். தென்னை உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் மத்திய அரசின் உதவியுடன் 3 திட்டங்களும், தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் 5 திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன.

**வேளாண்மை விற்பனைத்துறை :**

தமிழகம் முழுவதும் 13 மாவட்ட விற்பனைக் குழுக்களின் கீழ், 257 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. 102 இடங்களில் தரம் பிரிவு மையங்களும், 36 அக்மார்க் ஆய்வுக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. தரம் பிரிக்கப்படுவதால் நுகர்வோர்களுக்கு நல்ல பொருளும், விவசாயிகளுக்குநல்ல விலையும் கிடைக்கிறது.

**தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர் மேம்பாட்டுத் துறை :**

இத்துறையில் 23 மாபெரும் அரசு பழப்பண்ணைகள் உள்ளன. தரமான பழக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, நியாயமான விலையில் உழவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நகரக் காய்கறித் திட்டம், சென்னை, திருச்சி, வேலூர், மதுரை ஆகிய நகரங்களுக்கு விரிவாக்கப்பட்டு, விதைப் பொட்டலங்களும், பழச்செடிகளும் விநியோகிக்கப்படுகின்றன. தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம், வாழை வளர்ச்சித் திட்டம், மேற்குத்தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை தற்பொழுது செயல்படும் திட்டங்கள் ஆகும்.

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தால் 30,150 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ், பழ உற்பத்தியினை அதிகரிக்க, வாசனைத் திரவியங்கள் பயிரிடும் நிலங்களைக் கூடுதலாக்க மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ. 15.2 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

**வேளாண்மைப்பொறியியல் துறை :**

நிலவளமேம்பாட்டுத் திட்டம், சிறுபாசனத் திட்டம் மற்றும் நீர் வளப் பாதுகாப்புத் திட்டம், பாசன மேம்பாட்டுத் திட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகின்றது. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-83ல்) ரூ. 1079.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1983-84ல் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 287 கசிவு நீர்க்குட்டைகளைக் கட்டியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தனித்திட்டமாக வறட்சிப் பகுதிகளின் கீழ் 2757 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 1983-84ல் மத்திய அரசின் நில நீர் வள அமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் வாங்க ரூ. 99 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.



கோடை உழவு

**விதைச் சான்றுதுறை :**

சென்ற நான்காண்டுகளில் சுமார் 23,000 எக்டேர் பரப்பில் நெற்பயிரும், 2000 எக்டேர் பரப்பில் சிறுதானியப் பயிரும், 10,000 எக்டேர் பரப்பில் வீரிய சிறுதானியப் பயிரும், 10,000 எக்டேர் பரப்பில் பருத்தி வகைகளும், 14,000 எக்டேர் பரப்பில் பயறுவகைகளும் விதைச் சான்றுரைத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதனால் தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விவசாயிகளுக்கு வழங்க முடிந்தது.

**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் :**

குறிப்பிட்ட சில பகுதிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்கென வேளாண்மையிலேயே, பல துறைகள் ஒருங்கிணைந்த திட்டங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால் தீட்டப் பெற்றன. இத்திட்டங்களின் பயனாகவும், விஞ்ஞானிகளின் கடும் உழைப்பாலும் 1977 முதல் 1983 வரை, நெல்லில் ஆறு புதிய இரகங்களும் சிறுதானியங்களில் ஐந்து புதிய இரகங்களும், பயறு வகைகளில் 12 புதிய இரகங்களும், எண்ணெய் வித்துக்களில் 2 புதிய இரகங்களும், பருத்தியில் 5 புதிய இரகங்களும், கரும்பில் 2 புதிய இரகங்களும், தீவனப் பயிர்களில் ஒரு புதிய இரகமும் வெளியிடப்பட்டன. பயிர்ச்சாகுபடி மற்றும் பாதுகாப்பு, விதை நுண்ணியல், பண்ணைக் கருவிகள் மற்றும் பதனஞ்செய்முறைகளிலும் புதிய உத்திகள் கையாளப்படுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டன.

1984-85 ஆம் கல்வியாண்டிலிருந்து மேலுமொரு வேளாண்மைக் கல்லூரியை திருநெல்வேலி மாவட்டம் கிள்ளிகுளத்தில் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.



# நான்காண்டுகளில் நாற்பதாண்டுப் பணிகள்



மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர்
**திரு. ப. குழந்தைவேலு**

முக்கனி போல் முத்தமிழ் இனிக்கும் என்றும், தேன் தித்திக்கும் என்றும், அகில உலகமும் அறிஞர் அண்ணாவை அறியும் என்றும் குறிப்பிட்டுக் கூறத் தேவை இல்லை. அதுபோல் பொன் மனச் செம்மல் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் சீர்மிகு தலைமையில் தமிழகம் பொற்கோலம் பூண்டு, புதியதொரு பொற்காலத்தைப்படைத்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறத் தேவை இல்லை. ஏனெனில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சியில் தமிழகம் பெற்றுள்ள உயர்வும் சிறப்பும் நாடறிந்த உண்மை. இந்த நாடறிந்த உண்மையை ஏட்டில் எழுதிடும் நோக்கோடு தான் இக்கட்டுரையை அளித்துள்ளேன்.

எந்தவொரு திட்டமும் மக்களை நேரடியாக அடைந்து அவர்கள் வாழ்வில் ஏற்றமும் சிறப்பும் அளிக்கும் வகையில் தீட்டப்படவேண்டும் என மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவது உண்டு. நல்லதையே எண்ணி, எண்ணியதை விரைந்து நிறைவேற்றல் வேண்டும் என்பது புரட்சித் தலைவரின் பொன்மனக் கொள்கை.

இக்கொள்கையின் அடிப்படையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரின் சீர்மிகு சிந்தனையில் உதித்த திட்டம் தான் தன்னிறைவுத் திட்டம். தன்னிகர் இல்லாத் தன்னிறைவுத் திட்டம் என்ற அடைமொழியைப் பெற்ற இந்தத்திட்டம், இந்தியாவின் வரலாற்றிலேயே எந்த மாநிலமும் நிறைவேற்றி இராத திட்டம். இந்தத் திட்டம் இன்றைய கிராமப் புறங்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் அமைத்துக் கொடுத்துள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

தமிழகத்தில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும், 1980-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு முடிய மூன்றாண்டு காலத்தில்-மூன்று கட்டங்களாக நிறை வேற்றி முடிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு மட்டும் தமிழ் நாடு அரசு ஏறத்தாழ 225 கோடி ரூபாயை மக்கள் நலனுக்காகச் செலவிட்டுள்ளது. இத்திட்டத்தில் 6762 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டதுடன், 27390 கிலோ மீட்டர் நீள இணைப்புச் சாலைகளும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலிருந்து இடுகாட்டுக்குச் செல்லும் பாதைகளும் இடப்பட்டன. தவிர 29,615 சிறு பாலங்கள், கட்டப்பட்டதுடன், 2446 சிறிய பாசன ஏரிகள் மேம்படுத்தப்பட்டன. ஊரக மருந்தகங்களுக்கான 460 கட்டடங்கள், தாய்சேய் நல நிலையங்களைஅமைக்க1170கட்டடங்கள் தவிர பள்ளிகளுக்கான 5154 கட்டடங்களும் கட்டி, தமிழ்நாடு அரசு மிகக் குறுகிய காலத்தில் பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றைப் படைத்துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தன்னிறைவுத்திட்டத்தை அளித்ததோடு இந்த அரசு தன்னிறைவு கொண்டு விடவில்லை. ஊராட்சிகள் பெற்ற இதே நன்மைகளையும் வசதிகளையும் தமிழகத்தின் பேரூராட்சிகளும், நகராட்சிகளும் அடைய வேண்டும் என்று விரும்பி, தன்னிறைவுத் திட்டத்தைப் பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு.

இதற்கிணங்க,கடந்த 1982ஆம்

ஆண்டு முதல் தன்னிறைவுத் திட்டம், பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் மட்டும் 146 பேரூராட்சிகளில் இந்தத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட ரூ.5 கோடி மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கி உள்ளது. இவை தவிர்த்து முதற்கட்டப்பணிகளில் முடிக்கப்படாமல் எஞ்சி இருந்த பணிகளை முடிக்க ரூ. 101.32 இலட்சத்தை அரசு மானியமாக வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. இப்பெருந்தொகையைக் கொண்டு, பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல், சிறுபாலங்கள் கட்டுதல், வடிகால்கள் அமைத்தல், ஆதிதிராவிடர்களுக்கு இடுகாட்டுப்பாதைகள் அமைத்தல், தெருவிளக்குகள் அமைத்தல், சலவைத் துறைகள் கட்டுதல் ஆகிய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1983-84 ஆம் ஆண்டில் மேலும் 200 பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட தன்னிறைவுத்திட்டத்திற்கு அரசு 5 கோடி ரூபாயை மானியமாக வழங்கி உள்ளது.

நகராட்சிகளைப் பொறுத்த வரையில், நிதி வசதி குறைவாக உள்ள 20 நகராட்சிகள் 1982-83 இல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூபாய் 5 கோடி மானியமாக வழங்கப்பட்டு குடிநீர் வசதி, சாலைகள் மேம்பாடு, பள்ளிக் கட்டடங்கள், தாய்சேய் நல விடுதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 1983-84ஆம் ஆண்டில், இத்திட்ட நிறைவேற்றத்திற்காக 31 நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவைகளுக்குத் தமிழ்நாடு அரசு பெரும்பாலும் வழங்கி உள்ள மானியத் தொகை ரூ.5 கோடி.

சுருக்கமாகச் சொன்னால், இந்தியா விடுதலை பெற்று 34 ஆண்டுகள் முடிந்து இருந்தும், ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் முழுமையாக நிறைவேற்றப்பட்டிராத அடிப்படைத் தேவைகளைத் தீர்க்கும் திட்டத்தை, ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளுக்குள் செய்து முடித்த மாண்புமிகு புரட்சித் தலைவரின் சாதனை தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று.

எந்தவொரு திட்டமும் மக்களுக்காகத் தீட்டப்பட்டு, மக்களை நேரடியாகச் சென்றடைய வேண்டும் என மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவார் என முன்பே சொன்னேன் அல்லவா? அவர் கருத்துக்கு ஏற்ப நிறைவேற்றப்பட்ட திட்டம்தான் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்.

கிராம மக்கள் இடையே வேலை இல்லாக் கொடுமையையும், போதிய வேலை இல்லா நிலையையும் நீக்க அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்,



நாடெங்கும் நிறைவேற்றப்பட்டாலும் தமிழகத்தில்தான் இந்தத்திட்டம் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது என ஆங்கில ஏடுகள் பாராட்டிக் கட்டுரைகள் எழுதியமை, திட்டங்களை நிறைவேற்றுவதில் மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசின் திறமைக்கு ஒரு சான்று.

1979-இல் உழைப்புக்கு உணவுத் திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, 1980-ஆம் ஆண்டில் 'தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்' என்ற பெயரை ஏற்ற இந்தத் திட்டத்தில் உழைக்க முன்வரும் தொழிலாளர்களுக்கான ஊதியம் பணமாகவும் அரிசியாகவும் வழங்கப்படுவது இத்திட்டத்தின் தனிச்சிறப்பு. இத்திட்டத்தில் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உணவு தானியத்தைக் கோதுமையாகத்தான் அளிக்க முடியும் என மத்திய அரசு தெரிவித்தபோது, அரிசி அளிக்கக் கோரி மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் வற்புறுத்தலுக்குப் பின்பு மத்திய அரசு கோதுமைக்குப் பதில் அரிசி அளிக்க சம்மதித்தது.

தனிமனிதர்களின் பொருளாதார நிலையை உயர்த்தி அதன் மூலம் தனி மனிதர்கள் சார்ந்துள்ள சமுதாயத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் தமிழகத்தில் திறம்பட நிறைவேற்றப்படுகிறது.

1978-79-ஆம் ஆண்டு இத்திட்டம் 161 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே நிறைவேற்றப்பட்டு வந்தது. ஆனால் 1980 அக்டோபர் 2-ஆம் தேதி முதல் இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தை நிறைவேற்ற 1980-81ஆம் ஆண்டு ஓர் ஒன்றியத்திற்கு ரூ.5 இலட்சம் வீதம், அரசால் அளிக்கப்பட்ட தொகை 1981-82-ல், 6 இலட்சமாக உயர்த்தப்பட்டதோடு, 1982-83ஆம் ஆண்டு முதல், இந்தத் தொகை ரூபாய்.8 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் புலிகுத்தியில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடம்.





கக்காம்பட்டி கீழ்நாட்டார் சாலையில் சரளை பரப்பப்பட்டுள்ளது.

நீர் உயர நெல் உயரும் என்பது போல், அரசின் உதவித் தொகையின் அதிகரிப்பிற்கு ஏற்ப இத்திட்டத்தினால் பயன்பெறுவோரின் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இத்திட்டத்தால் 1980-81 ஆம் ஆண்டு 2,55,323 பேர் பயன் அடைந்தனர். 1981-82 ஆம் ஆண்டு பயனடைந்தோரின் எண்ணிக்கை 3,58,225 ஆக அதிகரித்தது.

நடப்பாண்டில் 31.3.84 வரை 2,77,641பேர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனா. இந்த 2,77,641 நபர்களில் ஆதி இந்துக்கள் மற்றும் மலைசாதியினர் மட்டும் 1,08,718 பேர் என்ற செய்தி, அடித்தள மக்களின் நல்வாழ்வில் இவ்வரசு கொண்டுள்ள நாட்டத்தைக்கூறும் எடுத்துக்காட்டாகும். மேலும் இத்திட்டத்திற்கென 1983-84 ஜனவரித் திங்கள் வரையில் அரசு ரூ. 3368.96 லட்சத்தைச் செலவழித்துள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்று கூறும்போது 'TRYSEM' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தைக் குறிப்பிட வேண்டும்.

மாணவர்கள் படிக்கும் படிப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மாறி விடாமல், கற்றகல்வியின் மூலம் மாணவர்கள் சொந்தக் காலில் ' அதாவது சொந்தத் தொழில் செய்து வாழ்வை வளமாக்கும் வகையில் பல வகைத் தொழில்களில் பயிற்சி அளிப்பதே 'TRYSEM' திட்டத்தின் கொள்கை. படிக்கும்போதே சம்பளம் என்ற ஆங்கிலப் பழமொழிக்கு ஏற்ப இத்திட்டத்தின் கீழ், பயிற்சி அளிக்கப்படும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் 75 முதல் 200 ரூபாய் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்த உடன் பெற்ற பயிற்சியைத் தொழிலாகத் தொடங்கத் தேவையான கருவிகளும் சாதனங்களும் ஒவ்வொரு மாணவருக்கும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் வங்கிகள் மூலம் கடன் பெறவும் தக்க உதவிகள் வழங்கப்படுகின்றன.

''புதியன புகுதல்'' இலக்கிய உலகில் மட்டுமின்றி, ஊரக முன்னேற்றத் துறையிலும் உண்டு. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு புதிய திட்டம் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்.

நிலமற்ற தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்த குடும்பத்தில் உள்ளவர்களுள் குறைந்தபட்சம் ஒருவருக்கு ஓராண்டில் 100 நாட்கள் வேலைவாய்ப்பைக் கூண்டிப்பாக அளிக்கும் வகையில் தீட்டப்பட்டுள்ள இத்திட்டம், வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைத்து, சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்தி சமுதாயத்தை மேம்படுத்தும். அதாவது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழச் செய்யும் இத்திட்டம் 1983-84ஆம் ஆண்டில் மட்டும் ரூ.8.90 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 1984-85ஆம் ஆண்டில் இத்தொகை ரூ.44.50 கோடியாக உயரும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

அடுத்து, குறிப்பிட்டுக் கூறத்தக்கது, சாண எரிவாயு அமைப்பு நிறுவும் திட்டம். பழமையிலும் பழக்க வழக்கங்களிலும் ஊறிப்போன நம் கிராம மக்கள் அறிவியலின் புதுமைகளையும், கண்டுபிடிப்புகளையும் எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற கூற்றை, இத்திட்டத்தைப் பொறுத்த வரையில் தமிழக கிராம மக்கள் பொய்யாக்கி விட்டார்கள்.

நமது கிராமப் புறங்களில், 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளில் 10,000 சாண எரிவாயு அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது, ஆனால் இத்திட்டம் நிறைவேற்றப்படத் தொடங்கிய ஒரு சில மாதங்களுக்கு உள்ளாகவே இந்த இலக்கைத் தாண்டி மொத்தம் 11394 சாண எரிவாயு அமைப்பு நிறுவப்பட்டுள்ளன. அரசு அளித்த மானியமும், ஊக்கமும் இதற்குக் காரணம் எனக் குறிப்பிட்டுக் கூறத் தேவையில்லை. நடப்பாண்டில் 10 ஆயிரம் சாண எரிவாயு அமைப்புகளை அமைக்கும்

பணியும் விரைவில் இலக்கை அடையும் என்பது என்நம்பிக்கை.

கடந்த நான்காண்டுகளில் இன்னும் பல பயன்களை மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு திறம்பட ஆற்றி உள்ளது. அவைகளை முழுவதும் விவரிக்க வேண்டும் என்றால் காலமும் காகிதமும் போதா. எனவே ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு என்ற பழமொழியின் உதவியோடு, இவ்வரசு ஆற்றி, ஆற்றும், ஆற்றப் போகும் மாபெரும் பணிகள்பற்றி சில வரிகளில் தனித்தனியாகக் கூற விழைகிறேன்.

கடந்த மூன்றாண்டில் தமிழகத்தில் உள்ள 16 ஆயிரம் வருவாய்க் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஆடவர் மற்றும் மகளிர் கழிப்பிடங்கள் ரூ.22.56 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் மகளிர் கழிப்பிடங்கள் கட்ட ரூ.27 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் கிராம மக்கள் நாட்டு நடப்புச் செய்திகளை அறிந்து சொள்ளும் வகையில் 13,496 சமூகக் கல்வி நிலையங்களுக்கும், 378 தகவல் நிலையங்களுக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் பயன்தரும் நூல்கள் வாங்க நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 47,893 சமுதாய வானொலிப் பெட்டிகளும், 692 தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மலைவாழ் மக்கள் வாழ்வில் ஒளி ஏற்ற கல்ராயன், ஏலகிரி மலைப்பகுதிகளில் தனிவளர்ச்சி வட்டாரங்கள் ஏற்படுத்தி சிறப்புக் கவனம் செலுத்த ரூ.8 லட்சம் வழங்கப்படவுள்ளது.

உலக வங்கியிடமிருந்து கடன் பெற்று பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற கடந்த பிப்ரவரி மாதம் வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியைத் தந்துள்ளன.

---

**20** அம்சத் திட்டத்தைத் தக்க பொலிவுடன் நடத்துவதற்காக மாநில அரசு தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

மாநில அரசின் திட்டங்களை முதல் அமைச்சர் எம் ஜி. ஆர். நல்ல முறையில் நிறைவேற்றி வருகிறார். அதனால் தமிழ்நாட்டு மக்களுக்குப் பல நன்மை தரும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.

மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர்

**திரு ஆர். வெங்கட்ராமன் (16.5.84)**

---

தமிழகத்தின் பேரூராட்சிகள் 1320 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகளையும், 3,230 கிலோ மீட்டர் நீளமுள்ள கம்பிச் சாலைகளையும், 5,650 கிலோ மீட்டர் நீளமுள்ள சரளைக் கல் மண் சாலைகளையும் பராமரித்து வருகின்றன. இவைகளின் மேம்பாட்டிற்காக 1983-84இல் ரூ. 15 இலட்சமும், (இதில் பாதி மானியம்)1984-85ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சமும் மொத்தம் ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கல் கட்டுமான வடிகால்களை அமைக்கப் பேரூராட்சிகளுக்கு ரூபாய் 45,000மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

அங்காடிகள், கடைத்தெருக்கள், கட்டணக் கழிப்பிடங்கள் முதலியவைகளை அமைத்து பேரூராட்சிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள 342.31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற சுற்றுலா இடங்களில் அனைத்து அடிப்படை மற்றும் பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்த 58 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டு பல்வேறு பணிகள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர், சுவாமிமலை, திருப்பரங்குன்றம், திருவேற்காடு போன்ற திருத்தலங்களின் மேம்பாட்டிற்கென இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

சொந்த அலுவலகக் கட்டடம் இல்லாத 167 பேரூராட்சிகளுக்கும் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக இவ்வாண்டு ரூ.5 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டிற்கென ரூ. 2048.95 இலட்சம் செலவில், பேருந்து நிலையங்கள் கட்டுதல், அங்காடிகள் அமைத்தல், சாலைகள் இடுதல், மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

போதிய நிதிவசதி இல்லாத நகராட்சிகளில் பேருந்து நிலையம், கடைகள் முதலியன கட்டுவதற்காக 1980-81ல் ரூ. 300.75 இலட்சமும், 1981-82ல் ரூ. 362.29 இலட்சமும், நகராட்சிக்குக் கடனாக வழங்கிய தமிழ்நாடு அரசு, இவ்வாறு கடன் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

மொத்தத்தில், சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு நான்காண்டுகளை முடித்துள்ள பொன்மனச் செம்மல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, நாற்பது ஆண்டுகளில் நடைபெற்றிருக்க வேண்டிய பணிகளை நான்கே ஆண்டுகளில் விரைந்து நிறைவேற்றி உள்ளது என்பதைக் கூறவேண்டியது இல்லை.


சாண எரிவாயு அமைப்பு





# தொழிலாளர் நலம் காக்கும் தூய அரசு

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**திரு. எஸ். இராகவானந்தம்**

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பதவிக்கு வந்தபின், தமிழ்நாட்டில் தொழில்நல்லுறவுகள்குறிப்பிடத் தக்க அளவிற்கு நீடித்து வரும் நல்வாய்ப்புக்கிட்டியுள்ளது. இதற்கு முக்கிய காரணம்,அரசின் தொழிலுறவுக்கொள்கைதான்.

தொழில் உரிமையாளர்கள் எவ்வித இடையூறுமின்றி, தங்கள் தொழிலை நடத்தவும், அதே சமயம் தொழிலாளிகளுக்குச் சட்டப்படிக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பாதுகாத்தும், அவ்வப்போது ஏற்படும் பிணக்குகளில் உரிய நேரத்தில் தகுந்த வகையில் தலையிட்டுத் தொழில் நல்லுறவைப் பாதுகாத்தும், தொழிலாளர் நலச்சட்டங்களைக் கண்டிப்பாக அமல் நடத்தியும் வருவதன் மூலம் தொழிலின் அமைதியைக் கட்டிக் காத்துத் திறமையுடன் அரசு செயல்பட்டு வருகிறது.

ஒரு தொழிலாளி தொடர்ந்து இரண்டு ஆண்டுக் காலக்கெடுவில் குறைந்தது 480 நாட்கள் எந்த ஒரு நிறுவனத்திலாவது பணி புரிந்திருந்தால், அவர் ஒரு நிரந்தரத் தொழிலாளியாகக் கருதப் பட்டு, நிரந்தரத் தொழிலாளிகளுக்கான அனைத்துப் பயன்களும் தரப்பட வேண்டும் என்று கோரும் The Tamilnadu Industrial Estts. Conferment of Permenent Status to workmen சட்டம், 1981-ஆம் ஆண்டு இந்த அரசால் நிறைவேற்றப்பட்டது. இது 1-1-82 முதல், அமல் செய்யப்பட்டு வருகிறது.

இத்துடன் ஏதாவது தன் வினையாக அல்லாமல் மற்ற காரணங்களுக்காகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளிகளுக்குப் பிழைப் பூதியப்படி வழங்கக் கோரும் சட்டம்ஒன்றும் 1982-ஆம் ஆண்டு அரசால் நிறைவேற்றப்பட்டது. தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளிகளுக்கு இச் சட்டப்படி வேலையளிப்பவர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு. பிழைப்பூதியம் கட்டாயமாக வழங்க வேண்டும்.

அமைப்பு ரீதியில் (Organised Sector) உள்ள தொழிலாளர்களுக்கு நலச்சட்டங்களை நிறைவேற்றும் அதே நேரத்தில் அமைப்பு ரீதியில் அல்லாத (Un Organised Sector) பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நலனையும் இந்த அரசு கவனத்தில் கொண்டுள்ளது. குறுமக் கூலிச் சட்டம், தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டம் ஆகிய ஒரு சில சட்டங்களுக்கு மட்டுமே கட்டுப்படும் அமைப்பு ரீதியல்லாத தொழிலாளர்கள் பலர் உள்ளனர். இந்த வகைத் தொழிலாளர்களில் கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் பெரும் பகுதியினராக அடங்குவர்.

கைத்தறித் தொழிலாளர்களின் நலனுக்காகவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்த அரசு 1981-ஆம் ஆண்டில் Tamilnadu Handloom workers Conditions of Employment+Miscellaneous Provisions Act, 1981 என்று ஒரு சட்

டத்தைக் கொண்டு வந்தது. செசவாளிக்கும் மாஸ்டர் வீவர் எனப்படும் வேலை அளிப்பவர்க்கும் தொழிலாளி—வேலை அளிப்பவர் உறவை நிர்ணயித்து, தொழிலாளிக்கு உரிய கூலி, பணித் தொடர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் இதர நலன் குறித்த தேவைகளைத் தொழிலாளி பெற வழி வகைகளைச் செய்கிறது. அமைப்பு ரீதியில் அல்லாத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனுக்கு இதுபோன்ற ஒரு சட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில் மட்டும் தான் கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இச்சட்டத்தின் செல்லத்தக்க நிலை குறித்து, சென்னை உயர்நீதி மன்றத்தில், மாஸ்டர் வீவர்களால் தாக்கல் செய்யப்பட்ட பல உரிமை மனுக்களும் தற்சமயம் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன.

உடலுழைப்புத் தொழிலாளர்கள் (Manual Labourers) அமைப்பு ரீதியில் அமையப் பெறாத தொழிலாளர்களின் மற்றொரு பெரும் பிரிவினராவர். அவர்களும் தங்கள் வாழ்வுக்கான செய்யும் தொழில் சிரமங்கள் பலவற்றை அனுபவித்துக் கொண்டு வருகின்றனர். அவர்களுக்கும் ஆதரவு அளிக்கும் வகையில் இந்த அரசு உதவிக் கரம் நீட்டியுள்ளது. அவர்கள் பணிமுறைகளை வகைப்படுத்தவும், பல்வேறு நலன்களையும் வசதிகளையும் கொடுக்கவும் [Tamilnadu Manual workers (Regulation of Employment and Conditions of Work) Act. 1982.] என்ற ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வர உள்ளது. இச்சட்டத்தின்கீழ் விதிகளும் நடைமுறைகளும் இறுதியாக்கப்பட்டபின், சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்படும்.

மேற்கூறிய நலச்சட்டங்கள் தவிர, கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அவர்கள் நலனுக்காகச் சகல உரிமைகளையும் வசதிகளையும் உள்ளடக்கிய தனிச் சட்டம் ஒன்றைக் கொண்டு வர இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அமைப்பு ரீதியில் இல்லாத இவ்வகைத் தொழிலாளர்களுக்குக் கொண்டு வரப்படும் சட்டம் அவர்கள் மேம்பாட்டிற்கும் நல்வாழ்விற்கும் பெரிதும் உதவும். இச்சட்டத்தின் முன்வரைவு ஏற்கெனவே சட்டப்பேரவையில் அறிமுகப் படுத்தப்பட்டு, சபையின் ஆலோசனையில் உள்ளது.

மேற்கூறியவாறு புதிய சட்டங்களைக் கொண்டு வரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டு வருவதுடன்



தற்சமயம் அமலில் உள்ள சட்டங்களுக்கும் தொழிலாளர்களுக்குப் பயன் பெறத்தக்க வகையில் உரிய சட்டத் திருத்தங்களையும் அப்போதைக்கப்போது அரசு கொண்டு வந்துள்ளது. Factories Act Beedi and cigar workers (conditions of Employment) Act. 1966. Motor Transport workers Act 1961 and Tamilnadu Shops and Estts. Act. 1947 ஆகிய சட்டங்களை உரிய வகையில் திருத்தம் செய்து, தொழிலாளிகளுக்குப் பணி விவர அட்டைகள் ( Service Books Time cards ) கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நிறுவனத்தில் பணிபுரிந்ததற்கும், பணியின் கால அளவிற்கும் இந்த அட்டைகள் தொழிலாளர்கள் சார்பாகச் சான்று கூறும்.

குறுமக் கூலிச் சட்டத்தின்கீழ் புதிய தொழில்களை அரசு உள்ளடக்கியுள்ளது. அத் தொழில்களில் பெரும்பகுதி, அமைப்பு ரீதியற்றவை. அத் தொழில்களில் பணிபுரியும்தொழிலாளிகளுக்கும் குறுமக்கூலி நிர்ணயிக்கப்பட்டு, சட்டத்தின் பயன் தரப்படுகிறது. மருத்துவமனைகள் மற்றும் நர்சிங் ஹோம்கள் வனத் தொழில், சோப்பு செய்தல், டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டும் தொழில், சிறு பொறியியல் தொழில், தையல் நிறுவனங்கள், கழிவுப் பஞ்சாலைத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள கணிசமான எண்ணிக்கை

நடவடிக்கையினால் குறுமக்கூலிச் சட்டத்தின் பயன்களைப் பெற வழிவகைகள் அரசால் செய்யப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்**

தொழிலாளர்களின் நலன்களைப் பொறுத்த வரையில் பல்வேறு நலப்பணிகளை ( Welfare Measures ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் அரசு செய்து தருகிறது. பல்வேறு வசதிகளில் குறிப்பிடத்தக்கவைகளில் ஒன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்காக ஒரு விடுதி கட்டப்பட்டதாகும். இந்த விடுதி சென்னை தேனாம்பேட்டையில் பத்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த விடுதியைக் கட்ட ரூ. 2 இலட்சம் மானியமாகவும், 5 கிரவுண்டு 1,590 சதுர அடிப் பரப்புள்ள மனை ஒன்றைத் தொழிலாளர் நல வாரியத்திற்கு இலவசமாகவும் இந்த அரசு அளித்தது.

கொடுக்கப்பட்ட மனை ஒட் கிரவுண்டு ரூ. 76,300 வீதம் மொத்தமாக ரூ.3,81,500 பெறுமானம் உடையது. இந்த விடுதி 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், மறைந்த புகழ் மிக்க தொழிற்சங்கத் தலைவர் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் நினைவாக 'ஜீவா இல்லம்' எனப் பெயர் சூட்டப் பெற்றுத் திறந்து

லாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் தங்குவதற்கான பதினைந்து இலட்ச ரூபாய் செலவில் குற்றாலத்தில் தங்கும் விடுதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இதில் ஒரே சமயம் 58 நபர்கள் தங்கலாம். இதே போன்ற ஓய்வு விடுதிகள் மாமல்லபுரம், கொடைக்கானல், உதகமண்டலம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில்தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் தொழிலாளர் நல வாரியம் 39 தொழிலாளர் நல மையங்களை நடத்தி வருகின்றது. தொழிலாளர்களின் சிறு குழந்தைகளுக்குப் பாலர் வகுப்புகளும், தொழிலாளர் வீட்டுப் பெண்களுக்குத் தையல் பயிற்சி வகுப்புகளும் இந்த மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. +2 வகுப்புகள், பொறியியல் வகுப்புகள், டாக்டர் படிப்பு, பொறியியல் படிப்பில் டிப்ளமா வகுப்புகள், ஐ. டி. ஐ. வகுப்புகள் ஆகியவற்றில் படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளமும் கணிசமான அளவில் வழங்குகிறது. இத்துடன் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காகப் புத்தக வங்கிகளையும் தொழிலாளர் நல வாரியம் நடத்துகின்றது.

பல்வேறு வசதிகளையும் நலன்களையும் வழங்கும் தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நலப் பணிகளுக்குச் செலவிடப்படும் நிதியை அதிகரிக்க வேண்டி, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நிதிச் சட்டத்தை அரசு திருத்தியுள்ளது. இதன்படி தொழிலாளி தனக்காக ஆண்டு



தொழிலாளர்கள் தாங்களே ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; தொழிலாளர் இயக்கங்கள் தனி இயக்கமாக இருக்க வேண்டும்; அரசியல் இருக்கக் கூடாது.

தோறும் தரும் நிதி ரூ.2ஆகவும், ஒவ்வொரு தொழிலாளிக்காக வேலையளிப்பவர் தர வேண்டிய நிதி ரூ. 4 ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது. இதில் குறிப்பிடத் தக்க சிறப்பம்சம் என்னவென்றால், அரசும் தொழிலாளர் நலனுக்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 2 வீதம் ஆண்டு தோறும் நிதி உதவி செய்வதாகும்.

அப்போதைக்கப்போது தொழிலாளர் நலச் சட்டங்களை நிறைவேற்றியும், சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரும் அதே சமயத்தில் வேலை நிறுத்தம், மற்றும் கதவடைப்பு போன்றவைகளால் பாதிக்கப்பட்டு வரும் தொழிலாளர்களுக்கும் உரிய நேரத்தில் தேவையான உதவிகளை அரசு செய்து வருகிறது.

வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புக் காலங்களில் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து பெருந் தொகையான பண உதவிகள் செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கப்பட்டு வருவது நன்கு புலனாகும். இந்த அரசு பதவிக்கு வந்த பின் இதுநாள் வரை பதினொரு தடவைகள் இதுபோன்று நிவாரணங்கள் அளிக்கப் பெற்றுள்ளன.

1981-ஆம் ஆண்டில் பங்கிங்காம் கர்னாடிக் ஆலையில் பணி புரியும் 13,000 தொழிலாளர்களில், ஒவ்வொருவரும் தலா ரூ. 200 வீதம் ரூ. 26 இலட்சம் உதவித் தொகை கொடுக்கப்பட்டதை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இந்த வகையில் இதுவரையில் கொடுக்கப்பட்ட தொகைகளில் இதுதான் மிகமிக அதிகமாகும்.

தொழிலாளர்களுக்குத் தங்கள் நலன்களுக்கும் உரிமைகளுக்காகவும் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களின் விவரங்களையும், விதிமுறைகளையும் போதிக்கவும் விளக்கம் அளிக்கும் வகையிலும் 'உழைப்பவர் உலகம்' என்ற தமிழ் மாத இதழை, தமிழ்நாடு தொழிலாளர் மையத்தின் மூலம் அரசு வெளியிடுகிறது.



**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்:**

நல்லமுறையில் நடத்தப் பெறும் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் தலைவர்களின் மனப்பான்மை, நிர்வாகப்பொறுப்பில் உள்ளவர்களின் கடமை உணர்வுகள், நிர்வாகத் திறனில் சீர்மை போன்ற விஷயங்கள் குறித்து தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் போதிக்கப் படுகின்றன. இந்த மையம், முதல் வகுப்பு இன்ஸ்டிடியூட் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. பல்வேறு பொருட்களில் கருத்தரங்குகளையும் சொற்பொழிவுகளையும் பயனுள்ள வகையில் இந்த மையம் அடிக்கடி நடத்தி வருகிறது. தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் தொழிலாளர்களுக்காகக் கொணரப்பட்ட பல்வேறு சட்டங்களை எளிய தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியிலும் தமிழ்நாடு தொழில் மையம் ஈடுபட்டு உள்ளது.

# குறைவின்றி குடிநீர் வழங்கிய அரசு



எல்லாத் திட்டங்களையும் போலவே குடிநீர்த் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு சிறப்புறத் தொடர்ந்து நிறைவேற்றி வந்துள்ளது.

## இரு பெரு வாரியங்கள்

குடிநீர்த் திட்டங்களை விரைவாகவும், விரிவாகவும் சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் பணியைச் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், சென்னை நகர் தவிர பிற மாவட்டங்களில் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றன.

## பல்வகைத் திட்டங்கள்

இந்த அரசுபதவி ஏற்றநாளில் இருந்து, மகத்தான தன்னிறைவுத் திட்டம், குறைந்த பட்சத்தேவைகளைத் தீர்க்கும் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க ஒல்லும் வகையெல்லாம் உழைத்து வந்துள்ளது.

## ஆய்வுப் பணி

பல்வேறு வகைகளைச் சார்ந்த 18,167 குடிஇருப்புகளுக்குஉடனடியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியாக வேண்டும் என்ற உண்மையை 1976-77-இல், நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவித்தது.

## தன்னிறைவுத் திட்டம்

கிராமப் புறங்களில் அனைத்து அடிப்படை வசதிகளையும், மிகக் குறுகிய காலத்திற்குள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த தன்னிகரில்லாத் தன்னிறைவுத் திட்டம் 1980-81-ஆம் ஆண்டு, முதல் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள எல்லா குடி இருப்புகளுக்கு மட்டுமின்றி, மறுவகைப்படுத்தப்பட்ட, 7,600 குடி இருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் மாபெரும் பணி நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மிகப் பெரும் தொகையான ரூ. 170 கோடி 1980-81 முதல் 1982-83 வரையிலான மூன்றாண்டுகளுக்குத் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்ய முன்வந்தது. இதன் விளைவாக 1983 மார்ச்சுத் திங்கள் இறுதிவரை குடிதண்ணீர்த்தட்டுப்பாடு கொண்ட 7662 குடி இருப்புகளுக்கு மட்டுமின்றி, வகை மாற்றம் செய்யப்பட்ட 2582 குடி இருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டது. இதனால் பயன்பெற்ற மக்கட் தொகை 30.36 இலட்சமாகும்.

## முனைந்த முயற்சிகள்

பழைய ஆவணங்களைப் புரட்டிப் பார்த்தால், கடந்த ஒரு சில ஆண்டுகளில் தான் குடிநீர் வழங்கும் திட்டம் அதிக அளவில் மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ள உண்மை விளங்குகிறது. 1980-81 ஆம் ஆண்டில் 2,300 குடி இருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிய தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1982-83ஆம் ஆண்டு 4069 குடி இருப்புகளுக்குக் குடிநீர் வழங்கி உள்ளது.

## வறட்சி வாட்டியபோது...

1982-83 மற்றும் 1983-84 ஆகிய ஈராண்டுகளில், கடுமையான வறட்சி தமிழகத்தைத் தாக்கியபோது, அதை எதிர்த்து சமாளித்த குடிநீர் வடிகால் வாரியத்தின் திறமை குறிப்பிட்டுக் கூறத் தக்கதாகும். வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் துளைக் கிணறுகள் நாடெங்கும் அமைக்கப்பட்டன. வறட்சிப் பணிகளில் காட்டிய அதிக நாட்டம் காரணமாக மற்ற நீர் வழங்கும் பணிகளை 1983 அக்டோபர் திங்கள் முதல் தான் நிறைவேற்ற முடிந்தது. இருப்பினும் இக்குறுகிய கால அளவிற்குள் 47.69 கோடி ரூபாய் செலவில், 3,500 குடி இருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணியைச் செவ்வனே நிறைவேற்றியது தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம். மேலும், 1981-82, மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளில் வான் பொய்த்தபோது ஏற்பட்ட வறட்சியைத் துளைக் கிணறுகள் மூலம் தீர்த்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சாதனை பாராட்டப்பட வேண்டிய ஒன்று.





துளைக் கிணறுகள் அமைக்கும் பணி 1982 செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் மட்டும் 20.60 கோடி செலவில் 9688 ஆழ்துளைக் கிணறுகள் கைக் குழாய்களுடன் அமைக்கப்பட்டன. வறட்சி தொடர்ந்து நீடித்ததால், 1983-84-ஆம் ஆண்டிலும்ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 25.19 கோடி செலவில் 11850 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, கைக் குழாய்கள் பொருத்தப்பட்டன. இத்தகைய பணிகளுக்குப் பிறகும் அதாவது 1983 செப்டம்பர் திங்களுக்குப் பிறகும், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வறட்சி நீடித்ததால், ரூ. 91.80 இலட்சம் செலவில், இம் மாவட்டங்களில், 454 துளைக்கிணறுகள் அமைக்கப்பட்டன.

## பிற நாட்டினர் உதவிகள்

பதவி ஏற்ற நாள் முதற் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காகப்பெருந்தொகையைஒதுக்கீடு செய்ததோடு மட்டுமின்றி, நீர் வழங்கு திட்டங்களுக்கென இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சார்ந்த பல நற்சேவை நிறுவனங்களின் உதவியையும் தமிழ்நாடு அரசு அரும்பாடுபட்டுப் பெற்றுள்ளது.

இத்தகைய அரும்பெரும் முயற்சிகளுள் ஒரு சிலவற்றை இங்கே கூறவிழைகின்றேன்.

## உலக வங்கி உதவி

உலக வங்கியின் உதவியோடு நிறைவேற்றப்படும் குடிநீர், மற்றும் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்கள் முதலில் குறிப்பிடத்தக்கவை. உலக வங்கியின் உதவியோடு, இந்த ஆண்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய மூன்று மாநகரங்களுக்கும், 75 நடுத்தர நகரங்களுக்கும் குடிநீர் வழங்கவும், 14 நகராட்சிகளுக்குக் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்களை நிறைவேற்றவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. உலக வங்கித் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 149.42 கோடி. 740 குடி இருப்புகளுக்கு நீர் வழங்கும் ரூ. 14.14 கோடி செலவிலான திட்டமும், இதில் அடங்கும். உலக வங்கித் திட்டத்தால் மொத்தம் 38.96 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்கான பேச்சு வார்த்தைகள் இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் வாஷிங்டனில் நடைபெற்று வெற்றிகரமாக முடிந்துள்ளது. உலக வங்கியில் இருந்து நிதி உதவி விரைவில் கிடைக்கும் என்பது உறுதி. உலக வங்கித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இத் திட்டம் முடிக்கப்பட்ட பின்பு, தமிழ்நாட்டின் நகரங்களைப் பொறுத்த வரையில் குடிநீர்த் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமிருக்காது!

## ஐரோப்பியப் பொருளாதாரக் குழுமம்

கிடைக்கும் தண்ணீரில் 'புரோரைடு' என்னும் உடல் நலக் கேடு விளைவிக்கும் உப்பு கலந்துள்ள நீரைக் கொண்ட கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களுக்குத் தூய்மையான நீரை வழங்குவதற்காக, ஐரோப்பியப் பொருளாதாரக் குழுமத்தின் உதவியோடு நிறைவேற்றப்படவிருக்கும் திட்டத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிடவிழைகின்றேன்.

ஒரு லிட்டர் குடிதண்ணீரில் ஒன்றரைமில்லி கிராம் புளோரைடு கலந்து இருந்தால் அந்தத் தண்ணீர் உடலுக்கு ஊறு விளைவிக்கும். கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் ஏறத்தாழ 726 குடி இருப்புகளில் இது போல் ஊறு விளைவிக்கும் நிலையிலான குடிநீரே இயற்கையாகக் கிடைக்கிறது. மிகத் தொலைவில் இருந்து இத்தகைய குடி இருப்புகளுக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுமத்தின் உதவிக்காக அனுப்பப்பட்டது. ரூ. 15.20 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்ய, குழுமம் தன்னுடைய ஒப்புதலைத் தெரிவித்து உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 3,78,000 மக்கள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்கான வேலைகள் நடப்பாண்டில் தொடங்கப்பட்டு இரண்டரை ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும்.

TAMIN

**தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை-600 005.**
**(தமிழ்நாடு அரசு நிறுவனம்)**

உலகப் புகழ்பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் இதர உயர்வகைக் கனிமங்கள்:—

| | |
|---|---|
| சுண்ணாம்புக்கல் | கெமிகல் கிரேடு + 93% $CaCO_3$ |
| வெங்கக்கல் (குவார்ட்ஸ்) | + 99.8% $SiO_2$ |
| பெல்ட்ஸ்பார் | + 12% $K_2O$ |
| ரோஸ் குவார்ட்ஸ் | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது. |
| வெர்மிகுலைட் (மைக்கா) | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| சிலிகா மணல் | + 99.7% $SiO_2$ |
| வெப்பந்தாங்கும் களிமண் | ரிப்ராக்டரி கிரேடு 32.1 % $Al_2O_3$ |

*தேவைக்கு அணுகவேண்டிய முகவரி:*

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD ஹவுஸ், 31, காமராசர் சாலை,
தபால்பெட்டி எண். 2961
சேப்பாக்கம்,
சென்னை-600 005.

தொலைபேசி எண்: 848932

தந்தி: MINESALITE

டெலக்ஸ்—416081 TNML IN

### டேனிடாவும் யுனிசெப் நிறுவனமும்

மேலும் நமது அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, டேனிடா என்று அழைக்கப்படும் டேனிஷ் அகில உலக முன்னேற்ற நிறுவனமும், யுனிசெப் நிறுவனமும் நம்குடி நீர்த் திட்டங்களுக்குப் பல உதவிகளைப் புரிந்துள்ளன. டேனிடா நிறுவனம் அளித்த 2,500 கைப் பம்புகளைக் கொண்டு சேலம் மற்றும் தென்ஆர்க்காடு மாவட்டங்களில் இருந்தபழையபம்புகள் அனைத்தும் அகற்றப்பட்டுஅவைகளுக்குப் பதிலாக புதிய பம்புகள் நிறுவப்பட்டு விட்டன. இது போக எஞ்சி இருந்த புதிய பம்புகள் தற்போது செங்கற்பட்டு மாவட்டத்தில் நிறுவப்பட்டு வருகின்றன. 3000 'இந்தியா மார்க் II' என்ற பம்புகளை 'யூனிசெப்' நிறுவனம் நமக்கு வழங்கியது. இவைகளைக் கொண்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், வட ஆர்க்காடு, மற்றும்தர்மபுரிமாவட்டங்களில் உள்ள பழையபம்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு இவ்வாண்டில் புதிய பம்புகள் நிறுவப்படும். பிற மாவட்டங்களில் உள்ள பழைய பம்புகளுக்குப் பதிலாக 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியோடு புதுப் பம்புகளை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் தற்போது உள்ள 728 நகரங்களுள்315 நகரங்களில்தற்போது குடிநீர் வசதி போதுமான அளவில் செய்யப்பட்டுவிட்டது. 19 நகராட்சிகளில் ரூ. 45.84 இலட்சம் மதிப்பிலான 112 குடிநீர் வழங்கு பணிகள் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, முடியும் தறுவாயில் உள்ளன. 1983-84-இல் 200 பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 92.66 இலட்சம் மதிப்பீட்டில், நீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

### சென்னை நகரம்; தொடரும் பணிகள்

அடுத்ததாகச் சென்னைப்பெரு நகருக்குக் குடிநீர் வழங்குவதில் இந்த அரசு எடுத்த பெரும் முயற்சிகளைப் பற்றி சிறிது கூற விரும்புகிறேன்.

எந்த ஆண்டிலும் இல்லாத வறட்சியும், குடிநீர்த் தட்டுப்பாடும் சென்னை நகரைக் கடந்த சில ஆண்டுகளில் திண்டாட வைத்தபோது, குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்த்து இந்த அரசு சமாளித்த விதம் இந்த அரசின் திறமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு: 1981, 1982 மற்றும் 1983 ஆகிய மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பருவ மழை தவறியதால், 1983 பிப்ரவரி 21-ஆம் நாள் முதல், ஒரு நாள் விட்டு ஒரு நாள் வீதம் குடிநீர் வழங்க வேண்டிய நிலை உருவாயிற்று. எனினும் சென்னையில் எந்த ஒரு குடி இருப்புப் பகுதியும் குடிநீரின்றி இடர்ப்படாதவாறு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சென்னைக்கு நீர் வழங்கும் பூண்டி நீர்த் தேக்கத்தில் கால்வாய் வெட்டப்பட்டு, பரந்து கிடந்த நீர் ஓரிடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, சென்னை நகரின் வீடுகளில்உள்ள குடிநீர்க் குழாய்களுக்கு அனுப்பப்பட்டது. மேலும் 15 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு குடிநீர் வழங்கல் குறைவின்றி நடத்தப்பட்டது. தாமரைப்பாக்கத்தில் இருந்து புழல் நீர்த் தேக்கத்திற்கு நிலத்திற்குக் கீழே பதிக்கப்பட்ட இரும்புக் குழாய்கள் மூலம் நீர் கொண்டுவரப்பட்டது. இவைகளைத்தவிர 1,800 குழாய்க் கிணறுகள், 1204 ஆழ் கிணறுகள் சென்னை நகரின் பல்வேறுபகுதிகளில் தோண்டப்பட்டன. சென்னையில் பல்வேறு குடி இருப்புப் பகுதிகளில் 1,300 இரும்புத் தொட்டிகள் நிறுவப்பட்டு 151 லாரிகள் மூலம் தினமும், குடிநீர் வழங்கப்பட்டது. குடிநீர்ப் பிரச்சினை 12-10-83 அன்று தீருவது வரை, போர்க்கால நடவடிக்கை முறையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் செயல்பட்டு, குடிநீர் குறையைத் தீர்த்து வைத்தது.


செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி பகுதிகளில் கைப்பம்புகள் வேலை செய்வதை உலக வங்கிக் குழுவினர் 22-6-83-ல் பார்வையிட்டனர்

### கிருஷ்ணா பேராற்றுத் திட்டம் மாண்புமிகு முதல்வர் முயற்சி

**எல்லாவற்றிற்கும் மேலாக, சென்னைப் பெருநகரின் குடிநீர்ப் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க ஆந்திராவின் கிருஷ்ணா நதியில் இருந்து நீர் கொண்டுவரும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் தான் நிறைவேற்ற முடிந்தது. இதற்கான ஒப்பந்தம் ஏற்கனவே கையெழுத்தாகி, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்த ஆண்டு முதற்கட்டமாக ரூபாய் 6250.01 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.**

'நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை...கூட கோபுரங்கள் கேட்கவில்லை...குடிக்கத் தண்ணீர் தான் கேட்டார்கள். மக்களின் ஆசியோடு, அண்ணாவின் வழியில் நடக்க இருக்கும் இந்த அரசு மக்களின் குடிநீர்ப் பிரச்சனையை முதலில் தீர்த்து வைக்கும் என்று' கூறிக் கொள்ள விரும்புகிறேன்," என மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற முதல் நாள் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

அன்று அவர் செய்த அந்த அறிவிப்பு, இன்று செயலாக்கப் பட்டு விட்டது.



# மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

## கன்னியாகுமரி மாவட்டம்

## (இருப்பு) நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமங்களில் வாழும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல் படுத்தப்பட்டுவருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 600 மிக ஏழைக்குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் விரும்பும் தொழில் செய்யத் திட்டங்கள் தயாரித்து அரசு அங்கீகாரத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேல்கூறிய நோக்கங்களுக்காக நடப்பு ஆண்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 8 லட்சம் விதம் மத்திய மாநில அரசுகள் நிதி உதவி அளித்துள்ளன.

### செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1) உழவு மாடு வழங்குதல்
2) வண்டியும் மாடும் வழங்குதல்
3) மாட்டுத் தொழுவம் கட்டுதல்
4) பால்மாடு வழங்குதல்
5) கலப்பினக்கன்றுகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்குதல்
6) பன்றி வளர்த்தல்.
7) ஆடு வளர்த்தல்
8) வாத்து வளர்த்தல்
9) மீன்வலை முடிப்பதற்கு நைலான் நூல் வழங்குதல்.
10) கட்டுமரம், வலை வழங்குதல்
11) உள்நாட்டு மீனவர்களுக்கு சைக்கிள் வழங்குதல்
12) தேனீ வளர்த்தல்.
13) கிராம கைவினைஞர்களுக்கு உதவி செய்தல்.

### இந்நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் இதர திட்டங்கள்

1) தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்
2) கிராமிய இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்
3) உள்ளமைப்புத் திட்டம்
4) மாபெரும் திட்டம்
5) நிலமற்ற ஏழையின் வேலைக்கு உறுதியளிப்புத் திட்டம் முதலிய திட்டங்கள்

*இது சம்பந்தமான மேல் விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகவும்.*

**திரு. எஸ். நடராஜன்**
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.

**திரு. எல். கே. திரிபாதி, இ. ஆ. ப.**
பெருந்தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.




# இந்திய மருத்துவம் மேன்மை பெறுகிறது

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

**டாக்டர் எச். வி. ஹண்டே**

தமிழ்நாட்டின் சித்த மருத்துவத்தின்கீழ் 1964 முதல் இயங்கி வரும் ஒரே கல்லூரி பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியாகும். 5½ ஆண்டுகள் காலஅளவுள்ள பி.எஸ்.எம். & எஸ் படிப்புக்கு ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 44லிருந்து 75ஆக 1980-81ல் உயர்த்தப்பட்டது.

1983-84 முதல் மத்திய அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு 2 இடங்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறது. இப்பொழுது ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 77 ஆக உயர்த்தப்படுகிறது. மூன்றாண்டுப் பயிற்சிக் காலமுள்ள சித்த மருத்துவம், சித்த குண பாடம் ஆகிய இரு பிரிவுகளைக்கொண்ட சித்தா பட்ட மேற்படிப்பு, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் 10 ஆகும். இப்படிப்பில் அரசு 1983-84 முதல், மத்திய அரசு ஊழியர்களின் வாரிசுக்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. பட்ட மேற்படிப்புக்கு ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 21 ஆகும். இப்படிப்பட்ட மேற்படிப்புப் பயிற்சியாளர்களுக்கு அதிகப்படியான உதவித் தொகை 20.10.81 முதல், வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மருந்தாளுநர் பட்டயப்படிப்பு பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையிலும் நடத்தப்படுகிறது. 1981-82க்கு முன் ஆண்டுதோறும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமருத்துவ மனையில் சித்தாவில் 7 பேர்களும், ஆயுர்வேதாவில் 5 பேர்களும், யுனானியில் 5 பேர்களும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8 பேர்களும் எடுக்கப்பட்டார்கள்.

1981-82 முதல் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8லிருந்து 25 ஆகவும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ.. மனையில் 7லிருந்து 25 ஆகவும் உயர்த்தப்பட்டது. ஆயுர்வேத, யுனானி, மருந்தாளுநர்களுக்கு வேலை வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருப்பதால் ஆயுர்வேதா, யூனானிக்கான 10 இடங்களும் 5 ஆண்டுகள் வரையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. மேற்கண்ட 10 இடங்களும் சித்தாவுக்குப்பயன்படுத்தப்படுகின்றன. 1983-84 முதல் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சித்தாவில் 25 லிருந்து 30 ஆக உயர்த்தப்படுகின்றது.

1979-80ஆம் ஆண்டு அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) சென்னையில் 15 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 1982ல் அரசினர் இந்திய மருத்துவக்கல்லூரி (யுனானி) என்ற பெயர் அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது. 1983-84ல் அரசு, மத்திய அரசு ஊழியர்களின் வாரிசுக்கு இப்படிப்பில் ஒரு இடம் ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பொழுது ஆண்டுதோறும் எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்கிறது.

சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவமுறைகளின் கீழ், செவிலியர்களுக்கு மூன்று மாதங்களுக்குப் பயிற்சிசென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்

பல்லவன் போக்குவரத்து, பரிந்துரைப்பணிக் குழு அமைத்துள்ளது.

முதன் முறையாக பழைய பேருந்துகளைப் புதுப்பிக்க 1981-82 ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ.3.78 கோடி கடனாகப் பெற்றது. 1982-83ஆம் ஆண்டிற்கு ரூ. 1.79 கோடி கடனும், 1983-84ல் ரூ. 2.40 கோடி கடனும் பெறப்பட்டது.

முதன் முறையாக சென்னைக்கும் ஈரோட்டுக்கும் நடுவே தூங்கும் வசதி கொண்ட 2 சர்வளி பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலும், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திலும் கம்பியில்லாத் தந்தி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய வழித்தடங்கள் உருவாக்குவதற்கு மாவட்டம் தோறும் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகங்களில் டீசல் எண்ணெய் மிச்சப்படுத்த ஊக்கத்திட்டம் புகுத்தப்பட்டது.

**தொழிலாளர் நல நடவடிக்கைகள் :**

1.9.'77 அன்று போடப்பட்ட ஊதிய ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கு அமலிலிருந்தது. ஒப்பந்த காலம் முடிவதற்கு முன்னமேயே, அரசு அவர்களது கோரிக்கைகளைக் கேட்டு, கலந்து பேசி சுமுகமான முறையில் 1.9.80க்கு முன்பாகவே ஒரு புதிய ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி ஊதியத்தின் குறைந்த அளவு உயர்வு ரூ.65 ஆகும். உயரளவு ரூ. 130 ஆகும். அகவிலைப்படி, வீட்டுவாடகைப்படி, நகர ஈட்டுப்படி, சலவைப்படி எல்லாம் கூட்டப்பட்டன. இதனால் கழகங்களுக்கு ஓராண்டில் ஆகும் கூடுதல் செலவு ரூ. 9 கோடியாகும். இரண்டாம் முறையாக மற்றுமொரு புதிய ஊதிய ஒப்பந்தம் 1.9.83ல் அமலாக்கப்பட்டது. இதனால் குறைந்த அளவு உயர்வு ரூ. 75ம், அதிக அளவு உயர்வு ரூ. 150ம் ஆகும். போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதல் செலவு ஆண்டொன்றிற்கு ரூ. 10 கோடியாகும்.

நீண்டகால ஊதியத்திட்டப்படி பதவி உயர்வு அளிப்பது குறித்து ஓராண்டிற்கு ஒரு முறை ஆய்வு செய்தது, ஆண்டிற்கு 4 முறையாக மாற்றியமைக்கப்பட்டது.

சம்பளத்தில் 20 முதல் 25 சதவிகிதம் வரையில் தான் செயலூக்கத் தொகை என்றிருந்த உச்சவரம்பு நீக்கப்பட்டது.

பேருந்துக் கட்டண உயர்வால் வசூலாகும் கட்டணத்திற்குரிய படியை அதற்கேற்ற விகிதாச்சாரத்தில் குறைக்காமல், அதிக வருவாயில் தொழிலாளர்களும் பங்கு பெறும் வண்ணம் மாற்றியமைக்கப்பட்டது.

மாறுபடும் அகவிலைப்படிக்குப் பதிலாக, அனைத்திந்திய நுகர்வோர் விலை குறியீட்டெண் அடிப்படையில் அகவிலைப்படி மாற்றியமைக்கப்பட்டது.

வீட்டு வாடகைப்படி, குறைந்த பட்சமாக 12 சதவிகிதம் என்று மாற்றியமைக்கப்பட்டது.

நகரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மட்டும் நகர ஈட்டுப்படி முதலில் வழங்கப்பட்டு வந்தது. இந்தப்படி கிராமங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் 'கிராமப் படி' என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

மருத்துவப்படி, மாதச் சம்பளத்துடன் அளிக்கப்பட்டுள்ளது.

சலவைப்படி ரூ. 6லிருந்து ரூ. 8 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.




புதுக்கோட்டையில் நடைபெற்ற பல்துறை விளக்கப் பணி நிகழ்ச்சியின்போது அமைக்கப்பட்டிருந்த அரங்கம்.



மகப்பேறு விடுப்பு அதிகமாக்கப்பட்டுள்ளது.

சிற்றுண்டிச் சாலைகள் அதிகமாக்கப்பட்டன. அவைகளில் மலிவான விலையில் உணவு வழங்கப்பட்டது.

பணிமனை ஓய்வு அறைகளில் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டன.

இரவு நேரத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு சிற்றுண்டியும், தேநீரும் இலவசமாக வழங்கப்படுகிறது.

தொழிலாளர்கள் விடுமுறையில் தங்குவதற்கு விடுமுறைக்கால ஓய்வு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள், குடும்பத்துடன் குறிப்பிட்ட அளவு கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பிரயாணம் செய்ய அனுமதியளிக்கப்பட்டது.

பணியாளர்களின் குழந்தைகள் பள்ளி இறுதித் தேர்வில் மாவட்டத்தில் முதலாவதாகத்தேர்ச்சி பெற்றால் அவர்களுக்கு மேற்படிப்புச் செலவுக்கு, பணம் அளிக்கப்படுகிறது.

பணிமுடியுமுன்பு தொழிலாளர் இறந்து விட்டால் அவருடைய வாரிசு ஒருவருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

அவருடைய ஈமக்கடன்களுக்காக ரூ.150 மானியம் அளிக்கப்படுகிறது. அவர் பணிசெய்து கொண்டிருக்கும் பொழுது பிறரின் வன்முறைச் செயலால் இறந்து விட்டால் அவரது வாரிசுக்கு ரூ. 5000 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

பணிமுடியுமுன்பு தொழிலாளர் இயலாமையுற்றால் அவர் வேறு தகுந்த பணிக்கு மாற்றியமைக்கப்படுகிறார்.

**பொது**

டீசல், டயர் மற்றும் உதிரி பாகங்கள் விலை ஏறிய போதிலும், சீரிய நிர்வாகத்தாலும், கடும் சிக்கன முறைகளாலும் ஒன்பது போக்குவரத்துக் கழகங்களில், ஆறு போக்குவரத்துக் கழகங்கள் 1982-83ஆம் ஆண்டில் ஆதாயம் ஈட்டியிருக்கின்றன. அவை அரசுக்கு சுமார் நான்குகோடி ரூபாய் உபரி வாகன வரியாகச் செலுத்தியிருக்கின்றன.

நம் நாட்டில் போக்குவரத்துக் கழகங்களில் கட்டப்படும் பேருந்துக் கூடுகள் மிகவும் நேர்த்தியாக இருப்பதால் அந்தமான், டெல்லி, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் போன்ற இடங்களில் உள்ள போக்குவரத்து நிறுவனங்களுக்கு நம் போக்குவரத்துக் கழகங்கள் நிறையப் பேருந்துக்கூடுகள் கட்டிக் கொடுக்கின்றன.

டீசல் எண்ணெய் மிகுந்த அளவு மிச்சப்படுத்தியதற்காக சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு இவ்வாண்டு மத்திய போக்குவரத்துக் கழக நிறுவனம் பரிசளித்திருக்கிறது.

உற்பத்தித்திறனை அதிகப் படுத்தியதற்காக அகில இந்திய ரீதியில் சோழன், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகங்கள் முதல் இரண்டு பரிசுகளைப் பெற்றிருக்கின்றன.

இந்தியாவிலுள்ள 24 மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் சாதனைகளை ஆய்வு செய்து தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த போக்குவரத்துக் கழகங்களில் ஒன்றாகும். என மத்திய திட்டக்குழு அறிவித்திருக்கிறது.

போக்குவரத்துக் கழகங்களின் உபரி நிதியைக் கொண்டு மாவட்டந்தோறும் சுற்றுலா நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

உடல் ஊனமுற்றோருக்கு பேருந்துகளில் இருக்கை ஒதுக்குதல், மாணவர்களுக்குச் சலுகைப் பயணச்சீட்டு அளித்தல், வேலைவாய்ப்பளித்தல், ஊழியர்களுக்கு மூன்றுசக்கர வண்டி வாங்க சுலபக் கடன் அளித்தல், உடல் ஊனமுற்றோருக்கு அதிக அளவு வேலைவாய்ப்பளித்தமைக்காக பல்லவன் போக்குவரத்துக் கழகம் கடந்த பல ஆண்டுகளாக இந்தியக்குடியரசுத் தலைவர் அவர்களிடம் பரிசு பெற்று வருகிறது.

திய மருத்துவ மனையில் டிசம்பர் 1983ல் தொடங்கப்பட்டிருக்கிறது.

1979-80 முதல், 3 மாணவர்கள் தமிழ்நாட்டிலிருந்து இயற்கை முறைப் பட்டப்படிப் பிற்கு அனுப்பப்படுகிறார்கள். மேற்கண்ட 3 மாணவர்கள் ஹைதராபாத் காந்தி இயற்கை முறை மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார்கள்.

1982-83ல் அரசு யோக முறையை ஒரு வைத்திய முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பின்வருமாறு:

- சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் அரசிதழ் பதிவில்லாத ஊழியர்களின் குடும்பங்களுக்கான ஒரு தனி வெளி நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- 1979-80ல் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.
- 1979-80ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 1981-82ல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு முடிக்கப்பட்டு 14.11.83ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- நோய்க் குறியியல் ஆய்வகம், உயிர் வேதியல் ஆய்வகம் ஊடுகதிர்ப் பிரிவுகளுக்கான கட்டடங்கள் கட்ட 1979-80ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. நோய் குறியியல் ஆய்வகமும், உயிர் வேதியல் ஆய்வகமும் 19.4.'82 முதல் இயங்கி வருகின்றன. 300 எம். ஏ. ஊடு கதிர் இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கிறது. 25.8.'83 முதல் ஊடு கதிர்ப்பிரிவு இயங்கி வருகிறது.
- மருந்து செய் நிலையம் இயந்திரமயமாக்கும் பணி 1979-80ல் ஆரம்பிக்கப்பட்டது.
- புற நோயாளிகள் பிரிவுக் கட்டடம் கட்ட 1981-82ல் அரசு அனுமதி அளித்துள்ளது.
- சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் மருந்துகள் சோதனை செய்யும் ஆய்வகத்திற்கு ஒரு தனிக் கட்டடம் கட்ட அரசு 1983-84ல் அனுமதி அளித்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் செய்யப்பட்ட சாதனைகள் பின்வருமாறு:

- 1980-81ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இயந்திரமயமாக்கப் பட்ட மருந்து செய் நிலையம் 1980-81ல் மற்றும் 1982-83 ஆண்டுகளில் நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ஊடுகதிர்ப் பிரிவுக்கான கட்டடம்கட்ட 1982-83ல் அரசு அனுமதி அளித்துள்ளது.
- 1982-83ல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவிற்கான கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது.

1979-80ல் தாலுகா, மற்றும் தாலுகா அல்லாத மருத்துவ மனைகளில் 15 சித்தா பிரிவுகளும், 1980-81ல் 15 சித்தா பிரிவுகளும் திறக்க அனுமதி அளித்துள்ளது. 103 சித்தா பிரிவுகளில் 102சித்தா பிரிவுகள் இப்பொழுது இயங்கி வருகின்றன.

1979-80ல் அரசு மருத்துவ மனை, சிதம்பரம்( தென் ஆர்க்காடு மாவட்டத்திலும்), இராமநாதபுரம் மாவட்டம் தலைமை மருத்துவமனையிலும், தர்மபுரி மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும், ஒவ்வொரு மருத்துவமனையிலும் 15 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவுதொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1980-81ல் மாவட்டத்தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம், ஈரோடு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும், 1981-82-ல் மாவட்டத் தலைமை மருத்துவ மனை, வேலூர் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவ மனை, திண்டுக்கல்லிலும், ஒவ்வொரு மருத்துவ மனையிலும் 25 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவு தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1983-84ல் அரசு மருத்துவ மனை, கடையநல்லூர், மாவட்டத்தலைமை மருத்துவமனை. கடலூர், மாவட்டத் தலைமை மருத்துவமனை தூத்துக்குடி ஆகிய இடங்களில் 15 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவுகள் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

மே 1981ல் 185 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும், டிசம்பர் 1981ல் 15 ஆரம்பச்சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும், ஏப்ரல் 1982ல் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும், மே 1983ல் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவுகளும் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது.

பிப்ரவரி 1980ல் அரசு 20 கிராம சித்தா மருந்தகங்களும், மே 1983ல் 1 அரசினர் கிராம சித்தா மருந்தகமும் திறக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

1983ல் தன்னாட்சி உரிமையுள்ள மூலிகை வாரியம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பிப்ரவரி 1983ல் முதல் அனைத்திந்திய சித்த மருத்துவ மாநாடு தஞ்சாவூரில் சித்த அறிவியல் மேம்பாட்டுக்குழுவால் நடத்தப்பட்டது.

1983-84ல் சித்த மருத்துவ மேம்பாட்டுக்காக அரசு தமிழ்நாடு சித்த மருத்துவக் கழகம் அமைக்க ஆணை வழங்கியுள்ளது.





# பொதுமக்களுக்குப் பயன்படும் போக்குவரத்துத் துறை

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
**திரு சு. முத்துசாமி**



**மா**ண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அரசு பல துறைகளிலும் பெரும் பெரும் சாதனைகளை ஆற்றி வருகின்றது. போக்குவரத்துத்துறையிலும் குறிப்பிடத்தகுந்த பணிகளை நிறைவேற்றியிருக்கிறது.

நான்காண்டுகளுக்கு முன் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 6407 ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை, இன்று 8466 ஆக உயர்ந்திருக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை தமிழகத்திலுள்ள மொத்தப் பேருந்துகளில் 1980-ல் 56 சதவீதமாக இருந்தது. இன்று 62 சதவீதமாக இருக்கிறது.

**கடந்த நான்காண்டுகளில்**

| | | |
|---|---|---|
| ஆரம்பிக்கப்பட்ட புதிய வழித்தடங்கள் | | 1342 |
| இதனால் பயனடைந்த கிராமங்கள் | | 2389 |
| இதனால் பயனடைந்த மக்கட்தொகை | | 35.24 (இலட்சம்) |
| வாங்கிய புதிய பேருந்துகள் | | 4,163 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 1980-ல் | 47,321 |
| | 1984-ல் | 68,539 |

பெரிய போக்குவரத்துக் கழகங்களான, பாண்டியன், சேரன், கட்டபொம்மன் ஆகிய போக்கு வரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரித்து, குமரி மாவட்டத்தில், நேசமணி போக்குவரத்துக் கழகம் என்றும், பெரியார் மாவட்டத்தில் ஜீவா போக்குவரத்துக் கழகம் என்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில், மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் என்றும் புதிய போக்குவரத்துக் கழகங்கள் 1.4.1983 முதல் தனியாகச் செயல்படுத்தப்பட்டன. பல்லவன் புற நகர்ப்போக்குவரத்துக் கழகத்தைச் சீர்படுத்தி வேலூரைத் தலைமையகமாகக் கொண்டு பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஒன்று அமைத்து 1.12.'82 முதல் செயல் படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களுக்கும், மலைப்பகுதிக்கும் செல்ல 81 சிறிய பேருந்துகளும், 216 குறுகிய பேருந்துகளும், 10சந்தைப் பேருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நகர்ப்புறப் பேருந்து வழித்தடத்தின் நீளம் 25 கிலோ மீட்டரிலிருந்து 30 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

சாலை விபத்துக்களைக் கட்டுப்படுத்த அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மின் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மாதிரி கருவியை அரசுப் போக்குவரத்துக் கழகம் தானாகவே தயார் செய்து பொருத்தியது.

சென்னை பெருநகர் போக்குவரத்துக்காக உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, ரூ. 12.60 கோடி கடனுதவி பெற்று, சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் 2வது திட்டமாக 555 பேருந்துகளை வாங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏனைய போக்குவரத்துக் கழகங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் போக்குவரத்துத் துறையில் ஆலோசனை கூற

# எல்லோரும் விரும்பும் எகானமி மாடலுக்கு நிகராக இப்பொழுது ஒரு

# புதிய சாலிடெர் TS33E!

சாலிடெர் TS 32E, எல்லோரும் விரும்பி வாங்கும் ஜனதா மாடலாக திகழ்ந்தது. இதற்கு நிகராக இப்பொழுது தனிச் சிறப்பு வாய்ந்து, உங்கள் ரசனைக் கேற்ப எழிலான அமைப்பு கொண்ட சாலிடெர் TS 33E ஒரு அற்புத படைப்பு.

எளிதாக நகரக்கூடிய இரண்டு ஷட்டர்கள், பகட்டான பாலிஸ்டைரின் முகப்பு, நேர்த்தியான கன்ட்ரோல்கள் போன்ற சிறப்பான அம்சங்கள் அடங்கியது சாலிடெர் TS 33E.

அதுமட்டுமின்றி விஷன் இன்டர்மீடியட் ஃபிரிகுவன்ஸியில் (VIF) கண்டுள்ள முன்னேற்றத் திறல் செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட துல்லியமாக தெரியும் படத்தோற்றம். படம் மேலும் கீழுமாக ஓடாமலிருக்க பிரத்யேக ஆட்டோமாடிக் 'ஒலி தடுப்பு' அமைப்பு.

மேலும் இதிலுள்ள 4 வாட் ஆம்ப்ளிஃபையர் வெகு சீரான ஒலியை அளிக்கிறது. தொலைதூர இடங் களுக்கென இதில் கூடுதலாக ஒரு ஹை-கெய்ன் ஆன்டெனு அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. விசிஆர், டேப்ரெக்கார்டர் போன்றவற்றுக்கு பிரத்யேக அமைப்பு உள்ளது.

இத்தகைய முற்போக்கான அம்சங்களை மிக சிக்கன மாக உங்களுக்கு அளிக்கிறது TS 33E. எப்பொழு தாவது சர்வீஸ் வசதி தேவைப்பட்டால் உடனடி யான பராமரிப்பு உண்டு.

ரூ. 325 மிச்சம்
உள்ளடங்கிய வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்



# சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி




# கோடி நன்மை தரும் கூட்டுறவு

மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
**திரு. எஸ். திருநாவுக்கரசு**

கூட்டுறவு இயக்கம், சிக்கனம், சுய உதவி மற்றும் ஒருவருக் கொருவர் உதவுதல் என்னும் கொள்கையின் அடிப்படையில், விவசாயம், தொழில், உற்பத்தி முறைகள், வாணிபம், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் முன்னேற்றம் காணும் ஒரிய நோக்கைக்கொண் டது.

பெரும்பாலும், கிராமப்புறங் களில் வளர்ந்து வரும் இவ் வியக்கம் தமிழகத்தில் கிராமப் பொருளாதார மேம்பாட்டிற் காக அரும் பங்கு ஆற்றுகிறது.

## விவசாயிகளுக்கு உற்ற துணை

**தமிழக விவசாயிகளைக் கூட்டு றவு இயக்கத்தின்கீழ் பெருமளவில் கொண்டு வந்தது**—தமிழகத்தில் விவசாயிகளின் நன்மைக் காக சுமார் மூன்று கிராமங் களுக்கு ஒரு சங்கம் என்றஅளவில் சுமார் 4,700 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச்சங்கங்களும், வட்ட மற்றும் வட்டார அளவில் 183 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளும் இயங்கி வருகின்றன.

தமிழகத்தில் 53.14 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் (விவசாய நில உடைமைப்படி) உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தீவிர ஆதரவுடன் இவற்றில் கடந்த நான்கு ஆண்டு களில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்ட சுமார் 7 சதவீத விவ சாயக் குடும்பங்கள் உட்பட, தற் போது சுமார் 83 சதவீத விவ சாயக் குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வந்துள்ளன.

சிறு மற்றும் மிகச் சிறு விவ சாயக் குடும்பங்கள் தமிழகத்தில் 42.05 இலட்சம் உள்ளன. இவற் றிலும் கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங் களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்ட சுமார் 7 சத வீதக் குடும்பங்கள் உட்பட, தற்போது சுமார் 81 சதவீத குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத் தின்கீழ் வந்துள்ளன.

**ஆதிதிராவிடர்கள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வர மானிய உதவி தந்து வருவது**—ஆதி திராவிடர் வகுப்புகளைச் சேர்ந்த ஏழை விவசாயிகளைப் பெரு மளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பியதற்கிணங்க அவ் வகுப்புகளைச் சேர்ந்த விவ சாயக் குடும்பம் ஒவ்வொன்றி லிருந்தும் ஒவ்வொருவருக்கு, அவர் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக ரூ.100 அரசு மானியம் வழங்குகிறது. அவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்கப் படுகிறார். கடந்த ஆண்டு களில் இவ்வகையில் 80,000 ஆதி திராவிட விவசாயக் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன, நடப்பு ஆண்டில் அரசு மானியம் வழங்கி மேலும் 10,000 இவ்வகைக் குடும்பங்கள் சேர்க்கப்பட உள்ளன.

**விவசாயக் கடன்கள் வழங்கியது**—கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், சாகுபடி செலவிற்காகவும், ஆடு, பால் மாடு, கோழி வளர்த்தல் போன்ற விவசாயத்தைச் சார்ந்த துணைத் தொழில்களை ஏற்று நடத்து வதற்காகவும், விவசாயிகளுக்கும் கடன்களைத் தொடர்ந்துவழங்கி வருகின்றன. நிலங்களைக் குத் தகைக்குப் பயிரிடுவோருக்கும் கூட சாகுபடிக் கடன்கள் வழங் கப்படுகின்றன; நிலமில்லாத பண்ணைத்தொழிலாளர்களுக்குக் கூட, துணைத் தொழில்களுக்கான கடன்கள் வழங்கப்படுகின்றன. தேவைக்கேற்ப இக்கடன்கள் ஒரு வருக்கு 30,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றன; நபர் ஜாமீன்பேரில் 25,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றது.

சிறு விவசாயிகளுக்கு 11.5 சதவீத வட்டிக்கும். மற்றவர் களுக்கு 12.5 சத வீத வட்டிக்கும் இக்கடன்கள் வழங்கப்படுகின் றன. சாகுபடிச் செலவிற்காகக் கொடுக்கப்படும் குறுகிய காலக் கடன்கள் அறுவடையான விளை பொருள் விற்பனைத் தொகை யிலிருந்து திருப்பித் தரப்பட வேண்டும். துணைத் தொழில் களுக்காகப் பெறப்படும் மத்திய காலக் கடன்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பித் தரப்பட வேண்டும்.

படாமல் உள்ளவர்களுக்கு 7,000 ரூபாய் வரையில் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள் இது வரையில் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன.



**நகர்ப்புறக்கடனுதவி:**

தமிழகத்தில் வட்ட அளவில் 133 கூட்டுறவு நகர வங்கிகள் நகர்ப்புற மக்களுக்கும் ஓரளவு நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள மக்களுக்கும் வங்கி வசதிகளை அளிப்பதோடு, குறுகிய காலக் கடன்களையும் மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. இவ்வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் 1979-80ஆம் ஆண்டில் 88 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் சுமார் 150 கோடி ரூபாய்க்கு அதிகரித்தன. இவ்வங்கிகள் குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் ஏற்று நடத்த ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 2.5 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கி வருகின்றன. இவ்வங்கிகள் சுமார் 140 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகைகளைத் திரட்டியுள்ளன.



**சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்த உதவி:**

படித்து வேலையில்லாத இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்சாக நிதி உதவி அளிக்கும் பொருட்டு, கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கங்கள் சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைக்சப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நபர் ஜாமீன் பேரிலும், கடன்களைக் கொண்டு வாங்கும் இடம் பெயராச் சொத்துக்களின் இணைப் பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகின்றன. இதுபோன்ற சங்கங்களை இதர மாவட்டங்களிலும் அமைப்பதற்கான வாய்ப்புக்கள் ஆராயப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காகத் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களும், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு உதவுவதற்காகத் தனித் தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு அவர்களது ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள மானியம் மற்றும் கடனுதவி தருவதற்சாக தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் போன்ற சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குவதற்காகப் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தமிழகத்தில் இயங்கி வருவது, கூட்டுறவு இயக்கம் நலிந்த பிரிவினரின் பால் கொண்டுள்ள அக்கறையினைக் காட்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் நலத்திற்காக 1983-ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு அறிமுகப்படுத்தியுள்ள திட்டத்தின்கீழ், ஒரு பணியாளர் இறக்க நேரிட்டால் அவர் குடும்பத்தினர் 6,000 ரூபாய்க்குக் குறையாமல் ஈட்டுறுதித்தொகை பெற முடியும்.

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான முக்கிய கருவி கூட்டுறவு இயக்கமாகும். இது கூட்டுறவு இயக்கத்தின்கீழ், இது வரை வராதுள்ள தமிழக மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேருமாறும், தமிழகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் அரசு முயற்சிகளில் ஒத்துழைக்கும் படியும்கேட்டுக் கொள்கிறேன்.





# சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை

மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல்
கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர்
**திரு எஸ். என். இராசேந்திரன்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மனித இனத்தின் பிழைப்பிற்கு இன்றியமையாததாகும் என்பதால், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் திட்டங்களை மத்திய அரசுடன் கலந்து தமிழக அரசு செம்மையாக நிறைவேற்றி வருகிறது. இதற்காகச் சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறை ஒன்று, முழு நேர அரசுச் செயலாளருடன் 15-7-1983 முதல் இயங்கி வருகிறது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்களில் தொழிற்சாலைகளின்று வெளியேறும் கழிவுநீர், காற்றுப் போன்ற வெளியேற்றங்களின் தன்மையைக் கண்காணிப்பதும், நகர்ப்புறக் கழிவுநீரைச் சுத்தம் செய்யும் விதத்லைதக் கண்காணிப்பதும் இத்துறையின் முக்கிய பொறுப்புகளாகும். இத்துறை உருவாக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள், தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகளுக்கும், தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகளும் வெளியிடப்பட்டன. இது தவிர தமிழ்நாடு முழுவதும் ''காற்று மாசு கட்டுப்பாடுப்பகுதியாக'' அறிவிக்கப்பட்டது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் மாசைக் கட்டுப்படுத்துவதற்கான செயல் முறைகளை ஆராய நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் மீதும் காவிரி ஆற்றின் மாசு படுதலைக்கட்டுப் படுத்துவதற்கான பரிந்துரைகளின் மீதும் முடிவெடுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

நீர் மாசுபடுதலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், மத்திய அரசு, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தை 1974ல் இயற்றியது. இச்சட்டத்தை 31-8-81ல் தமிழ்நாடு அரசு அமலில் கொண்டு வந்து இதைச் சீரிய அமல் செய்ய ஒரு வாரியத்தை 27-2-1982 முதல் அமைத்தது. இவ்வாரியத்தின் பெயர் ''தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்" என்று தற்போது மாற்றப்பட்டுள்ளது. நீர் நிலைகளிலோ, நிலத்திலோ கலக்கும் வண்ணம் வெளியேற்றங்களை அல்லது மாசுபட்ட பொருள்களை திரவ நிலையிலோ, காற்று நிலையிலோ திட நிலையிலோ வெளியிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்தின் இசைவினைப் பெற்றுத்தான் அப்படிச் செய்ய வேண்டும். தொழிற்சாலைகள் இசைவு பெற 31-5-1984க்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு அரசிதழில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிற்சாலையும் வெளியேற்றும் பொருள்களின் ரசாயன மற்றும் நுண்ணுயிரியல் தன்மையை இவ்வாரியம் தனது இசைவு ஆணையின் மூலம் கட்டுப்படுத்தும்.

இதற்கிணங்க வெளியேற்றங்களைச் சுத்தி செய்வது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும். இதை மீறும் தொழிற்சாலைகளின் மீதும், வாரியத்தின் இசைவு பெற முன் வராத தொழிற்சாலைகளின் மீதும், நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குத் தொடர இவ்வாரியத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

காற்று மாசைத் தடுக்க மத்திய அரசு 1981ல் இயற்றிய காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் இம்மாநிலத்திலும் அமலாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் ''காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக" அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியான 6 மாதங்களுக்குள் மாநிலத்திலுள்ள காற்று மாசு படுத்தும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவினைப் பெற மனுச் செய்ய வேண்டும்.

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் புதிய அல்லது ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி

நீண்ட காலக் கடன்கள் சிறு விவசாயிகளுக்கு 10 சதவீத வட்டிக்குத் தரப்படுகின்றன; பெரிய விவசாயிகளுக்குச் சிறு பாசன காரியங்களுக்காக 10 சத வீத வட்டிக்கும், இதர காரியங்களுக்காக 12.5 சத வீத வட்டிக்கும் தரப்படுகின்றன. நீண்ட காலக் கடன்கள்,7 முதல் 15 ஆண்டுகளுக்குள் திருப்பித் தரப்பட வேண்டும்.

மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப் படுத்துவதற்காக அரசிடமிருந்து கடனுதவியுடன் 9,056 விவசாயிகளுக்கு 4.22 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் 1983-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளைஅமைக்கும்கடுவிரைவுத்திட்டத்தின்கீழ் அரசு உதவியுடன் பம்ப் செட்டுகள் அமைத்தல், பம்ப் அறைகள் கட்டுதல் உட்பட வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக ஒவ்வொரு கிணற்றுக்காகவும்,15,000 ரூபாய் வரையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. இது வரையில் 3,295 கிணறுகளுக்காகக் கடன்கள் ஒப்பளிக்கப்பட்டு, 2,690 கிணறுகள் தோண்டி முடிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய ஆற்றுக் கழிமுகப் பகுதிகளில் 2,400 நடுத்தர மற்றும் ஆழ் குழாய்க் கிணறுகளை அமைக்கும் இன்னொரு திட்டத்தின் கீழ், அரசு உதவியுடன் கடன்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சாகுபடிச் செலவிற்காக வழங்கப்பட்ட குறுகியகாலக் கடன்களின் அளவு 1979-80ஆம் ஆண்டில் 37.16 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் 75.34 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. விவசாயம் மற்றும் துணைத் தொழில்களுக்காக வழங்கப்படும் மத்திய காலக் கடன்களும் 1979-80ஆம் ஆண்டில் 5.54 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் 13.22 கோடி ரூபாய்க்கு அதிகரித்துள்ளன. நில மேம்பாடு மற்றும் விவசாயத்தையொட்டிய பல்வகைக் காரணங்களுக்கான நீண்டகாலக் கடன்கள் 1979-80ஆம் ஆண்டில் 8.85 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் 15.41 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளன. நடப்பு ஆண்டில் குறுகிய காலக் கடன்கள் 100 கோடி ரூபாய் அளவிற்கும், மத்திய காலக் கடன்கள் 17 கோடி ரூபாய் அளவிற்கும் நீண்ட காலக் கடன்கள் 16 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கப்படும்.**



**வழங்கப்படும் கடன்களில் நலிந்த பிரிவினரின் பங்கை உயர்த்தியது** — தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வகுத்துள்ள வழிமுறைகளின்படி வழங்கப்படும் மொத்த குறுகிய காலக் கடன்களில் 20 சதவீதம் நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆறாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் கொள்கை அளவிலான நோக்கம் மொத்த கடன் பட்டுவாடாவில், குறைந்தது 50 சத வீதத்திற்கு நலிந்த பிரிவினரின் பங்கை அகில இந்திய ரீதியில் உயர்த்த வேண்டுமென்பது ஆகும். ஆனால், தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் குறுகிய காலக் கடன்களில் நலிந்த பிரிவினருக்கான பங்கு 1979-80ஆம் ஆண்டில் 42 சத வீதத்திலிருந்து1983-84ஆம்ஆண்டில் 56சதவீதத்திற்கு உயர்ந்துள்ளது. மத்திய காலக் கடன்களில் 87 சதவீதமும், நீண்டகாலக் கடன்களில் 37 சதவீதமும் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படுகின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கும் கடன்களில் நலிந்த பிரிவினரின் பங்கை மேலும் உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பயிர் ஈட்டுறுதித் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது:** போர், அணு சம்பந்தப்பட்ட இடர்கள் தவிர வேறு எவ்வகையில் பயிர்கள் பாதிக்கப்பட்டாலும், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கான ஈட்டுறுதித் திட்டத்தைத் தேர்ந்தெடுத்த வட்டங்களில் நிறைவேற்றி வருகின்றன. விவசாயிகள் நன்மைக்காக இத்திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பிக் கூறி வந்தார்கள்.ஒருவிவசாயிஈட்டுறுதிசெய்து கொள்ளக் கூடிய உச்ச அளவுத் தொகை ஆண்டொன்றுக்கு மானாவாரிப் பயிருக்கு 5,000 ரூபாயும், பாசன வசதியுள்ள பயிருக்கு 10,000ரூபாயும் ஆகும்.

சிறு விவசாயிகளும், மிகச் சிறு விவசாயிகளும், தாம் செலுத்திய பிரிமியக் கட்டணத்தில் 50 சத வீத அளவிற்கு மானியம் பெறுகின்றனர். விளைச்சல் குறைவாக இருந்த இடங்களில், 1979-80 முதல் இதுவரையில் 6,059 விவசாயிகளுக்குச் சுமார் 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தது**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு,விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும்நோக்கத்துடன்கடந்த நான்கு ஆண்டுகளில், வட்டி தள்ளுபடி செய்தது அல்லது திருப்பித் தந்தது என்ற வகையில்



42கோடி ரூபாயும், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீடித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 99 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது. மேலும், தவணை தவறாத கடன்களை ஈடுகட்டுவதில் குறையை நீக்குவதற்காக அல்லது தவணைத் தேதியில் செலுத்தத் தவறிய தொகையைச் செலுத்துவதற்காக மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், நீண்ட காலக் கடன் வசூலைத் தள்ளி வைத்ததால்ஏற்பட்ட நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காகத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கும், அரசு 84 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களிடமிருந்து விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க, கடந்த நான்கு ஆண்டுகளில் அவர்களிடமிருந்து வரவேண்டிய 27.75 கோடி ரூபாய் அளவிற்கான குறுகியகாலக் கடன்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் மாற்றப்பட்டது. மேலும் நீண்ட காலக் கடன் தவணைகளின் வசூலும் 8.01 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளிப் போடப்பட்டது. சமீபத்திய வெள்ளம் காரணமாக, தஞ்சாவூர், தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கடன்களின் வசூலைத் தள்ளிப் போடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிணறுகள் தோண்ட நீண்ட காலக் கடன் பெற்றுள்ள உறுப்பினர்களின் கிணறுகள் பொய்த்த பொழுது, பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்துஅவர்கள் செலுத்த வேண்டிய வட்டியிலும் அசலிலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத அளவிற்கும், இதர சிறு விவசாயிகளுக்கு 90 சதவீத அளவிற்கும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத அளவிற்கும் உதவி தரப்படுகிறது. **இவ்வகையில் இதுவரை 2,110 பொய்த்த கிணறுகளுக்காக, 112 இலட்சம் ரூபாய் அளவிற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.**

**இரசாயன உர விநியோகத்தைப் பெருக்கியது:**—தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள்,தம் உறுப்பினர்களுக்குச் சாகுபடிக் கடன்களின் ஒரு பகுதியாகவும் உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அல்லாதவருக்கும் ரொக்கத்திற்கும், இரசாயன உரங்களைத் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் துவங்கப்பட்ட சுமார் 300 நிலையங்கள் உட்பட, 4,852 சில்லறை உர விற்பனை நிலையங்களின் வாயிலாகத் தமிழகமெங்கும்குறிப்பாக கிராமங்களில், உர விநியோகம் நடைபெறுகிறது.

1979-80-ஆம் ஆண்டில் 25.82 கோடி ரூபாய் மதிப்பிற்கு இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்க, 1983-84ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களால் 48.98 கோடி ரூபாய் அளவிற்கு இரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் இதை 60 கோடி ரூபாய்க்கு மேலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நகையீட்டுக் கடனுதவி**

தமிழகமெங்கும், கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் குடும்பச் செலவிற்காகக் கடன்களை வழங்கி வருகின்றன. இக்கடன்கள் சவரன் ஒன்றுக்கு 800 ரூபாய் வீதம் நபர் ஒருவருக்கு 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்கப்படுகின்றன. இக்கடன்களின் பேரில் 14 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது. இவ்வகைக் கடன்கள் 1979-80 ஆம் ஆண்டில் 1,581 கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 9.81 இலட்சம் பேர்களுக்கு 111.42 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன. இது படிப்படியாக அதிகரித்து, 1983-84 ஆம் ஆண்டில், 1,846 கூட்டுறவு அமைப்புகள் மூலமாக 10.24 இலட்சம் பேர்களுக்கு, இதுவரை இல்லாத வகையில், 193.74 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. நகைக் கடன்கள் நடப்பாண்டிலும் தொடர்ந்து வழங்கப்படுவதன் மூலம் விவசாயிகளும், தொழிலாளர்களும் மற்ற வகையினரும் இலட்சக் கணக்கில் பயனடைவர்.



**சிறு தொழில்களை மேற்கொள்ள குறைந்த வட்டிக்குக் கடனுதவி:**

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் விருப்பத்திற்கிணங்க, தமிழகத்தில் கடந்த நான்காண்டுக் காலமாக நலிந்த பிரிவினருக்குச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்ள மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீத வட்டிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டிக்கும் இச்சலுகை வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்குகிறது. எல்லா வகையிலும், ஆண்டு வருவாய் கிராமப் பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும் ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் மேற்

நிறுவனங்கள் தங்களது கழிவு நீரை வெளியிட மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவைப் பெற வேண்டும். இது பற்றி வாரியம் முக்கிய நாளேடுகளில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. 30-3-'84 வரை 815 தொழிற்சாலைகள்தான் வாரியத்தின் இசைவு கேட்டு விண்ணப்பித்துள்ளன, இவற்றில் 277 தொழிற்சாலைகளுக்கு இசைவு வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் குழு**

மாநிலத்தில் திட்டமிடப்படும் ரூ. 50 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களை, சுற்றுப்புறச் சூழல் அடிப்படையில் பரிசீலித்து, அரசுக்குக் கருத்துத் தெரிவிக்க ஒரு குழுவை அரசு நியமித்துள்ளது. இக்குழுவின் பெயர் "தமிழ்நாடு சுற்றுப்புறச்சூழல் குழு", இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை அரசுக்குப் பரிந்துரை செய்யுமுன் சம்பந்தப்பட்ட துறைத்தலைவர் அத்திட்டத்தை இக்குழுவிற்கு அனுப்ப வேண்டும். தூத்துக்குடியிலும், வட சென்னையிலும், நெய்வேலியிலுமுள்ள அனல் மின் நிலையங்களுக்கு இக் குழு அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் இக்குழுவின் தலைவராவார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர்-செயலர் இக்குழுவின் உறுப்பினர்-செயலர் ஆவார்.

**கடலோரப் பகுதிகளின் சுற்றுப்புறத் தன்மையைப் பாதுகாக்கும் திட்டம்:**

கடலோரப்பகுதிகளின் சுற்றுப்புறத் தன்மையைக் காப்பாற்றும் பொருட்டு தலைமைச் செயலாளரின் தலைமையில் ஒரு உயர் மட்ட அதிகாரிகள் குழுவினை அரசு அமைத்துள்ளது. கடலோரப் பகுதிகளில் 500 மீட்டர் தூரத்திற்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் இக்குழுவின் அனுமதி பெற வேண்டும்.



**விமான நிலைய சுற்றுப்புறப் பாதுகாப்புக் குழு**

மாநிலத்தில் உள்ளவிமான நிலையங்களின் அருகே விமானங்களுக்குப் பறவைகளால் தாக்குதல் ஏற்படக்கூடும் என்பதால் விமான நிலையச் சுற்றுப்புறங்களைப் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறைச் செயலாளரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது, இக்குழுவின் பரிந்துரையின் மேல் திருச்சி விமான நிலையத்திற்கு அருகேயுள்ள தோல் பதனிடும் ஆலைகள் பறவைகள் வராதிருக்கத் தகுந்தவாறு கம்பி வலைகளைப் போட்டுத்தங்களின் சில திட நிலை கழிவுப் பொருள்களைக் காயப்போடுகிறார்கள். சென்னை விமான நிலையத்தின் அருகே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கட்டவிருந்த லாரி மற்றும் பேருந்து முடிவிடத்தை, பறவைகளால் விமானங்களுக்குத் தாக்குதல் ஏற்படலாமென்ற காரணத்தால் அவ்விடத்தை விட்டு மாற்ற, திட்டமிடச் செய்யப்பட்டுள்ளது. இக்குழுவிற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர்-செயலாளராக இருக்கிறார்.

**உலகச் சுற்றுப்புறச் சூழல் நாள்**

ஒவ்வொரு அண்டும் ஜூன் திங்கள் 5ஆம் நாள் இது கொண்டாடப்படுகிறது. மாட்ட ஆட்சியாளர்களால் மாவட்டத் தலைநகரங்களில் இந்நாளில் சுற்றுப்புறச்சூழல் பற்றிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம்:**

இச்சட்டம் 1977ல் மத்திய அரசு நிறைவேற்றியது. நீரைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளும் உள்ளாட்சி நிறுவனங்களும் இம் மேல் வரியைச் செலுத்த வேண்டும். சமீபத்தில் வசூல் தொடங்கப்பட்டுள்ளது. இத்தொகை மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. அத்தொகையில் வசூலுக்காக 7½% போக மீதித் தொகையில் 80% மாநில அரசுக்கு மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அளிக்கும் பொருட்டு, மத்திய அரசு திருப்பித் தருகிறது.

காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் புதிதாக அமலுக்கு வந்துள்ளதால் அச்சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளுக்கு இசைவு அளிப்பதைக் கண்காணிக்க மாசு கட்டுப்பாடு வாரியம் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி வருகிறது.

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக அதிகமாக மாசு படுத்தும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள், காகிதத் தொழிற்சாலைகள், எரி சாராயத் தொழிற்சாலைகள் முதலியவற்றின் கழிவு நீரைச் சுத்திகரிக்க வைக்கத் தேவையான நடவடிக்கைகளை வாரியம் மேற்கொள்ளும்.

கட்டுப்பாடுகளை மீறும் தொழிற்சாலைகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான சட்டவியல் பிரிவினையும் வாரியம் உருவாக்கும்.

மாசு கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய முக்கியமான கருவி மாசு பட்ட பொருள்களை எடுத்துப் பரிசீலனை செய்வதற்கானஅமைப்பாகும். இதற்கெனத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் பிராந்திய அலுவலகங்களுக்குத் தனி ஊழியர்களை நியமிப்பதுடன் நீர் மற்றும் காற்றுக் கழிவுகளை முழுமையாக ஆராய்வதற்குத் தகுதியுடைய ஆய்வகம் சென்னையில் அமைக்கும்.

மாநிலத்தின் ஆறுகள் நீர்ப்பிடிப்புகள் முதலியவற்றின் தண்ணீரின் தன்மையைப் பரிசோதித்து, தண்ணீரின் தன்மைக்கேற்ப மாநிலத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, அதில் ஒவ்வொரு பகுதியிலும் நீர்-நிலைத் தன்மை மேலும் பாதிக்காத விதத்தில் எவ்விதத் தொழிற்சாலைகள் அனுமதிக்கப்படலாமெனத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச் சட்டத்தின் கீழ் தண்ணீர் மேல் வரி வசூலிக்கும் திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

நகர்ப்புறத் திடநிலை வெளியேற்றங்களை எவ்விதம் சுத்திகரிக்கலாமெனத் தனியாக ஆலோசிக்கக் குழு அமைக்கும் செயத்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நிலையைமேம்படுத்த ஆக்கப்பூர்வமான வழிவகைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, அம்மக்களின் அனைத்து நலன்களையும் கருத்திற்கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் தனது அன்புக்கரங்களை நீட்டி உதவி புரிந்து வருகிறது.

தமிழக மக்கட்தொகையில் 19.41 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆவர்.

...மல்லாத பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன. 1980-81 முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 48 புதிய உறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டு செம்மையான முறையில்நடத்தப்பட்டு வருகின்றன. 685 ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்களும், 20 பழங்குடியினர் மாணவர் இல்லங்களும் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1.7.1982க்கு முன்னர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயின்றுவந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 22 காசு அடக்கச் செலவில் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. 1.7.1982க்குப் பிறகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 14 வயது வரை யிலுள்ள 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 0.45 காசு செலவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டம் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இத்துறையைச் சேர்ந்த பள்ளிகளில் பயிலும் 1.78 லட்சம் இளஞ்சிறார்கள் வயிறார உண்டு கல்வியில் ஆர்வம் காட்டி வரு...

# ஆதி திராவிடர்-பழங்குடி மக்களுக்கு அரசு ஆற்றும் நலப்பணிகள்

**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**

## திரு எம். விஜயசாரதி

நடப்பு நிதியாண்டில் 48.29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அம்மக்களுக்கான பயன் நல்கிடும்பல திட்டங்கள்செம்மையாய்ச்செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

(ஆதிதிராவிடர் - பழங்குடியினரின் நல்வாழ்வு சிறப்பாய் அமைய அவர்களுக்கு அடிப்படைத் தேவை கல்வியே ஆகும். அக்கல்வியினை அளித்திட அரசு அனைத்துவகை ஊக்கத்தினையும் அளித்துவருகிறது. ஆதிதிராவிடர் - பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கட்கும் உண்டி, உறைவிடத்துடன் செம்மையான கல்வியும் அளிக்க அரசு எல்லா வகையிலும் உதவி செய்து வருகிறது.)

இத்துறையினரால் 952 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும், 149 பழங்குடியினர் உண்டி,உறைவிடப் பள்ளிகளும் ஒரு உறைவிட...



வது நாடறிந்த உண்மையாகும்.

கல்விக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்காக இத்துறையின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

*1980—81* ரூ. *1607.80* லட்சம்
*1981—82* ரூ. *1791.25* லட்சம்
*1982—83* ரூ. *2117.58* லட்சம்
*1983—84* ரூ. *2378.27* லட்சம்

*1980-81, 1981-1982* மற்றும் *1982-83*ஆம் ஆண்டில் *79,695* பட்டாக்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டன. *1983-84*ஆம் ஆண்டில் *23,915* பட்டாக்கள் வழங்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில் நிலம் கையகப் பணிக்காக ரூ*125.* லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டு வசதியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ரூ.*4,000* மதிப்பீட்டுச் செலவில் *201* ச. அடி பரப்பில் பயன் பெறுவோர் தாங்களே வீடுகளைக் கட்டிக் கொள்ளும் வகையில் ரூ. *3,250* மானியமாக வழங்கப்பட்டது. மீதமுள்ள ரூ. *750* பயன்பெறுவோரின் சொந்த உழைப்பாகக் கருதப்பட்டது. தற்பொழுது ஒருவீட்டின் மதிப்பீட்டுச்செலவை ரூ. *4000*லிருந்து ரூ. *6000* ஆக உயர்த்தி முழுவதும் மானியமாக வழங்கப்படுகிறது.

மேற்கண்ட வீட்டு வசதித் திட்டத்திற்காக, ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்கென *1981-82* முதல் *1983-84* வரை ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட தொகையின் விவரம் வருமாறு :

*1981 —82* ரூ. *200* (இலட்சம்)
*1982 —83* ரூ. *200* ,,
*1983 —84* ரூ. *200* ,,

(கலப்பு மணம் புரிந்துகொண்ட ஆதிதிராவிடர் மக்களை ஊக்குவிப்பதற்காக ரூ. *4000* தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ. *300* திருமணச் செலவுக்காகவும் அத்துடன் பாராட்டுப் பத்திரம் மற்றும் *8* கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் அளிப்பதுடன், அத் தம்பதியரின் குழந்



தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் முறையே 6 இடங்களும் 5 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருவதை உற்றுநோக்குங்கால் மறைந்தபேரறிஞர் அண்ணா அவர்களின் கனவு நனவாகி வருவதை நாம் அறியலாம்.)

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுமார் *1.80* லட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்த வேண்டும் என்ற இலக்கு நிர்ணயித்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட முக்கிய திட்டங்களை எடுத்துக் கொண்டால் வேளாண்மையில் ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு எல்லா உதவிகளும் செய்து தரப்படுகின்றன.

(ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்முறையில் பெரும்பாலான ஆதிதிராவிடர்கள் பயன்பெற்று வருகின்றனர் என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். அத்துடன் அவர்களுக்குக் கிடைக்கும் சலுகையில் *3*ல் ஒரு பகுதி மானியமாக அளிக்கப்படுகிறது. கால்நடை வளர்ச்சியில் இம்மக்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இன்று இம்மக்களிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சி வெண்மைப் புரட்சியில் ஈடுபட வேண்டும் என்பதாகும். அதன்படி ஆதிதிராவிடர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க *3*ல் ஒரு பாகம் மானியம் என்ற நிர்ணயக் குறியை மாற்றி *50* சதவிகிதம் மானியமாக அளித்து ஆயிரக்கணக்கான ஆதிதிராவிடர் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றன. தாமும் வயிறார உண்டு நாட்டின் தேவையையும் ஈடுசெய்கின்றனர் என்ற உண்மை நிலை தமிழ்நாடெங்கும் நிலவுகிறது.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த இளைஞர்களுக்குத்தரைப் படை மற்றும் காவல்துறையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பினை அதிகரிக்க இவர்களுக்கு உடல் அமைப்பு, அறிவுக் கூர்மை இவற்றை அதிகரிக்கும் பொருட்டும், சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் *1981* ஆம் ஆண்டு முதற்கண் இராமநாதபுரம், திருநெல்வேலி இரண்டு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் *100* ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இரண்டு மாத காலம் பயிற்சி அளிப்பதற்காக அரசு அனுமதி வழங்கியது.)

இந்தப் பயிற்சி முகாம்கள்






பயன் அளிக்கும் வகையில் அமைந்ததால் *1982*ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் *100* ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு *60* நாட்களுக்கு இராணுவப் படை மற்றும் காவல் துறையில் சேருவதற்கு வகை செய்யும் பொருட்டு பயிற்சிமுகாம்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியது. இதற்காக ரூ. *11,16,800*- சிறப்பு மைய நிதியில் இருந்து வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. முன்பு சொன்ன பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்று இராணுவப் படையில் சேர *636* இளைஞர்களும் காவல்துறையில் சேர *167* இளைஞர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கட் தொகையில் *1.07* சதவிகிதமாக பழங்குடியினர் இருந்தபோதிலும் தமிழக அரசு, ஆதிதிராவிடர் நலனுக்கெனச் செயற்படுத்தப்படும் சிறப்பு உட்பகுதித் திட்டங்களைப் போலவே பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ், சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இத் துணைத் திட்டம் *1976-77*ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(*1980-81*ஆம் ஆண்டில் பழங்குடி மக்களின் துணைத் திட்ட வரைவு ரூ. *345.25* இலட்சத்திலிருந்து *1983-84*ஆம் ஆண்டிற்கு ரூ. *600.58* இலட்சமாக உயர்ந்துள்ளது. *1984-85*ஆம் ஆண்டிற்குள் மொத்தப் பழங்குடி மக்களின் *50* சதவிகிதம் மக்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்தவும், அவர்களுக்கு முக்கிய தேவையான குடியிருப்பு, பள்ளிகள், சாலை வசதி, மருத்துவம் போன்ற வசதிகள் பழங்குடி மக்களின் துணைத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டு வருகின்றன.)

**கடந்த நான்கு ஆண்டுகளில் 12,466 பழங்குடி மக்களின் குடும்பங்கள், குடும்பப் பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின் மூலமாக வறுமைக் கோட்டைத் தாண்டியுள்ளன. (பழங்குடியினர் துணைத் திட்டத்தில் தோட்டக்கலை, மண் வளப்பாதுகாப்பு, சிறுபாசனம், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி, சுகாதாரம், சமூக நலம், கிராமியத் தொழில்கள், பட்டுப் புழு வளர்ப்பு, சாலைப் போக்குவரத்து, குடிநீர் வழங்குதல், மின் இணைப்பு வழங்குதல் ஆகியவை அடங்கும்.)**

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் *1980*ஆம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் விதிமுறைகளைச் செயல்படுத்த *20* இயங்கும் காவல் படைகள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் (கும்பகோணம்) மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(மேலும், தீண்டாமையின் தீமைகளைப் பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் திரையிட்டு விளம்பரம் செய்வதற்காகத் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

வன்முறைக் கொடுமைகள் மற்றும் இனக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களைச் சார்ந்துள்ளோருக்கும் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து ரூ. *250* முதல் ரூ. *2000* வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்தியப்பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன் பயிற்சிஅளிக்கும் நிலையம் *1966*ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அனைத்திந்தியப் பணிகளில் நியமனம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. *1000* மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து *44* மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.)

*1981 —82*ல் *8* மாணவர்களும் *1982 —83*ல் *2* மாணவர்களும் வெற்றியடைந்தனர்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், புரட்சித் தலைவர் அரசின் நல்ல சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு சமூக, பொருளாதார, கல்வித்துறையில் மேம்பாடு கண்டிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்

## கன்னியாகுமரி மாவட்ட
## கூட்டுறவு நூற்பு ஆலை லிட்., எண். ஒய். 238

ஆரல்வாய்மொழி

தந்தி ; "கன்யாஸ்பின்" தொலைபேசி எண். 24 & 26

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | : | ரூ. 100.00 லட்சம் |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | : | ரூ. 72.71 ,, |
| நிறுவப்பட்ட கதிர்களின் எண்ணிக்கை | : | 24960 கதிர்கள்<br>3588 முறுக்குநூல் கதிர்கள்<br>360 கோன் வைண்டிங் உருளைகள் |
| உற்பத்தி செய்யப்படும் நூல்கள் | : | 20, 40, 60, 80, 2/20,<br>2/60 மற்றும் 2/80 |
| ஆண்டு ஒன்றுக்குச் சராசரி விற்பனை | : | ரூ. 6.00 கோடி |

திரு என். இராமமூர்த்தி,
நிர்வாக இயக்குநர்.

திரு எல். கே. திரிபாதி, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர்.



குறைந்த விலையில் தரம் வாய்ந்த துணிகளுக்கு
சுமங்கலி சில்க்ஸ்
திருமணம் மற்றும் சுப காரியங்களுக்கு ஏற்ற நவீன துணிகளுக்கு
சுமங்கலி சில்க்ஸ்
மங்கையர்கள் விரும்பும் பல வண்ணத் துணி ரகங்களுக்கு
சுமங்கலி சில்க்ஸ்
பட்டுச் சேலைகளுக்கும், ரெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த இடம்
சுமங்கலி சில்க்ஸ்

## சுமங்கலி சில்க்ஸ்

லாரன்ஸ் ரோடு — கடலூர்-2.

அனைவரும் வாரீர்! ஆதரவு தாரீர்!!

போன் : 776


# புரட்சித் தலைவரின் புரட்சிகரமான திட்டம்



மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர்
**திரு ஆர். சவுந்தரராஜன்**

நம்முடைய முன்னோர்கள் உணவைப் பிறர்க்கென வழங்கி உண்பவர்களை மிகவும் புகழ்ந்துரைத்து, பிறர்க்குத் தெரியாமல் தானே உண்பவர்களை இகழ்ந்துரைத்தனர்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

எனத் திருவள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார்.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இச்சகத்தினை அழித்திடுவோம்" என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சூளுரைத்தார். "ஏழைகளுக்கு உண்ணும் உணவின் வடிவத்தில் இறைவன் தோற்றமளிக்கிறான்" என்று காந்தியடிகள் கூறியுள்ளார். இக்கருத்தின் விளக்கமாகவே "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்" என்று பேரறிஞர் அண்ணா கூறினார். குழந்தைகளிடையே நிலவும் பசிப்பிணி அதுவும் குறிப்பாக அவர்கள் வாழ்வையே அழிக்கும் கொடுமை கொண்ட அந்தப் பசிப் பிணித் துயரைச் சொல்லி முடியாது.



எனவே அத்தகைய அவல நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டே நம்முடைய குழந்தைகளுக்கான நண்பகல் சத்துணவுத் திட்டம் இந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளது. மனிதாபிமானக் கோட்பாட்டினாலும், நல்லெண்ணத்தினாலும் தூய பணியைத் தொடர்கிறோம் என்ற உன்னத உணர்வினாலும் தொடங்கப்பட்ட சில வாரங்களுக்குள் இம்மகத்தான திட்டம் மக்களிடையே ஆர்வத்தையும் ஆதரவையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

### முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

இத்தகைய மாபெரும் 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' 2 முதல் 4 வயது வரை உள்ள பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கும், 5 முதல் 14 வயது வரை உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கும் 1.7.1982 முதல் கிராமங்களிலும், 15.9.1382 முதல் நகரப்பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டது. உணவு தயாரிக்க ஒவ்வொரு குழந்தைக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்படும் விகிதம் வருமாறு:

பாலர் பள்ளிக்கு அரிசி 80 கிராம், பருப்பு 10 கிராம், எண்ணெய் 5 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் 50 கிராம் என்ற வீதத்திலும் பள்ளிக்கு அரிசி 100 கிராம், பருப்பு 15 கிராம், எண்ணெய் 5 கிராம், காய்கறி மற்றும் தாளிதம் 50 கிராம் என்ற வீதத்திலும் வழங்கப்படுகின்றன.

### பயனடைவோர்

1982ஆம் ஆண்டு, திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட பொழுது 2 முதல் 4 வயது வரை உள்ள 16.93 லட்சம் குழந்தைகளுக்கு உணவளிக்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு முழுவதும் 27,897 பாலர் பள்ளி மையங்கள் இயங்கி வருகின்றன. 24.34 லட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள். பள்ளி மையங்களில் 5 முதல் 9 வயது மற்றும் 10 முதல் 14 வயது வரையுள்ள 39.84 லட்சம் மாணவர்கள் உணவருந்தி வருகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 34,087 பள்ளி மையங்கள் வெவ்வேறு துறைத் தலைவர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. நாடெங்கும் மொத்தம் 65 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர்.

இத்திட்டம் முதியோர் உதவித் தொகை பெறும் 1.99 லட்சம் முதியோர்களுக்கு 15.1.1983 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள பாலர் பள்ளி மையங்களிலிருந்து உணவு பெறுகின்றனர்.



டப்பட்டுள்ளன. மேலும் 15,703 வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

**நகர விரிவாக்கத் திட்டம் :**

நகரங்களில் மக்கள் நெருக்கடியைப் போக்கும் பொருட்டும், கிராமங்களிலும், புறநகர்ப்பகுதிகளிலும் அவைகளை மேம்படுத்தி மக்களைக் குடியேற்றும் இப்புதிய திட்டத்தை வாரியம் செயல்படுத்த உள்ளது. குறைந்த விலையில் கிடைக்கும், உபயோகம் குறைந்த புறநகர் நிலங்களை வாங்கி, வசதிகளுடன் கூடிய மனைகளாக மேம்படுத்தி, எதிர்பார்க்கும் மக்கள் பெருக்கத்திற்குக் குடியமர்த்த இத்திட்டம் வகை செய்கிறது. மேலும் தொழிற் கூடங்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. 10,000 பேர் மக்கள் தொகைக்குக் குறைவான 70 நகர்ப் பஞ்சாயத்து ஊர்கள் இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு வீடுகள் :**

**இத்திட்டத்தினால் சிறுதொழில் செய்வோர், நெசவாளர், சலவையாளர், மீனவர் ஆகியோர் பயனடைகிறார்கள். ஆண்டு வருமானம் ரூ. 4200 வரை உள்ளவர்களுக்கு இந்த வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கு 7% வட்டி வீதமும் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது.**

**இத்திட்டத்தின்கீழ்,பல குடிசைப் பகுதிகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக அவர்களுக்கு வீடுகளை வாரியம் கொடுத்துக் குடியமர்த்துகிறது.**

வாரியம் 10,195 வீடுகளை மனைகள் மற்றும் பணிகள் திட்டத்தின் கீழும், பொருளாதாரத்தில் பின்தங்கியோர் திட்டத்தின் கீழும் அமைத்து இருக்கிறது. ஆலைத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வேலை செய்யும் இடத்திற்கு அருகிலேயே அவர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடுகள் கொடுக்கும் திட்டத்தையும் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

**குறைந்த வருமானம் உடையோருக்கு வீடுகள்:**

இத்திட்டத்தின் கீழ், ஆண்டு வருமானம் ரூ. 4201 முதல் 7200 வரை உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டி,வழங்கப்படுகின்றன.வட்டி வீதம் 8%.திருப்பிச் செலுத்தும் காலம் 15 ஆண்டு.

**நடுத்தரவருமானம்உடையோருக்கு வீடுகள் :**

ஆண்டு வருமானம் ரூ.7201 முதல் 18000 வரை உள்ளவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வீடுகள் வாரியத்தால் கட்டி வழங்கப்படுகின்றன. வட்டி விகிதம் 10.5%முதல் 11.5%வரை. திருப்பிச் செலுத்தும் காலம் 12 ஆண்டு.

**உயர் வருமானம் உடையோருக்கு வீடுகள்:**

ஆண்டு வருமானம் ரூ.18000க்கு மேல் உள்ளவர்களுக்கான திட்டம் இது. வட்டி விகிதம்12.5%.திருப்பிச் செலுத்தும் காலம் 10 ஆண்டு.

**தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீட்டு வாடகைத் திட்டம்:**

அரசுக்குச் சொந்தமான இடங்களில் அரசு அலுவலர்களுக்குத் தமிழகம் முழுவதிலும் தேவையான இடங்களில் வீடுகளைக் கட்டி முடித்து,அதைப் பராமரிக்கும் வேலையையும் செய்யும்படி வாரியத்தைத் தமிழக அரசு பணித்திருக்கிறது. இந்த வீடுகள் அரசால், அரசு அலுவலர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒதுக்கப்படுகின்றன.

**காவலர் குடியிருப்புத் திட்டம்:**

காவலர்களுக்கு, தமிழகத்தில் பல இடங்களில் வீடுகட்டும் திட்டமும், வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாரியம் இத்திட்டத்தை ''முன்வைப்புத் தொகை''த் திட்டத்தின்கீழ் செய்து வருகிறது.

**பளிங்கு ஓடு தொழிற்சாலை:**

ஆண்டுக்கு 3 இலட்சம் பளிங்கு ஓடுகள் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலையை வாரியம் ஏற்படுத்தியுள்ளது. இங்குத் தயாரிக்கப்படும் பளிங்கு ஓடுகள் வாரியத்தின் வேலைகளுக்கும், வெளிவிற்பனைக்கும் கொடுக்கப்படுகின்றன.

**வீட்டுவசதி நிர்வாகமும், செயல் முறையும்,**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரசால் உருவாக்கப்பட்ட, தன்னாட்சி கொண்ட, தமிழகம் முழுவதற்கும் வீட்டுவசதித்திட்டத்திற்கென உருவாக்கப்பட்ட ஒருநிறுவனம். வாரியம் சென்னை மாநகரில் பல கோட்டங்களும், திருச்சி,கோவை,சேலம்,ஈரோடு, மதுரை, ஹோசூர், வேலூர்,திருநெல்வேலி ஆகிய இடங்களில் கோட்டங்களும் அமைத்துப்பணிகளை நிறைவேற்றி வருகிறது.

## மாவட்டங்களிலும் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள்

குடிசைமாற்று வாரியம் சென்னையிலுள்ள குடிசைப்பகுதிகளை அகற்றி மாடி வீடுகள் கட்டியும் குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தும் வருகிறது.



**குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள்:**

வாழ்வதற்கொவ்வாத குடிசைப் பகுதிகளிலுள்ள குடிசைகளை அகற்றி அப்பகுதியில் ஒதுக்கீடு பெறத்தகுதி வாய்ந்த குடிசை வாசிகளின் எண்ணிக்கைக்கு குறையாமல் அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படுகின்றன.

வாரியம் கட்டும் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் கழிவறை, குளியலறை, மேல்நிலைத் தொட்டிகள் மூலம் தண்ணீர்வசதி மற்றும் கழிவுநீர் வெளியேற்று வசதி ஆகியவை கொண்டதாக இருக்கும்.

வாரியக் குடியிருப்புகளைக் குடிசைவாசிகளுக்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்யும் ஒவ்வொரு குடியிருப்பிற்கும் மாதத்திற்கு ரூ. 20- லைசென்ஸ் தொகையாக வசூலிக்கப்படுகிறது. தண்ணீர் வசதி செய்தளித்திருந்தால் மாதம் ரூ. 22 வசூலிக்கப்படுகிறது. மேலும் மின்சார வசதியும் அளிக்கப்பட்டிருந்தால் மாதம் ரூ. 25 வசூலிக்கப்படுகிறது.

ஒதுக்கீடுதாரர்கள் விரும்பினால் குடியிருப்புகள் தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அதற்கு ஆரம்பப் பாதுகாப்புத்தொகை வசூலிக்கப்படுவதில்லை. அவ்வாறு ஒதுக்கீடு பெற்றவர்களிடமிருந்து மாதத் தவணைத்தொகை ரூ. 45 தரைத் தளத்திற்கும், ரூ. 40 முதல் தளத்திற்கும், ரூ. 35 -இரண்டாம் தளத்திற்கும் ரூ. 30 மூன்றாம் தளத்திற்கும் பெறப்படுகிறது.

இந்தத் தவணைத்தொகை 25 ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டும். குடியிருப்புகளின் விலையை மேற்குறிப்பிட்ட தவணைமுறையிலோ அல்லது ஒரே தவணையிலோ முழுமையாகச் செலுத்திய பின் ஒதுக்கீடுதாரர்களுக்குக் குடியிருப்பிற்குரிய விற்பனைப்பத்திரம் வழங்கப்படுகிறது.

கடந்த நான்காண்டுகளில் இவ்வாரியம் 9,006 குடியிருப்புகளை ரூ. 873.46 இலட்சங்கள் செலவில் கட்டியுள்ளது. 1984-85ம் ஆண்டு மேலும் 2,000 குடியிருப்புகளை ரூ. 340 இலட்சங்கள் செலவில் கட்டவுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் ரூ.152.32 இலட்சங்கள் செலவில் 20,790 குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயன்பெற்றுள்ளனர். 1984-85ஆம் ஆண்டு 11,950 குடும்பங்கள் ரூ.140 இலட்சங்கள் செலவில் பயன்பெறுவர்.

**சென்னை ஹால்ஸ் ரோட்டில் உருவாக்கப்பட்டுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்.**



**சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்:**

உலகவங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு நில உரிமை வீடுகட்ட கடன் கொடுக்கப்படும். அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,350- செலவு செய்யப்படுகிறது.

கடந்த நான்காண்டுகளில் 41,524 குடும்பங்கள் பயன்பெறுமாறு ரூ. 935.74 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. 1984-85ல்ரூ. 600 இலட்சங்கள் செலவில் மேலும் 15,000 குடும்பங்கள் பயன்பெற உள்ளன.

**பட்டா வழங்குதல் மற்றும் வீடு கட்டிக்கொள்ள கடன் வழங்குதல்:**

உலகவங்கித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு நிலஉரிமை மற்றும் வீடுகள் கட்டிக்கொள்ள மேம்படுத்திக் கொள்ள கடனுதவி மற்றும் மான்யம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கடன் மற்றும் மான்யம் வழங்க ரூ. 10.33 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிலத்தின் விலை (20ச.மீ. மனைக்கு ரூ. 7) அபிவிருத்திச் செலவு (ரூ. 8 )மற்றும் பராமரிப்புக்கட்டணம் (ரூ. 2 ) ஆகியவை ஒவ்வொரு ஒதுக்கீடுதாரரிடமிருந்தும் ஒவ்வொரு மாதமும் 10 ஆண்டுகளுக்கு வசூலிக்கப்படும். மனையின் முழுக் கிரயத்தையும் அபிவிருத்திச் செலவு முழுவதையும் செலுத்தியபின் மனைக்குரிய விற்பனைப்பத்திரம் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட வீடுகட்டிக்கொள்ளக் கொடுக்கப்படும் கடன் 15 ஆண்டுகளில் தவணையில் திரும்பச் செலுத்த வேண்டும். கடந்த நான்காண்டுகளில் 24,483 குடும்பங்கள் நில உரிமை பெற்றுள்ளனர். 17,079 குடும்பங்களுக்கு வீடுகட்ட ரூ. 477.96 இலட்சங்கள் கடன் அங்கீகரிக்கப்பட்டு ரூ. 256.47 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1984-85ஆம் ஆண்டு 20,000 குடும்பங்கள் நில உரிமைபெற உள்ளனர். 15,000 குடும்பங்களுக்கு ரூ. 480 இலட்சங்கள் கடன் அங்கீகரிக்கப்பட்டு, ரூ.273 இலட்சங்கள் கடன் வழங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாநிலத்தின் பிறபகுதிகளில் குடிசைப்பகுதி மாற்று வாரியப் பணிகளை விரிவாக்கம் செய்வது.**

1970ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இவ்வாரியம் 1984 வரை சென்னை மாநகரில் மட்டுமே பணிகளைச் செய்து வந்தது. **1984-85ஆம் ஆண்டிலிருந்து வாரியம் மாநிலத்தின் குறிப்பிட்ட சில இதர நகரங்களிலும் பணிகளைச் செய்ய வேண்டும் என புரட்சித் தலைவரின் அரசு முடிவெடுத்துள்ளது.**

1984-85ம் ஆண்டு - மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் குடியிருப்புகள் கட்டுவது குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது போன்ற பணிகளை வாரியம் மேற்கொள்ளும்.

1.1.1984 முதல், முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் விதவையர்க்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

**1.5.1984 முதல் முதியோர் உதவித்தொகை பெறத் தகுதி பெற்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 63,000 நபர்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.** அன்று, ஏற்கனவே முதியோர் உதவித் தொகை பெறுபவர்க்கும், இன்னும் பெறாதவர்க்கும் வேட்டி, சேலையும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக, முதியோர் உதவித் தொகை பெறத்தகுதி பெற்ற நபர்கள், ஊனமுற்றவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்ட விதவைகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் உட்பட, மொத்தம் தோராயமாக 63,000 பேர்பயனடைகிறார்கள்.



குழந்தைகளுக்குச் சத்துணவு போடுகிறோம்; இது பற்றிச் சிலர் குறை கூறுகிறார்கள். பசித்த குழந்தைகள், அரசு வழங்கும் உணவைச் சாப்பிடுவது, கேவலமா?

### பள்ளிகளில் புதிய சேர்க்கை

புதிய மாணவர்களை அதிகம் சேர்ப்பதில் தமிழ்நாடு என்றென்றும் முன்னணியில் நின்றுள்ளது. எனினும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்பு, முந்தைய ஆண்டுகளைவிடப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு இருக்கிறது. 5 முதல் 14 வயது வரை கூடுதலாகப் பள்ளிகளில் சேரத் தகுதி பெற்ற மாணவர்களின் இலக்கு 2 இலட்சமாக இருந்த போதிலும் 1982-83ஆம் ஆண்டில் புதியதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2.63 இலட்சமாகும். 1983-84ஆம் ஆண்டு கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3.82 இலட்சம். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினால் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை கூடுதலாக உள்ளது எனத் திட்டவட்டமாகக் கொள்ளலாம். இத்திட்டம் பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டத்தின் முக்கிய அம்சமான, துவக்கப்பள்ளிகளில் புதிய மாணவர்கள் சேர்க்கை மூலம் துவக்கப் பள்ளிக்கல்வியில் மாறுதலை உண்டாக்குவதில் பெருமளவு உதவியுள்ளது.

### வேலை வாய்ப்பு

இத்திட்டத்தினால் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் 1,86,952 நபர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிலும் விதவைகளுக்கும் கைவிடப்பட்ட பெண்களுக்கும்அதிகமாக வேலை வாய்ப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களில் 1,65,482 பேர் பெண்கள்; அதில் 30,094 பேர் தாழ்த்தப்பட்டோர் மற்றும்பழங்குடியினர் ஆவர். 42,457 பேர் விதவைகள் மற்றும் கைவிடப்பட்டோர்களும் ஆவர். சுதந்திர இந்தியாவின் 35 வருட காலத்தில் இத்தகு மாபெரும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தியமுன்னோடித்திட்டமாக இது திகழ்கிறது.

### உடல் நலம்

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ள பாலர் பள்ளி மையங்களில் குழந்தைகளின் உடல் நலத்தைக் கவனிப்பதற்காக விரிவான உடல் நலத்திட்டம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. அதன்படி குழந்தைகளின் உடல் நலம் மற்றும் எடையைக் குறிக்கும் அட்டைகள், மையங்களில் பராமரிக்கப்படுகின்றன. யூனிசெப் ( UNICEF ) நிறுவனத்தின் உதவி மூலம் குழந்தைகளின் எடை மற்றும் உயர அளவுகளை அறுதியிட அளவு சாதனங்கள் இதுவரை 2,400 சத்துணவு மையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி நடத்திய ஆய்வின்படி இத்திட்டத்தில் பங்கு பெற்ற குழந்தைகளின் எடை, உயரம், கை சுற்றளவு முதலியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைவோருக்கு ஒரு நாளைக்கு 30 கிராம் வீதம் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட பல்பொடி வழங்கப்படுகிறது. இளம்பிராயத்திலிருந்து குழந்தைகள் சுகாதாரத்தில் அக்கறை காட்ட இத்திட்டம் உதவுகிறது.

### புதிய சமுதாயத் திட்டம்

இளம்பிராயத்திலிருந்து குழந்தைகள் சாதி சமயவேறுபாடின்றி உண்ணவும், கற்கவும் ஏதுவாய் இருப்பதுடன் தங்களுக்கு உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை மறந்து உண்மையான இந்தியக் குடிமக்களாக வளர்வதற்கும், சமுதாய ஒருமைப்பாட்டிற்கும் இத்திட்டம் வழிவகுத்துள்ளது. **சாதி வேறுபாட்டுணர்வுகள் முற்றும் மறைந்து ஒருமைப்பாடு நிலை பெற்றுத் தழைக்கப் பல்லாண்டு ஆகலாம் எனினும் இவ்வொருமைப்பாட்டிற்குச் சரியான ஒரு துவக்கத்தை இத்திட்டம் ஆரம்பித்துள்ளது என்பதில் ஐயமில்லை.**

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், கல்வி கற்கவும் உடல் நலத்தைப் பேணவும், குழந்தைகளின் பொது ஆரோக்கியத்திற்கும் ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கி இருப்பதுடன் முதியோருக்கும், கைவிடப்பட்ட விதவையர்க்கும் சமுதாயத்தில் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ள அரிய திட்டமாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏழை எளிய மக்களுக்கும் மற்றும் கொடிய விலங்கினங்களுக்கும் கூட ஈந்த ஏழு வள்ளல்கள் பற்றி அறிந்திருப்பினும், தமிழ்நாட்டின் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் உள்ளத்தில் எதிர் காலத்திற்கான புதிய நம்பிக்கையை உருவாக்க, இத்தகைய ஒரு மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் ஏழு வள்ளல்களையும்கூட நமது முதல்வர் விஞ்சியுள்ளார் என்றால் மிகையாகாது. எனவேமுதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இந்தியக் குடியரசின்கீழ் உள்ள குடிமகனுக்கு நல்லதொரு எதிர் காலத்தை ஏற்படுத்த, சீரிய சிந்தனைக்குப்பின் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும் என்பதில் ஐயமில்லை.

இத்திட்டச் செலவுகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலுள்ள இடர்ப்பாடுகளை நாம் அறிவோம். எனினும் இச்செலவு இந்நாட்டின் வருங்கால முதலீடு என்பதாலும் நாளைய இளைய தலைமுறையினரின் நல்வாழ்விற்குச் செய்து கொள்ளும் முன் வைப்பீடு என்பதாலும் ஆழ்ந்த நம்பிக்கையுடைய புரட்சித் தலைவரின் அரசும் தமிழக மக்களும்இதன் நிதிச் சுமையை ஏற்க உறுதியோடும் மகிழ்ச்சியோடும் முன்வந்துள்ளனர்.



# வீட்டு வசதி வாரியப் பணிகள்



மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

**திரு எஸ். ஆர். இராதா**

வளர்ந்து வரும் ஒரு நாட்டில் உள்ள பெரும் பிரச்சினைகளுள் வீட்டுவசதிப் பிரச்சினை என்பது முன்னணியில்இருக்கிறது. பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைகளான வீட்டுமனைகள், வீடுகள் ஆகிய தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 1947ஆம் ஆண்டு நகர்ப்புறமேம்பாட்டுக்கழகம் என்ற ஓர் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டு, நிதி நிலை நெருக்கடி காரணமாக, நடுத்தர அளவில் இயங்கிவந்தது.

சென்னை நகரிலும், மற்றும் மாவட்டங்களிலும் பெருகி வந்த வீட்டுவசதிப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு பெரிய அமைப்பாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 1961ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்டது. வீட்டுவசதித் திட்டங்களுக்கும் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் தேவையான நிதியைத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் உரிமைகளும் அதற்கு வழங்கப்பட்டன.

பலவித சமூக வீட்டு வசதித் திட்டங்களைப் பெரும் அளவில் நிறைவேற்றி, இதுவரையில் தமிழகம் முழுவதிலும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குடியிருப்பு இல்லங்களை வீட்டுவசதி வாரியம் கட்டி முடித்திருக்கிறது. 1970ஆம் ஆண்டில் ரூபாய் 6 கோடி மதிப்புள்ள வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்த வீட்டுவசதி வாரியம் தற்போது இந்த நிதி ஆண்டில் (1984-85) ரூபாய் 45 கோடி மதிப்புள்ள வீடுகளைக் கட்டும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் :

தமிழகத்தில் அதிகரித்து வரும் வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அதன் பணிகளைத் தமிழகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. ''பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அதிக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும்'' என்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கொள்கையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் அயராது பாடுபட்டு வருகிறது.

குறைந்த விலையில் அதிகமான வீடுகள் கட்டி அதிகமான மக்களுக்குக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. புதுதில்லியில் உள்ள ''நகர்'' வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (Hudco), வாரியத்தின் பல் வேறுபட்ட சமூக வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்ற அதிக அளவில் நிதி உதவி செய்துவரும் ஒரு நிறுவனம் ஆகும்.

### வீட்டு மனைகள் மற்றும் வளர்ச்சித் திட்டம் :

சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர், மொகப்பேர் மற்றும் மதுரவாயில் ஆகிய ஊர்களில் வாரியம் ஒரு தனித்தன்மை கொண்ட புதிய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அடிப்படை வசதிகளும் சுகாதாரமான சுற்றுப்புற சூழலும் கொண்ட வீட்டுமனைகளை இத்திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் ஏழைமக்களுக்கு வழங்குவதன் மூலம் சென்னை மாநகரின் மக்கள் தொகையில் 60% உள்ள ஏழை மக்களின் வீட்டு வசதி நிலைமைமேம்படுத்தப்படுகிறது. மேலும், பாதி கட்டி முடிக்கப்பட்ட வீட்டை முழுமையாகக்கட்டுவதிலும், அவர்களின் சொந்தப் பணத்தை இத்திட்டத்தில் முதலீடுசெய்வதிலும் பொது மக்களின் ஒத்துழைப்பையும் இத்திட்டத்தின்மூலம் பெற முடிகிறது. இத்திட்டத்தின்கீழ் 11,870 வீடுகள் 1,445.55 இலட்சம் ரூபாய் செலவில் கட்






# பிற்பட்டோர் முன்னேற்றம் பெற பெரும் திட்டங்கள்

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

**திரு. த. கோவேந்தன்**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை 1969-ம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. அதுவரை ஆதிதிராவிடர் நலத் துறையால் கவனிக்கப்பட்டுவந்த பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப் பட்டன. பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971-ல் தனி மானியக் கோரிக்கை ஏற் படுத்தப்பட்டது.

**படிப்பு உதவித்தொகை :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 9ஆம் வகுப்பி லிருந்தும், சீர் மரபினர் மாண வர்களுக்கு 4ஆம் வகுப்பிலிருந் தும் உதவித் தொகை வழங்கப் படுகிறது. இவர்களுக்கு 3ஆம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் இலவசமாகக் கல்வித்துறை மூல மாக வழங்கப்படுகின்றன. இச் சலுகையைப் பெறுவதற்குப் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500 உச்சவரம்பு நிர்ண யம் செய்யப்பட்டதை, 1981-82-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ரூ. 5,000 ஆக உயர்த்தியது.

**பள்ளிகள் :**

சீர் மரபினர்களுக்காக இத் துறை மூலம் 277 பள்ளிகள் நிர் வகிக்கப்பட்டு வருகின்றன. இதன் படி 2 மேல்நிலை, 8 உயர்நிலை, 36 நடுநிலை மற்றும் 231 ஆரம்பப் பள்ளிகள் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இப் பள்ளிகளில் 50,453 மாணவ, மாணவியர் படிக்கின்றனர். இவற் றில் 1754 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர்.

**மாணவர் இல்லங்கள் :**

மாணவர்கள் கல்வி பயில வசதியாயிருக்கும் பொருட்டு, அரசினர் மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுப் பராமரிக்கப் பட்டு வருகின்றன. இவ்வில் லங்களில் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர்களின் பெற் றோர்-பாதுகாவலர் ஆண்டு வரு மானம் ரூ. 5,000-க்கு மேற் படாமலிருக்க வேண்டும். இத் துறை மூலமாக 483 விடுதிகள் பராமரிக்கப்பட்டு அவற்றால் 28,862 மாணவ, மாணவியர் பய னடைந்து வருகின்றனர். 1984-85-ஆம் ஆண்டில் புதிதாக மேலும் 40 விடுதிகள் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

**பரிசு அளிக்கும் திட்டம் :**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் இனத்து மாணவ, மாணவியர்கள் படிப்பில் ஆர்வம் கொள்ளத் தூண்டும் வகையில் +2 தேர்வின் மாநிலத் தில் முதலாவதாகத் தேறியவர் களுக்கு ரூ. 1,000 வீதம் இரு பரிசுகளும் (மாணவருக்கு ஒன்று, மாணவிக்கு ஒன்று) 10ஆம் வகுப்புத் தேர்வில் மாநிலத்தில் முதலாவதாகத் தேறியவர்களுக்கு தலா ரூ. 500 வீதம் 2 பரிசுகளும் (மாணவருக்கு ஒன்று, மாணவிக்கு ஒன்று) எஸ். எஸ். எல். சி. ஆண்டுத் தேர்வில் மாவட்டங்கள் தோறும் முதலாவதாகவும் இரண் டாவதாகவும் தேறியவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 100ம் 2-வது பரிசாக ரூ. 50ம் ஆக 32 பரிசு களும், மற்றும் 8ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மற்றும் இராண் டாவதாகத் தேர்வு பெற்றவர் களுக்கு ஒவ்வொரு மாவட்டத் திற்கும் முதல் பரிசாக ரூ. 50 இரண்டாவது பரிசாக ரூ. 10 மொத்தம் 32 பரிசுகள் வழங்கப் படுகின்றன.

**உணவு மானியம் :**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் உதவி பெறும் தனி யார் உணவு விடுதிகள் 47-க்கு உணவுச் செலவுக்காக 10 மாதங் களுக்கு உணவு மானியம் வழங்கப் படுகிறது. இவற்றில் தங்கிப் பயிலும் மாணவர்கள் எண் ணிக்கை 2,623, மாணவர் ஒருவ ருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 45 வீதம் நகரங்களிலும் ரூ. 40 வீதம் மற்ற இடங்களிலும் உள்ள விடுதிகளுக்கு வழங்கப்படுகிறது.

**இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டம் :**

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் ஒன்று முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும், உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் தங்கிப்பயிலும் எல்லா மாணவ, மாணவிகளுக்கும் இரு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன. இதனால் 60,000 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

**கடன் உதவித் தொகை :**

தொழிற் படிப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அவர் தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5001-லிருந்து ரூபாய் 10,000-க்கு உட்பட்டிருப்பின் 1981-82ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு ரூ. 500 வீதம் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்பினைப் படிக்கும் காலம் முழுமைக்கும் 5 ஆண்டுகளுக்கு மிகாமல் உதவித் தொகை ரூபாய் 2,500 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

**இலவசத் தொழிற் கருவிகள் :**

ஆண்டு தோறும், முடிதிருத்துதல், சலவை செய்தல், கல் உடைத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத்தொழில் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**சலவைத்துறை :**

சலவைத் தொழிலாளர்தங்கள் தொழிலைத் திறம்படச் செய்வதற்குச்சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளைச் சுகாதார முறையில் அமைப்பதற்காகப் பேரூராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் மொத்த மதிப்பீட்டுத் தொகையில்50சதவிகிதம்கடனாகவும், 50 சதவிகிதம்மானியமாகவும் வழங்கப்பட்டு, இதுவரை 54 சலவைத்துறைகள் கட்டப்பட்டுள்ளன.

**மரச் சாமான்கள் :**

1984-85ஆம் ஆண்டில் கர்ணம் மேசை போன்ற மரச்சாமான்கள் வழங்குவதற்காகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லங்களுக்கு ரூ. 4 லட்சம், சீர் மரபினர் மாணவர் இல்லங்



களுக்கு 50 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1981-82 லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள்:**

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்கானூரணியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் வீரகேரளம் புதூரிலும் உள்ள பொதுநோக்குப் பொறியியல் பட்டறைகள், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் நேரடிமேற்பார்வையில் உள்ளன. இப்பட்டறைகளில் பொருத்துதல், இரும்பு வேலை செய்தல், தகடு உலோகத் தொழில் பழுது பார்ப்புத் (டிங்கரிங்) தொழில் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர் மரபினர் இனத்தவர் மேற்கூறிய தொழில்களில் வேரூன்றி நின்று அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள இயலும் வகைகளில், அவர்களிடம் போதிய தொழில் நுட்ப அறிவை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சியின் கால அளவு 18 மாதங்கள்; இதுவரையில் 479 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**இலவச வீட்டு மனை வழங்கும் திட்டம் :**

ஏழ்மை நிலையில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பு இனத்தவர்களில் குறிப்பாக நரிக்குறவர், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் மற்றும் ஒட்டர் ஆகியவர்களுக்கு வீட்டுமனை வழங்க 1981-82 ஆம் ஆண்டு அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்தது.

## புதிய திட்டங்கள்

**டாக்டர் ராவ் இந்திய ஆட்சிப் பணிக்குழுமம் :**

இத்திட்டத்தின் நோக்கம் பல்கலைக் கழகங்களில் முதுநிலைப் பட்டப்படிப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேறும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களைப் புதுடெல்லியில் உள்ள 'டாக்டர் ராவின் அனைத்திந்திய ஆட்சிப்பணிப் பயிற்சி மன்றம்' என்ற நிறுவனத்தின் மூலமாக மத்திய அரசு நடத்தும் தேர்வாணைக் குழுவின் பணித் தேர்வுக்காக நல்ல பயிற்சி அளிப்பது ஆகும். இத்திட்டத்தின் மூலம் 1983-ல் இரண்டு பேர் மத்திய அரசின்கீழ் உள்ள நிறுவனங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இத்திட்டம் 1983-லிருந்து அமல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகள் புகழ் பெற்ற முதுநிலை வழக்குரைஞர்களிடம் பயிற்சி பெற இயலவில்லை. எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சேர்ந்தவர்களிடையே இருந்து ஒவ்வோராண்டும் 20 சட்டப் பட்டதாரிகளைத் தெரிந்தெடுத்து அவர்கள் போதுமான பல்வேறு அனுபவம் பெறும் பொருட்டுச் சிறந்து விளங்கும் முதுநிலை வழக்குரைஞர்களிடம் அமர்த்தி 3 ஆண்டுகளில் பயிற்சி பெறுமாறு செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

பயிற்சிக்காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகை வழங்கப்படும். முதுநிலை வழக்குரைஞர்கள் இத்திட்டத்தில் பங்கேற்பதற்கு அவர்களுக்கு



ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 மதிப்பூதியம் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 1,81,000 செலவேற்படும்.

**வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியாளர்களுக்காக மாணவர் இல்லங்களை ஏற்படுத்துதல் :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இம்மாநகரிலுள்ள புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மூலமாக முறையான பயிற்சி பெறும் பொருட்டு ரூ. 500-க்கு மேற்படாத கல்விக் கட்டணத்தை அவர்களுக்கு வழங்குவதற்கும், இம்மாநிலம் முழுவதிலும் உள்ள மாணவர்கள் சென்னை மாநகரிலுள்ள பயிற்சி வசதிகளைப் பெற இயலும் வகையில் சென்னை மாநகரில் (மேலே குறிப்பிட்டவாறு) 50 மாணவிகளுக்கு ஒன்றும் 50 மாணவர்களுக்கு ஒன்றுமாக இரு இல்லங்களை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.



பிற்பட்ட இனத்து மாணவி படிப்புக்காகப் பரிசு பெறுகிறார்.

இது தவிர விடுதியில் தங்காது பயிலும் 50 மாணவ, மாணவிகளுக்கு உதவி அளிக்கப்படும். உயரளவு ரூ. 500-க்கு உட்பட்டு கல்விக்கட்டணம் முழுவதையும் அரசு ஏற்கும். மேலும் உணவு, தங்குமிடச்செலவுகளையும் அவை தொடர்பான செலவுகளையும் அரசு ஏற்கும். இத்திட்டத்தின் மூலம் பயனடைவோரின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 600 ஆகும்.

**முடிதிருத்தும் நிலையங்கள் அமைக்க நிதி உதவி :**

முடிதிருத்துவோர் ஊராட்சி ஒன்றியம் மற்றும்பேரூராட்சி மையங்களில் சொந்தமாக முடிதிருத்தும் நிலையங்களை அமைத்திட நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார வளர்ச்சிக்கழகம்**

இக்கழகம் தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நலத்திற்காகச் செயல்பட இந்தியகம்பெனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 25-2-82 லிருந்து செயல்பட்டு வருகிறது. இதன் மூலதனம் ரூ. 10 கோடியாகும். இது பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருகிறது. இதுவரை இக்கழகம் பிற்படுத்தப்பட்டோருக்கான 23 தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 11.09 இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது.

**இத்துறை நடத்தப்படும் விடுதிகளின் எண்ணிக்கை, ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாக்கப்பட்டு வருகின்றது.**

1980–81-ல் 357 விடுதிகள் மூலம் 22732 மாணவ மாணவியரும், 1981-82-ல் 397 விடுதிகள் மூலம் 24742 பேரும் 1982-83ல் 440 விடுதிகள் மூலம் 26862 பேரும், 1983-84ல் 483 விடுதிகள் மூலம் 29012 பேரும் பயன் பெற்றுள்ளனர்.

1980-81ல் 4,000 சலவைத் தொழிலாளர்களுக்கும், 4,000 முடிதிருத்துவோருக்கும், 250 போயர்களுக்கும் தொழில் கருவிகள் வழங்கப் பெற்றுள்ளன. 1981-82-ல் இதே எண்ணிக்கையில் தொழிற் கருவிகள் வழங்கப் பெற்றுள்ளன. 1982-83ல் சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர்க்குத் தலா 4000 தொழிற் கருவிகளும், போயருக்கு 500 தொழிற்கருவிகளும் வழங்கப்பட்டன. 1983-84ல் 4640 சலவைத் தொழிலாளர்களுக்கும், 2,250 முடிதிருத்துவோருக்கும், 500 போயர்களுக்கும் தொழிற் கருவிகள் வழங்கப்பெற்றுள்ளன.

**விவசாயக்கடன் :**

1980-81ல் ரூ. 1.51 இலட்சத்தில் 51 விவசாயக் கிணறுகளும், 1981-82ல் ரூ. 1.51 இலட்சத்தில் 47 விவசாயக் கிணறுகளும், 1982-83ல் ரூ. 1.67 இலட்சத்தில் 64 விவசாயக் கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. 1983-84க்கு விவசாயக் கிணறுகள் தோண்டுவதற்காக ரூ. 1.43 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு :**

அரசுப்பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் வழங்க 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர் சாதிப் பட்டியலையும் அவர்களுக்கான 50% இட ஒதுக்கீட்டைப் பரிசீலனை செய்யவும், எல்லாப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இனத்தவர்களுக்கு மேலும் பலன் கிடைக்க வழி வகைகள் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயவும் இரண்டாவது பிற்பட்டோர் நலக்குழு ஒன்று அமைக்கப்பட்டுச்செயல்பட்டு வருகிறது.

எங்களின் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீவள்ளி விலாஸ்

ராயல் சில்க் ஹவுஸ்

&

வேல்முருகன் தியேட்டர்

கடலூர் – 607 002.

கடலூர் மாநகரில் புதிய ஜவுளிக் கடல்

பட்டுப் புடவைகள்

நாகரீக ஜவுளிகள்

ரெடிமேட் ஆடைகள்

அனைத்தும் ஒரே இடத்தில் நியாய விலையில் தேர்வு செய்திட

சீமாட்டி சில்க்ஸ்

சுபகோவிந்தம் பில்டிங், இம்பீரியல் ரோடு, கடலூர் என். டி.

போன் : 1424

# மகளிர் நலத்திற்கு உதவும் சமூக நலத்துறை



மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

**திருமதி கோமதி சீனிவாசன்**

சமூகநலத்தில், நலிந்த பிரிவின ரின் மேம்பாடே, நாட்டின் முன் னேற்றத்தினைக் கணக்கிட உதவும் அளவுகோலாக விளங்கு கிறது.

கடந்த சில ஆண்டுகளில் இத் துறையின் விரைவான வளர்ச்சி யும், சாதனையும் 1980-81-ல் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 10.82 கோடிகள், தற்போது ஆறு மடங்காக ரூ. 68.67 கோடி யாக உயர்ந்திருப்பதிலிருந்து நன்கு புலப்படும்.

இத்துறையின்கீழ் இயங்கும் அநேக நலத்திட்டங்களில் மகளிர் நலத் திட்டங்கள் தலையாயது ஆகும்.

உற்பத்தி நிலையங்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் அமைப்பதன் மூலம்பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற் படுத்தவும், அவர்களுக்குப் பொரு ளாதார முன்னேற்றத்தில் உதவி செய்வதையும் தேர்ந்தெடுத்த சில துறைகளில் மகளிரைப் பயிற்றுவிப்பதன் மூலம், அவர் களுக்கு மேலும் வேலைவாப்பு களை அளிப்பதையும் நோக்க மாகக் கொண்டு அநேக கூட்டுறவு நிலையங்கள் துவக்கப்பட்டுள் ளன.

இந்தக் கூட்டுறவுத் துறையில் பல்வேறு அலகுகளை ஏற்படுத்தி அவைகளுக்கு மூலதனம், இயந் திரங்கள், இதர கருவிகள் வாங்க மானியம் அளிப்பதோடு பங்குத் தொகை, நடப்பு மூலதனம், கடன் முதலியவையும் வழங்கப்படுகின் றன. இத்திட்டத்தின்கீழ் அமைக் கப்பட்டுள்ள கூட்டுறவு நிலை யங்களில் எழுதுபொருட்கள் தயாரித்தல், பனைப் பொருள் தொழில், கிராம நூற்பு மையம், சாக்குக்கட்டி மற்றும் மெழுகு வர்த்தி தயாரிக்கும் திட்டம், கயிறு தயாரிப்பு, பட்டு நூல் எடுத் தல், தையல் தொழில், விதவை களால் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகள் முதலியவை முக்கிய மான தொழில்களாகும்.

இதுவரை இத்திட்டங்களின் கீழ் 5345 பெண்டிர், பல்வேறு தொழில்களில் பயிற்சி பெற் றுள்ளனர். 3810 பெண்கள் வேலை வாய்ப்பினையும் பெற்றி ருக்கின்றனர். சென்ற நான்கு நிதியாண்டுகளில் இத்திட்டங் களுக்காக ரூ. 70.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

முதன் முதலாக இத்திட்டத் தின்கீழ் 1978-ல் ஆண்டுக்கு ரூ 3,000 மட்டுமே வருவாய் பெறும் குடும்பத்திலுள்ள 16 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி அளிக்கப் பட்டது. தற்போது கணக்குப்

பதிவு மற்றும் கணக்குத் துறை யிலும் சுருக்கெழுத்திலும்கூட பயிற்சி அளிக்கப்படுகிறது. இது வரை 8920 பெண்கள் இத்திட் டத்தின்கீழ் பயனடைந்துள்ள னர். 1980-81 முதலாகிய சென்ற நான்காண்டுகளில் இத்திட்டத் திற்கென ரூ. 9.05 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

கிராம மற்றும் நகர்ப்புறங் களில் உள்ள 18-35 வயதிற்குட் பட்ட ஆதரவற்ற மகளிருக்குத் தையல், கம்பளி நெய்தல், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், பாய் நெய்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கும் வகையில் 53 உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடங் களும், 4 உற்பத்திக் கூடங்களும் இத்துறையின்கீழ் துவக்கப்பட் டுள்ளன. பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் ரூ. 30 உதவித் தொகையாகப் பெறுவதோடு பின்னர் வேலை வாய்ப்பினையும் பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இந்நிலையங்களில் 900 மகளிர் பயிற்றுவிக்கப்படுகின்ற

னர். இதில் 4 பயிற்சிக்கூடங்கள் பழங்குடிப் பகுதிகளில் மகளிர்க்காக ஆரம்பிக்கப்பட்டு அத்திப்பட்டு (வட ஆர்க்காடு), கொல்லி மலை, கல்ராயன் மலை மற்றும் ஏர்க்காடு (சேலம்) ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

நவீன துறைகளில் மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக 'மகளிர் வர்த்தக வளர்ச்சித் திட்டம்' சென்னை ஐ.ஐ.டி.யின் ஊரக வளர்ச்சி மைய உதவியோடு துவக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 100 ஊரக மகளிர் நவீன துறைகளின் மின்னணு, இரசாயன, சோப்புப் பொருட்கள், ஸ்கிரீன் பிரிண்டிங் முதலிய துறைகளில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பினையும் பெறுகின்றனர். இதற்காக 1984-85ல் ரூ. 11.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மூன்றாண்டுகளுக்குப் பராமரிக்கப்பட்டு அவர்களுக்கு ஐந்தாம் வகுப்பு வரை கல்வியும் அளிக்கப்படுகின்றது.

## பணிபுரியும் மகளிர் விடுதி

பணிபுரியும் மகளிர்க்கான விடுதிகள் தமிழக அரசினால் 285 பெண்களுக்குத் தங்கும் வசதியுடன் சென்னை(2), திருச்சி, மதுரை, ஹோசூர் மற்றும், தூத்துக்குடி ஆகிய 6 இடங்களில் செயல்படுகின்றன. இவ்விடுதிகள் நடத்துவதற்காக 1981-82 முதல் இவ்வாண்டு வரை ரூ. 12.34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய விடுதி கட்டடங்கள் கட்டும் தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு 75 சதவிகிதமும், தமிழக அரசு 15 சதவிகிதமும் நிதி உதவி அளிக்கிறது. மிகுதி 10 சதவிகிதம் செலவினைத் தனியார் துறை மேற்கொள்ள வேண்டும்.



## சேவை இல்லங்கள்

சமுதாய அமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் நலிந்து கிடக்கும் மகளிருக்கு, குறிப்பாக 18-40 வயது வரையுள்ள விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்குச் சமுதாயத் தகுதி மற்றும் பாதுகாப்பினையும் வேலை வாய்ப்பினையும் நல்கும் பொருட்டு இத்துறையின் கீழ், தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் சேவை இல்லங்கள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. இம்மகளிருக்கு 8—10 வகுப்புவரை கல்வி அளிப்பதோடுகூட, தொழில் பயிற்சியும், வணிகக் கல்விப் பயிற்சியும் இக்கல்வி இல்லங்களில் அளிக்கப்படுகிறது. இவர்கள் அரசாங்கத் தேர்வுகளுக்கும் அனுப்பப்படுகிறார்கள். இவ்வில்லத்தில் சேரும் பெண்களின்

## மகளிர் மன்றங்கள்

சமூகநல மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களையும் பொருட்டு, கிராமப்புறப் பெண்களைக் கொண்ட தமிழகம் முழுவதிலும் 11,250 மகளிர் மன்றங்கள், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 வீதம் அமைக்கப்பட்டுள்ளன. சத்துணவு தயாரிக்கும் செயல்விளக்கம் அளித்தல், குழந்தைகள் கண்காட்சி நடத்துதல், கல்விச் சுற்றுலா செல்லுதல், புத்தகங்கள் வினியோகித்தல் ஆகியவை இம்மன்றங்களின் சிறப்புப் பணிகளாகும். 1983-84 வரையிலான இரண்டாண்டுகளுக்கு ரூ. 30.08 இலட்சங்கள் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக கோட்டுப் புத்தகங்கள் வழங்குதல்

1978-79 முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000க்கும் குறைவாக வருவாயுள்ள குடும்பத்திலுள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம் மற்றும் குறிப்புக் கையேடுகள் வழங்கும் திட்டம் அமலில் உள்ளது. இதுவரை 17,061 குழந்தைகள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1.01 இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்படுகிறது.

ரூ. 3,000-க்குக்கீழ் ஆண்டு வருமானம் உள்ள குடும்பத்தில் உள்ள ஆதரவற்ற விதவைகள் தங்கள் பெண்களுக்கு மணம் முடிக்கப்படும் இன்னல்களைக் கருத்திற்கொண்டு, விதவைகளில் 18-30 வயதுவரையுள்ள பெண்களுக்குத் தமிழக அரசு திருமண நிதியுதவி அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 1,000 பேருக்கு ரூபாய் 1000 வீதம் உதவி வழங்க ரூ. 10 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

20 முதல் 40 வயது வரையிலுள்ள விதவைகள், ஆதரவற்றோர், கணவரால் கைவிடப்பட்டவர்கள், மற்றும் ஏழை எளியோர், உடல் ஊனமுற்றோர் போன்ற பெண்கள் மற்றும்ஆண்களுக்குத் தையல்தொழில் தெரிந்தவர்களாயிருந்தால்அவர்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு வரை 9,300 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## விதவை மறுவாழ்வுத் திட்டம்

1975-76-ல் இத்திட்டம் விதவைகளுக்கு மறு வாழ்வு அளிப்பதற்காகத் துவக்கப்பட்டதாகும். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு மறுமணம் புரிந்த தம்பதியருக்குத் தேசியச் சான்றிதழ் ஒன்று, ரூ. 5,000 வரை சேமிப்பில் இருக்கும் வகையில் வழங்கப்படுகிறது. இது கணவனை இழந்த ஆதரவற்ற விதவைகளுக்கு மட்டுமே பொருந்தும். இதுவரை 1094 தம்பதிகள் இந்த ஊக்கத் தொகையினைப் பெற்றுள்ளனர்.

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், செறிவு நிறைந்த பணிகளை அவர்களது வளர்ச்சியின் முக்கியமான நெருக்கடியான நிலையில் ஒருங்கிணைந்த வழியில் வழங்குகின்ற அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குழந்தை பிறப்பதற்கு முன்னாலுள்ள நிலையிலிருந்து 6 வயது வரை கவனம் செலுத்தும் வகையில் அமைந்துள்ளது.








ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்திலும் குழந்தைகள் நல நிலையங்கள் 100 உள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 100பேர் பயனடைகின்றனர்

## தாய்சேய் நலத் திட்டம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தாய்சேய் நலத் திட்டத்தின்கீழ் சத்துணவு அளித்தல், சுகாதாரப் பணிகள், சுகாதார மற்றும் சத்துணவுக் கல்வி ஆகிய செறிவு நிறைந்த பணிகள் 6 மாதம் முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் அளிக்கப்படுகின்றன. மேற்படி நலிவுற்ற பிரிவினருக்கும் பயனளிக்கக்கூடிய 135 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதற்காக இதுவரை ரூ. 44.45 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்

உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் குறிக்கோள் மக்கள் நலம், ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும் வகையில் 6-36 மாதங்களுக்குட்பட்ட சத்துணவு தேவையான நிலையிலுள்ள குழந்தைகளின் முறையான தீவிரக் கண்காணிப்புக்காக அரசு எடுத்து வரும் முயற்சிகளை மேலும் திறன் உடையனவாக்கி அம்முயற்சிகளின் பயனை அதிகப்படுத்துவதாகும். இத்திட்டத்தின்கீழ் குழந்தைகள் எடை பார்க்கப்பட்டு, ஊட்டச்சத்து குறைவாயுள்ள குழந்தைகள் மற்றும்தாய்மார்களுக்கும் துணை ஊட்ட உணவு அளிக்கப்படுகிறது. வைட்டமின் 'ஏ' திரவமும், வயிற்றுப் பூச்சி நீக்கும் மருந்தும் தரப்படுகிறது. 1980 முதல் செயல்பட்டு வரும் இத்திட்டம் இதுவரை ஐந்து கட்டங்களில் மதுரை, முகவை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆர்க்காடு மற்றும் செங்கை மாவட்டங்களில் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 55.78 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் திட்டம் :

ஆதரவற்ற குழந்தைகளையும் பராமரிக்கும் வண்ணம் குடில் முறையில் குழந்தைகளை வளர்க்கும் திட்டம் 1979-ல் அமல்படுத்தப்பட்டது. இதன் கீழ் இவர்களுக்கு உணவு, உறையுள், உடை மருத்துவ வசதி முதலியவையும் வழங்கப்படும். அரசின் பங்காக இத்தகு திட்டங்களை நடத்தும் தனியார் நிறுவனங்களுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. தற்போது இத்திட்டத்திற்கு 131 தனியார் நிறுவனங்களில், 9,235 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். 1980ல் இத்திட்டத்திற்கு நிதி உதவியாக ரூபாய் 255.86 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற குழந்தைகளைக் கொண்ட 4 ஆதரவற்றோர் இல்லங்கள் சென்னை, மதுரை, கன்னியாகுமரி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் அரசினரால் இத்துறையின் கீழ் நடத்தப்படுகின்றன.

## இல்லம் ஒன்றுக்கு 250 குழந்தைகள் வீதம்

நாலாண்டுகளில் 3358 குழந்தைகள் இவ்வில்லங்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.

## ஊனமுற்றோர் நலம்

ஊனமுற்றோர்க்கு வழங்கப்படும் வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பினைக் கொண்ட ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. நற்பேறற்ற இப்பிரிவினைச் சமூகத்தின் ஒரு பிரிவாக ஒருங்கிணைப்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தொடர்ந்து பெருமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## ஊனமுற்றோர் கல்வி

ஊனமுற்றோர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும் அவர்கள் தம் முயற்சியாலேயே வாழ்வினை மேற்கொள்வதற்குச் சிறப்புக் கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன.

1980-81ஆம் ஆண்டில் 41 ஆக இருந்த இப்பள்ளிகளின் எண்ணிக்கை தற்போது 51ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 26 அரசுப்பள்ளிகள் மற்றும் 25 அரசு உதவி பெறும் பள்ளிகள். இலவச விடுதி வசதி கொண்ட இப்பள்ளிகளின் மூலம் சுமார் 4,500 ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 51 சிறப்புப் பள்ளிகளில், 21 பார்வையற்றோர்க்கான பள்ளிகளும், 21 காதுகேளாதோர்க்கான பள்ளிகளும், 3 மனவளர்ச்சி குன்றியோர்க்கும், 2 உடல் ஊனமுற்றோர்க்கும், 3 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்க்கென ஒரு




பள்ளியும், உள்ளன.

1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் ஊனமுற்ற சிறுவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.25 வீதம் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்கென உதவித் தொகை இதுவரை 25 ஆயிரம் பேர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, 9ஆம் வகுப்பு முதல் பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் தொழில்நுட்ப உள் துறைப் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் அவர்கள் படிப்பு தொழிற் பயிற்சிக்குத் தகுந்தவாறு மாதம் ரூ. 60 முதல் ரூ. 170 வரை மத்திய அரசினரால் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1981 முதல் 1984 வரை 28,101 மாணவர்கள் உதவித் தொகை பெற்றுள்ளார்கள். இதற்கென ரூ. 31.29 இலட்சங்கள் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான அரசு இல்லம் சென்னையில் குரோம்பேட்டையில் 25 சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான உணவு, உறைவிட வசதிகளுடன், அவர்களுக்கென மருத்துவ வசதி மற்றும் சிறப்புக்கல்வியும் அளிக்கப்படுகிறது.

ஊன முற்றோரின் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கென அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் நிலையங்களில் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் முட்டுக்காடு என்னுமிடத்தில் (செங்கல்பட்டு) ரூ. 30 இலட்சம் செலவில் 1975 ஜூன் மாதம் துவக்கப்பட்டது. இங்கு உடல் ஊனமுற்றோர்க்கு உருக்குப் பொருட்களால் ஆன முச்சக்கர வண்டி, பெட்டிக் கடைகள் முதலியன செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 77 உடல் ஊனமுற்றோர் பயிற்சி பெற்றுள்ளனர். இதற்கென ரூ. 60.97 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

1981-83 ஆண்டுகளில் சென்னை கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில், பொருத்துபவர் துறையிலும், மதுரை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் மின் கம்பியாள் துறையிலும், காது கேளாத மாணவர் அடங்கிய குழு பயிற்சி பெற்றது. 2 ஆண்டுகளில் 25 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு:.**

ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளிப்பதில் ஒரு பகுதியாக அவர்களுக்குத் தொலைபேசி நிலையம் அமைத்து சென்னைத் தொலைபேசி பொதுமேலாளர் மூலமாகவும், சென்னை மாநகராட்சி மூலமாகவும் அதற்குரிய இடத்தைப் பெற்று உதவி அளிக்கப்படுகிறது. 1983-84ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 20 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் (4 சதவிகிதம்) கடனுதவி பெற்று மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பெட்டிக் கடைகள் அமைக்க பெட்டிக் கடையின் மதிப்பினைப்பொறுத்து ரூ. 250—500 முதல் அரசு மானிமாக அளிக்கிறது.

1979-80-ஆம் ஆண்டில் அரசு 'சிறப்புத் தொழில் பழகுவோர் திட்டம்' என்ற புதியதொரு திட்டத்தை ஊனமுற்றோர்க்காகத் துவக்கியது. இதன் மூலம் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர் பல்வேறு நிறுவனங்களில் பயிற்சியாளராக அமர்த்தப்பட்டு, மாதம் ரூ. 150 உதவித் தொகையும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. பயிற்சி முடிந்த பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் ஊனமுற்றோர் நிரந்தர ஊழியர்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். 1981-84ஆம் ஆண்டுகளில் 941 ஊனமுற்றோர் பயன் அடைந்துள்ளனர். அரசால் ரூ. 11.46 இலட்சங்கள் இதற்கென செலவிடப்பட்டுள்ளன.

பார்வையற்ற மகளிர்க்காகச் சென்னையில் தங்கும் வசதியுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் 1978-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஆதரவற்ற ஏழையான 18-40 வயது வரை உள்ள பார்வையற்ற பெண்களுக்குச் சாக்கட்டி செய்தல் மற்றும் நெசவுத்தொழிலில் ஆறுமாதக் காலம் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சியின் போது மாதம் ரூ. 50 உதவித் தொகையாக அளிக்கப்பட்டு, பயிற்சி முடித்த பின்னர் அந்நிறுவனத்திலேயே தினமும் அவர்கள் செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 127 பார்வையற்ற பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

வட்டார மறுவாழ்வு மையங்கள் சென்னை, தஞ்சை, மதுரை, கோவை மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் உள்ளன. 1980ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வட்டார மறுவாழ்வு மையமும் மாதம் 100 ஊனமுற்றோர்க்கு உதவி புரிகிறது. இதுவரை ஐந்து வட்டார மையங்களில் 3,190 ஊனமுற்றோர் உதவி பெற்றுள்ளனர். ரூ. 32.97 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

பார்வையற்றோருக்கான பயிற்சி - நெசவுக் கூட்டுறவுச் சங்கம் மூலம் 82 பார்வையற்றோர், பூந்தமல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் பயிற்சி பெற்றுள்ளனர். அரசு மருத்துவமனைகளில் தேவைப்படும் விரிப்புகள், துண்டுகள் முதலியவற்றைச் செய்கின்றனர். இப்பயிற்சி 4 பிரிவுகளாக 6 மாதக் காலம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 100 அளிக்கப்படுகிறது.

**வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று சுயவேலை வாய்ப்பிற்கான சிறு தொழில் பிரிவுகள் அமைக்கும் பொருட்டு வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்குச் சமமான ஆனால் ஒரு நபருக்கு ரூ. 1,000க்கு மேற்படாமல் அரசு மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 11,231 ஊனமுற்றோர் பயனடைந்தனர்.**



**ஊனமுற்றோர்க்கு அவர்களது ஊனத்தின் தன்மையைப் பொறுத்து காது கேட்கும் கருவிகள், மூன்று சக்கர நாற்காலிகள் போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்டன.**

**ஏழை உடல் ஊனமுற்றோர்க்கு இலவசமாக முச்சக்கர வண்டிகள், மாத வருமானம் ரூ. 500-க்கு மேற்படாமல் இருக்கும் பெற்றோர்களுடைய காது கேளாத குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவிகள் வழங்கப்படுகின்றன. 1980 81 முதல் 1983-84 வரை 1017 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.**

உடலின் கீழ்ப் பகுதி பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இலவசமாகச் சக்கர நாற்காலிகள். ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்கெனத் தனியார் நிறுவனங்களுக்கு மானியத் தொகை ஆகியவைகளும் சமூகநலத் துறையால் வழங்கப்படுகின்றன.

தந்தி : கன்னியாமில்க் தொலைபேசி: 3356

## கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்

(வரையறுக்கப்பட்டது) எண். 2946,
நாகர்கோவில்-629 003.

| | | | |
|---|---|---|---|
| பதிவு நாள் | | - 25-1-1949 | |
| உறுப்பினர்கள் மற்றும் பங்குத் தொகை | | - 31-3-1983 | |
| கூட்டுறவு நிறுவனம் | - 121 | | - ரூ 97, 620-00 |
| தனி நபர் | - 205 | | - ரூ 209-00 |
| அரசு | - 1 | | - ரூ 3,50, 000-00 |
| பால் உற்பத்தி (தின சராசரி) 1983-84 | | - 11,229.000 | (லிட்டர்களில்) |
| பால் விற்பனை ,, | | - 11,229.000 | ,, |
| பால் உற்பத்தி ஏப்ரல் 1984 (தின சராசரி) | | - 11,464.000 | ,, |
| பால் விற்பனை ,, | | - 11,333.000 | ,, |
| நிகர இலாபம் | 1981-82 | - ரூ. 25,971.023 | |
| | 1981-82 | - ரூ. 58,537.48 | |
| | 1983-84 | · ரூ. 3,30, 862.07 (தோராயமாக) | |

நகரின் முக்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள எங்களது கன்னியா மில்க் பாரின் வாயிலாக ஒன்றியத் தயாரிப்புகளாகிய நறுமணப்பால், பால்பேடா, பாலித்தின் பைகளில் அடைக்கப்பட்ட பதனிடப்பட்ட பசுவின் பால் மற்றும் சுடுபால், காபி, ரோஸ்மில்க், நெய் ஆகியவைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

சு. இராமநாத பிள்ளை, பி.காம்.,
(நிர்வாக இயக்குநர்.)

எல். கே. திரிபாதி, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்
பெருந்தலைவர்



# நிறைந்து வரும் நீர்ப் பாசன வளம்

**மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்**
**திரு. யா. சை. மு. யூசுப்**

நம் தமிழ்நாடு ஊற்றும் மழையும் வாய்ந்த மலைகளையும் ஓடும் ஆறுகளையும் ஓரளவிற்குப் பெற்றிருப்பினும், இன்றைய நிலையில் தமிழ்நாடு நீர்வளம் குன்றிய மாநிலம் என்றே கூற வேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் குறைந்த செலவில், அதாவது ஒரு ஏக்கருக்குப் புதிதாக நீர்ப்பாசன வசதியளிக்க ரூ. 900க்குள் செலவாயிற்று. ஆனால் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் இச்செலவு தொகை அதிகமாகி, இப்பொழுது ஒரு ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க ரூ. 15,000 ஆக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம், விலைவாசி உயர்வு மட்டுமன்று குறைந்த செலவில் மிகுந்த பயனளிக்கத் தக்க திட்டங்கள் படிப்படியாக ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்ட நிலையில், அதிக செலவில் குறைந்த பயன் தரக்கூடிய திட்டங்க்ள்தான் எஞ்சியுள்ளன. இருப்பினும், பாசனப் பரப்பை மென்மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும், குறிப்பாக வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களது இன்னல்களை நீக்க, குறைந்த அளவு பாசன வசதியாவது அளிக்க வேண்டிய அவசியத்தையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பு 130 லட்சம் எக்டேர் ஆகும். இதில் நீர்த்தேக்கத் திட்டங்கள் மூலம் 9.3 லட்சம் எக்டேர் பரப்பளவும், சுமார் 39,200 ஏரி குளங்கள் மூலம் 9.1 லட்சம் எக்டேர் பரப்பளவும், தனியார் கிணறுகள், குழாய்க் கிணறுகள், ஊற்றுக் கால்வாய்கள் மூலம் சுமார் 10 இலட்சம் எக்டேர் பரப்பளவும் பாசன வசதியைப் பெறுகின்றன. ஆக 28.4 இலட்சம் எக்டேர் மொத்த பாசனப் பரப்பில் நாடு விடுதலையடைவதற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட 23 பழைய பாசன அமைப்புகள் மூலம் 7.9 இலட்சம் எக்டேர் பரப்பு பாசன வசதி பெற்று வருகின்றது.

நாடு விடுதலையடைந்ததும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் பல நீர்த்தேக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதுவரை 5 ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்து தற்சமயம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் (1980-85) கடைசிக் கட்டத்தில் உள்ளோம். முதல் ஐந்தாண்டுத் திட்டங்களில் (1979-80) முடிய 38 நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் 26 நீர்த்தேக்கத் திட்டங்கள் அடங்கும்.

இத்திட்டங்கள் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பரவியிருக்கின்றன. இவற்றால் சுமார் 3 இலட்சம் எக்டேர் புதிய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

6வது ஐந்தாண்டுத்திட்ட காலம் (1980-85) நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் நான்காவதாண்டு முற்றுப் பெறும் தறுவாயிலுள்ளோம். இந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசன திட்டங்கள் வாயிலாக 66,000 எக்டேர் புதிய நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்குக் கூடுதல் நீர்வளம் ஏற்படுத்த ரூ. 149.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் இதே திட்ட காலத்தில் ரூ. 12 கோடி முதலீட்டில் 12,000 எக்டேர் புதிய நிலங்களுக்குக் கூடுதல் பாசனவசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1980 ஜூன் திங்கள் முதல் 1983 மே திங்கள் வரையிலான கடந்த மூன்றாண்டுகளில் ஒரு பெரிய பாசனத் திட்டமான பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டத்தின் கடைசிப் பகுதியான கீழ்நீராறு அணையும் குடைவரையும் ஆயக்கட்டு விரிவாக்கும் திட்டத்தில் ஒரு பகுதியும் மற்றும் 5 நடுத்தரத்திட்டங்களும் முடிக்கப்பட்டு 30,460 எக்டேர் புதியநிலத்திற்கு பாசன வசதியும் 2370 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதி பெறும் வகையில் நீர் வளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மூன்றாண்டுக் காலத்தில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக ரூ. 69.23 கோடி செலவிடப்பட்டுள்ளது. சிறுபாசனத் திட்டத்தின் மூலம் இம்மூன்றாண்டுக் காலத்தில் 6196 எக்டேர் புதிய நிலங்கட்கு ரூ. 7.40 கோடி செலவில் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட 6வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகள் திட்டக் கால முடிவில் (1985ல்) உறுதியாகச் சாதிக்கப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நடப்பிலுள்ள ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதுவரை முடிவுற்ற நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பற்றிய விவரம் பின் வருமாறு:

வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்கள் பயனடையும் சாத்தனூர் வலது புறக்கால்வாய் திட்டம்.

தருமபுரி மாவட்டத்தில் தும்பலஹல்லி மற்றும் பாம்பாறு நீர்த்தேக்கத் திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உப்பாறு நீர்த்தேக்கத்திட்டம்.

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் வட்டம் ஆகிய இடங்களில் உள்ள மிகவும் வறண்ட பகுதிகளுக்குப் பாசனவசதி அளிக்கும் பொருட்டு முந்தைய திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் ஆயக்கட்டான 1,01,250 எக்டேர் நிலப்பரப்போடு, மேலும் 56,660 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி விரிவுபடுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆயக்கட்டை விரிவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதி முடிக்கப்பட்டு மீதி வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம் வட்டத்தில் பெரும்பள்ளம் ஆற்றின் குறுக்கே 11.58 கோடி கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் திட்டத்திற்குத் தமிழக அரசால் 1983ல் ஒப்புதலளிக்கப்பட்டு வேலைகள் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 381 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் 1400 எக்டேர் புதிய நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

1974ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, பின்னர் 1977ல் உலக வங்கியின் உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரிய திட்டமான பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டமும், தஞ்சாவூர் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டமும் மற்றும் 22 நடுத்தரப் பாசனத் திட்டங்களும் தற்சமயம் செயலாக்கத்தில் உள்ளன.

தஞ்சாவூர் டெல்டாப் பாசனப் பகுதியை நவீனப்படுத்துவதற்காக 1980-81 முதல் அரசு பின் வரும் தொகைகளைச் செலவிட்டுள்ளது.

1980-81ல் ரூ. 219.45 இலட்சம், 1981-82ல் ரூ.109.61 இலட்சம், 1982-83ல் ரூ. 320.86 இலட்சம், 1983-84ல் (நிதி ஒதுக்கீடு) ரூ. 474.20 இலட்சம்;1984-85 (நிதி ஒதுக்கீடு) ரூபாய் 490.00 இலட்சம்.

ரூ. 366.60 கோடி செலவில், காவிரி டெல்டாவை நவீனப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் நிதி உதவி பெறுவதற்காக 26.3.1983 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சிறுபாசனப் பிரிவில் செயல் படுத்தப்பட்ட திட்டங்களின் விவரம் வருமாறு:

சிறப்பு சிறுபாசனம் மற்றும் ஏரி தூர்வாரி புனரமைப்புத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம், வறட்சிப் பகுதி மீட்புப்பணிகள் திட்டம், கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்.

சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் 1980-81 முதல் 1983-84 வரை ரூ. 993 லட்சம் செலவிடப்பட்டது. 8762 எக்டேர் நிலம் பயன் பெறும் வகையில் 108திட்டங்கள் முடிக்கப்பட்டன.





ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1400 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ. 29.46 லட்சம் செலவில், 39 பணிகள் நிறைவேற்றப்பட்டன.

மலைப்பகுதி முன்னேற்றத் திட்டத்தின் கீழ், ரூ. 23 இலட்சம் செலவில் 45 பணிகள் முடிக்கப்பட்டன. இதனால் சுமார் 260 எக்டேர் நிலம் பயன்பெறும்.

வறட்சிப்பகுதி மீட்புப்பணிகள் திட்டத்தின் கீழ், தர்மபுரி மாவட்டத்தில், ரூ. 137.69 லட்சம் செலவில், 1092 எக்டேர் நிலம் பயன் பெறும் வகையில் 14 திட்டங்கள் முடிக்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 42.14 லட்சம் செலவில், 185 எக்டேர் நிலம் பயன் பெறும் வகையில், 5 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடல் அரிப்புத் திட்டப்பணிகள் சென்னையிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் நடைபெற்று வருகின்றன:

கடந்த 4 ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 32 பணிகளுக்கும், சென்னையில் 4 பணிகளுக்கும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஒப்புதல் அளித்தது. இவற்றில், கன்னியாகுமரியில் 8 பணிகளும், சென்னையில் 2 பணிகளும், நிறைவேற்றப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் இந்தக் காலத்தில் ரூ. 258.55 இலட்சம் செலவிடப்பட்டது. 6.52 கி.மீ. நீளமுள்ள கடற்கரைக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலுள்ள சிறு பாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதற்கு மத்திய அரசின் மூலம், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து ரூ. 25 கோடி மானியம் பெறுவதில் இவ்வரசு வெற்றி கண்டுள்ளது. செங்கல்பட்டு, வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் முறையால் தமிழகத்தில் 11 லட்சத்திற்கும் மேலான கிணறுகளின் மூலம் 70 லட்சம் ஏக்கர், அடி நீர் பெறப்படுகிறது.

1970ஆம் ஆண்டில் பொதுப் பணித்துறையில் நிலத்தடி நீர் ஆய்வுக்காக ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது, இப்பிரிவின் நோக்கம் தமிழகம் முழுவதற்குமான நிலத்தடி நீர்வளத்தை அறிவியல் நோக்கில் ஆய்ந்து கணக்கிடுவதேயாகும்!

1978ம் ஆண்டு ஜூலைத்திங்கள் இறுதிவரை ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு நிலநீர் ஆய்வுப்பணி நடத்தப்பட்டது. 1978ஆம்ஆண்டு ஜூலைத்திங்கள் முதல் சிறு ஆற்றுப் படுகை வாரியாக கிராமாந்தர நிலநீர் ஆய்வுப்பணி தொடங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டு வருகிறது. கிராமாந்தர ஆய்வுப்பணிகள் மூலம் பல்வேறு களப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் 13 இடங்களில் சிற்றாற்றுப் படுகைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெய்யும் மழையளவு, நீர் ஆவியாகும் தன்மை, பூமியால் நீர் உறிஞ்சப்படும் அளவு மற்றும் மேற்பரப்பில் வழிந்தோடும் நீரின் அளவு இவைகளைக் கணக்கிடும் ஆய்வுப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தமிழகம் முழுவதற்குமான விண்வெளி புகைப்படங்களைக் கொண்டும், விண்வெளிக்கோள்களின் மூலம் கிடைக்கப்பெற்ற படங்களைக் கொண்டும், தமிழகத்தின் நிலவியல் தன்மை, நிலப்புறத் தோற்றங்கள், நில உபயோகங்கள், மற்றும் இதர நிலநீர்சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வரைபடங்களைக் கொண்டு நிலநீர் வளமுள்ள இடங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

மேலும் நீரியல் தன்மைகளை அறியும்பொருட்டு இறவை சோதனைகள் நடத்தப்படுகின்றன. இவையன்றி, தமிழகத்தில் சுமார் 1921 கிணறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவைகளின் நீர் மட்ட ஏற்ற இறக்கங்களை அறிந்து ஓர் இடத்தில் நிலநீர் மட்ட அளவு கணக்கிடப்படுகிறது.

பெருகி வரும் தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக மேற்பரப்பு நீரையும் நிலநீரையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திட்டம், கீழ்க்கண்ட முக்கிய ஆற்றுப்பாசனப் பகுதிகளில் செயலாற்றப்படுகிறது.

கீழ் பவானி பாசனப்பகுதி. கிருஷ்ணகிரி அணைக்கட்டு பாசனப் பகுதி.

மேற்குறித்த ஆய்வுப் பணிகள் மட்டுமின்றி 1981, 1983 ஆம் ஆண்டுகளில்தமிழகம் வறட்சியின் பிடியில் சிக்கியபோது இத்துறை ஏரிப்படுகைகளில் ஆய்வு செய்து திறந்த வெளிக்கிணறுகள் வெட்டுவதற்காகப்பரிந்துரைவழங்கியது. மேலும் 1981ம் ஆண்டில் தோன்றிய வறட்சியைக் கட்டுப்படுத்துவதற்காக ரூ. 100 லட்சங்கள் செலவில் ஏரிப்படுகைகளில் திறந்தவெளிக்கிணறுகள் வெட்ட அரசு ஒப்புறுதி வழங்கியது. தொடர்ந்து 1983ம் ஆண்டுவறட்சிப் பணியின் கீழ் திறந்தவெளி கிணறுவெட்ட அரசு 300 லட்சங்கள் ஒதுக்கியது. 1981ஆம் ஆண்டு, வறட்சியின் போது 237 கிணறுகள் வெட்டப்பட்டன. 1983ஆம் ஆண்டு 555 கிணறுகள் வெட்டப்பட்டன.



தஞ்சாவூர் காவிரி நதியின் கழிமுகப்பகுதியில் ரூ. 12லட்சம் செலவில் 36 குழாய்க்கிணறுகள் அமைத்து கோடைக் காலங்களிலும், காவிரி நீர் வழங்க முடியாத காலத்திலும் வேளாண்மைக்கு நீர் வழங்கும் பணியையும் இத்துறை புரிந்து வருகிறது.

தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய தரை நீர் (Surface Water) வளம் பெரும்பகுதி பயன் படுத்தப்பட்டுவிட்டது. பாசனம் மற்றும் வேறு பணிகளுக்கும், நிலநீரைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 1982 மார்ச் திங்களில் வறண்ட புஞ்சை நிலத்திற்குப்பாசன வசதி அளிக்கும் பொருட்டு, இவ்வரசு ரூ. 3 கோடி மூலதனத்துடன், தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகத்தை தோற்றுவித்தது. பாசன வசதி இல்லாத குறிப்பாக சிறிய நடுத்தர விவசாயிகளுக்குக் குழாய்க் கிணறுகள் அமைத்து, அவற்றைச் சமுதாயக் கிணறுகளாகப் பராமரித்து அவற்றின் மூலம் பாசன வசதி அளிப்பதுதான் இக்கழகத்தின் நோக்கம்.

தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகம், திட்டங்களை விவசாயிகளுக்காக நிறைவேற்றித் தருகிறது. இதற்குத் தேவையான நிதி உதவி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் அரசு உடைமையாக்கப்பட்ட வங்கிகளாலும் வழங்கப்படுகிறது.



# ஓங்கி வரும் கதர் கிராமத் தொழில்கள்

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி

கதர் கிராமத் தொழில்கள் குறைந்த மூலதனத்தில் வேலை வாய்ப்பினைக் கிராமப் புறங்களில் அதிக அளவில் ஏற்படுத்தித் தருவதனால், கதர் கிராமத் தொழில்களின் மூலம் தமிழகத்தில் நிலவி வரும் வேலையின்மைப் பிரச்சினைக்கு முடிவு காண முடிந்தது. அதனாலேயே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கதர் கிராமத் தொழில்களை ஊக்குவித்து வருகிறது.

கதர் கிராமத் தொழில்கள் பெருத்து ஓங்க ஏதுவாக இருக்கும் பொருட்டு அரசு தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையை 1978-ல் மாற்றி அமைத்தது. அதன்படி அரசுத்துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், சட்டப்படி அமைந்த வாரியங்களுக்குத் தேவையான பண்டகப் பொருட்களைக் கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்தோ அல்லது அதனிடமிருந்து நிதியுதவி பெற்ற நிறுவனத்திடமிருந்தோதான் கொள்முதல் செய்ய வேண்டும் என ஆணையிட்டுள்ளது.

## நூற்பு

அரசு அளித்து வரும் ஊக்கத்தினால் கடந்த 4 ஆண்டுகளில் 190 கிராமிய நூற்புக்கூடங்கள் புதியதாகத் துவக்கப்பட்டன. தற்போது 518 கிராமிய நூற்புக் கூடங்கள் செயல்படுகின்றன. இக்கூடம் ஒவ்வொன்றிலும் முப்பது பெண்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது. இந் நிலையம் ஒன்று அமைக்க, ஏறத்தாழ ரூபாய் ஒரு இலட்சம் செலவாகும். இவர்களுக்கான கூலி 1-4-'84-ல் திருத்தி அமைக்கப் பெற்றது. இதனால் ஒவ்வொரு நூற்பாளரும் நாளொன்றுக்கு ரூ. 5.75 முதல் ரூ. 7 வரை ஊதியமாகப் பெறுவர்.

இடர்ப்பாடின்றி நூற்பாளர்கள் நூற்க ஏதுவாக இருக்கும் பொருட்டும், அதன் மூலம், நூலின் தரத்தையும் துணியின் தரத்தையும் உயர்த்த ஏதுவாக இருக்கும் பொருட்டும் பஞ்சுடைத்துப் பட்டை போடும் கருவிகளை நிறுவிட அரசு நிதி உதவி அளித்துள்ளது.

## கதர் உற்பத்தி

1979-80-ல் ரூபாய் 409.71 லட்சமாக இருந்த கதர் உற்பத்தி 1983-84ஆம் ஆண்டில் ரூ. 805 இலட்சமாக உயர்ந்துள்ளது.

வாரியத்தின்கீழ் உற்பத்தியாகும் பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு உண்டு. 1979-80-ல் ரூபாய் 109.78 இலட்சம் மதிப்புள்ள பட்டு உற்பத்தி செய்யப்பட்டது; 1983-84-ல் ரூபாய் 270.86 இலட்சமாக உயர்ந்துள்ளது.



பாலியஸ்டர் வகைத் துணி உற்பத்தியையும் வாரியம் மேற்கொண்டுள்ளது. இதற்கான பட்டை போடும் அலகு ஒன்றினைச் சேலம் ஆட்டையாம்பட்டியில் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கதர் விற்பனை

மாநில அரசு பெருந் தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியவர்களது பிறந்தநாள் விழாக்களையொட்டி ஆண்டுதோறும் 10 விழுக்காடு 30 நாட்களுக்கும், மற்றும் விழாக் காலங்களையொட்டி 5 விழுக்காடு 60 நாட்களுக்கும் கதர் விற்பனையில் தள்ளுபடி அளித்து வந்தது. விழாக்காலங்களுக்கு வழங்கும் தள்ளுபடியை 5 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக 1983-84-ல் அரசு உயர்த்தியுள்ளது. மொத்தத்தில் 1983-84 முதல், 10 விழுக்காடு தள்ளுபடியை 90 நாட்களுக்கு இவ்வரசு அனுமதித்துள்ளது. அம்மாதிரியே பாலியஸ்டர் துணி வகைகளை விற்பனை செய்ய ஏதுவாக 10 விழுக்காடு 60 நாட்களுக்குத் தள்ளுபடி அளித்து வருகிறது.

கதர் விற்பனைக்கென 155 கதர் அங்காடிகள் தமிழகமெங்கும் இயங்கி வருகின்றன. 1979-80-ல் ரூபாய் 615.24 இலட்சமாக இருந்த கதர் விற்பனை, 1983-84-ல் ரூ. 1078.70 இலட்சமாக உயர்ந்துள்ளது.

## கிராமத் தொழில்கள்

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் கிராமத் தொழில்கள் என வகைப்படுத்தப்பட்ட 26 தொழில்களில் கீழ்க்கண்ட 16 கிராமத் தொழில்களையும், கதர்த் தொழிலையும் வாரியம் செயல்படுத்தி வருகிறது—

பனைத்தொழில், கைக்குத்தலரிசி மற்றும் தானியங்களையும், பருப்பு வகைகளையும் செயல்முறைப்படுத்துதல், தோல் தொழில், செக்கு எண்ணெய், மட்பாண்டம் (செங்கற்கள், ஓடுகள்) சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை (காளவாய்) தேனீ வளர்த்தல், தச்சு கருமார் தொழில், பழங்களைப்பதப் படுத்தலும் பாதுகாத்தலும், கையால் செய்யப்பட்ட காகிதம், வெல்லம் மற்றும் சுந்தசாரி சர்க்கரை, சமையலுக்குப் பயன்படாத எண்ணெய் மற்றும் சோப்பு, நார்த் தொழில், பிரம்பு, மூங்கில், பாலிவஸ்திரா, லோக் வஸ்திரா.

தமிழ்நாடு அரசால் கிராமத் தொழில்கள் என அறிவிக்கப்பட்ட பின்வரும் தொழில்களையும் வாரியம் ஊக்குவித்து வளர்த்து வருகிறது:

ஊதுபத்தி, சிகைக்காய்த்தூள், பற்பொடி, நீலகிரித் தைலம்.

## கிராமத் தொழில் முன்னேற்ற விவரங்கள்

கிராமத் தொழில்களை வாரியம் தனது 187 அலகுகள் மூலமும், 1287 தொழில் கூடங்கள் மூலமும் செயல்படுத்தி வருகின்றது. மேலும் 41,476 கைவினைஞர்கள் தத்தம் தொழில்களைச் சிறப்புற ஏற்று நடத்திட ஏதுவாக இருக்கும் பொருட்டு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.



## பனைத் தொழில்கள்

பனைப் பொருட்கள் கூடங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைத்திடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இதுகாறும் 8 மாவட்டங்களில் பனைப் பொருள் கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

பனைமரம் ஏறுவோர் விபத்தில் மரணமடைந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ரூ. 5,000 நிதி உதவி அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.



பனஞ்சீனியைப் பயன்படுத்தி "பாம்கோலா" "பாம்டா" பானங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. டெல்லியில் இவைகளை விற்பனை செய்வதற்காக "ஒக்லா" தொழிற்பேட்டையில் ஒரு அலகினை வாரியம் துவக்கியுள்ளது. பனைப் பொருட்களில் குறிப்பாக, பனந்தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பதநீரைப் பாலிதீன் பைகளில் நிரப்பித் தற்போது விற்பனை செய்யப்படுகின்றது.

## சோப்புத் தொழில்

வீணாகப்போகும் உண்ணா எண்ணெய் வகைகளிலிருந்து சலவை சோப்பு மற்றும் குளியலுக்கு உகந்த "குறிஞ்சி" சோப்பு, 'சந்தனம்' 'மல்லிகை' மணங்களுடன் ஆயுர்வேத முறையிலும் தயாரிக்கப்படுகிறது.

## கிராமிய எண்ணெய்

தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. அவற்றை எண்ணெய் பிழிய ஏதுவாக வாரியம் இது வரை 3178 மின்விசைச் செக்குகளைக் கைவினைஞர்களுக்கு விநியோகம் செய்துள்ளது. நடப்பாண்டில் மேற்கொண்டு 300 மின்விசைச் செக்குகள் புகுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தோல் தொழில்

காலணி தயாரிக்கும் கைவினைஞர்கள் நலனுக்காக 'பங்கு'கள் அமைத்துக் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு கைவினைஞருக்கும் ஒரு 'பங்கு', ஒரு தையல் இயந்திரம் ரூ. 7,000 மதிப்பில் வழங்கப்படுகின்றன. 1982-83-ல் 500 பேர்களுக்குப் 'பங்குகள்' விநியோகிக்கப்பட்டன. மேற்கொண்டு 500 பங்குகள் விநியோகிக்கப்பட உள்ளன.

## கைக் காகிதம்

கைமுறைக் காகிதத்தில் வீணாகப்போகும் குப்பை, கூளங்களைப் பயன்படுத்தி, பயனுள்ள காகிதம் தயாரிக்கப்படுகிறது. வாரியம் இதுகாறும் 10 கைமுறைக் காகித அலகுகளைத் துவக்கியுள்ளது. மேலும் 23 அலகுகள் துவக்கப்படும்.

## தச்சுத் தொழில்

தச்சுத் தொழிலை ஊக்குவிக்கத் திருவொற்றியூரில் ஒரு மர அறுவை ஆலையை நிறுவிட அரசு நிதி உதவி அளித்துள்ளது.

## கைக்குத்தலரிசி

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன், அவர்களில் சிலரை, ரொட்டி தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருகிறது. இம்மாற்றுத் திட்டத்தை ஆதரிக்கும் வண்ணம் தமிழக அரசு அனைத்து மருத்துவமனைகளுக்கும், வாரிய மையங்களில் தயாரிக்கும் ரொட்டியையே வாங்க வேண்டும் என ஆணையிட்டுள்ளது.

## சிறப்புத் திட்டங்கள்

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சுயவேலை வாய்ப்புத் திட்டம், சிறப்பு மேம்பாட்டுத் திட்டம், கிளஸ்டர் வளர்ச்சித் திட்டம்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மேம்பாடடையச் செய்யவும் அவர்களின் நிலையை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்தவும், தமிழக அரசு மிகப்பெரிய அளவில் செயல்படுகிறது. இப்பெரு முயற்சியில் கதர் கிராமத் தொழில்களின் மூலம் ஒரு பெரும் பணியினை ஏற்று நடத்திட வாரியம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

**தமிழ்நாடு மாநிலம் ரூபாய் 24·45 கோடி கதர் உற்பத்தி செய்து, அனைத்து இந்தியாவிலேயே உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்து, இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.**

**கிராமத் தொழில்கள் உற்பத்தியில் ரூ. 91.65 கோடி மதிப்புள்ளவற்றை உற்பத்தி செய்து அனைத்து இந்தியாவிலேயே முதல் இடத்தை வகிக்கின்றது.**

**அனைத்து இந்தியாவில் 34.34 இலட்சம் மக்களுக்குக்கதர் கிராமத் தொழில்களின் மூலம் வேலை வாய்ப்பளிக்கப்பட்டதில், தமிழகத்தில் மட்டும் 5.82 இலட்சம் மக்கள் இத்தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.**

இவ்வாறாகத் தமிழகத்தில் கதர் கிராமத் தொழில்கள் ஒவ்வொரு பிரிவிலும் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளன.

# உயர்வு தரும் ஊரகத் தொழில்கள்



மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
**திரு இரா. அருணாசலம்**

**தொ**ழில் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த சிறுதொழில் பிரிவுகளைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அவைகளைப் பொருளாதார ரீதியில் தனித்தியங்கச் செய்வதற்காகத் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் 1965ஆம் ஆண்டுநிறுவப்பட்டது.

தற்போது இந்நிறுவனத்தில் உற்பத்தித் தொழில் பிரிவுகள் 56 உள்ளன. அவை பின் வரும் வகையைச் சாரும்.

கட்டுமானப் பட்டறைகள், தளவாட அறைகள் - இணைந்த பிரிவுகள், பொறியியல் தொழில் பட்டறைகள், கட்டுமானப் பணிகள் வார்ப்படத் தொழில் பிரிவுகள், தச்சுத்தொழில் பிரிவுகள், தோல் பொருள் தயாரிப்புப்பிரிவுகள், சிறப்பு வகையிலான பல வகைத் தொழில் பிரிவுகள்

'டான்சி' நிறுவனத்தில் பெரும்பாலான பிரிவுகள் அரசுத்துறைகளிடமிருந்தும் மற்றும் இரயில். மின்வாரியங்கள், தபால் தந்தித் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசுத் துறை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் கேட்கின்ற பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

1965-66ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் தொழில் பிரிவுகளின் உற்பத்தி மதிப்பு ரூ. 389 இலட்சமே ஆகும். இந்த உற்பத்தியின் மதிப்பு 1983-84ஆம் ஆண்டில் ரூ. 2300 இலட்சமாக உயர்ந்தது.

இத்தொழில் பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்த சில முக்கிய விவரங்கள் வருமாறு:

மேட்டூரிலுள்ள டான்சி கட்டுமான மற்றும் முலாம் பூச்சுத் தொழிற்சாலை, மின் வாரியங்கள், தபால் தந்தித்துறை மற்றும் இரயில்வேக்கு தேவைப்படும் மின் கடத்தும் கோபுரங்களைத் தயாரித்து வழங்குகின்றன.

டான்சி கருவிகள் மற்றும் பொறியியல் பிரிவுகள் ஆழ்கிணறு நீரேற்றுக் குழாய்களை உற்பத்தி செய்து, அவைகளை யூனிசெப் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு வழங்குகின்றன. இக்குழாய்கள் வறட்சி காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கப் பெரிதும் உதவியுள்ளன.

இராணிப்பேட்டையில் உள்ள டான்சி இயந்திரக் கருவிகள் பிரிவு, பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் இயந்திரக்கருவிகள்நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், மின்விசை இரும்பு அறுவை இயந்திரங்கள் மற்றும் துளையிடும் இயந்திரங்களையும் தயாரித்து வருகிறது.

விண்ணமங்கலத்திலுள்ள டான்சி தோல்பதனிடும் தொழிற்சாலை ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தப்பட்டதோல்தயாரித்துவருகிறது. விண்ணமங்கலத்திலுள்ள உரோமப் பதனிடும் தொழிற்சாலை ஆட்டு உரோமங்களை ஏற்றுமதி செய்கிறது. அண்மையில் மாதவரத்தில் அமைக்கப்பட்ட டானசி தோல் ஆடை தயாரிக்கும் பிரிவு முழுதும் ஏற்றுமதிக்கெனத் தோல்ஆடைகளைத் தயாரித்து வருகின்றது.

டான்சி பொறியியல் தொழிற்பிரிவுகள், தொழிற்கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், கிடங்குகள் போன்றவற்றிற்குத் தேவையானகட்டுமானங்களை உற்பத்தி செய்து நிறுவி வருகின்றன. மேலும் தண்ணீர்த் தொட்டிகள், நடை பாலங்கள், தள்ளுவண்டிகள் மற்றும் சிறு பெட்டிக்கடைகளையும் இப்பிரிவுகள் உற்பத்தி செய்து வருகின்றன.

தச்சுத் தொழில் பிரிவுகள் முக்கியமாக அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பலதரப்பட்ட சிறப்பு வகை மரச் சாமான்களை உற்பத்தி செய்கின்றன.

வார்ப்படத் தொழில் பிரிவுகள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கு இரும்பு வார்ப்படக் குழாய்களை உற்பத்தி செய்து வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

இரும்புப்பொருட்கள் புனைவுப் பிரிவுகள், தீப்பிடிக்காத மற்றும் திருடர்களால் உடைக்க முடியாத எஃகு பாதுகாப்புப் பெட்டகங்களை உற்பத்தி செய்து வருகின்றன. மேலும் இப்பிரிவுகள், ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்குத்தேவைப்படும் 'பானல் போர்டுகள்' போன்ற உலோகத் தகடு வகைகளைத் தயாரித்து வழங்குகின்றன.

தூக்கிச் செல்லக்கூடிய அபிவிருத்தி செய்யப்பட்ட விசைச் செக்கு ஒன்றின் மாதிரியை டான்சி உருவாக்கி கைவினைஞர்களின் உபயோகத்திற்காக அவைகளைக் கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்திற்கும் மற்றும் மாநிலக் கதர் கிராமத் தொழில் வாரியங்களுக்கும் வழங்கி வருகிறது.



**உதக மண்டலத்திலுள்ள டான்சியில் கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை, பெங்களூர் இந்துஸ்தான் இயந்திரத் தொழிற்சாலையின் ஒத்துழைப்போடு, மாதந்தோறும் சுமார் 23,000 கைக்கடிகாரங்கள் தயாரிக்கின்றது.**





**முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின்கீழ், ரூ. 523 இலட்சத்திற்கான சமையல் பாத்திரங்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் டான்சி வழங்கியதில் பெருமிதம் கொள்கிறது.**



## தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

தமிழ்நாட்டில் தோல் தொழிலைப் பல வகைகளிலும் வளர்ச்சியுறச் செய்யும் நோக்குடன் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் ஜூலை 1982ல் அமைக்கப்பட்டது.

அதிக அளவில் பதப்படுத்தப்பட்ட தோல் மற்றும் தோல் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஊக்கமளித்தலும், குறிப்பாக சிறிய அளவில் தோல் பதனிடுவோர் மற்றும் காலணி, தோல் பொருட்களை உற்பத்தி செய்வோர்க்கு உதவுவதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். இந்தநிறுவனம் 1983ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து இயங்கி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இந்நிறுவனம் முதற் கட்டமாக தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு உதவும் வகையில் பொது வசதி மையங்களை அமைக்க உத்தேசித்துள்ளது. மேலும் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் ஆகியவற்றிற்கான பொது வசதி மையங்கள், மூலப்பொருட்களுக்கான வங்கி மற்றும் வடிவமைப்பு மையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

சிறுதொழில் தோல் முனைவோர்களை மற்றும் கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் காலணி மற்றும் தோல் பொருட்களின் விற்பனைக்கு வகைசெய்து தரப்படும். இந்நிறுவனம் கைவினைஞர்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நான்கு அல்லது ஐந்து சங்கங்களை நிறுவி, காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி செய்யவும், அவைகளுக்குச்சந்தை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் திட்டமிட்டுள்ளது.

மேற்கூறிய திட்டங்களைச் செயல்படுத்த இந்நிறுவனம் 1984-85ஆம் நிதியாண்டுக்கு ரூ. 350இலட்சம் மூலதனச் செலவில் திட்டங்களைத் தீட்டியுள்ளது.



ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால், அவர்கள் மக்கள் தொண்டர்கள் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில்தான் நாங்கள் எங்கள் பணிகளைச் செய்து வருகிறோம். அரசியல் - சாதி - மதம் பார்த்து நாங்கள் எங்கள் பணியைச் செய்யவில்லை; மக்கள் தேவையறிந்தே செயல்படுகிறோம்.




மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்

**திரு. க. கலைமணி**

தமிழ்நாடு இந்தியாவின் தென் கோடியிலுள்ள ஒரு முதுமை வாய்ந்த கடல் மாநிலமாகும். இந்தியாவின் மொத்த கடற்கரையின் நீளமான 6536 கிலோ மீட்டரில் தமிழ்நாடு 1000 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்டு நாட்டிலே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

வடக்கே செங்கை மாவட்டத்திலுள்ள திருமலை நகரிலிருந்து தெற்கே குமரி மாவட்டத்திலுள்ள நீரோடி வரை 402 கடல் மீனவர் கிராமங்களைக் கொண்டுள்ளது. இந்தக் கிராமங்களின் மொத்த மீனவர் மக்கட்தொகை சுமார் 3.37 இலட்சமாகும். இது தமிழகத்தின் மொத்த மக்கட்தொகையான 482.97 இலட்சத்தில் மிகக் குறைந்த ஒரு அங்கமாகும். இந்தியா எட்டுக் கடல் மாநிலங்களைக் கொண்டு திகழ்வதுபோல், நமது தமிழகமும் எட்டுக் கடல் மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

இது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் 3.69 இலட்சம் எக்டேர் பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலைகளும் உள்ளன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நிறைவேற்றும் பல்வேறு வெற்றிகரமான முன்னேற்றத் திட்டங்களினால் 1980-81-ல் 2,16,000 டன்னாக இருந்த கடல் மீன் உற்பத்தி, கடந்த நான்கு ஆண்டுகளில் 2,40,000 டன்னாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் 1,60,000 டன்னாக இருந்த உள்நாட்டு மீன் உற்பத்தியும் 1,75,000 டன்னாக உயர்ந்துள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் கடல் மீன் உற்பத்தியை 3.30 இலட்சம் டன்னாகவும், உள்நாட்டு மீன் உற்பத்தியை 2.25 இலட்சம் டன்னாகவும் பெருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

துறையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்தினதன் காரணமாக, கடல் மீன் உற்பத்தி இன்று பன்மடங்கு பெருகியுள்ளது.

மொத்த கடல் மீன் உற்பத்தியில் 70 விழுக்காடு சாதாரண நாட்டுப் படகுகள் மூலம் கிடைக்கின்றது. ஆகவே இந்த நாட்டுப் படகுகளை வைத்து மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மீன்பிடி திறனை அதிகரிப்பதற்கு உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

கண்ணாடி இழைப்படகுகளை வழங்குதல், நாட்டுப் படகுகளுக்கு உட்புறம்-வெளிப்புறம் பொருத்தப்பட்ட இயந்திரங்களை வைத்து நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்குதல் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி 20 விழுக்காடு மானியத்துடனும் 80 விழுக்காடு கடன் உதவியுடனும் உட்புறம்-வெளிப்புறம் மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள் வலைகளுடன் வாங்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

அரசு தற்போது இந்த முறையைச் சிறிது மாற்றி தனி மீனவர்களுக்கு வழங்குவதைத் கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்குவதாகத் தீர்மானித்துள்ளது. அவ்வாறு வழங்கப்படும் இயந்திரப்படகுகளைக் கொண்டு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களால் பங்கு அடிப்படையில் வரிசைப்படி குறிப்பிடப்பட்ட காலம் வரை மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தினால் பெரும்பாலான மீனவர்கள் பயனடைகிறார்கள்.

கடல் கொந்தளிப்பு மற்றும் கடுமையான பருவநிலைக் காலங்களில் மீன்பிடி விசைப்படகுகள் தங்குவதற்குப் பொருத்தமான இடங்களில் மீன்பிடி துறைமுகங்களும் இறங்குதுறை வசதிகளும் மத்திய அரசின் உதவியுடன் பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 1982-83ஆம் ஆண்டு கோடியக்கரையில் தங்குதுறை வசதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் பெரிய மீன் பிடி துறைமுகம் ஒன்று முடியும் நிலையிலுள்ளது. இதில் 500 விசைப்படகுகளும், 50 பெரிய மீன்பிடி டிராலர்களும் தங்குவதற்கு வசதி உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்தில் ரூபாய் 234 இலட்சம் செலவில் மீன்பிடி துறைமுகம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. இதுபோன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாற்றில் ஒன்றும் ரூபாய் 67.32 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. இராமநாதபுர மாவட்டத்தில் வாலிநோக்கம், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப் பட்டினம் ஆகிய இடங்களில் தங்குதுறை வசதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப் பேட்டை, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஆர்க்காட்டுத்துறை, திருமுல்லைவாசல், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏர்வாடி, பாம்பன், செங்கை மாவட்டத்திலுள்ள பழவேற்காடு, கோவளம், கடப்பாக்கம், எண்ணூர், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஜெகதாப்பட்டினம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காயல் பட்டினம், வீரபாண்டியன் பட்டினம், மணப்பாடு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முட்டம், குளச்சல் ஆகிய இடங்கள், சிறிய இறங்குதுறை வசதிகள் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே தூத்துக்குடி, கடலூர், நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம், மண்டபம் மற்றும் இராமேசுவரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் மீன்பிடி துறைமுகம் மற்றும் தங்குதுறை வசதிகளில் 550 மீன்பிடி விசைப்படகுகள் தங்குவதற்கு வசதியுள்ளது.

பிடிக்கப்பட்ட மீனைப் பத்திரமாக இறக்குவதற்கும், பதப்படுத்துவதற்கும், மீன் அங்காடிகளுக்கு உடனே எடுத்துச் செல்ல வாகன வசதி போன்ற அடிப்படை வசதிகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாற்றில் ரூ. 28.00 இலட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் மற்றும் தொண்டி ஆகிய இரண்டு இடங்களிலும் முறையே ரூ. 24.00 இலட்சம், ரூ. 5.60 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடல் பொருள் ஏற்றுமதி உற்பத்தி வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி பெற்று பழவேற்காடு, கோட்டைப்பட்டினம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் மீன் இறங்கும் மேடைகள் கட்டப்பட்டுள்ளன. அக்கரைப்பேட்டை (தஞ்சை), தூத்துக்குடி தெற்கு ஆகிய இடங்களில் இதுபோன்ற மீன் இறங்கும் மேடைகள் அமைக்க 1982-83-ல் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.



கடல் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி பெற்று தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர்ந்த மீன் கிடங்கு அங்குள்ள மீனவர்களுக்குப் பெரிதும் உதவியாக உள்ளது.

இரவு நேரங்களில் மீனவர்கள் தங்களுடைய கலன்களைப் பத்திரமாகக் கரைக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக வழிகாட்டி விளக்குகள், தேர்ந்தெடுக்கப்பட்ட கடலோரக் கிராமங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. நடப்பு காலத் திட்டத்தில் 40 கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க அரசு ரூ. 11.10 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது.



உள்நாட்டு மீனவர்களை ஊக்குவித்து கூட்டின மீன்வளர்ப்பு மூலமும் நல்ல மேற்பார்வைத் திறனுடனும் மீன் உற்பத்தியைப் பெருக்க 12 முகமைகள் தென்னார்க்காடு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி, பெரியார், தஞ்சாவூர் (இரண்டு பிரிவுகள்), திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்களில் செய்யப்பட்டு வருகின்றன.

மீன்வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளுவதற்காக இதுவரை சுமார் 2616 எக்டேர் உள்நாட்டு நீர்நிலைகள் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளால் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2538 மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் எக்டேர் ஒன்றுக்கு 250 கிலோவாக இருந்த சராசரி மீன் உற்பத்தி, சுமார் 750 கிலோவாக உயர்ந்துள்ளது. இந்த முகமைகள் உள்நாட்டு மீனவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதோடு, மக்களுக்கு நியாய விலையில் மீன் கிடைக்கவும் வழிவகை செய்கின்றன.

கடலில் கிடைக்கும் இறால் ஒரு தங்கச் சுரங்கமாகும். இது நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணியையும் கொடுக்கின்றது. கடந்த சில ஆண்டுகளாகக் கடலிலிருந்து கிடைக்கும் இறால் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. எனவே புதிய தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி இறால் உற்பத்தியை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதன் ஆரம்பக் கட்டமாக சோதனை முறையில் கழிமுகப் பண்ணைகளில் இறால் வளர்ப்புப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஒரு எக்டேரில் அறுவடை ஒன்றிற்கு 500 கிலோ வரை இறால் உற்பத்தி செய்ய முடியும் என்ற உண்மை ஆராய்ச்சி மூலம் தெரிய வருகின்றது. ஆகவே, மேலும் விரிவுபடுத்தும் நோக்கோடு 150 எக்டேர் பரப்பளவுக்குப் பழவேற்காடு, தொண்டியக்காடு, வாலிநோக்கம் ஆகிய மூன்று இடங்களில் இறால் மீன் பண்ணைகள் நிறுவுவதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதிலும், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றது.

கடுமையான பருவநிலை காரணமாக கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாத காரணங்களில் உதவும் பொருட்டு, இத்திட்டம் வகுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி வருமானம் கிடைக்கும் காலமான ஒன்பது மாதங்களில் மாதம் ஒன்றிற்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களான மீனவர்கள் மட்டும் மாதம் ரூ. 10 வீதம் 9 மாதங்களுக்குச் செலுத்த வேண்டும். இந்த ரூ. 90 உடன் அரசு மானியமாக ரூ. 90-ம் சேர்த்து, வருமானம் இல்லாத மற்ற மூன்று மாதங்களுக்கு மாதம் ரூ. 60 வீதம் மீனவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

ஆபத்தையே வாழ்வாகக் கொண்டு இயங்கும் மீனவர்கள், சங்குக் குளிக்கும் தொழிலாளர்கள், தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது உயிர் இழந்து விட்டால், அவர்களது குடும்பங்களுக்கு ரூ. 5 ஆயிரம் தருகின்ற திட்டத்தை அரசு செயல்படுத்தி வந்தது.

ஆனால் தலைவனை இழந்த குடும்பம் தகுதியோடு வாழ இந்த 5 ஆயிரம் ரூபாய் போதாது என்பதை உணர்ந்த அரசு, மீனவர்களுக்கு ரூ. 15,000 தருகின்ற வகையில் புதிதாக விபத்து மற்றும் காப்பீட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வரு

கிறது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 1-4-83-ல் ஒப்புதல் அளித்தது.

இப்புதிய திட்டத்தின்படி மீனவர்கள் கட்ட வேண்டிய ஆண்டுத் தொகையான ரூ. 12ல் ஆறு ரூபாயை மத்திய அரசும், மூன்று ரூபாயைத் தமிழக அரசும் மீதமுள்ள 3 ரூபாயை மீனவர்களும் செலுத்துவது என முதலில் ஏற்பாடு செய்யப்பட்டது.

மீனவர்கள்பால் பேரன்பு கொண்ட புரட்சித் தலைவரின் கட்டளையின் பேரில், இனி அந்த மூன்று ரூபாயைக்கூட மீனவர்கள் கட்டவேண்டியதில்லை. அவர்கள் சார்பாக அரசே கட்டுவது என்று தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

இத்திட்டத்தில் சேர்ந்துள்ள மீனவர் ஒருவர் மரணமடைந்தால் குடும்பத்திற்கு ரூ. 15 ஆயிரம் வழங்கப்படும். அவரது உடலில் ஏதாவது ஒரு பகுதியில் நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ. 7 ஆயிரத்து 500 வழங்கப்படும்.

ஆண்டுதோறும் கடலோரப் பகுதியிலுள்ள மீனவர்களின் குடிசைகள் புயல் காலங்களில் நாசமாகின்றன. இதை நிவர்த்தி செய்யும் நோக்கோடு தமிழக அரசு நிரந்தர வீடுகளைக் கடலோரப் பகுதியில் கட்டி, மீனவர்களுக்கு இலவசமாகக் கொடுத்து வருகின்றது. 9931 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்து, இவற்றில் 7535 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீனவர்களுக்கு இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசு இதற்கென்று ஆண்டுதோறும் ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்து வருகின்றது.



பெருமபாலான கடலோர மீனவ கிராமங்களுக்குச் சரியான சாலை வசதி இல்லை. இதை நிவர்த்தி செய்யும்எண்ணத்துடன் இந்த அரசு 1980-ஆம் ஆண்டு முதல், மீனவர் கிராமங்களையும் குடியிருப்புகளையும் மீன் விற்பனை நிலையங்களையும் இணைக்க, சாலைகள் அமைக்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகின்றது. ரூ. 130 இலட்சம் செலவில் 52இணைப்புச் சாலைகள் போட அரசு ஒப்புதல் அளித்துப் பணிகள் பெருமளவில் முடிந்து விட்டன. 1983-84ஆம் ஆண்டில் ரூ. 62.5 இலட்சம் செலவில் 20 இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1984-85ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு மீனவர்களுக்கு மட்டுமின்றி மீனவ மகளிருக்கும் விரிவாக்கப் பணிகளைக்கொண்டு மேம்பாடு செய்யத் திட்டம் வகுத்துள்ளது. மீனவ மகளிரும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். தமிழ்நாடு மீன்துறைமீனவமகளிர் விரிவாக்க சேவைக்கென்று ஒரு பெண் உதவி இயக்குநரை நியமித்துள்ளது.

செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு மீனவ கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுமீனவப் பெண்களின் நலனுக்காக மேற்படி பெண் உதவி இயக்குநரின்கீழ் இயங்கி வருகின்றன.

இம்மாவட்டங்களில் முறையே திருச்சினாங்குப்பம், கரையூர் தெரு, தருவைகுளம் ஆகிய மீனவக் கிராமங்களில் மீனவ மகளிரிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தல், வலை பின்னுதலுக்குப் பயிற்சி அளித்தல், தையல் இயந்திரம் விநியோகம் செய்தல், கைத்தறிச் சேலைகள் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கென மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இது போன்று சென்னையில் 5 சங்கங்களும், செங்கை மாவட்டத்தில் 4 சங்கங்களும், தஞ்சை, தென்னார்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒவ்வொன்றும் ஆக 12 கூட்டுறவுச் சங்கங்கள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன.

வணிக ரீதியாக உள்ள மீன் வளத்திட்டங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு, செயல்பட்டுவருகின்றன. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இரண்டு மெக்சிகன் இழுபடகுகளைக் கொண்டு முக்கியமாக இறால் பிடிக்கப்படுகின்றது. கழகம் தற்போது இறால் ஏற்றுமதி செய்வதிலும் முனைந்து செயல்படுகின்றது. பிப்ரவரி 1983-லிருந்து இதுவரை 75 டன் இறால் ஏற்றுமதி செய்துள்ளது. இதனுடைய மதிப்பு ரூ. 70. 45 இலட்சமாகும்.



அடுத்தபடியாக, பொதுமக்களுக்குத் தரமான மீன்களை நியாய விலையில் விற்பனை செய்வதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. தற்போது சென்னையில் 59 மீன் அங்காடிகளையும் மதுரை, கோவை, திருச்சி, பெரியார் மற்றும் வடஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் 54 மீன் அங்காடிகளையும் பொது மக்களுக்காக நடத்தி வருகின்றது.










ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது




தமிழுக்குத் தனிச்
சிறப்பு. சிறந்த
கவிஞர்க்குப்
பாவேந்தர் விருது.
சிறந்த எழுத்தாளருக்கு
திரு.வி.க விருது.
கிருஷ்ணா நதி
சென்னை மாநகரின்
குடிநீர்ப் பிரச்சனையைத்
தீர்க்கக் கிருஷ்ணா
நதியிலிருந்து தண்ணீர்
கொண்டு வரும் திட்டம்.
ஏற்கெனவே
இருந்து வரும்
போக்குவரத்துக்
கழகங்களுடன்
புதிய போக்குவரத்துக்
கழகங்கள் தொடங்கப்
பட்டுள்ளன.

தமிழரசு

Licence No. TN/MS(C)/PP-2
பதிவு எண். M. 8676





# மண் குடிசைகள் மாடி வீடுகளாகும் மகத்தான திட்டம்!

பேரறிஞர் அண்ணா காட்டிய இலட்சியப் பாதையில்...
புரட்சித் தலைவரின் நல்லாசியோடு...

## வெற்றி நடைபோடுகிறது குடிசை மாற்று வாரியம்!

★ ஏழை எளியோருக்கு எழில்மிகு வீடுகள்!
★ விலங்கினும் கேடாக வீதியோரங்களில்— சாக்கடை அருகே-சேற்றில், புதரில்—வாடி வதங்கும் மனித இதயங்கள் மகிழ குடிசை மாற்று வாரியம் அமைத்துத் தரும் அழகிய குடியிருப்புக்கள்!!
★ மண் குடிசைகளை மாடி வீடுகளாக்கும் மகத்தான திட்டம்!!!
★ பல்லாயிரக் கணக்கானோர் பயன் பெறும் திட்டம்!!!!

**ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்,**
தலைவர்,

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

DIPR/208/84/SRS.

